ORIENTAL RESEARCH INSTITUTE
LIBRARY

ACCESSION No.

CALL No.

SRI VENKATESWARA UNIVERSITY
TIRUPATI

உ

திருச்சிற்றம்பலம். 1875

தத்துவநிஜாநுபோகசாரம்.

தத்துவலிங்கசுவாமிகளால்

திருவாய்மலர்ந்தருளியது.

இஃது

மகாராஜராஜஶ்ரீ,

புரசை. முருகேசமுதலியாரவர்கள்

மேற்படி சாத்திரத்தையுதவிசெய்து

கேட்டுக்கொண்டபடி

இந்திரபீடம் கரபாத்திரசுவாமிகள்

ஆதினத்திற்குரிய

பிறசை. அருணசலசுவாமிகள்

மாணாக்கராகிய

ஈசூர்,

சச்சிதானந்தசுவாமிகளால்

பரிசோதிக்கப்பட்டு,

வேதாந்தசங்கத்தாரால்

அ. முநிசுவாமிநாயகரவர்களது

சென்னை:

அத்வைதவிளக்க மென்னும் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1878.

Registered Copy-right.

திருச்சிற்றம்பலம்.

தத்துவநிஜாநுபோகசார அதிகார அட்டவணை.

பூர்வபாகம் கன்மகாண்டம்.

பொதுவானபிரகரணம்.

பக்கம்.		பக்கம்.	
க	விநாயகஸ்துதி	ஙக	அனித்தியதெரிசனம்
உ	கடவுள்வணக்கம்	சஎ	வீடுபற்று
ங	அருளிறைவணக்கம்	சக	பிதுருயன தெட்சணயணம்
ச	வேதச்சிறப்பு	சஉ	தேவாயனஉத்திராயணம்
ஙு	ஆகமச்சிறப்பு	சச	ஞானிகள்கதி
,,	நூற்பெயர்	சடு	பாவிகள்கதி
எ	நூலுளா	,,	சமையபேதங்களில் நின்றபே ர்களிலை
க	அவையடக்கம்	சசு	ஞானிமகாத்மியம்
,,	இன்னூலுக்குமுன்னூல்	சள	ஞானிபூசை
கள	இன்னூலிற்சொன்னஅத்தியா யப்பெயர்கள்	சஅ	ஞானிசீலம்
உக	பிறவியருமையுரைத்தல்	சங	ஞானியூண்பலன்
உங	இதோபதேசம்	ஞஎ	ஞானியேவல்
உச	பிராமணன்சரிதை	ஞக	ஞானியையிகழ்ந்தோர்கேடு
உடு	க்ஷத்திரியன்சரிதை	ஞஉ	கூடாவொழுக்கம்
,,	வைசியன்சரிதை	ஞங	பிரபஞ்சவுற்பத்தி
உசு	சூத்திரன்சரிதை	ஞடு	சிருஷ்டி
,,	பிரமசாரிசரிதை	ஞஅ	இரட்சிப்பு
உள	கிரகஸ்தன்சரிதை	ஞக	சங்காரம்
உஅ	வானப்பிரஸ்தன்சரிதை	சுக	திரோபவம்
,,	சன்னியாசிசரிதை	,,	அனுக்கிரகம்
,,	அதிவன்னச்சிரமிசரிதை	சுஉ	பிண்டஉருதம்
உக	உடலிழிவு	சுச	பிண்டோற்பத்தி
ஙஎ	குடும்பவிழிவு	சுக	கெற்பத்தரிக்குநாள்பேதம்
ஙக	போகவிழிவு	எஎ	சாமத்திலுற்பத்தி
ஙஉ	மகளீரிழிவு	,,	சுரத்திலுற்பத்தி
ஙங	பொருளிழிவு	எஉ	காலசக்கரம்
,,	அரசிழிவு	அங	சரத்தில்வருஷபலன்
ஙச	சொற்கவிழிவு	அச	நவக்கிரகராசிநட்சத்திரம்சர த்தில்நடப்பது
ஙடு	சென்னசக்கரம்	அடு	சன்மார்க்கம்
ஙசு	சென்னவிருக்ஷம்	அசு	சாதிசங்கற்பம்
ஙள	அசேஷதுக்கம்		

பூர்வபாகம் கன்மகாண்டம் இரண்டாம் அதிகாரம்.

வாதிகள்சமயம்.

பக்கம்.			
கக	சமயத்தொகுதி	கஅடு	சுத்தவேதாந்தம்
கச	கிரீடப்பிரமவாதம்	ககஅ	இதில்பின்னெருசீவன்முத்தர் அச்சுமாருதவாதிமதம்
,,	லீலாப்பிரமவாதிமதம்	கஉ0	சாங்கியன்மதம்
கடு	பிரதிவிம்பவாதிமதம்	கஉஉ	நிரீஸ்வரசாங்கியன்மதம் (பதஞ்சலி-மதம்)
,,	மாயாவாதிமதம்	கஉங	பூர்வமீமாங்கிசை
கள	வைதிகவேதாந்தம்		

உ தத்துவநீஜாநுபோகசார அதிகார அட்டவணை.

பக்கம்.		பக்கம்.	
கஉரு	வைசேஷியன்மதம்	உருஉ	ஊர்த்தசைவம்
கஉஅ	நையாயிகன்மதம்	,,	அனுதிசைவம்
கஙக	சிவாத்துவிதிமதம்	உருங	ஆதிசைவம்
கஙஉ	பாஸ்கரியன்மதம்	,,	மகாசைவம்
கஙங	சத்தப்பிரமவாதிமதம்	உருச	பேதசைவம்
கஙச	வையாகரணிமதம்	,,	அபேதசைவம்
,,	பாட்டமதம்	,,	அந்தரசைவம்
கஙஎ	பிரபாகரமதம்	,,	குணசைவம்
,,	ஆறந்தபேதம், இதில்-முதல் நாதாந்தம்	உருரு	நிற்குணசைவம்
		,,	அத்துவர்சைவம்
கஙஅ	சித்தாந்தம். போதாந்தம்	,,	யோகசைவம், ஞானசைவம்
கஙக	யோகாந்தம். காலாந்தம்	உருசு	அணுசைவம்
கசo	வேதாந்தம்	,,	கிரியாசைவம்
,,	வேதாந்தசித்தாந்தம்	,,	நாலுபாதசைவம்
கசக	சித்தாந்தவேதாந்தம்	உருஎ	சுத்தசைவம்
,,	புராணிகன்மதம்	,,	உலோகாயுதன்மதம்
கசஙக	பாஞ்சராத்திரன்மதம்	உசுo	புத்தரிற்சவுத்திராந்திமதம்
கருரு	மகேஸ்வரன்சரிதை	உஎo	யோகாசாரன்மதம்
கருஅ	ஆகமம்வந்தவரலாறு	,,	மாயத்தமிகன்மதம்
கசுஉ	சுத்தசைவசித்தாந்தம்	உஎக	வைபாஷிகன்மதம்
களச	வேதாந்தசித்தாந்த சொல்வ	உஎஉ	அருகரில்நிகண்டவாதிமதம்
கஅஅ	சிவசமவாதிமதம்	உஎஅ	ஆசீவகன்மதம்
கஅக	அயிக்கியவாதிமதம்	உஎக	பிருதிவிபூதவாதிமதம்
,,	பாசுபதிமதம்	உஅo	அப்புபூதவாதிமதம்
ககக	சங்கிராந்திவாதிமதம்	உஅக	அக்கினிபூதவாதிமதம்
,,	பிறவாஹேஸ்வரவாதிமதம்	உஅஉ	வாய்வுபூதவாதிமதம்
ககஉ	மகாவிரதிமதம்	,,	ஆகாசபூதவாதிமதம்
ககங	காளாமுகன்மதம்	உஅங	பஞ்சகோசவாதிமதம்
ககச	காபாலீகமதம்	உஅரு	நவக்கிரகவாதிமதம்
,,	சுவ்விகாரவாதிமதம்	உஅசு	சூரியவாதிமதம்
ககரு	சம்மேளிதசைவன்மதம்	உஅஎ	சந்திரவாதிமதம்
ககசு	சைவத்திற்பேதாபேதவாதி	உஅக	ஊழ்வாதிமதம்
உoரு	வீரசைவம்	உகo	காலவாதிமதம்
உசசு	அனேகேசுரவாதிமதம்	உகக	மந்திரவாதிமதம்
உசக	வாமமதம்	உகஉ	அந்திரவாதிமதம்
,,	வைரவமதம்	உகங	அவிழ்தவாதிமதம்
உருக	கவுளயாமளமதம்	உகரு	தீர்த்தசங்கற்பம்

பூர்வபாகம் கன்மகாண்டம் மூன்றுவது அதிகாரம்.

சங்கற்பப்பிரகரணம்.

உகசு	அர்ச்சனைசங்கற்பம்	ஙoசு	வரதசங்கற்பம்
,,	பஞ்சாக்ஷரமுதலானமந்திரங்	ஙoஎ	சரிதைசங்கற்பம்
உகசு	சிவபூசாவிதி	ஙoஅ	தூலக்கமதம்
ஙoங	அத்துவாசங்கற்பவாதி	ஙகரு	அளவைப்பிரமாணலக்ஷணம்
ஙoச	தர்க்கவாதிசங்கற்பம்	ஙஉசு	அண்டகோசலக்ஷணம்
ஙoரு	தானசங்கற்பம்	ஙருங	யோகசமுகம்

உ

ஓம்பராபரப்பிரமணேநமஃ.

தத்துவநிஜாநுபோகசாரம்.

1.—பூர்வபாகம்—கர்மகாண்டம்.

க—ஆம்.பொதுமைப்பிரகரணம்.

க-வது.—அத்தியாயம்.

விநாயகர்துதி.

க. சச்சிதாநந்தமே தகுமதமூன்றதாய்த்
தக்கதோராங்கரஞ் சத்தியஞ்சதாய்
நிச்சிதாஞாதுரு ஞாநநேயமே
நீள்விழிக்கொம்பொன்று நீண்டசத்தியாய்க்
குச்சிதாஞ்சிவயீ சாதிநால்வாயதாய்க்
கூறிச்சையாதியே கும்பத்தலமதாய்
உச்சிதாஞ்செவியதே யோரிருமாயையா
யோங்கியகணபதி யுள்ளமென்னுள்ளமே.

(இதன்பொருள்)

சத்து சித்து ஆநந்தமாகிய மூன்றுமே மீறிநின்றுளெல்லா வற்றிற்குமுதலாய் விளங்குந் திருக்காகிற யானைக்கு மூன்றும மதமாயினதை மும்மதமென்பானே னென்னில், யானைக்கு மும்மதமு மிஞ்சினவிடத்தில் யானை தன்னையுணராமல், மதத்தின் வழியிற் சென்றுற்போலத், திருக்காணையுந் தன்னையறியாமல், சச்சிதாநந்தமே காட்டுகையாலும், மும்மதமுந்தீர்ந்தவிடத்து யானையுள்ளபடிநின்றுற்போல, சிவயோகிகளுக்குச் சச்சிதாநந்தந் தீர்ந்தவிடத்தில், திருக்கேநிற்கையால், மதமென்ற தென்றறிக. ஐந்துகைகளையும் ஐந்துசத்தியென்பானே னென்னில், விக்கிநேசவரனுக்குத் துதிக்கைகூட, ஐந்துகையாலெல்லாத்தொழிலுஞ்செய்வதுபோலப், பிரமயானை பஞ்சசத்திகளாகிற கைகளாலே பிண்டாண்டஜகத்துக்க ளெண்ணிறந்தகோடிகளைச் சிருட்டியாதியைந்துதொழிலுஞ் செய்கையா லென்ற

றிக. ஞாதுரு ஞாநநேயத்தை மூன்றுகண்ணென்பதென்னெனில், விநாய கன்தனது மூன்றுகண்களாலே யெல்லாவற்றையும்விளக்குவதுபோல்பிர்ம விநாயகன், ஞாதுரு ஞாநநேயக் கண்களைக்கொண்டு, ஞாநங்கர்மமென்னு ம் ஞாநாஞ் ஞானங்களை விளக்குகின்றமையா லென்றறிக. கொம்பொன் றை, நீண்டசிற்சத்தி யென்பதென்னெனில், விநாயகன் கொம்பிரண்டி லொருகொம்பை யொடித்துக்கஜமுகாசுரனைக் கொன்றும், பாரதமெழுதி யும், நின்றகொம்பொன்றுலே உலகத்தையெல்லா நிறுத்தல்போல நிறு த்தலென்றது, இந்தச்சத்தியாகிறகொம்பால் என்னசெய்வாரோ என்றுகே ட்கில் ஞாநாஞ் ஞானசத்துரு உபத்திரவமில்லாமல் அதைநிறுத்த லென் ற தென்றறிக. இனிப் பிர்மமாகிறயானைக்குச் சிற்சத்தி பரிக்கிரகசத்தியென் ற இரண்டு கொம்பில், மாயையாகிற பரிக்கிரகசத்தியான கொம்பை யொடித்துச் சர்வசங்காரம்பண்ணி, ஒடியாத வொருகொம்பாகிற சிற் சத்திநோக்காலே பழமைபோற் சிருஷ்டித்து நிறுத்தலாலென்றறிக. சிவ ன் ஈஸ்வரன் சுடஸ்தன்பிரமம் என்றநாலேயும் நால்வாயென்பதென்னெனி ல், யானைக்குலம்பலாய் நாலப்பட்டசைகிற வாய்போலப் பிர்மத்திலசைவா ன சித்தினிடமாய்ச், சிவேஸ்வர சுடஸ்தபிரமமாகிய நாலுமசைந்துநாலப் படுகையால் நால்வகையென்றறிக. இச்சாஞாநக்கிரியாசத்தி மூன்றையும், மூன்றுகும்பத்தலமென்பதென்னெனில்,யானைக்குச் சிரசின்மேல் இருபாரிச முமிரண்டுகும்பமும், அதின்கீழே துதிக்கைப் பிரதமவடியிலொருகும்பமும், இதிலுலேஅழகும் பெலனுமுண்டாம். அஃதெப்படி எனில்,சிங்கமானது,மத் தகத்தின்மேலேறிக் கும்பத்தலத்திலே கைபோட்டவுடனே, யானைவலி மைகுன்றிச் செத்தாற்போலப், பிர்ம யானைக்கு இச்சாஞாநக்கிரியையே பெ லனுயழகாய் எல்லாவற்றையுமுண்டாக்கி, அழிக்கையாலென்றறிக. கூறிச் சை உண்டாக்கையாலென்றபிறகு, சர்வசங்காரத்தி லிச்சாஞாநக் கிரியை யாகிற கும்ப மூன்றுமுள்ள ஆதிசத்தியாகிற யானையைப் பராசத்தியாகிற சிங்கம் விழுங்கி, மண்டையைத்தின்ன, ஆதிசத்தி மடிந்ததென்றறிக. செ விகளிரண்டையும் இரண்டுமாயையென்பதென்னெனில். யானைக் கிரண்டு செவியும் எந்நேரமுமசைதல்போலப், பிர்மமுமாயையைக்கொண்டு எல்லா வற்றையும் அசைப்பிக்கிறதென்றறிக. ஓங்குகணபதியென்ப தென்னெனி ல், கணங்களுக்கெல்லாம் பதியாகைபோலப், பிர்மமும் எல்லாவற்றிற்கும் பதியாகையாலே, அவருள்ளமானது என்னுள்ளத்துள்ளேயிருக்க வணங் குவேனென்றறிக-என்றவாறு. (க)

உ - வது— அ த் தி யா ய ம்.

கடவுள்வணக்கம்.

உ. சிற்சத்திபார்வையாலே சேர்மாயையண்டபின்ட,
நிச்சித்தநிலையாதெல்லா. நீழ்பதிரோமமொன்றுல்,

மெச்சித்துச்சாகசங்கள் வேணவாஞ்சிருட்டியாதி,
உச்சித்தமென்பாரில்ல வுவமையிலீசனுக்கே.

(இ-ள்)— சத்து சித்தாநந்தத்தில் நடுவானசித்தின் கிரணவாலுண்டா னசிற்சத்தி பார்வையாலே அநாதிமாயையிலுண்டான பிண்டாண்ட பாண்டங்களெல்லாம், நிலைபடுத்தி நிச்சயிக்கப்போகாது, எல்லாஞ்சிவன்றோ மென்றிலே யுண்டாகிறதும் லயமாகிறதும்,சிவனுக்குத்தெரியாதென்றும், அந்தச்சிவனுனவர்சித்தர்கள்போல வெகுரூபங்களாய்த்தோன்றுவர், இவ்வாறுதோன்றிய அச்சிவத்தைச்சிலர்மெச்சித்திரிபுராதிகள் மூதலானபேரைக் கொன்றுகொன்றும் வெகுவாய் (வலோத்கார) சாகசங்கள்பண்ணினுகொன்றும், வேண்டினவரங்களைக்கொடுத்தாகொன்றும், பஞ்சகிருத்தியங்களைப் பண்ணுவாகொன்றும், அவருக்கு இதுகளைப்பெருமையாகச்சொல்லுவதுகருமல்ல, தோத்திரமுமல்ல, அவரிதுகளாலே மெச்சப்படுபவருமல்ல, அவர் உவமைக்கும் பெருமைக்கும் புகழுக்கு மெட்டாதவரானபடியாலென்றறிக. ஆனால் அவருடைய சத்திகளாலேயுண்டான மூர்த்திகளுக்கு,இந்தத் தோத்திரமேனெனில்,அவர்கள்பஞ்சபூதங்களையுமீறிப், பஞ்சபூதத்துக்கும் அதிதெய்வமாகையால்,ஒவ்வொரு பூதாண்டங்கள் அநந்தமுண்டு, அதிலே ஒரு அண்டத்திலிருக்கிறபேராைக்கொல்வதும், வலோத்காரஞ்செய்வதும், ரட்சிப்பதும், அவர்களுக்கும்பெருமையல்லவென்றறிக. ஆனுலிதுக ளாருக்கென்னில், அந்தந்தவண்டங்களுக்கு அதிபராயிருக்கிறருத்திர விஷ்ணு பிர்மாதிகட்க்குச் சொல்வதென்றறிக. ஆனால்முன்சொன்ன வீசனெப்படிப்பட்டவ னெனில், உவமையில்லாதவன்—எ-று. (க)

கூ: ஈசனையந்தமாறு மெழிற்சச்சிதாதிதாண்டி,
நேசனைய்த்தெசப்பாழ்தாண்டி நின்றிடுநிசங்காதீத,
வாசனையப்பேதாபேத வாழ்பேதாவபேதமாகிக்,
காசனையேநத்திருபாங் கடவுளைவணக்கஞ்செய்வாம்.

(இ-ள்)—இப்படிப்பட்ட ஈசனனவன், ஆறந்தாதீதனுமாய், சத்துசித்தாநந்தத்திய பரிபூரணமைந்திற்குமதீதனுய், அநேகமான தெசப்பாழுக்கு மதீதனுய், நிசங்கமுகமதீதனுய், பத்துப்பாழிலும் வாசமாயிருப்பானுமாய், பேதம் அபேதம் பேதாபேதமுமாகி, இதுவுமல்லனுமாகி, பிரகாசனேத்திருபமான கடவுளை இந்தச்சாத்திரமீடேறும்பொருட்டாக வணக்கஞ்செய்வேனென்றறிக—எ-று. (உ)

கூ-வது— அத்தியாயம்.

அருளிறவணக்கம்.

நேயமாமலாதிகம்ம நிகரிறத்துவங்களோடே,
ஆயமாய்க்கூட்டிப்பந்தித் தவிழ்க்கொணைச்சிக்குக்கூட்டைத்,

தத்துவநிஜாநுபோகசாரம்.

தூயதாஞ்சம்சித்தான சொரூபனேகுருவாய்வந்து,
தாபதாயவிழ்த்துவிட்ட சற்குருபாதம்போற்றி.

(இ-ள்)— ஆத்மாவுக்கு அநாதியாக நேயத்துடனேசூழின மலமாயாதி கன்மங்களை நீக்கும்பொருட்டு, எண்ணிறந்த தத்துவங்களையுங் கூட்டிப்பந்தித்து, ஆயத்ததாநங்களாகக்கட்டித், தநுகரணபுவநபோகமாய்ச்செய்து, கட்டினகட்டை யாவராலுமவிழ்க்கப்படாமல், கட்டினகட்டுடனே அநந்தங் கோடிகற்பங்கள், ஜநநமெடுத்துத்திரிகிறவென்னைச் சச்சிதாநந்தப் பொருள்தானே குருவாய்வந்து, தாயானவள் பிள்ளையைக்கட்டிக்கிடந்து பிரலாபிக்கைகண்டு, அக்கட்டையவிழ்த்துவிட்டுச் சேர்த்தணைத்துக் கொண்டாற்போலுஞ்சிக்குக்கூடாகிற தேகத்தை, நேதிநேதி வாக்கியங்களாலேஇதுநீயல்ல இதுநீயல்ல என்றுகழித்து, அந்தக்கட்டுகளைப் பிரித்து அவிழ்த்துவிட்டு, ஆத்மாவைச் சுத்தஞக்கித் தன்முடே சேர்த்துக்கொண்ட குருபாதத்தைப்போற்றிசெய்வேன்—எ-று. (க)

ரு. போற்றியென்னங்கமெல்லாம் புளகிதமாகப்போதித்,
தாற்றவேயநுபோகத்தை யங்கங்கேநிறுத்திப்பானென்,
றேத்தியேயென்னைத்தானே யெங்குந்தான்றுணைநிற்கத்,
தேற்றியகுருவின்பாதஞ் சிந்தையுட்போற்றுவேனே.

(இ-ள்)—குருவைத் தோத்திரஞ்செய்தஅடியேனை (எப்படிவேறுசெய்துதன்னேடுசூட்டினதென்னில்)என்னங்கமெல்லாம்புளகாங்கிதமாக,மூப்பத்தாறுதத்துவத்துடனேளல்லாவற்றையும்வேறுசெய்து, எல்லாந்தத்துவமுமிறந்தவிடத்தில்,சமாதியாக்கி, என்னையறிவித்து, என்னையுமிறக்கப்பண்ணி, அங்கே பரிணத்தெரிசிப்பித்து, இப்பாலுமுள்ளவிடங்களிலேநிறுத்தி, எல்லாவிடங்களுமிறந்தவிடத்து, என்னைத்தானேகீழ்மேலெங்குநின்றவுணர்வித்துப், பின்பு தான் தாணுய்நின்றது தெரியத்தேற்றிப்போதித்த ஆசாரியாதுதிருவடியை, உள் அகண்டபூரணமாகவும், புறம்பு சகுணமாகவும் போற்றிசெய்வேன்—எ-று. (உ)

ச-வது—அத்தியாயம்.

வேதச்சிறப்பு.

சூ. வேதமின்மினிவிளக்கு வெண்மதிகதிர்போற்காட்டும்,
பேதநால்விதத்துஞ்சிட்டிப்பிரபஞ்சத்தொழில்களெல்லாம்,
நீதமாய்க்காட்டிமோகூக நிலைவகையொன்றுய்க்காட்டும்,
பேதமாமதங்கள்காட்டிப் பின்னிட்டுக்காட்டுமன்றே.

(இ-ள்)—வேதமானதுமின்மினிபோலக்காட்டுமென்றது— தநுகரணபுவநபோகமே நிவர்த்திபோகபோக்கியமான சுகம் இதைவிடவில்லையென்

றுவேதமுதலானதுசொல்லும். அதெப்படியென்னில், பஞ்சபூதமே பிரம மென்றும், பஞ்சகோசமேபிரமமென்றுஞ் சொல்லி, லௌகீக விஷயபோ கமே சுகமானமோட்சமென்றுசொல்லுகையாலே, மின்மினி விளக்கமென்ற தென்றறிக. ஆகலிம்மையிலே இந்தப் பஞ்சபூதவிஷயமுஞ் சுகத்தைக் கொடுக்கில், மறுமையிலே மோட்சமில்லையே, அவ்விட மந்தகாரமல்லவோ வென்னில், அதெப்படி யாணவக்கடையானபே ரந்தகாரத்திலே கிடந்தவ னுக்கு வேதமானது விஷயபோகங்களிலே ருசிக்கப்பண்ணிக் கலஞானத் தத்துவம் மின்மினிவிளக்கம்போல, ஆணவ அந்தகாரத்தைநீக்கிக் கிரியை யையெழுப்பி யானெனதென்கிற வபிமானத்தைப் பற்றப்பண்ணுவித்து, இந்த அப்பியாசமிகுதியால் லௌகீகத்திலே துக்கமும் மோகூத்திலே கிஞ் சித்து ஆசையு மொருபக்குவத்திற் பிறப்பிக்கும்பொருட்டாக வேதம் லௌ கீகசுகமெய்யென்றது. ஆலல் லௌகீகசுகமே ருசிப்பிக்கச்செய்யில் இம் மைதுக்கமென்றும்,மறுமைசுகமென்றும், இவனுக்குவருமோவென்னில்,வெ ய்யலிலடிபட்டவன் நிழலும்பசித்தவனன்னமுந்தேடுகைபோல,இந்தச்சுகங் களாலேஅற்பத்துக்குஅற்பமும், கனத்துக்குக்கனமுமாகத்துக்கங்கள்அநுப வமாகவந்து மோகூஷந்தேடச்செய்கையாலே, மின்மினிவிளக்கமென்றதென் றறிக. இனி விளக்கொளிபோலென்றது—புண்ணியமிது பாவமிது, சத்கர்ம மிது அசத்கர்மமிது, என்றுவேதமுதலானது சொல்லுகையாலே, பாவமா கிற அசத்கர்மங்களைவிட்டுப்புண்ணியமாகிற சத்கர்மங்களைச்செய்கையாலே, சொர்க்காதிபோகங்களை யுண்டாக்கையாலும், இந்தகர்மங்களிலே பதிதர் மங்கள் விசேடித்ததாதலால் பிரமாதிபதவியுண்டாய்ப்பின்பொரு ஜன்மத்தில் மோகூஷாபேகூஷையத்தருதலால்,விளக்கொளிபோலாமென்றறிக. இனிச்சந் திரவிளக்கம்போலென்றது—பூரணச்சந்திரனுலும் அவன்கிரணத்தாலேகா ணப்பட்டவிஷயமெல்லாமுள்ளபடிதோன்றுமைபோல், அணுப்போலவேத மும் யோகங்களிலே மோகூஷமென்கையால்,இதிலேசமாதிவந்தாலும் நாதப்பி ரமலட்சியங்களை வெகுவாகக்கண்டு ஆநந்தித்தாலும், நிசமோகூஷமான தன் னையும்தலைவனையு மறிவியாதபடியினாலே, சந்திரவிளக்கமென்றதென்றறிக. இனிச் சூரியவிளக்க மென்றது—சூரியன் பரிபூரணனு யந்தந்தச் சீவனு டைய சட்சுவிந்திரியப் பிரகாசத்தாலேயெல்லாருக்கும் ரூபங்களைக்காட்டு கைபோல, வேதமும் அவரவர்புத்திபேதங்களைப்போலவே, அகண்டபரிபூர ணாதீதப்பொருளையுள்ளபடியே சிவயோகநிஷ்டாபரருக்குக் காட்டுகையா லே கதிரொளி போலென்றதென்றறிக. பேதநால்விதத்துஞ் சிருட்டிப்பிர பஞ்சத்தொழில்க ளெல்லாமென்றது— நால்வகையோனிமுதலான எழுவ கைத்தோற்றம் (அசு) லக்ஷம் அச்சுபேதசிருஷ்டிகளும், அதின்தொழில்பே தமும், ஆகாரபேதமும் ஜநமரண வுற்பத்திபேதமும், நரகசொர்க்கபேதமு ம், மோகூஷபேதமும், அதீதமான நிசமோகூஷமும், பேதமான புறச்சமய மு முட்சமயமுமிந்த மதங்களையெல்லாம் நிராகரித்துப் பின்னிட்டு நிசமோ கூஷத்தைக் காட்டுகையாலே வேதமே யெல்லாவற்றையும் விளக்குகின்ற தென்றறிக. (க)

ததுவநிஜாநுபோகசாரம்.

ரு-வது—அத்தியாயம்.

ஆகமச்சிறப்பு.

எ. வேதமநந்த மாயிரமென்ற விரிவெல்லா,
நாதமெடுத்தது னர்த்தப்பொருளே நலமாக,
ஓதினனேதா துணர்ந்தவனாகம மொப்பாக,
ஆதியுமந்தமு மில்லாப்பொருளு மகற்றிடுமே,

(இ-ள்)—வேதமானது அநந்தமென்றுமாயிரமென்றுஞ் சொன்னதெல்லாம் நாதமெடுத்தென்றது—உதாத்த அநுதாத்த சொரிதமென்கிற நாதங்களோடுங்கூடவெடுத்து, அதினர்த்தப்பொருளே நலமாக வோதும். ஓதாதுணர்ந்தவனென்றது—அதினர்த்தமான பலவிதங்களையும் நன்மையாக வெடுத்து—எல்லார்க்குந்தெரிய விஸ்தாரமாகப் பலவிதமான தந்திரங்களாகவும், படலமாகவும், இலக்கமில்லாத சங்கீதைகளாகவும், இருபத்தெட்டுக்கோடி யாகமஞ்சொன்னர். அதில் இருபத்தெட்டாகமமாய்ச் சங்கேஷபமாக்கினர். அவராலொன்னில், சருவக்ஞராய் ஒருவரோதவுணராதவரான, அநாதிசதாசிவதேவர்சொன்னர் ஆதலால், ஆகமத்தின்பெருமையை ஆகமமறியுமென்றறிக. (க)

கூ-வது—அத்தியாயம்.

நூற்பெயர்.

அ. அத்துவாமுதலதானவநந்ததத்துவங்கடன்னை,
மெத்தவேதிருக்கறுத்துண் மேவியநிசாந்தத்தைக்,
கைத்தலத்திந்தாவென்னக் காட்சியாய்க்கொடுத்தலாலே,
தத்துவநிசாநுபோக சாரமாமிந்நூற்பேரே.

(இ-ள்)— ஆறத்துவாமுதலான விரிவாகியுள்ள அநந்ததத்துவங்களின்நாமரூபக்கிரியைகளையு மிதின் சுதந்தாஹானியானசடத்துவத்தையும், சேடமானவிடத்தில், ஆணவமாயைகாமீக மலங்களையும்போக்கித் தன்னை யறிவித்தும், தன்னையுந் தத்துவங்களையும் பொருந்தப் பிரேரிக்கிறஞானசத்தியையு மிதற்குமுதலான பராசத்தியையு மிதற்குயிரான அருளையு மிதற்குயிரான சிவத்தையு மிதற்குமேலான பொருளையு மிதுகளின் திருக்குகளையு மறுத்து, இதற்குயிரான நிசப்பொருளைப் பக்குவராய்ப் பிரபஞ்சாபேகூடியுமோகூடாபேகூடியுமுள்ள சீவருனுக்கொரு பதார்த்தத்தைப்பிரத்தியகூடமாகக்கையிலே கொடுத்தல்போலச், சாராற்சாரமான தத்துவநிசாநுபோகசாரங்கொடுக்கும். அஃதெப்படியென்னில் தத்துவபதம்தத்துவங்களையெல்லாம் நீக்கியும்நிசபதம் மூன்சொன்ன பொருளெல்லாவற்றையுந்தாண்டி, நிசமான பொருளைக்காட்டியும்அநுபோகபதம், சிவயோகசமாதியில் போகமான மோ

கூதத்தையநுபவிக்கசெய்தும், ஒருசொல்லுபதேசத்தாலே, சாராற்சாரமான பொருளைக்கொடுக்குமென்றறிக. (க)

எ-வது—அத்தியாயம்.

நூலுரை.

இத்திமநூலை யினைசத்தசித்தே.

கூ. அருள்சிவகலாதிகூடி யந்தநம்காரணத்தேதய்ந்து,
மருளதாமித்தியபோக வாழ்செகமயமாமென்னைப்,
பொருளதாய்ச்செய்யமுன்னே புகன்றனைதப்போக்கித்தானை
குருவதாஞ்சித்தின்னுலைக் கூறியதென்றுகொள்ளே. [ய்க்,

(இ-ள்)— அருளானது பரசத்தியை யெழுப்ப பராசத்தி யிச்சா ஞா னக்கிரியாசத்திகளை யெழுப்ப,இதுகள் சிவதத்துவத்தையெழுப்ப இதுகா லதத்துவத்தையெழுப்ப,இதில்கலை வித்தை ராகம்மூன்றும் ஆத்மாவின் இ ச்சாஞானக்கிரியை யெழுப்ப,இது அந்தக்கரணம் ஞானேந்திரிய கன்மேந் திரியத்தையெழுப்ப,இது பூதங்களை யெழுப்பி யித்தோடே சீவனைதுகூ டிவிஷயத்திலே விழுந்து போகங்களைப் பொசிக்கப் போகமும் தேகமுஞ் செகமுந் தானுய் வேறொன்றுந்தான்றுமல் சென்னமரணந் தொலையாதி ருந்த் என்னை யொருபக்குவத்திலே குருவாய் வந்து கிருபையாலே முன் சொன்னபிரேரவகையுந் தத்துவங்களையும் அறிவித்தன்னியப்படுத்தி அ நித்தியமாக்கி அவ்விடத்திலென்சொரூபத்தைத் தெளிவித்து என்னையுந்தா ன்விழுங்கிச் சாட்சாத்காரமாய்த்தானின்று என்னையில்லையாக்கி உட்புறம் பெல்லாந் தானுய்ப் பொங்கிநின்று, சித்தாகிற சிற்பிரமமே தத்துவலிங்க தேவனென்னுந்திருநாமத்தையடைந்து அடியேனுக்கு மனு வாக்குக்காய ங்களாய் நின்று இந்நூலைச் சொன்னதென்றறிக. (க)

ய. தத்துவநிசானுபோக சாரத்தைத்தமிழினலே,
மெத்தவேயுசாவிப்பன்னூல் விரிகலையாவுஞ்சேர்த்துச்,
சித்துருஞானத்தேனைப் பானமாய்ச்செப்மேவார்க்காகத்,
தத்துவலிங்கதேவ சற்குருசாற்றினரோ.

(இ-ள்)— தத்துவநிசானு போகமாகிற சாத்திரத்தைத் தமிழாகச்சொ ல்லவேண்டிப்,பலநூல்கள் விரிந்த கலைகளில் வெகுவாக உசாவிச் சோதித் து, அபூர்வபதங்களைச்சங்கேபமாகச் சேர்த்துச் சித்துச்சொரூபமாகிற ஞா னரசமான தேனைப் பானமாக வுள்ளேகொண்டு,தெவிட்டாத தீவசதரத்தி ற் றீவாதரமான சத்தினிபாதர்க்காகத்,தத்துவலிங்கதேவசற்குரு சாற்றினு சேயென்றது, தத்துவமாகிற சராசரபிண்டபிரமாண்டங்களுக்கும், லீலியமக மசிருட்டிலியசிருட்டிக்கும், ஆதாரபூதமாய்விளங்கும் லிங்கமாகிறதெய்வஞ்ச

ற்குரு ரூபமாயெல்லாவற்றிற்குமீறி, அதீதபூரணமா யுள்ளேநின்றுபிரேரித்
துப் புறம்பே சகுணமாய்நின்றுசொன்னதென்றறிக. (உ)

யக. சாற்றினாந்தமாறிற் சதுர்த்தசவித்தையாலு,
மாற்றார்கணூலினூலு மாரூகமங்களாலும்,
வேற்றினர்சமையவாத வெகுபலநூல்களாலு,
மேற்றினர்சாராற்சார வீறெலாம்பனுவலாக.

(இ-ள்)— வேதாந்த சித்தாந்த போதாந்த யோகாந்த நாதாந்த காலாந்தங்களிலும், இனி வேதம் - ச - அங்கம் - சு - மீமாம்ஸை நியாயம் உ-புராணம் தருமசாத்திரம்-உ-ஆகப்பதிணென்குவித்தைகளிலும் ஆருதார வாக்கியங்களிலும் ஆறுசமயநூல்களிலும் மற்றுமுள்ள பாரகாவியப்பிரபந்தங்களிலும் வேதாகமங்களிலுஞ் சரசாத்திரங்கள் சாமித்திரிகை கொக்கோகசாத்திரங்க ளிதுகளிலும் மற்றுமுள்ளநூல்களிலும் ஞாலுங்கமானவிதில் சாராற்சாரங்களை ஞானகாண்டமான வுத்திரகாண்டத்திற் சேர்த்துங் கன்மாங்கமானஇதில் சாராற்சாரத்தைக் கன்மகாண்டமான பூர்வபாகதெட்சணகாண்டத்திற்சேர்த்துப் பனுவலாகச்சொன்னதென்றறிக. இதிலேற்றினொன்ற பதத்தி னர்த்தஞ் சித்தானபொருளுள்ளமாயென்னுள்ளத்துள்நின்றுவற்றிப் பிரேரிக்கையா லிதுகளின் சாரத்தையெடுத்துச் சொன்னது சித்தே யென்றறிக. (ங)

யஉ. ஈக்கொசுத்தேனரிப்ப னிரணியமெறும்பரக்கு, [லுந்,
வாய்க்கொளுமத்தால்வெண்ணெய் வாரிசேர் வெய்யில்போ
தீக்கடைந்தனலுநூலை சிலந்தியுஞ்சேர்த்தொன்றும்போ,
லூக்கொளவனேகஞான நூற்கெம்பமொன்றுப்ச்சொல்வாம்.

(இ-ள்)— ஈயுங் கொசுகும் பலபுட்ப ரசங்களையெடுத்துத் தேன்கூடுவைப்பதுபோலும், அரிப்பன நாலுப்புழுதிகளையு மரித்துப் பொன்னெடுத்தொருகுளிகை செய்தாற்போலும், எறும்புகள் நாலு மரங்களின் பால்பிசினைக்கூட்டிக் கொம்பரக்குசெய்வதுபோலுந், தயிருகளில் மத்தானதுகடைந்துவாங்கி வெண்ணெய்திரட்டுவதுபோலும், வெய்யிலானது வருஷகிரணங்களாலே சகலசெலங்களையும் பீலித்து மேகங்களிற்கட்டிவருஷித்தாற்போலுந், திரணகாஷ்டங்களி லக்கினியெடுத்துச்சுவாலாக்கினியாக்கினது போலுஞ், சிலந்தி நூல்களைச் சேர்த்துக் கூடாக்கல்போலும், வெகுவான ஞான நூல்களிலிருக்கிற ஆழ்ந்த அர்த்தங்களைச்சேர்த்து, இதிலூக்கொளவென்ற பதத்தாலேசிவன் சம்மதியாக உட்கொண்டுள்ளே பிரேரிக்கையாற் சேர்த்தெடுத்ததென்றறிக. (ச)

யஙு. மூன்னூல்களனந்தங்கோடி முப்பொருளதனைச்சொல்ல,
விந்நூலைச்சேர்ப்பதேதுக் கெனிலதிலற்டாதிக்கம்,

பன்னலுமுணர்த்தொண்ணூற்றாப்பரம்பொருள்மறைவுமாகச்,
சொன்னலுமெல்லாமித்திற்றோன்றவேசொற்பொருட்டே.

(இ-ள்)—முன்னூல்களனந்தங்கோடிசாத்திரம் பதி பசு பாசத்தையுஞ் சத சிவ பரத்தையு மிந்தமூன்று பொருளையுஞ்சொல்லி மோட்சமுஞ்சொல்லி யிருக்க இந்நூலைப் புதிதாகப் பிரயாசப்பட்டுச் சேர்த்தெடுத்ததேதுக்கென்னில், அந்த முன்னூல்களிலே ஒன்றையற்பமாகவும் ஒன்றைவிரிவாகவுஞ் சொல்லுகையாலும் ஒன்றைச்சொல்லியு மொன்றைச்சொல்லாமலுந்திரிபதார்த்தங்களுமறைவாகச்சொல்லுகையாலு, மிந்நூலிலற்பமானவிடங்களிலே யதிகமாகவுஞ் சொல்லாததுகளைச்சொல்லியுஞ் சொன்னதுகளையுஞ்சொல்லியுந் திரிபதார்த்தங்கள் எல்லார்க்குந் தெரியவுந் தத்துவசிக்கு விகற்பங்கள் நன்றுபத்தெரியவும் பனுவலாக எல்லார்க்குந்தோன்ற எவர்களுக்குமதுபார்க்கவேண்டிற்றோ அதுகளெல்லா மீதிலே சங்கிரகமாகவெல்லாந்தோன்றி விளங்கும்பொருட்டாக இந்நூலைச்சேர்த்ததென்றறிக. (நி)

ஆ-வது—அத்தியாயம்.

அவையடக்கம்.

அறிஞர்க்கடிமைபா பவையடக்கஞ்சொலல்.

எசை. ஆகியபெரியோர்முன்னேயடியேன்சொல்லேதையொக்கும்,
போகியமழைகடானும் பொழிந்திடவேணுமென்றே,
யேகியவிடிகளுக்கு யெதிரதாய்த் தவளைதானு,
மூகியேயொலிக்குமாபோ லுனைத்தனனிந்நூறன்னே.

எரு. தன்னேயேகயிலாயத்தின் முன்பரம்பனையாயுள்ள,
மின்னியசோகளீகை வீரியவீரசைவத்,
துன்னியசம்பிரதாயத் துகந்ததோர்சிடலுகி,
மன்னியதத்துவவிங்க மாயருட்செய்ததென்னே.

கூ-வது---அத்தியாயம்.

இந்நூலுக்குமுன்னூல்.

இந்நூலுனைத்தற்கெதிர்நூல்சமுகம்.

இந்த தத்துவநிசானுபோகசாரஞ் சொல்வதற்கு முன்னூற்பிரமாணங்களேதென்னில்.

தத்துவநிஜாநுபோகசாரம்.

சதுர்வேதம்.

முதல்முக்கியபிரமாணம்- இருக்குவேதம்- எசுர்வேதம் - சாமவேதம்-அதர்வணவேதமென்னுமிவைகள், இவைசுவயம்புவென்றும், ஈச்சுரனுற்சொல்லப்பட்டவைகளென்றுஞ்சொல்லப்படும். அவற்றுள் இருக்குவேதம்- இருபத்தொருபேதம். எசுர்வேதம்- நூற்றொருபேதம். சாமவேதம் - சகஸ்திரபேதம். அதர்வணவேதம் நவபேதமாம்.

வேதவாதசதுஷ்டயம.

அந்தவேதம், எதைச்சொல்லுமென்றால், விதிவாதம், அர்த்தவாதம்,மந்திரவாதம், நாமதேயமென நான்குபேதத்தால் சமஸ்ததர்மங்களையுஞ்சொல்லும். அவற்றுள்இராசாவாக்கினையைப்போல மனிதனைநிஷேதகர்மஞ்செய்யாமல் திருப்பிச் சுகர்மஞ்செய்ய வேண்டுமென்பதே விதிவாதம். பட்டுக்களைப்போல ஸ்துதிக்கிறதே அர்த்தவாதம். ஆசாரியனைப்போலச் செய்யத்தக்கவைகளைக் காட்டுகிறதே மந்திரவாதம். பிதாவைப்போல யாகாதிகளுக்குப் பெயரிடுகிறதே நாமதேயமாம்.

வேதாங்கம்.

அந்தவேதத்துக்கு- பாதம், அஸ்தம், முகம், கிராணம், சேத்திரம், சுரோத்திரமென்னும் அனுக்கிரமத்தில், சந்தசு, கற்பம், வியாகரணம், சிகைஷை, சோதிஷம், நிருத்தியமாகிய ஆறும் அங்கங்களாம். அவற்றுள், சந்தசு—மந்திரசுலோகாதிகளுக்கு அக்ஷரகணிதஞ் செய்யும். கற்பம்—ஆசுவலாயன, போதாயன, ஆபஸ்தம்பாதி சூத்திரங்களில் யக்ஞியப்பிரயோகாதிகளைக் கற்பிக்கும். வியாகரணம்— வைதீகசாஸ்திரார்த்தசித்தியைச் சமர்ப்பிக்கும். சிகைஷை— உதாத்த—அனுதாத்த, ஸ்வரித, பிரசயமென்னுஞ்சதுர்விதஸ்வரகரண பூர்வகமான பதபரளிக்கிரமவேதார்த்தியாயனுதிகளைச்சொல்லும். சோதிஷம்—லக்கின, திதி வார, நக்ஷத்திர, யோக கரணுதிகளால், வைதீககர்மங்களுக்குக்,காலந்தெளிவிக்கும். நிருத்தி-வைதிக சப்தநிர்வசனத்தை நியமிக்கும்.

அந்தவேதத்துக்கு, ஸ்மிருதி, புராண, நியாய, மீமாங்கிசை என்னும் நான்கும் உபாங்கமாம். இவற்றினிலக்கணமேற்சொல்லுதும்.

வேதோபாங்கம்.

அந்தவேதத்துக்கு, ஸ்மிருதி, புராண, நியாய, மீமாங்கிசை என்னும் நான்கும் உபாங்கமாம். இவற்றிலக்கணமேற்சொல்லுதும்.

உபவேதம்.

அந்தவேதத்துக்கு, ஆயுள்வேதம், அர்த்தவேதம், தனுர்வேதம், காந்தருவவேதமென உபவேதம் நான்குண்டு. அவற்றுள், ஆயுள்வேதம்—வியா

திதிதானம் வியாதிச்சின்னம், மந்திரௌஷதாதி சிகிச்சைகளால் ஆயுராரோக்கியாதிகளைக் காட்டும். அர்த்தவேதம், தக்ஷிணை, ஆச்சியம், சருமுதலான உபகரணங்களால் தர்மாதி சதுஷ்டயத்துக்குச் சாதனமாம். தனுர்வேதம்—சத்துரு க்ஷயார்த்தமான மந்திராஸ்திரப்பிரயோகங்களைக் கற்பிக்கும். காந்தருவவேதம்—சாமவேதாதிகளின், ச-ரி-க-ம-ப-த-நி-என்னும்சத்தஸ்வரகீதப்பிரபந்தங்களை விவகரிக்கும்.

உபநிஷத்து.

அந்தவேதத்தில், சிருத்திரம், பிரகதாரண்ணியம, சுபவதாசுவதரம,கைவல்லியம், காலாக்கினி, கடம், வல்லி, காத்தியாயனம், பிரமம், நாராயணம், அங்கிசம், பரமாங்கிசம், பாஸ்கரம், பிரமபிந்து. ஆருணி, அமிர்தபிந்து, சுரசபிந்து, பிரமகிபாலம், தேஜோபிந்து, வாசசநேயம், போதாயநீயம், ஆசுவலாயநீயம், சாங்கியாயநீயம், வாசியாயநீயம், கௌணகீயம், சிவசங்கற்பம், சிரவணம், பராக்கிரமம், புரோஷ்யம், முத்கலம், முண்டகம், மைத்திராயநீயம், என்னும்-கூ- உபநிஷத்துக்களும் ஞாஞங்கமானவிபூதிருத்திராக்ஷாதிகளையும், பிரமஞ்ஞானிகளையும் விவகரிக்கும்.

வ்ஸ்மிருதி.

மனு, அத்திரி, ஔசனிதம், விஷ்ணு, யாஞ்ஞவற்கியம், உசனம், ஆங்கீரசம், யமம், ஆபஸ்தம்பம், சம்வர்த்தம், காத்தியாயனம், பிரகஸ்பதி, பராசரம், வியாசம், சங்கலிதம், தக்ஷம், கௌதமம், சாதாண்மம். வசிஷ்டம், என அந்தந்தநாமதேயமுள்ளவர்களால் சொல்லப்பட்டதர்மசாஸ்திரம்.

யுகதர்மம்.

கிரேதாயுகத்தில் மநுஸ்மிருதிதர்மமும், திரேதாயுகத்தில் கௌதமஸ்மிருதிதர்மமும், துவாபரயுகத்தில்சங்கலிதஸ்மிருதிதர்மமும், கலியுகத்தில் பராசரஸ்மிருதிதர்மமும் முக்கியமாம். இந்தஸ்மிருதிகளில், சாதிவருணாச்சிரமங்களும், தாயாதிவிவகாரங்களும், அஷ்டாதசவிவகாரங்களுடைய பேதங்களும், மகாபாதகங்களுக்குபிராயச்சித்தாதிவிதிகளும் சொல்லும்.

சாதிவருணங்கள்

அவற்றுள் கம்மியம். அல்லது மஹராஷ்டிரம், கன்னடம், ஆந்திரம், திரவிடம் எனச் சாதி-ச.— பிர்ம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரனென வர்ணம் - ச.

ஆச்சிரமம்.

பிரமசரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசமென ஆச்சிரமம்-ச.

விவகாரபதம்.

கடன்கோடல், உபநிதி, கூடிமேம்படல், நல்கியதைதல்காமை, ஒப்பி ப்பணிசெய்யாமை, கூலிகொடாமை, உடைபனல்லான்விற்றல், விற்றுக் கொடாமை, கொண்டுள்ளமொப்பாமை, கட்டுப்பாடுகடத்தல், நிலவழக்கு, மாதரோடவர் தருமம், தாயபாகம், வன்செய்கை, சொற்கொடுமை, தண்ட க்கொடுமை, சூது, ஒழிபு என்னும் விவகாரபதங்கள் - ஐஅ.

அஷ்டாதசபுராணம்.

பிரமம், பதுமம், விஷ்ணு, சைவம், பாகவதம், நாரதீயம், மார்க்கண் டேயம், ஆக்கினேயம், பௌஷ்யம், பிரமகைவர்த்தம், இலிங்கம், வராகம் ஸ்காந்தம், வாமனம். கூர்மம், மச்சியம், காருடம், பிரமாண்டம் எனச் சிவ ப்பிரசாதத்தால் வியாசரிஷிஈஸ்வரர்சொன்னவேத நிஷ்டாசாரார்த்தப் பிரதி பாதகமான நாலுலக்ஷஞ் சங்கியையுள்ள அஷ்டாதச புராணங்களில் - சை வஸ்காந்த, இலிங்க, கூர்ம, வாமன, வராக, பௌஷ்ய, மச்சிய,மார்க்கண் டேய, பிர்மாண்டமென்னுமிவை - ஐ-ம்சிவபுராணம், நாரதீயம், பாகவதம், காருட விஷ்ணுவென்னு மிவை, சு-ம் விஷ்ணுபுராணம். பிரமம், பதுமம் எ ன்னுமிவை-உ-ம் பிரமபுராணம். பிரமகைவர்த்தம்-சூரியபுராணம். ஆக்கினே யம்-அக்கினிபுராணம். இந்த ஏற்றற்முழ்விணலேயே தேவதாதாரதம்மியமு மறிந்துகொள்க.

சாக்காதி பஞ்சலக்ஷணம்.

இந்தப்புராணங்களில் - சர்க்க- பிரிதிசர்க்க, வங்கிச, மனுவந்தர, வங் கிசர்னுசரிதம் என்னும் பஞ்சலக்ஷணங்களும், வைதீக தாந்திரீககர்மமுஞ் சொல்லும்.

உபபுராணம்.

சனற்குமாரம், நாரசிங்கம், நந்தி, சிவதருமம்,துர்வாசம், நாரதீயம். கபி லம், மானவம், உசனம், பிரம்மாண்டம், வாருணம், காளி, வாசிஷ்டலிங் கம், சாம்பவம், சௌரவம், பராசரம், மாரீச்சியம், பராக்கவம் என்னுமிந்த நாமதேயமுள்ளவர்களால் நிர்ம்மிதமான அஷ்டாதசவுபபுராணம், வைதீகத ர்மமே பிரதிபாதிக்கும்.

இதியாசம்.

பாரதஇராமாயணதிகள்வியாச வான்மீகாதிகளாலுண்டான இதியாச ங்கள், சத்துவாதிகுண பேதங்களும், தேவத்திரயலக்ஷணங்களும், தேவதா னவாதிகள்சனனக்கிரமமும், யுதிஷ்டிர ராமச்சந்திராதிகள்சரித்திரங்களும், வைதீகாதிதர்ம்மங்களும், திரிடீகரித்துச்சொல்லும்.

அவைதிக சாஸ்திரத்திரயம்.

இதற்குமேல், பிரகஸ்பதி, ஆகித, சுகதனென்னு மிவர்களால் கிரமத்திற்சொல்லப்பட்ட- சாருவாக- ஜைந- பௌத்தமென அவைதிகசாஸ்திரத்திரயமுண்டு, அவற்றுள்- சார்வாகமாவது- பிருதிவியாதிசதுர்விதபூதவிகாரமான சகத்துள், சுகமேசுவர்க்கம்- துக்கமேநரகம்- இவையன்றி வேறேசுவர்க்காரகமில்லையென்றுபிரதிபாதிக்கும்.

சைநமாவது - சித்த, பத்த, நாரகீகளென்னும் புருஷத்திரய லக்ஷண, ங்களையும், ஓட்டீச - ஓட்டாமிலேச, சுவாவினகற்ப, பதுமாவதிகற்ப, சாரதாகற்ப - குக்குடணதி கற்பாதிகளையும், மந்திரௌவுஷதாதிப்பிரியோத்திருக்களான பரமசித்தர்களையும், ஜானகேச, திகம்பர, பாணிபாத்திர, மயூரபிஞ்ச, பஞ்சமலதாரணதிகளின் கொலை, களவு, சூள், காமம், பொய்களில்லையான பஞ்சானுவிரதங்களில் மதுக, பலண்டு, மூதலானநிஷேத்தரவிய* ங்களைவர்ச்சித்து. தப்தசிலாசயனதி உக்கிரதபசாசரிக்கிற முனிவிருத்திகளையும், ஏமசந்திர, நாகசந்திர, நேமிசந்திர. ஏகிசந்திர, மாகசந்திர, அருகந்த-ஆதிநாத- அசகள- பாரீஸ்வநாத- சௌகத- சுருதிகீர்த்தி- ஸ்ரீமத்காமரகிதமுனி சுவாமி முதலான - (உச) தீர்த்தகரருடையசரித்திரங்களையும், சாதாஸ்தி, சாதாநஸ்தி, முதலான சத்தபங்கிகளையும், சீவ, சற்சீவ, நிர்ச்சீவ, நிர்ச்சர ஆசீர்வ, பந்த மோக்ஷமென்னும் சத்த பதார்த்தங்களையும், பிரதிபாதிக்கும்

பௌத்தமாவாது சௌத்திராந்திகம், வைபாடிகம், யோகாசாரம், மாத்தியமிகமென,நான்கு பிரகாரமாய்ப் பிருதிவியாதி புத்தி, யாந்தமான-(உஙு) தத்துவாத்மகமான பிரபஞ்சம், தீபச் சுவாலையைப்போல க்ஷணிகமாத்திரமென்று பிரதிபாதிக்கும்.

சாக்தீகபாஞ்சராத்திரம்.

இதற்குமேல் நிஷேதகர்ம்மசாஸ்திரங்களுண்டு. அவை-சத்தியநாதர், சதோகநாதர், ஆதிநாதர்அநாதிநாதர், வகுளிநாதர், மதங்கநாதர்,மச்சேந்திரநாதர்,கடோந்திரநாதர், கோரக்கநாதர்,என்னும்,நவநாதசித்தர்களால் கற்பிதமான- கௌள யாமளாதி- இம்சை- மைதுனதி- நிஷேதகர்ம்மமுள்ளசாஸ்திராந்திரங்கள், அபிசார கர்ம்மசனிதவியாதியாதியால், அகால மிருத்துரூபமான மரணசமூத்தி விஷமூர்ச்சாதிரூபமோகனமும், அக்கினிஸ்தம்பனை, ஜலஸ்தம்பனை, இந்திரியஸ்தம்பனை, கட்கஸ்தம்பனை, சிங்வைஸ்தம்பனை, கதிஸ்தம்பனதி ஸ்தம்பனமும், பூர்வசுகாசிரமநிரசனதமகமான- உச்சாடனமும், வஸ்திராபரண வனிதாதி வஸ்துக்களை நிஜஸ்தானத்திலிருந்து அழைப்பிக்கும் ஆகருஷணமும், பிராண நிநேகமானவிடத்தில் அந்நியோந்நிய விரோதமுண்டாக்குநிறவித்வேஷணமுமான, ஷட்கருமங்களையும், ராஜவசியாதிவ

சியங்களையும், சுராசுரபூதக்கிரகா வேசங்களையும், பாதுகாசித்தி, அஞ்சனசித்தி, குடிகாசித்தி, மூலிகாசித்தி, ரசவாதங்களையும் பிரதிபாதிக்கும்.

இதற்குமேல், சத்திதத்துவ வாசியென்னும், ஒருஆத்துமனுலும், வாசுதேவனுலும் கிரமத்தில் பிரதிபாதிக்கப்பட்ட அனுக்கிரமத்தில்சாக்தேகம்-பாஞ்சராத்திரமென சாஸ்திராந்தரத்துவயமுண்டு- அவற்றுள்-சாக்தேகம்-சடாசடப்பிரபஞ்சமெல்லாம்சத்திபரிணுமமென்பது மூதலாகமதவிஸ்தாரஞ்செய்யும்.

பாஞ்சராத்திரம் - பிருதிவியாதிமான சாந்தமானசதுர்விம்சதி தத்துவத்துக்குமேல் குணதத்வாத்மக வாசு தேவனுல் சக்திதாதாத்மீகமாயுண்டான சிருஷ்ண- அனிருத்த- மகரத்துவச ரௌகிணேயனென்னும் நால்வராலுற்பத்தி மூதலான கிருத்திய மென்று பிரதிபாதிக்கும். இதன்மேல்லௌகிக-வைதிக- ஆத்தியாத்மக- ஆதிமார்க்கிக- மாந்திரிகமென பஞ்சவிதசாஸ்திரங்களுண்டு- அவற்றுள்.

லௌகிகசாஸ்திரம்.

தன்மந்திரியாதிகளாற் சொல்லப்பட்ட ஆயுள்வேததண்டநீதிமூதலான சாஸ்திரம், திருஷ்டபலன்களைப்பிரதிபாதிக்கும்.

வைதிகசாஸ்திரம்.

ஜைமுனி-அக்ஷபாத-கணுதனென்னுமிவியீச்சுரர்களால்கிரமத்திற்சொல்லப்பட்ட- பூர்வமீமாங்கிசை- நியாய- வைசேடிகமென திருஷ்டா - திருஷ்டபலன்களைப் பிரதிபாதிக்கிற சாஸ்திரத்திரயமுண்டு-அவற்றுள்- பூர்வமீமாங்கிசையென்பது, உபக்கிரமமுதலான சட்விதலிங்கதாற்பரியத்தால், வேதவாக்கிய விசாரபூருவகமாய், சோதிஷ்டோம யாகாதிகர்ம்மங்களைவிதியுக்தமாகச்சொல்லும்.

நியாயமாவது- பிரமாண- பிரமேய- சம்சய- பிரயோசன-திருஷ்டாந்த-சித்தாந்த- அவயவ- தர்க்க- நிர்ணய- வாத- ஜல்ப-விதண்டா - ஏத்துவாபாச-சல-சாதிநிக்கிரக, ஸ்தானமென்னும் சோடசபதார்த்தமுஞ் சொல்லிப், பிரபஞ்சத்துக்கு ஈச்சுரனே கர்த்தாவென்று நிச்சயிக்கும்.

வைசேடிகமாவது. திரவிய, குண, கர்ம்ம, சாமான்னிய, விசேஷ, சமவாய அபாவமென்னும்-சத்தபதார்த்தபிரதிபாதகத்தால். பிரபஞ்சசொரூபத்தை விவகரிக்கும்.

ஆத்தியாத்மீகசாஸ்திரம்.

கபில- பதஞ்சலி-வியாசனென்னு முனிவர்களால்கிரமத்திற் சொல்லப்பட்ட- சாங்கிய-பாதஞ்சல- வேதாந்தமென- ஆத்மக்கியான பலன்களுள்ள ஆத்தியாத்மீக சாஸ்திரத்திரயமுண்டு-அவற்றுள்.

சாங்கியம்-நித்தியநிர்ம்மலமானஆத்மசந்நிதானத்தில் குணத்திரயாத்மகப் பிரகிருதியே பஞ்சவிம்சதிதத்துவாத்மகசகத்தாய் விவகரிப்பதே சம்சாரபந்தமென்றும் - சத்துவாதி குணத்திரயானுக்கிரமத்தால்சேதம்பிரகிருதி-

பித்தப்பிரகிருதி - வாதப்பிரகிருதியினுள்ளசாந்தி- குரோதமூடாதிகுண யுக்தமான- உத்தம- மத்திம- அதம-புருஷத்திரய வர்ண- நீதி-முதலானவைக ளுண்டாமென்று சொல்லும்.

பாதஞ்சலம்- இயம - நியமாதி அஷ்டாங்கயோகத்தால், மனோநிச்சல சித்தியாமென்றுசொல்லும்.

உத்தரமீமாங்கிசை- உபநிஷத்தர்த்தப் பிரதிபாதகமான வேதாந்தம்-பி ரபஞ்சத்துக்கு மித்தியாத்துவஞ்சாதித்து, அதனால் பிரமாத்தும ஐக்கியத் துவம்வர்ணிக்கப்பட்டும், பாஸ்கரீயம், மாயாவாதம், சத்தப்பிரமவாதம், கிரீ டாப்பிரமவாதமென நான்குபேதமாம். இதற்குமேல்.

ஆதிமார்கீகசாஸ்திரம்.

மாயாதத்துவ- வித்தியாததத்துவ வாசிகளானருத்திராற் சொல்லப்பட் டபாசுபத- காபாலிக - மாவிரதமெனஆதிமார்க்கீகசாஸ்திரத்திரயமுண்டு. அ வற்றுள்.

பாசுபதம், மாயாகர்ம்மாதிகளைச்சொல்லும்.

காபாலிகம், நரகபாலபிக்ஷாடனாதிகளைச்சொல்லும்.

மாவிரதம் - அஸ்திகாரணாதிகளைச்சொல்லும்.

நாநாமதஸ்தர்களுடைய ஆத்துமநிரூபணம்.

இப்படிச்சொன்ன சமஸ்தமதாந்தரங்களில் பிரதிபாதிக்கும் ஆத்ம ரூபமாவது.

சார்வாகன்- ஆத்துமன்- தேகமேயென்பன்.

சார்வாகஏகதேசி- ஆத்துமன்- இந்திரியமேயென்பன்.

இரணியகர்ப்பனென்னுஞ் சார்வாக ஏகதேசி - ஆத்துமன்- பிராண னேயென்பன்.

சைநன்- ஆத்துமன்- தேகாதிவிலக்ஷணனுய்தேகபரிணமிதனுய், பரி ணமித மத்தியையில் சங்கோசவிகாசதர்ம்ம யுக்தனுயிருப்பனென்பன்.

பௌத்தன் - ஆத்துமன்- புத்தியேயென்பன்.

கௌளயாமளசாத்துமீகர் - ஆத்துமன் - ஆனந்தமேயென்பர்.

பாஞ்சராத்திரன், ஆத்துமன், நாடிமத்தியகதனுய், அணுப்பிரமாண மாகவே யிருப்பனென்பன்.

லௌகிகன், ஆத்துமன்- தேகபுத்திர களத்திராதி ரூபனென்பன். மீமாங்கிசபேதர்களான பாட்டப்பிரபாகரர் ஆத்துமன் ஸ்வதப் பிரமா ணமான ஞானரூபனென்பர்.

நியாயவைசேடிகர், ஆத்துமன், ககனம்போல மகத்பரிணமனுய், பா

தத்துவநிஜா நுபோகசாரம்.

ஷாணம்போலச்சடரூபணுலும், மன்சுசம்யோகத்தால் சித்துசம யுக்தனு யிருப்பனென்பர்.

சாங்கியபாதஞ்சலிகர் - ஆத்துமன், அசங்க சின்மாத்திரமென்பர். வேதாந்திகள், ஆத்துமன், ஒருப்திமாத்திர னென்பர்.

பாசுபதகாபாலிக மாவிரதிகள்- ஆத்துமன், நித்தியவியாபக சைதந் னியனென்பர்.

மாந்திரசமிஞ்ஞாசித்தாந்திகள்- ஆத்துமன்நித்தியவியாபக ஞானக்கி ரியா சொரூபனென்பர்.

இனி இந்தச்சகலசமயவாதிகளால் பிரதிபாதிக்கப்பட்டமோக்ஷலக்ஷ ணமாவது.

சார்வாகாலௌகிகர்- மரணமேமோக்ஷமென்பர்.

ஜைநன், ஆகாசமத்தியத்துஞ்சுத்தரோத்திரகமனமேமோக்ஷமென்பன்.

பௌத்தன், சுகதுக்காதிகளால் மயக்கப்படாமலிருக்கும் சுத்தபுத் தி சந்ததியே மோக்ஷமென்பன்.

கௌளயாமளர், ஆகாசகமஞ்தசித்திப்பிராப்தியேமோக்ஷமென்பர்.

சாத்துவீகன், ஆனந்தப்பிராப்தியே மோக்ஷமென்பன்.

பாஞ்சராத்திரிகள், வாசுதேவாத்துமகப் பிரகிருதியில் சொரூப ஆ னியில்லாது அடங்குவதே மோக்ஷமென்பர்.

லௌகிகர், இகலோகத்தில் புத்திரதாராதிகளுடன் கூடிவியாதியா தி துக்கமில்லாமல், சுகத்திலிருக்கிறதே மோக்ஷமென்பர்.

பூர்வமீமாங்கிசிகள், சுவர்க்காதிலோகப் பிராப்தியேமோக்ஷமென்பர் கியாய வைசேடிகர், ஆத்துமன் சரீரோந்திரியாதிஇருபத்தொருதுக்கஆ த்தியந்தநாசத்தால் பாஷாணம் போலிருப்பதே மோக்ஷமென்பர். சாங்கியர், பிரகிருதி புருஷவிவேகத்தால், அவித்தியாநாசமானதேமோ க்ஷமென்பர்.

பாதஞ்சலிகர், யோகாப்பியாச பலத்தான் மஹேலயத்துவாரத்தால் அ ஞ்ஞானமழிந்ததே மோக்ஷமென்பர்.

வேதாந்திகள், பிரமாத்தும வைக்கிய ஞானத்தால் விவகாராதி சம்சா ரபந்த நிவர்த்தியே மோக்ஷமென்பர்.

பாசுபதர், பிரவாகேஸ்வரத்தால்ஈச்சுரத்துவம்அந்தியருக்குக்கொடுத்துஆ த்துமன்ஒருப்திமாத்திரமா யிருப்பதே மோக்ஷமென்பர்.

காபாலிகமாவிரதிகள், கர்த்துருத்வமான சம்சாரபாவத்தைவிட்டு,ஒருப் திமாத்திரமாயிருப்பதேமோக்ஷமென்பர்.

மாந்திரசமிஞ்ஞா சித்தாந்திகள், ஆத்துமன்சடத்துவாதீந சிவசமான த்துவமாவதேமோக்ஷமென்பர்.

இந்தவாதிகளில் சார்வாக - ஜைந - பௌத்த-மீமாங்கிச- சாங்கிய ரென்பவர்- நிரீச்சுரவாதிகளாம்.

மற்றவர்களெல்லாம் சுரவாதிகள். இந்தமகாவாதிகளில் - சார்வாகாதிகளைவரும், பேதவாதவாதிகளாம் - வேதாந்தி யொருவனே யபேதவாதியாம்.

மீமாங்கிசசாஸ்திரவிவரம்.

இப்படிச் சொல்லப்பட்ட, சகலசாஸ்திரங்களுக்குள்- வேதம்- (சு) வேதாங்கம்- (சூ) வேதோபாங்கம் - (ச) இவை சதுர்த்தசவித்தையென்னப்படும். இந்தச்சதுர்த்தசவித்தையுள், மீமாங்கிசையாவது, மிகுதியும்விசிஷ்டமாய், இருபது அத்தியாயமாய்ப், அர்த்தப்பிரதிபாதகத்தால், துவிபாகமாம். அவற்றுள், பிரதமபாகம், ஜைமுனிசூத்திரரூபத்தால், துவாதச அத்தியாயமாய், தர்ம்மார்த்தப் பிரதிபாதகமாய், லோகவேதாதிகரண மென்பது முதலான, சகஸ்திரனியாயத்தால், பூர்வமீமாங்கிசையென்னப்படும். அந்தஜைமுனிசூத்திரத்துக்கு, சாபரனுல்சாபரமென்னும்பாஷியஞ் செய்யப்பட்டது. அதற்கே பாட்டாச்சாரியரால், வார்த்திகரூபத்தில் பாட்டமென்றொருமதாந்தரஞ் செய்யப்பட்டது. அந்தப் பாட்டருடையசிஷ்யரான பிரபாகரரால் அந்தசாபரபாஷியத்துக்கே பிரபாகர மென்றொரு மதாந்தரஞ் செய்யப்பட்டது.

இரண்டாம்பாகம்-வியாசர் சூத்திரரூபத்தால் எட்டத்தியாயமாய்ப் பிரமாத்துமக பிரதிபாதகத்தால், உத்தரமீமாங்கிசையென்னப்படும். அதனுள் பூர்வம், நான்கத்தியாயமும் தேவதாகாண்டமாம். அதில்மந்திரவாதத்தைப் போலத்தேவதாலக்ஷணங்கள் பலபத்திராமரால்பிரதிபாதிக்கப்பட்டது.

உத்தரமான நான்கத்தியாயமும்பிரமகாண்டமாம். அதனுள், பிரமாத்துமவயிக்கியப் பிரதிபாதகமாய்ச் சங்கராசாரியரால் பாஷியஞ்செய்யப்பட்டது. அந்தப்பாஷியத்துக்கே விவரணாசாரியரால், விவரணஞ்செய்யப்பட்டது. அந்த விவரணமே வேதாந்தசாஸ்திரமாம்.

ரெ-வது— அத்தியாயம்.

இந்நூலில்சொன்ன அத்தியாயப்பெயர்கள்.

இந்நூல்தன்னி லெடுத்தவத்தியாயம்.

விநாயகஸ்துதி-கடவுள்வணக்கம்- அருளிறைவணக்கம்- வேதச்சிறப்பு- ஆகமச்சிறப்பு- நூற்பெயர்-நூலுரை அவையடக்கம்- இந்நூலுக்குமுன்னூல்- இந்நூலிற்சொன்ன அத்தியாயப்பெயர்கள்- பிறவியருமையுரைத்தல்-இதோவுபதேசம்- பிராமணன்சரிதை- க்ஷத்திரியன்சரிதை- வைசியன்சரிதை- சூத்திரன்சரிதை- பிரமசாரிசரிதை-கிரகஸ்தன்சரிதை - வானப்பிரஸ்தன்சரிதை- சன்னியாசிசரிதை- அதிவன்ரூச்சிரமிசரிதை- உடலிழிவு- குடும்பவிழி

வு - போகவிழிவு- மகளிரிழிவு- பொருளிழிவு- அரசிழிவு-சொற்கவிழிவு- சென்னசக்கரம்- செனனவிருக்ஷம்- அசேஷந்துக்கம்- அநித்தியதெரிசனம்- வீடுபற்று - பிதுராயனதெட்சணயணம் - தேவாயனஉத்தராயணம் - ஞானிகள்கெதி-பாவிகள்கெதி - சமையபேதங்களில்நின்றபோஜிலை-ஞானிமகாத்மியம்- ஞானிபூசை-ஞானிசீலம்- ஞானியுண்பலன்-ஞானியேவல்- ஞானியையிகழ்ந்தோர்கேடு-கூடாவொழுக்கம்பிரபஞ்சவுற்பத்தி- சிருஷ்டி-இரட்சிப்பு-சங்காரம்-திரோபவம்- அநுக்கிரகம்-பிண்டிகிருதம்-பிண்டோற்பத்தி-கெற்பந்தரிக்குநாள்பேதம்-சையோகவிதத்திலுற்பத்திபேதம்-ஜாமத்திலுற்பத்திசுரத்திலுற்பத்திபேதம்-காலசக்கிரபேதம்-சரத்தில்வருஷபலன்நவக்கிரகராசிநட்சத்திரஞ்சரத்தில்நடப்பது-சன்மார்க்கம்- சாதிசங்கற்பம்-பொதுவானஅத்தியாயம்(சுஉ)

சமையத்தொகுதி- கிரீடபிரமவாதம்- லீலாபிரமவாதம் - பிரதிபிம்பவாதிமதம்- மாயாவாதிமதம்- வைதீகவேதாந்தம்- சுத்தவேதாந்தம் - இதில்பின்ரெருசிவன்முத்தர் அச்சுமாரூதவாதிமதம் - சாங்கியன்மதம்- நிரீஸ்வரசாங்கியன்மதம்- (பதஞ்சலிமதம்) - பூர்வமீமாங்கிசை-வைசேஷியன்மதம்-நையாயிகன்மதம் - சிவாத்துவிதிமதம்- பாஸ்கரியன்மதம்- சத்தப்பிரமவாதிமதம்- வையாகரணிமதம்- பாட்டமதம்- பிரபாகரமதம் - ஆறந்தபேதம்-இதில்-முதல்நாதர்ந்தம்- இரண்டாவதுசித்தாந்தம்-மூன்றுவது போதாந்தம்- நான்காவது யோகாந்தம் - ஐந்தாவது காலாந்தம் ஆறுவது வேதாந்தம் - ஏழாவது வேதாந்தசித்தாந்தம் - எட்டாவது சித்தாந்தவேதாந்தம் - புராணிகன்மதம்- பாஞ்சராத்திரன்மதம்- மகேஸ்வரன் சரிதை-ஆகமம்வந்தவரலாறு- சுத்தசைவசிந்தாந்தம் - வேதாந்தசித்தாந்தத் துபக்கிரமஞ்சரியாகச்சொல்வது-சிவசமவாதிமதம்- அயிக்கவாதிமதம்- பாசுபதிமதம்- சங்கிராந்திவாதிமதம்-பிறவாஹேஸ்வரவாதிமதம்- மகாவிரதிமதம்- காளாமுகன்மதம் - காபாலீகமதம்- அவ்விகாரவாதிமதம் - சம்மேளிதசைவன்மதம் - சைவத்திற் பேதாபேதவாதிமதம்- வீரசைவம்- அனேகேசுரவாதிமதம்- வாமமதம்- வைரவமதம்-கவுளயாமளமதம்- ஊற்தசைவம்- அநுதிசைவம்-ஆதிசைவம் - மகாசைவம்-பேதசைவம் - அபேதசைவம்-அந்தரசைவம்- குணசைவம் - நிற்குணசைவம்- அத்துவாசைவம் - யோகசைவம் - ஞானசைவம்- அணுசைவம் - கிரியாசைவம்- நாலுபாதசைவம்- சுத்தசைவம்-லோகாயுதன்மதம்- புத்தரிற்சவுந்திராந்திகன்மதம்- யோகாசாரன்மதம் மாயத்தமிகன்மதம்-வைபாஷிகன்மதம்-அருகரில்நிகண்டவாதிமதம்- ஆசீவகன்மதம்- பிருதிவிபூதவாதிமதம் அப்புபூதவாதிமதம்-அக்கினிபூதவாதிமதம்-வாய்வுபூதவாதிமதம்-ஆகாசபூதவாதிமதம்-பஞ்சகோசவாதிமதம்-நவக்கிரகவாதிமதம்- சூரியவாதிமதம்-சந்திரவாதிமதம்-ஊழ்வாதிமதம்- காலவாதிமதம்-மந்திரவாதிமதம்-அந்திரவாதிமதம்- அவிழ்தவாதிமதம்—வாதிகள்பிரகரணம் (எக)

தீர்த்தசங்சற்பம்-அற்சனைசங்கற்பம்- பஞ்சாட்சரமுதலானமந்திரங்கள்-சிவபூசாவிதி- அத்துவாசங்கற்பவாதி- தற்கவாதிசங்கற்பம்- தானசங்கற்பம்-விரதசங்கற்பம்- சரிதைசங்கற்பம்- துலுக்கமதம் - அளவைப்பிரமாணலக்ஷணம் - அண்டகோசலக்ஷணம் -யோகசமுகம்— சங்கர்ப்பபிரகரணம் (கங)

தத்துவவர்க்கநாமம்- சத்தினிபாதமுறைமை- சகலர்முதற்சத்தினிபாதம்வருமாறு-மும்மலமுமுடைய அதமரானசகலரிலக்கணமுஞ் சத்தினிபாதமும்வருமாறு- மத்திமரான இருமல முடையபிரளயாகலரிலக்கணமுஞ்சத்தினிபாதமும்ஒருமலமுடையஉத்தமரானவிஞ்ஞானகலரிலக்கணமுஞ்சத்தினிபாதமும்-உத்தமரானவிஞ்ஞானகலர்மத்திமரானபிரளயாகலர் அதமரானசகலர்-பிரளயாகலர்தீட்சாலட்சணம் - சகலர்க்குவருகிற குருநாமசமுகம்-இந்தகுருவானவர் சகலரில் அபக்குவர்க்குச்செய்கிற தீக்ஷாக்கிரமம்-சகலரில்பக்குவர்க்குதீட்சாக்கிரமஞ்செய்கிறவகை- தீட்சாசமுகநாமம்-சற்சிஷ்யலட்சணம்-அசற்சிஷ்யலட்சணம்-சிவதீக்ஷாவிதானம்-சிவதீக்ஷைக்குத்தத்துவங்கள்போதிக்கிறமுறைமை-பஞ்சபூதசிருட்டிவிதசமுகம்-பஞ்சபூதத்திரிகுணம்-பஞ்சபூதங்காரியப்பட்டவிபரம்-காரியபூததெரிசனம்-பிருதிவிபூத சதுர்விததெரிசனம்-அப்புபூதமென்பதெதை-தேயுபூதமென்பதெதை-வாய்வுபூத சதுர்விததெரிசனம்-ஆகாசஞ்சதுர்விததெரிசனம்-அஞ்சுக்குங்காரியத்தில்- பஞ்சபூதத்தின்வண்ணம்-பஞ்சபூதஅதிதேவதைதெரிசனம்-பஞ்ச பூதங்களுமனுத்திரணகாஷ்டங்கள்--சரசீவன்அசரசீவன் சராசரசீவன்இம்மூன்றுவிதத்திலும்-ஒருசீவன்வேறொருசீவனாகிறது-பூதவேற்றுமையாலே ரோமோற்பவபேதம்-பூதாஷ்டகுணம்- பஞ்சபூதத்திற்பூசரகேசரவனசரம்-எண்ணிறந்தசீவராசிகளுக்கும்எண்ணிறந்தகுணபேதம்-ஒருதனுவிலேபஞ்சபூதசிவராசிகளிலெண்ணிறந்தபேதம் பஞ்சபூதகுணதிகோற்பவம்- பஞ்சபூதமும்எழுபத்தைந்துகுணமாகிறதுபஞ்சபூதத்தின்குணதெரிசனம்-பஞ்சபூதமுஞ்சத்தாதிகளையறியும்வகை-பஞ்சபூதத்துக்கும்வியாத்திவியாபகதெரிசனம்-பிண்டகோசலட்சணம்- நவக்கிரகங்களும்பிண்டத்திலிருக்கும்படி-நக்ஷத்திராசிநிலை- அண்டத்திற்பஞ்சபூதபிரளயதெரிசனம்-சர்வசங்காரபிரளயம்-பிண்டத்திற்பஞ்சபூதபிரளயம்- பிண்டமிருக்கப்பிண்டாவஸ்தைபெறுவது-பிண்டாவஸ்தையில்ஆயிசுபிரமாணம்- ஸ்தூலபஞ்சபூதமானதுபஞ்சீகரித்தென்றிலொன்றுகலந்துஅஞ்சுபூதமுமிருக்கிறதுஞானேந்திரியநாமம்- ஞானேந்திரியகிரியையயிற்சுரோத்திரகிரியையாவது-தொக்கின்கிரியையாவது-சட்சுக்கிரியையாவது-சிங்குவைக்கிரியையாவது- ஆக்கிராணகிரியையாவது- ரூப்மாவது- தொக்குத்திரையோ தெரிசனமாவது- சட்சுதிரையோதெரிசனம்- சிங்குவைரூபத்திரையோ தெரிசனம் - ஆக்கிராணரூபத் திரையோதெரிசனம் - சத்தாதிநாமமாவது - சத்தாதியின்கிரியையாவது- சத்தாதி சமூகமாவது தத்துவரூபம் தத்துவதெரிசனம் தத்துவசுத்திஞானேந்திரியசீவமாவது-துதியோ விந்திரியதெரிசனமாவது-திரிதியோயிந்திரியதெரிசனம்-சதுர்த்தோவிந்திரியதெரிசனம்- பஞ்சேந்திரியதெரிசனம்-கன்மேந்திரியநாமமாவது- பாதத்திரயோ தெரிசனமாவது - பாணித்திரையோ தெரிசனமாவது- பாயுத்திரையோ தெரிசனமாவது - குய்யத் திரையோதெரிசனமாவது- கன்மேந்திரியவிஷயமானவசனதிதெரிசனம் - வசனதியின் கிரியையாவது- அந்தக்கரண சிருஷ்டிபேதமாவது- அந்தக்கரணநாமமாவது- அந்தக் கரணத்தின் கிரியையாவது - அந்தக்கரணத்தைச் சிவன் நடத்து ஆஞ்ஞாசக் கரமாவது- பூர்வகதைகளுண்டு - மதிரூபத் திரையோ தெரிச

னம்- புத்திரூபத் திரையோ தெரிசனம்- ஆங்காரரூபத்திரையோதெரிசனம் சித்தத்திரையோதெரிசனம்- காலதத்துவநாம தெரிசனம்- காலதத்துவம்வ ழின் கிரியைசொல்வது- இதிற்கலையின்கிரியையாவது - வித்தையின்கிரியை யாவது- இராகத்தின்கிரியையாவது- நியதிக்கிரியையாவது - சுத்ததத்துவங் களுடைய நாமசமூகங்களாவது- சுத்ததத்துவ உற்பத்தியும் கிரியையும்சோ ல்வது- ஈஸ்வரத்திரையமாவது- சதாசிவமென்பதெதை - சத்திதத்துவமெ ன்பதெதை-சிவதத்துவமென்பதெதை-அவஸ்தைநாமசமூக தெரிசனமாவது அவஸ்தையி னுடைய கிரியைசொல்வது- கேவலத்தின்காரியமான மூலவ த்தையாவது- அதிதத்திரையோ தெரிசனமாவது - சுத்தாவத்தையின்தெரிச னவரலாறு- தாதுகெதாஅவஸ்தையாவது - குணசம்பந்தாஅவஸ்தையாவது அவஸ்தாந்தாஅவஸ்தையாவது- ஆதாரகெதாவத்தையாவது - கரணகெதாவ த்தையாவது- சங்கேபரவஸ்தையாவது- அனுபாவவஸ்தையாவது- நிமி ஷாஅவத்தையாவது— தத்துவபிரகரணம்(க0கூ)

குருவுபதேசம்- ஜனனயிர்வேறுசெய்தல்- பஞ்சபூதப்பழிப்பு - பொறி-ப த்துமற வுணர்தல்தெரிசனம். இந்திரியம்வேறுசெய்தல்- அந்தக்கரணம்வே வேறுசெய்தல்- காலதத்துவம் வேறுசெய்தல் - சுத்ததத்துவதெரிசனம்- த த்துவாதீதமாவது- மூத்திச்சகலமாவது முத்திக்கேவலதெரிசனமாவது-முத் திக்கேவலாதீதமாவது- தன்னுண்மைதெரிசனம்-சைதன்னியதெரிசனம்-ஞா னசத்திதெரிசனம்- பரைதெரிசனம்- பரையில்வியாபகமாவது - பரையோக மாவது- முத்திசாக்கிரமாவது- சாக்கிராதீதமாவது- பரையாதீதமாவது- சுத் தாவத்தையாவது- சுகசாரூபமாவது- சுகாதீதமாவது - சிவப்பேறுவது-ப ரமானந்ததரிசனமாவது - பரமானந்தயோகமாவது - பரமானந்தபோகமாவ து- பரமான்ந்தமேலீடாவது- பரமானந்தவசமாவது- தசகாரிய்மாவது- சிவ ன்முத்திபரமுத்தியாவது—சிந்தாந்தவுபதேசப்பிரகரணம்- (கூஉ)

மகாவாக்கிய சொரூபலட்சணம்-தேகம்வேறுசெய்தல்- புலன்வேறுசெ ய்தல்- அந்தக்கரணம்வேறுசெய்தல்- பிராண வாயுவை வேறுசெய்தல் - மூ ன்றுதேகமான ஏழு உபாதிவேறுசெய்தல் - காரணஉபாதியான ஏழுஉபாதி (அஞ்ஞானபூமிஞானபூமி) உயிருண்மைதெரிசனம் - அந்தகாரமானசுழுத்தி க்குஅவசரப்போவது- துரியவிஞவாவது- துரியசொரூபமாவது- துரியதெரி சனமாவது- துரியவிலாசமாவது - துரியமகாத்மியமாவது - தொம்பதசுத்தி யாவது- தற்பரமாவது- பரசாக்கிரமாவது- பரசொற்பனமாவது - பரசுழு த்திவிஞவாவது- பரசுழுத்திதெரிசனமாவது - முன்சொன்ன பரசுழுத்தியா கிறஅதிதவிலக்கணமாவது- அதிததெரிசனமாவது- அதீததுரியலக்ஷணமாவது-பர விஞவாவது- பரவிலக்கணமாவது-பரதெரிசனமாவது - பரவஞ்சூதியாவது- விசுவவிஞவாவது- விஸ்வம் நிலையாமையாவது - விஸ்வக்கிராச தெரிசனமா வது பரிபூரணமாவது தொம்பதசுத்தியாவது பரதுரியலக்ஷணமாவது அசிபதமா வது அசிபதவிஞவாவது உபசாந்த தெரிசனமாவது சிவசாக்கிரமாவது சிவ சொற்பனமாவது சிவசுழுத்தியாவது உபசாந்ததுரியலக்ஷணமாவது சிவவிலக்க

ணங்கூறுவது சிவதரிசனமாவது சிவசொரூபாநுபூதியாவது அசிபதசுத் தியாவது சத்தியாதிதரிசனமாவது சித்துசொரூப தெரிசனமாவது மூத்தி ஞானமமாவது சொஸ்சொரூபவ தெரிசனமாவது ஆரூவதானசூக்கு மதுரி யசொரூபதெரிசனமாவது அதிசூக்குமதுரிய தெரிசனமாவது மகாசூக்கும துரியசொரூபதெரிசனமாவது சூக்குமசத்தியாதி தெரிசனமாவது சத்தியா வது நிருக்குவிவேகமாவது பத்தாவதுநிருக்கு சொரூபமாவது சுவானுபூதி வந்தபோர்கள். மாகத்தன். மாபோகி. மாத்தியாகி சமாதிகளில் மௌனமூத்தி ஞானாலுவிதம். சொல் மௌனம் காஷ்டமௌனம். கரணமௌனம். சுழுத் திமௌனம். இப்படி நின்றவர்களடையும்பதமேதெனில் சகுணவயிக்கியம். நிற்குணவயிக்கியம். சகசவயிக்கியம். நிதத்தியமூத்தி வயிக்கியம். இப்படிநா லாம். இந்தப்பிரமமே குருவானதுசொரூபம். சுபாவம். பரிபூரணம்.—வேதா ந்தவுபதேசப்பிரகரணம்(நிரு)

யக-வது—அத்தியாயம்.

பிறவி யருமையுரைத்தல்.

பிறவிபெருமை பெருமையுரைத்தல்.

அறிவானந்தசித்தியாரில்,

யசூ. தேரிற்சதுரயுகமிரண்டாயிர நாட்டிங்களொன்
டோரிலக்நூற்றி லபன்மான்தெகாந்தமுமுற்றுத்தென்பாற்
சேருநுகத்துளையில் வடபாற்கழிசெல்லெளிது
சாரும்பிறப்பொழித்திம்மானிடத்திற்சனிக்கரிதே.

யள. அரியதிம்மானிடமாகியருஞ்சுனீரருந்தித்
திரியுமன்னட்டிடைத்தப்பிநன்னட்டைச்சேர்வரிதிங்
குரிபப்பிரவுஞ்சநூலினைப்பொய்யென்றிங்குன்னமை நன்னூல்
தெரிதலரிதுபபன்கேட்டதனிலுசேர்வரிதே.

(இ-ள்)— விசாரிக்குமிடத்து நாலுயுகமுங்கூடின சதுர்யுகம்-உக- தரம் திரும்பில் பிர்மாவுக்கு ஒருநாளாம். இது- ஈயி- கூடில்வருஷமாம். இது நூறு கூடில்பிர்மாவுக்குப் பரமாயுசாம், அப்போதுபிருதிவிபூதமாயிரங்கோடியண் டங்களையுந் தாலப்பிருதிவி பூதத்தையும், அப்புப்பூதமிருஞ்சிவிழுங்கியெல்லாங் கரைந்து பிருதிவிமயந் தோணுமல், திரும்பப் பிர்மாயிசுபரியந்தஞ் சலமய மாய் நிற்கும்போது தெற்குச்சமுத்திரத்திற்போட்டநுகத்தடியும், வடக்குச்

சமுத்திரத்திற்போட்டவடகயிறும் வந்துகூடுகிறதருமையல்ல, அஃதன்று அலைகளடிக்கும் போதெல்லாங் கரைகளிலொதுங்கி முன்பின் அலைகளிற் போக்குவருத்தால் நகத்தடித்துவாரத்திற் கயிறுவந்து நுழைவதும் அருமையல்ல எழுவகைத்தோற்றத்திலுந் தாவராதிமுதல் -அஷ - லட்சம்அச்சுடேதத்தி லொவ்வொன்றில் வெகுவாகச்சென்னனமெடுத்து அதுகளைத் தாண்டி மனிதயோனியிலேபிறக்கிறதரிது. பிறந்தாலுஞ் சிலையாலே யுயிரைக்கொன்றுதின்கிறதேசமும், வலையா லுயிரைக்கொன்றுதின்கிறதேசமும். சுண்ணியில்நீரொடுத்துத்தேற்றிப்புசிக்குந்தேசமும், எந்நேரமுங்காய்ச்சல் குளிரிலுலே சூழும்வயிறுபற்றி யுபாதிப்படுகிறதேசமும், எந்நேரமுஞ்சோனமாரியிலே யுபாதிப்படுந்தேசமு மிப்படியனேக மிலேச்சபூமிகளைவிட்டு வடுருசிமுதலான சர்வபதார்த்தங்களும் நல்லநீர்களும் நல்லசுகவேதுக்களுமுண்டாகிய தேவதாபூமிகளிலே வந்துபிறக்கிறதருமை அதிலேபிறந்தாலும்நான்கு வருணத்தாருள் பிராமணஜென்மம் பிறப்பதரிது பிறந்தாலும் சேவகஞ்செய்தும் மாவுத்தராயும், ஆயுதங்கள்பிடித்தும், மூட்டைகள்சுமந்தும். வியாபாரஞ்செய்தும், பரஸ்திரிகமனம்பண்ணியுங்கெடாமல் இதுகளைவிட்டு வேதபாரகனுவதரிது. ஆனாலும் எக்ஞமும் ஆக்ஞைபண்ணுகிறநாலும் செய்கிறதரிது. இதிலும்வேதாந்தமோதுவதரிது. ஓதினாலும்மாயையைநீக்கி யானென்னதற்றுமோக்ஷத்தில்அன்புவருவதரிது இதில்வந்தாலுஞ்சற் குருவைடைந்து அவன்சேர்வைசெய்து அவனுக்கெல்லாமொப்புவித்துத்துறந்து நிஜமோக்ஷமடைகிறதரிதென்றறிக.

சமயசூடாமணியில் ஒன்றுக்கொன்றுமேலாவதற்குவிருத்தம்.

யது. அலங்குசினத்தருமுதலாந்தாவரத்திலறிந்திலங்கு மனவமேலாமவற்றின்மேலாம், விலங்குபறனைவக்குலங்களவற்றின்மேலா மிக்கநரரவற்றின்மேல்வேதந்தேர்வோர், நலங்கிளருமவரின்மேற்றரு மந்தான நல்லொழுக்கமுடையோர் மேனுவலோர்க, டலங்கிளரு ஞானிகன்மேலவரின்மேலாந் தற்பரனேபுணர்ந்தவர்தாந் தலைவர் தாமே.

இப்படிஒன்றுக் கொன்றுமேலாவதரிது. இதிற்புல்லுமுதலானதாவராதிசீவன்கள் மனிதயோனிக்கு வருகிறதெப்படி யென்றுதேவர் நிமித்தியந் தபோநிமித்தியம் புஷ்பநிமித்தியம் எக்ஞநிமித்தியங் கொம்புமரங்களுதவுகையாலும். இனிப்புல்லுப்பூடுகள் பசுக்கள் சித்தபுருஷர்கள் புசிக்கையாலும், பூக்களாகையாலும் அசைகிறசீவஞ்க்கிரமமாய் முன்விருத்தப்படியே மனிதயோனியாமென்றறிக.

ஙஉ-வது—அத்தியாயம்.

ஹிதோபதேசம்.

ஈங்கிசையில்லாவிதோபதேசம்

மெய்மொழியில்.

)கூ. சத்தியமுரைக்கநாளுஞ் சகலபல்லுயிர்கட்கெல்லா
நித்தலுமிதமேசெய்ய நினைப்பதுசிவத்தைபென்று
மத்தன்வேதாகமத்தி லருளியபொருளிம்மூன்று
மெத்திறச்சமயத்தோர்க்குமெம்மதங்களுக்குமிட்டம்.

(இ-ள்)—சத்தியமேயுரைக்கவேணும், அவ்விடத்திற்பிறருக்கும், அன்னிதா சீவனுக்கும், இம்சைவருமிடத்தில் அசத்தியமாகிலு மந்தவிடமாத்திரஞ் சொல்லிச் சீவனைக்காப்பதேசத்தியம். ஒருசீவனைவெட்டும்போது அதின்பதிக்குத்தன்தலையைமுந்திவீட்டிபின்வெட்டவேணும். ஆகையாலே ஒருசீவனையுங்கொல்லவொண்ணாது, கொல்லநினைக்கிலுஞ்சொன்னாலுங்கேட்டாலும் பார்த்திருந்தாலுந்தின்றாலுங் கொல்லுகிறத்துக்குச்சரி. கொல்லாததன்மம்கொல்லாததுறவு கொல்லாதஞானங் கொல்லாதசெல்வம் இதுகளேதருமம் துறவு ஞானம்வாழ்வென்றறிக. இனிக்கொலைகளவு கள் காமம் பொய் இதுகளைவிட்டு எவர்க்குமிட்டுண்டு பஞ்சேந்திரியமடக்கிபெரியோனைச்சேரவென்றறிக.

மூதுரையில்.

உ௰. சாந்தனையுந்தீபனவேசெய்திடினுந்தாமவனை
யாந்தனையுங்காப்பரறிவுடையோர்- மாந்தர்
குறைக்குந்தனையுங்குளிர்நிழலைத்தந்து
மறைக்குமாங்கண்டீர் மரம்.

(இ-ள்)— ஒருவர்சாந்தனையுங் கொல்லவகையிட்டாலு மவனைத் தான் சாகுந்தனையுங்காக்கிறதறிவு. அஃதெப்படியென்னில், மனிதன் மரத்தினிழலிலிருந்துமரத்தைதவெட்டும்போதுதான் அற்றுவீழுந்தனையும் வெட்டுகிறவனுக்கு நிழலானதுபோலவென்றறிக.

உ௧. கற்பிளவோடொப்பர்கயவர்கருஞ்சினத்துப்
பொற்பிளவோடொப்பாரும்போல்வாரோ-விற்பிடித்து
நீர்கிழியவெய்தவடுப்போலமாறுமே
சீரொழுகுசான்றோர் சினம்.

இனி மண்குடமுடைந்தால் மீண்டுபிரயோசனப்படாவாறுபோலக்கோபமானவனுக்கேகேடாய்அபூச்சியனுமாம். கோபமடக்கும் பொறுமையுடையவன், பொன்னின்குடமுடைந்தால் முதல்விலைபோகாதுபோலும், ஆன்பால் காய்ச்சக்காய்ச்ச ரசம் அதிகமாஞற்போலுஞ், சந்தனமுலைக்கவுரைக்க அதிகவாசனைமேலிட்டது போலுஞ், சங்கு சுட்டாலும்வெண்மை யதிகமாஞற் போலுங்கற்றாண்பெரும்பாரந்தாங்கிலுலும் வளையாமற்பிளத்தல் போலுந், தனக்குஹானிவருகிறவிடத்திலுந்தன் பொறுமையாலே பகையாளிக்குமிதஞ் செய்வதறிவுடைமையென்றறிக.

திருக்குறளில்.

உஉ. தன்னைத்தான்காக்கிற்சினங்காக்கஃகாவாக்காற்
றன்னையேகொல்லுஞ்சினம்

உங. தீவினையபயத்தலாற்றீயவை
தீயினுஞ்சுஞ்சப்படும்

யஙவது—அத்தியாயம்.

பிராமணன்சரிதை

மறையவன்சரிதை வகையதுரைத்தது.

கர்ப்பாதானம், புங்சவனம், சீமந்தம், உன்னயனம், சாதகர்மம், நாமகரணம், உபநிஷ்கிரமணம், அன்னப் பிராசனம், சௌளம், உபநயனம், மகாநாமியம், மகாவிரதம், உபநிஷத்து, சோபனம், உத்துவகனமிருதியென்னும் சோடசகர்மங்களுடனே, யசன, யாசன, அத்தியயன, அத்தியாபன, தான, பிரதிக்கிரகமென்னுஞ் சட்கர்மமும், சிவபத்தியாதி சகலசற்குணங்களுடனே கூடினவன் பிராமணன்.

இதற்குச்சாட்சி திரட்டில்.

உச. கறைசெயும்புலன்களைக் கரணநான்குடன்
றுறைதுறையடக்கலுந் தவமுந்தூய்மையும்
பொறையொடுகல்வியும் பொருந்துஞானமு
மறையவர்தொழிலென மதிக்கப்பட்டதே.

ய-வது—அத்தியாம்.

கூஷ்திரியன்சரிதை.

சத்திரியன்சரிதைசரித்திரமுரைத்தது.

பிரசாபாலன, யசன, அத்தியயன. துர்ச்சன, துஷ்டமிருகம், பகூஷி, சத்துருசங்காரம், அன்னதானம், வஸ்திரதானம், கன்னிகாதானம், பூதானம், கோதானம், உபயமுகிதானம், இரண்ணியதானம், மனிஷ்தானம், அசுவதானம், சுவேதாசுவதானம், காலதானம், காளாமுகிதானம், மகாமேருதானம், கற்பகவிருகூஷ்தானம், வித்தியாதானம், மகாதாணுந்தரார்த்தமாகிக் காலமேதச பாத்திரபரீகூஷ விஷ்ணுபத்தியாதி கர்மயுத்தனனவன் கூஷ்த்திரியன்.

உதாரணம்-பகவற்கீதையில்.

உ.நு. தலைமையுங்கொடைமையுந்துறக்ணஸ்மையு
நிலைமையுங்கீழ்ப்படாதெஞ்சுநீடலுங்
கொலைபயில்போர்களிற் புறங்கொடாமையுந்
சிலமனிதாளிணுயரசர்செய்கையே.

ய.நு-வது—அத்தியாயம்.

வைசியன்சரிதை.

வைசியன்சரிதவாணிச்சியமுரைத்தது.

பிரதமஸ்தாணுதி- ஊசு – ஸ்தானபரியந்தமான-யக்கம்- தசம்- சதம்-சகஸ்திரம்- தசசகஸ்திரம்- லக்ஷம்- தசலக்ஷம்-கோடி- தசகோடி- சதகோடி- அற்புதம்-நிற்புதம்- கர்வம்-மகாகர்வம்-பற்மம்-மகாபற்மம்-கூஷ்ணி-மகாகூஷ்ணி- சங்கம்-மகாசங்கம்- கூஷ்தி-மகாகூஷ்தி- கூஷ்ணபம்-மகாகூஷ்ணப்பம்-நிதி-மகாநிதி- சாகரம்- மகாசாகரம்-அரி-மகாஅரி- சங்கை-மகாசங்கை-பணி-மகாபணி-நிருது-மகாநிருது, இலக்கங்களும், யக்கம் —ஏகம்பூபம்-பூமியாதிசமிஞ்ஞை, (க)துவே—துவவ்துவந்துவ துவிதம், துவய, விதிய, யுக்கும, யுகள, யுக, உபய, பாகு, பாத, பகூஷ, நயணுதி, சமிஞ்ஞை, (உ)திரி—திரய, திரிதிய ஹாரநயன, அக்கினி, புராதிசமிஞ்ஞை, (ஊ) சௌள—சதுர்த்தி, வேத, வர்ண, ஆச்சிரமாதிசமிஞ்ஞை, (ச)பஞ்ச—ஹாரவக்த்ராக்ஷாய, விருத, இந்திரிய, விஷ்ய, பாண பாண்டவபூதாதிசமிஞ்ஞை, (நு) ஷ்டி—பாவ, ராசாங்க, இருது, ரச, ஸ்கந்த

முக, வேதாங்க, வர்ணகர்ம, தரிசனுதிசமிஞ்ஞை, (சு) சத்த—முனி,கிரி, தா ணுங்க, ராசாங்க, துரக, தாது, சாபரங்க, ஸ்வர, சாகராதிசமிஞ்ஞை, (எ) அ ஷ்ட—வசு, திக்கு, கஜ, மத, விகாரகாமாதிசமிஞ்ஞை, (அ)நவ—திரவியாந்தி ரு, நிதி. கிரக, ரத்நாதிசமிஞ்ஞை, (கூ) தச—பிந்து, சூன்னிய, நாஸ்தி, அவ தார, ககனுதி சமிஞ்ஞை, (ஐ) இவைமுதலான சமிஞ்ஞையுமறிந்து, கிரமு காதிவஸ்துக்கள்எண்ணியறிந்து, பத்தரைப்பணத்தினிறைகழஞ்சு, கழஞ்சு (ச)கூடினது கரிஷம்,கரிஷம்(ச)கூடினது,பலம்-பலம்(சஐ)கூடினது.வீசை, வீசை, (ஞ) கூடினதுதுலாம், துலாம், (ஞஐஉ) கூடினது, பாரம், பாரம் (ஐ) கூடினது, அஸ்தமென்று கர்ப்பூராதிதூக்கி அறிந்து, ஒருசிட்டிநிகுஞ்சம்-நிகுஞ்சம்(ச)கூடினது-குடுவம்-குடுவம்(ச) கூடினது, பிரஸ்தம்-பிரஸ்தம்(உ) கூடினது வாகம், வாகம், (உ) கூடினது-ஆடகம்-ஆடகம்(ச) கூடினது- து ரோணம்- துரோணம் (ஞ) கூடினது-கரி என்னுந் தான்னியாதி யளந்தறிந் து, சுவர்ணத்தின்மாற்று, பிரவாளத்தின் கழஞ்சு, மணியின் சவ்வு-ரத்தின த்தின் சூத்திரபரீக்ஷை, வச்சிரத்தின்மஞ்சாடி, பச்சையின்ரதியமுதலியவறி ந்து, கிரயம், வட்டம், வட்டிமுதலியவறிந்து செய்கிறவாணிச்சியம், கிருஷி கௌபாவிகம், யசன, அத்தியயன தானமுடன்சூரியாதிபத்திகர்மயுத்தனை வன் வைசியன்.

யசு-வது—அத்தியாயம்.

சூத்திரன்சரிதை.

உயர்சூத்திரன்மனுழுவுதொழில்சொலல்

பிராமணுதிவர்ணத்திரய சேவை சூத்திரனைக்கூடி சகலதேவதாபத்திமு தலான கர்மயுத்தனுனவன் சூத்திரன்.

யஎ-வது—அத்தியாயம்.

பிராமசாரிசரிதை.

பிறவிமுதலுருப்பிரமசாரிவரை.

உதாரணம்- திரட்டில்,

உசு. இராவுனலென்னெனெய்சாத்தமேனழுபர்கலெவிமற்றும்
வினாவமப்புலன்கள்வென்றுவேதமங்கந்தரித்து

மருவிமுப்போதுநிட்டைமாசிலூண்பிச்சைகொண்டு
பரமற்பிரமாசாரம்பகர்ந்தனமறைகளன்றே.

உஎ. சடையெனமயிர்பேணுதுதனாகிடைபுனர்வுபிச்சை
மிடைதருவிடயமெல்லாம்விடமெனவிரவலின்றி
யடைதருபிரமாசாரத்தறைந்ததிலொன்றுதப்பிற்
கடுகரகுறுவரிந்தக்காசினியளவுமன்றே.

அறிவானந்தசித்தியாரில்.

உஅ. தலைசிகையூண்பிச்சைசார்கலையோதறனைசயன
நிலைபெறவேபுலன்வென்றுழற்போதுநன்னிட்டையிலே
மலைவுறுபிரமசாரிக்கிரவுணன்மாற்றியென்னே
யலைவுறத்தள்ளிநில்லாதொன்றுதப்பிலருகரகே.

யஅ-வது—அத்தியாயம்.

கிரகஸ்தன்சரிதை.

சம்சாரிக்குத்தகுமறமுரைத்தல்.

உதாரணம் - திரட்டில்.

உக. துறந்தவர்மூவர்மேதவர்துளக்கமில்பிதிரர்கோய
ரறந்திகழ்விருத்தர்பாலரபலரந்தகர்விருத்தர்
சிறந்ததாய்தந்தைசுற்றந்திருத்தறற்றம்பின்மிக்க
வறந்தருமில்லாளோடுமருந்தலில்லறமதென்னே.

கூ. கொலையொடுகளவுகட்காமங்கோபமென்
புலைகடிந்தைவகைத்திறனும்போற்றிநன்
நிலைதனிலணுவதுவருவலில்லற
மலைவுறுநரகிடையடைக்குமல்லவே.

அறிவானந்தசித்தியாரில்.

கூக. தியகொலைபொய்கட்காமமற்றில்லறஞ்சேர்ந்தவர்தான்
றூயதுறவருடன்மூவர்மேதவர்கடொல்பிதிரர்

தாயர்நம்பாலர்மனவியரந்தகர்கந்தைதம
ராயும்விருத்தரகுதியைக்காக்கிலர்க்காழ்நரகே.

யகூ-வது—அத்தியாயம்.

வானப்பிரஸ்தன்சரிதை.

வனத்திற்றவத்தோன்வானப்பிரத்தனே.

உதாரணம்.

கூஉ. தனமுதற்றுறந்துகானத்துறைந்துசாகாதியூணைப்
நினைவருஞ்செபந்தியானநிட்டனைப்புலன்கள்வென்றே
பனிவெயிற்மனிபதைத்துப்பஞ்சவங்கியுட்டபித்து
வனசரமுயலும்வண்ணம்வழுவின்மாநியமமாமே.

இந்தவானப்பிரஸ்தனில் ஸ்திரியுந்தானுந் திரிவதமுண்டென்றறிக.

உய-வது—அத்தியாயம்.

சன்னியாசிசரிதை.

சன்னியாசியாவதானெலாந்துறத்தல்.

கூகூ. தரித்தவச்சிகைநூன்மாற்றித்தரித்துச்செந்துகிலுந்தண்டுட்
புரித்தநற்கலகளோதிப்பொழுதுமுக்காலுழுழ்கித்
தரித்தவப்பிச்சையூணைப்சகலமுமீசர்க்கற்பித்
திருத்தல்சன்னியாசந்தப்பிலீறிலாநியமென்னே.

இந்தச்சன்னியாசமும் நாலுவிதச்சரித்திரமென்றறிக.

உக-வது—அத்தியாயம்.

அதிவன்ணச்சிரமிசரிதை.

அல்லொங்கடந்தவனதிவன்ணச்சிரமி.

கூச. சாக்கிராதியளின்றியவற்றிலு
நீக்கமில்லறிவாகநிடலமாய்த்

தாக்கியாவையுந்தாக்கறுசோதிதா
மாக்குவாரதிவன்ஞச்சிரமமோ.

கஅ. பூகபௌதிகமாய்ப்பொலிபேதமு
மேதமின்றியிருஞ்சிவமாயிடப்
போதமாயனுபூதியிற்கண்டவ
ராதிபாமதிவன்ஞச்சிரமமோ.

கஆ. மையலாகியவைபத்தினைவெறும்
பொய்யதாயிடவேபரிபூரண
மெய்யதாமனுபூதியிற்கண்டவ
ரையகேளதிவன்ஞச்சிரமமோ.

அறிவானந்தசித்தியார்.

கஇ. சாற்றுமிப்பூதப்பௌதிகமாய்ப்பொலி சார்வையெல்லாந்
தோற்றமறவனுபூதியிலான சுகசொரூப
மாற்றெங்குநின்ற பொருளென்றறிந்ததுவாகியுற்றே
சேற்றுமிவரதிவன்ஞச்சிரம மெனுமறைமையே.

கஈ. பிறிவற்றமுத்திகமையன்றி வேறொருபேறிலையென்
றறிவுற்றவரதிவன்ஞச்சிரம ரவரொவர்க்கும்
நெறியுற்றநிட்டைநியமமதனை நினைவதொன்று
செறிவுற்றநாம்பெரு மாமையானதுசெப்பிடுமே.

உஉ-வது- அச்சியாயம்.

உடலிழிவு.

உற்றபெரும்பயனென்றிதினில்லையென்
றற்றவுடலிழிவாகவுரைத்தது.

உடலை யீசல்சிறகளவு கனத்திலே தோல்மூடியிருப்பதைப்பார்த்து இவன்மன்மதன் இவள்ரம்பை யென்று சொல்லில் அந்தத்தோல் போகிலுயிரோடேதானே நாய்கள் நரிகள் பகூதிகள் பிடுங்கித்தின்ஞமல்தெண்டு கொண்டு ஓட்டிக்கொண்டிருக்கவும் எறும்பீய்கள் மொய்க்கவு மிப்படியா

வதல்லாமல் தோல்மூடியாகியஇத்தேகத்திற்கு நிமிஷமுஞ்சுகமில்லை யென் றறிக. அஃதெப்படியென்னில்.

உதாரணம்.

கூகூ. செறியுமயிர்தோலுதிரமிறைச்சிமேதை
தினைரம்புகுடலொலும்பு சீழ்புன்கோளை
முறியுமுதிர்புழுமலநீர்மூளைமச்சை
முழுவழும்புபீளையிவைமுதலாயுள்ள
மறியுமுடல்நீயல்லையென்பதாக.

எண்சாணுயரமும் நாற்சாண்பருமையுமுள்ள இத்தேகமானது மரணமடையுமேயாலல் ஒரு நாறி புழுக்கள் மூடையும்போது ஒரு அணுமாத்திரமாகிலும் இருதவுடம்பிலே நல்லவஸ்துவாய் காணவேண்டுன்அரிதேயாகும். இதன்றியும் பிறந்தபேரொல்லாமிறந்து மணக்கோட்டுப் பிணக்கோட்டுக் காகையாலும், உயிரோடேதேகங்கள்புழுத்துநாறுகையாலுந், தேகத்தை யெந்நேரமுஞ் சுத்திசெய்யாவிட்டால் நாறுகையாலும், மலத்தாலே ஒருபாண்டம் பண்ணினதாகையாலும், உடலெப்படியு மழிகையாலு மிந்த வுடலாலே துக்கங்களெல்லாம்வருகையாலும்,உடலஇழிவென்றதென்றறிக.

-உகூ-வது-அத்தியாயம்

குடும்பவிழிவு.

குடும்பங்கூற்றெனக்கொண்டிழிவுரைத்தது.

தாய் தகப்பன் பெண்டு பிள்ளை அண்ணன்தம்பிதங்கைதமக்கை மாமன் மைத்துனன் போன் பேத்தி யிதுமுதலானபந்துக்களுடனும், இடம்பொருளேவலுடனுஞ் சகலபாக்கியத்துடனுங்கூடியிருக்கிற குடும்பிக்குச்சுகமுண்டென்னில், முன்சொன்னபோகளெல்லா மொவ்வொருவேளையிலே வெகுதுக்கங்களையும், ஆபத்துகளையும் விளைவிக்கையாலும், இவர்கள் சாகிறபொழுதும் நோய்வந்தபொழுதுந் தன்னுடம்பில் வந்ததைப்பார்க்கிலும் மிகவருத்தப்படுத்துக்கிப்பார்கள், தனக்கொருவேளையிலிடாதபோதும் கலகங் கருப்புவந்தால் இத்தனைபெனங்களை யெப்படிக் காப்பாற்றுகிறதென்றும் கைப்பொருள்எல்லாம்போய்த்தரித்திரம் வந்தபோதுமனைவி சுற்றத்தாரைப்பாற்றுகிறம் பலதாழில்செய்துவருவதிலல் வயோதிகரையும் வியாதிவந்தடுத்தது காட்படவிருந்தால் எல்லாரும்வெறுக்கையாலும், இவன்மரித்தபோது திரு

டீனப்போலக்கைகால்களீ முறித்துக்கட்டியும் உடைமை பிடவை மூதலா
னதெல்லாம் வாங்கிக்கொண்டும் பிறகேயொருவருந் துணையில்லாமல் எம
வாதைப்பட்டுப்போகையாலுங், குடும்பந்துக்கமேயல்லாமல் நிமிஷமுஞ்சுக
மில்லையென்றறிக.

உதாரணம்-திருமந்திரம்.

சுடு, பண்டம்பொய்க்கூரைப்பழகிவிழுதலா
லுண்டவிப்பெண்டிரு மக்களுரும்பின்செலார்
கொண்டவிரதமுளுானமு மல்லது
மண்டியவருடன்வழிநடவாதே.

அமிர்தசாரம்.

சுக, திடம்படுசிலந்திகழ்கல்விகேள்வி
யிடம்படுமேதைதீசொல்லாம்- பசுமட்
குடம்படுநீர்போற் குடம்பியைக்கைவிட்
டிடம்போடுகூட வுகும்.

உச-வது-அத்தியாயம்.

போகவிழிவு.

போகம்பொருளெனிற்பொல்லாதென்பது.

போகங்களீயனுபவிக்கிறதேசுகமென்னில், புசிப்புச்சுவுக்கியங்கள் தே
கசுவுக்கியங்கள் விசேஷதசுவுக்கியங்களீனத் தேடும்போதுந்துக்கம், அதுகள்கி
டையாதபோதுந்துக்கம், அதுகள்கொள்ளைபறிபோகிலுந்துக்கம், தரித்திரம்
வந்தபோது முன்பொசித்தநதெல்லாம் நினைத்துக் கைகால்வீங்கி இடுவாரற்
றுச் செத்தும்,போகம் புசிக்கச்சே அதின்பிறகேதானே துக்கமென்றறிக.எ
த்தனைபோகமெய்ச்சிலுலும் அத்தனைக்கும் அத்தனைதுக்கமென்றறிக. அ
தெப்படியென்னில்,காணிசுகத்துக்குக் கோடிதுக்கமென்று வழக்கவசன மு
ண்டாதலாலென்றறிக.

உதாரணம் அமிர்தசாரம்.

சுஉ, சிந்தாகுலமனிதர் சிதீசெவிழுதலா
லைமந்தாலுட்டீடழிவ ரல்லரோ-லவந்திலெரு

வேட்கையகுண மிபம்விட்டின்மீன்வண்டு
கேட்கைமுதலோனொன்றிற் கேடு.

(இ-ள்)—சிந்தாகுலமாகிற துக்கமேவளருகிறமனுவதர் சீசியென்று சோசப்பட்டசெவிமுதல் ஞானேந்திரியமைந்திலுமீடழியமாட்டார். அதெப்படியென்னில், ஓவ்வொருவிந்திரியவாசையாலேஓவ்வொருசீவன்அழிந்துபோம். அதெப்படி, அசுணப்பட்சிசெவியாலேகேட்கிறகடினசத்தத்தாலேசாம். யாணபரிசத்தாலேசாம். விட்டில்வண்டுரூபத்தாலேசாம். மீன்காக்குருசியாலேசாம். கருவண்டுமூக்குவாசனையாலேசாம். இனிக்கன்மேந்திரிய மைந்தாலுஞ்சாவு முலைச்சலும்வரும். இப்படி -அச-லகூடும்- அச்சுபேதமானசீவன்களெல்லாந் தத்தமிந்திரியங்களாலே சாமென்றறிக. துக்கமில்லாதபோகம்பிர்மாதிகளுக்குமில்லை. ஆதலால் போகம் இழிவென்றதென்றறிக.

திருமந்திரம்.

சுஉ, ஆசையறுமின்களாசையறுமின்க
ளீசனேடாயினுமாசையறுமின்க
ளாசைபடப்படவாய்வருந்துன்பங்க
ளாசைவிடவிடவானந்தமாமே.

உரு-வது-அத்தியாயம்.

மகளிரிழிவு.

மகளிர்யோனிவஞ்சக்குழியே.

சற்சந்தனவனிதாதிபோகம்நல்லதென்னில், நல்லதல்ல. வனிதையர்முலையோனிகண்முதலான அவயவங்களேமனுஷரைக்கொல்லும், அவர்கள்புணர்ச்சியிலேதான்றுதொட்டுவருகிற துக்கங்களைச்சொல்லிமுடியாது. ஆகையாலே-மான்குளப்படிமாத்திரமானயோனியிலே சகலசீவராசிகளுமுழுகியெழும்பியேறமாட்டாமல் எல்லாமுள்ளேயமிழ்ந்திப்போயிற்றென்றறிக.

உதாரணம்-அமிர்தசாரம்.

சுச, எரிகொண்டுமல்ல வெறிபடைகொண்டல்ல
வருநஞ்சுங்கூற்றுங்கொண் டல்ல-கருதிநஞ்சத்
தம்மாதர்தம்மைமப் படைத்தகணியினைழயார்
தம்மாலேயாகத் தகும்..

ஆகையால் மனுஷருக்கு இகத்திலுந்துக்கம் பரத்திலுந்துக்கம் இதல்லா மல்லதத்தாலேவருகிறதுக்கழு மிவர்கள் பொருட்டென்றறிக.

உசு-வது-அத்தியாயம்.

பொருளிழிவு.

பொருளாற்றுக்கம்பொங்குமென்றுரைத்தது.

திரவியத்தைத்தேடும்பொழுதுங் காப்பாற்றிலுஞ் செலவழிக்கிலும்இரா சாக்கள்-கள்ளர்-கோளர்-அண்ணன்-தம்பி-பெண்டு-பிள்ளை- சத்துருக்கள்-உள்ளறிந்தபேர்-பிறத்தியார்- இவர்கள்முதலான-பேர்களாலே துக்கமும்பயமு மேயுள்ளதென்றறிக.

உதாரணம்-அமிர்தசாரம்.

சரு. இன்னலாமீட்டுங்கா லீட்டினுலியாவனையு
மொன்னலராக்கு முயிரிறுக்கு- மன்னு
மனத்தைதவேறுப்மபக்கு மானடிக்கஞ்செய்யுந்
தனத்தின்வேறுண்டோ தவறு.

இப்படித் திரவியவாற்சிதங்களாலு ஆற்சியாவிட்டாலுந் துக்கமென்றறிக.

உஎ-வது-அத்தியாயம்.

அரசிழிவு.

அரசியல்வருஞ்சுக மற்பமென்றுரைத்தது.

பதினலுமனுக்களுஞ் ஆறுசக்கரவர்த்திகளுஞ் திரிச்சங்கு அரிச்சந்திரன் முதலான இட்சுவாகுவங்கிசமும், புரூரவர் தன்மபுத்திராதிகள் பாண்டியரா ஜாக்கள்முதலானபேரும்,பிரமாதிதேவர்களுஞ்இராகூதர்முதலானபேர்களுஞ் அனுபவித்த சுகமுந்துக்கமும், புராணங்களிலேபார்க்கில், துக்கங்கள்வந்தனு பவிக்குமிடத்தில் அறியாமல்இராஜபோகம்அனுபவிக்கின்றோமென்றும், இந்த துக்கத்தின் முன்னே,வந்தசுகம் ஒரு அணுமாத்திரமில்லையென்றும்,அவர்கள் பட்டபாடுகளையும்,அவர்கள்துக்கங்களையும், அவர்கள்அரசுக்காக மடிந்ததுஞ் சொல்லிமுடியாதென்றறிக.

உதாரணம்-அமிர்தசாரம்.

சசு. மூரசுவிளங்குதம் முற்றத்திற்மெற்றி
யரசுவணங்குங் கழலா-னொருசுணங்கன்
கவ்வியகாலிற்கடைகடோறுஞ்சுழல்வர்
வெவ்வியசொல்லவெறுத்து.

நாலடியார்.

சள. யானையெருத்தம்பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத்தலைவராய்ச்-சென்றேருரு-மேனை
வினையுலப்பவேறுகி வீழ்வர்தாங்கிகொண்ட
மனையாளைமாற்றூர் கொள்.

ஆகையால் அரசிழிவென்றறிக.

-உஅ-வது—அத்தியாயம்.

சொர்க்கவிழிவு.

சொற்கஞ்சுகமெனில் தோற்பையிற்காலே.

தோலாகிறதுருத்தியிலே காற்று உப்புவதும் வாடுவதும் போலென்றறி
க: அதெப்படி, சொற்கத்தில் இரம்பாசம்போகம் அனுபவிக்கில் மேனகை-
உளர்வசி-திலோர்த்தமை முதலானபேர்களாசையாலும், அதிலேஒருவர்மேலா
ன போகங்களைக்கண்டு நமக்கப்படி யில்லையென்கையாலும், இதுதொலைந்த
வுடனேசெனனமெடுத்துவெகுபாவத்தாலே அதோகதியாகையாலும் மேலா
ன பிர்மாதி போகங்களையிச்சிக்கையாலும், எப்போதுஞ் சுகம் அற்பம் துக்க
ம் வெகுவாகையால், சொற்கவிழிவாம்.

உதாரணம்- அமிர்தசாரம்

சஅ. பொதுமாதர்தோளே புணர்வதமிர்த
மதுபானமுண்டே மகிழ்வ-தெதுகோடி
சாவார்பிறப்பார் சதுமுகனேர்காளினிது
மேதவாதிபமொய்துஞ் சீர்.

ஆகையால் சொற்கவிழிவென்றறிக.

உகூ-வது—அத்தியாயம்.

செனனசாகரம்.

செனனசாகர நிலைசெப்பரிதே.

உதாரணம்-திரட்டிஸ்.

சகூ. காலமாம்பொல்லாவஞ்சக் கடுமகரத்தான்மிக்க
சாலவேபயத்தைப்பண்ணித்தப்பொணவகைசுழித்துக்
கோலியேபெயொருவரித்தைப் பார்க்கவுங்கூடவொட்டா
வாலிதாம்பெருமைத்தாகு மாபவக்கடலினைதயா.

நுய. சுற்றமாழுவட்டாற்றங்கைதமைந்தராந்துராள்கள்சேர்ந்து
குற்றவாங்காரவானை குறியறவுடைத்தாபாசைப்
பற்றதாமீன்கணத்தாற் பரந்துபாய்போகப்பாம்பாற்
செற்றியேபெகிடக்கும்பவ்வத்திறத்தினையின்னங்கேளாய்.

(இ-ள்)— இடைவிடாமலிடரோ செய்துஇலக்கமில்லாத ஆதியூழிதோறு மடைக்கப்பட்ட பாசசாலமாகிற பிறவிச்சமுத்திரத்தில்,யானையின்மதம்போ லமதத்த பாசங்களாகிற நுனைதினையாலும், சதியாகிற மூதலைகள் தாவு கையாலுங் காலமாகிற வஞ்சக்கடுமகரத்தாலுந் தினமானது செல்லுகிற சுழிப்பாலும் ஒருவராலும் பார்க்க பயமாகிற பாசக்கடலாவது சுற்றமாகி ற உவட்டெடுத்துந் தந்தைமைந்தராகிற துராள்கள்சேர்ந்து ஆங்காரமாகிற வாமைகளாலும், ஆசைகளாகிற மீன்களாலும்,போகமாகிற பாம்புகளாலுங் கூடியிருக்கிறசெனனசமுத்திர மென்றறிக. செனனசாகரத்தில்விழுந்தவனை க் காலமாகிறமகரமீன்கள்ஆயுளைவிழுங்கி நரை திரைமூப்பாகிறபல்லாலேநை யக்கடிக்கக் காமமாகிற மூதலைகள் பற்றி ஈஷணைத்திரயமாகிற ஆழத்திலேப தைக்கப்பதைக்கவிழுக்கக் குரோதமூதலாகிறஅட்டைகள்பற்றி இரத்தங்களை க் குடிக்க நண்டுகள் தவளைகள் சிறுமீன்களாகிற தரித்திரபந்துக்கள் பிடுங் கித்தின்ன பெரும்பாம்புகளாகிற அண்ணன் தம்பி பிள்ளை பேரன்மார் தா யாதிகளாகிற பாம்புகள்கடித்துவிஷந்தலைமண்டை கொள்ள இவர்கள்சுடு சொல்லாகிறகசப்புக் காறல் கொள்ளப்போகாமல் அலைய, போகஸ்திரிகளா கிற,புலால்நாற்றம் பொறுக்கப்போகாதிருக்கநுனாதினைகளாகிறவியாதிகள்வ ந்தலைக்க தரித்திரமாகிற உப்புத்தண்ணீர் குடிக்கப்போகாமலலைய, இந்திரி யவிஷயங்களாகிற ஆழங்காணுமலலைய அந்தக்கரணவிகாரமாகிற அளவுநீளம் அகலவிரிவு காணுதிருக்க இப்படிச் சம்சாரசமுத்திரத்தினிலே காணுமலலைவ தென்றறிக. இந்தச் சமுத்திரத்தைஞானச்சோங்கேறிப் பிரமமாகிற,கரை யிலேறுவாரென்றறிக.

தத்துவநிஜாநுபோகசாரம்.

நய-வது—அத்தியாயம்.

சென்னவிருட்சம்.

செப்பியமாயையே சென்னமாமரமென்ல்.

நுக. வேர்மேலதுதலைகீழதுவீவில்லதுவேதத்
தேர்மேவியவிலைமேவியதியாரும்புகறலினை
லார்மேவியவசுவத்தமதெனவேயரசதனின்
பேர்மேயதுபெருமாயைசெப்பிறவிப்பெருமரமே

(இ-ள்)—இந்தமரத்தினியல்பாவது மேலான பிரமத்தினிடையாகச்சித் துத்தோன்றி சித்தில் வேர்கொண்டமாயையாகையால் வேர்மேலென்றது. இனிமாயையில் நின்றும் - நஎசு - தத்துவமுதலான உயிர்உலகங்களெல்லா மாயைக்குமேலில்லாமல் அதோமுகமாகையாலே தலைகீழென்றது. இப்படிக் கொத்த மகாமாயையாகிற அச்சுவத்தமரமானது; ஒருகாலத்திலுங்கெடுகிற தல்ல. சுழலப்பட்டபிறவித்தொடர்ச்சி பாழாகவொருக்காலுமழியாதது. வேதந் தேறப்பட்டது. இலைகள்மேவியது தீபோலிருக்கிற புத்திரருள்ளது. வாள்வ விகளால்வெட்டப்போகாதது கருப்புற்றாள்முதல்வினைவானது. வாய்வளரப்பட்டகாதலுடையது. வேதமே, இலைகளாவது. வருநாளிலொருநாள் பெறுவதில்லையாய் மாயையாகிற அசுவத்தமரமென்று பேராமென்றறிக. இந்த சென்னவிருக்ஷத்துக்குவினைவெப்படியென்னில், அஞ்ஞானமேவினை மாயையேமூலை சிவதத்துவமங்குரிப்பது காலதத்துவந்துளிர் ஆத்மதத்துவம் சின்னகொம்பு சாகைகளிருபத்தைந்தாய், விஷயங்களைந்தும் ஐந்து பூனமரமாய்,மற்றதத்துவங்கள் கினைக்கொம்புகளாய், நரகமுதலான தினைகளாய்,ஆகாரம்நித்திரை மைதுனம் பயம் பழுப்பிலையாகிறநனைகளாய்,பாசபந்தம்விழுதாய்,யோனிகள் முள்ளாய்,புசிப்புழுகினாய்,உலச்சலரும்பாய்,மண்பெண் பொன் பூவாய், சுகதுக்கங்காயாய், பூச்சியம் பூச்சியம் பழமாய் புலனைசையே நிழலாய் பொறுமை வஞ்சனைகளேபழரசமாய் பூர்வசமஸ்காரமே கொட்டையாய், இதுகளைப் புசிக்கப் புலனை ஐந்துசிறகு பட்சிகளும் அனேகதத்துவமாகிற பட்சிகளு முள்ளதாய்,இப்படிதழைக்கிற சென்னவிருக்ஷமென்றறிக. இப்படியானவிருக்ஷத்தை ஞான வொளியாகிறவாளைக்கைபற்றிக்குருவின்பாதச்சாணைபிடித்துக் கூரிதானசமாதியாலே வேரறவெட்டிடல்விழும் சாதனமாகிய முயற்சியால் வேனையுங்களைந்துபோடில் சென்னவிருக்ஷம் வேரோடேபோமென்றறிக.

நூக-வது—அத்தியாயம்.

அசேஷதுக்கம்.

கருநான்முதலாய்க் கவலையுற்றுழற லிதாமசேஷதுக்கமதாமே.

நூஉ. புனலிடைமூழ்கிநின்று புகடடவஞ்செய்வார்போலே
கனலிடைவயிற்றினுள்ளே கருப்படும்வருத்தந்தன்னைப்
பினயிகநங்குமுன்னில் வாயுனாகுளறுஞ்சொல்லி
னினைதொறுமுள்ளஞ்சோருநிறைதளர்ந்தழுயுநெஞ்சம்.

ஆலையிற்கரும்புஞ் செக்கிலெள்ளும்போல யோனிவாயில் நெரிந்துபிற ப்படும்போதும்,கருப்பத்திற் கருப்பற்றும்போது கோடிதேள் கொட்டினது போலும்,பிறந்தவுடனேசெவ்வாப்புமுதலானவியாதியாலும் மருந்துகளாலும் அமுக்கிக்காது குத்திலும், வளர்க்கிலும்சாதித்தொழிலர்லும் வாசிக்கும்போ தும் அதிலே தெண்டனையாம் போதும்குமாரப்பருவத்தில் வியாதியாலும்த ருணத்தில் பெண்ணைசையாலும், அப்போதுதரித்திரத்திலுலும்அதின்பயன்வி தியாலும் உழவுத்தெரழில்முதலான கிருஷிகளாலும் உண்ணும்போதுமிகினு ங்குறையினும்உண்ணவில்லாமலாலும்அறுசுவைகள் குறையினும்மிகினும்பே தையர் கூடினும்பிரியினுங் கூடாதபோதும்இழைதலிலும் ஆசையிலும்நித்தி னையாலும் ஆகாதசொற்பனத்தாலும் நனவில் விஷயங்களிற்கடுமனங் கடு ருசி கடுரூபு கடுபரிசம் கடுசத்தம் வினைகள் நவக்கிரகங்கள் அதின்தோஷம் சவிகை சவிகை யில்லாது மலஜலத்தால் மலஜலம்விடாவிட்டாற் றரித்திரம் அயிஸ்வரியம் பொருளால் பொருளில்லையால் வந்தது போதாமல் வாராவிடி ல் பனி குளிர் வெய்யில் மழை இடி மின்னல் இதுகளாலும் இதுகளில்லாவி டினும் வாயுமிகுதியடிக்கிலும் அடியாவிட்டாலும் தாய் தகப்பன் பெண்டு பிள்ளை அண்ணன் தம்பி தங்கை தமக்கை பந்துக்கள் தாயாதிகள் ச த்துருக்களாலும்,இவர்களில்லாதபோதும்.ஆளடிமை காணி மனைகள் இதுக ளில்லாவிட்டாலும்,கள்ளர் வேடர் கலகங் கருப்பு இடுவந்தி கோள் படு சாக சக்கிரரராலும் இஷ்டரால் வலியாலும் நரை திரை-மூப்பு தளர்ச்சி ஈ--கொசுகு பேன் மூடு எறும்பு தேள் பாம்பு நாய் நரி இதுமுதலானதுஷ்டமிருகங்களா லும்,இதுகள் முதலானதுக்கங்கள்சொல்வில் அனந்தமுண்டு. இதல்லாமல் கடையில்மரணவேதனையாலும்.,அப்போதுஈஷணத்திரையங்கள் போகையா லும்,மரணத்தாலும் மரணமானபிறகு யமதண்டமும்நரகதண்டமும்இப் படிச் சனனமுதல் மரணந்தமும் அப்பாலுந்துக்கமேயல்லாமற் சுகமில்லை யென்றறிக. இனித்திவ்வியதேகமானதேவதைகளுக்குத் துக்கமும் வியாதிக ளுமுண்டாய்அஸ்வனிதேவதைகள்வயித்தியருமுண்டென்றுஸ்,மனுவுஞ்துக்க ஞ்சொல்லமுடியாதென்றறிக.

நக. மனையவளேவாகமகச் சவலையாக மனையிடந்துவிழுமாடுங்கெ
டமுன்றந்த, வனையர்கடன் றனக்கலக்கவடிமைசாக வரியவிருந்தி
னர்வரவூர்க்கிறையும்பூண, மினையிலொருபொருளின்றி வாங்கலா
கு மிடந்தேடவழக்கினருந்தடுக்கநின்று, நினைவரியசலமதிபோற்
குறையும் பொல்லா நிலையிற்குடும்பிதுயர நினையிலந்தோ.

இப்படிக் குடும்பிக்கு ஒருநாளிலே யிந்தத் துயரம்வந்தா லிந்தத்துக்கத்
துக் களவில்லை. ஆனால் சுகமாவதேதென்னில் துறவு நல்லது.

நச. உடம்பினைபமபண்ணல்விட்டா ரொன்றியசெல்வம்விட்டார்
விடலருஞ்சுற்றம்விட்டார் வேட்கைவெகோடும்விட்டா
ரிடனுடைக்குலமும்விட்டா ரியானெனதறவேவிட்டார்
கடனுடைக்கலவிவிட்டார் கற்பனைமுழுதும்விட்டார்.

நஞ. போற்றியதெனவையும்விட்டார் புன்ணியபாவம்விட்டார்
வேற்றுவேதனைகாயத்துக் கியல்பதுவென்றுவிட்டார்
மாற்றருந் துவந்துவங்கள் வந்திடத்தோற்றுவிட்டா
ராற்றவேதுறவிநெஞ்சத் தசைவிலாவரியவீரர்.

நசு. ஊரொடுபேரும்விட்டா ருலகியல்முழுதும்விட்டா
ராரொடுமோர்வம்விட்டா ரதனினுஞ்செற்றம்விட்டார்
பாரொடுவின்னுந்துன்ப மெனப்பழுதறவேவிட்டா
ரோதிகழுலையும்பேய்த்தே ரெனாகைசெய்துவிட்டார்.

இப்படியெல்லாவற்றையும்விட்டுத்துறந்து அஷ்டாங்கயோக அப்பியா
சத்தாலே சிவயோகத்திலே நிற்பதுசுகமென்றறிக. (செம்மையச்செல்வ
மே சிவானுபூதியே) ஆகையால் சிவானுபூதியேசுகமென்றறிக. அல்லதுது
றவு வாராமற் குடும்பியாஞற் சுகதுக்கங்கள்வந்தவிடங்களினுஞ் சகலவிஷய
ங்களையுஞ் சிவார்ப்பணமாக்கித் தானென்றுந் தனதென்று மில்லாமல் எல்
லாஞ் சிவனுடைமையென்றறிந்து எல்லாஞ்சிவன் செயலென்று நடைநெ
டி பாவனைமூன்றிலுந் சிவார்ப்பிதமாகச் செய்தால்இதுவுஞ்சுகமென்றறிக.
இந்தவிதமிரண்டிலல்லாமல் வேறெசுகமில்லை யென்றறிக.

ஙஉ-வது—அத்தியாயம்.

அநித்தியதிதரிசனம்.

எல்லாமிறப்பதேயியல்பதாகைபாற்-

பொல்லாவநித்தியமெனவேபுகறல்.

நிள. பாலனும்பருவமாயும் பன்னியகுமாரமாயுங்
கோலமெவ்வனமுமாயுங் குலவியகலமுமாயும்
வாலியசெல்வமாயும் வலியுடனினைத்துமாயுஞ்
சாலவேநிலைஞாலத்துத தானிலையாமையன்றே.

நிஅ. தேடியபொருளுமாயுந் திகழ்ந்திடுகலவிமாயு
நாடியவீரமாயு நலந்திகழ்குணமுமாயுங்
கூடியசுற்றமாயுங் கொண்டாடுமினைத்துமாயு
நீடியஞாலமெல்லா நிலையாமைமபமென்றோ.

நிக. இந்திரன்செல்வமாயு மிமையவர்பதங்கண்மாயு
மந்தரம்பொடியாய் வீழு மறிகடல்வறளதாகுஞ்
சந்திரனிரவிமான்டு தனையதுமழியுமென்று
லிந்தநீர்க்குமிழியாக்கையியல்பினையிசைத்தற்குண்டோ.

நிய. நீரின்மேலெழுத்தைதபதனின்மேலெழுந்த மொக்குளைநிகரில்
பேய்த்தேரைக், காரின்மேன்மின்னை யென்னுடம்பென்று க
ருதினேன் கடைப்பிடிகாணேன், மேருவேவில்லாய்த்திரிபுர
மெரித்த விகிர்தனேமேவுவெண்காடா, யாருநேரொவ்வாவை
யனேபடியேன் செய்வதென் னருளிச்செய்யாயே.

ஆகையால் கருவிலுங் கெற்பத்திலும் பிறக்கிலும், பிறந்தபிறகு, நிமிஷம்-நாழிகை-தினம்-மாசம்- வருஷம்-ஒன்றுமுதல் நூறளவாக நிச்சயமில்லாமல் ஆதிபவுதீகம், ஆதியாத்மீகம ஆதிதெய்வீகமாகிய மூன்றிலுல் மானமடைந்தும், நால்வகை யோனி யெழுவிதத்தோற்றம் - அசு - லகூடம் - அச்சிலும் நிசமில்லையாலுங், காண்பானுங் காணப்பட்ட பொருளு மழிகையாலுஞ் சாகிறதேமெய், இருக்கிறதேபொய்யாகையாலும், தாய்-தகப்பன்-பிள்ளை- பெண்டீர் முதலானபேரும்தான் தேடினதிரவியமுதலான பண்டபதார்த்தங்களும் தனக்கு மூன்றின்போலுல், நடுவேயிருக்கிறதானும் போவானென

ன்றும், நிமிஷ நிமிஷகார்த்தமுதல் சங்காரங்களுஞ் சர்வசங்காரங்களும் வந்து அழிகையாற் பிண்டாண்ட மனித்தியமென்றறிக. நித்தியமேதென்முல் பிர்ம மொன்றுமே நித்தியமாகும். மற்றதெல்லா மனித்தியமென்றுணர்ந்து கொ ள்வாய்.

கூகூ-வது—அத்தியாயம்.

வீடுபற்று.

வீடுபற்றுவதுவிடுவதுந்தொடுவது நீடியசீவனிலையாமென்றது.

காலவரம்பின்படிசீவன்தூலதேகத்தை விட்டுப் பிரிவதெப்படி யெனமு ல், சர்ப்பமானது, மாசமாகிய காலவரம்பிற்றவறுது தன்னுடலெமறைத்துக் கொண்டிருக்கும் சருமத்தைவிடுத்து வெளிப்படுவதுபோலும், பட்சிகள்தன க்குரியகருவானமுட்டையினிடத்தில் காலவளவின்படிதங்கி வெளிப்படுவது போலும், சொர்ப்பவுவஸ்தையிற் கண்டகாக்ஷிகளும், வியவகாரங்களும் வி ழித்தாஜனவிட்டு விலகுமாறுபோலுமென்றறிக. மலர்சென்றவிட மெல்லாம்,ம ணஞ்சென்று நின்றுற்போல் மனஞ் சென்று நின்றவிடத்தே சீவனுஞ்செ ன்று புரியட்டக சரீரத்தோடு கட்டுண்டு நரகமோக்ஷ, பலப்பிராப்திகளை அ டைந்து வினைச்சேடத்திற்கேற்க மீண்டுந் தூலதேகத்திற் பிரவேசிக்குமென் றறிக.அஃதெப்படிபோலுமென்றுல்,மனிதர்க்கு குளிர்முததலானதைதீக்குஞ் சட்டைகிழிந்தவிடத்தில்வேறுசட்டை கொண்டபின் அதனைவிடுவார்போலெ ன்றறிக.

கூக. வாக்கைமுதலாயுள்ளகரணந்தன்னை மனத்தினுடன் கூட்டியங் தமன்னர்தம்மைமப், போக்கரியபிராணனுடன்கூடியங்கேபொ ருளனைத்தும்பொதிந்துகொடுபுறப்படுங்கான், மூக்கினைடே வாக்கினைடேமுன்கணேடே முதல்புகிருஞ்சென்னியொடே யுடலைவிட்டுச், சாக்கியொடே கூடிக்கொன்டுலகமெல்லாஞ்ச ஞ்சரித்துத்திரியும்வனஞ்சாற்றலாமே.

கூஉ. விட்டிடுந்திசையிற்செய்த வினைதனக்கள்விற்சென்று
கட்டிடுங்காயந்தன்முன் கனவுபோற்புனரக்கண்டு
விட்டிடுங்கருத்தங்குற்று வினையுடன்காலங்கூட்டிக்
கட்டிடும்பாத்திரத்தைக் காரணீட்டுமாயை.

கூங. தோயுமுன்னுடலைவிட்டுச் சூக்குமத்தோடும்போது
வாயுவாகனமாய்த்தந்தை வாயுவினேடுடுங்குப்

பாயுமாதாவிடத்தே பாய்ந்துபின்பாயசத்தி
லேயுமிவ்விருநீர்மெய்யா மிட்டவித்தெழுந்தாங்கன்றே.

சுசு. உறக்கம்வந்தெய்தும்போது மூணுயிர்வாழும்போது
மிறக்குமப்போதுந்தன்னே டிசைவின்றியெய்துமாபோற்
பிறக்குமப்பெற்றிதானும் பேணுநால்வகையுந்தன்னை
மறக்கவந்தியாவுஞ்சிவன் மறுதிபின்புணர்ப்பினன்றே.

சுரு. பிறப்பனவுந்திரிவனவும் பிரிவனவுமறைவனவுந்
துறப்பனவுமிவையைந்தாற் சுழலுறுங்கட்டாறனைகபோற்
பிறப்பனவுந்திரிவனவும் பிறிவனவுமறைவனவுந்
துறப்பனவுமைமவகையாற் சுழலுமுலகுயிர்தானே.

சுசு. கருவினிற்றோன்றுயோனி காட்டத்திலுயிர்கள்போல
வுருவினைக்கொண்டுநீங்கு மும்பர்தந்தோற்றமெல்லாந்
தெரிவுறிற்றீபமோங்கிச் செறிதல்போற்சிவன்றன்னில்
விரிவுறவோங்கலின்றிவிடுவதோர்காலமின்றும்.

சுச-வது—அத்தியாயம்.

பிதுராயனதெட்சணையனம்.

தெட்சணைவயனஞ் சீவன்போம்வழி.

இப்படிசீவன்விடுவதுந்தொடுவதுமென்றறிக.

இந்தபூமியின் கண்ணிலே ஏரி குளந் தடாகங் கினறு நடைவாவிமுத லானதுந் தோப்புமுதலானதும் அன்னதானமுதலான வேஷாடசதானங்களு ம் ஜோதிஷ்டோமயாகம் அஸ்வமேதயாக முதலெல்லா தர்மங்களும் பண் ணினவன் சீவன் விடும்போது இடதுபுறத்தி விடைநாடியாலே சீவன் போ கையால் தெட்சணையனமென்றுயிற்று. இந்தநாடியாலேசீவன்போகும்பொ ழுது மேகதேவதைதபக்கல்விட, இது இராத்திரியில்விட, இது கிருஷ்ணப கூதத்தில்விட, இது தெட்சணையனத்தில் விட, இது வருஷத்தில் விட, இது பிதிர்லோகத்தில்விட, இது ஆகாசத்தில்விட, இது சந்திரனில்விட, இந்தக்கிர மத்தாலே சொற்கலோகமேபோய் இந்திரன்சமீபத்திலே யிருந்து போகங்க ளைப் புசித்து இப்படிமுன்சொன்ன மேகமுதலான தேவதைகளனைவரும் ஒன்றொன்றுகத் தாண்டவிட, மேலேறிப்போய் இந்திரபோகம் புசிக்கும்

போது இந்தப் பிரியவிஷயபோகம் க்ஷயமாகுதென்றும், அந்தச் சொற்கத்திலே அதிசயபோகங்களைக்கண்டு பொருமையும் இத்தைவிட்டுப் போகிறேமென்கிற துக்கத்திலேலே யங்கழுந்தி யிருந்த போகந்தீர்ந்தாற் புணராவிர்த்தியாகத் திரும்பிப் பிறப்பான். அஃதெப்படியென்னில், முதலாகாசத்திலிறங்கி, இதுவாயுவி லிறங்கி, இது தூமத்தில் விட்டு, இது மேகத்தில் விட்டு, இது விருஷியில்விட்டு, இது அன்னத்திலிறங்கி இது பஞ்சபூதாத்மீகமானஷோடருசிகளோடுங்கூடிப்புசிப்பான்.இதைப் புசித்த சீவனுடைய உதராக்கினியிலேலே பாகமாய் இது திப்பி ரஸமென்று இரண்டுவிதமாம். இதில்திப்பியானதுபன்னிரண்டுதானத்திற் பன்னிரண்டுவிதமலமாம். இனிரஸமானதுதூலமென்றுஞ் சூட்சுமமென்றும் இரண்டுவிதமாம். இதில் சூட்சுமரஸத்தாலே பிராணதியிந்திரியம் அந்தக்கரணங்களுக்குப் பலமுண்டாகப்போஷிக்கும். இனித்தூல ரஸமாவது சத்ததாதுக்களாய் வற்திக்கும். இதில் சீவனைது தாதுமயத்தோடே கூடிப் புருஷ சுக்கிலத்திலே மூன்றுமாசமிருந்து புருஷ ஸ்ரீசையோகத்தில் ஸ்ரீ ருதுவானதுமுதல் (ஐந்) நாளிற் காலகர்ம வசத்தால் பெண்கற்பா சயத்தில் விரோதமில்லாமல்வாயுவசத்தாலே பிரவேசிக்கும். இதுபிண்டோற்பத்திப்பிரகாரம் பிறந்துதிரும்பச் சென்னமரணப்படும். இதைப்பிதிராயனமென்றுஞ் சொல்லுவார்கள்.

உதாரணம்.

சூன- அருமறைகள்விதித்தவழி யிரண்டவத்தை யறைந்திடலுத்தரந்தெற்காமயனமாற்க, மருவுமதிற்றெற்கயனம்புகைகறுப்பு மிருளாரங்கற்பாகத்தோடுங்கூடி,விரவியவக்காலதேவதைகடம்மைமேவியவாமீண்டிடுவாமீளாதாபோ, லுரவியவுத்தரமாற்கபரிசையுந்தானுரைத்திடுவெனத்தனையுமுனர்கவையா.

இது ஆடிமாசமுதலாறுமாசமுஞ் தெட்சணையனமென்றுஞ் சொல்வார் இது பிதுராயனமென்றும்பேர்,



சுஐ-வது—அத்தியாயம்.

தேவாயன உத்தராயனம்.

சன்மார்க்கத்தால் சற்கதிசெல்ல லுன்மார்க்கமதாமுத்தராயனமே.

இனிச் சகுணப்பிர்மமான பிர்மா விஷ்ணு ருத்திரன் சூரியன் முதலான பேரிடத்திற் பத்தி ஞான வயிராக்கியமுள்ளபத்தர்கள் வலதுபாரிச நாசியிட

த்திலே பிங்கலையில் சீவன்விட்டால் முதல் சுவாலையில் புகுந்து இது தினத் தில்விட,இதுசுக்கிலபட்சத்தில்விட,இது உத்தராயனத்தில்விட,இது வருஷத் தில்விட, இது வாயுவில்விட,இது சூரியனில்விட,இது சந்திரனில்விட, இது மி ன்னலில்விட,இது இந்திரனில்விட,இது பிரமாவில்விட,இது விஷ்ணுவில்விட, இது ருத்திரனில்விட, இவர்க ளந்தந்த லோகங்களிலே போய் அவரவர் வாகனங் காமதேனுக்கள் போல் சாலோக சாமீப சாரூபங்களைப் பெ ற்றிருப்பார். பின்பு பிரளைய சங்காரகாலத்தி லந்தந்தத்தேவதைகளோடே கூடிச் சங்காரப்படாமலிருப்பார். பின்பு வயிராக்கியத்திலாவது சம்மியஞா னத்திலாவது சன்மார்க்கமானசெனனங்களையெடுத்துப்பிரத்தியக்ஷ ஞாலே தயத்திலுல் சகசமோக்ஷ மடைவானென்றறிக.

கூஅ. அழலினெடும்வெளியினெடுமகத்தினேடு மதுக்குடலாழும் பக்கந்தன்னினேடுங், கழிவில்லாவறுதிங்களாண்டிற்புக்குக் கடுகிய வாயுவையடைந்துவாயுவாலே, கழலவிடவிரவியிர்மண்டலத்தை க் கழித்துப்போந்துயிந்துவினுருலகதனைக்கன்டுமீப்போப்ப்,பொ ழிகின்ற வயனுகிற்போய்மீளவின்றிப் பூசுரர்களெல்லாரும்போவர் காணை.

கூக. அங்கியொடுபகல்வெண்மையாங்காலதேவதைகளவர்களோடு தங்குமறுதிங்களிடையுத்தராயணஞ்சார்வார் மறித்துஞ்சாகார்,கங் குல்புகைகறுப்பென்னுங் காலதேவதையடைந்துபிறக்குங்கண்டா, யெங்குமறுதிங்களிடை தெக்கணயனத்திறந்தயோகியென்பான்.

இனி யோகீஸ்வரர் உத்தராயனமார்க்கஞ் செல்லும்படி அஷ்டாங்க யோகத்திலுலே இரேசகாதிசப்த பூரணயாமத்தாலே சுழிமுனாடிமார்க்க த்திலே சிரோரந்தரத்தாலே நாடிமார்க்கமாகிற வலமிடமில்லாமல் சீவன்விட் டபோர் சுவேச்சா லோகப்பிராப்தியையும், அல்லது சற்சந்தனவனிதாதிபோ கங்களைநீக்கி நிஷ்காமியாகி இருந்தால் தத்துவாதீதமான சிவனையுமடைவார். இதெல்லாம் ஒருவிதம்.

எஅ. விதித்ததாகமமறுவகைத்தவத்தையும்விளம்பில்மந்திரத்தோ டு, மதித்தவப்பதவன்னநற்புவனதத்துவங்களையவைதன்னை, விதி த்தவாறதுவிளம்பியவகைகளுரும்விதியெல்லாமுடிவிற்போ, யுதித்த வன்மையிற்கொள்ளடுடும்பரிசது முண்மையாமுணர்மைந்தா.

எக. நின்றவிடத்தினின்று நீங்கிவேறிடத்தைநோக்கிச் சென்றிடுதெறியதாகுஞ் செப்பிடிறத்துவத்தா

ளென்றவமார்க்கமங்கே தென்றிடிலிருஞ்சிவத்தோ
டொன்றிடவுயிர்கள்செல்லு மொண்ணெறியாகுமன்றே.

எஉ. செடிபடுமாயர்கூட்டந் தேசிகன்சிரமத்தாலே
யடியெடுத்தடிவைத்தாற்போ லகிலதத்துவங்களெல்லாம்
படியவிட்டேறிமென்மேற் பரந்தபாவனையாற்பெத்த
முடலேவிட்டுயினைமூத்தி கூட்டிடுநெறியம்மார்க்கம்.

எஊ. திகழுமாமறைதெற்கொடுத்தரமெனத் திகழ்த்தியவகைசெப்பி, லகழுமாசுரந்தெற்கதுற்பவத்திருட் கேதுவாமதுகன்ம, நிகழுதெய்வவுத்தரந்திகழ்நீடொளிநிகழ் நிவர்த்தியதென்றே, டுகழுமாரணமிருநெறிமுடிபொருள் போதமாய்விடலேகான்.

இப்படியோகசித்தர் ஆறுதாரமுதல் அதிச்சக்கிரபுவனங்களையும், ஆறத்துவாவையும் ஒன்றைறவிட்டொன்றிலேறிப் போகிறமார்க்கமாவது அனலாகிற மூலாக்கினியிற்புகுந்து தினமாகிற சுவாசத்திற்புக்குச்சுக்கிலநாடியிற் பிரவேசித்து உத்தராயனமாகிற வலமிடஞ் சாதித்து வருஷமாகிறகாலசக்கரத்திற்புகுந்து வாயுவாலே சூரிய சந்திர மண்டலம்புக்கு அங்குள்ளமின்னல் பிரகாசம்புகுந்து இந்திரபோகமான அமிர்தபோகங்களைப் புசித்துப் பிர்மாமுதலான அதிதேவதைகளைக்கண்டு அப்பால் ஈதெல்லாமிறந்தவிடத்தில் மோட்சமடைவார்களென்றறிக.

நகூ-வது—அத்தியாயம்.

ஞானிகள்கதி.

நிசமோட்சம்பெறல்-நீள்ஞானகதியாம்.

ஆசாரியன்அனுக்கிரகவாக்கியத்திலுல் நேதிநேதிசெய்து இதுநீயல்ல இதுநீயல்லவென்று ஒன்றைறப்பற்றி யொன்றைறவிட்டு மேலேறி மும்மலமுமெண்ணிறந்த தத்துவமு நீங்கிச் சீவபரவயிக்கியமாகிப் போகையால் இதுவேயுத்தராயனமென்றறிக. இவர்கள் இடைபிங்கலை சுழிமுனை நவ்த்துவாரங்களிலும், நல்லதலம் பொல்லாததலங்களிலும், நல்லகாலம் பொல்லாதகாலத்திலேயாகிலும், நினைவோடே நினைவுகெட்டாகிலுந் தேகம்விட்டால் சுழிமுனைப்பலனல்லாமல் நிசமோட்சம்பெறுவார்களென்றறிக.

கூ-வது—அத்தியாய்ம்.

பாவிகள்கதி.

படுநரகாவதுபாவிகள்கதியே.

சன்மார்ககமாகியயோக ஞானங்கள் தானதர்மபரோபகாரமில்லாமல்பா தகரானபாவிகள் அட்டையைப்போலும், சாணளப்பான புழுப்போலும், ஒருதலைப்பற்றி யொருதலைவிட்டாற்போல யாதனுசரீரத்தில் குதகுய்யத்தா லே சீவன்விட்டால் நரகத்தில் யமதண்டனைப்படுவார். இதல்லாமல் மத்தி மசீவன்கள் குத குய்யத்தாலே சீவன்விட்டால் பிசாசுலோகம்புகுவார். நா வாலேவிட்டால் தயித்தியலோகம்புகுவார். மூலையாலேவிட்டால் காமதேனு லோகம்புகுவார். கண்ணுலேவிட்டால் சொற்கலோகம்புகுவார். மூக்காலே விட்டால் மத்தியலோகம்புகுவார். காதாலேவிட்டால் பிதிர் லோகம்புகுவார். இப்படியேபல வேற்றுமையாற்புகுவா ரென்றறிக. அற்பபுண்ணியம் வெகு பாவங்களாலு மிப்படிக்கொத்தலோகம் புகுவாரென்றறிக. இதனை அந்தரங் கத்திலேஅத்துவாவென்றும், பாயரங்கத்திலே உத்தராயன மென்றுந் தெ ட்சணயனமென்றும் வேதாகமஞ்சொல்லுமென்றறிக.

கூ-வது—அத்தியாயம்.

சமயபேதங்களில் நின்றபோர்நிலை.

சமயநிலையினிற்சாற்றுதுமுறைமையே.

கவுளயாமளாதிகள் பசாசலோகம்புகுவார். சார்வாகர் சோதிஷர் பூர் வமீமாங்கிசர் தூலபூதாந்தரபுவனம் புகுவார். ஸ்மாத்தர் தன்மாத்திரைலோ கம்புகுவார். இந்திரியசைதன்னியர்இந்திரியபுவனம்புகுவார். அந்தக்கரணசை தன்னியர் அந்தக்கரணபுவனம்புகுவார். பாட்டன் நையாயிகன் வைசேஷி கன் புத்திதத்துவபுவனம் புகுவார். சயினருஞ் சத்துவசம்போகவாதியுங் கு ணதத்துவபுவனத்திற்புகுவார். பாஞ்சராத்திரி பிரகிருதிபுவனத்திற் புகுவார். சாங்கியர் பிரகிருதிபுருஷ புவனத்திற்புகுவார். நியாயவைசேஷிகர் சமஸ் தக புவனம்புகுவார். அத்வைதிகள் புருஷதத்துவபுவனம் புகுவார். புராணி கர்இராகபுவனம்புகுவார். காபாலிகள்காலபுவனம்புகுவார். உபபத்தியசாமிவா தியும் ஆவேசசாமியவாதியு மாயாபுவனம் புகுவார். மகாவிரதர்வித்தைபுவன ம் புகுவார். சிவப்பிரயோக்கியகத்துறுத்துவவாதியும்வீசுவரகவுதாசன்னியக த்துறுவாதியும் ஈசுவரபுவனம்புகுவார். காருடதெட்சணவாம பூததாந்திரிக

ர்நிவர்த்தியாதிபுவனத்திற்புகுவார். சுத்தசாத்தேயர்சத்திபுவனத்திற் புகுவார். சைவர் பரசிவ சமானமிருப்பர். சகலமதாதிதராய் நிஷ்டா னுபோகசமாதி சுவராரானபேர்நிசமோட்சமடைவார். இதுசித்தம். இப்படியென்றறிக. இனி ப்பிதிராயணமாவது, கீழாலவத்தை போலுந் தேவாயணமேலாலவத்தைபோ லுமென்றறிக. திரும்பி சென்னமரணத்துக்கு ஏதுவாகிறசமயங்கள் முத லெல்லாந் தெடசிணாயனபிதிராயனமாம். இனிசெனனமரணமில்லாத சம யங்கள் முதலெல்லாம்உத்தராயனதேவாயனமாம். இப்படியண்டத்திலும்பி ண்டத்திலுமென்றறிக.

கசு-வது— அத்தியாயம்.

ஞானிமகாத்மியம்.

ஐவரும்போற்றுதற்-கவனஞானினைபத்

தெய்வமகாத்மியந்தேறியுரைத்தது.

எச, அடியறிந்தாறியமர்ந்தவனாம்புலவாசலெல்லா
மொடியெறிந்தார்மனமுள்ளத்தமிர்தினையுண்ணவைத்தார்
முடியெறிந்தார்முன்பு செய்வினையன்றிமற்றில்லையென்று
வெடியெறிந்தார்வேதவாள்பொருள்பற்றியவித்தகரோ.

எஞ. கன்றுதலின்றியாறிக் கழிந்தகாமத்தனுகி
யொன்றவெவ்வுயிருந்தன்னை யொக்கவேயுணருஞானி
சென்றதோர்நெறியின் செல்வன் சென்னிமேலவன்காற்றூளி
துன்றுமேற்சுத்தனுவேனெனுமிது துணிவிற்கொன்னோ.

எசு. அத்துவிதந்தானுகுமவிகற்பத்தடைந்தபோதே
புத்தியினினைப்பும்போகும் போதுமிப்பிறப்புநேரா
வெத்திகழ்வாலும்பேத மின்மையாலினையேயென்னுந்
தத்துவவித்தையென்றன் றலையினுல்வணங்கத்தக்கான்.

எஎ- ஒழுக்கமேபுரிந்தோனுத லதனைவிட்டொழிந்தோனுத
லிழுக்கஞ்செய்மூர்க்கனுதல் பண்டிதனுதலென்னினிற்
பழிப்பருஞானந்தன்னின் முயல்பவன்பணியத்தக்கோன்
றெழுதக்குருஞானியென்று சொல்லவேண்டுவதுமுன்னோ.

ஞானிபூசை

ஞானிபூசையேநலனெனக்கூறுதல்.

எஅ. மன்னனேமனிதரெல்லா மணிமன்னுதனத்துள்வைத்து
மன்னியவுபசாரத்தால் வந்தனைசெய்யுமாபோற்
பன்னருமறையினந்தம் பயின்றநன்ஞானிதன்னைப்
பொன்னுலகதனிற்றேவரிருடிகள்பூசைசெய்வார்.

எக. யாவர்தன்னில்லில்ஞானி யெய்திடுமவனைக்கண்டு
மேவியபிதிரரெல்லாம் விரும்பிநின்றுடாநிற்பர்
பாவியநரகமென்னும் பற்றினையொருவியென்று
மோவில்வீடுபெற்றே மெனவெழுமுவகையாலே.

அய. கனையின்மெய்ஞ்ஞானவின்பப் பிரமமாங்கடலினுள்ளே
யொருவனதுள்ளமொன்றி யொடுங்குமேலவனைப்பெற்றுள்
பெரியபேறல்லாம்பெற்றுள் பேணுமக்குலமுந்தாய்தாம்
பொருவிலோனிருந்ததேசம் புண்ணியபூமியன்றே.

அக. சிற்சொரூபத்துஞானி சேர்ந்திடமிகவுமென்றுங்
குற்சித்தானமேயுங் கோடிவிற்கிடைக்குளெங்குந்
தற்சிவத்தானஞ்சுத்தந் தபோவனந்தீர்த்தமாகு
நற்சுடர்புக்கிடந்தா னன்மையால்விளங்குமாங்கே.

அஉ. யாதொருபொருளையெல்லா வுயிர்களுமிருள்போற்காணு
மோதருஞானியத்தை யுளங்கையிற்கனிபோற்காணும்
யாதொருபொருளையெல்லாவுயிர்களுமென்றுங்கான்பர்
காதலில்ஞானியத்தைக் கண்ணிணுற்றெரியக்காணான்.

அங. அஞ்சையுமறுத்துமிக்கோ ரடிதொழுதெழுவாராகில்
வஞ்சமாயனத்தரோடு மதித்துறவணங்கவேண்டுந்
செஞ்சடையொருவன்கண்டஞ் சேர்த்தரப்படுதலாலே
நஞ்சையிவ்வுலகமெல்லாந் தொழப்படுநலத்ததன்றே.

அச. அழுக்குடைசாதியோரு மடைந்துமெய்ஞ்ஞானிதன்னை
விழுப்புடன்றலைவராவர் வேதகக்குளிகைசேர்ந்த

விழுக்குடையிரும்புஞ்செம்புமிலங்குசெம்பொன்ணுமாங்கை
யொழுக்கமோடவன்றுள்சேர்மி னேங்குவீடெய்தலுற்றீர்.

சுக-வது—அத்தியாயம்.

ஞானிசீலம்.

ஞானிசீலமே நன்னடக்கை நவிற்றல்.

அநி. நல்லமுதூட்டினு நஞ்சையூட்டினுந்
துல்லியமாக்கினுந் தொழிலிலமாற்றினுங்
கல்லினும்பொனனினு மொத்தகாட்சியார்
சொல்லிறந்தோரெனத் தொகுத்ததெங்கணும்.

அசு. காலமுமகாலமுங் கருதலின்மையுஞ்
சீலமதாருவாற் றெரியொணமையும்
பாலவுன்மத்த பசாசமாவது
மேலவர்தம்மிலக் கணத்தின்பெற்றியே.

அள. வேதனைப்படுத்தினும் விடினுமொப்பவர்
சாதலும்வாழ்தலுமொக்குந் தன்மையர்
யாதொருபொருளினு மிசைவிலாதவ
ரூதியமதுதனை யுணர்ந்தவுத்தமர்.

அஅ. தெரிதருமொழியிடைச் செவிடர்போலவு
மூருவுகடெரிவிடைக் குருடர்போலவும்
பரிவுடையமுதிடைப் பாலர்போலவும்
பெரியவர்தம்மிலக்கணத்தின்பெற்றியே.

அசு. வையினும்வாழ்த்தினு மலர்கொண்டேற்றினும்
வெய்யவாயாவிடை வீழுநாக்கினு
மெய்யினுமெறியினும் யாதுசெய்யினு
நகவொடுமகிழ்விலாஞானி சீலமே.

கூடி. செத்திலேன்புகழிலேன் செஞ்சாந்தணிகிலேன்
மத்தகத்தேயுளிநாட்டி மறிக்கிலேன்

வித்தகஞ்திவிதிவழியல்லது
தத்துவஞானிகடன்மைமகுன்றுமோ.

கூக. ஆனையுழக்கிலே னம்பூடறுக்கிலேன்
கானத்துழுவைகளந்துவிளக்கிலே
னெனப்பெரும்பன்றியெங்குமடக்கிலேன்
ஞானத்துழுவினை நானுழுவேனே.

கூஉ. கணக்கன்ணுங்கல்விக்கண்ணுங் காரியத்தியல்பிற்கன்ணு,
மணக்கன்ணுமகளிர்கண்ணு மாநிலத்தனத்தின்கன்ணு,
மினக்கன்ணுமினைஞர்கண்ணு மெங்கணுமியோகிநோக்கிற் [ம்.
பினக்கன்ணும்பீலிக்கன்ணும் யானைக்கண்ணுமேபோலும்யாவா

கூங. மதியார்மனைவாழ்வுகள்மன்னையுந்
துதியாரவரோடுதுடக்கறியார்
நிதியான்மகிழார்நினைவற்றவிடம்
பதியாகியதத்துவபராயணனே.

சஉ-வது—அத்தியாயம்.

ஞானியூண்டலன்.

உள்ளதுஞானியுலகெலாந்திருத்தியாம்.

கூச. ஓதியபரமயோகியுள்ள தெவ்வுலகுமுள்ளன
தாதலாலவனைப்பூசித்தவனுலகங்கள்மூன்று
கோதிலாச்சிவன்மாலோடுங் கூடவேகுறைவில்பூசை
காதலாற்செய்தானென்றே யருளினன்கருணைவாரி.

திருமந்திரம்.

கூசு. தண்டமுஞ்சின்ன தபோதனர்தாமகிழ்ந்
துண்டதுமூன்றுபுவனமு முண்டது
கொண்டதுமூன்றுபுவனமுங்கொண்டதென்
றெண்டிசைசுற்றி யெடுத்துரைத்தாரினை.

அறிவானந்தசித்தியார்.

கூசு. பரிந்தொருகோடிமறையோர்க்குப்பூமிபொன்பண்புடனே
வருந்துமிடிகெடவைப்பது தன்னின்மறைமுடிவு
தெரிந்தமெய்ஞ்ஞானிக் கொருபிடிபிச்சைசிறப்புடனே
பொருந்தவமைப்பதற் கொவ்வாதெனமறைபோற்றிடுமே.

திருமந்திரம்.

கூஎ. திலமத்தனையே சிவஞானிக்கீந்தால்
பலமுத்திசித்தி பரலோகமெய்து
நிலமத்தனைபொன்னை நிர்மூடர்க்கீயிற்
பலமுமற்றேபர போகமுங்குன்றுமே.

காலடியார்.

கூஅ. கடிப்பிடிகண்முரசங்காதத்தோர்கேட்ப
ரிடித்துமுழங்கியதோ ரோசனையோர்-கேட்ப
ரடுக்கியமூவுலகுங் கேட்குமேசான்றோர்
கொடுத்தானெனப்படுஞ்சொல்.

சூடவது—அத்தியாயம்.

ஞானியேவல்.

ஞானியேவலா னற்பதமாமெனல்.

அறிவானந்த சித்தியார்.

கூகூ. துன்னுமெய்ஞ்ஞானிதனக் கேவல்செய்தவர்துஞ்சிலவ்வான்
மன்னும்விமானஞ் சிவலோகமேற்றமகிழ்ந்தங்கது
தன்னிலொருகம்பகோடியின் வைகுந்தன்னில்வந்தே
யுன்னுமொருகற்பகோடியுறைந்தய னூர்புகுமே.

ஈ. உறைந்தயனூரினெடுங்காலம் வாழ்ந்திந்திரனுலகிற்
செறிந்ததிகாலமியக்கர்கந்தருமென்னதசந்தன்னி

லறந்தருமாணுடமாகிக் குருபார்க்கன்புசெய்தே
சிறந்தமுன்னேவற்குறை முடித்தேதமுத்திசேர்வர்களே.

ரக. நலமுடைஞானியிங்கார்மனேபாயினு நல்லிலவன்
குலபிதிரானவர் கூத்தாடிவருற்றுக்கோதறுநற்
றலமதில்வைத்துப சாரங்கள்செய்திடற்சாருநர
கிலோகமக்கென்று பரகதிசேர்வனெனுமறையே.

வேறு.

ரஉ. அஞ்சிபாசைமுதலாயு வவலபேதமனைத்தினையுந் [த்தூங்கும்
துஞ்சிப்பிறக்குந்தொழிற் கினைத்துத்தோன்றுத்துணைவனடி
விஞ்சைசக்குகையில்வீற்றிருக்கும் விரதவேதியோகிதனை
நெஞ்சகத்தவனைநினைத்தாலு நிரந்தவினைகணீங்கிடுமே.

சச-வது—அத்தியாயம்.

ஞானியையிகழ்ந்தோர்கேடு.

ஞானியையிகழ்ந்தோர் நரகத்தாழ்வகை.

ரங. தேவர்க்குந்தேவனுகித் தெரிதருஞானிதன்னைப்
பாவத்தினெருவன்மிக்குப் பன்னியநிந்தைசொல்லிற்
றுவற்றவயன்மாலீசன் முன்முதல்சகத்தியார்க்கு
மேவற்றகொடிய நிந்தையெனமறையுனைக்குமன்றே.

ரச. தன்னுனைர்பரமயோகி தனக்கிழுக்கதனைச்சொல்ல
மன்னுறுமறையோர்தம்மை வதைத்தபாதகத்திற்கோடி
சொன்னதுகெட்டலோகத் துணிதல்கோவதையிற்கோடி
யென்னவேமறைகளெல்லா மெடுத்துரைசெய்ததன்றே.

ரரு. தத்துவவித்தாமேலொன்றனக்கொரு தீமைதன்னைப்
புத்தியானினையினுந்தான் பொருட்களவதனிற்கோடி
மத்தமாமவரிற்கூடல் மத்தியபானத்திற்கோடி
யொத்தபாதகங்களென்றேமையுரைத்தனமறைகளன்றே.

ரசு. தோமறுஞானியைத் துகளுணாத்தவ
ரோழுமக்கேட்டவரிசைந்திருந்தவ
ராமெனமதித்தவரவரிற்கூடியோர்
தாமிவர்பஞ்சபாதகரிற்றண்ணியோர்.

ரள. உள்ளத்தேயுணர்வுகட்ட யோகியைநிந்தைகேட்கிற்
றெள்ளேனத்தன்செவிபுதைத்துத்தூரத்தாம்போவதேயாங்
கள்ளத்தார்தம்மைக்காணல்கருதுதல்மொழிதல்வேண்டா
மள்ளம்பாதகனைக்கோறலறத்தையுய்வித்ததன்றே.

சது-வ்து—அத்தியாயம்.

கூடாவொழுக்கம்.

ஞானிகள்விஷய நன்மெனவருந்த
லானகூடாவொழுக்கமாவதுசீவ.
அறிவானந்த சித்தியார்.

ரஅ. தனக்குத்தன்னெஞ்சது சான்றுயிருக்கவுந்தானிங்குண்மை
யனைத்துமும்றேமென்றரும் பஞ்சபாதகராய்த்தபுனை
யெனைத்தும்றுக்கேட்டுப் பரிசித்திருந்தவிருவருந்தான்
மனத்துக்கமும்றுயெரிவாய் நினையமபங்குவரோ.

ரசு. விரிந்தநல்வேதபுராணங்களாகம மிக்ககலை
தெரிந்துபடித்துப்பொருட்செப்பியன்னிலை சேர்ந்துநில்லா
ரிருந்தசன்டாளரி லேற்றங்கழுதையெனிற்குங்குமம்
பரிந்துசுமந்துபில் வஞ்சம்பல்ணுதபபனெழிலே.

ரய. ஞானமாமிலிங்கந்தம் முளத்தின்றி ஞானிகள்வேடமேமருவி
யூனதேவளர்த்தங்குண்டி மைதுனத்தின்பொருட்டுறவுழிதரு
கின்ற, வீனமாஞ்சோரஞானிகணினைய மெய்ப்துவமொய்தியங்
குழைத்துத், தீனமாந்திரியயோனியையடைந்து செனிப்ப
துமரிப்பதாவர்களே.

ஈடுக. விடையதேவலயிலிட்ட சாரத்தலுய்மிக்குச்
சுடருநம்றுமவிற் சோராவொழுகியதீயின
மிடையினற்புதர்மறைந்துபுட்படுத்திடும்வேட
னடையுநம்பதமவன்றனதறந் திரிந்திலனுல்.

வாக்குமனுதீதமான பொருளா யாதியந்தமில்லாததான ஆனந்தத்தைப் புசித்தால் அவர்கள் கானல்நீர் போலான விஷயங்களை விரும்பிப் புசிக்கில் அவர்கள் நாய்க்கும்ஊர்ப்பன்றிக்குங்கழுதைக்குஞ்சரி. இப்படியேனென்னிற் பாயசம் பண்ணி முன்னேயிருக்க அப்பாலாயிருக்கிற மலநாற்றம் பிடித்துப்போய்த் தின்கையாலதற்கொப்பென்றறிக. இனி அதிவன்ஞச்சிரமிகீழுறிற்சொல்லொணுப்பதிதன் நாலாசிரமத்தாரு மந்தந்தவாசிரமங்கள்விட்டுக் கீழுறிற் பதிதனுய் நரகில் வீழ்வார். உண்மைப்பொருளைக்காண வொருப்படும்பொழுது இகபர மருவருத்துத் துறந்தாரென்னிற் பரவமிர்தை யுண்டவர் விஷயத்தில்நின்றுற் பரத்தையறிந்தவரல்ல நரகத்திலும் விழுவான்நெய் பால் ஷாடு ருசியையுண்டவன் தவிட்டுக்கூழுக்கிச்சியான்போல ஞாலவமிர்தம் புசித்தவன் விஷயத்தி லிறங்காரென்றறிக. இறங்குவாலுயின்கூடாவொழுக்கமென்றறிக.

சசு-வது—அத்தியாயம்.

பிரபஞ்சவுற்பத்தி.

பிரபஞ்சவுற்பத்தி பேதமாம்வகைசொலல்

ஈடுஉ. அலகில்கடைச்சமையிகடா னகிலமுதல்கொளுமாறு
நிலவிபசிர்மறைமுடிவு நிகழ்த்தியிடும்பரிசதுவுங்
குலவியநம்சிவாகமங்கள் குறித்துரைத்தவதுதானு
மிலகுதவத்தெழின் முனியேயிசைத்தருளியிடவேண்டும்.

ஈடுக. சாற்றுமாயத்தமிகன்சகவிதைதான் சதுட்கோடிகூனியமென்னு, மேற்றுபுத்தியாஞ் சித்தெனவியோக வாசானுமிசைக்கின்றுன், மாற்றுமவைபாடியணுவெனுமற்றவனவ்வணுப்படனர்வென்னும், போற்றுமிவ்வகை புகன்முனர்புத்தாம்போகவீனர்களையா.

நூல் தத்துவநிஜாநுபோகசாரம்.

அருகமதத்தர் உலகத்தைகன்மமே யுண்டாக்குமென்றும், இதற்கு குணபரிகன்மமினமிதமென்றும், நிலையாமை நித்தம் இல்லது உள்ளது ஒன்று பல இப்படியாறுவிதமான இயல் போடும்வருமென்றும், மூலம் வேறொன்றுய்நின்று அதில் உலகம்உற்பவிக்குமென்றும்,சொல்லுவார்கள். சாருவாகமதத்தர் நான்குபூதங்களினுலுக முண்டாமென்றும், பரமென்பதொன்றுண்டா, கியிதனையியற்றவில்லையென்றும், ஆவதுமழிவதும் இயல்பேயல்லாமல் வேறில்லையென்றுங்கூறுவார்கள். மீமாங்கிச மதஸ்தர்கள் சீவனுனது சித்தே வடிவாய் உலகங்களைச்சிருட்டித்து இகபரங்களைப் பெறுவதல்லால் வேறொருபரனுண் டென்ப தில்லவேயில்லை. வித்துமாய்விளைவுமாய் நிற்பதெல்லாஞ் சீவனேயென்று சொல்லுவார்கள். சாங்கியமதத்தர்சீவாத்மாவேபரமாத்மாவாதலால்அச்சன்னிதானத்தின்பகுதியே விகுதிபான வுலகங்களாய்விரிந்தொடுங்கும், இதுவேசகத்துக்குவிதையாகுமென்றுஞ்சொல்லுவார்கள். புத்தர் வைபாடியர்போல் நியாயவைசேடியர் அணுவாவது இரண்டுவிதமாம். இதில் முதலணுச்சத்தாயிருக்கும் இரண்டாமணுவுலகாய் அசத்தாமென்றுஞ் சகங்களைச் சிவனுடைய குணத்தைக்கொண்டு அணுச்செய்யுமென்றும், அந்தசிவம் சத்தமாகிற வொலியென்றும் தேகமும் ஆத்மாவும் உலகமும் உலகமூலமும் ஒலியேயல்லாமல் வேறில்லை யென்றுஞ் சொல்லுவார்கள். சைவமதஸ்தர் பதிபசுபாசமானது நித்தியமாய் அநாதிசித்தமென்றும், உலகுணடாகிறதற்கு அதுகளேவிதையான தென்றுஞ்சொல்லுவார்கள். சத்திமதஸ்தர் சத்தியே பரப்பிரமமாம் உலகமுதலான விபரீதங்களுக்கு அஃதே முதற்காரணமாய்நின்று உதித்தொடுங்குமென்றுஞ் சொல்லுவார்கள்.சிவாத்வைதிகள்சிவமேஉலகமாய் விரிந்தொடுங்குமென்றுசொல்லுவார்கள்.மாயாவாதிகள் அவிகாரியாகிறபிரமசன்னிதானத்திலிருக்கின்ற மாயையானது விசாரிக்கிற் பொய்யாய் இதுதானே உலகங்களாய் விரிந்து தோன்றுமென்றுஞ் சொல்லுவார்களென்றறிக.

எஎச. பரமன்செயலறியாது பனைடத்தானுலகெல்லா
மரனென்பவரரியென்பவ ரயனென்பவர்சிலரிந்
திரனென்பவர்முத்தேவர்கள் செயலென்பவர்செடமா
மருவுங்குணவடிவென்பவ ரணுவென்பவர்மயலால்.

எஎஞ. வானிலாவோசையென்பார் வந்தொருகணத்திற்றோன்றி
யானியாம்புத்தியென்பாரடையவுங்கேட்டுநின்ற
சூனியமென்பார்பூதத் தொழிலெனச்சொல்லாநிற்பா
ரானவாறொருவராலென் றடையவுமியல்பேயென்பார்.

இப்படி பலவிதங்களாகப் பிண்டாண்டங்களுண்டானதென்று பலசமையமுஞ்சொல்லும். இதெல்லாம் வேதாகமங்கள் ஸ்மிருதிகள் கருதினவழிக்குவிரோதமென்றறிக. இதுகளே யல்லவென்று உபநிஷத்துச்சொல்லும்.

ாயசூ. தோன்றலாற்சித்துமாகித் தமத்தொடுகலந்துநின்றே
யான்றவழுனிகள்பன்னுமனனத்தாலளப்பொணதாய்ச்
சான்றதாயெங்குநின்ற தற்பாணுடைத்தாயொன்று
யீன்றிடுழுலகமெல்லாமெனமறையறையுமன்மீற.

ாயள. சுத்தையாய்ப்பனையா யிருந்துளசுருதி சுருங்கிட நிகழ்த்திய
பொருளை, நித்தவாகமங்களைறிமையால்விரித்து நிகழ்த்திடு
மெங்ஙனமென்னிற், சித்ததாய்நின்றேதமத்தொடுகலந்ததெ
ன்றவத்தெரிவரும்பொருளை, வித்தகமாகவிளங்கிடவுணர்த்
துமதுதனைவிருப்புடன்கேளாய்.

இத்தை மெய்மொழிச்சரிதையிற் செகத்தினுற்பத்தியிற் கண்டுகொள்
ளென்றறிக.

அமிர்தசாரம்.

ாயஅ. உற்பத்தியாந்தங்தை வாயுவுடன்கூடிப்
பொம்புற்றகொங்கையர்தம் போகத்தே-கெற்பத்தைக்
கொன்றேதைதசெல்லுமெனக்கூறுவீர்கூறீர்கள்
மன்றேகஞ் சென்றவழி.

சள-வது—அத்தியாயம்.

சிருஷ்டி.

சிருட்டியென்பது-செகமுள்ளாக்கல்.

இனிப் பரப்பிர்ம சிருஷ்டியாவது நிஸ்தரங்கமாயொன்று மில்லாதபோ
து பிர்மகிரணமானசித்திலொருநினைவுண்டாய் அதுதானே சிற்சத்தியாய் அ
ருள்சத்தி இன்பசத்தி சுகசத்தி ஆனந்தசத்திவிஷயசத்தி யென்றும் அனே
கம்பேராம். இதுசித்துச்சிருஷ்டி யிந்தச்சித்தானது எப்படிச் சிருஷ்டித்த
தென்னில்.

அமிர்தசாரம்.

ாயகூ. ஞானனந்தச்சுடராய்ந்ன்றுகியொன்றுன
தானுகியபடத்திற் றுன்றன்னுல்-நானுவா
யார்த்த கடலுலகமாமோ வியயெழுதிப்
பார்த்துமகிழ்ந்தான்பரன்.

இனிச்சதாசிவருத்டியாவது முன்சித்தில்வந்த சிற்சத்தியினிடமாகப்ப ராசத்திமுதற்பஞ்சசத்திகள் தோன்றி யிந்தச்சிற்சத்தி மகாமாயையோடே கூடிக் கலங்கல்செய்து ஐவகையோனிமுதல் (ஐச) வகைத்தோற்றமான அசு லகூடம் அச்சுபேதத்தின் தனுகரண புவனபோகமுண்டாம். இந்தச்சீ வராசிகளெல்லாஞ் சுரம் அசுரம் சராசரமென்னுமிம்மூன்றிலடங்கும். இந்தச் சத்திகளோக்கொண்டு சிதேசிருஷ்டிக்கும் அதெப்படி,

ரூஉய. அந்தத்துளதன்சத்தியைபடை வற்றுளதாமிச்
செந்துக்கள்செய்கருமந்திகழ் காலம்பருவஞ்செய்
தெந்தப்பொருள்களுமாகுக வெனவேவியிறையுன்னுப்
பந்தப்படமுன்போம்பல வுலகங்கள்படைத்தான்.

ரூஉக. காலமுங்கன்மந்தானும் பரிபாகமானவாறே
நூலமுண்டாக்கிநல்ல குணத்தினைக்கலந்துநிற்கும்
பாலதொன்றில்லாவிந்தச் சத்திமான்படைத்தற்காக
வேலவேயெல்லாமாவேயெனறுகொண்டினைசந்துபார்த்தான்.

இந்தப்பிரகாரஞ் சத்திகளோக் கொண்டு சிவன் சார்வத்தையுஞ் சிருஷ்டிக்கையாலே இது சத்திசிருஷ்டியென்றறிக. இனி மூர்த்திசிருஷ்டியாவது, முன்சொன்னசத்திகளிடமாகப் பஞ்சசாதாக்கியங்களுண்டா யிதில் ஐந்தாவதான கன்மசாதாக்கியத்திற்சதாசிவாதிபஞ்சமூர்த்திகளொன்றி லொன்று ண்டாகி யிந்தமூர்த்திகள் முன்புசிற்சத்தி மகாமாயையாலே யுண்டான தனுகரணபுவன போகங்களையுஞ் சீவராசிகளையு முன்புண்டான அச்சுப்படியே யுகாந்தங்கள்தோறும் அதுகளைத்திரும்ப உண்டாக்கிப் பஞ்ச கிருத்தியங்களைப் பண்ணுவாரொன்றறிக. இவர்கள் முன்புள்ள சித்துச்சிருஷ்டியாகிற யுகபத்சிருஷ்டி யச்சுப்படியல்லாமல் வேறொரு அச்சைச் சிருஷ்டிக்க மாட்டார்களென்றறிக.

ரூஉஉ. ஒருகாலமரன்படைப்ப னொருகாலமயன்படைப்ப னுலக
மெல்லா, மொருகாலமரிபடைப்ப னொருகாலமுனிவர்படை
ப்புள்ளதாகு, மொருகாலம்புயத்துதிப்பனொருகால்வாரியிது
திப்பனுயர்ந்தவேதா, வொருகாலண்டத்துதிப்ப னொருகால்
விண்ணகத்துதிப்பனேர்ந்துகொள்ளே.

ரூஉங. வன்மாங்களெனெருங்கு மொருபடைப்பிலொருபடைப்
பின்மனிதர்துன்னும், பன்மலகளெனெருங்கு மொருபடை
ப்பிலொருபடைப்பிற் படர்மன்னுகுங், கன்மயமாமொருப

டைப்பி லொருபடைப்பிற்றனசமயமாய்க்காணலாகும், பொ
ன்மயமாமொருபடைப்பிலிப்படியேபலவிதமாம் பூமிதானே.

ரூஉசு. வான்முதலாமண்முதலாநீர்முதலாந்தீமுதலாமற்றைவாயுத்
தான்முதலாமிப்படியே சிருட்டிதொறுமோரொன்றுதலைமை
யாகும், பான்முதலோரயன் சிருட்டியுனக்குரைத்தேனதுதன்
னேயடைவாய்க்கொள்வாய், மேன்முதலாய்நியமமுதற்கொள்
ளுகவேறுபலவிதமாய்த்தோன்றும்.

இதுமூர்த்திகள்சிருஷ்டி. இனிநவப்பிரசாபதிகள்சிருஷ்டிகாசிபர்முதலா
ன ஒன்பதுபேரும் ஒவ்வொருவுகாந்தங்கள்நடுவே யிறந்துபோன விடங்களி
லே பஞ்சமூர்த்திகள் அனுக்கிரகத்தாலே யவர்கள் சிருஷ்டித்தபடியே சிரு
ஷ்டிப்பார்களென்றறிக. இந்தவெகுவிதசிருஷ்டிகளெல்லாம்உபக்கிரமசிருஷ்
டிகிரமசிருஷ்டிஎன்று இரண்டுவிதமாம். இதிலேயுபக்கிரமசிருஷ்டியாவதுநி
ஸ்தரங்க சமுத்திரத்திலே வாய்வுசத்தாலே தரங்கவுற்பத்தியாஞற் போல
ச் சச்சிதானந்த வாத்மகப் பிரமத்தில் சித்தினது சங்கற்பசித்தியால் மூல
மாயாவிவர்த்த ரூபநாமமயமானமாயையாலே பிர்மாமுதலான மாயாப்பி
ரபஞ்ச மெண்ணிறந்ததுண்டாம். அஃதெப்படியென்னில்;

ரூஉஎ. சுருக்கமில்சிவத்திற்சத்தி தோய்ந்தபின்மாயாசத்தி
தருக்கியேகெற்பந்தாங்கிச் சகத்தைதமுன்பீன்றதன்மை
யருக்கன்முன்கிரணமோகா லந்தரத்திலங்குமேகம்
பெருக்கநீர் கெற்பந்தாங்கிப் பெய்புமாமழைபோலன்றே.

இனிக் கிரமசிருஷ்டியாவது தமப்பிரதானகாரணமாயையிலிருந்துண்
டானதத்துவங்கள் கிரமப்படியே பாரம்பரையாகவுண்டான பிர்மாண்ட
பாண்டமகாஅண்ட பாண்டங்கள் பிண்டாண்டங்கள் முதலாக எண்ணிறந்
தசிவராசிகளும்மூர்த்திசிருஷ்டிகளு முண்டானதென்றறிக. இதுவேதாந்த
சித்தாந்த முதலான வெகுவிதசாத்திரம் வெகுவிதசிருஷ்டிகளைச் சொல்லு
மென்றறிக. இந்தச்சிருஷ்டியைச்சிற்சத்திமுதலாக ரிஷிகளந்தமாகவுண்டா
க்குவதென்றறிக.

ரூஉசூ. அறியாமைமவழிவாயுள்ள புவனங்களைமத்துப்பின்பு
பிறியாதகன்மந்தன்னின் வசத்தினுலுயிர்கட்கெல்லாஞ்
செற்வானகாலபாக மானபின்னீசன்றனே
பிறிதாகுநான்குயோனிபிறந்திடும் வகையேயசெய்வான்;

ஈஉன. திண்ணுர்சிலையின்மன்மேகந் தேசுகொண்டவியல்புபோல்
விண்ணுர்மேகம்வித்தின்றி விளைந்தவாறுபோலுயிர்க
டண்ணுர்சகளஞ்சாரலின்றிச்சகளிகரித்துமூற்கருத்தாற்[வால்
பெண்ணுணலியும்வேற்றுமையும் பிறந்துதம்மிற்பிணித்தன.

ஈஉஅ. உணர்வுயிரொடுங்கிமாத ருதரத்திலேய்ந்தயோனி
புணர்வழிபோந்தோர்தாமுன் புணர்ப்பவையுனர்வார்போல
வுணருமெவ்வுயிருஞ்சத்தி யிடனுடனெடுங்கியத்தின்
புணர்வழியாகத்தோற்றும் புமான்களுமதனையோர.

ஈஉக. ஈசனுமிறைவனெத்த வறிவினுலெங்குமாகிப்
பேசிடுநாமம்ரூபப் பின்புபோலுண்டாய்ப்பேணு
மாசிலாச்சித்துத்தானே யுளதுபோலாயினுலு
மீசனையொழியவேறு நிற்பதொன்றில்லையென்றும்.

வேறு.

ஈஉட. சிலந்தியுமிழ்ந்து விழுங்குவதெப்படிதேகத்தே
மலந்தருகேச ரோமமதெப்படிமண்ணிற்கே
பலந்தருமோட்சதி யெப்படியீசனருட்படியே
யலந்ததடங்கவெறுங்கன வொக்குமதாயுங்கால்.

இதுவேதாகம சிருஷ்டியென்றறிக.



சதுவது—அத்தியாயம்.

இரட்சிப்பு.

எண்ணிலாவுயிரெல்லாம்பிழைத்துடம்
கண்ணிடலாவது ரட்சிப்பதுவே.

திருவெண்பா.

ஈஉக. ஆனகடங்களளவிலவற்றுள் புகுந்து
வானகந்தானின்றவாறெருக்கும்-யோனிகளொன்

பத்துநாணூறுயிரமாய்ப்படைத்தவற்று
ணித்தனுர்நின்றநிலை.

இப்படிச்சிவனிற்கையாலே ரட்சிக்கிறவிதமெப்படி யென்னின், மு
ன்புசிருஷ்டியானசீவராசிகளெடுத்தவுடலுக் கடைடத்தபொறியைந்தினையும்
பயிரிட்டவன் பயிரழியாமற் காப்பான்போல அந்தந்தச் சீவன்களுக்கு அந்
தந்தப் புவனங்களி லுண்டான புசிப்புகளைக் கொடுத்துப் புசிப்பித்துக்
காப்பாற்றுகிறதாலுல் சிவன்அவரவர்க்குக்கொண்டுவந்துகொடுப்பாரே வெ
ன்னில், அறுவகைத்தொழில் முதலானனண்ணிறந்தகொழிலாலுபாயமுண்
டாகப்பிரேரிக்கிறபொருள் உள்ளேயிருக்கையாலே சிவனே ரட்சிக்கிறவ
னென்றறிக. அந்தந்தச்சீவனுக்குத்தக்கவுபாயங்களில் கொசுகுமுதலானசீவ
னெல்லாம் பிழைக்கும்படி தந்திரங்களாயுள்ளே பிரேரித்து ரட்சிப்பா
னென்றறிக.

Acc. 031875
CA:- TM:-84.100/924
Cat P38

சகூ-வது—அத்தியாயம்.

சங்காரம்.

அசையாதசைவன வாழுயிரெல்லா
நிசமாய்க்கொன்று நிறுத்தல்சங்காரமே.

முன்னிரட்சிக்கப்பட்டசீவராசிகளை யெல்லாங் கன்மத்துக்கீடாகப்புசி
த்துத்தொலைந்தவுடனே பயிரிட்டவன் பயிரழியாமற்காத்துப்பின்பு சந்
தோஷமாயறுக்கிறதுபோலக் கருப்பற்றினநாள்முதல் நிமிஷம்-நாழிகை-நா
ள்-வாரம்-பட்சம்-மாசம்-வருஷம்-ஒன்றுமுதல்நூறளவில் இதுகளையெப்போ
துகொல்லவேண்டுமோஅப்போதுகொன்றும்,பின்புசர்வசங்காரமாகத்தனுகர
ணபுவனபோகமெல்லாமில்லாமற்சங்கரித்துச்சீவராசிகளைப் புரியட்டகத்துட
னேகெடாமல்நிறுத்திப்பின்பு மாறுபுவனங்களிலே அதற்கேற்றதனுவையுஞ்
சுகதுக்க போகங்களையும் புசிப்பித்துப் பின்பு சர்வசங்காரத்திலே தனுவா
தி முதலானதெல்லாமாற்றிச் சீவராசிகளை மாயையிலே யாதனுசரீரத்துட
னே யடக்குவனென்றறிக. அஃதெப்படி என்னில்,

திருவெண்பா.

ஈகூஉ.ஆனவுடம்பனைத்து மைம்பூதத்தேயழியும்
வானதிபூதமிறு மாயையினி-லனை

வெள்ளிக்கமாமாயையிருளுள்ளொளியாயும்ப
ரிழுந்தஞானத்தாலிறும்.

ஈங்கு: எச்சராசரமுமிற்றுவிடுமித்தனையிலே யெத்தாதலமுமப்
பிலிறுமப்பனலிலழியு, மீச்சமாகும்வளியிற்கனலுமிற்றுவிடு
ம்வின் மீதுட்டாம்வளிமாபையினில்வான்மீறுமா; லச்சமாயை
யெனுமாரிருளுமாசிலறிவா மரியசிவனிலழிந்திடுமகண்டபர
மாய்ச், செச்சவேதிகழ்பரம்பிரமமாயறுடவன் றீர்விலாநிலை
பரம்பிரமமென்றுதெளிவாய்:

இப்படி நிமிஷ சங்காரமுதற் சர்வசங்காரபரியந்தமுஞ் சங்காரம்பண்
ணுவானென்றறிக. சிவன்வந்துகொல்லுகிறுமேனவென்னில், சிவன்அவரவ
ர்கன்மத்துக்கீடாகப் புசிப்புத்தொலைந்தவுடனே அவனவளது முன்னிலை
யாகப் பிரேரித்துக் கொல்லுவதும், விதியதுவாகின் மதியதுவா மென்கை
யாலும், தன்தனக்கே சீவன்போவதுஞ் சிவனையறியாதே சீவன்போகாதெ
ன்கையாலு; மெந்தவிதங்களிலே யுடல்போனாலும், யமதூதரழைத்துப் போ
வாவென்கையாலுஞ் சிவனேகொன்றானென்றறிக.

ஈஈ. உருவமாமெனையுமாநுமுலகங்களதிலே யுலகமண்டமதின்
மாநுமுறுமண்டமெனையும், வெருவமாநுமிருபூதமதின்மே
லியமிகானதனின் மாநுமனைவமாநிலமகமாநுமதுதான்; மரு
விலாவிருளதாகுமுதலாமுடவிலே மாநுமாளவதன்மேலுய
ருஞ்சொதியொளியாற், றிரியமாளும்வகையேயெழுமவ்வாற
ழியுமிச்செயலு நாயகன்விளைதமலதேதுமிலையால்.

ஈஉ. வானின்மேகமதெழுந்தழியுமாறுநிலை நீர்வந்துபுற்பிதமெழு
ந்தழியுமாறுமனல்சேர், மேனிலாவுபொறிவந்தழியு மாறுமெ
னவேமிகுமுலோகமுயிர்காலம்வினைமேவியவெலா, மூனிலா
தொழிவிலாதழிவிலாதசொரூபணெளியிலாயழியு முன்னைம
யிதுவென்னமன்றியோ; டானவாகமபுராணமனுவாதியயன்மா
லானுமேதமறமேயறையுமாறதறிவாய்.

இப்படிச்சங்காரமென்றறிக.

நி-வது—அத்தியாயம்.

திரோபவம்.

திரோபவமுற்பிற்-செயலது மறத்தல்.

இந்த இகலோகங்களிலேசெய்த புண்ணியபாவவிவகார முதலானதெல்லாம் பரலோகங்களிலேதெரியாமலும், பரலோகத்தில்நரகசொற்கமுதலானவிவகாரமும்இகலோகங்களிற்பிறந்தபோதுதெரியாமலுஞ், சங்காரகாலத்தின்தன்மை திரும்பச்சிருஷ்டிக்கிற காலத்திலே தெரியாமலுஞ், சிருஷ்டிக்கிறகாலவியாபாரஞ் சங்காரகாலத்திற்றெரியாமலும்,இதல்லாமல் அவத்தைகளிலுங் கருப்பற்றினநாள்முதல் மரணந்தமும், அசதிமறதிகளும் வயோவஸ்தைகளிலுஞ் சாக்கிரத்திலும் இதுகள்முதலாக எங்கேமறப்புவந்தாலுந் திரோபவமென்றறிக.

நெ-வது—அத்தியாயம்.

அநுக்கிரகம்.

இறந்தவிடத்தி லெல்லாவுயிரை

யறந்தான்முன்போலாக்குதலறியே.

சர்வசங்காரத்திலே யெல்லாமிறந்துபோயும் மாயையில் அடங்கித்தமதாண வத்தால் மூடப்பட்டிருந்த சீவராசிகளைச் சத்தி மாயையோடே கூட்டித் தனுகரணபுவன போகங்களைமுன்போலே பலகாலுஞ் சிருஷ்டி திதி சங்காரந் திரோபாவமெல்லாம் நடக்கப் பிரமாதிகளுபேரையுமுண்டாக்கி உண்மையை அநுக்கிரகித்து எப்போதும்போல ஐந்து தொழிலும் நடப்பிக்கிறது அநுக்கிரகமென்றறிக. ஆலிந்த ஐந்து தொழிலும் ஐந்து பேரையுங் கொண்டு பிரமம் நடத்துமென்றுசொன்னால் சிருட்டிபலவிதஞ் சொல்வதெப்படி, அதுபிரமமே ஒருபடம்போலேயிருந்து அதிலேயெல்லாச் சித்திரமுமெழுத ஆதாரவாகையாலே யதுவேபிரமசிருஷ்டி. அதிலேசித்திரமெழுதல் போல் சத்திகளாலே மாயையாலுண்டாவது சத்திசிருஷ்டி. இந்தச்சித்திரமறைந்துபோனாற் றிரும்பவுமந்தப்படியே மினுக்கிறதுபோலச் செய்கிறது மூர்த்தி சிருஷ்டி. இந்தமினுக்கினசித்திரம் நடுவே அவயவங்கள் விகாதங்களானாலந்தப்படியே அவயவங்களைத்திருத்தி முன்போலவைப்பது நவப்பிரசாபதி சிருஷ்டி. இப்படியெண்ணிறந்த அபேதவாதிகள் சிருட்டிகளும் பேதவாதிகள் சிருட்டிகளுஞ் சித்துத்தானே பஞ்சமூர்த்திகள்

பேராலே விளங்கச்செய்கிறதென்றறிக. இதல்லாமலும் பின்னுஞ்சொல்வா ருமூளர். அதெப்படி, சிவபேதங்களை இரட்சிக்கவேண்டித்தனுகரணபுவன போகங்களைக் கொடுப்பது சிருட்டி. கொடுத்தபடியே சிலநாள் நிறுத்தல் திதி. நிறுத்தினதையழிப்பது சங்காரம். பக்குவம்வருமளவுஞ் சிவனுடைமை யென்று தெரியாமல் மறைப்பதுதிரோபவம். பின்பு குருவாய்வந்துசென னமு மரணமு மலாதியுநீக்கி மோட்சத்திலே சேர்ப்பதநுக்கிரகம். பின்னு மொருவிதம், தத்துவநூலைக் கொடுப்பதுசிருட்டி. அந்தப்படி அர்த்தங்க ளைமனதில் நிறுத்துவது திதி. இதுகளைநேதிகளைந்து நீயல்லவென்பதுசங் காரம். எல்லாமிறந்தவிடத்தில் தன்னைத் தோணுதது திரோபவம். தன்னை த்தோணக் குருக்காட்டுவது அநுக்கிரகம். இப்படியின்னமு முண்டென்ற றிக. பஞ்சகிருத்தியங்கள்வெகுவிதஞ் சொல்வது, உகாந்தபேதங்களாலும் யு கபேதங்களாலுமென்றறிக. சிருஷ்டிபேதங்களாயெத்தனை சொன்னலுஞ் சித்தேபிரதானமாகையாற் சிருஷ்டியும்பேதமில்லையென்றறிக.

நூஉ-வது— அத்தியாயம்.

பிண்டாகிருதம்.

பிண்டாகிருதியாய்ப்பேருடற்புசிப்பா

லுண்டாய்வளர்வதுள் பிண்டாகிருதமே.

பிருதிவியண்டம் ஆயிரத்தெட்டு கோடி இதிலொரு அண்டத்தில் மத்தி யலோகம் பூமிவிஸ்தாரம் நூறுகோடியோசனையில் சம்புத்தீவு லட்சம்யோ சனை இது ஒன்பதுகண்டமாம். இந்த ஒன்பதில் பரதகண்டம் ஒன்பதிலொ ன்றும் எட்டுப்பங்காம். இந்த எட்டில்குமரிகண்டமாயிரம் யோசனையில் சி லபூமி சமுத்திரம்பருவத ங்கொண்டுபோக மீந்தயோசனையிற் செந்நெல்மு தலாகப் பதினேழுவகைத் தானியம் விளையும் இதுகள் தண்டுலமும் பிண் டிபேதமுமாம். இதல்லாம லிந்த அண்டத்திலும் தீவுகளிலும் இருக்கிறபோர் க்கெல்லாம் புசிப்பும் ஆயுளும் வெவ்வேறென்றறிக. இனிமுன்சொன்ன த ண்டுலம் பிண்டிபேதமான புசிப்புகளை நரதனுக்கள்புசிக்கும். புசிக்கும்போ து தண்டுலம் பிண்டியை அக்கினியிலுலும் நீரிலுலும் பாகப்படுத்திஓதனு திகளா யருந்தப்பட்டு அருந்தினது அமரவாசையமாகிற பையில்விழுந்துபி ன்பு பானத்தோடேகூடிப் பக்குவாசையப் பையில்விழுந்து இதைப் பிரா ணவாயு விண்டுகூருக்கி யொருகூறு கிட்டமாகிறதிப்பியு மொருகூறு சா ரமாகிற ரசமுமாக்கும். இந்தவிரண்டில் ரசமானது தாதுக்களாயும்திப்பியா னதுமலமுமாம். அதெப்படிநாள்தோறு மருந்தின அன்னபானமுதல் ஆறு

ருசிகளுந் தேகத்தில் மூன்று நாளி லிரதமாம். இதின் திப்பி மலப்பை யில் மலமுஞ் சலப்பையிற் சலமுமாய் நாள்தோறுங் கழியும் பிந்த இரத ம் மூன்றுநாளிலுதிரமாம் இதின் திப்பி தோலும்உரோமமுமாம். இந்த உதிர ம் மூன்றுநாளில்மாங்கிசமாம். இதின்திப்பி சேத்துமமாம். இந்தமாங்கிசம்மூ ன்றுநாளில் மேதையாம். இதின்திப்பி பித்தமாம். இந்தமேதை மூன்றுநாளி லெலும்பாம். இதின்திப்பி நகங்களாம். இந்தஎலும்பு மூன்றுநாளில்மச்சை யாம் மிதின்திப்பி குறும்பிபீனையாம். இந்தமச்சை மூன்றுநாளிற் சுக்கிலமா ம். இதின்மலம் முகத்திற் பருவுநெய்ப்புமாம். இந்தச்சுக்கிலம் மூன்றுநாளிற் றேகத்தின்பெலமாம். இதின் திப்பி நிரந்தரம் நீங்குகிறநாலங்குலவாய்வுமா ம். இந்தப்பலம் மூன்றுநாளிற் பிராகாசமா யேழுதாதுக்களுக்கு முள்ளா யோங்கிப் பின்பு நீங்கிப் பரத்தோடேசூடிப் பரமேயாகும். இந்தப்பெலங் கூடத் தாதுளட்டுக்குந் திப்பியாகிறமலம் பதிஞ்சுமிருக்கிறதானங்கள் கண் ணிற் பீனை காதிற்குறும்பிமூக்கிற்சேத்துமம் நாக்கில்வழும்புபல்லிலூத்தை யிடற்றிற்கோழை நகத்திலழுக்கு தேகத்தில்வெயர்வை குதத்தில்நாற்றம் கு ய்யத்தில்வெடிப்புவீணைதண்டுப்பூவில்வழும்புகவ்டங்களில்மயிரிற்பற்றியநா ற்றம் உடம்புவெடிப்புநாற்றம் குதத்தில் அபானவாய்வுநாற்றங் இப்படிப்ப திஞ்சு தானங்களிலு மலங்களிருந்து அவலமாய்நாறும். இதல்லாமற்பின் னுமொருபாடம்.

ஈகூ. ஒழியாமலுடோறுமுன்னுமன்ன மொருகூறுமலமாகியுத ரமொன்றிக், கழியாமனின்றமலமிரன்டேதென்னிற் காயமு ம்புத்தியுமென்றேகழறும்வேதம், பழியாமல்மேலணிந்ததோ ல்போமாகிற் பழைபமலத்திற்கடையாய்ப்பார்க்கலாகா, விழி வாளுங்காணவேகாகநாய்தீ வெம்பருந்துவந்தருந்த விளியு ங்காணே.

இதின்அர்த்தம் புசிப்பு மூன்றுவிதமாம் இதில் தூலமானது திப்பியா ய் மலமூத்திரமாய்க் கழிந்துபோம் சூட்சுமமான ரசமானது சத்ததாதுக் களாய்த் தூலதேகமாம். இனி அதிசூட்சுமமானது பத்திந்திரியங்களுக்குப் பெலனுய் நிற்குமென்றறிக. ஆகையாலே யிப்படித்தேகம் பரிணமித்த பிண் டிகிருதமென்றறிக. இப்படிப் பிண்டிகிருதமான தேகங் கெற்பத்தி லுற்ப த்தியாங்கிரம மெப்படியென்னில்.

நூ-வது—அத்தியாயம்.

பிண்டோற்பத்தி.

கருவினிம்பற்றுங் காளையர்தங்க
ளருவந்தரிக்குமுன்னமையுரைப்பது.

ரஉன. மைந்தகேன்கெற்பத்தின் வழியினேப்பராபரத்தில்
வந்ததாமதன்றன்சத்தி மற்றதிற்பரமுண்டாக
முந்தியபரமன்றன்னின் முற்பனைதோன்றவற்றிற்
றொந்தமாமிச்சாஞானக் கிரியைகடோன்றலாலே.

ரஉ-அ. மன்னுயிரொருமூன்றுகவருதரு கேவலத்திற்
றுன்னியவுயிரைமாயை தோன்றியேயெழுப்பத்தாஞய்ப்
பின்னமாமிச்சாஞானக் கிரியைமாயையினற்பெற்றிட்
டுன்னுமாயையினலாறைந் தானதத்துவங்கடோன்ற.

ரஉ-கூ. ஐயைந்தாமாத்மதத்துவ மாறதாம்வித்தியாதத்துவஞ்
செய்கின்றசிவதத்துவங்கள் சேர்ந்தவாவாறிரேடும்
பொய்யொன்றுதொன்னனூற்றுறு மாத்மதத்துவங்கள்முற்ற
மெய்யொன்றுமாதத்தில்வித்து வித்தின்மெய்மரமாம்போல.

ரஉய. தொன்றுதொட்டுடலினலே யுடலெலாந்தோன்றுமெங்ஙன்
றொன்றுமோதனத்தானன்டன்ன லுறுமலமலமுடம்பா
மன்றியேமலமாடோறு மழிந்திடுமென்னவிகார
மொன்றியேகாமமாதி விகாரமெட்டுடனேயூட்டும்.

ரஉக. காயமாங்கூறுமூன்று நாட்கருதிரதமாகி
யாயபின்மூன்றுநாளி லஃதிரத்தமதேயாகி
யேயதுமூன்றுநாளி லெய்துமாங்கிசமேயாகி
யாயபின்மூன்றுசென்றல் மேதையின்மூன்றுமத்தி.

ரஉஉ. அன்னதிரண்டுமூன்றமற்று லாவதாமச்சையன்றிப்
பின்னிருமூன்னுட்சென்றுற் பெயர்ந்துசுக்கிலமதாகுந்
தன்னதுபுல்லிற்றங்குந் தகுபனிப்பிரமானத்தா
முன்னியவிந்துபேத மீரொட்டாமொழியுங்காலே.

இப்படி அழுர்தகலை பதிலுறுபேதமுடைத்தாயிருக்கும் இது பெண்க ளுடனே கூடும் போதுண்டாகும் இலட்சனம். இதற்குதாரணம்.

ாசுக. ஆங்கதிலதிசுகத்தோ டம்பமேயுபையத்தாக
வொங்கியவின்பழூன்று லுற்றமென்னுட.னைபின்னை
தாங்கியவலியாம்விந்து தாணைருழூன்றுண்டாகு
மாங்கதிலீரெட்டான வதின்வகையடங்குமன்றே.

ாசுச. ஆதலாணரிபோனி யதனிலாகாடிழூன்று
மேதகுபுருடலிங்கத் திரண்டதாமிக்காகாடி
போதுழூத்திரமேசோணி விந்துவாம்புறமேகாப்ப
ணைதகவுள்ளாரிக் கிரண்டதாமாடவர்க்கே.

ாசுரு. கறைபடுமுதனென்னூன்றுட் காரிகையுதரந்தன்னி
லுறைமலஞ்சலமேசித மருந்துகொண்டுமாற்றி
ாாந்தியாலே கன்மங்களிலே கூடியிருப்பது. இனி (முத்தியாவது)சமுத்திரத் திலேதரங்கமடங்கும்போதுந் தரங்கமுண்டாகிறபோதுஞ் சமுத்திரமொன் றே நின்ரூற்போலப் பிரமந் தானொருவனுய் நின்ரூலுந் தன்சுயலீலையாலே தன்னிடத்திலுண்டான அனேகவிவகாரவஸ்துக்களுடனே நானுவாய்விளே தியாய்நின்று வெகுவானவஸ்துக்களெல்லாமனித்தியமும்அசத்தியமுமாய் எ ல்லாந் தன்னிலே யடக்கித் தானே தற்போதமுமா யெல்லா மடங்குகிறத ற்கும் ஒடுங்குகிறதற்கும்பிரமமேயல்லாமல் வேரொன்றில்லை இப்பிரமத்தை விடச் சனனமரணமில்லையாமென்றறிக.

ச-வது—அத்தியாயம்.

பிரதிவிம்பவாதி.

செலசூரியன்போலத்தேகங்கடோறும்
பெலமாஞ்சீவன் பிரதிவிம்பமென்னே.

இதில் (சொரூபலட்சணம்) பிரமமொன்றுமேநின்றது. இனி (தடத்தல கூணம்) சுத்திகாரசித்தம்போல் பிரமத்திலேமாயையுண்டாய் மாயையாலேப ஞ்சபூதமுதலான செகத்துண்டாக இதிற்சூரியன் கடோபாதிப் பரிச்சின்ன கங்ளாலே யனேகமாய்த் தோன்றுமிடத்தில்அந்தக்கடசலத்தில்வந்த உபா தியாலே பிரதிவில்பித்தசூரிய னுபாதிப்பட்டதுபோலக் காணப்படும். இதுமு தற்சூரியனுக்கில்லாததுபோலும் அந்தச்சூரியனல்லாமலந்தப் பிரதிவிம்பம் ம ற்ரொன்றல்லாததுபோலும் பிரமமுந்தேகோபாதிப்பரிச்சின்னங்களாலே ய னேகசீவராசிகளாய்ப் பிரதிவிம்பித்து அந்தந்ததேகோபாதிகளில்வந்த சுகது க்கங்களை யந்தந்த சீவராசிகளுக்கேயாக்கித்தனக்கில்லாமல்நின்ற நிலையென் றறிக. இனி (பெத்தநிலையாவது)மாயைமுதலானசெகத்திற் பிரதிவிம்பமான வாத்மாக்கள் தேகோபாதிகளாலே பெந்தப்பட்டுச் சனனமரணப்படுவ தென்றறிக. (முத்திநிலையாவது) கடமுடைந்தாற்கடசூரியவிம்பம் முதற்சூ ரியனில்கலந்தாற்போல்தேகோபாதிகள்நீங்கிக் குருகடாக்ஷத்தாலே யாத்ம சொரூபம்விளங்கி நிட்டைசாதித்துக்கூடுகிறபோதுஞ் செகமெல்லாம் நிமிஷ த்திலே சர்வசங்காரமாம்போதும் பிரமமொன்றுமே மிகுந்திருந்து அப்பிரம த்தோடெல்லாமயிக்கியமாவதே மோட்சமென்றறிக.

ஞ-வது—அத்தியாயம்.

மாயாவாதிமதம்.

மாயைமித்தையெனவாதித்து
வாய்பொருளொன்றெனன் மாபாவாதமே.

(சொரூபலட்சணம்)நிட்களநிஜானந்த நின்மலநிசப்பிரகாசநிராமய நிஸ்

தரங்கமாய் வெளுப்திமாத்திரமானபிரமமே நீயாகிறவனென்றறிக. இனி (தட
த்தலட்சணம்).

ஙரு. சாற்றியபிரமமென்னு மவிகாரிசந்நிதிக்கே
யேற்றியமாயைதானிவ் வுலகுயிரனேத்துமாகித்
தோற்றருமனந்தபேத மாய்ச்சுழன்றழியுந்தானே
யாற்றரும்பெற்றமுத்தி பேறிழவையுமித்தை.

ஙசு. ஆதலாலிகழுமித்தை பரமதுதானுமித்தை
யேதமதறவுமற்றை யகமெனுமதுவுமித்தை
யோதியமயல்போய்ப்போத முதித்ததென்பதுவுமித்தை
சாதமேபிரமமுத்தன் ரூனவிகாரியென்றும்.

ஙஎ. சாற்றியவதுநீயென்று தான்மறைகுரவர்கூற
வேற்றியவதுவோநானென் றிசைத்தன்மாத்திரமேஞானம்
போற்றியவதுவுமோரிற் பொய்யதாமாயையின்மே
யாற்றவங்கறிதன்மாயா வாதமத்துவிதமையா.

ஙஅ. சுத்தவத்துவிதம்கங்க டகளறத்துணியாவாகா
மெய்த்தகுபிரமந்தாங்கள் டனுபவித்திடல்வீடென்ப
சத்தகுபிரமங்காணி லழிவுறுமறியாரேது
மித்தையென்றிச்சைசெய்தே விளையாடித்திரிவரையோ.

மறுப்பு.

ஙகூ. அவிகாரம்பிரமமாயை விகாரமாமெனவுமென்ரு
பவிகாரவிகாரங்கண்டங் கறிந்துசாற்றிடலேதையா
வவிகாரமென்னிற்ரூன்போய் விகாரியாமாயைபேலுன்
னவிகாரந்தானும்பொய்யாய் மாயையாயழியுமென்மே.

என்றது,பிரம்ம விகாரமென்றும் எல்லாம் பிராந்தியல்லா தொன்று மில்லை. மாயைதானேயெல்லாமாயிருக்குமென்றுங் காந்தத்தின்முன்னேஇரு ம்பு திரிந்தாற்போல் சைதன்னிய சந்நிதிக்கே புத்திநடக்குமென்றும், ப மூதையிற் பாம்புருப்போலும் நீரின்சலனத்தைச் சந்திரன்சலிக்கின்ரூனெ ன்றும், நானேபிரமம் ஞாலம் பேய்த்தேரொன்றும், அனிர்வசனமாகிறமாயை யிலே உலகமுண்டானதென்றும், இதுவில்லையாகிலுலகமுதியாதென்று மிய ல்பாகி லழியாதென்றுங், கிளிஞ்சில் வெள்ளிப்பிரமை போலப் பிராந்தியாகி றமாயையினுலே செகத்துண்டானதென்றும், ஆகாசத்திலே மேகசஞ்சாரந் தோன்றி யொன்றுமில்லாததுபோலுஞ் சிலந்தி நூல்களையுண்டாக்கி யில்லா மல் விழுங்குவதுபோலும், பிரமத்தின் சந்நிதியில்மாயை செகத்தையுண்டா க்கும். அஃதெப்படி யுண்டாக்குமென்னில், பிரமத்தில் வாலு யிதிலொன்றி

லொன்று யைந்துபூதமுமாகி யிதில்தானியமுண்டா யிதிலின்னமா யிதிலாறு தாதுவாயிவ்வாறுமொன்றி லொன்றுகூடிப்பஞ்சகோசமா யிந்தக்கோசவுரு விற் பிரமம் பிரதிவிம்பிக்கும் சூரியகிரணத்தாலே பலபாண்டத்தில் விம்ப சூரியன்பற்றில்லாததுபோலுந் தோன்றித்தோன்றினதெல்லா மித்தையாய்ப் போம். பிரமமேநித்தியம்இப்படிப்பிரமசன்னதியில் மாயாப்பிரவர்த்தந் தோன்றி மித்தையாகுமென்றறிக. இது (தடத்தலட்சனம்) இனிப் பெத்தமாவது சீவராசிகள் முன்சொன்ன பஞ்சகோசவுருக்களிலே கடோபாதி பேதங்களால் சூரியன் நாலுவானதுபோலும், நாலுவிரத்திநங் கோத்த சரடு நாலு வர்ணங்கள் போலும், சீவராசிகளானவிடத்தில்அந்தக் கடத்தில்வந்த வுபாதி கடசூரியனுக்கல்லாமல் முதற் சூரியனுக்கில்லாததுபோலு கடசலமுடைந்தால் முதற்சூரியனேடைசூடுமென்றும் இப்படி தான்பெத்தமென்றறிக. இனி (முத்திநிலையாவது) தந்துவங்கள் முதலானதெல்லாம் மித்தையாகாரியமென்றும் இம்மிரண்டும் விசாரித்து மித்தையென்றறியில் ஞானம்பிறக்கும். அம்மெப்படி யென்னில் சந்தி காயத்திரி அநுஷ்டானமுதலான சற்கர்மங்கள் செய்து சுசிற்பூதஞ்சில்அந்தக்கரணசுத்தியாம் இச்சுத்தியால்ஞானமுண்டாம் இஞ்ஞானம் பிரமத்தை நானென்றறிவிக்கும் இது தானேதானாய் தன்னிற் றன்னையேயனுபவித்து மாயாகாரியபூதங்கள் மித்தையாகத்தான் பிரகாசித்து நானேயுள்ளதென்று தெளிவது அத்துவிதஞானமென்றறிக. இதற்குத் தத்துவமசியை யுணர்ந்தா லதுவே நீயேன்றும் நீயேயதுவென்றும் இந்தப்படி வராவிட்டாற் சன்னியாசியாய் பஞ்ச சாதனமும் பெற்று அஷ்டாங்க யோகங்களைச்செய்து சமாதி நிலைவந்து எல்லாமித்தையாய்நின்று தானேதானென்றறிவது மோட்சமென்றறிக.

உய. பேதமோடபேதபேதா பேதமேபிறழுமூன்றி
லோதியமாபாவாதத் துன்னமனையுரைக்குங்காலே
பேதமாய்ப்பிரமமென்னப் பேதமாம்பேதாபேதத்
தோதலாம்பிரமமென்ன மூவகையுள்ளதாமன்றே.

என்றது, பிரமம் பேதம் அபேதம் பேதாபேதமாயிருக்குமென்றறிக. பின்னுமொருவிதசிருஷ்டி சோதியே விளைவா யிருக்கின்ற தூய்தான வெளியிலே யவிஞ்சையாகிற மானய யங்குரித்து இதிலே ஜம்பூதமாய்ப் பிணைத்து உலகுண்டானதென்றறிக. இம்மது வியாசர்கற்பிதம்.

சூ-வது—அத்தியாயம்.

வைதிகவேதாந்தம்.

வேதப்பொருளின் விரிவைத்தள்ளிச்
சோதியறிவேசொல்லில்வேதாந்தமே.

சுத்தவைதிகவேதாந்தமாவது, வேதங்களைச்சிரசிலேதரித்துக்கொண்டு

தானுமறியாம லிருக்கிற உபநிஷத்ப் பிரமாணமான விவேகசிந்துவாகிற சா
த்திரத்திற் றிருதியப்பிரகரணந் தத்துவசிருட்டி சொல்வது. இனி (சொரூப
மாவது) சத்திசக்காரத்துக்குப்பின்னெஞ்திமாத்திரமான அறிவே ஞாதுருஞா
ன நேயமாம் இவைகளடங்குவதற்குத் தானமாய்நிற்பதுநிட்களநிர்மலநிசா
னந்தபரப்பிரம அறிவென்றறிக. இதைஞானமென்ரு லறிகிறதில்லை. அஞ்
ஞான்மென்ரூல் மறப்பில்லை. அபாவமென்ரூல் சுத்தசைதன்னியம் ஆனந்
தசொரூபம் உள்ளதென்ரூல் வாங்கப்போகாது இல்லையென்ரூல்விடக்கூடா
துநித்திரைசெய்கின்றவனையெழுப்பும் எழுந்தவனை யெச்சரிக்கும் எச்சரித்
தவனைப் போகிக்கச்செய்யும் இப்படிச்செய்தாலுந் தானென்றிலுந்தோயா
ல் ஒருபடிகப்பருவதம்போல் பெரியதிலெல்லாம் பெரியது களங்கமில்லாதது
பிடித்தாற் கடினப்படாமலிருப்பது பிரமசொரூபவிலக்கணமென்றறிக. இஃ
து ஆகாசம் போலேவெளியாய் வியாபியாய் வியாபகவெளியாயிருக்கும். பி
ர்மாதிபஞ்சமூர்த்திகள் தங்கள்வியாபாரஞ்செய்து வோய்வானவேளையி லி
ளைப்பாறுகிறதற்கு நிஜமான்வீடு அங்கேவித்தையவித்தையில்லை அகம்மிய
ஸ்வஸொரூபவேத்தியம் அதுவே நீயாகிறபிரமமென்றறிக. இனி (கடத்தல
ட்சணமாவது) ஆகாசவீதியிலே மேகசஞ்சாரங்காண்பித்தாற்போல் முன்
சொன்னபிரமத்திலே மாயாபடலங்காண்பித்தது இதுகெட்டால் சுயம்புவா
யிருக்கும். இந்தமாயாதேவி ரஜஸிலே பிரமாதிதேவதைகளும் அபரிமிதபாலக
ர்களும்பிறந்தார்கள் இந்தமூலமாயைக்கு மூன்சொன்ன பூரணசைதன்னிய
மே முதலென்றறிக. இந்தமாயை பிரமத்திலேயுள்ளது இதுவிவர்த்தனம் இ
துவேதாந்தசித்தாந்த உபநிஷத்துக்களாலே நிச்சயிக்கப்பட்டது. இதுபிரமா
ணசித்தம். இனிவிவர்த்தனமாயை பிரமத்தைப்போல் தானும்நிர்விகாரமுமா
ய்அன்னியஆபாசமா யிதின்நிசாகாரம் விகற்பியாமலிருக்கும். சூரியப்பிரகா
சத்தாலே கானற்சலமுண்டாவதுபோல் பிரமத்திலேவிவர்த்தங்கள் காண்
பித்தது. இருளிற்பழுதை பாம்புபோலத் தோன்றிற்று. இந்தமாயாப்பிரம
விவர்த்தனம் இங்கேகுணசாம்மியமென்பது சங்கேதம். இந்தவாக்கியஞ்சா
ங்கியன்பிரகிருதி புருஷனென்றுகொண்டான். இது குணத்திரையசம்மதம்.
இது ஈஸ்வரனுன்மணி அவத்தை யிந்த விவர்த்தனமாயையை முன்சொன்ன
பூரணசைதன்னியபிர்மதிருஷ்டியால் இந்தமாயைதானே மகாமாயையாயி
ற்று. இஃதே சுத்தசாத்மீகமான ஸ்வரூபாநுசந்தானமாய் நானேபிரமமெ
ன்ரூயிற்று. இது மித்தியாபாசமாம். இஃதே பிரமவிவர்த்தனம் அஃதெப்
படியந்தமகாமாயைக்குப்பிரமகாந்தியிலுலே ஞானபூர்த்தியங்குரித்த தென்
ரூல், பிரமமெத்தனையுண்டு, அத்தனையும்வியாபித்து இந்தமாயா தேவிதா
னே பிரமமாயிருக்கும். இந்தமாயைபிரமத்தின்முன்னேயில்லாமையேகாண்
பிக்கும். பிரமமில்லாதபோதுதன்னைத்தெரிவித்துக்கொண்டு பிரமாதிதேவ
தைகளைத் தன்னகத்தி லடக்கிக்கொண்டு கடலுகடன சாமர்த்தியத்தோடி
ருக்கும். இது அசம்பாவனைமாயை அனிர்வாச்சியம் ஆகையாலே மித்தியா

ப்பிரசித்தி விபார்த்த ஆபாசமாயிருக்கும். இந்தமகாமாயை பிர்மதிருஷ்டி யாலே ஈஸ்வரனுண்டாஞன். இவனுக்குப்பரமபுருஷனென்றும்பரமாத்மாவெ ன்றும்பெயராம். இவனேச்சாங்கியன்பிரகிருதி புருஷனென்றுகொண்டான் இந்தப்பரமபுருஷனுக்குஇந்தமாயைநிஜசத்தியாயிற்று. இந்தமாயையோடே கூடின பரமபுருஷனேச்சகுணப்பிர்மாயீஸ்வரனுய்ப்பரந்தாமனுய் ஆதிமூலமா ய் வாசுதேவரானதென்று வைணவர்கொள்ளுவர். இந்தப்பரமபுருஷனுக்கு மாயைசூட்டமெப்படியென்னில், எங்கேகடமுண்டாயிற்றே அதற்குமுன் னேயாகாசம்இருப்பதுபோலமாயைக்குமுன்னே சைதன்னியம்வியா பித்திரு க்கும் சூத்திரதாங்கத்துக்குமுன்னேசலம்வியாபித்தாற்போலமாயையங்குரி த்தவிடமெல்லாம் அதிற்குமுன்னேபிரமம்வியாபித்திருக்கும். இந்தமாயையி லேவியாபித்தபிரமமேசகுணம்.இந்தமாயையோடேகூடாததுநிற்குணம்இது விவர்த்தனமூலப்பிரகிருதிக்குப்பின்னமாயிருக்கும்இதற்குச்சாட்சியாய்நின்று பிரகிருதியையவனறிவான்பிரகிருதியவனையறியாதுஅவனிராபாசன் இதுபிர காசரூபம் அவன்சுயம்பிரகாசரூபன் பிரகிருதிவேத்தியம்அவன்வேத்தா அது ஞேயம்அவன்ஞாதாஇந்தப்பிரகிருதிபுருஷசுதிசகவாசமாயிருப்பர்இவர்களு க்கு வர்ணங்களில்லைபிரகிருதிமூர்த்திகள்இவர்கள்சொரூபநிலையைத்தன்நிச ஸ்வரூபானுபவத்திலேயறியவேண்டும்இந்தப்புருஷன்பரமாத்மாசுயஞ்சோதி விஞ்ஞானாத்மாஇதுமுதலானபேரனேகமுண்டுஇந்தப்பரமாத்மாதானேசீவத் துவத்தையடையவேண்டிமகாமாயையேநோக்கிப்பார்த்தபோது பிரதிவிம்பமா கிறமகதத்துவமுண்டாயிற்று. இந்தமகதத்துவத்துக்கு அவ்வியாகிருதமென் றும்பேர் இந்தசீவனுகவேண்டு மென்றவன்ஞானவிக்கிரகம்பரமேஸ்வரன்சர் வாத்மாநிர்விகாரன் அவன்சொரூபமேயல்லாமல் தன்சொரூபத்திலே மறப் பில்லை பிறவிர்த்திநிவிர்த்திசெய்வதில் சமர்த்தன் இவனெருவனேகர்த்தாஇ வனது அஞ்ஞானஅவதாரமான பிரமாதிகளெதற்கென்றுல், இவன் சகுணப் பிரமமாய் மாயையோடேகூடிச் சிருட்டியாதிசெய்வதற்கென்றறிக. இந்த மகாமாயையின் சுத்தப்பிரதிவிம்பமான மகதத்துவத்தோடு முன்சொன்ன பரமபுருஷன்கூடிப் பிரதிவிம்பித்தபோது சீவாத்மாவென்றும்பேராம். இந் தச் சுத்தமாயை மகதத்துவமிரண்டுங்கூடினது கூடத்துவமாகிற தத்துவ கெற்பத்திலேமக்கினமாயிற்று இதுபரமபுருஷன்காரணதேகம்இதைலட்சுத்தி ரஞலேசங்கரிக்கச்செய்யும் அதற்குஅஃதேதவீடுஇந்தச்சீவாத்மாவுக்குத் தத்து வங்கள் கூட்டிப் புசிப்பிக்கவேண்டி முன்சொன்ன பரமபுருஷன்அவ்வியா கிருதத்திலேகூடி அதிஷ்டித்தபோது அங்கேதிரிவிதாங்கார முண்டாயிற்று தாயையின் குணச்சேட்டையாலேசாத்வீக ராசத தாமசாங்காரத்திரையலூ லமாயிற்று. இதில் சாத்வீகத்தில்ஞானசத்தியும் இராசதத்திற் கிரியாசத்தியு ந்தாமசத்திற்றிரவியசத்தியுமாகி மூன்றுமுண்டாயிற்று. இதில்திரவிய சத்தி யைச்சர்வேஸ்வரன்பார்த்தபோது பின்னுமொரு தாமசாங்காரமும் பஞ்சத ன்மாத்திரையும் பஞ்சபூதமு முண்டாயிற்று ஆகையாலே சத்தாதிவிஷய பஞ்சகத்துக்கும் பஞ்சபூதத்துக்குங்காரணகாரியபாவமாயிற்று. பின்பு கிரி

தத்துவநிஷ்டாநுபோகசாரம்.

யாசத்தி சமேதஸுயதிஸுலேஇராசதாங்காரமுண்டாய் இதில் ஞானேந்திரி யம் கன்மேந்திரியம் பிராணபஞ்சகம்ஆ-ஐந்-ம்-உண்டாயிற்று பின்பு ஞா னசத்தியை அதிட்டித்தபோது சாத்வீகாங்காரம் உண்டாய் இதில் அந்த க்கரண சூரியாதி தேவதையுண்டாயிற்று. இத்தமூன்றிலுஞ் சர்வேசன்கூ டஅன்னியகுணதத்துவமுண்டாயிற்று. இதில்சாத்துவிதாங்காரத்தில்தத்துவ ம் தொக்குசாதகமாயிற்று. இனிராசதாங்காரத்திற் சுரோத்திராதிஞானேந்தி ரியம்தோற்ற தீசாத்தியசாதகமாய்ச் சகலவிஷயமும் பகுக்கப்பட்டது இ தைக் கர்த்தா போக்தாவென்பர் இனி தாமதத்தில் தத்துவம்போக்கிய சா தகமாயிற்றுஇனிக்கர்த்தா காரணகாரியம் போக்தாபோகபோக்கியம் இது திரிபுடியம் பின்பு அந்தக்கரணமேபோகம் இந்திரியமேபோகத்துக்குச்சாத னம் பஞ்சபூதவிஷயரூபத்திலே யிருந்து போக்கியமாம் ஓவ்வொருபோக்கி ய சாதகத்துக்குமூன்று கூடவேண்டும் அங்கேசைதன்னியம் நிற்சங்கமா யொவ்வொருபூதத்தில் வியாபித்திருக்கும்பரஸ்பரமாய்ஆகாச அம்ஸம் அந்த க்கரணம்-ஐ-வாய்வம்ஸம் பிராணதிவாயு-ஐ-அக்கினிஅம்ஸம் ஞானேந்திரிய ம்-ஐ-அப்புஅம்ஸம்விஷயம்- ஐ- பிருதிவியம்ஸம் கன்மேந்திரியம்-ஐ-இது ஒன் றிலொன்று கலக்கையால் பஞ்சீகரணமென்றறிக. இதுகளில்ஆகாசத்திலிரு ந்து அந்தக்கரணஞ்சமானவாயுவாதாரமாய் சுரோத்திரத்துவாரத்திலிருந்து வாக்குச்சிதமான சத்தங்கொள்ளும் மனமானதுவாயுவிலிருந்து வியானவா யுவாதாரமாய் தொக்கிந்திரியத்தாலே பாணிசகிதமாய்ப் பரிசங்கொள்ளும் இனிப்புத்தியானது அக்கினியிலிருந்து உதானவாயுவாதாரமாய் சக்ஷுரிந் திரியத்தாலே பாதசகிதமாய் ரூபங்கொள்ளும். இனிச்சித்தமானது அப்புவி லிருந்து அபானவாய்வாதாரமாய் சிங்குவையால்குய்யசகிதமாய் ரசங்கொள் ளும் இனி ஆங்காரமானது பிருதிவியிலிருந்து பிராணவாயுவாதாரமாய் ஆக் கிராணத்தாலே பாயுசகிதமாய் கந்தங் கொள்ளும் இவ்வாறு சத்தாதிவிடய ங்களைக்கொள்வதென்றறிக. இனிப்பஞ்சபூதமும் பஞ்சவிஷயத்திலிருந்து தாமசாங்கார அம்ஸமாய் அவ்வியத்தமாயிற்று. அஃதே பஞ்சமகாபூதம் அஃதே சொரூபத்துக்கும்வந்தது பரஸ்பரகூட்டமாகி இந்தக்கூட்டங்களை யொருவிடத்திலே கூட்டவேண்டுமென்று ஈஸ்வரன் மாயையிலே பிரேரித் தாரென்றறிக. இதெல்லாஞ் சங்கேபமாய்ச்சொல்வது. முன்சொன்னபிர மம் விவர்த்தனமாயையை அதிட்டித்தபோதுமகாமாயையாய் சுத்தமாயை யுண்டாயிற்று. இந்தமாயையிலே பிரமம்திஷ்டித்தபோதுபரமாத்மாவாய்ப் பிரதிவிம்பித்தது இந்த சர்வேசுரன் மகாமாயையைப்பார்த்தபோது மகத த்துவமுண்டாய் மகதத்துவத்தில் அந்த பரமாத்மாபிரதிவிம்பித்த போது சீவனுண்டாயிற்று இப்பவிந்த சீவனுக்காகதத்துவசிருஷ்டி யுண்டானதென் றறிக. சர்வேஸ்வரன் பஞ்சபூதத்திலேபிரவேசித்துஅதிட்டிக்கப்பஞ்சீகிரு தமாயிற்று உண்ணிலேயென்றுபெயராய் முன்சொன்ன-ஐந்து-மாம்இனித் தால பூத அம்ஸ கூட்டங்களாவது பிருதிவிக்கு மயிர்-தோல்- எலும்பு- நர ம்பு-மாம்ஸம்-ஆ-ஐ-கூட மற்றநாலுபூதத்துக்கும்-ஐ-ஆ-ஐந்து-இது புற

நிலையென்றும்பெயராம். இனித்தூலவியற் பஞ்சவிங்சதியாவதுளதிர்வினைத யம்-ம-ஞானேந்திரியங்-கன்மேந்திரியம்- ம- அந்தக் காரணம்-சு-உயிர்-க-ஆ-உமரு-இனித் (தூலபஞ்சவிங்சதியாவது) -சுரோத்திராதி- வாக்காதிதானம்-ம-அவத்தைதானம்-ரு-பிருதிவியின் கூறுமயிராதி-ரு-அப்புவின் கூறுசோரிமுதல்-ரு-ஆ-உமரு-இனி (சூட்சுமபஞ்சவிங்சதியாவது) சத்தாதி-வசனுதி-ம-அக்கினி சம்பந்தம்-ஆகாரம்- நித்திரை-பயம்-மைதுனம்-மறப்பு-ஆ-ரு-வாயுவின்கூருனை-ஓடவிருத்தல்-கிடத்தல்-நடத்தல்-வலித்தல்-ஆ-ரு- ஆகாயத்தின் கூருனை-காமக்குரோத-லோப-மோக-மதம்-ஆ-ரு-ஆ- உமரு-இனிப் (பொறியிற்பஞ்சவிங்சதியாவது) ஞானேந்திரியங்-கன்மேந்திரியம்-ம- வாயு-ம-கரணம்-சு-உயிர்-க-ஆ-உமரு-இனி (மறையில்பஞ்சவிங்சதியாவது) பூதம்-ரு- ஞானேந்திரியம்-ரு-விஷயம்-ம-கரணம்-சு-உயிர்-க-ஆ-உமரு-இனி (பூதவியற்பஞ்சவிங்சதியாவது) சுரோத்திராதி-ரு-வாக்காதி-ரு- விஷயம்-ம - அந்தக்கரணம்-சு-பகுதி-க-ஆ-உமரு-இப்படி யேழுவிதப் பஞ்சவிங்சதி யென்றறிக.

இனிச் சதுர்த்தோபிரகரணம் ஈஸ்வரதனுத்திரையம் அஃதாவது மகாதேவன் தன்னிச்சையாலே பஞ்சமகாபூதத்தை யிருபதுபங்காக்கி நிசாம்ஸமேநிறுத்தி மீந்ததைதக்கூட்டிஞர் அதிலே ஒருபாகத்தை யிருபத்தைந்து பாகமாக்கி இந்த -உரு-ம- ஈஸ்வராம்ஸமாம் பத்து திக்குஞ் சுரோத்திரம் வாய்வு தொக்கு சட்சுசூரியன் சிங்குவை வருணன் ஆக்கிராணம் அஸ்வனிதேவதைதகள் இதிவிரணியகெற்பனிந்திரியம்-வாக்குவன்னி-பாணிசுரபதி - பாதமுபேந்திரன்-குய்யம்-பிரசாபதி- குதம்-நிருதி - இது கன்மேந்திரியமாம் இது பிண்மாண்டத்தில் வர்த்திக்கதுபிண்டத்திலுஞ் சரியாம் இனி அந்தக்கரணம் விஷ்ணு-மனது-சந்திரன்-புத்தி கமலாசனன்-சித்தம்நாராயணன்- அகங்காரம் உருத்திரன் விஷயம்பத்தும் அண்டத்திலிருக்கையா லதுவே விஷயம் இந்த அண்டத்தில்-உமரு-குணதேவதையு மீஸ்வரலிங்கதேகமாம் இந்தசூக்ஷுமபூதமே யீஸ்வரன் லிங்கதேகமென்றுசுருதி ஸ்மிருதி பிரசித்தம். இந்தஅண்டத்தில்-உமரு-தேவதையும் பிண்டத்திலே சீவாசிகளுக் கிருக்கின்றதத்துவம்-உமரு-ம்-அதிதேவதைதகளாம் இனி யீஸ்வரன் தூலதேகமாவது பஞ்சீகிருதபூதமாயிற்று அதெப்படியென்றால் ஈஸ்வரன் பஞ்சபூதத்தையும் ஒவ்வொன்றுபாத்து ஆகாயத்திலேகரணம்-ரு-முண்டாக்கி மற்ற அம்ஸம்பாதி அந்தக்கரணத்தை நிறுத்தும் மற்றநாலையு நாலுபூதத்திற்கலப்பித்து வாயுவை-ரு-ஆக்கி யிதிற்பாதிநிறுத்தி மற்றநாலும் நாலுபூதத்திற் கலப்பித்து மற்ற மூன்றுபூதத்துக்குமற்ற அம்ஸம் பாதிநிறுத்திமற்றநன்னான்கு பங்கையும்நாலுபூதத்திற் கலப்பித்து ஆகாயங்கரணம்-ரு-வாயுவசனுதி-ரு-அக்கினி சுரோத்திராதி-ரு-அப்புசத்தாதி- ரு-பிருதிவி வாக்காதி-ரு-ஆ--உமரு-ம- தூலபஞ்சீகிருதபூதத்துவமாயிற்று.இந்தப் பூதங்கள்ஒவ்வொன்றுக்கு மூன்று மூன்றுகக் குணதர்மகர்மங்களுண்டென்றறிக. அதெப்படியென்றால்ஆகாயத்துக்குநிர்மலமே தர்மம்-அவகாசமே-கர்மஞ்சத்தமேகுணம்- வாயுவுக்குக்குணம்சத்தம்-பரிசம்-உ-சாஞ்சல்லியமேதர்மம்உலாத்துகிறதேகர்மம்அக்கினிக்குசத்தாதிகுண

ம்-ஈ-ஊவ்ஙணமேதர்மம்பாகமேகர்மம் அப்புவுக்குச்சத்தாதிகுணம்-சு-ஙெகிழ்ச்சியே-தர்மம்- பதஞ்செய்வதேதகர்மம்-பிரிருஇக்குகுணம்-ரு- கடினமேதர்மம்தாரணுதிகமேகர்மம்சத்தாதிகுணம்-ரு- இப்படியென்றறிக. காரணபூதத்தில்குணங்காரிய ரூபமாய்ப்பிரவர்த்திக்கும் ஆகாசமுதலொன்றிலொன்றுபிறக்கையால்ஒவ்வொன்றுக் கொவ்வொருகுணமதிகமாயிற்று. இப்படியுண்டானசத்தசபரிசரூப-ரச-கந்தம்-ரு-ம்-சுரோத்திராதி-ரு-ல்-அறியப்படும்இந்தபஞ்சமகாபூதத்தைச் சருவேஸ்வரன் பஞ்சீகிருதமுண்டாக்கினபிறகுதூலதேகமானஅனந்தமெப்படி நிர்மித்தானென்னில்,தன்னிச்சாமாத்திரத்திலே பஞ்சமகாபூதமும் விசித்திரமாக இரசதன்மாத்திராத்திலே கலந்துகற்பிதஞ்செய்துநிர்மலதேக பாவனையான பிர்மாண்டோற்பத்தியாயிற்று அந்ததேவதாமயவிவிங்கதேகத்துக்குப் பிரமாண்டமேஙிகம்அவயவயுக்தமாய் தூலதேகமாயிற்று சத்தபாதாளமே யுள்ளங்கால்முதலாய்-தராதலம்- இரஸாதலம்- மகாதலம்-பாதாளம்-சுதலம்-விதலம்-அதலம்-பூலோகம்-புவலோகம்-சுரலோகம்- மகாலோகம்- சனலோகம்- தவலோகம்- சத்தியலோகம் - இந்தப்பதிறுலுலோகமும் விராட்புருஷனுக்கு அவயவங்களாம் இந்தப்பதிறுலு லோகத்திலுள்ளதெல்லாம் அவன்வயிற்றுக்குள்ளே யிருக்கிறது இதெல்லாங்கூடினதுபிர்மாண்டத்திரிபுவன்மர்ம் இது பிருதிவியாவரணம் இப்படி ஐந்துபூதமும் மொன்றுக்கொன்று பதின்மடங்காவரணமாயிருக்கும் பின்பு மகதகங்காரம்மகதத்துவம் இப்படி ஏழாவரணமும் பரனுக்குச் சத்ததாதுவாம் இப்படி அனந்தகோடிபிர்மாண்டமும் மாயாதேவிகெற்பத்திலே யிருக்கும் இந்தபிரமாண்டங்களீஸ்வரனுக்குத் தூலசரீரம் இந்த தத்துவசிருட்டி சாக்கிரம் இதற்குப்பிர்மாதுபிமானி சிருஷ்டிகர்த்தாவிது பிரதமசரணம் அகாரபீசாகூர முதலிய சகலமுங்கெற்பீகரித்திருக்கும் இனி (இரணியகெற்பலிங்கதேகமாவது) இதற்குத் திதி விஷ்ணுகற்தா அவஸ்தை சொற்பனம் உகாரபீசம் சகலமுங்கெற்பீகரிக்கும் இது இரண்டாமாத்திரிகை இனி (ஈஸ்வரன்காரணதேகமாவது) பிரகிருதிமகாப்பிரளையமான சுழுத்தி இது மூன்றுங் கெளரிபதிக்குங்கயிலாசபதிக்குந் தனுத்திராயமாயும் இதற்கு ஆதாரபூதமாயுமிருக்கும் மகாரபீஜம் இது பிரணவத்தில் மூன்றுமாத்திரிகையாம் இதுசகலமும் ஓங்காரவிஸ்தாரணமாயிருக்கு மென்றறிக. இனி விராட்டு இரணியகெற்பன் மாயாவிது மூன்று மீஸ்வரன் தனுத்திராயமாம் உற்பத்தி திதி லயம் இது அவத்தாத்திராயமாம் பிரம- விஷ்ணு - ருத்திரன் - அபிமானிகளாம் அகாரம் மூன்றுமாத்திரிகை குணமூன்று இம்மதெல்லாமாயாவிஸ்தாரம் இனிகாரணவுபாதிக்குச்சர்வேஸ்வரனே சகலமாய்வர்த்திக்கும் இது கேவலப்பிரமத்திலில் லை யிதுகாரணவுபாதியின் பிரிவென்றறிக. இனிச்சகலதத்துவார்த்தமும் முன்னே சொல்லுகிறோம்இது ஈஸ்வரன்தனுத்திரய முடிந்த தென்றறிக. இதைநாலாம்பிரகாணத்தில்சொன்ன தென்றறிக.

(பெத்தநிலையாவது) முன்சொன்னபரமாத்மாவே பிரதிவிம்பித்த சீவாத்மாவுக்குக்காமகர்மஅவித்தை மூடப்பட்டு அஞ்ஞானத்தாலே தன்சொரூபத்தை மறந்து சுகதுக்கவியாகூலனுய் சென்னமரணப்பட்டுச்சொற்கநரகங்க

ளிலே திரிந்துதிரும்பவும் பிறந்திறந்துதிரிவான் இவனைத்திரோபவசத்தியால் மறைப்பித்து ஞானசத்தியாலேதிருப்புகிறது ஈஸ்வரனும் எப்படியென்றால் வெள்ளத்திலகப்பட்டவனை நீயக்கற்றவன் அவ்வெள்ளத்திற் குதித்துப்பிடித்துவந்து கரையில்விடவேண்டும் நித்திரைசெய்கின்றவனைவிழித்திருக்கின்றவன் எழுப்பவேண்டும் அவித்தையாபந்தம் எப்போதுமித்தையேயிதுசத்தியமாலால் விடுவிக்கக்கூடாது ஈஸ்வரன் ஆதாரசிருஷ்டிவேணுமென்றுநிச்சயித்துபிரபஞ்சத்தின்அணுசந்தானத்தாலேகிஞ்சித்மாத்திரம்விசித்திரசொஸ்வரூபனைவுடனே அனந்தகோடிபத்தர்களுதயமாய் முகினித அஸ்தமாஞர் அந்தசொஸ்வரூபத்தில் கிஞ்சித்மாத்திரமானதுதான் அஞ்ஞானலட்சணத்திலே சதன்னியனுக்குஅகங்காரபாவமுதையமாயிற்றுஅஃதெப்படியென்றால், ஒருதேகத்திலே அவயஅஸ்தபாதரோமதந்தமுகமுற்பத்திபோலும் அஞ்ஞானஸ்வரூபமாயாதேவியாலே வெகுவாம், ஒருபுத்திக்கு அனேகவிர்த்திதோன்றுவதுபோல அறிவில் மறைப்புக்கூடுகையாலே அந்தமாயாதேவினத்தினவிதமாலுலும் அத்தனைக்கு மீஸ்வரன்கூடி அஞ்ஞானலட்சண அவயவரூபனுய்ப்பிரவேசித்தான் அதிலுல் சூரியன் கடோபாதியாலே அனேகலும் போல்ஒருசீவனே உபாதிபேதத்தால் அனந்தவிதசீவலுலன் அந்தச்சீவனுக்கெல்லா மீஸ்வரனுமாவான்ஆலுலுமீஸ்வரன்நித்தியன் சீவன்நாசமாம்சீவகர்மசுகதுக்கமீஸ்வரனுக்கில்லை ஆலுலுஞ் சலத்தைவிடத்தரங்க மில்லை சலந்தரங்கதர்மத்தைவிடும் இதுபோலபரமாத்மாநிஜவான பிரதிவிம்பத்திலேசீவதர்மம் வர்த்தித்து அது அஞ்ஞானத்தில் பிரவேசிக்க விபரீதஞான முண்டாயிற்றுஇதுபழுதைபாம்பானதுபோலென்றறிக. அஃதெப்படிஅஞ்ஞானம்பழுதை விபரீதஞானஞ் சற்பம்போலேயாம் இதல்லாமற் சூரியகிரணத்தாலே மேகமுண்டாய்அதுதானேசூரியனைமறத்ததுபோல்ஆத்மாவிலுல்வந்தஅஞ்ஞானம்ஆத்மாவைமறைக்கும் மறைத்தாலுஞ் சூரியன் நடக்கிறகெதியையும் நாழிகையுந்தடுக்கமாட்டாததுபோல் ஆத்மாவின்உண்மைஞானத்தைத்தடுக்காது அஞ்ஞானம் அவித்தையும் ஆவரணவிபரீதாஞ்ஞானவிக்ஷேபமாகிறதே சிவசங்கற்பகாரணம் (அவித்தையாவது) மூலப்பிரகிருதிஅம்ஸம் அதற்குப்பிரகிருதியேதேகம்சீவன்பரமபுருஷாம்ஸம் ஆகையால் சீவனையும்புருஷனெனப்படும்.இதுபிரஹதாரணஉபநிஷத்திற்கூறுவதால்சீவசிருஷ்டியுமாயையும் அறிதிசித்தம் இந்தசீவனுக்குப் பிரகிருதியாகிற அவித்தையேகாரண தேகம் இதிலே யுண்டான தத்துவங்கள்கூடி அன்னிதாஞானமாய் இலிங்கதேமாகிறசூட்சுமதேகத்தில்தர்ப்பண பிரதிவிம்பம் போலச் சிவன்காரணதேகத்தினின்றுலிங்க தேகத்திற் பிரதிபலித்தவுடனேஅனந்த கோடிரூபமாலுன் சனனமரணதுக்க முதலானது வர்த்தித்த தென்றறிக. இந்த இலிங்கதேகம்இரணியகெற்பன் இதேலிங்கதேகம்இந்தலிங்கதேகமே நெளிவுஊர்வன முதல் - அபசாத - சீவபேதமும் இதுவுமல்லாமல் தூலதேகம் வரும்படியிந்த இலிங்கதேகஞ் செய்தபுண்ணியபாவவிதத்தாலேநாலுயோனியாம்.இந்த லிலிங்கதேகத்துடன் கூடினசீவன்உசுவாசநிசுவாசத்தாகிலும் அன்னபாலு

தியிலாகிலுங் கர்மாதீனத்தாலே சீவன் அணுரூபமாய் பதினெட்டுதான்னி யத்திலே ஒருவிதத்தினீனமாய் அன்னமய கோடு தாதுகாரணமாம் அஃதெப் படியென்னில், புசிப்புகளிலே அன்னரஸமுதலானதுடன் கூடி தகப்பன் தேகத்திலேயிரசமாய் இதுஜடராக்கினிசம்பந்தத்தாலே ஆறுகாதுவாகிமீண் டு பதிணலுநாளிற்சுக்கிலமாய் ருதுகாலத்தில் மாதாவின்சுரோணிதத்திலே கூடிப் பரிணமித்து தூலதேகமாமென்றறிக. இப்படிக்காரணசூட்சும ஸ்தூ லமாகிய மூன்றுதேகத்துக்கும் விராட்டுஇரணியகெற்பஅவ்வியாகிருதனை பரமாத்மாவின் மூன்றுதேகமேயுட்கருவியாய்ப் பிரேரிக்குமென்றறிக. சீவ னுக்கு அஞ்ஞானத்தினாலேபிறப்பிறப்புவந்ததென்றறிக. இனி (மூத்திநிலை யாவது) மூன்சொன்னசீவனுக்குப் பாசபந்தமானபிரகிருதி லிங்கதேகந்தூ லதேகமுதலானதத்துவங்களையெல்லாம்நீயல்லவென்றுதேதிபண்ணித்தனுக ரண புவனபோகமெல்லாம் இரச்சுசற்ப பிராந்தியானதுபோலாயிற்றென்று அனுபவபூமிநாலில் முதற்பூமி (விகூஷிப்தஅவது) பிரமாப்பியாசஞ் சந்தே கமாய் சொருபத்திலே சித்தசமரசமானது அதைவிட்டுச் சம்சாரவிவகாரத் திலே புகுவது இனி இரண்டாம்பூமி(கதாயாதமாவது)சித்தஞ் சொருபத்தி லே லயமாய் விவகாரத்திலெட்டிப்பார்த்துதிரும்பச் சமாதியாவது இனி மூ ன்றும்பூமி (ஸ்வப்னாவஸ்டதமாவது) மனது பிரமத்திற்கலந்துததாகாரமாயான ந்தம் பொசிக்கும் இனி நான்காம்பூமி (ஸ்வுஷுப்திதமாவது) பிரமத்திலேசி த்தஞ் சேடமில்லாமல் லயமாய் ஒருப்திமாத்திரமாவது இதனுல் பிரமாப் பியாசமாகிற பரிபூரணம்பிறக்கும் இந்திரியம் பற்றுமிடமெல்லாஞ் சுவீனத நிஷ்டையில் நிற்ப தென்றறிக. இனிஇப்படிக் குருவாலே சாம்பவி தே சரி ஞ்ன மவுனமுத்தினாகளைப்பெற்று ஜகசீவபரமெல்லாம் பிரமத்தை விட வேறில்லையென்று தெளிவதே மோட்சமென்றறிக. இந்தமாயாவாத வைதீகவேதாந்தம் வியாசகற்பிதமென்றறிக. இனிச் சச்சிதாநந்தத்துக்கு அர்த்தம் சத்தேபரப்பிரமம் சித்தேபிரமத்தின் சிற்கிரண பிரபாவமானசித்பி ம்பம் ஆனந்தமேயிந்தவிரண்டின்மத்தியமானவிலாசம் இம்மூன்றுமொருமி த்தலேயீஸ்வரன்பிரமமேனத்ததனு சித்து சிற்கிரணதனு ஆனந்தமேயீஸ்வரத னுதற்பத நிற்குணம் சிற்பதம் சகுணம்ஆனந்தமேசகுணநிற்குணம்சற்பதம் பிரவர்த்தி நிவர்த்தியில்லாததுசிற்பதம்மாயையுமாயாபிரவர்த்திநிவர்த்தியுமு ள்ளதுஇதுசத்துமல்லஅசத்துமல்ல சத்துஅகர்த்தா சித்துகர்த்தாகிரியாரூபம் ஆனந்தம் சகலகர்த்தவ்வியத்துக்குங்காரணம் இது உத்தரமீமாங்கிசையென் றுபோராய் உபநிஷத்தார்த்தப் பிரதிபாதிகமாய் பிரபஞ்சத்துக்கு மித்தியா தத்துவஞ் சாதிக்கையாலே பிரமாத்மம் அயிக்கியத்துவஞ் சொல்லுமென் றறிக. ஒருப்திமாத்திரமாகியஆத்மா பிரமாயிக்கஞானத்தாலே விவகாரபந்த நிவர்த்தியாவதே மோட்சமென்றறிக.

எ-வது—அத்தியாயம்.

சுத்தவேதாந்தம்.

சுத்தியமாகச்சக சிவபரத்தைச்
சுத்தமதாய்ச்சொலல் சுத்தவேதாந்தமே.

சொரூபலட்சணம் விவேகசிந்தாமணியிற்சொல்வது திருக்கு திரிசிய ம் என்றிரண்டாம் இதில் திருக்குவிவேகமாவது அதிரூக்குமவானந்தம் பரி பூரணநாணஞ்ஞானவிர்த்தி ஞாதுரு ஞான ஞேயந்த சத்து சித்து ஆனந் தஞ்செக சீவ பரம் இதுகளொன்றுமில்லாதவிடத்திலெதிர்த்தபொருளாய்ச் சு த்தசூனியமாய் சுத்தஞெப்திமாத்திரமாயிருக்கிற பொருளொன்றுண்டென்ப து. இனி (தடத்தலட்சணமாவது) மூன்சொன்ன திருக்குவினிடத்தில்-சுகத பேதம், சுஜாதிபேதம், விஜாதிபேதமென நிராகரிக்கத்தக்க பேதத்திரயமு ண்டு. அவைகட்குத்திருஷ்டாந்தம். ஒருவிருக்ஷத்திற்குப் பத்திரபுஷ்பபலாதி களேசுகதபேதம். விருக்ஷாந்தரமே சுஜாதிபேதம், பாஷாணதியேவிஜாதிபே தம். திருக்கானசத்ருபபிரமம் ககனம்போலநிரவயவமாகையாலும், சத்துக் கு வேறொரு சத்தில்லாமையாலும் சுகதபேதம். சுஜாதிபேதமில்லாதிருந்தா லும், சகத்காரண மாயையுண்டாகையால் விஜாதிபேத மூன்டென்னின், சி த்திரிகாவிட்டுச் சித்திராசத்திக்கு வேறே தோன்றுவதில்லாதெப்படியோ அப்படிச் சின்மாத்திரபிரமத்தைவிட்டு, மாயைக்கு விலக்ஷணத்துவமில்லையா கையால், விஜாதிபேதமில்லையென்பதேநிச்சயம் இந்தஅர்த்தத்தில், "ஏகமே வத்துதியமென்னும், பதத்திரயத்துக்குலக்ஷிய, அவதாரஹன, துவைதநிஷே தமென அர்த்தத்திரயமாகையால், அந்தக்ரமத்தில், சுகத, சுஜாதி, விஜாதி பேதத்திரயமில்லையென்பதேபிரமாணமென்றறிக. இனி (கற்பிதத்துவயம்) அத்தியாரோபம், அபவாதமெனக் கற்பிதத்துவயமுண்டு. அவற்றுள், உண் டான ரச்சு, சுத்தி, ஸ்தாணுவாதியில், பிரமத்தில் இல்லாதசர்ப்ப, ரஜித, சோ ராதிகற்பிதம்போலச் சத்ருபபிரமத்தில் இல்லாதமாயாப்பிரபஞ்ச கற்பன யே, அத்தியாரோபமாம். இது சர்ப்பமல்லரச்சுவே, இது ரஜிதமல்ல சுத்தியே இது சோரனல்ல ஸ்தாணுவேயென்பதுபோல விசாரமுகத்தால், இது பிரபஞ் சமல்ல பிரமமென்பதே அபவாதமென்றறிக. இனி (உபாயத்திரயம்) அநந் துவியா விருத்திலக்ஷணை - தடத்தலக்ஷணை - சொரூபலக்ஷணையெனத் தி ருக்குருபவஸ்து சாக்ஷாத்காரத்துக்கு உபாயத்திரயமுண்டு. அவற்றுள், தே காதி அநாத்துமவர்க்கங்களை யுத்தியால் நேதித்து, நின்றஆத்மனை அறிவிப்ப .தே அநந்துவியா விருத்திலக்ஷணையாம். விருக்ஷத்தின்மேலே சந்திரனிருப் பானென்பதுபோலப்பூதாதிசகத்காரணத்திருந்து, ஆத்மனை அறிவிப்பதே த டத்தலக்ஷணையாம். பிரதிருஷ்டோஷ்ணாட் பிரகாசருபமே குரியனென்பது

தத்துவநிஜாநுபோகசாரம்.

போல, "ஆத்மன்நிசரூபமறிவிப்பதே சொரூபலக்ஷணையாமென்றறிக. (ஆத்மசொரூபலக்ஷணபஞ்சகம்) சத்து,சித்து. ஆனந்தம். நித்தியம்,பூரணமெனஆத்மாவின் சொரூபலக்ஷணபஞ்சகமுண்டு. அவற்றுள், அறிவேன் அறியேனென்பதிலும், காமாதிவிருத்தி தோன்றுமிடத்திலும், தோன்றுவிடத்திலும், சாக்கிராதி அவஸ்தையிலும், தனக்கொருவாதை யில்லாமலுண்டென்பதே சத்துரூபமாம். சாவாவஸ்தையிலும் விஷயங்களை இடைவிடாதறிகிறதே சித்துரூபமாம். பரமப்பிரீதியில் விஷயமாவதேஆனந்தரூபமாம். சதோதிதமாவதே நித்தியரூபமாம். சர்வார்த்த சாதகமாகையால், சர்வசம்பந்தத்துவமே பூரணரூபமாம். சச்சிதானந்தமே ஆத்மசொரூபமாதலால், சத்துஞ்சித்தும்போலச் சர்வபுத்தி விருத்தியிலும், ஆனந்தரூபத்துக்கு அபிவியக்தி யுண்டாகவேண்டும். அஃதில்லாமையால் ஆனந்தம். ஆத்மசொரூபமல்லவென்றால் திருஷ்டாந்தம். உஷ்ணப் பிரகாசமானதீபப்பிரகாசமே கிரகத்தில் வியாபித்திருக்கும் உஷ்ணம் வியாப்தமாகாது. சலத்தில் உஷ்ணமேபிரகடித்திருக்கும், பிரகாசம்பிரகடிதமாகாது. காஷ்டத்தில் உஷ்ணமும், பிரகாசமும், இரண்டும் பிரகடமாயிருக்கும். அப்படியே பிரமத்தின் சத்துபாஷாணுதிகளில், அபிவியக்தி யாகிறதல்லாமல் சிதானந்தங்கள்பிரகாசியாது, புத்தியின் தமோகுணத்தால் அஞ்ஞானமயமான மூடவிருத்தியிலும், ரஜோகுணத்தால் ராகமயமான குரோதவிருத்தியிலும், சத்துச் சித்திரண்டும் பிரகாசிக்கிறதல்லாமல், ஆனந்தம் பிரகாசியாது. சத்துவகுணத்தால், வைராக்கியமயமான சாந்தவிருத்தியில், சச்சிதானந்தமென்னுந் திரிரூபத்துக்கும் ஸ்புரணை காண்பிக்கும். ஆகையாலானந்தம் ஆத்மசொரூபமாம், இந்தப்பஞ்சரூபத்துக்கும் உபாதிபேதமாவது. (சத்துத்திரயம்) வியாவகாரிகசத்து, பிராதிபாலிகசத்து, பாரமார்த்திகசத்து, எனச்சத்துமூன்றும். அவற்றுள்-சாக்ஷிரத்தில் கடாதிசத்தே விதேககைவல்லியபரியந்தம் சுழுத்திமூர்ச்சைமுதலான அவஸ்தையிற்றோன்றுமல், எழுந்தபொழுது முன்போலத்தோன்றுகையால், வியாவகாரிகசத்து. சுத்திகாரசித சொப்பனவிஷயாதிசத்துத் தோன்றுகிறகாலத்தல்லாமல், விழித்தகாலத்தில்லாமையால், பிராதிபாலிகசத்து, சமஸ்தகற்பனைக்கும் அதிஷ்டானமாய்த் தோன்றுதடங்காதிருக்கிற பிரமசத்தே பாரமார்த்திகசத்தென்றறிக. இனி (சித்துசதுஷ்டயம்) சீவ ஈச்சுர சுத்த பிரமமென்னுநான்கும்சித்துசதுஷ்டயமாம், இதற்கு திருஷ்டாந்தம் சலப்பிரதிபிம்பாகாசம், மேகாகாசம், கடாவச்சின்னாகாசம், மகதாகாசமெனக்கிரமத்தில் திருஷ்டாந்தசதுஷ்டயமாமென்றறிக.

இனி (ஆனந்தாஷ்டகம்) விஷயானந்தம், பிரமானந்தம், வாசானந்தம், முக்கியானந்தம், நிசானந்தம், ஆத்மானந்தம், அத்வைதானந்தம், வித்தியானந்தமெனஆனந்தம்அஷ்டபேதமாம். அவற்றுள். வனிதாதிவிஷயலாபத்திற் றோன்றுவதேவிஷயானந்தம். நித்திராகாலத்திற்றோன்றுவதேபிரமானந்தம்- நித்திரைதெளிந்துந் தெளியாவிடத்திற்றோன்றுவதேவாசானந்தம். ஸ்தாலஸ்தானமில்லாத வுபேக்ஷாபுத்தியிற்றோன்றுவதே முக்தி

ஆனந்தம். யோகாப்பியாசபலத்தால், மனோலயமானவிடத்திற் றோன்றுவ தேநிசானந்தம். பிரியமான வனிதாதி விஷயமத்தியில் தானே பிரியாத், மக னென்றறிந்தவிடத்திற் றோன்றுவதே, ஆத்மானந்தம். நாமரூபப்பிரபஞ் சமெல்லாம்மித்தை, தானேசத்தியமென்றுவிவேகத்திற் றோன்றுவதே அத் வைதானந்தம். தத்வமசி யாதிவாக்கிய சந்நியமான அபரோக்ஷஞானத்திற் றோன்றுவதே வித்தியானந்தமென்றறிக. இனி (அபாவசதுஷ்டயம்) பிராக பாவம், பிரத்வம்சாபாவம், அந்நியோந்நியாபாவம், அத்தியந்தாபாவமென ப்பிரமணித்தியபதத்துட்புகாத அபாவசதுஷ்டயம்நான்கு. அவற்றுள்-மிருத்தி கைமுதலானதில் கடாதிமுன்னில்லாததேபிராகபாவம். உண்டானகடம்பின் னில்லாததே பிரத்வம் சாபாவம். கடத்திற்படமில்லை, படத்திற்கடமில்லை யென்பதே அந்நியோந்நியாபாவம். ககனகுசுமாதிகமே, அத்தியந்தாபாவமா மென்றறிக. இனி (பரிச்சேதத்திரயம்) காலபரிச்சேதம், தேசபரிச்சேதம். வஸ்துபரிச்சேதமெனப்பிரமபூரண பதத்துள் நிராகரிக்கத்தக்க பரிசேதத்திர யமுண்டு. அவற்றுள்- ஒருகாலத்துண்டு ஒருகாலத்தில்லையென்பதே காலபரி ச்சேதம், ஒருதேசத்துண்டு ஒருதேசத்தில்லையென்பதே தேசபரிச்சேதம். ஒருவஸ்துவாகும், ஒருவஸ்துவல்லவென்பதேவஸ்துபரிச்சேதமென்றறிக

இனி இருக்குவேதமெசுர்வேதஞ் சாமவேதம்-அதர்வணவேதமிந்தநான் கில்பிரக்ஞானம்பிரமம் அஹம்பிர்மாஸ்மிதத்வமசிஅயமாத்மாபிரமம்இந்தநாலு ஞ் சித்தார்த்தபோதகம் இந்தநான்குமகாவாக்கியத்தில் தத்துவமசிமுக்கியம் இது தத் துவம் அசி என்கிற பதத்திரையத்துக்குச் சிவசீவ வயிக்கியமே கிரமமான வர்த்தத்திரயமெனப்படும், பின்னும் பதபதார்த்தவாக்கி யத்து க்குச்சொல்வது, சாமாஞாதிகாரணசம்பந்தம் விசேஷணவிசேஷிய சம்பந்த ம் இலக்ஷியலக்ஷண சம்பந்தம், இப்படிக்கிரம சம்பந்தத்திரயமுண்டு. இத் ல் (சாமாஞாதிகரணசம்பந்தமாவது) நீலோற்பலவாக்கியத்தில் நீலபதமும் உ. ற்பலபதமும் ஒருஉற்பலத்திரவியத்தி லிருக்கிறதுபோல தத்துவமென்னும் வாக்கியத்தில் தற்பதமுந் துவம்பதமு மொருசைதன்னியத்திலிருப்பது (வி சேஷணவிசேஷியசம்பந்தமாம்) சோயந்தேவதத்தனென்னும் வாக்கியத் திற்சத்தவாச்சியமான தேசகாலவிசிஷ்டத்தில் தேசமுங்காலமும் விசேஷ ணம் புருஷன் விசேஷியம் இதுபோலத்தத்துவமென்னும் வாக்கியத்தில் த ற்பதவாச்சியமானசார்வஞ்ஞத்துவவிசிஷ்டத்திற்சர்வஞ்ஞத்துவ உபாதிவிசே ஷணம் இது நீங்குமிடத்தில்நின்றஈஸ்வரசைதன்னியம்விசேஷியம். இனித்து வம்பதத்துக்குவாச்சியமானகிஞ்சஞ்ஞத்துவ விசிஷ்டத்திற் காரியோபாதிவி சேஷணம் இது நீங்குமிடத்தில்நின்ற சீவசைதன்னியம்விசேஷியம் இனில க்ஷணலக்ஷிய சம்பந்தமாவது தற்பத துவம் பதங்களுக்கு வாச்சியமான சா ர்வஞ்ஞத்துவ கிஞ்சஞ்ஞத்துவவிசிஷ்டங்களுக்கு அயிக்கியங்கூடாத படியா ல் தற்பதத்துக்கு வாச்சியமான சர்வஞ்ஞத்துவத்தைவிட்டுச் சைதன்ன் யமாத்திரம் லட்சணம். இனி துவம் பதத்துக்கும் அதின்வாச்சியமான கிஞ் சஞ்ஞத் துவத்தைவிட்டுச் சைதன்னியமாத்திரம் லட்சணம் ஆகையால்

அசிபதத்திலே தற்பத துவம் பதலட்சியங்களுக்கு அயிக்கியஞ்சொல்லு கையிலை அகண்டப்பிரம விஷய சாக்ஷாத்காரஞ் சித்திக்கும் இந்தலட் சியசொரூபமானசைதன்னியந் தானேசாக்கிராதி அவஸ்த அபிமானியானவி ரண்டுவிதஅவஸ்தைக்குமபிமானிவிஸ்வாதிவிராட்டாதிக்குஞ் சீவாத்மா பரமா த்மாவுக்கும் பிரித்தறியப்படாத போது தத்துவமசிவாக்கியத்துக்கு வாச்சி யார்த்தமாகப் பிரித்து சைதன்னியமாத்திரமாகவறியப் பட்டபோதுலட்சிய சொரூபமான அவஸ்தாத்திரயநிமித்தியமாய்நித்தியசுத்த புத்த முத்தசத்திய ஞானனந்தாகண்டகரியப் பிரமமாத்திரமேயாம் இதற்குத்தானே பின்னு ம்விவேகசிந்தாமணியில் தத்துவமசி பதத்திரயங்களுக்கு வாச்சியார்த்தல ட்சியார்த்தமென்றுஅர்த்தத்துவயமுண்டு. அதெப்படி, பூர்வோக்ததூலாதி தனுத்திரயசமஷ்டி ரூபத்துக்கு விராட்டு முதல்மூன்றும் பிரமத்தைக்கூ டிதப்தாயப்பிண்டம்போல ஏகாகாரமாய்க்காண்கிறது வாக்கியார்த்த முக்கி யார்த்தமென்றும் அபிதார்த்தமென்றுஞ்சொல்லப்படும். இனி துவம்பதத்து க்குந்தனுத்திரய வியஷ்டிரூபத்திலே விஸ்வாதிகள்பிரத்தியே காத்மாவைக் கூடித்தப்தாயபிண்டம் போல யொன்றுயிருக்கும் இது துவம் பதத்துக்கு வாச்சியார்த்த முக்கியார்த்த அபிதார்த்தமாம். இனிவிராட் புருஷனை வேறு செய்துமீறிநின்ற நிருபாதிகப் பிரமம் தற்பதத்துக்கு லக்ஷியார்த்தமென்று ஞ் சோதிதத்பதார்த்த மென்றுமாம் இனி விஸ்வாதிகளை வேறுசெய்த நி ருபாதிகப் பிரத்தியேகாத்மாவைத் துவம்பதலட்சியார்த்தஞ்சோதித்துவம்ப தார்த்தமாம் பின்னும் மூன்றுலக்ஷணைவாக்கியமுண்டு அஃதுவிட்ட லக்ஷ ணை விடாதலக்ஷணை விட்டு விடாதலக்ஷணை யென மூன்றும் கங்காச த்தம் பிரவாகரூபமானமுக்கியார்த்தமல்லாமல் கங்கைகயிற் கோஷமில்லை க ங்கைக்கனைச்சேரியிலே கோஷமென்றுகொள்ளல் இனிக்குந்தசத்தம் ஈட் டிக்குத்துமென்றல் ஈட்டிப்பிடித்தவனைக்காட்டும் இனிச்சோயமென்கிறச த்தம் பூதகாலதேசவயோவிசிஷ்டனை தேவதத்தனைக்காட்டும் அயசத்தம் வர்த்தமானகாலதேசவயோவிசிஷ்டனை தேவதத்தனைச் சொல்லுந் தே சகாலவயோவிசிஷ்டங்களைவிட்டு தேவதத்தன யவனே யிவன் இவனேய வனென்று சொல்லும் இனிஜகலக்ஷணை அஜகலக்ஷணை ஜகதஜக லக்ஷணை யென்றும் அர்த்தலக்ஷணை யென்றும் பாகத்தியாகலக்ஷணை யென்றும் பரி யாயநாமம் தத்துவமசியிலுதாரணமாயிவற்றிலொன்றைச்சொல்ல யோக்கி மாமோவென்னில் தற்பதம்வாச்சியார்த்தமாய் சர்வஞ்ஞத்துவாதி விசிஷ்ட குண பரோக்ஷனைசிவனைச்சொல்லும் துவம்பதம்வாச்சியார்த்த மாய் கி ஞ்சஞ்ஞத்துவாதிகுணவிசிஷ்டனை அபரோக்ஷ சீவனைச்சொல்லும் இர் தஉபயவிருத்த உபாதி பதார்த்தத்துக்கு ஏகத்துவஞ் சொல்லாததிலை பின்னுமிந்த உபயபதார்த்தமான பரோக்ஷத்துவாதி விருத்த தன்மாம்ச த்தைவிட்டுவிருத்தமில்லாதசைதன்னியமாத்திரமாய் லக்ஷியார்த்தமான பிர மசூடஸ்தனை அங்கீகரித்து அஃதேயிது இஃதேஅது இந்தவிதத்தில்தாதாத் மிய முண்டாக்கும் பின்னும் அசிபதம் உபயலக்ஷியார்த்தத்திற் பரோக்ஷம்

அபரோக்ஷம் வித்தையாகற்பிதமெனச்சொல்லும் அசிபதமாய்ந்த வாத்மா வைக்கண்டயிக்கதஸ்போதமாத் திரமேஸித்தமென்று வாக்கியார்த்த லக்ஷணம் இப்படி உபநிஷத்துகளிலேயேறிக. இஃதுதமிழில்செகலட்சணையாவதுவிட்ட லட்சணையாம் இவ்விரண்டின் உபாதிகளேவிட்டது (அசகலக்ஷணை யாவது)விடாதலக்ஷணையாம் இதுஉபாதிகளேவிட்டாற்சீவனும் பரனும்விடாமலொன்றென்பது (செகதசெகலக்ஷணையாவது) விட்டுவிடாதலக்ஷணையாம் இதுவிட்ட உபாதியும் விடாத சீவனும் பரனுமொன்றென்று இப்படிச்சொன்ன அர்த்தலட்சணையை வேறுபண்ணினதும்ஒன்றுக்கினதும்பாகத்தியாகம் இப்படித்தமிழிலென்றறிக.

இனி (சீவநாமரூபவிவகாரம்) பூர்வோக்தஸித்துபேதமானசீவ ஈச்சுராதிகளுக்கு - நாம, ரூப, விவகாரகற்பனையாவது சீவனே - விசுவ, தைசத- பிராக்கியனென மூன்றும், அவற்றுள்- தூலசரீர வியஷ்டியபிமானி, வியாவகாரிகசீவன், புத்திபிரதி பலிதசைதந்தியன், சிதாபாசன், விக்ஷபரூபன் க்ஷேத்திரஞ்ஞன், சரீரி, பிரமார்த்துரு, கர்த்துரு-போக்துரு-சமூசாரி - விஷயி, பாவாத்துமன், விஞ்ஞானமயன், துவம்பதமுக்கியார்த்தன், முதலானவைவிசுவனுக்குப் பரியாயநாமமாம். சூக்ஷமசரீரவியஷ்டியபிமானி, பிரதிபாலிகசீவன், சொர்ப்பனகற்பிதன், முதலானவைதைஜதனுக்குப் பரியாயநாமமாம். காரணசரீரவியஷ்டியபிமானி, அவித்தியோபாதிகன், முதலானவை பிராக்கியனுக்குப் பரியாயநாமமாமென்றறிக.

இனி (ஆத்மத்திரயம்) சீவாத்மா, அந்தராத்மா, பரமாத்மாவென ஆத்மத்திரயமுண்டு, அவற்றுள்- தப்தாய பிண்டம்போலத் தேகங்கட்குள்ளே சம்பந்தித்துச் சகலசமூசார விவகாரமுள்ளவனே சீவாத்துமா. கமல பத்திரோதகம்போலச் சமூசாரம் பொருந்தியும் பொருந்தாதவனே அந்தராத்துமா. லோகவிவகாரத்துக்குச் சாக்ஷிசூரிய னெப்படியோ வப்படிச்சீவாந்திரவிவகாரசாக்ஷிகனே பரமாத்துமா. இனி (சமூசாரகற்பனை) சலத்தின் சஞ்சலம், சூரியன்சஞ்சல மென்பதுபோலவும், மேகமோடச் சந்திரனோடு மென்பது போலவும், நதியில் ஓடமோடத் தீரத்தின் விருக்ஷமோடுமென்பது போலவும் ,மனையிந்துவாரத்திற் பிரகாசிக்கின்ற சூரியகிரணம், கையசைக்கும்போது அசையுமென்பதுபோலவும், தேகத்தின் சனனமரணம், ஆத்துமனுக்கென்பதுபோலவும், நிர்விகாராத்துமனுக்குத்,தேகாதியுபாதியாலான அவஸ்தாகற்பனைசமூசார விவகாரமாம். இனி (ஈச்சுரனுமரூபவிவகாரம்) ஈச்சுரனே- விராட்புருஷன், இரணியகர்ப்பன். அந்தரியாமி யெனமூவராம். அவருள், தூலசரீரசமஷ்டியபிமானி ஈச்சுரன் தத்பதமுக்கியார்த்தன், முதலானவை விராட்புருஷனுக்குப் பரியாயநாமமாம். லிங்கசரீர சமஷ்டியபிமானி, மகாப்பிராணன்- சூத்திராத்மன்- முதலானவை யிரணியகற்பனுக்குப்பரியாய நாமமாம். காரணசரீர சமஷ்டியபிமானி, அக்கியாகே பயிதசைதந்தியன்- காரணோபாதிகன், மாயோபாதிகன்- மாயாபாசகன், மாயாவயவி, ஜகத்தியோனி, ஆனந்தமயன், அக்ஷரன் , அவ்வியாகிருதன், சபளப்பிரமன், ச

குணப்பிரமன்,பரன்,பரமன், பரதேவதை. முதலானவை அந்தரியாமிக்குப்ப
ரியாயநாமமாம். இனி (அந்தஈச்சுரன்தேதகதிருஷ்டாந்தம்) சித்திரபடமான
து நாநாவர்ணங்கூடுமுன்னே வெள்ளைப்புடைவையென்றும், மேற்கஞ்சிகூ
ழ்அனுலோபத்தால் கடிதமென்றும், மேல்நீலமலிஞ்காரத்தா லாஞ்சிதமென்
றும், மேவிதயோக்கியவர்ண பூரணத்தால் ரஞ்சிதமென்றும், சொல்லப்படு
ம். அப்படிப்பிரமமுதல் மாயாதத்காரியாதிதமானதே சித்தென்றும், சர்வ
காரணமான மாயோபாதியினுல், அந்தரியாமியென்றும், அவ்வியக்தமான சூ
க்ஷமசரீர சமஷ்டியுபாதியினுல்,சூத்ராத்துமனென்றும், வியக்தமானபஞ்சீகி
ருத பூதகாரியரூப, தூலசரீர சமஷ்டியு பாதியினுல், விராட்புருஷனென்று
ஞ் சொல்லப்படும். பிரமத்துக்குச சித்திரப்படம் திருஷ்டாந்தமாஞல், அதி
ல்,சித்திரம் யாதென்னில்,விரிஞ்சனுதி திரணந்தமான சேதனபிராணிகளும்,
கிரியாதி அசேதன விஷயங்களுமான சடாசடரூப சகமென்றறிக. பாரமார்
த்திகமான சித்ரூபமொன்றில், மித்தியாத்மகபகுசேதனு சேதனரூபசகமிருக்
கை யெப்படியென்னில் சித்திரபடத்திலெழுதப்பட்டுநாநாவர்ண பேதமா
ன சீதாதிகளை நிவிர்த்திசெய்வதற்கு அசமர்தமான வஸ்திராபாசங்களும் சீ
தாதிகளைப் பரிகாரஞ்செய்கிற சத்தியமான ஆதாரபடமும், ஏகாகாரமாக வி
ருந்த போதைக்கும், சித்திரபடத்திலிருந்த கிரி நதியாதிகள் அந்தசித்திராதா
ரபடத்துடன்,சமானமாகாதபடியே சித்ரூபப்பிரமத்தில்,வெவ்வேறுகத்தோ
ன்றப்பட்ட சிதாபாசசைதந்தியரான வியாவசாரிகசீவர்கள்,சித்துடனேசமா
னமாய்த்தோற்றினும், மிருத்திகைமுதலான சடரூபங்கள், சமானமாகாததி
ஞலே சேதனு சேதனமான சகத்து, சித்ரூபப்பிரமத்தில், கற்பிதமென்றே
நிச்சயிக்கப்படுமென்றறிக. இனி (ஈச்சுரன்முக்கியகுணம்) சர்வக்ஞத்துவ
ம், சர்வேச்சுரத்துவம், சர்வநியந்தரத்துவம், சர்வாந்தரியாமித்துவம், சர்வக
ர்த்தத்துவம், சர்வசக்தித்துவாதிகளே ஈச்சுரனுடைய முக்கியகுணமாமென்
றறிக.

(ஈச்சுரன்பிரபுத்வ சாமர்த்தியகுணத்திரயம்.) கர்த்துருத்துவம்,அகர்த்துரு
த்துவம், அந்நியதாகர்த்துருத்துவமென ஈச்சுரன் பிரபுத்துவ சாமர்த்தியகு
ணத்திரயமுண்டென்றறிக. இனி (ஈச்சுரன்பஞ்சகிர்த்தியம்.) சிருஷ்டி,திதி
சங்காரம், திரோபவம்,அனுக்கிரகமென ஈச்சுரன்பஞ்சகிர்த்தியம்உண்டு ஆனு
ல், நிர்விகாரத்துவமாகிய பிரமசொரூபனுன ஈச்சுரனிடத்தில், சிருஷ்டியா
திவியாபாரவெகுகிர்த்தியங்கள்எந்தப்பிரகாரத்தாலாமென்றுல், எப்படிச்சூரி
யன் இச்சாயத்தனமில்லாமல், தன் வருஷகிரணத்தால், விருஷ்டிரூபமான
சலத்தைதவிட்டுப் பின்னந்தசலத்திற்ரூனேபிரதிபிம்பித்துமேகாதிகளால்அத
ஜனமறைத்து,இமகிரணத்தால்அதனைத்தடித்துஉஷ்ணகிரணத்தால் அந்தசல
த்தைதத்திரும்பவாங்கிக்கொண்டு அந்தப் பிரதிபிம்பத்தைதத் தன்னுடனே கூ
ட்டிக்கொள்ளுவன்,அப்படியே ஈச்சுரனுந்தன்மாயாசத்தியுடனேகூடிச்சித்
தப்பிரதானத்தால், நிமித்தியகாரணத்தையும் சடப்பிரதானத்தால், உபாதான
காரணத்தையும், புத்தியாதிகாரியங்களைச் சிருஷ்டித்துச் சீவரூபத்தாற்ரூனே

பிரவேசித்துக்கர் மத்தால், போக்துருவென்றும், நியமகசத்தியால் போக்கிய போக்துருக்களென்றும் நியமித்து ருத்திரரூபத்தால் அந்தக்காரியரூபங்களை சங்கரித்துட்பின் சுருதிகுருரூபத்தால் அந்தச் சீவனைத் தன்னுடனை யைக்கியஞ்செய்துகொள்ளுவனென்றறிக.

இனி (ரூபத்துவயம்) வியஷ்டி, சமஷ்டியென சீவ ஈச்சுரருக்கு விபகார வியாபகத்துவயமுண்டு, அவற்றுள், அநேக விருக்ஷமுள்ளது ஓ ருவனமென்ரூற் போல, அநேக சீவரெல்லாரையும், தன்ரூத்தும னென்னும் அபிமானமே ஈச்சுரனுடைய சமஷ்டிரூபமாம். அந்தவனத்தில் இது வொருவிருக்ஷம், இதுவொரு விருக்ஷமென்று வெவ்வேறே குறியிடுவதுபோ லப் பின்ரூபின்ன தேகத்துவாபிமானமே சீவனுடைய வியஷ்டிரூபமாமென் றறிக, இனி (கூடஸ்தன்பரியாயநாமம்) விஸ்வாதி சீவத்திரயாதிஷ்டானை சைதந்நியன், தூரியன், சுயஞ்சத்தார்த்தன், சாக்ஷிகன், பாரமார்த்திகசீவன், பிரத்தியேகாத்மன், அனுசந்தாத்துரு, அவிச்சின்னசீவன், துவம்பதலக்ஷி யார்த்தன் முதலானவை கூடஸ்தன்பரியாயநாமமாமென்றறிக. இனி (பிரம த்தின்பரியாயநாமம்) அந்தரியாமியாதி, ஈச்சுர திரயாதிஷ்டாத்துரு, பரமாத் மன், பரதத்துவம், பரப்பிரமம், சர்வாதிஷ்டாத்ரு, விசுத்தசித்து, தற் பத லக்ஷியார்த்தன் முதலானவை பிரமத்தின் பரியாய நாமமாம் இஃ தது மிருத்திகையொன்றே நாமரூபத்தால் கடாதிவெகுபேத மாரூற்போல வும், சுவர்ணமொன்றே வங்கிசாரம்பத்தால் கடக, மகுடாதியாபரண மா ரூற்போலவும், சலமொன்றேறவாயுவசத்தால், பேன, புற்புத, தரங்காதிசமுதாய மாரூற்போலவும், தீபமொன்றே-கடத்தின்துவாரபேதத்தால், வெகுரூபமாரூ ற்போலவும், மாருதமொன்றே வேணுரந்திரத்தால் மந்தர, மத்திம, தாரமாரூ ற்போலவும், சுரமொன்றே-பாடுவான்குறிப்பால்நாநாஇராகமாரூற்போல்வும் கதலீதள நீபமொன்றே-கண்டத்தால், கரிதுரகாதி நாநாபேத மாரூற்போல வும், இலக்கமொன்றே-பிந்துபேதத்தால், தச, சத, சகஸ்திராதியாரூற்போல வும், சித்தொன்றே-பூர்வோக்தசீவேச்சுராதிபேதவிகாரமாயிற்றென்றுசொல் லப்படும்இவையெல்லாந் திருக்குவிவேகமென்றறிக.இனி(திர்சியவிவேகம்)சந் திரனிடத்தில் அநாதிகளங்கமானது எப்படிச் சந்திரனையாசிரயித்து அவனை மறையாமல் அவரூல் விளங்குகிறதெப்படியோ அப்படியேநானென்னை அறி யேனென்னும் லோகப்பிரசித்தவிவகாரத்தால், ஆத்மனையடுத்து அவனைமறை யாமல் அவரூலறிவித்துக்கொள்வதாகியும், அக்கினியின்சுடுந்தொழில், மணி மந்திராதி பிரயோகத்தால் பந்திக்கப்பட்டுத்தான் அக்கினிரூபமுமல்லாமல் அ க்கினியைவிட்டு தோற்றுவதுஞ்செய்யாமல், ஸ்போடகாதிகாரியோதய மி ப்படியோ அப்படியே பிரமசொரூபமு மல்லாமல், பிரமவிலக்ஷண மாயுந் தோன்ரூமல் ஆகாசாதிகாரியோதய முண்டாக்குகிறவளாகியும், அகடிதகட ரூசமர்த்தி யாகியும், சர்வதத்துவங்களுக்குங் காரணமானதே திர்சியரூப மாயாசத்தியென்றறிக. இனி (மாயாலக்ஷணபஞ்சகம்) அசத்து, சடம், துக்க ம், அநித்தியம், கண்டிதமென மாயாலக்ஷணபஞ்சகமுண்டு, அவற்றுள், ச

சிருங்கமுதலானவை அசத்துரூபமாம், பாஷாணாதிகளே சடரூபமாம், ரஜ தமோமயமான புத்தியினுடைய குரோதமூடவிருத்தியாதிகமே துக்கரூபமாம் தோன்றிக்கெடுகிற தேகாதிகமே அநித்தியரூபமாம் - காலபரிச்சேதாதிகமே கண்டிதரூபமாமென்றறிக.

இனி (மாயாநிர்வாச்சியநவப்பிரகாரம்) பின்ன,அபின்ன,பின்னபின்ன சத்து, அசத்து, சதசத்து, சாவயவ, நிரவய்வ, சாவயவநிரவயவ, இவை யல்லவென்பதே மாயா நிர்வாச்சிய நவப்பிரகாரமாம் அந்தமாயையே - சுருதிசம்பந்தஞானம், யுத்திசம்பந்தஞானம், லோகசம்பந்தஞானமென்னும் ஞானத்திரயங்களுடனேகூடி கிரமத்தில், ககனகுசும்போலத்துச்சமென்றும், சுத்திகாரசிதம்போல, அநிர்வாச்சியமென்றும்ஆத்மனேப்போலநித்தியமென்றுஞ்சொல்லப்படுமென்றறிக,இனி(மாயாநாமபஞ்சகம்) தமசு, மாயை,மோகம்,அவித்தை, அணுர்தமெனமாயாநாமபஞ்சகமுண்டு. அவற்றுள்சீவனைதந்நியத்தைதமறைக்கையால்தமசென்றும்,சகத்ரூபமான தன்னிதரதோற்றத்துக்குக்காரணமாகையால்மாயையென்றும், அப்படித்தோன்றினசகத்தில்சுத்திகாரசிதாதி விபரீதமுண்டாக்கையால் மோகமென்றும், வித்தையினிடமாய்க்கெடுகையால் அவித்தையென்றும், சத்ரூபத்துக்கு அந்நியமாகையால் அணுர்தமென்றும் பெயராமென்றறிக. இனி (மாயாதர்மத்துவயம்) சங்கோச, விகாசமென மாயாதர்மத்துவயமுண்டு அவை யெப்படியெனின், சித்திரபடமானது, தன்பிரசாரணைபால், நாநாவித சித்திரங்காண்பித்துச் சங்கோசத்தால் அந்த நாநாசித்திரமுமறையும். அப்படியேமாயை தன்விகாசதர்மத்தால் அகில்ப்பிரபஞ்சமுந் தோற்றுவித்துச் சங்கோசதர்மத்தாலடங்கச் செய்யுமென்றறிக. இனி(மாயாகுணத்துவயம்) அசுவதந்திரம், சுவதந்திரமெனமாயாகுணத்துவயமுண்டு. அவற்றுள், மாயைபித்தையாகையால் சத்ரூபசைதந்நியம்விட்டுத் தானுகத்தோன்றுதலே அஸ்வதந்திரமாம். சாகூதிகனுமாய் அசங்கனுமான ஆத்மாவைச் சீவாதிப்பிரபஞ்சமயமாகப் பண்ணுவிப்பதே சுவதந்திரமாம். மாயைபித்தையென்பது ககனகுசும்போலச் சர்வதாசூன்யமல்ல-சொப்பனதேகாதிகம்போலத்தோற்றி விசாரிக்க இல்லாதபித்தையேமாயையென்றறிக.இனி(மாயாவிர்த்திதத்திரயம்)விசுத்தசத்துவரூபமாயை,மலினசத்துவரூபமவித்தை, தமப்பிரதானரூபப்பிரகிருதியென்மாயாவிர்த்திதத்திரயமுண்டு. அவற்றுள். மாயைசுழுத்திலயங்களிலே பிரமத்துடனே அத்தியாசவைக்கியமாயிருந்து, பின் சாக்கிரசிருஷ்டியில் கிஞ்சித்துப்பேதாவஸ்தையாமளவில் அந்தப்பிரமசைதந்நியத்தன்னிடத்திற் பிரதிபலித்துத்தானே சர்வஞ்ஞயத்து வாதி. குணவிசிஷ்ட சைதந்நியனுனஈச்சுரனென்றும், பதிபதார்த்தமென்றும், பிரேரக விதுருவென்றுங், கொள்வதிலுல், அந்த ஈச்சுரனுக்கு உபாதியாகி அமோககாரணியென்றுஞ் சொல்லப்படும். அவித்தை தன்னிடத்திற் பிரதிபிம்பித்து, போக்துருக்களான பசுபதார்த்த சீவருக்கு உபாதியாகி மோககாரணியென்றுஞ் சொல்லப்படும், பிரகிருதிபோக்கியாத்மகத்துவத்தாற் பாசபதார்த்தமென்றும் குணத்திரயசாமான்னி யா

வஸ்ஸதயால் அந்தஅவித்தையிற்பிரதிபிம்பித்தசிவருடையபோகார்த்தமாய்ச் சகலகாரியமும் மாகதேவண்டி ஈச்சுரன் சந்நிதானலக்ஷணை வீக்ஷணமாத்திரத்தி ல், விரிந்துமுதற்காலதத்துவமுண்டாய்,மேற்காலவசத்தாற்பரிணமித்து, மக தத்துவமாம், அந்த மகதத்துவமானது, விதைதத்துத் தண்ணீர்வார்க்க அங்கு ரமுமாகாமல், பீசநியாயமுங்காட்டாமல் உற்பின்னுவஸ்ஸதையயடைந்தபீச ம்போலக் காரணப்பிரகிருதியுமல்லாமல், காரியகங்காரமுமல்லாமல், மித்தியா க்ஞான நிர்விகற்பசொருபத்தால் மத்தியாவஸ்ஸதையாம், பின்னும் அந்தமக தத்துவத்திற் குணபேதமாய் மித்தியாக்ஞான சவிகற்பசொருபமான பிரத மாத்தியாச மெனப்படுகிற மூலாங்கார முற்பத்தியா மென்றறிக. இனி (குணத்திரயசிருஷ்டி) சத்துவ, ரஜ, தமமெனக்குணத்திரயமுண்டு. பிரகாச பிரவிர்த்தி மோகமெனக்கிரமத்தில் சத்துவாதிகுணரூபமுண்டு. தைஜசம்,வை காரிகம், பூதாதிகமெனச் சத்துவாதிகுணங்களுக்குப் பரியாயநாமமாம். அவற் றுள் சத்துவகுணத்தில்-மனமாதி அந்தக்கரணசதுஷ்டயமும், சுரோத்திராதி ஞானேந்திரியபஞ்சகமுந்தோன்றும்,ரஜோகுணத்தில்-வாக்காதிகர்ம்மேந்திரிய பஞ்சகமும், பிராணாதிவாயுபஞ்சகமும் உதிக்கும்,தமோகுணத்தில் ஆகாசாதி பூதபஞ்சக முற்பத்தியாம், பின் பூதபஞ்சீகரண சம்மேளனத்தால் பிரமாண்ட புவனசரீரகடாதிவிஷயங்க ளுண்டாம், அந்தமனமாதி அந்தக்கரணங்கி ரமத்தில் விஷயங்களை, நினைப்பது, நிச்சயிப்பது, அபிமானிப்பது, அ வதரிப்பது, வியாபாரமாம், இதற்குச்சந்திரன் சதுர்முகன், கேஷத்திரக்ஞன், திரிபுராந்தகன், அதிதேவதைகளாம், இதயமேகோளகஸ்தானம் அந்தச்சுரோ த்திராதி ஞானேந்திரியங்களுக்குக்கிரமத்தில், சத்தாதிவிஷயங்களைக் கேட்ட ல், பரிசித்தல், பார்த்தல், ருசித்தல், மணங்கொள்ளுதல், வியாபாரமாம். இத ற்குத்திக்கு, மாருதம், இந்திரன் வருணன், அஸ்வினி அதிதேவதைகளாம் கரணதிகளே கோளகஸ்தானம் சுரோத்திராதி ஞானேந்திரியங்களுக்குப் பா கியசத்தாதிவிஷயங்களை யறிவதுபோலச், செவியையங்குலியான் மூடப்பி ராணவாயுசடராக்கினியிலுள்ள சத்தக்கிரகணம் அன்னபாநைத்காரமாக,சீ தஸ்பரிசகிரகணம் நேத்திரத்தைமூட ஆப்பியந்தரதமோருபகிரகணம். ஏப் பமாக ஆப்பியந்தராசக்கிரகணம். வாந்தியாக ஆப்பியந்தரகந்தக்கிரகணம். இ ப்படி ஆப்பியந்தரசத்தாதி விஷயக்கிரகணமுண்டு. அந்தவாக்காதி கர்மேந்தி ரியங்களுக்கு கிரமத்தில் சொல்வது, வசனிப்பது, நடப்பது, பிடிப்பது, விடு வது, ஆனந்திப்பதுவியாபாரம். இதற்கு அக்கினி, இந்திரன், ரவி, மிருத்தியு, பிரதேசன் அதிதேவதைகளாம். முகாதிகோளகஸ்தானம் அந்தக்கரண ஞா னேந்திரிய கர்மேந்திரியமென்னும் பதினென்கும், ஆதியாத்மிகமாம். இவற் றின்விஷயமே ஆதிபௌதிகம். அதிதேவதையே ஆதிதெய்வீகம்அந்தச்சந்தி ராதிதேவதைகளே விராட்புருஷன். அவனுடையதே தூலசரீரம். அந்தக்க ரணேந்திரியாதிகமே இரணியகர்ப்பன் சூக்ஷமசரீரம் அந்தச்சரீரமே தமோரூ பத்தால் அந்தரியாமிக்கு ஆவரணமாமென்றறிக. இனி அந்தப்பிராணவாயு

இதயஸ்தானத்திலிருந்து,உசுவாசநிசுவாசம்பண்ணும், அபானவாயு குதஸ்தானத்திலிருந்து, மலமூத்திரத்தைக் கழிப்பிக்கும், சமானவாயுநாபிஸ்தானத்திலிருந்து, உண்ட அன்னசாரத்தைச் சர்வாங்கத்துக்கும் பகுத்துக்கொடுக்கும் உதானவாயுகண்டஸ்தானத்திலிருந்து, வாந்திபண்ணுவிக்கும், வியானவாயு சர்வாங்கத்திலுமிருந்து,தேகத்தைநிறுத்திவிக்கும். கிரமத்தில்பிராணவாயுவிற் றோன்றினதாகவாயுமெய்யையமுறுக்கிக்கொட்டாவிவிடும். கூர்மவாயுவிக்கலேப்பமிடும். கிரிகரவாயு தும்மலிருமலுண்டாக்கும். தேவதத்தவாயு சிரிக்கும்,வசனிக்கும், தனஞ்சயவாயு துர்க்கந்தங்களை யெழுப்பிப், பிராணன்போயும் ஐந்துநாளிருந்து தேகத்தை வீங்கச்செய்து தலைவெடிக்கப் பண்ணிப்போமென்றறிக.

இனி நாகாதிவாயுவைந்தும் பாஹ்யவாயுவென்று சொல்லப்பட்டு, வாக்ஷாதி கர்ம்மேந்திரியங்களைச் சேஷ்டிக்கிறதற்கேதுவாம், பிராணதிவாயுவைந்தும், ஆப்பியந்தரவாயுவென்று சொல்லப்பட்டுச், சுரோத்திராதி ஞானேந்திரியங்களைச் சேஷ்டிக்கிறதற்கேதுவாம். வைரம்பன், முக்கியன், பிரபஞ்சன், அந்தரியாமி யென்னுமிந்நான்குஞ் சீவசம்பந்தவாயுக்களாய் மனமாதியந்தக் காரணங்களைச்சேஷ்டிப்பிக்குமென்றறிக. இனிஅந்தப்பூமியாதிபஞ்சபூதங்களுக்குக்கிரமத்தில் தாரணை, பிண்டீகரணம், பாகஞ்செய்தல், உலாவல், அவகாசிப்பித்தல் வியாபாரமாம், இவைகளுக்குப் பிர்ம்மா-விஷ்ணு-ருத்திரன்-மகேச்சுரன்-சதாசிவன்-அதிதேவதைகளாம். கந்தாதியேகுணங்களாம் அதெப்படியெனின், ஆகாசத்துக்குப் பிரிதித்தொனி ரூபமான சத்தகுணம்-(க) வாயுக்குச்சத்தம் உஷ்ணசீத ஸ்பரிசத்தோடு - (உ) அக்கினிக்குச்சத்-தஉஷ்ணஸ்பரிசம்-பிரபாரூபத்தோடு- (ஈ) சலத்துக்குச்சத்தம், சீதஸ்பரிசம், சுவேதரூபம், மதுரரசத்தோடு-ச-பூமிக்கு, சத்தம், கடினஸ்பரிசம், நீலாதிவிசித்திரரூபம், மதுராதிநாநாரசம், துவிதகந்தத்தோடு-ரு-என்றறிக. இனி (திரிபுடி) ஞாதுரு, ஞான, ஞேயமெனத் திரிபுடியுண்டு. அவற்றுள், மூலாங்காரத்தில் பிரிதிபலிக்குஞ் சீவசைதந்நியமே ஞாதுரு. மனதிற்பிரதிபலிக்குஞ்சைதந்நியமேஞானம். பூதபௌதிகவிஷயங்களில் பிரதிபலிக்குஞ் சைதந்நியமேஞேயம். அவற்றுள் மனமே - உச - ஆம் தத்துவம், மூலாங்காரமே - உரி - ஆம் தத்துவம், அகங்காரகதசிதாபாச சிவனே, உசு - ஆம் தத்துவம். மாயோபாதிகளுன ஈச்சுரனே-உள-ஆம் தத்துவம், அகங்காரசீவர்க்கு அதிஷ்டானமான கூடஸ்தனே-உஅ- ஆம் தத்துவம், இந்தமாயா ஈச்சுரருக்கு அதிஷ்டானமான பிரமமே- உசு- ஆம் தத்துவமாமென்றறிக. இனிப்(பிரகிருதிகாரியோதயத்வயம்) அவைகிரமசிருஷ்டியென்றும், யுகபத்சிருஷ்டியென்றுமிரண்டு. அவற்றுள்-மூலப்பிரகிருதியில், மகத்தத்துவமும், அகமும், தன்மாத்திரபஞ்சகமுமெனச் சத்தப்பிரகிருதியுண்டு. அவற்றுள், பஞ்சபூதம் அதிற் பிரமாண்டபுவனசரீரகடாதிபிரபஞ்சோதயமே கிரமசிருஷ்டியாம். நிஸ்தரங்க சமுத்திரத்துள் ஏககாலத்தில், வாயுவசத்தால் விசித்திரபேன.

காங்க, புற்புதாதிகளுதயமாவதுபோலச்,சச்சிதானந்த பிரமத்தில் ஏககாலத்தி
ல்உதித்தமாயாமயஜகமருபப்பிரசாரணையேயுகபத்திருஷ்டியாம். இந்த இரண்
டுபிரகாரமும் சுருதிசித்தமாகையால்அங்கீகாரமாம். அவற்றுள்அதிரோஹிதபிர
மசொரூபமான விகாரமில்லாத ஈச்சுரனுல், சடப் பிரகிருதியில், சகலகா
ரியோதய மெப்படி என்னுல், இச்சாதிகமில்லாத சூரியனுல் யத்தனுதிகமி
ல்லாத சூரியகாந்தத்தில், அக்கினிஜ்வாலிக்குமாபோல ஈச்சுரனுல், பிரகிருதி
யில் மகதாதிகாரியோதயத்துக்குவிரோதமில்லை யென்றறிக. இனி (மாயாகா
ரியோதயசதுஷ்டயம்) விருத்தி, பரிணமம், ஆரம்பம், விவர்த்தமென-மாயா
காரியோதய சதுஷ்டயமுண்டு. அவற்றுள்-படகுடீரபாவ, க்ஷீரத்ததியாகா
ர தந்துபடநியாய-ரச்சுசர்ப்பரூபமெனக்கிரமத்தில் திருஷ்டாந்த சதுஷ்டய
முண்டு. சத்ரூபப்பிரமத்தில், மித்தியாவஸ்து கற்பனைக்கு ரச்சுசர்ப்ப ஸ்தா
ணுசோர, சொப்பனேந்திரசால, கந்தர்வநகர. சுத்திகாரசித, நீலககன, மரி
சிகாசல முதலானவை திருஷ்டாந்த சமுகமாம். நிர்விகாரசொரூபாத்துவயஜ
ன-ஆத்மனிடத்தில், மித்தியாவஸ்து கற்பிதமாலுல், அந்தப்பிராந்தி யாருக்கு
த்தோன்றினதென்றுல், யாதாமொருயோகீச்சுரனிடத்தில் சதிரதிகாங்ஷை
யென்னுந் திரிவிதரூபங்களும் சொப்பனத்தில் ஏககாலத்திற்றோன்றினும், அ
தனுல் அவனுக்குயாதொரு ஆனியுமில்லாததுபோலச்சாக்ஷிகளன ஆத்மனி
டத்திற் குணத்திரயாத்து மகப்பிரகிருதியில் பிராந்திஞாதுரு, பிராந்திஞானம்
பிராந்தி ஞேயமென்னுந் திரிபுடிமயப் பிரபஞ்சம் ஏககாலத்திற் கற்பிதமா
ஞலும் அந்த ஆத்மாவுக்குயாதொரு ஆனியுமில்லை. இனி ஈச்சுரனுல் சிருஷ்
டியானமாயாமய வியோமாதி பிரபஞ்சமானது, சொரூபத்தில் ஏகப்பிரகா
ரமாமென்றறிக. இனி (விஷயத்திரயம்) அதனிடத்தில்சீவபுத்தி கற்பிதமான,
போக்கியத்வரூபமே-பிரீதிவிஷயம், துவேஷவிஷயம், உபேக்ஷாவிஷயமென
த்திரிவிதமுண்டு.அவற்றுள்,வனிதாதிவிஷயமேபிரீதிவிஷயமாம்வியாக்கிராதி
விஷயமேதுவேஷவிஷயமாம். வீதித்திராணுதிகமேஉபேக்ஷாவிஷயமாம்.அந்த
விஷயமொன்றில் ஈச்சுரநிர்ம்மிதமானஏகாகாரமும், சீவகற்பிதமான அநேகா
ரமு முண்டு. இப்பாலும் விவேகசிந்தாமணியில் வெகுவாகத் திருஷ்டாந்தஞ்
சொல்லுகையால் விரிவாமென்று இம்மட்டில் மூடித்ததென்றறிக.

இப்பால்உபநிஷத்து விக்ஷேபசத்தியென்றும் ஆச்சாதானசத்தியென்
றுஞ்சொல்லும். இவற்றுள் விக்ஷேபசத்தியென்றது, அபின்னசத்தி சிற்சத்
தி ஆனந்தசத்தி சுகசத்தி என்றும்பெயராம், இனி ஆச்சாதானமாவது ஆ
த்மஞானத்தைதமூடிக்கொண்டு அஞ்ஞானமாயிருக்கும் இதுசித்தினிடத்தில்
சந்திரன் களங்குபோலவுண்டான விவர்த்தனமாயையென்றறிக. இனிவி
க்ஷேபமென்றது முன்சொன்ன ஆச்சாதானசத்தி அஞ்ஞானமாய் மூடிக்
கொண்டிருப்பதை வெளியாகத்தோற்று ஆத்மாவுக்கு விஷயஞானங்களைக்
காட்டமூலமாயைமுதல் பஞ்சீகிருதங்கண்டீயாகத்தத்துவசிருஷ்டியான தெ
ன்றறிக. ஆச்சாதானமாவது ஆத்மஞானத்தைதமூடுகிற அஞ்ஞானம், விக்ஷே
பமாவது மூடின அஞ்ஞானத்தைக்கெட்டியாய்ப்பற்றிக்கொண்டு சகலதுக்க

விஷயங்களிலமுத்திச்சனனமரணதுக்கத்துக் கேதுவாக்குமென்று சொல்வாரு மூளர். இந்தச் சடசத்திதானே மூன்சொன்ன மூன்றுமாயையுமாய் காலதத்துவம்- கர்த்ததத்துவம்- மூலாங்காரம் - முக்குணம் - மூன்றுங்காரம் உசை - கரணம் பஞ்சீகிருததத்துவம் பிண்டப்பிரமாண்டங்களெல்லாமு மானதென்றறிக. இதுவே சீவேசுரர்க்கு உபாதியானதென்றறிக. இனிப் பிரம சிற்கிரணமே சித்தாகிறபிரமம் இந்தச்சித்திலுண்டானது மாயை யிந்தமாயையிலே சித்துப்பிரதிவிம்பித்துச் சீவேஸ்வர கூடஸ்தபிரமமென்று நான்குவிதமாம். இதில் சிற்கிரணசித்து ஒட்டற்று நிற்கையால் அஃதே பிரமமென்றும் அனுபவத்தில் மூன்றுபாழுங்கடந்ததற்கப்பாலானதென்றுஞ் சீவேஸ்வரகூடஸ்தனுக் கப்பாலானதென்றுஞ்சொல்லும். இனி ஜகசீவபரமுண்டாகிறவிடமாயும் மூலமாயைக்கிடமாயுமிருப்பதால் கூடஸ்தமென்றும் இதைத்தானே துரியனுக்குக்கூடஸ்தமென்று மீஸ்வரனேபிரமமென்றுஞ்சொல்லும். இனிப்பஞ்சகிருத்தியங்களுக்கு அதிஷ்டானமாகையால் ஈஸ்வரனென்றுஞ் சனனமரணப்பட்டுச் சீவிக்கையால் சீவனென்றும் இப்படிச்சிருஷ்டிபேதஸ்தானபேதங்களால் பெயர் வெவ்வேறுனதென்றறிக. இப்படிச்சிற்சடசத்திகளால் தூலசூட்சுமகாரணப்பிரபஞ்சமெல்லாமுண்டானதென்றறிக. இதைஆகமங்கள் விரிவாகச்சொல்லும்.

உக. மன்னுஞ்சிவத்திற்சத்தி மதித்திடிலிருவகைத்தாம்
பின்னமற்றிருப்பதொன்று பின்னமாயிருப்பதொன்று
மன்னியசிவத்தபின்ன மாசில்சிற்சத்தியாகும்
பின்னமாவதுசடந்தான் பேர்சொலின்மாயையென்னே.

உஉ. அரியனுயறிதற்கொண்ணு வருபரஞ்சிவத்தைநாளுந்
தெரியுமாறதனைச்செய்யுஞ் சிறந்தசிற்சத்திதானும்
பிரிவிலாச்சிவனுக்கென்று பின்னமாமாயாசத்தி
விரியுமாம்சகத்துக்கென்றும் வித்தாயுமேவுமன்மே.

இனி (முத்திநிலையாவது) சுத்தஞனஆத்மா பிரகிருதியோடுகூடிப்புருஷபாவத்தையடைந்து விகுர்தியாலுண்டானபுத்தியாதிகளால் பந்தப்பட்டுசெனனமரணமெடுக்கிற அறியாமை நீங்கவேண்டிச் சற்குருவையடைந்து முன்சொன்ன உபக்கிரமத்தாலுள்ள மாயை முதலான தத்துவங்களெல்லாம் நேதி நேதியால் வேறுபண்ணிச் சடமானபின்பு தத்துவங்ளாலே வருகிற சுகதுக்கமெல்லாம் பிரகிருதிக்குள்ளது தனக்கில்லையென்று குருவால் அனுக்கிரகிக்கப்பட்டு அவித்தியாசம்பந்தமான குணத்திரயங்களும் விகுர்தி சம்பந்தமுமடங்கச் சமாதிசாதித்து எல்லாமிறந்தவிடத்தி லாத்மாவைக்கண்டு சித்துத்துரிய மூன்றையுங்கடந்து சத்தாகிறபொருளாய் நீலோற்பலவாக்கியதிஷ்டாந்தத்தால்தானேபிரமசொரூபமாவது மோக்ஷமென்றறிக. வேதாந்திகளாத்மாவை ஞப்திமாத்திரமென்றும் மகத்பரிமாணமென்றுஞ் சொல்வா

ர்கள்இதுவிபாசகற்பிதமென்றறிக. இந்தவேதாந்தசித்தாந்தம்நியாயசம்பந்த
ங்கூட்டிச் சொல்வதென்றறிக. இனி முன்சொன்னகிரீடாப்பிரமவாதத்துக்
கும் பிறகுசொன்ன லீலாப்பிரமவாதத்துக்கும்பேதமெப்படியென்னில், அவ
ன் பிரமத்தின் முக்குணத்தில் மும்மூர்த்திகளால் சகமுண்டான தென்று
சொல்வில் லீலாப்பிரமவாதம் சமுத்திரமுந் தரங்கமும்போல் பிரமந்தானே
சகமானதென்று சொல்லுகையால் அதற்குமிதற்கும் பேதமுண்டென்ற
றிக. லீலாப் பிரமவாதிக்கும் பிரதிவிம்பவாதிக்கும் பேத மென்னெனில் அ
வன் சமுத்திரதரங்கம்போலப் பிரமமென்று சொல்வில் இவன் சூரியன்க
டசலத்தில் பிரதிவிம்பம்போலப்பிரமமுந் தேகோபாதிகளாகியபேதத்தால்நா
னுவாய்த்தோன்றி சகமாமென்று சொல்கையாலவனுக்குமிவனுக்கும்பேத
முண்டென்றறிக.இனிப்பிரதிவிம்பவாதிக்கும்மாயாவாதிக்கும்பேதமென்னெ
னில்அவன் தேகோபாதிசூரியன்போலப் பிரமமே சீவனுமென்றுசொல்வில் இ
வன் பிரமமாகிற வவிகாரி சந்நிதான-த்தில் மாயைமுதலிய பிண்டாண்டச
கத்துகளாகி யனந்தபேதமாயழியுமென்றும் அந்தமாயை மித்தையென்றும்
மாயையாலேகற்பிதமானதெல்லாம் பொய்யென்றும் ரச்சு சர்ப்ப பிராந்தி
போலென்றுஞ் சொல்லுகையாற் பேதமுண்டென்றறிக. இனி முன்சொன்
னமாயாவாதிக்கும் சுத்தவேதாந்திக்கும் பேதமென்னெனிலவன் பிரமமொ
ன்றுமேநித்தியம் மற்றதெல்லா மநித்தியமாயழிந்துபோமென்றுஞ் சொல்
லுகையால்இவன் சத்திசக்கரத்துக்குப்பின்னமானவுலகுகளேநிஷ்களமென்
றும் ஆகாசத்தில்மேகசஞ்சாரம்போல் மாயாபடலமென்றும இந்தமாயையி
னதில்லாமற்போனற் பிரமமேநிதந்திருக்குமென்றும் இரச்சுசர்ப்ப பிரமை
போல் மாயாவிகற்பமெல்லாம் பிரமையென்றுஞ் சொல்லுகையால்பேதமு
ண்டென்றறிக. இனி யிந்தவைதீகவேதாந்திக்குஞ் சுத்தவேதாந்திக்கும்பேத
மென்னென்னில் அவன் முன்சொன்னதுபோலே யிருக்க இவன் பிரமமா
னது - ரு -விதமென்றும்இதிற்சித்து நாலுவிதமென்றுஞ் சந்திரன்களுக்கு
போலச் சித்தினிடத்தில்மாயையுண்டானதென்றும் இதெல்லாம் பொய்யெ
ன்றுஞ் சீவாத்மா பரமாத்மாவுண்டென்றுஞ் சொல்லுகையாற் பேதமுண்
டென்றறிக. இனி வேதாந்தத்திற் பின்னுமொருவித சிருஷ்டிபேதம்.

உக. சிற்சிவஞ்சிற்சத்தியீசன்விஞ்ஞானோமஞ்செய்காலபர
நச்சும்புருடன்பகுதியுமாய்நல்லகங்கரண
மெச்சியமுக்குணந்தன்னிலீரெட்டினின்மேவுபஞ்சி
நிச்சயம்பஞ்சீகரித்தண்டம்பூதங்கிகருலகே.

என்றது-சிற்சீவனுனது சித்து. இதிலீஸ்வரன் இதில்விஞ்ஞானமாகிறமா
யை யிதில்காலபரம் இதைச் சித்தாந்தி காலதத்துவமேழாக விரித்துச்சொ
ல்லுவான் இந்தக்காலபரத்திற் புருடன் இதில்மூலப்பகுதி யிதிலகங்கரண
ம் இதில் மூன்றுகுணம் இதில்தைசத வைகரி பூதாதி ஆ ஆங்காரம்-ங-

இதில் முன்புசொன்ன வகங்காரணத்திலே மூக்குணந்திரண்டதுசித்தம் சித்தத்திற் புத்தி புத்தியில்மூன்ருங்காரமுண்டா யிதிற் றைசதத்தில் மனமும் ஞானேந்திரியமும் வைகரியிற் கன்மேந் திரியமும் பூதாதியிற்சத்தாதியுமிந்தப்பதிணறும் மூக்குணஞ்சார்வாகவுண்டாம் இந்தச்சத்தாதியிற் பஞ்சபூதமுண்டாம் இது பஞ்சீகரித்து பிண்டப்பிரமாண்டங்களாமென்றறிக. முன்சொன்ன சிருஷ்டிக்கு மிதுக்கும் பேதமென்னெனி லிந்தச் சிருஷ்டியில் ஈஸ்வரனிடத்துமாயையுண்டென்றதுங்காலபரத்திற்புருடனுமும் மூன்ருங்காரத்திலுந் தத்துவசிருஷ்டியிலும் பேதமாகையாற் பேதமென்றதென்றறிக. இதுவும்வேதாகமவங்கீகாரமாம். இதில் சொருபந்தடம் பந்தமுத்தியாகியஇந்நான்கும் முன்சொன்னது போலென்றறிக. முன்சொன்னவேதாந்திகளெல்லாரும் ஆறுபிரமாணங்கொள்ளுவர் இந்தமாயாவாதமுதலானவேதாந்தங்களைப்பிரதிபாதிக்கிற உபநிஷத்துக்களில் சிலவாக்கியவிபரம்

உசு. உபாதியொழிந்தாலுயிர்பரமதொன்றே
சுபாசுபர்களாய்நின்றதோற்றம் - உபாதி
கடாகாயமாகாயம் வேறுகக்காண்கை
யடாய்காணறிவொன்றேயாம்.

இப்படி யிந்தவேதாந்தம் வியாசர்முதல் சங்கராசாரியரீருன வனேகம் பேரால் சகலசாஸ்திரசம்மதியாய்உபநிஷத்தப்பிரமாணங்களாகச் சொல்லப்பட்டதென்றறிக. இந்தவேதாந்திகள் ஆத்மாவை ஒருப்திமாத்திர மென்பார்கள் இப்போதுசொன்ன வேதாந்தமார்க்கமேழுவிதமும் உத்தரமீமாங்கிசையின் பேதமென்றறிக.

அ-வது—அத்தியாயம்.

அச்சுமாருதவாதிமதம்.

அச்சுமாருதவாயிருத்தல் மெச்சியவாதமெய்யிதுவாமே.

(அபசாத) சீவராசிகளும் பெண்ணச்சுப்பெண்ணுகவும் ஆணச்சு ஆணுகவும்அந்தந்தசீவன் அந்தந்தவச்சாய் ஒருசீவனச்சுஒருசீவனுகாமல் அந்தந்தசீவனச்சாகத்தானே யாண்பெண்ணுப்பிறக்குமென்றறிக. இப்படிச்சிருட்டிகாலத்திலும் இலயகாலத்திலும்அந்தந்தவச்சுப்பிரகாரமேயிருக்கும்இப்படியச்சுகள்கலையாமலிருக்கிறதே சொரூபம். திரும்பிச்சிருட்டிகாலத்திலும் பூர்வம்போலச்சுகள்கலையாமற்பிறக்கிறதே தடத்தலக்ஷணம். அந்தந்தச்சீவனச்சுப்பின்னெருசீவனச்சாகாமல் அந்தந்தவச்சாகச் சென்னமரணப் படுகின்றதே பந்தமென்றறிக. இனிச்சிவனேப்பூசைபண்ணியந்தந்தவச்சுகளாய் மீண்டுமீண்டும் பிறவாமல் சிவன்சந்நிதானத்திலிருப்பதேமுத்தியென்றறிக. இதற்கு (மறுப்பு) அகவிகை கல்லாயும் அரிபல அவதாரங்களாயும் பிறந்தும் சிலந்தி

அரவு ஆனை எலி யிதுகள் மனுஷராயுஞ் சாபங்களினுல் ஒருஅச்சு வே
றொரு அச்சாயுஞ் சித்தபுருஷர்கள் கிருஷ்ணன் மூதலானபேர் அனேகம்
வேறுவேறு அச்சுகளாயும் ஆண்பெண்ணுயும் பெண்ணுணுயும்ஒருசீவன்தா
னே - அசாத - அச்சுமெடுக்குமென்றும் வேதாகமபுராண முதலானது
சொல்லும் இப்படி வேதாகமபுராணங்கள் சொன்னதல்லாமல் பிரத்தியகூ
மாய் ஒரு அச்சு வேறொரு அச்சு ஆனதில்லையென்றுல் கறுத்த வண்
டுகள் குண்டலபுழுக்களை யெடுத்துப்போய் மரங்களைத்துளைத்துவைத்தும்
பஞ்சவர்ணங்களாயிருக்கிறகுளவிகளும் அதற்கதற்கேற்ற நீண்டபுழுக்களை
யெடுத்துப்போய் கோயில்கள் வீட்டுச்சுவர்கள் இறப்புகள் இது முதலான
விடங்களில் வச்சிரக்கூடு போலுந்தேன்கூடுபோலும் அறை யறையாகச்
செய்துஅதிலேவைத்துப் பின்னையொருஉருவாயெடுத்துப்போய்வைத்த கு
ளவிகள் நிறமாய்ப்பறந்துபோயும் பின்னையொருவிதங் குளவிகள் சுவர்களை
அடியிற்றுளைத்துப் புல்லுக்கிளிகளைக் கொண்டுவந்துபத்திருபதிடத்தில் வை
த்து மூடிப்போட்டும் இப்படி அனேகவிதமான வண்டுகள் குளவிகள் புழுக்
களைக்கொண்டுவந்துவைத்து வாசலைமூடிப்போட்டுச் சிலநாள்சென்றபிறகு
பூர்வபுழுக்க ளச்சுப்போய் எதுகொண்டுவந்துவைத்ததோ அந்தவண்டுக்
குளவிக ளச்சாய்க் கூட்டைத்துளைதுப் பறந்துபோகும் இதல்லாமல் ம
யிற்குட்டியென்கிற புழுக்கள் தன்னைத்தானே திரணங்களாலே காயத்து
போலக் கூடுகட்டிக்கொண்டு அந்தக்கூட்டைச் செடிகளிலே பற்றவைத்
துத்தொங்குங்கால் சிலநாள்சென்றபிறகுமனுஷனைக் கொட்டுகிறகுளவியா
ய்ப்பறந்துபோகும் இதல்லாமல் புல்லுகள் செடிகள் காடுகளில் நீண்ட பச்
சைப்புழுக்கள் தொத்திக்கொண்டு பனிகள்விழுந்து நனைபோலும் உமிழ்
ந்ததுபோலும் கூடுகட்டிக்கொண்டு அந்தப்புழுத்தானே சுருங்கிப் பருப்பு
போல வட்டமாய்ச் சிவப்பாய் நுனையாம் பூச்சியென்று பறந்துபோகும்
இதல்லாமல் தண்டலைச்செடிகளிலும் சிலசெடிமரத்தினிலைகளிலும் பலவர்
னமான பட்டாம்பூச்சிகள்வந்து அரும்புபதித்தாற்போலே முட்டைகளைப்பி
ச்சி யந்தமுட்டைகள் சிலபொழுதில் மயிரிமைபோலே புழுக்களா யிலைகளை
யெரித்துத்தின்று பெரிய எரிப்புழுக்களாயுங் கம்பிளிப்பூச்சியாயும் இதுகள்
முதிராதவுடனே யூர்ந்துபோய்ச் சுவர்கள் இறப்புகள் மரத்தடிகளிலே நெ
ருங்கித்திரளாய்க்கூடிச் சிலந்திநூல்போல் மேலெல்லாங்கூடு கட்டிக்கொ
ண்டு இதின்மயிர்களுதிர்ந்துபோய்ச் சிலநாட்சென்றபிறகு எந்தவர்ணப் பூ
ச்சி முட்டை யிட்டுதோ அந்த வர்ணப்பூச்சியாகி யிறகு முளைத்துப்பற
ந்துபோகும் இதல்லாமல் பசிரிக்காய்ச் சிலந்திப்பூச்சியென்கிறது தன்னை
நூல்களாலே பெரிய பட்டுநூற்கூடாய்க் கட்டிச் சிலநாட்சென்றபிறகுகு
ரியபுடம்போலுஞ் சுருகுப்பட்டுப் போலும் பட்டாம்பூச்சிகளாய்ப் பறந்
துபோகும் பின்னும் அழிஞ்சில்க் கொட்டை உதிர்ந்தவிடத்தில் மழைபெ
ய்தபிறகுஅந்தக் கொட்டைகளுப்பிக்கொண்டு அதிலே புழுக்களுண்டாய்

ஊர்ந்துபோ யந்தமரங்களுடனேயொட்டிக்கொண்டு சிலநாளையிலே வெள் ளைப்பட்டாம்பூச்சியாய்ப் பறந்துபோகும் பின்னும்மரங்கள் செடிகளிலே து டப்பம்பருமத்திலே நீண்டபசிசைபுழு நீண்டபட்டுக்கூடாகக்கட்டிக்கொண் டுதொங்கி அதுவுஞ்சிலநாளைக்குப்பிறகு மெல்லியதும்பியாகப்பறந்துபோகு ம் பின்னுந் தாயத்துபோலும்பருத்திக்காய்போலும்நாறுமாற்றுத் தங்கநிற மாகவும் பின்னும் அனேகவிதங்களாகக் கூடுகட்டிக்கொண்டு பின்னையொ ரு வண்டாய்ப்பறந்துபோகும் தண்ணீரில்நெற்பயிர்விளையுமிடங்களில் நாலு காலாய்ச சிலபூச்சிகளிருக்கும் இதுகள்கெற்பித்து அதின்முதுகைத் தூள த்துநீண்டதும்பிகளாய்ப்பறந்துபோகும் நண்டுகள் தங்கள் தேகமிருக்கும் போதே யதில்வேறொருதேகமுண்டாய் முன்தேகத்தைப்பாம்புதோலுரித் தாற்போல்தள்ளிப் பால்நண்டாய் முதிர்ந்து பெருநண்டாகும் பாம்பு -கு- வது - சென்றபிறகு பட்சியாய்ப்பறந்துபோகும் ஒரு அச்சிலே ஒரு அச் சுப்புழுக்கிறது நால்வகையோனியல்லாமல் ஓமங்களில்மந்திரங்களில் நினை வுகளில் ஒருயோனியிலொருயோனி பிறப்பதும் ஒருசீவன் ஒருசீவனைத் தன் னச்சுப்போலாக்குகிறதும் ஒருசீவன் தான்தானேவேறொரு அச்சாக்கு கிறதும் ஒரு அச்சுச்சீவன் தானே பலசீவனுகிறதும் இப்படியிந்தத்தீவுமு தலான ஏல்லா வண்டங்களிலும் ஒரு அச்சிலே வேறொரு அச்சுப்பிறக்கை யாலும் அச்சுமாறுதென்றது தப்பாம். இங்ஙனமிருக்க எல்லா வச்சுகளும் அந்தந்த வச்சுகளாகப்பிறக்குமென்பது அச்சுமாறுதவாதிமதமென்றறிக.

கூ-வது—அத்தியாயம்.

சாங்கியன்மதம்.

பகுதிபுருடன்பாலகணதி விகுதியாற்பந்தமேவுசாங்கியமே.

சொருபலட்சணம் அழுக்கில்லாத சுத்தமா யொன்றையுமறியாததாய் அறிவே சொருபமாய் அசங்க சின்மாத்திரமாய் பிரகிர்தி விகிர்திக்குவே றுய் நித்தியமாய் விவர்த்தமாய் முத்தராய்ப் பலவாயு மிருக்கு மாத்மாவெ ன்றறிக. இனித் (தடத்தலட்சணம்) முன்சொன்ன சுத்தாத்மாவில்பிரகிர்தி யானது நித்தமாய் விவர்த்தமாய் சடமாய்எல்லாப்பதார்த்தங்களுக்குங் கா ரணமாய்முக்குணங்களு மொத்துநிற்கிறநிலையே தனக்குவடிவாய்மூர்த்தமா யிருக்கும் இதில் விகிர்தியானது புத்திதத்துவமுதல் பிருதிவி பூதங்கடை யாகத் தத்துவம் - உஐஙு - விகிர்தி - க - ஆ - உஐச - ம் புருடனுகிற ஆத்மசந்நிதிமுன்னே பிரகிருதியாலே விகிர்தி சேட்டையைப்பெற்று பிரகி ருதி தூலசூக்கும பரமாய் யோனிபலவினும் விரிந்தொடுங்கி யாத்மாவாகிறபு ருஷனைப் பந்திக்கும் இனிச் சுத்தாத்மாவானவனுலே சிருட்டியில்லையாம். எங்ஙனமென்றுல் பிரகிர்தி விகிர்திக்கு வேறுனவனுகையாலென் றறிக. இ வனுலேதடத்தலட்சணம்வருமோவென்னில்முன்சுத்தாத்மாவின்சந்நிதியிலே

மூலப்பிரகிருதி சேட்டையைப்பெற்று விகிர்தியுண்டாய் இதில்தத்துவங்களெல்லாமுண்டாகி பிரகிருதிமூலம் புரியஷ்டகம் விகிர்தி யென மூன்றுமாய் இந்தமூன்றுந் தூல சூக்கும பரமாய்நின்று சிருட்டியுண்டாக்கையால் திடத்தலட்சனஞ் சொல்லப்பட்டது.

உரு. இலங்கியபுருடன்மற்று மேய்த்தநற்பகுதியென்னத்
துலங்கியவிரண்டுமூலமை சொல்லியபகுதியின்பால்
மலங்கெழுமாலுங்காதம் வருத்தனவிருதியெல்லாஞ்
சலங்கெழுங்கட்டுவீடிந் தனைக்குத்தான்புருடன்செய்யும்.

உசு. பகுதியில்விருதியாகிப் பரந்தெழுமின்பதுன்பந்
தருநிறம்சித்தாந்தன்மே லெற்றுதல்பெத்தமாகும்
விருதிநற்பகுதியெல்லா னெனக்கில்லையென்றுபார்க்க
வகலுமற்றதுவேவீடா மருளமற்றினைமேவுறின்றே.

உன. சித்தமானபகுதிகீழ் சிறந்தமூலைவந்தொருபதோ
டொத்ததானவிருதிதன்னில் விருதியொன்பகுதியில்
வைத்தலாற்பகுதியவ் விருதியிற்பதைத்தலால்
நித்தமானமுத்தியென்று ரீடசாங்கியவாதமே.

உஅ. பகுதியூமான்மெய்ப் பகுதிவிருதி
சகலந்தனென்னைகபந்தம்-விருதிபாம்
யாதும்பகுதியுடையதெனக்கில்லையென்னும்
வேதநஞ்சாங்கியன்றன்விடு.

என்றது- முன்சொன்ன காலுகவிக்குமாத்தம்பிரகிருதியும் மாயையும் அநாதியேயுள்ள தாமைகயாற் பகுதியால்வந்தவிகுதியாலே ஆத்மா தன்னைப்பந்தப்படுத்திக்கொண்டு சனனமரணப்பட்டுச் சுகதுக்கங்களை யநுபவிப்பதே பந்தநிலையென்றறிக. இனி முத்திநிலையாவது சுத்தனான ஆத்மா பிரகிருதி புருஷபாவத்தையறிந்து புத்தியாதிகளையடைந்திருக்கிற அறியாமையைப் போக்கி விகிர்தியாலுண்டான சுகதுக்கங்கள் பிரகிருதிக்குள்ளது தனக்கில்லையென்று குருவால் அனுக்கிரகிக்கப்பட்டு அவித்தையாசம்பந்தமான குணத்திரயங்களடங்கச் சமாதிசாதித்துப் பார்த்து தான் அநாதியில் சுத்தனென்றும் பிரகிருதியோடுகூடி வேஷதாரியாய் விளைந்த மாமாத்திரமாய் நின்றேமேயல்லாமல் கமக்குப்பெத்தமில்லையென்று தெளிவதே மோட்சமென்றறிக.

ய-வது—அத்தியாயம்.

நிரீஸ்வரசாங்கியன்மதம்.

புருடன்சந்நிதிபொலியும்பகுதியென்
ணிருடியாகுநிரீஸ்வரசாங்கியே.

உசு. மூலம்புரியஷ்டகம்விகிர்தி யென்றுமூன்றுயிதுதானே, தூல
ருசூக்குமபரமெனவே சுத்தபுருடன்சந்நிதியிற், பாலன்சே
ட்டைபுரிந்துலகம் யோனிபலவாய்ப்பரந்தொடுங்குஞ், சால
வென்றுநிரீஸ்வர சாங்கியன்ருன்சாற்றிடுமே.

என்றது-பிரகிருதியானது மூலம் புரியஷ்டகம் விகிர்தி யென்றுமூன்
றும் இதுதானே தூலஞ் சூட்சுமம் பரம் என்றுபெயராய் சுத்தபுருஷன்
சந்நிதியிலே முன்பிரகிருதியானது பாலனைப்போலச்சேஷ்டைபுரிந்து யோ
னிபலவாய்ப்பரந்தொடுங்கித்திரிவதுவேகுற்றமென்று நிரீஸ்வர சாங்கியன்
சாற்றுவான்.

உய. இன்னசாங்கிய மெனுதந்திரனுமொரு சங்கையன்றியிடுமி
றைவனுல், சொன்னசாங்கியநிரீசவீசுர சாங்கியத்திறைடு
தோன்றுமா, லன்னதானவைகரணவன்றனி லசத்தாயழி
யுமாதலாம், சொன்னசாங்கியநியாயமாதிசடயங்கன்மாயையி
டைதோன்றுமே.

இந்தச் சாங்கியத்திலே பேதமானவிதம்- யோகசாங்கியம்- ஞானசாங்
கியம்- நிரீஸ்வரசாங்கியம்-இச்சாசாங்கியம்-புருடசாங்கியம் - பேதசாங்கியம்
ஆ - சு - முன - ங - ஆ - கு - இதின் வகைகள் நித்திய நின்மலாத்
மா சந்நிதானத்திலே குணத்திரயாத்மீகப் பிரகிருதி பஞ்சவிம்ஸதி தத்துவா
த்மகமான சேதமாய் விவகரித்துச் சம்சாரபந்தமுஞ் சத்துவாதிகுணத்திர
யக்கிரமத்தில் வாதபித்தசிலேத்துமமாகிய மூன்றும் பிரகிருதி சாந்தி கு
ரோத மூடகாந்தி குணமான உத்தம மத்திம அதம புருஷத் திரயத்தில்
வர்னாந்தி முதலானது விவகரிக்கும் இவர்கள் பிரத்தியட்சம் அனுமானம்
ஆகமம் இந்தமூன்று பிரமானமுங்கொள்ளுவார்கள் ஆத்மாவை யசங்கசின்
மாத்திரமென்பர் இதுபேதவாதமாகியதுவிதமென்றறிக. இதுகபிலர்சூத்திர
ப்படியமைக்கப்பட்டு வேதாந்தத்துக்கு விகற்பமான வாக்கியங்களாம்.
இனிப் (பாதஞ்சலமதம்) இயமாதியஷ்டாங்கத்தாலேமனோநிர்ச்சலஞ் சித்திக்
கும் ஆத்மா யோகத்தில் மனோலயமாய் அஞ்ஞானங்கெடுகிறதே மோட்ச
மென்பர் ஆத்மாவை அசங்கசின்மாத்திரமென்பார் முன்சொன்ன வேதா
ந்திக்கு மிவனுக்கும் பேதமென்னெனில், அவன் சீவன் பரன் மாயையு
ண்டென்றும் அயிக்கமென்றுஞ் சொல்லுவான். சாங்கியன் புருடன் பிரகி

ருதி அறுதியென்றும் பகுதியில் விகிர்தியுண்டாய் அதிறல் புருடன் பந் தப்பட்டு பாலன்போல விளையாடுவனென்கையாற் பேதமென்றறிக.

ககு-வது- அத்தியாயம்.

பூருவமீமாங்கிசை.

சத்தம்பிரமந் தமம்விவர்த்தனுத்மா

வொத்தபூர்வமீ மாங்கிசையுரையே.

சொரூபலட்சணம் நாதமாகிறசத்தமே பரப்பிரமமாயிருக்கும் அந்தப்பி ரமமானசத்தமாய்ப் ஒருவராலுண்டானதல்லாததாய் சுயம்மாயிருக்கிற சத்தமே பிரமம். இனித் (தடத்தலக்ஷணமாவது) சத்தப்பிரமமானது விவர்த்தனமா யையால் பஞ்சபூதங்களையுண்டாக்கி யிந்தப்பஞ்சபூதங்களால் பிண்டப்பிர மாண்டங்களெல்லாமானதென்றறிக. இனிப் (பெத்தநிலையாவது) ஆத்மாவா னவன் அறிவுள்ளவரை யனேகமாத்மாவாய் வியாபியாய்ப் புத்தியைத் த னக்குக் குணமாகவுடையறுய்ப் புத்தியைபொறிகளிலே பிரவேசிக்கச் செய் துவிஷயங்களை அனுபவிக்கும்பொருட்டு முன்சொன்னபூதத்தை புத்திமுத லானதத்துவங்களாகவும், தூலசூக்குமதேகமாகவுங்கொண்டு நல்வினை தீவி னைக்கீடாக நரக சொர்க்கங்களையநுபவிப்பதாயிருப்பனென்றும்,உடலையுஞ் சுக துக்கங்களையுங் கொடுப்பதுகன்ம மல்லாமல் வேறொருதெய்வங்கொடுக் கிறதில்லையென்றும், ஞானங்களால் வீடில்லையென்றும், வினைகள் விடுகிற தற்கு வேறுவிதியில்லை யென்றும்,பசுப்படித் தியாகஞ்செய் தந்தயாகத்தி னை லுண்டான பலன்களைச் சொற்கத்திலநுபவித்து அந்தப்பலன் நசித்துத் திரும்பி வேறுவிதியில்லாமற் பூமியில் பிறக்குமென்றுஞ், சுருதிமந்திரங்க ளால் செபம்பண்ணினால் கருதியபலன்களைக் கொடுக்குமென்றும் இப்ப டிச் சொன்னவிதங்களா லாத்மா கட்டுப்பட்டுத்திரிவானென்றறிக. இனி உபக்கிரமாதி ஷடுவித லிங்க தாற்பரியத்தால் வேதவாக்கிய விசாரபூர்வக மாய் ஜோதிஷ்டோம யாகாதிகளைவிதிக்கும்.

ஈக. பெந்தமூன்றுளபேசிற்பகுதியும்
வந்தெக்கணுவத்தம்வைகாரிகந்
தந்தவ்வியத்தமுதன்முத்திஞானமு
முந்துமிச்சாதி மூடற்பெந்தமே.

ஈஉ. ஏதமீறெக்கணுவத்தமென்பது
ஓதுகசோதிட்டோதிமாதிப்பிரபந்தனஞ்
சாதவைகாரிகந்தன்னைச்சாற்றிடிற்
பேதபஞ்சவெஞ்ஞாதிப்பிரபந்தனம்.

என்றது-பகுதியென்றுந் தெட்சணவத்தமென்றும் அவ்வியத்தமென்றும் மூன்றுபந்தமாம். இதில் தெட்சணவத்தமாவது ஜோதிஷ்டோமாதி பந்தனம். வைகாரிகமாவது பஞ்சவெஞ்ஞபந்தனமாம். அவ்வியத்தமாவது ஞான யெஞ்ஞபந்தனமாம். இதனுலேசொர்க்க நரக சென்ன முண்டாமென்றறிக.

ஈஈ. அறிவுறுமனேகமாத்மா வனேகமும்விபாபிபுத்தி
பொறியுறுகுணமாமென்றும் பூதமீருடல்களாகிச்
செறிவுறுநரகசொர்க்கஞ் சேர்ந்தவல்வினையால்மூத்தி
பிறிவுறுமறிவுசத்தம் பிரமமீமாங்கிசர்க்கே.

ஈச: உன்டானபொருளாமறையுனைத்தென்று மோவாமற்காரிய
த்தையுனைக்குமென்றும், வின்டார்க்குஞானத்தால்வீடுமில்
லை வினைகடனைவிடுனைக்கு வியுமில்லை, கன்டானுழுலகு
தனைக்கர்த்தாவேகான் காரனையிருப்பானேரீசனில்லை, யு
ன்டாகிற்சுவற்கமலமொன்றுமில்லை யொத்திருக்குமிதுபோ,
ருளென்றுனாக்கின்ரோமே.

ஈஎ. காரியமாங்கருமத்தையெல்லாஞ்செய்து காமியபாவக்கரும
மெல்லாம்விட்டுக், கூரியனுப்மேற்குறையுஞ்செய்யோமென்
று, குறித்திருந்தவவனுடையகுரம்பைவீழ்கா, லீரியல்பாயி
ருவினைகளெல்லாங்கூடியிவனுக்கோர்குரம்பையினையெடுத்த
தற்கே, யாருயினைக்கருமபலமான்றநின்ரூல் வானகத்தேதழு
த்திபெனமதிக்கின்ரோமே.

ஈஅ. நரகசொர்க்கந்தீங்கு நன்ரூங்கருமந்
தருமிறைதானன்றியிலை தானும்-பிரமவொளி
நாடுங்குனம்புத்தி ஞானமில்பாடானனம்போல்
வீடென்றுன்மீமாங் கிசன்.

ஆத்மா புத்தி சையோகத்தால் சிற்சொரூபனுய் புத்திசம்பந்த சமாதி யி லயமாலுல் ஆகாசம்போல் மகத் பரிமாணமாய்ப் பாஷாணம் போ லிருக்கும் புத்திகூடிற்சுதப்பிரமாணஞானசமேதனையிருக்கு மென்றறிக. வா சுதேவாத்மகப் பிரகிருதிசொரூபத்தோடையுஞ் சொற்கமேமோட்சமென் பொன்றறிக. இது பேதவாதிமதம், இஃது பூர்வமீமாங்கிசைபேதமாய் சை மூனியென்பவரா லிதற்குச்சூத்திரஞ்சொல்லப்பட்டது.முன்சொன்னசாங்கி யனுக்கும் இவனுக்கும்பேதமென்னெனிற், சாங்கியன் பிரகிருதி விகிர்தியா லே நன்னினத்தானேகட்டிக்கொண்டுதானே விட்டுக்கொள்ளுவானென்பான்

இவன்சத்தமேபிரமமென்றும் அதிலே ஆத்மா புத்தியாதிகுண விகாரங்கள் கெட்டுப் பாஷாணம்போல் கிடப்பது மூந்தியென்கையால் பேத முண்டென்றறிக.

கஉ-வது-அத்தியாயம்.

வைசேஷியன்மதம்.

செடமாயனேகராய்ச் சேஷ்டைகுணங்குணியா
யிடமாஞ்சீவனியல்லவேசேஷியே.

சொரூபமாவது சுகசொரூபியாய் நித்தியமாயிருக்கிற சிவனொருவனுண்டென்பது. இனி (தடத்தமாவது) முன்சொன்னசிவன் கருவிகளைக்கொணர்ந்துசேர்த்து ஆத்மாவுக்கறிவிப்பன். அந்தப்படி யென்னில், சரீரமுண்டாய்த் திதி விந்திரியங்களுண்டாயிதுகளில்மனஞ்சேர்கையால் ஞானமுண்டாயிந்த ஞானத்தாலே புண்ணியபாபுண்ணியமான கன்மமுண்டாயிதனால் சொற்பகாலப்பிராப்தி யுண்டாய்ச் சென்மமானப்பட்டுத் திரும்பியுஞ்சகடத்தாற்போற் றிரியுமென்றறிக. இந்தப்படிக்கு நடத்திவிப்பவனீஸ்வரனும்.

கூன. மூத்திசேரிடத்துநிற்குணத்தாகுமூதுயிர்
பெத்தகாமிடத்தின் முக்குணத்தொடானபேதமாம்
புத்தியானமுத்திநல்கபாவனுதியாலுறும்
வைத்ததாமவத்தைதீமவுமன்னுயிர்சடத்ததாம்.

கூஅ. மைவண்ணமில்லாதபொருள்கடம்மால் வைத்தறிசனம்
வைசேடிகமேயன்றே, அவ்வண்ணமதனுடைய மதமுங்கூறி லாதம்மாக்கள்சேடராகியனேகராகி, மெய்வண்ணங்குணங்குணிபாயவத்தைதமேவி விபன்பாசபெந்தர்களாய்ப்பிறந்திறந்து, உய்வண்ணமதுவின்றியுறுவார்தங்கட் குபர்வீடுபாவனையாலுளவாமன்றே.

கூக. அரும்பாசத்தகப்பட்டபெத்தாத்மாக்க ளனேகபவந்தனின்முயன்றவறங்கடன்ஞற், றிரும்பாதபத்தியதுசிவன்பாலுன்டாய்ச் சிவஞானதினம் பாவித்தங்காராதிக்கப், பெரும்பாவங்கருடனையேபாவித்தத்தாற் பெருவிடந்தீர்ந்ததுபோலப்பாசம்விட்டுப், பரன்பாலுநிற்குணஞ்யவத்தைகெட்டுப் பரஞ்சத்தங்கிருப்பதுவேபகர்வீடாமே.

இனிப் பெத்தமாவது இந்தவாத்மாக்கள் பெத்தப்படு நிமித்தியமாக இவனுக்குஉபகரணங்களாய்க் கூடினதத்துவங்க ளெத்தனையென்னில், பிர

மாதிவிஷயபதார்த்தங்களாவது திரவியங்குணங்கருமஞ் சாமான்னியம் வி
சேஷஞ் சமவாயம் இப்படி ஷட்பதார்த்தமென்றும், இதல்லாமலபாவங்கூடி
ஏழென்றும்இந்தஎழுவிதத்தில் (திரவியமாவது) பூதம்-ச-ஆகாசம்-க-ஆ-று-
இனி காலம்-திக்கு- ஆத்மா-மனம்-ஆ- ச-ஆ -க இதுகள் நித்தியமும் மனித்
தியமுமாயிருக்கும். அதெப்படியென்றால், பரமாணுரூபாயிருக்கிற காரணத்
திலே நித்தியமுங் காரியரூபத்தால் அநித்தியமுமாயிருக்கும். இந்த -க- ல்
பஞ்சபூதங்கள்தானே ஞானேந்திரியங்களாய் அதன்குணமான சத்தாதிவி
ஷயங்களைக் நிறைக்குமென்றும், விஷயங்கள் பஞ்சபூதத்தின் குணமென்று
ம், இதல்லாமல் ஆகாசமொன்றுக்குமே சத்தம் மற்றநான்கிற்குஞ் சத்தமில்லை
ஆகாசத்தினுடையவாசினையத்தா லுண்டானதென்றுஞ் சொல்லும். இனிக்
(காலமாவது) பூதவர்த்தபவுஷியமானபடியால் நித்தியமென்றும், திக்குக
ளாவது தெசதிக்குகளென்றும்இனி (ஆத்மாவானது) சித்தசன்மயுக்தா ய
னேகராய்ச்செடராய்க் குணகுணிபாவமாய் அவத்தையிற்சுழன்று வேறுவே
றுபாச பெத்தர்களாய்ப் பிறந்திறந்து புண்ணியாபுண்ணிய கன்மமுண்டா
ய் மனதின் கூட்டாலவா லுண்டான ஞானத்தால் ஆத்மாவானது முன்
சொன்ன சரீரசமூகங்களால் சனனமரணப்பட்டுச் சொர்க்கநரகங்களனு
பவிக்குமென்றறிக.

இனி (மனமாவது) ஆத்மாவுக்குச் சகலதத்துவங்களையுங் கூட்டி
க்கொண்டு அறிவைக்கொடுக்கும் ஆகத்திரவியம் -க- இதில் முன்சொ
ன்ன பூதங்களைந்திற்கும் காரியம் இந்திரியம் விஷயமென்றும் ரூபத்தா
ல்- ங- விதமாம். இதிற் (காரியமாவது) பிரகிருதியினுடைய ரூபமானதுசரீரம்
பூலோகத்தில் நம்முடைய சரீரமுதலான எழுவகைத்தோற்ற சரீரங்களா
ம். இனி யிந்திரியமாவது கெந்தத்தைதத்தோற்றுவிக்கும் விஷயமாவது கா
ணப்பட்டகடபடாதிகள்- ஆ-ங- இனி அப்புவினுடையகாரியரூபமான சரீ
ரம் வருணலோகத்திலும் இந்தவுலகத்திலுங்காண்க. இந்திரியமாவது இரஸ
த்தைதத் தோற்றுவிக்கும். விஷயமாவது சமுத்திர மழைமுதலானவைகள்,
ஆ-ங- இனித்தேயுவினுடைய காரியரூபமான சரீரம் ஆதித்தலோகத்தில்
காண்க. இந்திரியமுருவத்தைதத்தோற்றுவிக்கும். விஷயமாவது பௌமம் தி
வ்வியம் அவு தாரியம் ஆகாசம் எனநான்காம். இதில் பௌமமாவது காஷ்
டாதியிலுள்ள வக்கினி. திவ்வியமாவது நக்ஷத்திரங்கள். அவுதாரியமாவதுஉ
தராக்கினி. ஆகாஜமாவது இரத்தினுதிகள்-ஆ-ச- இனி வாயுவினுடையகாரி
யரூபமானசரீரம் வாயுலோகத்திற்காண்க. இந்திரியமாவது பரிசத்தைதத்தோ
ற்றிவிக்கும் விஷயமாவது விருக்ஷமுதலானதிற் சலனுதிகள்- ஆ-ங- இனி
ஆகாயத்தினுடைய காரியரூபமானசரீரம். ஆகாயலோகத்திற் காண்க. இந்
திரியமாவது சத்தத்தைதத்தோற்றிவிக்கும். (விஷயமாவது) முன்சொன்னநா
ன்கு பூதத்திற்கும் வேறுய் சத்தத்துக்குக் காரணமாய் நித்தியமுமா யிருக்
கும் - ஆ-ங- இதிற் காலமுந் திக்கு மிதற்கு வேறுய் நித்தியமுமா யிரு
க்கும். ஆத்மாக்க ளிவற்றிற் கெல்லாம் வேறுய் முத்தராய் நித்தாயனே

காரா யிருப்பார்கள். இனி மனமானது இவற்றிற்கு வேறாய் ஞாநேதிகளுக்குமேதுவாய் நித்தியமுமாயிருக்கும். இந்த நவதிரவியங்களுக்கும் வேறுட்டிருக்கும். அதாவது, குணம். அவை சுக்கிலாதி குணபதார்த்தமாய் ரூபம்- ரசம்- கந்தம் - பரிசம்- சங்கியை - பரிமாணம்- வேறுதல் - சையோகம்- பிரபாகம்- பரத்துவம்- அபரத்துவம்- குருத்துவம்- திரவத்துவம்- சிநேகம்- சத்தம்- புத்தி- சுகம்- துக்கம்- விருப்பு- வெறுப்பு- முயற்சி- புண்ணியம்- பாவம்- வாசனை- யென்னும்பேதத்தால்- உச - இனி கன்மமாவது எழுதல் விழுதல்-முடக்கல்-நீட்டல்-நடத்தலென்னுங்கூறுபாட்டால்- நு - ம் - இனிச் (சாமான்னியமாவது) பரமென்று மபரமென்றும் இரண்டாம். இது கோத்து வமுதலாயுள்ளசாதிகள் இனி விசேஷமாவது எல்லாத்திரவியங்களிலு முண்டாயிருப்பதால் அனந்தமாயிருக்கும். இனிச் சமவாயமாவது ஸம்யோகமென்றுஞ்சமவாயமென்றுமிரண்டாம். இதில் ஸம்யோகமாவது அனித்தியசம்பந்தம் சமவாயமாவது நித்தியசம்பந்தம்,இதுவுமிவற்றிற்கு வேறுயிருக்கும். இனி (அபாவமாவது)பிராக்கபாவம்பிரத்தொம்சாபாவம்அன்னென்னியாபாவம் அத்யந்தாபாவம்எனநான்காம்இதில்பிராக்கபாவமாவது அனுதிசம்மந்தமாயிருக்கும் அனுதியாகிலு முடிவுள்ளதாயிருக்கும் இதற்கு உதாரணமிறந்தகாலம் இனிப்பிரத்தொம்சாபாவமாவது முதலுண்டாய் முடிவற்றது இதற்கு உதாரணம் எதிர்காலம் இனி அன்னென்னியாபாவமாவது தாதான்மியபாவம் இதுகடமில்லைபட முண்டென்கைபடமில்லைகடமுண்டென்கை இனி அத்தியந்தாபாவமாவது அனுதிரணம் அத்தியந்தாபாவம் இது ஆதியந்தமற்றிருக்கை, யிதற்கு உதாரணம் ஆதியந்தமற்றிருக்கிற ஈஸ்வரன் இதில் அபாவபதார்த்தத்தைவிட்டுமற்ற வாறுபதார்த்தமுங் கொள்வாருமுளர். இனி முன்சொன்ன ஆத்மாவானவன் இப்படிச்சொல்லப்பட்ட பதார்த்தசையோகத்தாலே ஞானமுதலானவையுண்டாய்ச் சனனப்படுவனென்றறிக.

இவர்கள் பிரத்தியட்சமும் அனுமானமுங் கொள்ளுவார்கள் வேதாகமங்க ளீஸ்வரனு லருளிச்செய்தது, ஈஸ்வரன் அறிவிக்கிறவன் இந்தவிதங்களினால் பந்தப்பட்டவன் ஆத்மாவென்றறிக. இனி முத்தி நிலையாவது முன்சொன்ன ஏபதார்த்தங்களையும் இதினுடைய வெகுவிதவிஸ்தார உண்மைகளையுமறிந்து மனதினுடைய கூட்டரவால் வந்தஞானங்களெல்லாமிறந்துபோகும்படி பத்தியினால் சிவனைத்தியானம்பண்ணினாற் கன்மகூயமுண்டாம் இதனால் ஆகாயம்போல் மகத்பரிமாணமாய் நிற்குணனுய்ப் பாஷாணம்போல் விகாரமற்றிருப்பது மோட்சமென்றறிக. அனைத்திலும் யானெனதென்றபிமானங் கொள்கையாலகங்காரமே யாத்மாவென்றுங்காயம்போலுலகங்காரபுவனந் தன்னிற்பொருந்துமென்றுஞ், சிவத்தியானத்தால்விகாரமற்றமோட்சம்வருமென்றுஞ் சொல்லும் பின்னுஞ் சையோகத்தால் சித்தசன்ம யுத்தனென்றுஞ் சரீரேந்திரியாதிகமாகிற- உக- பேதமான துக்கம் நீங்கிப்பாஷாணம்போல் இருப்பது முத்தியென்றுஞ் சொல்லும். இது

இருளும் வெளியும் போலச் சிவனுமாத்மாவு மிரண்டாகையாலித்துவும் பேத வாத சித்தாந்தமாம் இந்தச்சமயநூல் கணாதர் கற்பிதமென்றறிக.

சுய. முத்தியினினிற்குனனுய் முன்னங்குணகுணியாய்ப்
பத்தியினின்முத்தியுறும் பாவனைபாற்-சுத்த
சடபாலராபவத்தை சார்தலாலான்மா
கடனென்றுன் வைமேசடிகன்.

இனி முன்சொன்ன மீமாங்கிசனுக்கு மிவனுக்கும் பேத மென்னென்னில் அவன் சத்தமேபிரமமென்றும் புத்தியே குணமான வாத்மா புத்திவிகற்பங்கெட்டுப் பாஷாணம் போல்வது முத்தியென்றும், இவன் சிவனுண்டென்றும் ஆத்மாவுக்கு மனதினுடைய கூட்டரவினால் விஷயஞானங்களுண்டாம் இதுநீங்கும்படியாகச் சிவத்தியானஞ்செய்து விகாரமற்றிருப்பது மோகூடமென்னையா லவனுக்கு மிவனுக்கும பேதமுண்டென்றறிக.

கஉ-வது—அத்தியாயம்.

நையாயிகன்மதம்.

ஈசனுங்கன்மமு மிபலுமாருயிர்க்குப்
பாசங்கட்டுதல் பகர்நையாயிகமே.

சொருபலக்ஷணமாவது சிவன்நித்தியனுய் எல்லா வியாபாரத்துக்குங் கர்த்தனுயிருப்பானென்றறிக. இனித் (தடத்தலட்சணமாவது) ஈஸ்வரனை வன் சித்தன்மயுத்தமான ஆத்மாக்கள் செய்த கன்மத்தைக்கொண்டு அந்தக் கன்மமு மீஸ்வரனுமாக ஆத்மாக்களைப் பாசபந்தப்படுத்திச் சனனமரணங்களில் விட்டுச் சொர்க்க நரகப்படுத்துவானென்றறிக.

சக. அறிவுறுமனேகவியாபி யாருமாத்மாக்கடாமே
நிறைகுணம்புத்திவித்தா நிகழ்தருமூத்திகூறிற்
செறிபினம்போலவந்தக் கரனமேசொற்றலாரு
மிறையுருவுன்னைமசெய்த வினைபெத்தமூத்தியேய்க்கும்.

இனிப் (பெத்தநிலையாவது) இந்தவாத்மாக்கள் கன்மத்திற்கூடியது தத்துவ பதார்த்தங்களாவது யாதென்றுல்.

சஉ. திரவியமைந்துநான்கு செறிகுணம்பத்தோடேழு
நிரவியகருமமைந்து நிகழ்நிலக்கனங்கன்மூன்று
விரவியதகிலமாத்மா வியாபிகள்குணமும்படித்தி
கரவியல்கட்டிவீடுங் கன்மமுங்கத்தாவாலும்.

என்றது, திரவியமைந்து நான்கென்பது பிரிதிவிமுதற்பூதம் - ரு - தி க்கு- மனம்- புத்தி - யாத்மா-ஆ - திரவியம்-க - செறிகுணம்பத்தோடே ழென்பது பரிசரூப ரஸ கந்தமுஞ் சங்கியை பரிமாணம் பிரத்தியக்ஷம்ஸம் யோகம் கெந்தருவாகம் பரத்துவம் அபரத்துவம் புத்தி சுகந்துக்கம் இச்சை சேஷம் பிறஞ்ஞசனம்-ஆ-குணம்-ஐ-திரவியகருமமைந்தென்பது எழுதல் விழுதல்முடக்கல்நீட்டல் நடத்தல் ஆ-ரு-திகழிலக்கணங்கண் மூன்றென்ப து சாமான்னிய விசேஷசமவாயமுமென-ங-இதில்முன்சொன்ன திரவியங் குணங் கருமம் - ங- இனி இலக்கணமாகிற சாமான்னிய விசேஷவாய்மை ஆ-சு- இந்தவாறு மிச்சாத்திர விஸ்தார வர்த்தங்களுக்கெல்லா முதன்மை யான சமுகமென்றறிக. இதிற்பூதம்- ரு - ம் - தானே சுரோத்திராதிகளா யிருந்து தன்குணமான சத்தாதி விஷயங்களைக் கிரிக்கு மென்றும்.

இப்பூதங்களணுக்கூட்டமென்று மிதில் அநுதியணுச்சத்தாய்க் கெடாதி ருக்குமென்றும்காரியமாகியவணுக்கள் வேறுயிருந்து உலகங்களாய்ச்சத்தாய் ச் செடமாய் நித்தியமுமாய்க் கெடுமென்றும், இப்படிச் சூக்ஷம ஸ்தூல வணு க்க ளிரண்டுவிதமென்றும். விரவியதகிலமென்றது முன்சொன்னதிரவியங் குணம் கருமமென-ங-ம்- சாமான்னிய விசேஷ சமவாயமுமென - ங- இந்த வாறுபதார்த்தமு மசத்தான வணுக்களா யிதினுடைய சமுகங்களே யகி லங்களாயிற் றென்றுசொல்லும். ஆத்மா வியாபிகுணமும் புத்தி யென்றது முன்சொன்ன வகிலங்களிலாத்மாக்கள் வியாபிகளா யனேகமாயிருக்குமெ ன்றும் இந்தவாத்மாக்களின் குணமானது புத்தியென்றுசொல்லும். கரவியல் கட்டுவீடுங் கன்மமுங்கத்தாவாலு மென்பது, முன்சொன்ன பதார்த்தமான வகிலங்களிற் குணம் புத்தியாயிருக்கிற வாத்மாக்களியல்பாக வதில்மறைந்து கட்டுப்பட்டுச் செனனமரண துக்கவேதுவாமென்றும், இந்தவாத்மாக்களைக் கட்டுவதும் விடுவதுங்கன்மத்தாலுங்கர்த்தாவாலுமென்றறிக. ஆத்மாவுக்குத் தனக்கென்றறிவில்லை யிவனுக்குப் புத்திமுதலான அந்தக்கரணவறிவைக் கொடுக்குமென்றும், இதுகளைக்கொண்டுசருவஞ்ஞசீவன் ஆத்மாவுக்குக் கன் மத்திரல் அறிவிப்பானென்றும். காலம்பூதவர்த்தபவுஷிகமாகையால் நித்தி யமென்றும், இனிப்பிரத்தியட்சாதி பிரமாணங்கள் பிரமேயசித்தியர்த்தமாக வறியப்படும். இனிப்பிரமேயமாவது ஆன்மாதேகம் இந்திரியம் அர்த்தம் புத்தி மனம் தோஷம் பிரவர்த்தி பிரேத்தியாபாவம் துக்கம் பலம் மோட்சம்ஆகப்பி ரமேயங்கூடி - ஐ - இவைகளைப் பிரேரிக்கிறவ னீஸ்வரனு மென்றறிக. இனி பெத்தநிலையாவது தர்க்கயுத்திமுதலான சோடசபதார்த்தமா யிருக் கும் அதாவது பிரமாணம் பிரமேயம் ஸம்ஸயம் பிரயோசனம் திஷ்டா ந்தம் சித்தாந்தம் அவயவம் தர்க்கம் நிண்ணயம்வாதம் சற்பம் விதண்டை எத்துவாபாசம் ஜலம் ஜாதி நிக்கிரகஸ்தானமென்று இப்படி சோடசபதார்த் தமுதலானது ஈஸ்வரசார்த்தத்துவத்தை நிச்சயிக்கும். இனிப் பிரபஞ்சத்துக் குச் சரீரேந்திரி பாதியாகிற வாத்மா வாகாயம்போல் மகத்பரிமானமாய்ப்

பாஷாணம்போல் சடமாய் மனச்சையோகத்தால் சித்தசம்மயுத்தனென்பர். இனி முத்திநிலையாவது முன்சொன்னதெல்லாம்விட்டு நீங்கிப் புத்திமுதலானகரணவிகற்பங்கெட் டாகாயம்போலும் பிணம்போலுஞ் சமாதிபொருந்தியிதற்கிடையூருன - உபக - பேதத்துவமாகிற துக்கம் நீங்கிப் பாஷாணம்போல்வது முத்தியென்றறிக. இருளும் வெளியும்போ லாத்மாவுஞ் சிவனுமிரண்டாயிருக்கையால் இதுவும் பேதசித்தாந்தமென்றறிக. இவர்கள்பிரத்தியட்சம் அனுமானம் உவமானம் மூன்றுங்கொள்வார்கள் இந்நூல் அட்சபாதராலே கற்பிக்கப்பட்டது முன்சொன்ன வைசேஷிகனுக்கு மிவனுக்கும் பேதமென்னெனில் எல்லாஞ்சரியானாலும் அவன் ஆத்மாவுக்கு அந்தக்கரணங்கள் வேறுயிருந்து அறிவிக்குமென்று சொன்னால் இவன்ஆத்மகுணம் புத்தியென்றுஞ் சிலபதார்த்தங்களேறக்குறையச் சொல்லுகையால் பேதமுண்டென்றறிக.

சஉ. அணங்குற்றவாத்மா வனேகம்வியாபி
குணம்புத்தியாமுத்தி கூறிற்- பிணம்போல்கை
மெய்யாமிறைவனையும் வீடுகட்டுக்கேதுவா
கையாயிகனு னலம்.

சக. செறிதிரவியமைம்பூதந் திசைகாலமனமோடாத்மா
வுறுகுணம்பரிசமாதி நாலோடென்பரிமாணந்தான்
பிறிவொடுகூட்டம்பேசுஞ் சராசரம்புத்தியின்பங்
கிறிதருதுன்பம்வேண்டல் வேண்டாமைமுயற்சிகேடே.

சஎ. எற்றியகருமமைந்து மிலங்கிடவறியக்கூறிற்
போற்றியபக்வாபக்வம் புகன்றிடும்விரிவொடுக்க
மேற்றியகமனமென்றுங் கைந்தினி னிலக்கணந்தான்
சாற்றியவிசேடஞ்சாமானியஞ் சமவாயமாமே.

சஅ. சட்டமேயகிலமாத்மா சகலமும்வியாபிபுத்தி
யிட்டமாங்கன்மந்தானு மீசனுமெவ்வுயிர்க்குந்
கட்டுவீடான்டினுக்குங் காரணமென்றுகொண்டு
தட்டினேயோராகையா யிகனர்த்தஞ்சாற்றலென்றார்.

கச-வது—அத்தியாயம்.

சிவாத்துவிதிமதம்.

துவிதமல்லாமற் றோன்றியதெல்லாஞ்
சிவாத்துவிதமாஞ் சிவாத்துவிதியே.

மலாதிபலட்சணம் நித்த புத்த சுத்த முத்தனுய்த் தனக்கிரண்டா வானில்லாதனுய் ஏகனுய் அறிவேவடிவாயிருப்பனென்றறிக. இனித் தடத்த லட்சணமாவது அக்கினியானது பொறியும் புகையு மாறுற்போலும், அப்பு அலையும் நுரையும் புற்புதமுமாறுற்போலும் முன்சொன்ன பிரமந்தானே தன்னுருவைப் பகுத்து உயிர்களையுஞ் செகங்களையு மூண்டாக்கித் தன்னை த்தானே மறைத்துக்கொண்டு உபாதிகளில்நின்று சுகதுக்கம்போல் விளையா டுவன் பின்பு தன்னையொழியச் சுகதுக்கங்களைப்பெறுவதும் பெறுமற்போ வதும் ஏற்பானு மீவானும் வேறில்லாமையா லெல்லாச்சுகதுக்கத்தோடுந் திருவிளையாடல் செய்துகொண் டிருப்பானென்றறிக.

சஎ. அனுதிசிவன்சகத்து மாருயிருமாகத்
தனுதுருவைத்தானே பகுத்துத் - தனுலொழியப்
பேறிழவில்லைப் பெறுவானுமீவானும்
வேறில்லையென்றறிகை வீடு.

சஅ. தனிற்சிவந்தானுகித் தடுப்பரியபுலகமதாய்
முனிற்றூனேகத்தாவாய் முடியாதவினைப்பிறப்பைப்
பினிற்றுஞ்சீவனையே பெந்தித்துவிரித்தெல்லா
மினித்தாயவின்பதுய ரீவானுய்ப்பெறுவானும்.

சகூ. முத்திதான்கொடுப்பானுனுய் முன்னைத்தானனடையும்வன்ன
சத்தியாலிவையேசெய்து தானிகழ்தல னுதியாகும் [ஞ்
பத்தியிலுலிவர்பரவிப் பழையத னையிவனடைதல்
சித்தியாஞ்சிவாத்துவிதத் திகழ்த்தியவீடதுவன்றே.

இனிப் பெத்தநிலையாவது தன்னைத்தானேபகுத்து ஆத்மாவாய்ச்செகமும் புண்ணியபாவமுமாய் மூடிக்கொள்வது பெத்தநிலை. இனி முத்திநிலை யாவது முன்சொன்ன படித்துவத்தையெல்லாமறிந்து குருவால் சாம்பவி தீட்சை பெற்று அனுபவநிஷ்டையி லயமாய்ப் பெறுவான் பேறில்லாம லெல்லாம்பிரமமாகிற தென்றறிக. இதுவும் பேதாபேதமாய்த் துவிதமா மென்றறிக. இருவரும்ஞெப்திமாத்திரமென்பர் இனி முன்சொன்னநையாயி கனுக்கு மிவனுக்கும் பேதமென்னெனில் அவன் ஆத்மா வியாபியென்றும்

புத்தி குணமென்று மீஸ்வரனுங்கன்மமு மாத்மாவைப் பாசபந்தப்படுத்து மென்றுஞ்சொல்வதுபோல் இவனும் பிரமமே யெல்லாமா யானதென்கை யால் பேதமுண்டென்றறிக.

கரு-வது—அத்தியாயம்

பாஸ்கரியன்மதம்.

சித்தசித்தாகிய சீவசெகத்தெல்லா
முத்தனேயானது முதல்பாஸ்கரிபமே.

சொரூபலக்ஷணமாவது பிரமம் சத்து சித்து ஆனந்தம் நித்திய வியாப கமாயிருக்குமென்பது இனி தடத்தலட்சணம் முன்சொன்னபிரமமே சித்து அசித்துக்களாயிருக்கிற செகசீவர்முத லெல்லாமாய்ப் பரிணமிக்கு ம்போது அண்டாண்டபுவன போகங்களும் பிண்டாண்டதனுகரண போக கியங்களும் இந்தப் பிண்டங்களில் போதங்களாகிற தத்துவங்களுமாய்ப் பரி ணமிக்கும். அஃதெப்படி யென்னில் இலவணத்தீர்த்தம் இலவணக்கட்டியா னாற்போலும், பொன் மண் நூல், பூஷணங் கட படமானாற்போலும் வித் து மரங்களானாற்போலும், பரிணமிக்கும் ஆனலிப்படிப் பரிணமித்தால் இ தற்பொருள் கெட்டுப்போமென்னில் அப்படியல்லாமற் சத்தம் பிறந்தபோ து அர்த்தமாகத்தோன்றியும் அர்த்தமாகிற பதார்த்தங்களைக்கண்டபோது சத்தம்வேறு அர்த்தம்வேருனாற்போல சிவன் தானே சத்தங் கெடாதது போலநின்று செகசீவர்கள் அர்த்தம்போலவேருய் சிவன் தானேயெல்லா ப்பரிணமமுங் கெடாமல் நிற்பதென்றறிக. இனிப் பெத்தமாவது இந்த அர்த்தம்போல வேருன சீவராசிகள்செகத்துகள் இஃதோடுகூடிப்பந்தப் பட்டுச் சனனமரணப்படுவது. இனி முத்தியாவது முன்பரிணமித்த போ தங்களெல்லாமிறந்து போதசீவனனவன் குருவால் வேதாந்தஞானம் பெற் றுச் சமாதிபொருந்தி மனேலயமான விடத்தில் தன்னையறிந்துதானும் லய மாகப் பூரணசமாதி நிஷ்டைசாதித்து எல்லாம்பிரமத்தி லொடுங்கிப் பிரம மாகிறதேமுத்தியென்றறிக.

நுய. சித்தாயசித்தாய்ப்பரிணமித்துச் சிவஞகித்திகழ்ந்தமையாற்,
சத்தேயல்லாமுத்திதனைச் சாரக்கண்டஞானங்கள், வைத்தே
மொழியுமாமறைகள் சொன்னமரபேவந்தக்கா, லொத்தேதகெ
ட்டுப்பிரமத்தோ டொன்றுய்ப்போமென்றுரைத்தனனே.

இதுவும்பேதமா யபேதமாய்த்துவைதமாம் இது பதஞ்சலர்கற்பிதமென் றறிக. முன்சொன்ன சிவாத்துவிதிக்கு மிவனுக்கும் பேதமென்னெனில் சிவாத்துவிதி அக்கினியிற்பொறி புகைபோலச் செகசீவமாயிற் றென்ருன் இவன் சிவமேயெல்லாமாய்ப் பரிணமித்த தென்கையாற் பேதமுண்டென்றறிக.

ககூ-வது—அத்தியாயம்.

சத்தப்பிரமவாதிமதம்.

சத்தந்தானேசகமுயிருடலெனச்
சத்தப்பிரமவாதிகன்சாற்றுமே.

சொரூபமாவது வசனிக்கிற சத்தசொரூபமாய் நித்தியமா யழியாததா ய்ச் சர்வத்துக்குங் காரணமாயிருக்கிற சத்தந்தானே பரப்பிரமம். இனி தட த்தலட்சணம் இந்தச்சத்தம் பரிணமவிவர்த்தனமான மாயையால் செகங் களை யுண்டாக்கும். இந்தச் சத்தமாகிற பிரமத்தினது விவகாரந்தானே கரு விப்பொருளாகிற அர்த்தத்தைக் கொடுக்கையிலும் சகலபதார்த்தங்களு முண்டாகையாலுஞ் சத்தத்தாலெல்லா விவகாரமுந்தோன்று கையாலும் மோட்சமடைதற்குக் கருவியா யிருத்தலாலும் தடத்தமென்றறிக. இனிப் பெத்தமாவது பரிணமவிவர்த்தன மாயையால்பிண்டப்பிரமாண்டங்க ளெல் லாஞ் சத்தத்தில் தோன்றுகையால் சீவராசிகளெல்லா மந்தச் சத்தத்தில் தோன்றி யதுதானேபந்தப்படும். அஃதெப்படி விவர்த்தனமாயையி லு ண்டானதல்லாமல் சத்தத்தில் செகத்பிரவர்த்த முண்டாகாதென்னில் உண் டாம். அதெப்படி யென்னில் ஒரு சத்தமெழுகிறபோது பொருள்களெல் லா முன்னேதோன்றுதபடியால்சத்தத்தில் பொருள் தோன்றுதென்றும் அப்படியல்ல பொருள் சத்தத்தி லுண்டாம்வகை பூமாவென்றபோதும்நெ ற்பொரியென்றபோதும் இந்தச் சத்தமும் பொருளுமொன்றுபோ லிருக் கிலுஞ் சத்தத்தி லந்தப் பூமாவும் நெற்பொரியு மில்லாததுபோ லதைக்காட் டுகையால் பொருள் வேறு சத்தம்வேறும் சத்தத்திலுலாகிய பதத்தி லந்த ப்பொருளில்லையாய்ப் பதமேதின்று பின்பு பொருளைக் காட்டிச் சத்தங்கா ட்டின பொருளெல்லாந்தோன்றி தினவிருதியில்நாசமாய்ச்சத்தமொன்றுங் கெடாமல் மீண்டுமீண்டும் வருகையால் சத்தமே யுள்ளதாயிருக்கும் பொ ருள்களனித்தியமாம். இந்தப் பொருள்களெல்லாஞ் சத்தத்தையல்லாமல் மாயைமுதலான தேகங்களுண்டாகாது சத்தத்தைதொன்னபோது சத் தந் தானே யர்த்தமாகத் தோன்றியு மர்த்தத்தைக் கண்டபோதுசத்தம்வே று அர்த்தம்வேறுயிருப்பதுபோலச் சத்தமாகிறபிரமந்தானேசத்தமு மர்த் தமுமா யிருக்குமென்றறிக.

நக. பரிணமவிவர்த்தனமாயையதில்
தருமாமூலகுள்ளது சத்தமதே
பொருளானவைசொல்லனமல்லவெனின்
மருளாதுபொருட்டிறமற்றிலையே.

நஉ. பூமாவெனவேபுனையும்பொருளு
மாமாவடிவொன்றிலனோர்திலதாம்

காமாதரவேய்துகண்கருவாய்த்
தாமாம்பொருணெம்பொாிதானெனவே.

நிஈ. சொல்வம்தெழுலும்பொருடோன்றுதலாற்
சொல்லேபொருளென்றுதுணிந்திடுகீ
சொல்லும்பொருளும்முடனின்றமெனிற்
சொல்லும்பொருளின்றுசொன்னின்றதுவே.

நிச. தகுமொழிபிரமமதெனச்சமைந்திடு
மகமுறுமறிவிலியகிலமூலமு
மிகுதருமொழியலதலதுவேறென
விகபரமதுவறியாமலோதுவான்.

இந்தச் சத்தத்திலெல்லாப் பொருளுங் காட்டப்படுகையால் இதுவே பந்தநிலையென்றறிக. இனி முத்தியாவது சத்தம் மாயையோடுகூடி யுலகமானதென்றும் அர்த்தமாகிறபொருள் சத்தத்திலொட்டாமற் பொருள்வேறுய் நீங்குகையால் சத்தமேபொருளெனக்கொள்வது முத்தியென்றறிக. இவன் ஆறுபிரமாணமுங்கொள்வன் இது வியாசர்கற்பிதமாய் அபேதாபேத சித்தாந்தமா மென்றறிக. முன்சொன்ன பாஸ்கரியனுக்கு மிவனுக்கும் பேத மென்னெனில் பாஸ்கரியன் பிரமந்தானே ஜகசீவர் முதலான வெல்லாமாய்ப்பரிணமிக்குமென்னில் இவன் சத்தமே யெல்லாமாயானதெனக்கூறினமையால் பேதமுண்டென்றறிக.

கஎ-வது-அத்தியாயம்.

வையாகரணிமதம்.

நிஉ. மெய்யாலக்கணலக்கியமதுனை
செய்யாவுற்றெழுசெற்பவிகற்பொடு.
ணையாவத்துணைவாதிதல்வீடென
வையாகரணிமதத்தொடுகூறுமால்.

கஅ-வது-அத்தியாயம்.

பாட்டமதம்.

மறைகளேசுயம்புவாயைம்பூதனுக்களா
யிறையுலகுயிரொளியல் பாட்டமதமே.

சொரூபலக்ஷணமாவது வேதமானது நித்தியமா யருதியாய் சுயம்புவாய்க் தோற்றமின்றி முடிவின்றி ஓரியல்பாய் நாதப்பிரமமா யழிவில்லாத

தா யிருக்கும் இனித் தடத்தலக்ஷணமாவது இந்த வேதத்தை யொருவரா ல் கற்பிக்கப் பட்டதென்று சொல்லிற் சகுணமானகடவுள் சொல்வாரகில வனுஞ் சீவர் களுக்குள் ளொருவ ரை யிந்திரியகரணங்களுடனே கூடினவ ரவன் அவன் படித்தமாத்திரம் ஞாகங்காண்பன். அருவரவன் சொல்வா ரகிற் கருதிச்சொல்ல வருவமில்லாதபடியால் சொல்லக்கூடாது ஆகையா ல் வேதஞ் சுயம்புவாம் இந்தவேதத்துக்கு அங்கமாக-சந்தசு- கற்பம்-வியா கரணம்-சிட்சை-சோதிடம்- நிருத்தம்-இந்த- ஆறையுங்-கை- கால்-முக-மூக் கு-கண்-செவி- யெனக்கொண்டது இனி உபவேதமாவது ஆயுள்வேதம் அ ர்த்தவேதம் காந்தர்வவேதம் தனுர்வேதம் இந்தநாலுடனும் வாகு-தாது- பி ராத்தியம்-பிராதிபதிகம். இந்த நாலுறுப்புடனுங் கூடியிருக்கும். இனி இருக் குவேதம்- உக- பேதமும், எசுர்வேதம் - ககு - பேதமும் சாமவேதம்- ஙு- பேதமும் அதர்வணவேதம்- கூ- பேதமு மிந்தநாலுங்கிரமமாக விதிவாதம் அர்த்தவாதம் மந்திரவாதம் நாமதேயமென நான்கு விதமாம். இந்தவேதா ங்கோகாரமான புராணம் - ககஅ - உபபுராணம்- ககஅ- ஸ்மிருதி- ககூ- இதுகளி ல் சதுர்த்தசவித்தை- ககட- ம்- முக்கியமாம். அதாவது வேதம்-ச - அங்கம் ஞ- நியாய மீமாம்சை-உ- புராண ஸ்மிருதி-உ- ஆ-ககட- இனி (உபநிஷத்து க்களாவது) சிருத்திரம், பிரகதாரண்ணியம், சுவேதாசுவதரம், கைவல்லிய ம், காலாக்கினி, கடம், வல்வி, காத்தியாயனம், பிரமம், நாராயணம், அங் கிசம், பிரமாங்கிசம், பாஸ்கரம், பிரமபிந்து, ஆருணி, அமிர்தபிந்து, சுரச பிந்து, பிரமசுபாலம், தேஜோபிந்து, வாசஸ்நேயம், போதாயநீயம், ஆஸ்வ லாயநீயம், சாங்கியாயநீயம், வாஸ்யாயநீயம், கௌனகீயம், சிவசங்கற்பம், சிரவணம், பராக்கிரமம், புரோவக்ஷயம், முத்கலம், முண்டகம், மைத்திராயநீ யம், என்னும்- ஙஉ- உபநிஷத்துக்களும் ஞாஞங்கமானவிபூதி ருத்திராக்ஷா திகளையும், பிரமக்ஞாஞதிகளையும் விவகரிக்கும். இதனையும் வேதந்தன்னு ள்ளேயடக்கிக்கொண்டு ஆரணம், பன்னம், பனிசையிதல்லாமல் வேதமோ துகிறசாதி விவர்த்தகன், நிவர்த்தகனென்று இரண்டுசாதியாம், இதில், வி வர்த்தகன், விசுத்தஞகிறவன், நிவர்த்தகன், சங்கரனுபதேசிகன். இப்படி சகஸ்த்ரவேதமுண்டு அனந்தாவைவேதமென்றுஞ் சொல்லப்பட்டவிரிவெ ல்லாம் லௌகிக வைதிக ஆத்தியாத்மக, ஆதிமாற்கீக மாந்திரீக. இந்த-நு-ல் அடங்கும் இதல்லாமலும் பொ உபநிஷத்துக்கள் முதலான வேதாந்தங்க ளெல்லாம்விரிந்துங் குவிந்துமிருக்கிறதேதடத்தலக்ஷணம் இனிப் (பந்தமா வது) பஞ்சபூதமானது அறிதியே யியல்பாய்ப் போக்குவரவில்லாமல் ஆ க்குவாரழிப்பாரில்லாமல் சுயம்புவான வணுக்களாகி யிதுவும் வினைகளோடு கூடிக்காரியங்களாகிற வுலகங்களானது தத்துவங்கள் பிண்டாண்டங்க ளாய்விரியுமென்றறிக. இதல்லாம வுயிரானது பஞ்சபூதங்களால் காவுவு ருக்க ளெடுத்துப்புலன்வழி யுலாவித்திரியு மென்றுஞ் சொனனங்தோறுஞ் செய்தவினைமாய்ந்து சிந்தையில் பந்தித்துச் சொன மெடுக்குமென்றும்,

இதுவயலி லிட்ட எருத் தழை மாய்ந்து பின்பு பயிருக்குப்பலிப்பது போ ல வுயிருக்குப்பலிக்குமென்றும், இதுகளெயெல்லாஞ் சொல்வது வேதமாகை யால் அதிலே பந்தப்படுவது பந்தமென்றறிக.

இனி முத்திநிலையாவது முன்சொன்ன சுயம்புவான வேதத்தைத்தே வர் முனிவர் சித்தர் இவர்கள் முதலானபேர் பாரம்பரையாகக்கற்று நல்ல கன்மங்களைச்செய்து இந்தவேதத்தால் கல்வி கேள்வி போதந் தர்மஞ் சற் கர்மம் ஞானமுண்டாய் நித்தியகர்மங்களை வேதஞ்சொன்னபடி செய்து சோமயாக மாதியாக வனேகம்யாகங்களை யெக்ஞங்களைப் பசுப்படுத்திச் செய்து வேதமந்திரங்களால் ஜெபதபங்களைச்செய்து பசியானவணுண்டுப சிதீர்ந்தாற்போலக் கன்மஞானங்களிரண்டுங் காலாகக்கொண்டு விண்ணிலே றி வீடாகிறசொற்கங்களைப் பெறலாமென்பதென்றறிக.

நாரு. எட்டாயறையேதருவேழ்விக

டட்டாநூல்வழிசெய்திடுந்தன்மையிலை
லொட்டாதானவைசொற்கழூறுமெனப்
பட்டாசாரியனேபகராவிடும்.

இந்தவேதமில்லாதபோது மூங்கைபோலுங் குழவிபோலுமிருந்து மோ ட்சங்களையறியாமற் சென்னமரணப்படுவாரென்றறிக. இதின்சங்கேகூடம் வேதமுமனுதி அணுக்கள்ளாகிற பூதமுதலுலகங்களுமனுதி உயிர்களுமனுதி யிந்த மூன்றுஞ் சுயம்புவாய்க் கெடாம லிருக்கையால் இது பேதசித்தாந்த மென்றறிக. இவர்களாதிமானவச் சுத்தப்பிரமாண ஞானசமேத னென்பர். இந்தச்சாஸ்திரஞ் சைவினிகற்பிதமென்றறிக. இதில் முன்சொன்ன பஞ்ச விதசாத்திரத்தில் (லௌகிகமாவது) தன்மந்திரிகற்பிதமான ஆயுள்வேத த ண்டநீதி திஷ்டிபலன் களைச்சொல்லும் (இனி வைதிகமாவது) ஜெயமுனி அகூபாதர் கணாதரால் சொன்னபூர்வ மீமாங்கிசை நியாய வைசேஷிக முதலியவற்றைச்சொல்லும் இனி (ஆத்தியாத்மீகமாவது) கபிலர் பதஞ்சலர் வியாசர் இந்தமூவராலே சாங்கியபாதஞ்சல வேதாந்தமாகிற ஆத்மஞானத் தைச்சொல்லும் இனி (யதிமார்க்கிகமாவது) மாயாதத்துவ வித்தியாதத்துவ த்திலேயிருக்கிற மூன்றுருத்திரரால் பாசுபத காபாலிக மகாவிரதமுதலியவ ற்றைச்சொல்லும் இனி (மாந்திரிகமாவது) பரசிவகற்பிதமான மந்திரங்க ளே மோட்சமாகிற சரியைகிரியை யோகங்களைச்சொல்லும் இப்படி யிந்த ஐந்துவிதசாத்திரத்தில் வந்தபேதங்களென்றறிக. இனி முன்சொன்ன சத் தப்பிரமவாதிக்கு மிவனுக்கும் பேத மென்னெனில் அவன் தானனித்திறந த்தமே பிரமம் இதில் அர்த்தமாகிறபொருள் நாசமாய்ச் சத்தாங் கெடாதெ ன்றுசொன்னதற்கும். இவன் வேதமும் பூதமுந் தவிர மூன்றுமாய நி த்தமென்னைக்கும் பேதமுண்டென்றறிக.

கசூ-வது— அத்தியாயம்.

பிரபாகரமதம்.

வேதம்பிரமம் வினையாற்சிவ னுதலழிதலாம் பிரபாகரமே.

பட்டாசாரியனிற் பேதமான பிரபாகரமதத்தின் சொரூபநிலையாவது இவனும்வேதமே பிரமமென்பான். இனி(தடத்தமாவது) சிவராசிகள்செய்யப்பட்ட செயலின்கன்மங்கள் விரிகின்றது.

ருசூ. அருஞ்செயலின்பாவத்தே பூர்வமெனும்வினைதோன்றித்
தருஞ்செயலினின்றழியிற்ரூன்பலிப்பதாகுமது
வருஞ்செயலொன்றின்றியே மன்சிலைபோலாமுத்தி
தருஞ்செயலுமெனவுரைத்துத் தாரணிமேலவன்சாற்றும்.

என்றது அரிதர்கச்செய்கிறசெயலின்பாவத்தால் பூர்வமாகவிருக்கிறகன்மந் தோன்றிச் சகலபுசிப்பும் புசித்து தொன்றுதொட்டுச் சென்னமரணங்களெடுத்துப் புசிக்கும்போதெல்லாஞ் செய்யப்பட்டவினைகள் மீண்டும் எருத்தழைப்போலச் சீவனுக்குப்பலித்து வருவதே தடத்தலட்சணமாம். இனிப் (பந்தமாவது) சிவராசிகள் வேதஞ்சொன்ன கன்மங்களைச் செய்து அதனல்கன்மங்கட்டுப்படுவது. இனி(முத்தியாவது) முன்சொன்ன வேதப் பிரமாணமானகன்மகாண்டத்தின் செயலொழிந்து ஈஸ்வரதத்துவத்துக்கன்னியமாய் ஆத்மஞானமாத்திரமேயாய் சுதப்பிரமாண ஞானசமேதனுயிருக்கிற ஆத்மாவானவன் விஷயஞானங்கெட்டு மண்சிலைபோல் சமாதியில் பொருந்தியிருப்பது முத்திநிலை இதுவுஞ் சைமினிகற்பிதமென்றறிக. இனி முன்சொன்ன பாட்டனுக்கு மிவனுக்கும் பேதமென்னெனில் அவன்வேதங்களால் சொர்க்கப் பிராப்தியடைவதே மோட்சமென்றுசொல்ல இவன்சமாதியில்மண்சிலைபோலிருக்கவேண்டு மென்கையால்பேதமுண்டென்றறிக.

ருஎ. சிலையெனமன்னெனைச் செப்பவொப்பமே
தலைதகுகரணமைம் தடக்கிமுத்தியாம்
நிலைபிரபாகரனின்றுசெப்பலா
லலையதிகாரம்வீ டன்றுமாயையாம்.

உ0-வது—அத்தியாயம்.

ஆறந்தபேதம்.

ஆறந்தமாவதுதுவதின்முடிவிற்றேறந்தமானதெளிவுரைப்பதுவே

இதில் காதாந்தமாவது.

ருஅ. மேவும்பிரமனே விண்டுவுருத்திரன்
மேவுமெய்யீசன் சதாசிவன்மிக்கப்பால்

மேவும்பாவித்து நாதம்விடவுறு
வோவும்பொழுதனுவொன்றுள்ளதாகுமே.

என்று பிரமாமுதற்பஞ்சகர்த்தாக்களுக்குமேல் அகார உகார மகார வி
ந்து நாதம் இந்தநாதத்துக்கு மேலர்த்மா இந்தவாத்மாவே நாதத்துக்கு அ
ந்தமானவாத்மா இது ஆத்ம தெரிசனமாம். இதுவேயல்லாமல் அப்பால்வே
றொன்றுமில்லையென்று நிச்சயிப்பதுநாதாந்த மென்றறிக.

இனிச்சித்தாந்தமாவது.

நுசூ. நித்தபாலேடுயிருற்று நீண்மனஞ்
சத்தமுதலிந்துந் தத்துவத்தானீங்கிச்
சுத்தமசுத்தந்தொடராவகைநினைந்
தத்தன்பரன்பாலடைதல்சித்தாந்தமே.

சுடு. உடலானன்வையந்து மோராறுமைந்து
மடலானமாமாயை கூட்டத்துநீவப்
படலானகேவ்ல பாசந்துடைந்திட்
டிடலாந்தனையுன்னல்சித்தாந்தமாமே.

சுக. நோாமலிவகை நீடுமவத்தையி
னோானவாற்றுன்னி நீடினனவினி
னோாமலமைந்து நோதெரிசித்து
நோாம்பரத்துட னிற்பதுநித்தமே.

என்றது முன்சொன்னநாதாந்தந் தீர்வானவாத்மாவைக் கூட்டிக்கொ
ண்டு இந்தவாத்மா நியதியால், ஆத்மதத்துவம்-உடு- காலதத்துவம்- சு- நிவ
தத்துவம்- நு- ஆ- தத்துவம்- ஙசு- இந்த மூன்றுவித தத்துவத்தையுமு
ண்டாக்கின மூன்று விதமாயையும் நீங்கினவிடத்தி லுண்டான கேவலமாகி
ற ஆணவமும் நீங்கி இது நீங்கும்போது சுத்தாவத்தையாகிற நின்மலாவ
த்தை- நு- ல்- நு- மலமும் போக்கித் தான் சுத்தனுய்த் தன்னையுந் தெரி
சித்துப் பரதெரிசனமு மனுபவித்துப் பரஞகிற பதியோடுகூடிக் கலந்து
நிற்கும். ஆகையால் சீவாத்மா பரமாத்மா பாசம் இந்த மூன்றிற்பாசத்தை
நீங்கிப் பசுவான வாத்மா பரஞகிறபதியோடு கூடி நிற்பது சைவசித்தாந்
தமென்றறிக.

இனிப் போதாந்தமாவது.

சுஉ. உள்ளுயிராருமு தாகுமுபாதியைத்
தெள்ளியகன்றுதா தாந்தத்தைச்செம்றுமே
லுள்ளவிருணீங்கவோருனர்வாருமே.
லெள்ளவில்போதாந்தத்தெய்திடம்போதமே.

சூக. வேதாந்தந்தன்னிலுபாதிமேமேழ்விட
நாதாந்தபாசம் விடுகல்லதொம்பத
மீதாந்தகாரணுபாதியேழ்மெய்ப்பரன்
போதாந்ததற்பத மயிக்கியமாமே.

என்றது- உள்ளான வுயிர்க்கு உபாதியான - ஙசு- தத்துவந் தெனீ
ய நீங்கி நாதாந்தமாகிற ஆத்ம தெரிசனத்திலல் இருளாகிறமலம் நீங்கினை
ஆத்மாவைவ்யும், பராயாகிற பரானையுமொன்ரூய்க் கூட்டுவது. இனிவேதாந்த
த்திற் காரியோபாதியேழும் நீங்கினவிடத்தில் நாதாந்த பாசமாகிற சீவோ
பாதி நீங்கித் தொம்பதசுத்தியாய்ப் பின்பு காரணுபாதியும் நீங்கி பரமாத்
ம தெரிசனமாய்த் தற்பதசுத்தியாய்ச் சீவாத்மா பரமாத்மபேதந் தோன்
ரூம லிரண்டற்றுநிற்பது போதாந்தமென்றறிக.

இனி யோகாந்தமாவது.

சூச. தேடுமியம நியமாதிசென்றகன்
ரூடுஞ்சமாதியிலுற்றுப் படர்சிவன்
பாடுறச்சீவன்பரமாகப்பற்றறக்
கூடுமுபசாந்தம்யோகாந்தக்கொள்கையே.

என்றது, இயம நியமாதியான அவ்டாங்கயோகமுஞ் சாதகமாகச்செய்
து யிதுகளைக் கடந்து நிலையான சமாதியிலுற்று தான் முன்கண்ட பரம
சிவசொரூபத்திற் கலந்து இப்படிச் சமாதியாலல் உபசாந்தங்கை கூடி
ச் செகசீவபர மூன்றுமொன்ரூனி அசிபத சுத்தியா யகண்டார்த்தவயிக்
கியமானது யோகாந்தமென்றறிக.

இனிக் காலாந்தமாவது.

சூஞ. கொள்கையிலான கலாந்தங்குறிக்கொள்ளில்
விள்கையிலான நிவிர்த்தாதிமேதாதிக்
குள்ளனவாம்விந்து வுள்ளேயொடுங்கலுங்
தெள்ளியதனைத் தெளிதலுமாமே.

சூசூ. தெளியுமிலையன்றித் தேனைங்கலேவ
ரூளியுளைமத்துள்ள தோரவல்லார்கட்
களியவனுகிய மந்திரதந்திரத்
தெளிவுபதேசனுானத்தொடைந்தாமே.

என்றது முன்சொன்ன அகண்டார்த்தத்தில் நிற்கையிலல் தான்க
ண்டுவந்த சீவபர சிவசம்பந்த மெல்லாஞ் சத்தியாகையால் இந்தச் சத்தி
சித்திலுடைய சிற்கிரணமாகையால் இந்தச் சிற்கிரண சிற்சத்தியானது ம
காமாயையோடு கூடி யுறைந்தபோது கலைகளுண்டாம். இந்தக் கொள்கை
யில்லாத காலாந்தத்தைக்குறிக்கொள்ளில் மனதுவிடுகிற மலையத்தில் நி

வர்த்தியாதிகலைகள் மேதாதிஞ்ஞானமாவதற்கு உள்ளதான சிற்சத்தியாகிற விந்துவில் ஒடுங்கையால் தெளிவாய் அதனைத் தெளியக்கண்டு அதில் உள்ளாகிற ஒளியில் கூடிச் சிற்கிரணங்களை யனுபவிக்கும்போது மந்திரதந்திரத் தெளிவுபதேசம் ஞானமென்கிற தந்திரம் ஜந்துவிதமாம். இந்தவைந்து விதத்திலும் பிரகாசமாகிற சுகசத்தியான ஆனந்தத்தில் அழுந்தி ஆனந்தத்தக்குழுதலான சித்து சொரூபமாய் நிற்பதென்றும், இது மௌன நிஷ்டையில் அடங்குமென்றறிக.

இனி வேதாந்தம்.

சூஎ. தானனவேதாந்தந் தானென்னுஞ்சித்தாந்த
மானத்துரியத்தனுவன் றனைக்கண்டு
தேனர்பராபரஞ்சேர்சிவயோகமா
யானமலமற் றருஞ்சித்தியாதலே.

என்றது வேதாந்தமாவது தானே யெல்லாங்கண்டுபோய்த்தானே சத்தாய்சித்தாய் ஆனந்த மூன்றையுங் கொண்டுநின்ற முதலாய் நீலோற்பல நிறம்போல் நின்றதென்றும், இனிச் சித்தாந்தமாவது தானொருவன் வேறுள்ளடென்றும், இனித் துரியனைக்கண்டு பரம் பராபரஞ் சேர்ந்தது சிவோகமாம், இது ஞாதருஞானஞேய மௌனமெல்லாந் தானுகிவிளங்கி மலங்களெல்லாம் நீங்கினது வேதாந்த மென்றும், சச்சிதானந்தத்தைதக் கொண்டு நின்ற முதலென்றும், சாம்பவி கேசரி ஞானமௌனமெல்லாந் தானுகிநான்குமுத்திரையுந் தன்னில்டங்குமென்றறிக.

இனி வேதாந்தசித்தாந்தமாவது.

சூஅ. உயிரைப்பரனை யுபசிவனைமன்னை
யயர்வற்றறிதொந்தக்கசியதனும்
செயலற்றறிவாகியுஞ் சென்றடங்கி
யபர்வற்றவேதாந்த சித்தாந்தமாமே.

சூக. சிவனைப்பரமனுட் சிவனுட்காட்டு
மவமற்றவேதாந்த சித்தாந்தமானுல்
நவமும்றவத்தையில் ஞானஞ்சிவமாம்
தவமிக்குணர்ந்தவர் தத்துவத்தோரோ.

என்றது உயிரைப் பரனைச் சிவனை யிந்தமூன்றையு மயர்வில்லாமற் கண்டு தேர்ந்தசியால் நிச்சயஞ்செய்து எல்லாச்செயலு மற்று நீலோற்பலமானது மணம் சோம்பை நிறம் மெருகு இந்த நாலுங்கெடாமற்கொண்டு நின்று நீலோற்பலமென்றது போல இவ ஈஸ்வரசுடஸ்தப்பிரபாவனசித்தையுஞ் சத்தையுங் கொண்டு நின்ற முதலென்றும், இவண்டாமந்திரத்தில் ந

வாவுத்தையில் நின்றஞாகமே சிவமென்றுசொல்லுகையால் ஒன்பது தரிய ஞகிற ஒன்பதவத்தையும் உற்றுநின்ற ஞாகஞ் சிவமென்றதென்றறிக.

இனிச் சித்தாந்தவேகாந்தம்.

எய. சித்தாந்தத்தேசீவன் முத்திசித்தித்தலாம்
சித்தாந்தத்தேநிற்போர்முத்திசித்தித்தவர்
சித்தாந்தவேதாந்தஞ் செம்பொருளாதலாம்
சித்தாந்தவேதாந்தங் காட்டுஞ்சிவனேயே.

என்றது சித்தாந்தத்தில் சிவன் எடுத்த சென்மத்தில் மோட்சஞ் சித்திப்பிக்கையால் சித்தாந்தத்தில் நின்றபோர் முத்தி சித்தித்தவர் இது செம்பொருளாதலாற் சிவனைக்காட்டு மென்றறிக.

எக. வேதாந்தஞ்சித்தாந்தம்வேறிலாமுத்தினை
போதாந்தஞானம் போகாந்தம்பொதுவேறய
ஈதாந்தமானந்தஞ் சிோதயமாகு
மூதாந்தமுத்தினை மோனத்துமூழ்கவே.

எஉ. ஆறந்தமுன்சென்றடங்கு மந்நேயத்தே
பாறந்தமேறயமடங்கிடுஞாதுரு
கூறியஞானக்குறியுடன்வீடவே
தேறியமோனஞ்சிவானந்தவுண்ணமையே.

உக-வது—ஆத்தியாயம்.

புராணிகன்மதம்.

அஸ்டபிஸ்டங்களுமாந்தொழில்வித்தங்களும்
பஸ்டையதாகப் பயிற்றும்புராணமே.

சொருபமாவது மும்மூர்த்திகள்முதலான எழுவகைத்தோற்றங்கள் பிண்டப்பிரமாண்டங்களிதுமுதலாக விரிவான வெல்லாவற்றையு மறிவித்துந்தான்கெடாமலிருக்கையால் புராணங்களே பிரமமென்றறிக. இனி தடத்தலட்சணமாவது புராணம்-கஅ-உபபுராணம்-கஅ-தர்மசாத்திரம்-சுக-ஸ்மிருதியிதிகாச பாரத விராமாயணம் ஆபஸ்தம்பாயனங் காத்தியாயனம் போதாயனம் பாவதிபங்கள் இதுமுதலாக காட கரலங்காரப் பிரபந்தகாவியங்கள் இப்படி யனந்தவிதநூல்களாகவிரிந்திருக்கும் இதுகளைதைச் சொல்லுமென்னில் வைதிகசுர்மங்கள் சாங்கிய பாதஞ்சல பாஞ்சராத்திர பாசுபத சைவமிதுமுதலானமதமு மதின்னிதங்களுஞ மும்மூர்த்திகள் சரித்திரங்களும் அவர்

தொழில்களும் அவர்சாகசங்களும் அவர்க ளொருவருக் கொருவருண்டாம் ஈதிகங்களும் அவரவர் தானவைபவங்களும் அதிலே யடைகிறபே ரிருக் கிற போகசவுக்கியங்களும் கொலுவுகள் இருஷிகள் முனிகள் பிறப்புகள் அவர்தபோவனங்கள் அவர்தபோமுக்கியங்கள் வயிராக்கியங்கள் அவரவர்பெ றுகிறவரங்கள் அவரவர் பலாபலன்கள் ஆயுள்கள் சாபானுக்கிரக சாமார்த் தியங்கள் தபோபிரவ்டத்துவங்கள் காசிபர் முதலான நவப்பிரசாபதிகள் சிருஷ்டியும் சந்தசு முதல் அங்கமாறின் விரிவுகளும் உபவேதநாலின் அ ர்த்தங்களும் முதல்வேத நாலின் அர்த்தங்களும் கெசகரண கோகரணலா கு நோக்கு அஸ்தலாகு டொம்பரவித்தையுஞ் சவுனவித்தையுஞ் சோராதி சூதங்களும் அஸ்வவித்தை ஜகவித்தைவில்வித்தைஅஸ்வப்பிரயோகம் பாண வித்தையுஞ் சகுனங்களும் மணிமந்திர அவிழ்தங்களுஞ் சக்கரபேதமும் ய ந்திரபேதமும் தந்திரங்களுஞ் சொல்விக் கடையில் நிசமோட்சமும் அவர்ம கிமைகள் இராட்சதர் தபசுகள் அவர்வரங்கள் அவர் அயிஸ்வரியங்கள்அவர் தேவர்களைச்சிறைச்சூறைபிடித்து உபத்திரவஞ்செய்ததும் தேவர்கள் பல த்து இராட்சதரைச்சிறைச்சூறை பிடித்துக்கொன்றதும்ஒருவர்க்கொருவர்வ ஞ்சனைகளுஞ்சூதங்களும் பிண்டப்பிரமாண்ட புவனபோகங்களுண்டானது ம் அதிலுடைய லட்சணங்களும் ஒரு அண்டலட்சணம் நூறுகோடியுயரமு நூறுகோடியகலமும்இதிலடங்கின லோகங்கள் இதில் தீவுகள் இதில் மகா மேருமுதலான பருவதங்கள் நதிகள் இந்தத்தீவுகளாண்ட சக்கரவர்த்தி க ள் மனுமாந்தாதிகள் தீவிலுள்ளபேர் ஆசாரங்கள் வயதுகள் அந்த அ ண்டங்களைப்போல் பத்துபங்கதிகமாக அனேககோடி அண்டங்கள் நவக்கி ரக நக்ஷத்திரந் திதி வாரம் கரணம் யோகம் மாதம் வருஷம் அயனம் ருது காலங்கள் நெய்தல் முல்லை வனங்கள் பருவதங்கள் தீர்த்த மூர்த்தி முக்கி யங்கள் ஸ்தலமகிமைகள் சந்திர சூரியகதிகள் நக்ஷத்திர கதிகள் இராசிகதி கள் பிண்டோற்பத்தி பிண்டகோசலட்சணம் நால்வகையோனி எழுவகை த்தோற்றம் - அசாத - யோனிபேதங்கள் தத்துவபேதங்கள் உபதேச பேதங்கள் சன்மார்க்கம் அசன்மார்க்கம் புண்ணியம் பாவம் பலாபலன் செ ப தப தியான யோக சமாதி அஷ்டாங்கயோகம் அணிமாதிசித்தி அஷ்ட அயிஸ்வரியம் அனேகவிதயோகம் அதின்பலன் அதுசெய்கிற தந்திரம் எக் ஞாதிகன்மம் அதற்கேற்ற உபவாசங்களு முபவாசபலன்களும் மகாநவமிதி பாவளி யுகாதி விஜயகசவுத்தி அனந்தவிரதங் கேதாரிவிரதம் கோகுலாஷ் டமி நாகல்சவுத்தி மாதசங்கிராந்தி வருஷசங்கிராந்தி வரலட்சுமிநோன்பு ஆ டிகார்த்திகை சங்கிராந்தி அயனகாலங் கிரகணகாலம் இதுகளைக்கெடுத்த அபலன்களும் தீர்த்தவிசேஷந் தீர்த்தயாத்திரை விசேஷம் ஸ்தானவிசேஷ ஞ் சாந்திராயண கிரசிராயண பிரதோஷம் அஷ்டமி ஏகாதசி துவாதசி சி வராத்திரி சோமவாரமுதலான ஏழுவாரம் இதின்பலன்களும் இருமுதலான புண்ணியகால பண்டிகை விசிஷ்டங்களும் இதின்பலன்களும் மாகசினை

பலன்களும் சூரியபூசை துர்க்கிபூசை விநாயகபூசை கந்தன் வீரபத்திரன்பிர் மா விஷ்ணு ருத்திரன் பூசாபலன்களும் பெலிகளுந் தேர் திருநாள்களும் க வியாணங்கள் சோபனங்களும் நவக்கிரகபூசை நவக்கிரகசாந்தி பிராயச்சித் தங்கள் உச்சாடன மோகன ஸ்தம்பன வசிய ஆக்ருஷ்ண வித்துவேஷ ண மாரணத் துவேஷங்களும் இதின் தந்திரங்களும் அஸ்தப் பிரயோகங்க ளும் அதின்மந்திரங்களுஞ் சதகோடி மந்திரங்களும் மந்திரபுனற் சரணைக ளும் விபூதி ருத்திராட்ச பஞ்சாட்சரமகிமைகளும் விஷ்ணுமந்திரங்களும் கா யத்திரி சாவித்திரிபலன்களும் மந்திரவாத விரஸவாத தந்திரவாத யந்திரவா த விஷவாத மருத்துவாத பூதாவேச சக்கரதந்திரசித்திகளும்-சுயச- சித்தி விதங்களும் இராசவசிய முகவசிய சனவசிய ஸ்திரிவசிய மிருகவசியபூதப்பி சாதவசியங்களும்நரகமும் அதின்வாதனையும்யமதண்டனையுஞ் சொற்கபோக மும்சொற்கசவுக்கியமுஞ் சற்குரு அசற்குரு சற்சீஷன் அசற்சீஷன் உபதே ச விதங்களும் வர்ணச்சிரமமும் அதிவர்ணச்சிரமமும் அதிவர்ணச்சிரமநடக்ஷை யும் ஆசிரமங்களும் ஆசிரமநடக்கையும் அவர்பெருமையும் யதீஸ்வராபூசை யும் அவர்பெருமையுஞ் சித்திரகுத்தன் யமராசனியல்பும் பிண்டீகரணம் பெ விகரணங்களுஞ் சமாதியுந் தகனமும் பதிவிரதையியல்பும் விபசாரியியல்பு ம் பிதுர்கன்மங்களும் பிதுர்ப்பிரிதிபூசைகளுங் குண்டக கோளக அனுலோம பிரதிலோமகெடிகவிடல இதுமுதலான சங்கரசாதிகளுஞ் சாதியீனதிக்கமு ஞ்சாலோகாதிபதங்களும்பலசமயமும்அதின்கெதிகளும் பலவிரதமு மனுமாந் தாதி சக்கிரவர்த்திகள் சரித்திரமும் மணிமந்திர சற்கப் பிரதிசற்க வங்கிச ானுசரித்திரமும் இதுமுதலாக அனந்தவிதங்களாய்ப் புராணங்கள் விரிவாகை யால் தடத்தலட்சணமென்றறிக. இனி (பெத்தநிலையாவது) இந்தபுரா ணங்கள் சொல்லுகிறபடிக்கு நடவாமல் இதின் ஆக்ஞைதப்பி நடப்பதே பந்தமானதென்றறிக. இனி (முத்திநிலையாவது) இந்தபுராணங்களாலே யி கலோக பரலோகங்களை யறிந்துகற்றுங்கேட்டுந் தப்பாமல் நடக்கிறதே மோ ட்சமென்றறிக. இது சங்கேஷபமாகச் சொன்னது இந்தபுராணங்கள் வியா சர்கற்பிதம் இனி முன்சொன்ன ஆறந்தத்துக்குமிவனுக்கும் பேதமென்னெ னில் அவன் அந்தமுடிவிலே நிசமோட்சஞ் சொல்லில் இவன் புராணங்க ளாக்கேட்டு மும்மூர்த்திகள் பதமடைதலேமோட்சமென்னையாற் பேதமு ண்டென்றறிக.

உஉ-வது—அத்தியாயம்.

பாஞ்சராத்திரமதம்.

தெசவிதலவஷணவர் தெய்வமொன்றுமவன்.

புசபலன்புகழும் போதகஞ்சொல்வது.

சொரூபநிலையாவது, ஆதியாயருவமாகி யகண்டபூரணஞ்ஞ் ஞானச் சாதியாய்நின்றமாயன்னன, உலகசிருஷ்டி விதேதார்த்தமாகமூலப்பிரகிர்தி

யாதிறமாயையோடுங்கூடிச், சகுணமாய்ப் பரந்தாமனென்றும் ஆதிமூலமெ
னிறும் பரவாசுதேவனென்றும் ஆதிவிஷ்ணுவென்றும் பெயராம். இந்தப்
பரசுதேவர் பிருதிவியாதி மண்முதல - உயிர - தத்துவத்தின்மேல் குண
தத்துவாத்மீக வாசுதேவராய் நித்த யுத்த சுத்த முத்தராய் அனந்தகலியா
ண குணமுண்டையராய் அனந்தானந்தகளாப்பிரசன்னமுடையராய்ச் சங்கு
சக்கரதாரியாய் லட்சுமிசையுத்தனுப்ச் சகுணப்பிரதிவிம்பமாய் அஷ்டகுண
னத்தனுய் சத்திபலவயிஸ்வரிய தேஜோவீரிய வைஷ்ணவவஷ்டகுண சகித
னுய் அந்தரதாமச பதீசுவாத்மீக நீலவர்ன சர்வசோபிதராய்ச் சர்வாலங்கா
ரத்துடன் ஞானசத்தி இருக்குமாங்கதர் சங்கருஷ்ணர் பிரத்தியும்மின் அ
னிருத்தர் புடைசூழ மச்ச கூர்ம வராக வாமன நாரசிங்க பிறகுராம ரகு
ராமபலராம கிருஷ்ணகலகி யிப்படித் தசாவதார யுத்தனுய் அனிருத்தனுப்
இருக்குமாங்கத பிரகலாத நாரத பராசர புண்டரீக வியாச அம்பரீஷ சு
க சௌனக பீஷ்ம தாலப்பிய அர்ச்சுன வசிஷ்ட பலி விபீஷன கபேசர்
தர அக்குரூர முசுகுந்த குசல ஞான உத்தவ துருவ முதலாகிய பரம
பாகவதர்கள் சேவிக்க வைகுந்தத்தில் ஆதிமூலமாயிருப்பர். இது சொரூபம்.

இனி (தடத்தமாவது) கர்த்தமரிஷி பெண்சாதி தேவஹதி யென்பவள்.
யிற்றில் விஷ்ணுவானவர் அவதாரஞ்செய்தார் கபிலமகாரிஷியாய் அவளை
தேவஹதி யென்கிற தாயானவள் தன்குமாரனுகிய கபிலனைநோக்கி இவ்வுல
கச்சிருஷ்டிக்கிரமங்களை யெனக்குச்சொல்லவேண்டு மென்றுகேட்கத்தாயா
ருக்குச்சொல்வது பாகவதத்திலிரண்டா மாசுவாசத்திலென்றறிக. இனிதேவ
ஹதி ஆத்மசொரூப மாவதெதுவெனக்கேட்க அநாதிபுருஷனுப்சத்துவாதிகு
ணசூனியனுய்பிரகிர்தி விலக்ஷணனுய்பிரத்தியேக சொரூபனுய்சுயம்பிரகாச
னுய்பிரபஞ்சத்துக்காதாரபூதனுய் சர்வசலட்சணனுப் இருக்கிறவனென்றும்
நாம் நம்முடையசத்திசேஷாபமாகிற சூட்சும குணத்திரயத்தால் பிரகிர்தியி
லேவிலாசார்த்தமாய்ப் பிரவேசித்துப்புருந்தபோது அந்தப்பிரகிர்தியுங் குண
த்திரய மயமாய் தன்ரூபமான சகத்தைபுண்டாக்கினது அப்போது ஆத்
மாவானவ னதைப்பார்த்து மோகிதனுய் அஞ்ஞானமூடப்பட்டு அநாதியா
ன பிரகிர்திகுணந் தன்னிடமாக ஆரோபிதமாயிற்று. நிரியாசொரூபமான
மனேகாரியத்தினு லஞ்ஞானகத்துருத்துவ முண்டாகிச் சம்சாரபந்தனுய்
பரதந்திரனுயிருப்பன் இந்த வரத்மா பிரகிர்தியாதினைமென்றறிக. இனி (சு
கதுக்க போக்துருத்துவம்) பிரகிர்தி முதலானவெல்லைமவற்றிற்கும் விலட்
சணனுய் கத்துருத்துவ சூனியமான ஈஸ்வரன் சாட்சிமாத்திர மென்றறிக.

இப்படி சொல்லக்கேட்ட தேவஹதி கபிலனைப்பார்த்துக் கேழ்க்கிறள்
ரூள் பிரகிர்தி புருஷகார்த்தமான ஆத்மாவுக்கு காரணமாகையால் இந்தப்
பிரகிர்தி ஆத்மலட்சண மெனக்குத்தெரியவில்லை விளங்கச்சொல்ல வேண்
டுமென்று கேட்க, கபிலர்சொல்லுவார் கிரமத்தில் முக்குணம் பிரகிர்தி
அவ்வியத்தம் நித்தியமாய் சத்துமாயிருக்கும் இந்த ஆகாதாதி கூடின

இனிக் கிரியாபூமி ஞானபூமி யோகபூமி அனுபவபூமி யிந்த - ச - வில் கலை - உஅ - ஈஐ -இதுகளெல்லாம் பனையாலேயாகும் பரசிவன் சந்நதி சாட்சியாக முதல் துணை நிமித்த மூன்றுல் அண்டபிண்டங்களைக் குலாலன் மண்ணைக்கொண்டு கடங்களைவனைவதுபோல் சிவன் பனையைக்கொண்டு மாயையாகிற மண்ணுற்செய்வான் இனி முன்சொன்ன பராசத்தியிலிச்சாஞானக் கிரியாசத்தியால் நவசத்தியுண்டாய் நவசத்தியாலனந்தகோடிசத்தி யுண்டா யெல்லாஞ்சத்தி மயமாய்ச் சீவபாஞுஞ் சத்தியாலாமென்றும் இப்படிச் சிருஷ்டிவிதங்களாலோகமாப் ஆகமங்கள் சொல்வது உகாந்தடோதங்களால் வற்றிதன்றறிக.

கூசு. காலம்போலவழிவிலதாயுருவாதிபாக்கிக் காயவனல்போலவி
னையின்கனைங்கடன்னை, யேலவேபாகமுறச்செய்துகாயத் தெ
ழிற்கிரிபையாத்மாத் தானியற்றமன்னைப், போலவேசராசர
ங்கடன்னினின்று புரிந்திடுவன்பிரோரகத்தைப் புனிதன்ரூலு
ஞ், சிலமோதிரிவில்லுக்கதுதோன்முன்னஞ் செய்திகமலாதி
கள்போற்றெரிந்துகொள்ளே.

இதல்லாமல் மதமொன்ரூகிலுந் தந்திரபேதங்கள் வெகுவிதமாகையாத
திருஷ்டிவிதங்களும் பேதங்களாயிருக்கும் இதுகளெல்லாஞ் சொரூபத்தில் ல
டத்தலட்சண மென்றறிக.

இனிச்சுத்தமாயை யுபக்கிரமலக்ஷணம்.

ஈ. ஆரும்பரமசிவன்றன் பராசத்தியிற்குடிலை
சேருங்குடிலையிறுதமந்நாதத்திற் சேர்ந்தவிந்து
சாருநல்விந்திற்சதாசிவன்தோன்றுஞ் சதாசிவத்திற்
கூருமகேசமகேசத்தில் வித்தையுங்கூட்டிடுமே.

ஈக. பதிபசுபாசமூன்றும் பார்த்திடுன்வியாபிநித்தம்
பதியவன்சத்திமூன்றும் பராசத்திக்கனந்தசத்தி
விதியிறைப்பசுவனுதி மலநிறைவிமலனுகுங்
கதிபசுபதியையொத்துக் கண்டுகொண்டிருக்கலாமே.

என்றது-பரசிவன்பால் பராசத்தியருளால் குடிலையாகிற சுத்தமாயை
யாவது கர்த்தாவினுடைய லயபோகவதிகாரங்களுக்கிடமாய்ச் சுத்தமாய்ச்
சடமாய்க் கர்த்தாவுக்குப்பரிக்கிரக சத்தியுமாய் நித்தமாய்க் காரணமாயொ
ன்ரூய் அச்சுத்தாசுத்த மிரண்டிலும் வியாத்தமாய் விஞ்ஞானகலருக்குத்
தனுகரண புவனபோகமும் பிரளயாகலர் ஆருக்குச் செலுத்துந் தத்துவ
மாயுமிருக்கும் இந்தமாயையில் சிவசத்தியதிட்டிக்கையால் சிவதத்துவம் -நு-
ம் கலைகள் - நு-ம்-தோன்றும். அதெப்படியென்னில் பரமசிவன் பராசத்தி
சொரூபமாய்த் தனது ஞானசத்தியைக்கொண்டு அதிஷ்டிக்கையால் முழு
ஞானமான சிவதத்துவமும் தனது கிரியாசத்தியைக்கொண்டு அதிஷ்டிக்
கையால் முழுக்கிரியையான சத்திதத்துவமும் தனது ஞானக்கிரியையிரண்
டையுஞ் சமனுகக்கொண்டு அதிஷ்டிக்கையால் ஞானக்கிரியை சமனைசதா
சிவதத்துவமும் ஞானஈனமுங் கிரியாதிக்கமுமாக அதிஷ்டிக்கையால் ஞான
ஈனமுங் கிரியாதிக்கமுமான ஈஸ்வரதத்துவமும் கிரியாஈனமும் ஞாஞதிக்
கமுமாக அதிஷ்டிக்கையால் கிரியாஈனமும் ஞாஞதிக்கமுமான சுத்தவித்தை
யும் இப்படி ஞானசத்தி கிரியாசத்திகளைக் கொண்டு சிவதத்துவம் - நு - யுந்
தோற்றுவிப்பானென்றறிக. இனி முன்சொன்ன பரன் பராசத்தியும் சுத்
ததத்துவத்திற் சிவஞ் சத்தியும் ஆ - சு - ம் கர்த்தாவுக்கு நித்தகளாபான திரு-
மேனியும் லயத்தானமுமென்று போராம் இனிச் சதாசிவன் சதாசாதனாம்

மகேஸ்வரன் உருத்திரன் விஷ்ணு பிரமா இந்த நால்வருஞ் சகளம். இந்த கூ-ம்- சிவனுக்குக் காரண சூட்சுமஸ்தூலதனுவாயிருக்குமென்றறிக. இனி முன்சொன்ன குடிலையிற் மூன்றினவிந்துவிற் சூக்குமாதி - ச - வாக்கும் -நிக- அட்சரமுஞ் சத்தகோடிமந்திரங்களுஞ் - உ - திவ்வியாகமமும் - ச - வேதமுந் தோன்றும். இனி முன்சொன்ன சுத்ததத்துவம் - நு - ல் சிவதத்துவத்திற் பரனிருக்கும் சத்திதத்துவத்திற் பராசத்தியிருக்கும் சதாசிவததத்துவத்திற் சதாசிவனிருப்பர் ஈஸ்வரதத்துவத்தில் மகேஸ்வரனிருப்பார் சுத்தவித்தையில் உருத்திரதேவரிருப்பார் இந்தச்சுத்ததத்துவந்தோன்றினது குடிலையில் நாதம் நாதத்தில் விந்து விந்துவிற் சதாசிவம் சதாசிவத்தில் மகேஸ்வரன் மகேஸ்வரத்திற் சுத்தவித்தைதத்துவம் தோன்றினது இந்த - நு - ல் ஈஸ்வரதத்துவத்தையிச்சாசத்திசெலுத்தச் சாதாக்கியத்தையுஞ் சத்தியையுங் கிரியாசத்திசெலுத்தச் சுத்தவித்தையுஞ் சிவதத்துவத்தையும்ஞானசத்திசெலுத்த இந்த - நு - ம் காலதத்துவம்- எ - ம்- செலுத்த இந்த- எ- ம்- ஆத்மதத்துவம் - உ - யுஞ் செலுத்துமென்றறிக. இந்தச் சுத்தம் - நு- ஐ- மும்பாடுசொல்லக் கூடாது ஏனெனில் காலதத்துவமில்லாத படியாலும் இதை நின்மலசத்திகள்- நு- ம் சேட்டிக்கையாலும் சுத்தமென்றதென்றறிக. இனி ப்பரன்பராசத்தி சதாசிவன்மகேஸ்வரன்உருத்திரன்இந்தவைவரும்சிவஞ்சத்தி சதாசிவம் ஈஸ்வரன் சுத்தவித்தையில் அமர்ந்திருப்பார்களென்றறிக. இதல்லாமல் அருவம்- ச-ம்-சிவனுக்கு நிஷ்களமானகாரணதனுவாய் இலயத்தானமுமாம் ரூபாரூபம் சூட்சதனுவாயும் போகதானமுமாயிருக்கும். இதில் அட்சரசொரூபமாய் சகளமாயிருக்கிற பரை பைசந்தியான அபரநாத அபரவிந்துவும் அணுசதாசிவர்களுமடங்கும். இனியுருவம்-ச-ம்-சிவனுக்குச் சகளமானதூலதனுவா யதிகாரத்தானமுமா யிருக்கும். இதிலிவர்களும் அஷ்டவித்தியேஸ்வரரும் ஈஸ்வரதத்துவத்திலிருப்பார்கள். இனிச் சுத்தவித்தையில் சத்தகோடிமகாமந்திரங்களுஞ் சத்திசொரூபமாயிருக்கிற வியோமவியாபிமுதலான மந்திர ஆகமவேதங்களடங்கும். இவ்விடத்தில் சிவன் அருவம் ரூபம் உருவம் என்று மூன்றுவிதமாம் அப்போதுசத்தியுமூன்றுவிதமாம். அதெப்படியென்னில் சிவன் பரனென்போது சத்தியும்பராசத்தியாம் சிவதத்துவத்திற் சிவன்நாதமானபோது விந்து சத்தியுமாய் நிஷ்களமாம். கர்த்தா சதாசிவனுய்ச் சகளநிஷ்களமானபோது சத்தியும் மகேஸ்வன்மணியாய்ச் சகளநிஷ்களமாம் கர்த்தா மகேஸ்வரன்உருத்திரன் விஷ்ணு பிரமாவானபோது சத்தியும் மகேசை யுமை திருவாணியென்று நான்காய்ச் சகளமாம் இனிக்கலையுற்பத்தி எப்படியென்னில்,

ஈஉ. பரஞ்சித்திலுதியாநின்ற பலகிரணம்பதிந்தாங்கா
யிரஞ்சித்தபோதுகாம மெழில்கொள்குண்டலிமாயைக்குச்
சிரஞ்சித்தின்புணர்ச்சியாலே செயனைதமுன்கெற்பந்தாங்கி
யுரஞ்சித்தாநின்றுதாவே யுலங்களீன்றதன்றே.

என்றது பரமாயிருந்துள்ள சைதன்னியசத்தியிலுதிக்கப்படா நின்ற கிரணங்களானவைசென்று விழுந்து இரஞ்சித்தபொழுதுமாயைக்குக் குண்டலியென்றுபெயராய்த் தலையாயிருந்துள்ள சிற்சத்தியினுடைய கிரணச்சை யோகத்தால் செகத்தைக்கெற்பந்தரித்துத் தானேசைதன்னிய சொரூபமாய்நின்று செகத்தையுண்டாக்கும்.

ஈஉ. பஞ்சசத்திவிந்துவினிற்பதியுங்காலே பரிதியொளி காந்தத்தேபதிந்தபோதில், விஞ்சுசுடருதித்தது போற்கலாசத்தியைங்கை வேறறவேயீசானதிபைந்தா, யெஞ்சலிலாப்பஞ்சமந்திரசத்தியுதிக்கு மிவைதனுவாய்க்கரும சாதாக்கியர்தானிசைந்தே, தஞ்சமாயனைத்துயிர்க்குங் கருணைசெய்யச்சதாசிவதத்துவத்திறையாய்த் தரிப்பர்தானே.

என்றது பஞ்சசத்தியானது விந்துவாகிற மாயாசத்தியோடு போய்க் கூடினபோது சூரியகிரணமானது காந்தத்திற் கூடி அக்கினிப் பிரகாசமுதித்ததுபோல் நிவிர்த்தாதிகலை ஐந்துமுண்டாம், அதெப்படி என்னில் பஞ்ச சத்திகள்தானே மாமாயையில் பிரதிபிம்பமானதே பஞ்சகலையாயிற்றென்றறிக. வேறறவேயென்றபதத்துக் கிப்பாவிதில் சொல்லப்பணியில் லை யாதலாவிந்தக்கலையின்செய்தியெப்படியென்னில் நிவிர்த்தியென்பதுதன்னிடத்தில் பொருந்தினவாத்மாக்களுடைய சங்கற்பம் நிவிர்த்திசெய்கையாம் இனிப் பிரதிஷ்டை யென்பது தன்னிடத்திற் பொருந்தின ஆத்மாக்களுக்கு முன்சொன்னசங்கற்பம் விடுதிநிலைபெற்றுத் திடமாகப் பிரதிஷ்டைக்கையாலென்றறிக. இனி வித்தியாகலையென்பது தன்னிடத்தில் பொருந்தின வாத்மாக்களுக்குச் சங்கற்பம் விடுதிநிலைபெற்றுத் திடமானத்திற்சருவார்த்தஞானம் பிரகாசிப்பிக்கையால் ஞாநத்துக்கு வித்தையென்றுபெயராகையாற்கலைக்கும்வித்தையென்றுபெயராயிற்று. இனிச்சாந்திகலையாவதுதன்னிடத்தில் பொருந்தினவாத்மாக்களுக்குச் சர்வார்த்தஞானப் பிரகாசத்தால் இராகத்துவேஷமின்றி யிருக்கையாலும் விகற்பஞானஞ் சாந்தமாகையாலுஞ்சாந்திகலையென்றுபெயராயிற்று, இனிச்சாந்தியாதீதகலையாவதுதன்னிற் பொருந்தினவாத்மாக்களுக்கு அந்த விகற்பஞானஞ் சாந்தமானதென்கிற முன்னினைவுங்கழிந்து அதீதமாய்ப்பரமாகச் சொரூபமாய் நிற்கையாற் சாந்தியாதீதமென்றுபெயராயிற்று இந்தக் கலைகள்-நு-ம்-தத்துவம் புவனங்களுமாத்தசொரூபமாயிருக்கும் இனி வாக்கு நாலும் அட்சரங்களாகிற வர்ணமும் மந்திரபதமும்ஆகம வேதங்களுஞ் சத்தசொரூபமாயிருக்கும். இனி மாமாயை சத்தமாகவும் அர்த்தமாகவு மிரண்டுவடிவாயிருக்கும் இதினுடையவினியைவ ஆகமங்களிற் கண்டுகொள்க. இனி முன்சொன்ன விந்துவில் வாக்குகள் தோன்றும் அதெப்படியென்னில் மூதலாதாரத்தில் விளங்காநின்ற விந்துவில் சூக்குமமேதான்றிச் சொல்லுதற்காரதாய வறிவுமாய் விளக்கமுமாய் ஆத்மா பகுதியாலே ஒருநாதமுமாய்த்துரியதானத்தைப் பொருந்திநிற்கும் இதில்நிற்கிறநாதமான சூக்குமையில் பைசந்திதோன்றிச் சுழுத்திதானத்

தைப்பொருந்தி அட்சரங்களே வெவ்வேறுரூப்தோற்றுவித்துத் தன்னுள் ளேயொடுக்கிப்புத்தியிறற் சுட்டப்படாத வக்கரத்தையுடைத்தாய்ச்சத்தமர்த்தமில்லாததாய் வெவ்வேறுனவக்கரங்கள்தோன்றுமல்மறைத்து மயிலின் முட்டையில் மயில்ரூபகரித்துத்தோன்றுகையிலதையுடைத்தாற் சலந்தோன்றும்போலச் சித்தத்தில் அறிவாய்நிற்கும். இனிப் பைசந்தியில்மத்திமை தோன்றிப் பிராணவாயுவுடனேபொருந்தி வரப்பட்ட அக்கரங்களேயும்அவற்றின் பொருள்களேயும் புத்தியில் நிறுத்தி முற்பட்டுவருகையில் செவிக்குக் கேளாமலுள்ளேயுணரத்தக்கதொனியாய்க் கண்டத்தில் முழங்கும். இதில் வைகரிதோன்றி உதானவாயுக்கட்டுண்டு பிராணவாயுவுங்கூடிச் சத்தத்தையிவனுடைய செவியில் கேழ்க்க நினைந்ததுசொல்லும் இந்தவாக்குகள் சுத்தவத்துவாவிற் சூக்குமமாயும் மிசிரவத்துவாவிற் ஸ்தூலமாயும் அசுத்தவத்துவாவில் வெகுஸ்தூலமாயுஞ் சீவிக்கும்.

ஈசு. உந்தியேயிதையங்கண்ட மோஷ்டமேதந்தங்காலு
மூந்தியநாசியுண்ணு மூறைமூறைதோன்றும்வன்னந்
தந்திடுஞ்செவிக்குளான சத்தவத்தங்களாகிப்
புந்திகாரணமாய்ப்பிராணன் போக்குதையபாத்துமத்தாம்.

இந்தமுறையில் சிவனருளால் ஆத்மாக்களறிகிற வறிவுக்கோகாதே காலுவாக்காலுஞ் சுத்ததத்துவமைந்தாலும் ஞானம்பிரகாசிக்குமென்றறிக. இனிச் சுத்த தத்துவமான அருள்சத்தி முதலான வாறுசத்திகளிலுஞ் சுயமாகத்தானே தோய்வர் இனி மகாமாயையிலுண்டான சுத்தவித்தைமுதல் தத்துவங்களில் தமதுசத்திகளேத் தேகமாய்க் கொண்டுதோய்வர் இந்தச்சத்திகளால் சுத்த தத்துவங்களேத் தேகமாகக்கொண்டு சுத்தா சுத்தமான காலதத்துவங்களிற்றோய்வர். இனி அசுத்தமான்தத்துவம்- உசு- லிலும் இதற்கு அதிதெய்வங்களேத்தேகமாகக்கொண்டுதோய்வர்.

ஈடு. தத்துவங்கள்சடமாகி யறிவுதொழிலின்ரூம் சத்திசிவனும் பிரவேசித்திடுவர்சாற்றிற், சுத்ததத்துவமதனிற் சுயமேதோய்ந்திடுவர்சொலுஞ்சுத்தாசுத்தத்திற்றோய்வர்சத்தியிடமாய்ச், சித்தமுதலானவற்றிற்றேவர்களேச்சேர்ந்தே செறிந்திடுவரிவ் வாறுமூவகையாற்சிவ, னெத்துறுதல்செய்தருளாற்றத்துவத் துக்குணர்வுதொழிலாக்கியிடலுணர்ந்திடுவாமுனரே.

ஈசு. வன்னியுடனிந்நாலு மூபேந்திரனுமறலிமாமலோன்ரூனுமிவர்வாக்காதியைந்தைத்துன்னியிருந்தேவசனகெமனதானஞ் சொலில்விசற்கானந்த மைந்தாந்தொழில்புரிவித்திடுவ, ருன்னியிடிற்செவிதோல்கணைக்குமூக்கி லுற்றிருந்தென்டிசைத் தேவன்வாயுவினன்வருண, னன்னியமிலாவிருவரசுவினிதேவதைகளைடந்தறிவிப்பார்சத்தமாதியைந்துமடைவே.

ஈன. மனமதனிற்சந்திரனுமாங்காரமதனின் மன்னியவீமேசர்புந்தியினிற்புத்தி, யெனவுனைக்குஞ்சத்தியாங்குணங்களோர்மூன்றி லிசைந்துமலரோன்மாலுநீலவுருத்திரரு, முன்ஸ்பற்றல் கைக்கொண்டலகங்காரித்தேதியோங்க லுற்றதனைப்பகுத்தறிதலுயர்தன்மாதிகளாய்ப், பனவுளதாம் பஞ்சாசற்பாவந்தாகப் பண்ணிடுவரிப்பரிசேமேலுளதும்பகர்வாம்.

ஈஅ. என்னரிதாமிராகத்திபிராகேசரிசைந்தே யியற்றிடுவர் புருடனையுமிச்சையையுமுனர, நன்னியிடவிடயத்தே செய்யும்வித்தை நன்னிடுவள்வித்தியாதேவிநலமார, பண்ணியிடவறிவுதொழில் விளங்கியிடத்தலைக்கே பதிந்திடுதல் கலாதேவியெனப்பகர்வர்காலத், தன்னைல்காலேசரணந்தாக்கியுளித்தழித்த லாவனவுந்தோற்றுவித்தேநியமனமாக்கிடுவார்.

ஈசு. சுத்தவித்தைதனைவிமலவித்தியாதேவி சொல்லீசதத்துவத்தைமகேசர்சதாசிவத்தை, யத்தர்சதாசிவர்பொருந்தியவ்வவற்றலனைத்து மாக்குவர்களந்தத்தத்துவத்தினடைவு, மித்தகையதத்துவங்கட்கீசுரர்தம்வழிவுமெழில்கிரியைகுணங்குணியுமியம்பில்விரிவாகு, நித்தனுயிர்க்குயிராகிச் சராசரங்கடன்னி னின்றனைத்துஞ்சேட்டிக்கு நிலையுணரவரிதே.

ஈஐ. கையிறந்தசத்தியுடன்காரியரூபாகிக் கலங்கியேநின்னுடையகாரியமாயையின்கண், புரைவறவேயீசர்சத்திபுனர்ந்ததனை வழிவாய்ப் போற்றடமாயா தேவியெனும்பெயரும்புனைந்தே, தினைநுனைகடிவலைகடான்கடற்பாலாகுஞ் செய்வகைபோற்றனுவாதிசிறக்கச்செய்தே, தையிறுதிகலையாதிதத்துவத்தாருயிர்க டான்மயங்கிச்செய்யுமெனச்சாற்றிடுமாகமமே.

இனித்தாத்திகங்களாவது.

ஈகக. நவமணிதாதேதாழுநரர்சுரர்நாகராதி
யவயவம்வாயுப்பத்து மறிந்திடிற்றுத்திகங்க
ளுவமையில்கதிரோனுதி யொளிபதியுருவேபோகும்
தவமிலாருள்ளம்போலத் தாவிருள்பாசந்தானே.

இந்தச் சுத்தமாயையில் விஞ்ஞானகலர்க்குத் தனுவாதியாக்கியும் பிரளயாதலைச் செலுத்துவதாகியும் இலயகாலத்தில் கலையிளேர்க்குக் காயமாக்கியு மிப்படிச்செய்வனென்றறிக. இனித் தன்மை முன்னிலை-படர்க்கை-யென்று-ங-விதமாம் இதில் தன்மையாவது-பரிபூரணம் - முன்னிலையாவது-இந்தப்பரிபூரணத்தால் இச்சாஞானக்கிரியாசத்திகளைப்பிரேரிக்கும்.படர்க்கையாவது-முன்னிச்சாஞானக்கிரிலைய பிரமாதிகளைச்செலுத்தும் - பிரமாதிகள்-

அகாராதிகளைச்செலுத்தும் அகாராதிகள் மஞதிகளைச்செலுத்தும் இப்படி-ஙு-பிரகாரமாயிருக்கும் இஃதின்னமொருவிதம் - தன்மை-இச்சாஞானக்கிரி யை - முன்னிலை- அவ-னவ-ளதுவாம்-படர்க்கை - இவ்விரண்டிலுந்தட்டாத வுண்மை-யிதுகள்-பெத்தநிலைக்குச்சொன்னதென்றறிக. இனி முத்திநிலைக் குப்பின்னுமொருவிதம்-சிவமயமாய்நின்றது தன்மை-அகிலமெல்லாஞ்சிவமய மாய்த்தோன்றுகிறது - முன்னிலை - பிந்தவிரண்டுந்தோன்றுமை லனுபவசொ ரூபமாகிறது - படர்க்கை-இஃதின்னுமமாருவிதம்-தன்மையாவது- ஆணவத் தைப்போக்கித் தன்னையுள்ளபடிதோற்றுவித்தல்- முன்னிலையாவது- அவ-னவ-ளது - முன்னிலையாகச்செலுத்தல் - படர்க்கையாவது - புண்ணியபா வபலனை நுகர்வித்து-நரக - சொர்க்க-முண்டென்பது - இனி அருள் முகிட்பு பராசத்தி-மலத்தைச்செலுத்தல் ஆதிசத்தி சிருஷ்டியாதி அறந்திகழ வுண்ணியது இச்சாசத்தி அனைத்தையுமோக்கல் ஞானசத்தி அன்னியமாகக்கிரி யைசெய்தல் கிரியாசத்தி-ஆ-ரு-இந்தச் சுத்தமாயையிற்சத்தி கூடினபோது நிவிர்த்தி-பிரதிஷ்டை-வித்தை-சாந்தி சாந்தியாதீதை-தீபனைதநாதம்நாதாந் தம்-சத்திவியாபினி - சமனை-உன்மனை - வியோமரூபினி- அனந்தை-அநாதி-அநுசிருஷ்டை - சோடசகலையாகப் பிரசாதகலையுண்டாம் - இனிச்-சுத்த மாயை-ஙகை-பெயராம் - அதெப்படியென்னில்- ஓங்காரம்-பரப்பிரமம்- வயி ந்துவம் - மாயேயம்-மாமாயை - மாயை-படங்-குடிலை-பிரணவம்- பேரொளி-நாதம் - விந்து-சிவனுக்குத் தனுகாணபுவனபோகம்-ஆ-சை-வாக்காதி-சை-நிவிர் த்தாதி -ரு - சத்தாதி-ரு-குண்டலி யாகச் சுத்தமாயைபரியாயநாமம்-ஙகை-இப்படிச் சிவசத்தியிருவித்தனைபெயராயிற்று ஆரு லிந்தச் சிவசத்திதா னேவிந்துவாமென்னில் - சித்து-அசித்தாய்ப் - பந்தமாகாது-இது உயிர்க்கு ஞானங்களாய்ப் பெந்தங்களை விடுவிக்கிறதாகும் கடத்திற்குமண்போலச்சிவ னுக்கு உபாதானகாரணமான பரிக்கிரக சத்தியாயிருக்கும்.

ஈகஉ. அறிவிலதாய்ச்சுத்தமாயனுதியாய்நாத மாதியாந்தத்துவங் களக்கரங்கள், பிறிவிலாச்சூக்குமைமுதல்வாக்கியாவும் பிறப் பிடமாய்விஞ்ஞான கலர்க்குருவமாகி, நெறியுளதாய்ப்பரமா னமுத்தியினிற்றூணு நீங்குவதாய்நித்தமாய் வியாபியாபெங்கு ஞ், செறிசிவற்குப்பரிக்கிரகசத்தியாகிச் சேர்ந்துளதுவிந்து வெனத் தெரிக்குநூலே.

இனிச் சுத்தாசுத்தாமாயையுபக்கிரமலட்சணம் முன்சொன்னசுத்தமா யையில்சுத்தாசுத்தமாயையுண்டாமிதுசுத்தாசுத்தமாவானேனென்னிற்றூ ன் சுத்ததத்தில் தோன்றித் தன்னிடத்தில் பிரகிர்தியாகிற அசுத்தமாயைதோ ன்றுவதற் கிடமாகையால் சுத்த அசுத்தமாமென்றறிக. இதற்குஅதோற்மா யையென்றும்இது பிரளயாகலர்சகலருக்குத் தனுகரணபுவனபோகமுமாயிரு க்கும் இந்த அதோற்மாயா சிருட்டிவிபரம் அனந்தேவராகிற மகேஸ்வரன ருளினல் மாயையில் காரியமாயையுண்டா யிதில் காலமும்பின்நியதியும் பின்

கலையுந்தோன்றிக் கலையிலேவித்தைதோன்றி யிதிலோகந்தோன்றும்-ஆக-
ரு-இந்த வைந்துடனும் ஆத்மா கூடினபோது ஆத்மா அதோமுகப்பட்டு
அப்போதுபுருஷதத்துவமென்றுபெயராம் முன்சொன்னகாலதத்துவத்தோ
டிதுவுங்கூட காலதத்துவம்-எ-இனி அசுத்தமானபிரகிர்தி சிருஷ்டிக்கிரமம்
முன்சொன்னகலையிலே பிரகிர்திதோன்றும் இதில் உருத்திரதேவரால் முக்
குணங்கள்தோன்றும் இந்தக்குணங்களைக்கூடி யொத்தவிடம் அவ்வியத்தம்
இந்த அவ்வியத்தத்தில்சித்தமுண்டாஞ்சுதத்தில்புத்தியுண்டாம் புத்தியில்
ஆங்காரமுண்டாம் இந்த ஆங்காரம்-தைசத-வைகரி-பூதாதி- என்று மூன்
றுவிதமாம் சாத்மீககுணஞ்சார்வாகத் தைசதவாங்காரமாம் இதில் மனமும்
பத்தேந்திரியமாகிற சுரோத்திராதிகளுமுண்டாம் இராசதகுணஞ் சார்வாக
வைகரியாங்காரத்தில் கன்மேந்திரியமான வாக்காதிதோன்றும் தாமசகுண
ஞ்சார்வாகப் பூதாதியாங்காரத்திற் சத்தாதிதோன்றும் சத்தாதியிற் பஞ்ச
பூதமுண்டாம் இதற் கதிதேவதைகள்சதாசிவாதிகள் ஆ-தத்துவம்-உசு-
முன்சொன்னகாலதத்துவம் -எ- சுத்ததத்துவம் -நி - ஆ- தத்துவம்-ஙயசு-
இந்த முப்பத்தாறும் மூன்றுமாயையிலுஞ் சிவன் உபக்கிரமபேதத்தாலுண்
டென்றறிக. இதல்லாமல் சிவன் தற்சுத்தியில் ஆதிசத்தியை ஆத்மாக்கள்
செனன்மரணங்களிற் படுகிறதுன்பத்தை யறியவொட்டாமற் கன்மசாம்மி
யம் பிறக்குமளவு மறைப்பித்துப் பக்குவப்படுத்துமளவும் நிறுத்தின ஆதிச
த்திக்குத் திரோதானசத்தியென்று பெயராம் ஆலல் முன்சொன்ன மூன்
றுமாயையையுந் திரோதானத்தைபு மிங்கே சிவசிருஷ்டியில் சொல்லுவா
னேனென்னில் ஆத்மாவுக்கு அனுதியேமலமுங் கன்மமும் பந்தித்து ஆத்
மா தன்னையுந்தலைவனையுமறியாமல் மூடிக்கொண்டிருக்கையால் இந்தவியா
திதிர்க்கும்பொருட்டுவயித்தியன் மருந்துகளைக்கொண்டுவியாதிகளைத்தீர்ப்ப
தபோலவும் வண்ணான்புடைவைகளிற் பற்றின அழுக்குப்போகவேண்டிப்பி
ன்னும் ஆட்டுச்சாணி-உழமண்-கார-க்ஷாரங்களி லூரப்போட்டு முன்பற்றின
அழுக்கையுந் தான்போட்ட அழுக்கையும்வாங்கி வெள்ளையாக்கிறற்போல
இந்தாலையு முபாதானமாகக்கொண்டு மும்மலமாகிய வழுக்கைத்தீர்க்கையி
லல் சிவனுபக்கிரமத்தில் சொல்லவேண்டியதென்றறிக. சிவனலே ஆத்மாக்
கள் மலகன்ம நிவிர்த்தியோபகார நிமித்தியமாகவும் மாயையிலுந்தனுகரண
புவனபோகங்களை யுண்டாக்கின உபக்கிரமலட்சணம் வெகுசங்கேபமாகச்
சொன்னதென்றறிக. சாட்சி-ஆகமம்-சு,

உசு-வது—அத்தியாயம்.

வேதாந்தமுஞ் சித்தாந்தமு முபக்கிரமஞ் சரியாகச்சொல்வது.

அதெப்படியென்னில் மாயாவாதி பிரமமென்றதைப்பதியென்றும் மா
யாவாதி பிரமகாந்தியென்றதை அருளென்றும் இந்தப் பிரமந்தானே மூலமா

யையோடு கூடினபோதுபிரதிவிம்பித்ததைப் பரமாத்மாவென்று பெயராம் அதனைச்சித்தாந்திபரமசிவனென்றும்இந்தப்பரமாத்மாவான்வன் மூலமாயை யைப்பார்த்தபோது பிரதிவிம்பித்த மகதத்துவத்தை அதோசிருட்டியான சுத்தாசுத்த மாயையென்றும் இந்தமகதத்துவத்தில்பரமாத்மா அதிஷ்டித்தபோது பிரதிவிம்பித்தசீவாத்மாவைப் பசுவென்றும் இந்தச்சீவாத்மா மகதத்துவத்தைப் பார்த்தபோது மகதத்துவத்திலுண்டானமூலாங்காரத்தை அசுத்தமாயை பிரகிர்திஅவ்வியத்தமென்றும் இந்தப்பிரமந்தானே-பரஞ்-பரன்-சிவபாவம் வகித்துக்கொண்டபோது தான் பிரமத்தைமறந்த மறப்புத்தானே அஞ்ஞானமென்றதை ஆணவமென்றும் சுகதுக்கங்களைக்கன்மமென்றும்ஆச்சாதானசத்தியை மறைக்கிற திரோதான சத்தியென்றும் இதுகளைக் கிரமமாகச்சொல்வது பிரமத்தைப் பதி பிரமகிரணத்தை அருள் பரமாத்மாவைப்பரமசிவன்சீவாத்மாவைப்பசுவிவர்த்தனமூலமாயையைமகாமாயையென்றும் மகதத்துவத்தைச் சுத்தாசுத்தமாயையென்றும் மூலாங்காரத்தைப் பிரகிர்தியென்றும் ஆச்சாதானசத்தியைத் திரோதானமென்றும் சீவன் பிரமத்தைமறந்தமறப்பை ஆணவமென்றும் - சுக - துக்கங்களைக் கன்மமென்றும் - பதிக - பசு - க - பாசம் - க - ஆகப் பதிபசுபாசமுன்றும் பிரமம் என்றுண்டோ அன்றுதுடங்கி நித்தியமாய் வேறுயிருக்குமென்றும் இப்படி வேதாந்தஞ்சொல்லுகிறதை ஆகமம் விரித்து மோட்சமார்க்கத்துக்குக் கிரமமாகச்சொல்லுமென்றறிக. ஆகையால் சித்தாந்தம் வேதாந்தத்தால் வந்தென்றறிக.

ஈகங. எண்ணரிதாய்நித்தமாயிருண்மலத்துளழிந்தியிருவினையின்
றன்மைகளுக்கீடானவாக்கை, யன்னலருளானன்னியனைவ
பவராயதனு லலகினிகழ்போகங்களருந்துமாற்றூற், புன்னி
யபாவம்புரிந்துபோக்குவரவுடைத்தாய்புனருமிருண்மலபா
கம்பொருந்தியக்காலருளா,லுண்ணிலவுமொளியதனுளிருளக
ற்றிப்பாத முற்றிடுநற்பசுவற்கமெனவுமொப்ப ருணர்ந்தோர்.

ஈகச. பசுக்களுக்குப்பொதுவென்றுந் தன்னியல்பதென்றும் பக
ருமிலக்கன முண்டதிற்பொதுவைப்பகரி, னசித்திடாஞான
த்தையாணவத்தாற்றடுக்க நலந்திங்கையுனராதே நாணகா
தையாம், பொசிப்பின்றிந்தமுமாயென்னிலதாய்விபுவாய்
ப்பொருந்தியது தாணுகிப்புந்திமுதலின்றாய், வசிப்பதுமாய்
மாயையிலேக்கலுதல்களாகி வந்ததுதாணவத்தின் மறை
ப்பொதுக்கிச்சிறிதே.

ஈகஞ. ஞானமுடனிச்சைதொழினன்னியிடவதனு னுடோகங்
களையுநாடியேநானென், மானமதாலிருவினையும்வளர்ந்தடவே
யதனுல் வானமொடுபூமிகீழ்மருவிப்போந்தே, யீனமுறத்திரி

காலத்திருவினையுமொக்க விறைசத்திபதிந்தபோ திறைகு
ருவாய்வந்தே, தானவனும்படி செய்யத்தத்துவங்கள்வினைக
டமோமயமுநீங்கி யிடத்தற்சிவமாந்தானே.

ஈகசூ. அவத்தைதேகவலசகலசுத்தமெனமூன்றுமலையுமானவமா
யையருட்சத்தியதனு, லிவத்துள்கேவலமுயிர்க்குச் சகசபு
குமிறைவன்றான் மாயையினிற்கலாதிகளையிசைக்கப், பவத
துவக்காஞ்சகலமாமிருவினையுமொத்த பருவத்தேபாசத்தி
பதிந்தருளிலே, சிவத்துடனுமதுசுத்தஞ்செப்பியவிம்மூன்
ந்தேருங்காலையந்தாய்மூவைவந்தாய்த்திகழும்.

இந்தப்பசுலட்சணம் சத்தினிபாதத்திலுந் தீட்சாக்கிரமத்திலும் விரிவா
கச்சொல்லியிருக்கையால் இவ்விடத்தில் வெகுசங்கேபமாகச் சொன்னதெ
ன்றறிக. இனிப்பசுவானது விஞ்ஞானகலர் ஆணவமலமென்றும் பிரளயா
கலர் ஆணவ கன்மமாகியவிரண்டு மலவமென்றுஞ் சகலர்ஆணவகன்ம மா
யைமூன்றுமலமென்றுஞ்சொல்லிப் பின்பு சகலருக்குஆணவம்-க-கன்மம்--க-
மாயை-உ-திரோதானம்-க-ஆ- ரு- மலத்திலும் பந்தப்பட்டுச் செம்புக்குக்
காளிதம்போலும் நெல்லு முளை தவிடு உமியைப்போலவு மூடப்பட்டு ஆத்
மாதன்னைத்தலைவனையறியாமற் கேவலத்திற்கிடக்கும் அதெப்படினன்னில்.

ஈகள: அறிவிலன்மூர்த்தனித்தன் ராகாதிகுணங்களோடுஞ்
செறிவிலன்கலாதியோடுஞ் சேர்விலன்செயல்களில்லான்
குறியிலன்கத்தாவல்லன்போகத்துக்கொள்கையில்லான்
பிறிவிலன்மலத்திறீடும் வியாபிகேவலத்திலாத்மா.

இப்படிக் கேவலத்திலுஞ் சகலவிஷயங்களிலுந் தனுகரணபுவனபோ
கங்களிலுந் திரிவதுபோற் கேவலசகலத்திலும் அவத்தைப்பட்டுச் சனனம
ரணப்படுகிறது பெத்தநிலையென்றறிக. இனி முன்சொன்னமலம் - ரு - ல்
மூன்றுமாயையுஞ் சிவன் தனக்கு உபாதானமாக்கிக்கொண்டுஆத்மாவுக்குத்
தனுகரணபுவனபோகங்களைக் கொடுத்து இந்த மாயாவுபாதிகளால் ஆன்மா
க்கள் மொத்துண்டு சனனமரணங்களில் முன்செய்தகன்மம் பின்சென்ம
த்தில் தெரியாமற் பின்செயல் முன்தெரியாமற் சீவனுக்குக் கன்மசாம்பிய
ம் பிறக்குமளவுஞ் சுகதுக்கங்களைப் புசிப்பித்து உருசிப்பிக்க ஆநிசத்தி
யைவிட்டு மறைப்பிக்கையிலை ஆநிசத்திக்குத் திரோதான சத்தியென்று
பெயராயிந்தத் திரோதானத்தைதச் சிவன் தனக்குச் சம்பந்தகாரணமாக்கி
க்கொண்டு தனுவாதி நாலையுங்கொண்டு ஆத்மாவுக்குச் சகசமான ஆணவக
ன்மங்களைநீக்கி யிதை நீக்கும்போதுமுன்சொன்னநாலையுங் கூடநீக்கிச் செ
ம்புக்குக் காளிதத்தைநீக்கிப் பொன்னுக்குமாறுபோலஆத்மாவைச் சுத்தனுக்
கிச் சிவன் தன்னேடு அயிக்கியஞ் செய்துக்கொள்வதே முத்திநிலையென்ற
றிக. சித்தாந்தஞ்சொல்லும்போது இந்தவாத்மாவைப்பரமதத்தார்சொல்வது

அனேகாத்தமானஅவிபவங்கள் சேர்ந்து கூடினதேதுவுமும்உவ
மானுமானியும்போல்இச்சாஞானக் கிரியையடைந்து அனேகமாய்க்
குணமாய்குணியாய்அபாவமாய்ப்பாவமாயிருக்குமென்றும் குணங்களில்குறியுடைத்தாயாத்மாவிருக்குமென்றும், உடலின்கண்ணுகச்சங்கியில்சேட்டைபெற்றுக்காந்தமிரும்பை வலிப்பதுபோலென்றும் உயிருருவென்றும் உயிர்பரிணமமென்றும், சூக்குமமென்றும், அந்தக்கரணவிந்திரியமுங்கடந்து சூக்குமதேகமுங்கடந்து அப்பாலைக்கப்பாலாய் சூக்குமமென்றும், அருவுருவென்றும், உருவருவென்றும், காஷ்டம் வன்னிபோலவென்றும், சந்திரன்போல அருவுருவென்றும், உள்ளே யுயிராயெழுமென்றும், அருவாய் அவிகாரியென்றும், அசித்தே சித்தாமென்றும், சித் தசித்தாமென்றும், அணுவென்றும், உடலி லேகதேசியென்றும், சுடரொளிபோலவென்றும், உருவெங்குறைவென்றும், எங்கும்வியாபியென்றும், சுத்தனேத் தேக மறைக்குமென்றும் சித்தினது அருவமும் வியாபகமும்போ லல்லாமல்ஆத்மா அருவம் வியாபகமென்றும், இதெல்லா மல்லவென்றும், பலநிறங்கவரும் படிகம்போல் மாயா கூட்டரவா லாத்மா அனேக விதமாமென்றுங்கூறுப.

ஈகஅ. உடம்பினைச்சேர்ந்தகால மூடம்புதானுயிருக்கு
மடம்படுமாயைசேரின் மாயையினியல்பேமன்னு
மிடம்படுபரத்தைச்சேரி லீசனதியல்பேயாகுங்
திடம்படுமுயிரின்செய்தி சேர்ந்தகின்வண்ணமாமே.

இனி யுண்மையிற்சொல்வது ஆத்மலட்சணம் அவத்தை தன்மை ஆத்மவுண்மை சிவனுணர்த்துமுறைமைசிவஞானவுண்மை ஆத்மதெரிசனம்ஆத்மசுத்தி ஆத்மலாபம் பஞ்சாட்சரம் அனைந்தோர்தன்மை ஆகப் பத்துவிதமாம். அதில் ஆத்மலட்சணமாவது (க) ஆவது தேகத்திலுள்ளேவந்து தாக்கப்பட்ட விஷயங்களை யிந்திரியங்களாலே கண்டு மனதிகளாலேபற்றி வித்தைகளாலேயறிய அருளானது முன்கருவிகளைக்கூட்டிப் புசிப்பிக்கிறதும் புசிப்பின்வரலாறுமிதையான்மாவறியாம லவத்தைப்படுவதும் இதுவுந்தெரியாமற் கருவிகள்நீங்கி யானவமலநீங்காமல் தனியதிதங் கேவலாத்மாவுக்குப் பெத்தத்தி லுண்மையென்றும் (உ) உட லிந்தியங் கரணம் பிராணவாயு விதுகளல்ல சிவஞானத்தா லறியிலாத்மாவுண்டென்பது (ங) ஆத்மாதானேயறிவான் கருவிகளாத்மாவுக்கறிவியாது சிவனுங் கருவிகளைக் கொண்டறியான் சிவன்ஆத்மாவுக்கு முன்புள்ளவறிவைச் சிவஞானத்தால் கருவிகளைக் கொண்டுபிராகாசிப்பிக்கும் ஆலல்செடமாய்நிந்ததெதுவென்னஆத்மாவறியான் சிவனுஞ்சுட்டியறியான் பாசஞ்சடமாகையா லறியாது ஆத்மா கருவிகளையுங்கூடி யறியாது அருளையுங்கூடியறியாது அருளும் பாசமுங் கூடியறியாது ஒளியுமிருளுங் கூடாது போலென்றும் (ச) சத்தையும் அசத்தையு மறிகிறதேதென்னில் ஆத்மாகண்போலும் அருள்கதிர்க் கிரணம்போலுங் காட்ட அறியுமாத்மாமலத்துடன்கூடி மலமாயுஞ் சிவத்துடன் கூடிச் சிவமாயு

தீக்ஷையாற் சதசத்தென்று பெயராமென்றும் (ஏ) விளக்கு குருடனுக்குக்க ட்டாது கண்ணறியுந்தன்மை யினாலவையா லறிவிக்கும்போல ஆத்மாவுக்கு அறியுந்தன்மையுண்டாகிலதனா லே சிவனறிவிப்பானென்றும் (அ) ஆத்மா ஒ ருதானத்திருந்தறியான் தேகத்தில் நிறைந்திருந்தறியான் பூரணமாயுமறியா ன் அருளறிவியாமலறியான் ஆகையா லாத்மா பந்தம் புலன்தன்னையும்பற் றியதின்வழுவானதுபோல வாத்மா தத்துவவன்னரூபனுமென்றும் (கூ) கேவல சகல சுத்தமான மூன்றவத்தையு மிந்தச் சாத்திரத்தின் அவத்தைதவி ரவாதச் சொல்லுகிற விடத்தில் காண்க ஆ அவத்தை - ங - ல் கூடி (ஙஉ) சிவனுணர்த்து முறைமை -ஙஅ- கருவிகளுடன் ஆத்மாகூடி ஒருவிஷய த்தை யறியுமென்றும் (ஙங) இனி யாத்மாஇதுகளைக் கூடாமலறியான் ஆத் மா யறியுமல்லாமல் தத்துவமறியாது ஆத்மாவானவன் சிவ ஞானத்தா ல் தத்துவங்களைக் கூடிப் புசிப்ப னென்றும் (ஙச) இனி யருளறிவியாமற் சிவஞானத்தைக் கருவியாகக்கொண்டு ஆத்மாவறிவனென்னில்அதைக்கொ ண்டறிகிறவன்முதலாகும் அல்லதுசிவஞானஞ்சங்கிரமித்து ஆத்மாவுக்காக அ றிவுனென்னில் ஒருவன் பசிக்கு ஒருவனுண்டு பசிதீர்ப்பதுபோ லாமென்றும் (ஙஞ) இனியாத்மா புசிக்கு முறைமை சூரியோதயத்தி லறுதொழிலு ஞ் செய்வாபோலச் சுவனருளால் ஆத்மா புசிக்குமென்றும் (ஙட) இ னிக் கருவிகளை ஆத்மா வறிவிக்க வறிந்து ஆத்மாவைக் கருவிகளறியா தபோல ஆத்மா அருளாலெல்லாமறிந்து நமக்கு அருளறிவிக்க அறிகிறுமென் றறியாது கன்மத்தை யறிந்து புசியாது சிவனறிந்து புசிப்பிப்பானென் றும் (ஙண) இனிச் சிவஞானவுண்மை தத்துவமில்லாவிடி லாத்மாவறி யாது இந்தத் தத்துவத்தால் அருளையாத்மாவறியாது மூன்றபமுயற்சியால் உள்ளேயுணர்த்தின ஞானந்தானே குருவாய்வந்து தத்துவங்களைநீக்கிச் சிவ ன் பாதத்திலே கூட்டுவனென்றும் (ஙஅ) இனி இந்தஆசாரியன் அறிவி த்தபடி படிகந்தானே மத்தியானகாலத்திற் பலநிறங்களையுங் கவராமற் சூரி யகிரணத்தைக் கவர்தல்போலப் பாசங்களைநீக்கி ஆசாரியன் சிவனோடுகூட்டு வனென்றும் (ஙக) இந்த அருளாகியவாத்மா மலத்தோடேகூடில் தா னுமிருளாம் இது அருளோடேகூடி லொளியாமென்றும் (உஙி) மூன் சொன்ன ஞானமுண்டாகில் ஆத்மதரிசனம் ஆத்மசுத்தி ஆத்மலாபம் இ திற் பிரயோசனமென்னென்னிற் பாசங்களைநீக்கி ஞானத்தைத்தெரிசிக்கி று ஆத்மதரிசனம் ஆத்மாவினுடைய இச்சாஞானக்கிரியை விடுகிறதேசுத்தி நிஷ்டையால் ஞேயத்தழுந்திச் சிவனைப்பெறுதல் பிரயோசனமாமென்றும் உச-இனி ஞானத்தால் ஞானத்தைத்தெரிசித்துதா னந்த ஞானமாய்நின்று தன்னையுந்தெரிசிப்பானென்றும்-உஉ-மூன்சொன்ன மூன்றுக்கு மூலஞ்சொ ல்வது-உங இனிஞானத்துக்குஞேயமுதல்ஞேயத்துக்குச்சிவமுதல்இந்தச்சிவ னுக்கு ஞானசத்தியாயிருக்கும் இதுசூரியகிரணஞ் சூரியனை யறியாதுபோலெ ன்றறிக உச-ஆணவிந்தச்சத்திபோதாதோசிவனேதுக்கென்னிற் சிவனை ட்ச சத்தியில்லாமலு மந்தச்சத்தியிலுஞ் சிவனைத்தன்னையறிவித்துக் கொள் ளுவதுஞ் சூரியகிரணத்தால் சூரியனையறிந்தாற் போலென்றறிக. உரு - ஆத்

மதரிசனமென்றும் ஞானதரிசனமென்றும் பெயர் இனிப் பணியறிந்து முறைமைபசாசுபிடியுண்டவன்பசாசின்தன்மையாலுற்றபோல் அறிவுமயக்கந்த வாத்மா அருளேப்போலப் பஞ்சகிருத்தியஞ் செய்யவேண்டாமேயெனினி னிதுவுத்தரமல்ல ஆதல் சிவன் முத்தர்கள்தன்மை யெப்படியென்னினவர்கள் சிவானுபவத்துக்கே வுரியர் பஞ்சகிருத்தியங்களுக்கு யோக்கியரல்ல அதெப்படியென்னில் குருடன் முடவ னூமை இவர்களைப் பசாசு பிடித்தபோது ஊமைமூடங் குருடுதனைத்தீர்த்து தன்னைப்போல் ஆக்காமலவனுக்குள்ளபடியே பசாசுநடத்திறற்போல ஆத்மாவுக்குச் சிவானுபோகத்தைக்கொடுத்துதான்சர்வஞ்ஞகையால் பஞ்சகிருத்தியஞ்சிவனேசெய்வானென்றும் உ-முத்தராய்ஞாதுருத்துவமொழிந்து ஞேயந்தோன்றிஞேயமாய்நிற்பனென்றும்-உ-இந்தஞான த்தைக்கூடினவர் சிவமாவரென்றும்- உக-இப்படிப்பணியற்றவர் ஞேயத்தழுந்துவது கேவலசகலந்தோன்றுமல் ஞானசத்தியில்நின்று காட்டுந்தன்மையான ஞானசத்தியுங் காணுந்தன்மையாகிய வாத்மாவுமிந்தவிரண்டும்நீங்கிநிற்பதேபராசத்திநிலையாம் இப்பராசத்தியும்நீங்கஇதற்குமேலானசிவந்தோன்றும்இதில்ஆகாசத்தில்வாயுத்தம்பம்போலும்அப்புவிலுப்புபோலவுமேபோவம்பிறந்திருப்பதுசாக்கிராதிதமென்றும்-ஈ-இந்தநிஷ்டையைஞானத்தாலொடுக்க வேண்டுமோ தானேயொடுங்காதோவென்னில்தத்துவங்கள்சடமானதால்தானேஒடுங்காது நான் அறிந்தொடுங்குவேனென்னில்யறிந்தொடுங்கி லப்போது உன்னிச்சாஞானக் கிரியைவேண்டும் அதுஉள்ளவுங்கரணங்களொடுங்காது ஆறுற் கரணங்கள்கெடநாலெடுங்குவேனென்னி லப்போது உன்னறிவுகெடும் ஞானசத்தி யுன்தத்துவங்களை யொடுக்கியுன்தன்மை சிவியாதபடி நீயுமொடுங்கி அந்தஞானமாய்நின்றுலந்தச்சிவம்தரிசனமாமென்றும்ஙக-இனிமத்தியானகாலத்துவிளக்கைப்போலநீமாய்ந்தாற்பிறப்பறும்-ஙஉ- இந்தச் சிவனைப்பெறுவதெப்படியென்னில் கேட்டல்சிந்தித்தல்தெளிதல் நிஷ்டையில்நிலைபெறநிற்கிறதேமோட்சமென்றும் ஙங-சிவஞானத்தால்சிவனைக்காண்பதொழியப் பாசஞ்ஞானம் பசுஞ்ஞானத்தாற் காணக்கிடையாதென்றறிக. ஙச-இனிச்சிவனை யொழிந்து தனக்குச்சேட்டையில்லையென்றுநடக்கவேண்டுமே-ஙஞ-தப்பாவிப்பதெப்படியென்னில் சிவன் கரணதீதனுகையால் கரணத்தாற் பாவிக்கக்கூடாது கரணங்களிறக்கப் பாவிப்பேனென்னிற் கரணமிறந்தவிடத்தில் மறைக்கும்பாவிக்குமது வேறானென்னி லப்போது நீயிருப்பை பாவங்கெட்டுப் பாவிக்கில் ஒன்றுந்தோன்றுமையாம். பாவனையிறந்துநின்று பாவிப்பதென்றறிக. ஙசு-

ஙகஙு. அறியாமையறிவகற்றியறிவினுள்ளே யறிவுதனையறிவினுலே
றியாதேயறிந்து, குறியாதேகுறித்தந்தக் கரணங்களோடுங்
கூடாதேவாடாதேகுழைந்திருப்பையாகிற், பிறியாதசிவந்தா
னேபிறிந்துதோன்றிப் பிரபஞ்சமேதமெலாந் தானுப்தோன்
றி, நெறியாலேயிவையெல்லாமல்லவாகி நிராதரமாயெப்
போதுநிற்குந்தானே.

ஙள-முன்புஆணவத்தோடுகூடி யாணவத்தன்மைபோலுங்கருவிகள்கழன் றவிடத்திற் கேவலத்திலாணவமலத்தை ஆத்மா கூடாமலும் அதுவன்று இவ னைப்பொருந்தாமலும் ஆன்மாதான்கெடாம லந்தமலத்தை யிதுவென்று சு ட்டிக்காண்பானுமல்லாம லதுவும் தானுமென்றுகாமலிரண்டுமாகாமல் மறை க்கைக்குக் குணமு மிவ னதில் மறைப்புண்டமூந்துகைக்குக் குணமுமா யிரு ந்ததன்மைபோல் ஆன்மாச் சிவனுடைய வயிக்கத்திலுபித்தன்மை காணவெ ன்றறிக. ஙச-இனிஇந்தமோட்சத்திற்பாசமழியுமோவென்னில் ஆணவகாரண மழியாமல் மறைத்திருந்தகாரியங்நீங்கும் அதெப்படி விளக்கின்முன் இருள் போனதுமல்ல இருளிருந்து கண்ணைமூடினதுமல்ல இது போலென்றறிக.

ரஉய. அநுதியாய்விபுவாகிநித்தமான வாணவந்தானீங்கும்வகை யாவதெங்ங,னெனுதுகொண்ணீசெம்பிலுறுகளிம்பநுதியிரத குளிகையிலுலேபேகப்பொன்னுய், மநுதிருடானிறைந்திருந் து பூகந்திரையாதிமணிவிழியிலங்ஙனருள்மன்னிலேர்பாம், றுனுதுகெடுமாணவந்தான்மம்மேர்த்தம்மைத் தொடர்ந்துநிற் குமாதலினும்சேர்வுமின்றே.

ரஉக. இருண்மலமுமாயவினையெல்லாநீங்கி யெவ்வறிவுமெத் தொழிலுமிறைபோலிங்கே, மருவியிடாதென்னென்னிலான் மாக்கட்கு வரம்பிகந்தசத்தியுளவையவ்வாறே, கருமலஞ்தா ன்சத்திகளாற்றடித்துநிற்குங் கடவுடனேக்காணுமற்றடுத்தசத் தி, குருவருளானீங்கியிடச்சிவானுபூதி கூடியிடுமற்றவைகள் கூறுங்காலே.

ஆனலிது ஆசாரியனல் முத்தியுண்டாமென்றறிக. ஙக-ஞேயத்தழுந்த லுமற்றும்பஞ்சாட்சரம் உள்ளபடி குருவுபதேசித்து அந்தச்சிவத்தை செபிக் கவே சஞ்சித பிராரத்த ஆகாமியந் தீருமென்றறிக. சஎ-இனிச்சிவமுன்னை ச்செபிக்க-சஏ-பஞ்சாட்சரவுண்மை- சஐ- இவர்கள்தேகத்தோடே யிருக்கி னுங் கர்த்தாவின்சுதந்தரமுங்கள்சுதந்தரஹானியும் பாசத்தின்செடத்தவழு மறியக் கன்மமாயை நீங்க ஙகாத ஆணவநீங்க ஞேயத்தில் அழுந்தில்மும்ம லமுந் தீருமென்றறிக. இதுவுமல்லாமல் மன வாக்குக் காய மிந்த மூன்றுல் வருகையாற் காயத்தை ஆதனத்திலும் வாக்கை மவுனத்திலும மனத்தைப் பிராணயாமத்திலும்நிறுத்தமாயைகன்மம்நீங்கும் இதுவுமன்றிச்சஞ்சிதந்தீட் னசயாலும் பிரார்த்தஞ்சிவயோகத்தாலும் ஆகாமியஞ் சுட்டறுதியாலுங் க ன்மாதிகள் தீருமென்றறிக. சங-இந்தநிஷ்டைசாதிக்கிறவர்முன்புள்ளநியமங் களை விடுவரோவிடாரோவென்னி லிந்த நிஷ்டைவிடாமற்சாதிக்கில்நித்திலை கொண்டவன்கையிற்பதார்த்தம்நழுவல்போலஎல்லாநழுவுமென்றறிக. சச இந்தஞானத்தை உள்ளேகாண்பரோ புற்மேகாண்பரோவென்னில கம்புறம் ல்லாமலெங்குமாய்க் காண்பரென்றறிக். சடு - இந்தநிலைவராவிட்டால் எவ் ளாஞ்சிவனுலேயல்லாமல் வேறில்லையென்று தெளிவது- சசு - அல்லது எவ்

வாம் அருளாலொழிய அனைசயாதென்றறிக-சன-பஞ்சசுத்தி-சை- இக்கரிலேயும் வராவிட்டாற் குருலிங்கவேடம் பொருளென்பது-சகு- கண்மலம்நீங்கி-இது சிவப்பிரகாசவுண்மை-ருக-விருத்தமுந்தொகையாகச்சொன்னி தென்றறிக. இந்தப்படி அனுபவஞானம்வருவதற்குச் சிவபூசைகள் தபங்கள் செபங்கள் அஷ்டாங்கயோகங்கள் தீர்த்தங்கள் மணிமந்திர அவிழ்தங்கள் இந்தவிதங்கள்செய்கையாலாத்ம சத்தி யெப்படிபிரிந்ததோ அப்படி ஆணவசத்திபிரியும் அப்போதுஞானத்தொழிலான சத்திவிளங்கும்இவைசொரூபத்திலல்லவிகற்பத்திலென்றறிக. இப்படிக்கொத்த மூன்செய்தபங்களாலே சிவராகமுற்றுச் சங்கையில்லாத சிவானுபூதியை யடைந்து குருவால் அறிவு தொழில் சத்தியோடுமுத்திசேர்வர் தபங்களாலுந் தெய்வீகத்தாலுஞ் சிவானுபவமென்றேபெற்றுப் பாழுத்திதேகபதனத்தடைவவென்றறிக. சிவராகமில்லாமல் தபயோகமுதலானது செய்யில் சிவானுபவமில்லாமல் சிலதெய்வீக சித்திகளைப்பெற்றுப்பிறகுசெனனமெடுப்பாரென்றறிக.

ஆணவமல லட்சணம் இனிமூன்சொன்னபசுவிலக்கணத்தில்-ரு- மலஞ் சொன்னதிற் சிவனுபக்கிரமத்தில் இரண்டுமாயையுந் திரோதமுமாக மூன்று போக மற்றவிரண்டிற் கன்மமலமுமல்லாம லாணவமலத்தினுடைய விலட்சணஞ்சொல்வதென்றறிக. ஒன்றாய்மூலமலமாயிருளும் பிரகாசமென்ன இருண்டதாய் வியாபகமாய் சிவனையும் ஆத்மாவையும் பாசத்தையுந் தெரியாமற் செம்புக்குக் களிம்பும் அரிசிக்குத்தவிடுமியும் நீருக்கு உப்புபோலும் ஆத்மாவைப்பொருந்தி யிச்சாஞானக் கிரியைகளை மறைக்கும் பரிபாகத்திலே நீங்குந்தன்மையாயுமிருக்கும் எண்ணரிதானசத்தியுடைத்தா யிருளானது எல்லாவற்றையுமறைத்துத் தன்னுளடக்கித்தன்னைத்தோன்றக்காட்டிநின்றதுபோலஆணவமும் மெல்லாவற்றையுமறைத்துத்தன்னையுமாத்மாவையுந் தோன்றுதபடியாயிருக்கும் ஆத்மாவினுடைய விச்சாஞானக்கிரியைகளைமறைக்கும்இந்த ஆணவம் ஆகந்துகமோ சகசமோவென்னில் ஆகந்துகமானஇரஜ்ஜுதஞ்ஞானம் சுத்திஞானத்தைதவாதிக்கமாட்டாதாகி லாகந்துகமென்னக்கூடாது ஆறுற் சகசமோவென்னிற் சகசமானுல் அக்கினிக்கு உஷ்ணமுஞ் சலத்துக்குச்சயித்தியமும்போலக் குணமாகவேணுங் குணமழியிற் குணியுமழியும் ஆகையாலிப்படிச் சகசமாகாது பின்னையெப்படிச் சகசமென்னிற்செம்புக்குக்காளிதமும் நெல்லுக்குத் தவிடுமிபோலச் சகசமாயினு மிதுகுணமல்லக் காளிதமுந்தவிடுமியும்போனுல் மறித் ததுவாகாதுபோல ஆன்மாவுக்குச் சகசமலநீங்நிற் சென்னழில்லை யாகையா லிந்தத் திஷ்டமான சகசத்துக்குக்குற்றமில்லை. இனி யிந்த மலம் மாயாகாரியமோ மாயையோ ஞானத்தினுடைய அபாவமோ ஞானத்தினுடைய ப்ராக்பாவமோ அன்னிதாஞானமோ ஆன்ம குணமோவென்னில். இது தனதுகாரியத்தால் மலத்தை நீக்கி யாத்மஞானத்தைப் பிரகாசிப்பிக்கையால் மாயைமலமல்ல காரியத்தாற் பிரகாசிப்பித்தற்காரணத்தால் மறைக்குமென்னி லப்படிச்செய்யாது அப்படி அக்கினிகாரியமானதீபச் சோதியும் பிரகாசிப்பித்து உஷ்ணமும் பிரகாசிப்பிக்கும் போலென்றறிக.

தத்துவநிஜா நுபோகசயம்.

ஆணல்மாயாகாரணத்தா லென்செய்யுமென்னில் விதயங்களில் மோகிப் பிக்கும் ஆணவம் போல்மறையாது ஆணவ மிருள்போலு மாயை விளக்குப் போலுமாம் ஆணல் மலம் ஞானத்தின் அபாவமோவென்னில் அபாவ மொரு திரவியமல்லாதபடியால் முறையாது அதெப்படி கடத்திலுடைய வில்லாமை சலத்தைக் கொண்டுவாமாட்டாதுபோ லென்றறிக. ஞானுபாவமென்பது ஞானமில்லாமையாகும் ஞானத்தின் ப்ராக்பாவமோவென்னிவிது ஞானமு டிவென்பது முடிவுள்ளதற்குந்தோற்றமுண்டு ஆணல் தோற்றமென்று சொல்லில் ஞானமழியு மாகையால் ப்ராக்பாவமல்ல அன்னிதாஞானமென் னிலொன்றை யொன்றுகாமற் கருதுகை யிந்த அன்னிதாஞான மொருவே துகூடாமற் கூடாது அதென்போலச் சுத்திவெள்ளியாகத் தோன்றும் போது கண்ணின் குற்றத்தால் தோன்றுவதாகையால் அன்னிதாஞானமல்ல. இனி ஆத்மாவிலுடையகுணமோவென்னிற் சித்தாகிற வாத்மாவுக்கு ஞாதருத்துவ குணமொழிந்து செடமானமலங் குணமாகாது அதெப்படி அக்கினிக்கு உஷ்ணங் குணமானது சீதங்குணமாகாதுபோலென்றறிக. இனி ஆணவத்துக்குப் பரியாயநாமும் பசுத்துவம் பசு நீகாரம் மிருத்தி மூர்ச்சை மலம்அஞ்சனம் அவத்தியை ஆவிருத்தி றலகிலானி பாபமூலம் அட்சயம் பாசம் அசுத்தி அஞ்ஞானம் பெந்தம் வியாகாதம் களங்கம் ஆணவம் மோஹங் கேவலம் ஆவரணம் தமசு செடம் படலம் அரித்து நிரோதம் ஆச்சாதானம் சென்மபீசம் மூலம் இவைகள் முதலானபோர்களுண்டு ஆணலீதெல்லாம லாதிசத்தியாத்மாவைமறைக்கு மென்னில் அது ஞானமாகையால்மறையாது அறிவையறிவுமறையாது உணர்வுக்குச்செடமே வாதையென்றறிக. ஆணற்சென்மமானது பாவமிருள்வடிவாய்மறைத்துப் புண்ணியம் வெளியுருவாய்வளர்க்கும் அப்படியறிவுண்டாகிலறிவையறிவுதடாது நாம்செய்தது நாம் பூசிக்கிறோமென்று தக்கப்படாது அறியாமை யாத்மகுணமாகில் இச்சா ஞானக்கிரியையாகையா லதுவல்ல மாயாகாரணமிருளாய் மறைத்துக் காரிய மொளிவடிவாமென்னில் ஒருபொருளொளி யிருளாகாது அதென்போலக் காரணவன்னியொளியைக் கொடுக்கக் காணுமொளியாயிருப்பதுபோ லென்றறிக.

ஈஉ. அஞ்ஞானமென்பதோர்பொருளேயில்லை யறைகின்றஞான
க்தின்பாவமென்னி, லெஞ்ஞான்றும்பாவமோமுன்றே பின்
றேவியம்பியிடமெத்யந்தாபாவமென்னிற்சடமா, டெப்ஞ்ஞா
ஞபாவந்தான்முன்னென்னிற்பின்னுய் பேவுதலாமெய்ஞ்ஞா
ஞபாவம்பின்னென்னி, லுஞ்ஞானமுன்னெருகாலுண்டாகா
ஞானவுருவுயிருக்கிவ்வாறிங்கோதல்பழுதுனரே.

என்பது ஆத்மாவுக்கு அஞ்ஞானமென்று வேறொருபொருளில்லை ஆத்மாவுக்கு ஞானம் அபாவமாயில்லாமையாயிருக்குமென்னில் ஆத்மாவுக்கு எந்காலும் அபாவமாயில்லாம லிருக்குமோ ஆத்மாவுக்குமுன்னேவந்ததோபின்னேவந்ததோசொல்லென்னில் அது ஆத்மாவுக்கு நாழியில் நெல்லு கூறு

கொண்டாற்போல் ஆத்மாவை யத்தியந்தமாய் முழுதும் ஞானம் பாவமாயி
ருக்குமென்னில் முழுதுஞானமில்லாவிட்டால் ஆத்மாவுஞ்சடமாம் ஞாது
பாவம் ஆத்மாவுக்குமுன்னே ஆவரித்ததென்னில் ஆத்மாபின்னே புண்டா
னதாம் ஞாதுபாவ மாத்மாவுக்குப் பின்னென்னிற் பிறகு ஒருகாலத்திலுண்
டாகாது ஞானவுருவாயிருக்கிற வாத்மாவுக்கு ஞானமில்லாமல் பாவமாயிருக்
குதென்றுசொல்வது பழுதென்றறிக. இனிச் சிற்றறிவே யான்மாவுக்கென்
னில் அப்போதுஎல்லாவுயிருஞ்சிற்றறிவாம் பேரறிவுண்டாகையால் அதுபி
றந்து முத்திபெறவேண்டிற்று ஆணவத்தாற் றடுப்புண்டுமாயையிலு
ற் சிற்றறிவாமென்னில் ஆணவ மாத்மாவையாவரிக்குமோ ஞானவுருவொ
ளியாகையால் ஆத்மாவும் வெளியுருவாம் ஒளியை யொழிக்கு மென்னி
ல் அப்போது ஆத்மப்பிரகாசமாகிறவொளியால் ஆத்மவொளியழியாது அழி
யி லுயிருமழியும் ஆணவ மான்மாவை யாவரித்தல் கூடாது ஆத்ம
சொரூபத்தில் விருத்தியாய் நிகழ்ந்து ஆத்மா விச்சாஞானக் கிரியைகளைத்த
டுக்கும் அதெப்படி தீயினுடைய உஷ்ணத்தை மந்திரசத்தியால் தடுத்து உ
ஷ்ணமறைபட்டு ஒளிநின்றாற்போல ஆத்மஞானங்கெடாதென்றறிக. இத்
த அர்த்தங்களைவிரிக்கிற் சங்கையும் பரிகாரமு மெத்தவுண்டாய் விரிவாமெ
ன்றறிக.

ஈஉஉ. போற்றியிடும்பதிவிபுவாயான்மாவுமிதனைப் பொருந்தியெ
றுமறியாமைபுகன்றுபின்னுஞ், சாற்றுவதேதுணைவந்தான
ஞிபாசஞ்சாருமுயிர்தனைச் சிவனேச்சாராதென்னென்னிற்,
காற்றதுதான் வானத்தைப்பிரியர்தேனுங் கந்தமுடன்வெம்
மைதட்பஞ்சலனமெய்த, மேற்றிகழுமாகாசத்திவைபொருந்
தாவாறுமேலுமோருவமானம்விளம்பக்கேளே.

இதல்லாமலுங்கடல் நீரிலே யிருக்கிறஉப்பு அந்தச்சலத்தைதரித்திருக்கிற
பூமிக்கில்லாதுபோலச் சிவனுக்கு மலமாயைகூடாது ஆனாற் சிவன் அந்தகா
ரவிரோதியல்லவோ சிவன் சந்நிதியிலிருக்கிற சிவனை ஆணவமூடி யிருக்கு
மோவென்னில் மூடியிருக்கும் அதெப்படி திஷ்டம் விஷமானது அரவிடத்
திலேயிருந்தும் அந்த விஷம் பாம்பை வாதியாமற் பாம்பின்வாயிலுலேகடியு
ண்டவனை வாதிக்கும்அதுபோலச்சிவனிடத்திலிருளிருந்துஞ் சிவனைவாதியா
மற் சிவனை வாதிக்குமென்றறிக. இதல்லாமலும் நிர்விஷமும் விஷமும்மொ
ருமுதலிலேநின்றாலும் அங்கே யந்த மரத்திலேகூடியபோது அங்கேயிருக்
கிற நிர்விஷம் அங்கேயிருக்கிற பச்சைநாபி விஷத்தைமுறியாமலிருந்து பச்
சைநாபிஎன்றபேருக்கு நிர்விஷந் தீர்த்தாற்போல ஒருசிவனையடைந்த ஆண
வத்தைத் தீர்க்குமென்றறிக. இதல்லாமலும் பெருங்காயத்தை ஒருமரத்தின்
வேரிலே யிட்டா லந்தமர மூலர்ந்துபோம் பின்னொருமரத்தின்வேரிற் பெரு
ங்காயத்தையிட விருட்சம் பலிக்குமென்றறிக.

ஈஉச. ஏகமாயனேகமாஞ்சத்தியுள்ளதாகி யெண்ணிலுயிர்ஞானத்
தைத் தடிப்பதாகி, மோகமுதலெழுகுணங்களுடையதாகி

மூடிவிலதாயுறுதியுமாய் முத்தியுயிர்க்காகப், பாகமாம்படியா
நிசத்தியண்ணப் படுவதுமாய்ப் பக்குவத்தையடையுயிர்கள்
பாலி, லாகமாதிகள்யாவுமடையாதுமுத்தியடைவதம் குதகா
னீங்குமானவமென்றறியே.

[illegible]உநி. ஏதுக்காயாணவமுண்டென்னவேண்டு மெனிலுயிர்கள்ஞா
னத்தைத் தடுப்பதொன்றிங்கிலையேல், மாதுக்கழுரு துயிர்க
ளெவ்வறிவுமெல்லா வல்லமையுஞ்சுதந்தாமு மருவியிடும்பி
றப்பாம், தீதும்நலருந்தாது ஞானவுருவாமாம் சிவன்போல
வேநிற்குஞ்சிற்றறிவுமாகா, கோதம்றமுத்தியென்ப தேதுவி
டிலென்றே குறித்திடினிவ்வாண்வமாங் கூறுங்காலே.

இனித் தத்துவரத்திரைகரத்தில் மும்மல்வர்பேதஞ் சொல்வது.

[illegible]உசு. கேவலவிஞ்ஞானத்தர் கிளர்ந்தவிஷ்த்தேவலென்ம
ராவையினேழுகோடி மந்திரமூர்த்தத்தாளர்
மேவியுலானவத்தை விட்டகத்தான்மாவென்னத்
தீவியஞான்குபேதத் திறத்தவிஞ்ஞாகலத்தோர்.

[illegible]உன. இருமலராகியுள்ள பிரளையாகலர்தாமென்போர்
வருபலகோடிபேத வருத்திரர்வருசிகண்டர்
தெருட்டருமண்டலேசர் குரோதேசர் தீர்த்தத்துள்ளோ
ரொருமலந்தவத்தால்விட்டோ ரொன்றிலோர்மூவருண்டாம்.

[illegible]உஅ. பெத்தசித்ததனெடொன்றப்பேணியமுத்தசித்தும்
பெத்தமுத்தத்தசித்தும் பேசின்மூவகுப்பதாகும்
வைத்தமூன்றுகும்பேதம் வகுத்திடிலொருபத்தாகும்
வைத்தசீவாத்மாவந்த ராத்மாமன்பூதவாத்மா.

[illegible]உக. பரமான்மாசீவாத்மா பகருமைங்கலைப்பாலாத்மா
திரமாமுத்தான்மாசித்தான் மாதிகழிருபான்மூன்றே
தெரமானவிருபேதத்தா லுள்ளதாமாத்மபேதம்
வரமானகிரியாபேதத்தான் மாயைபாம்பலவாமாத்மா.

இனிக் கன்மமலலட்சணம் வியாபகமாய் அந்தந்தவனுக்கடோறும்வெ
வ்வேறுகன்மமாய்அறிந்துசெய்வதும் அறியாமற்செய்வதும்வந்தேறுகிறதா
ய் சுகதுக்கத்தைச்செய்வதாம் இதவகிதங்களாலாவதாய் அனுபவத்தாலொ
ழிந்ததோதாய் சஞ்சிதமாவது அனுதிதொடுத்துச் செனனந்தோறும் ஆர்ச்சி
த்தவினைபுசித்து மிஞ்சியது ஆறத்துவாவிலுங் கட்டப்பட்டிருக்கிற புண்
ணியபாவமாயிருக்கும் பிராரத்துவமாவது இந்தச் சஞ்சிதத்திற் சிறிது
சிக்கப்பாகப்பட்டவினை சரீரத்தையெடுப்பித்துச் சாதியாயுப யோகத்தைக்
கொடுக்கும் ஆகாமியமாவது பிராரத்துவபுசிப்பில் வந்தேறுகிற புண்ணிய

பாவமாயிருக்கும் பின்னும் உருவெடுத்தற்குக் காரணமாய் நாணுவிதங்கள
னோபோகத்தையுடையதாய்சென்னமரணமுண்டாக்கிவரும் இந்தக்கன்மம்
வதாயு மழிவதாயும் வருமென்று சொல்வாருமுளர். இன்னுமறுதியா யர்த்ம
க்கமோடாறும் பலவிதமாய் மனோவாக்குக்காயங்களாலு முண்டாவ்தா யிவர்
ருடைய புத்தியை யடைந்திருப்பதாய்ப் புண்ணியபாவமாய் மாயையாலே
தோன்றுவதா யிந்தக்கன்மம்நல்லசாதி தீயசாதிதீர்க்காயுள் அற்பாயுள்அற்
போகம் மகாபோகமாய் தெய்வீகம் பௌதீகம் ஆத்மீகம் இப்படி மூன்றவ
தமாய்ச் சஞ்சிதம்பிராரத்தம்ஆகாமியமாய்ப்பின்னும் இச்சாபிராரத்தம் பர
ச்சாப்பிராரத்தம் அனிச்சாபிராரத்தம் இப்படியிருக்குமென்றறிக. இதிற்சஞ்
சிதமாவது பிறப்பைக்கொடுக்கும் பிராரத்துவமாகிறது எடுத்த உடலில் சு
துக்கங்களைப் புசிப்பிக்கிறது ஆகாமியமாவது புசிக்கும்போது கட்டுட
படுகிறது இதிற் பிராரத்துவமாவது தெய்வீகம் பௌதீகம் ஆத்மீகம் என்
மூன்றுவிதமாம் இதில் தெய்வீகமாவதுகெற்பாசயத்தில் வரும் விதனம்பிர
வகாலத்தில் விதனம் நனை தினை மூப்பில் விதனம்அஞ்ஞானத்தால்செய்
ப்பட்ட அளவில்லாதசங்கற்பத்தில் வரும் விதனம் மரணகாலவிதனம் நரகத்
ல் விதனம் இப்படி யிச்சியாமல்வருகிற அனிச்சியாப்பிராரத்தம் ஆறுவிதம
ம் இனிப் பௌதீகமாவது குளிராலும் மழையாலும் வெய்யிலாலுங் காற்றா
ம் மின்னலாலும் இடியாலு மிப்படி யிச்சாபிராரத்தமாரும் இந்தவாறு
வேண்டினகாரியமாலுலும் யிகினுங்குறையினுந் துக்கமேதுவாம் ஆலுட
அவசியம் வேண்டியிருக்கிற காரியமாகையால் இச்சா பிராரத்துவமா
இதல்லாமலொருவனை அடித்துங் கட்டியுந் சிறைவைத்தும் வெகு உபத்
ரவங்கள் செய்யவும்ஒருசீவனை ஒருசீவன்கொன்றும் அதிற் சிலசீவன்களைத்
ன்றும் இதில்வருந் துக்கசுகங்கூடி ஏழுவிதமாம். இனி ஆத்மீகமாவது தேக
தைப்பற்றி வருகிறதொன்று மனதைப்பற்றிவருகிறதொன்று ஆக விரண்
டுவிதமாம் இதிற் தேகத்தைப்பற்றி வருவதாவது வாத பித்த சேத்மம் ஏ
ழுகுநோய் ஒழுகுநோய் நீர்ப்பாடு வெப்பு சூலை யிதுமுதலான - ங்சுஉ - வ
யாதிகளுஞ் சத்துருக்கள் விலங்குகள் பசாசுகள் கள்ளர் ஊர்வை பறவை ர
ட்சதர் கொசுகு மூடு ஈ எறும்பு ஸ்திரி புருஷ கூட்டப் பிரிவு குருசே
வை தேவகாரியந் தபசு சம்பத்து அடாதனசெய்கை யிப்படிவருவனவும் இ
தல்லாமலும் வெகுவித உபத்திரவங்களுமாமென்றறிக. இனி மனதைப்பற்
வருகிறது சோகம் பந்துக்கள் திரவியங்கள் முதலான விவற்றைப் பிரிகையா
லும் பிறருடையவறிவு முருவமு மாக்கமுங் கண்டு பொறுமையாலும் அழுகை
காறு மனதுக்கழிவுவருதல் விஷயத்தி லிச்சை கோப மிவை யைந்துமுதலா
கவரும் விதனம் இப்படித் தேகத்திலு மனத்திலும்வந்தெறுகிறது பிறத்தியா
க விருப்பதாலும் துக்கசுகம் வருகையாலும் பாவிச்சா பிராரத்துவமென்
ங் கொள்வாருமுளர். இப்படித் துக்கத்திராயவிருக்குமென்றறிக. இது ட்
ன்னுமொருவிதமாம் அந்தக்கரணம் - சு - ம் இந்திரியம் - ஐ - ம் ஆக - ஙசு -
ம் அத்தியாத்மீகமாம் இதின் விஷயங்களாதிபௌதீகமாம் இதின் அதிதேவ

தைகளே ஆதிதெய்வீகமாம் இப்படியுஞ் சொல்லுமென்றறிக. இனி முன் சொன்ன பிராரத்துவத்தை யிச்சிக்கப்பட்டுவருகிறதெல்லா மிச்சாப்பிராரத் துவமென்றும், இச்சையில்லாமலிருக்க வருகிறதை அனிச்சாப்பிராரத்துவ மென்றும், ஒருவர்தெண்டனை சினேகங்களால் வருகிறதைப் பரவிச்சா ப்பி ராரத்துவமென்றுங் கொள்வாருமுண்டென்றறிக. முன்பு ஆர்ச்சிதபுகன்ம ம் புசித்துத்தீருமாயின் இனிமேற் சென்மம்வருவானேனென்னில் அதுமு ன்செய்ததை யிப்போது அனுபவிக்கிறுமென்ற னுபவியாமல்அதை நான் செய்தேன் பிறர்செய்தார் அவராலேவந்தது நம்மாலேதப்பிவந்தது என்று ம் யானெனதென்றுசுட்டி முன்செய்ததென்கிறதை மறக்கையினல் இது தானே மேலுக்குங்கட்டுவதென்றறிக. இனிச் செய்கிறகன்ம மிரண்டுபிரகா ரமாம் புத்திபூர்வம் அபுத்திபூர்வமாகச் செய்கிறது இதுவே இதாகி தமாம் இஃதேபுண்ணியபாவமென்றுஞ்சொல்லும் இது மனோவாக்குக்காயங் களால் வரும் ஒன்றுன்றலார்ச்சித்தகன்மம் ஒன்றுன்றுற் போக்கவொ ண்ணுதாய் புசிப்புத்தவிராது யிதிலொருவினையைக்கொண்டு ஒருவினையைப் போக்குதற்கு வேதாகமபபடிசெய்தாற் கூடினகன்மம் நீங்குவதாயும் வில க்கிக்கொண்டாலுந் தீருவதாயுமிருக்கு மிப்படியாறற்றுன்தான் கன்மங்க ளாச்செய்யாமற் செய்கிறபோர் சுகிர்தங்களையெல்லாம் விலக்கிக் கொண்டு போக்கலாமென்னில் மிருதிகன்மம்போம் போகாதகன்மம் புசிக்கவேண்டு மாகையால் இது லாற்சனமானகன்மம் மேலுக்குப் பந்தனமாமென்றறிக. இ ந்தக் கன்மம் வித்து மங்குரமும்போலப் பிறவாஹறுதியாயிருக்கும் இனிக் காணப்பட்டசென்மத்திலுங் காணப்படாதசென்மத்திலும் நியமித்தகாலத்தி லும் புசிக்கிறதாக மூன்றுவிதமாங் காணப்பட்ட சென்மத்திற் புசிப் பாவது அன்னபாறுதிகளும் தெண்டனைபண்ணுகிறவியாதிகளும் இராசதெ ண்டனைகளாலும்பகைவராலே பிரயோகிக்கப்பட்டமந்திரதந்திர அஸ்திரங்க ளாலு மிப்படி யனேகவிதமா மிந்ததேகத்திற் புசிப்பு இனிக் காணுதசென் மத்திலாவது சொற்க நரகத்தி லனுபவிப்பது நியமித்தகாலத்திலாவது ஒருகா லத்திற்செய்த அஸ்வமேதயாகமும் பிரமஹத்திபாவமுங் கர்த்தா ஒன்றை யி ன்னசென்மத்திலென்று நிறுத்தி யொன்றை யிந்தசென்மத்தில் புசிக்கவுஞ் செய்வன் இதுகள் மாயையால் சிருட்டிகாலத்திற் புசிக்கப்படும் இனிப் பொ ய்யுமெய்யுங் காரணமாகையாலே புண்ணியபாவமானதென்றறிக. இந்தக் கன்மம்வியாபிதமாய் சங்கிவித்தொடர்ச்சியாய்ப் புத்தியில்வசனதிதோஷம் பொருந்திப் பந்தமாகச் சிவன்புசிப்பான் அதெப்படி யென்னில் பேறு இழி வு இன்பம் பிணி மூப்பு சாக்காடு என்ற வாறுஞ் சுக்கிலத்தோடு கருவாகிப் பற்றி வித்துமரமும் போலவுங் கழுனிக்குப்போட்ட எருத்தழைகள் நைந்து அழிந்து மண்ணுடுமண்ணுய்ப் போயும் பின்பு அழிந்தது தானேபயிருக்கு ப் பலிக்கும்போலென்றறிக.

ஈ. இருவினைகட்கிடாகத்தனுவாதியிறவு னினைசத்திடுவன்மா
யையிலென்றீர்வினைகளெல்லாம், வருவனவுமனமாதிமாயாகா

ரியத்தான் மற்றவற்றுன்முன்னகமன்னியதேனென்னி,லொ
ருவாதனுானத்தையிச்சைதொழிலொக்க வுள்ளதாலனுதியா
லுடன்மாயைவினைகள், கருவாகியதனுலேசகசமாகக் காரிட
ும்பலன்களுமாங் கருதிக்காணை.

ாஈக. அனுதியேயானவத்தின்குணங்கள்கூடு மாத்மாக்களறிவிச்
சைதொழில்களாலே, மனுதியாற்புரிவதனுற்கன்டமென்று ம
ருவுவர்கட்காகையினுலதிட்டமென்று, முனுதுபுரியாதிருக்கி
ற்பரிகாரத்தை யுண்ணுமலொழியாமலுறுவதாகித், தனுதிய
ந்தம்புரிதலினுற்புசிப்பாலாகித்தானிற்குங்கன்மமின்னுஞ்சா
ற்றக்கேளே.

என்பது கன்மத்துக்கீடாகத் தனுவாதிகளை மாயையால் சிவன்கொடுப்
பானென்றீர்மனமாதிகளால்வருவதாயிருக்கமுன்னே வந்ததெப்படியென்னி
ல் அனுதியேயாத்மாவுக்கு மாயையால் இச்சாஞானக் கிரியைகளுண்டாகை
யால் அதனுல்கருப்பற்றிமனத்தினுலேகாரியமாய்ப்பயன்படும் இதல்லாமலா
த்மாவுக்கு ஆணவத்தி லேழுகுணங்களுமாத்மா விச்சாஞானக்கிரியையால்கூ
டும் இனி மனத்தில் உன்னுமற்செய்யாமற் பரிகாரங்களை யுண்ணுமலிருந்தா
லுந் தானுனுபவியாமற் பலிக்குமென்றறிக. இப்பாற் பாரதத்தி லொருகதையு
ண்டு கெவுதமியாகிற பிராமணத்தி புருஷன் மரித்ததுக்கத்திலே வருத்தப்
பட்டுத் தன்பிள்ளையையெடுத்துக்கொண்டு தானும்போய் ரிஷிகளாசிரமங்
கள்தோறுஞ் சென்று மவர்கள்சோர்வைகளைச்செய்து மோட்சமாகிலும் பெ
றுவோமென்று போய் ரிஷியாசிரமங்களிலே சுஞ்சரிக்கிறநாளி லொருநாள்
நித்திரைசெய்யும்போது பாம்புவந்துகடித்துப் பிள்ளைமரித்தது அந்தப்பிள்
ளையைப் பிராமணிபார்த்து மெத்தப்பிரலாபித்து ஓ பாம்பே யென்பிள்ளை
யால்உனக்கு ஒரு உபத்திரவமுமில்லாதிருக்கஎன்பிள்ளையை யேன் கொன்று
யென்றுஅலறச்சே அதை உற்பதனென்கிறவேடன்கேட்டுவந்துஉன்மகனை
க்கடித்த சற்பம் புற்றிலிருக்குது அதைப் பிடித்துவருகிறேனென்று பிடித்
துவந்து பிராமணிமுன்னேவிட்டு இது உன்பிள்ளையைக் கொன்றது இந்தப்
பாம்பை நான்கொல்லுகிறேனென்ன அப்போது என்மகனுஞ் செத்ததல்லா
மற் பாம்பின்பழியு மென்மேலேகட்டவேண்டாமென்று வேடனை வேண்டு
ம்போது அந்தப்பாம்பு வாராய்பிராமணி யுன்மகனுலே எனக்கொருதோஷ
மில்லை யுன்மகனை நான்கொன்றதுமில்லை மிறுத்தியுவந்து என்னைவாவிட்டா
ன் அவனுலேகொன்றேன் என்மேல்தோஷமில்லை யென்ன அப்போது மிறு
த்தியுனை நினைத்துஅழ அப்போது மிறுத்தியுவும்வந்து என்னை யமன்வரவி
ட்டா னதினுலே நான் பாம்பைவிட்டேன் என்மேல் தோஷமில்லையென்ன
அப்போது எமனும்வந்து நான்வரவிட்டவனலல உன்மகன்செய்த கன்மத்
ளவாக அவன் மரித்தான் எல்லாவற்றிற்குங் கன்மமானதுகாரணமாகையா
லே கருவிலேதானே சாவு வாழ்வு விதனை சென்மம் புசிப்புகள்முதலானதெ

ல்லாங் கட்டுப்பட்டு அந்தப்படியே மரிப்பான் விதியதுவாகின் மதியதுவாமென்று எமன் சொல்லிப்போனனென்றறிக. ஆகையால் கன்மமே பிரதானம் வெண்பா.

ஈசுஉ. வினைப்பயனைவெல்வதற்கு வேதமுதலாம்
அனைத்தாயநூலகத்து மில்லை- நினைப்பதெனக்
கண்ணுறுவதல்லாற் கவலைபடே னெஞ்சேமெய்
விண்ணுறுவார்க் கில்லை விதி.

இந்தச்சுத்தசைவத்திற்பதிலட்சணமும் மாயாலட்சணமும் பசுலட்சணமும் ஆணவகன்மலட்சணமுமிதுகளெல்லாஞ்சொன்னதென்றறிக. இனிமுன் சொன்ன மஹேஸ்வரவாதிக்கு மிந்தச் சைவத்துக்கும்பேதமுண்டென்றறிக.

உஎ-வது —அத்தியாயம்.

சிவசமவாதிமதம்.

பதிபசுபாசபதார்த்தத்தின் விதியதுவாய் வி...யாமே.

இனிச் சிவசமவாதிமதம் பதி பசு பாச மூன்றும் நித்தியமாம் இந்தமூன்றின் சொரூபலக்ஷணமாவது பதியாவது நாமரூபக்கிரியா ரகிதனாய் நித்தியமாய் நிஷ்களங்கன்மலனாய் சுத்தனாய் பற்றில்லாதவனாயிருப்பதுபதி. இனிப் பசுவானது அனேகருமாய் நித்தியருமாய் வியாத்தருமாயனாதி மலசம்பந்தருமாய் மலத்தோடுகூடித் தன்னைத்தானேயறியாமலிருப்பது பசு. இனிப் பாசமானது நித்தியமாயனாதியாயனந்த வியாபகசத்தியையுடைத்தாயிருக்கும், இது மூன்றுக்குஞ் சொரூபலட்சணமென்றறிக. இனி யிந்தமூன்றின் தடத்தலட்சணமாவது முன்சொன்ன பதியினிடமாக அனேகசத்திகள் மூர்த்திகளாண்டாம் அதெப்படி முன்சொன்ன சுத்தசைவனுக்குச் சிருஷ்டிக்கிரமமானபடியே யிவனுக்கும் ஆத்மாவின் மலபந்தம்நீக்கும்பொருட்டு விரிவானதென்றறிக. இனிப் பசுவானது மலந்தீரும்பொருட்டுச் சிவன் மாயாயுபாதானமாக ஆத்மவர்க்கங்களுக்குத் தனுகரணபுவனபோகாதிகளைக் கொடுத்து அநிலேதிரிவன். இனிப் பாசமாவது சிவனல்லிருந்து மலம் பக்குவப்படுவது இந்தமூன்றின் தடத்தலட்சணம் முடிந்தது இனிப் பந்தநிலையாவது சிவன் மாயையினாலே கன்மவசத்தாக மலந்தீரும்பொருட்டுத் தனுகரணபுவன போகங்களைக்கொடுத்துச் சனனமரணப் படுத்துவனென்றறிக. இனி முத்திநிலையாவது கன்மசமத்துவமும் மும்மல பரிபாகமுண்டானபோதே நான்குவித சத்தினிபாத சமயவிசேஷ தீட்சைபெற்று விதியாகச் சிவனைப்பூசித்துப் பின்புதீவரதர சத்தினிபாத பக்குவத்திலே அத்துவாசுத்தி பண்ணுவதான நிருவாணதீட்சையினால் தத்துவம்-ங-ம் பஞ்சகோசங்களும் போக்கிப் பதிபசுபாசபந்தங்களறிவித்துப் பாசந்தீர்த்து பசுவானது தேகத்தில் ஈஸ்வரனைப்போல் எங்கும் பரிபூரணனாய் சர்வஞானத்துவஞ் சர்வார்த்த கர்த்தத்து

வத்தையு முடையனுய் பஞ்சகிருத்தியமும் பண்ணவல்லவனுய் சிவனுடனே கூடிச் சாயுச்சியமாகாமல் வேருயிருப்பது முத்திநிலையென்றறிக. இனி யிவன்கொள்ளுவது மலம் - நு - ம் தத்துவம் - கூகூ - ம் பிரமாணம் - சூ - ம் மூன் சுத்த சைவனுக்குள்ளதெல்லாங் கொள்ளுவானென்றறிக. மூன்சொன் ன சுத்தசைவனுக்கு மிவனுக்கும் பேதமென்னென்னி லிருவருக்கு முபக்கிர மம் உபசங்காரம் மற்றுமெல்லாஞ்சரி. அதில் மோட்சத்திலே சிவனுக்குவேரு ய் சர்வகத்துருத்துவமுண்டாய் தேகாந்தத்தில் பஞ்சகிருத்தியமும் செய்யுமெ ன்றது பேதமென்றறிக. இந்தமதமும் ஒரு உருத்திரரா லுண்டாக்கப்பட்டுச் சிவஞேடுசரியாகையால் சிவசமவாதியானதென்றறிக. ஆதமாகித்த வியாபக சைதன்னியனென்றறிக.

உஅ-வது —அத்தியாயம்.

அயிக்கவாதிமதம்.

மலம்போமுத்தியில் அயிக்கவாதிமதலட்சணம்.

மூன்சொன்ன சிவசமவாதியைப்போல் இவனுக்குந் திரிபதார்த்தத்தின் சொரூபலட்சணமுந் தடத்தலட்சணமும் ஆதமாபந்தப்பட்டுச்சென்னமெடுக் கிற பந்தநிலையும்முத்திநிலையுஞ் சரியென்றறிக. இதில் அயிக்கவாதிக்குப் பே தமென்னென்னில் ஆதமா அறிதசுத்தரொன்றுங் கேவல வவத்தையி லான வமில்லை மாயையுங் கன்மமுமேயுள்ளதென்றுங் கன்டிசாம்பிய பரிபாகமுண் டானவாறே நாலுவிதமாம் சத்தினிபாதமுண்டான வளவில் ஆசாரியமூர்த்தி யாக எழுந்தருளி யவர்கையிற் சமையவிசேஷதீட்சைபெற்று விதிப்படி சிவ ஹனப்பூசித்து அத்துவாசுத்தி பண்ணுவதான நிருவாணதீட்சையிலுலே மா யாகன்மங்களைப் போக்கி அறிதியில்சுத்தாத்மாவுக்கு கடுவேவந்தமரையகன் மம்போனபிறகு பாலும்பாலும் நீருநீருங்கலந்தாற்போலச் சிவனுடன்கலப்ப தென்றதுவும் பேதமென்றறிக. இதுவுமொரு உருத்திரராலுண்டாக்கப்பட் டதென்றறிக.

உக-வது—அத்தியாயம்.

பாசுபதிமதம்.

மலம்போமுத்தியிற் பாசுபதிமதமாவது.

பதி பசு பாசமூன்றுஞித்திய மிதிற் பதிசொரூபலட்சணம் பதியானது நா மரூபக்கிரியாரகிதரையும் நிஷ்கள நின்மல நிராமய நிராளம்பதிந்த சுத்தரு யிருப்பதுபதி. இனிப்பசுசொரூபலட்சணம் அனேகருமாய்நித்தியருமாய்வியா ர்த்தருமாய் அறிதிமலசம்பந்தராய் பரமாணுசொரூபமாயிருப்பதுபசு. இனிப்

பாசமாவது நித்தியமாய் அனந்தவியாபக சத்தியுண்டாயிருக்கும் இது மூல்
றின் சொரூபலட்சணமுடிந்தது. இனி மூன்றின் தடத்தலட்சணமாவது இ
திற் பதியின் தடத்தலட்சணமாவது பதியினிடமாகச் சத்திகளுண்டாய் ஏ
துகளிடமாக மூர்த்திகளுண்டாய்ப் பஞ்ச கிருத்தியங்களைச்செய்வது அதெட்
படி பதியின்சந்நதியில் அஞ்ஞத்திரள்கள்கூடிப் பஞ்சபூதங்களாய் இது மூத
லாக வுலகங்களையுண்டாக்கும். இனிப் பசு வின்தடம் பசுவுக்குச் சிவன் மா
யையினிடமாகப் பரமாணுக்கள்தானைகூடி மாயை கன்மம் பிரபஞ்சங்களா
ய் பசுவும் பரமாணுவாய்த் தனுகரணபுவன போகங்களோடுகூடி விரிகிறது.
இனிப் பாசத்தின்தடம் அணுக்கள்தானையிறையவன்மூன்றுக மாயை பூத
மூலங்களாய் விரிகிறது இப்படி மூன்றுதடமு முடிந்தது. இனிப் பெத்தநிலை
யாவது பசுவானது அணுத்திரள்கூடி மாயைகன்மம் பிரபஞ்ச தனுகரண
வனபோகங்களோடுகூடிப் பந்தப்பட்டுச் சனனமரணப்படுவதென்றறிக:
இனி முத்திநிலையாவது கேவலத்திலாணவமில்லைமாயையுங்கன்மமுமே யுள்ள
து இதைச் சிவன் அருதிசுத்தராயிருக்கிற ஆத்மாவினிடத்தில் கூடின கன்ம
சமத்துவத்தில்சத்தினிபாதமுண்டாக்கி ஆசாரியமூர்த்தியாக எழுந்தருளிமா
யாகன்மங்களை அத்துவாசோதனையானநிருவாணதீட்சையில்போக்கி நித்த
யவியாபக சைதன்னிய வாத்மா சிவபூசையால் பேதமில்லாமற் சிவனுடன்
பாலும்பாலும் நீரு நீருங்கூடினாற்போல் கலப்பது முத்திநிலை யென்றறிக.

ஈகூஎ. அணுத்திரளிறைவன்முன்ன ரகிலமுமுளதேயாக்கு
மனுப்பலமேதகத்தாகு மானவைமலங்கணீங்க
வினைப்பிலாவமலபூசை யிறைவன்பாலியற்றநன்னூற்
றனைப்பிலாமுத்தியென்னச் சாற்றும்பாசுபதிதானே.

ஈகூஅ. அகிலமிறைமுன் பணுத்திரளேசெய்யுஞ் சகலாத்மாக் கட
ளாயாமலங்க, ளநகவலம்பூசையா லொப்பாகைமுத்தி புகல்கி
ழன்பாசு பதன்பரமாணுவு.

ஈகூஇ. பரமாணுவுதானமாபவற்றிற்புனர்ப்பதுகாரணமாகியுலகம்
பன்ன,வரமாகவிறைநிமித்தமாகிநிற்கு மலமூன்றின்பிணிப்
பாகும்பசுக்களெல்லாந், திரமாகவாகமத்தின்முறைமையாலே
திகழாவாகனமுதலாம்படியேயர்ச்சித், தரமாகும்பாசமறவ
ணுக்களெல்லா மொன்பதியொத்திருப்பதேயுயர்வீடாகும்.

என்பது சிவன் நிமித்தகாரணமு யிவன்முன்னுகப் பரமாணுவுபாதான
மா யிதிற்புணர்ப்பது காரணமாக வுலகத்தையுண்டாக்க ஆத்மாக்க ளெல்லா
மூன்றுமலத்திலுங்கூடப்பா திப் பந்தனையாம் இந்தப்பந்தம்விட ஆகம மு
றைமையாலே ஆவாகனமுதலானபடியே பூசைசெய்து மலங்களெல்லா நீங்
கிப் பதியோடொத்திருப்பதேவீடாமென்றறிக. இதல்லாமலும் ஐம்மலங்களு
மணுப்பேதத்தாலுண்டென்றும் அதுநீங்கிப் பதியோ டொப்பதென்றுஞ்

சொல்லுவதென்றும் ஆத்மாநித்தியவியாபகசைதன்னியன்கர்த்தத்துவமே சங்காரமாகையா லதைநீங்கி ஞெப்திமாத்திரமாதல் மோட்சம் இதுவுமொரு ருத்திராலுண்டானதென்றறிக.

ஈய-வது—அத்தியாயம்.

சங்கிராந்தி வாதிமதம்.

மலம்போழுத்தியிற் சங்கிராந்திவாதிமதம்.

பதி பசு பாசம்-ஈ- ல் பதிசொரூபம் பதியாவது நிர்விகாரமாய்ச் சுத்த ஞையிருப்பர் இனிப் பசுவானது அறிதியாய் சுத்தராயிருப்பர் இனிப் பாசமா ணமாயை சடமாயிருக்கும் இதுமூன்றின்சொரூபலட்சணம் இனி யிந்தமூன் றின் தடத்தலட்சணமாவது பதிஒன்றையுஞ்சுட்டாமல் விளக்குப்போலநிற்ப ன் இனிப் பசுவானது அனேகம் இதுகள் சூரியன்சந்நிதியில் காந்தமிரும்பை ச்சேடிக்கும்போல மாயையால் கற்பிதமான வுடம்பைச் சேட்டிக்கும் இனி மாயையாகிறது தனுகரணபுவனபோகங்களாய் விரிகிறது ஆ-ஈ-இனிப் பந் தநிலையாவது உடலியங்கு மவசரத்திற் சலிக்கிறபூட்டையின் அவயவங்கள் தந்தம்தொழிலைச் செய்யுமாறுபோலச் சத்தாதிகளை யிந்திரியங்கள்கிரிக்கும் இதில்வந்த பயனை யந்தக்கரணங்களனுபவிக்கும் அந்தக்கரணநீங்கிற விந்தி ரியங்கள் விஷயமாகிறபயனை யனுபவியாது பிராணவாயு ஒடுங்கி லுடல்சேட் டியாது இப்படிப் பந்துக்கட்டான தத்துவங்களுடனேசூழ்ச் சென்னமரண ப்படுவது. இனி முத்திநிலையாவது ஆசாரியன்செய்யப்பட்ட கிரமதீட்சையி னல் முன்னுள்ளதத்துவவிகற்பங்களான மலங்கள்நீங்கிக் கண்ணாடியிலேநிழ லாகச் சங்கிரமித்தாற்போல ஆத்மாவில் நிழல்போன்ற சிவனுடைய ஞானஞ் சங்கிரமிக்கும் அப்பொழுது அக்கினியைச்சேர்ந்த கர்ட்டமக்கினியானற்போ லவும் அளத்தைச்சேர்ந்த துரும்பு உப்பானற்போலவு மிவன்பசுகரணமாறிச் சிவகரணம்புரிந்து அறிவும் ஏகமாய்ப்போனெனதற்றுச் சிவனுயிருப்பனென்ற றிக. இதுமுத்திநிலை இனி யிவனுக்கும் முன்சொன்னபாசுபதிக்கும் பேதமெ ப்படியென்னில் அவன் சிவன் முன்பே அணுத்திராளுண்டாக்கின வுலகத்தி னல் பசுக்களுக்குப் பந்தமென்றும் ஆவாகனாதி பூசையாலேமலம்போய்மோ ட்சமென்றுஞ்சொல்லுகையில் இவன் சொன்னதெல்லாம் பேதமென்றறிக.

ஊக-வது—அத்தியாயம்.

பிறவாஹேஸ்வரவாதிமதம்.

மலம்போழுத்தியிற் பிறவாஹேஸ்வரவாதி மதமாவது.

பதி பசு பாச மூன்றின் சொரூபலட்சணமாவது ஈஸ்வரனொருவனுண்

டென்பது ஆத்மாக்களேன்கருண்டு மாயையுங்கன்மமுமுண்டு இந்தமூன்றும் அநாதியிலே யுண்டென்றறிக. இனித் தடத்தலட்சணமாவது ஈஸ்வரன் ஒருவன் அதிகாரத்துக்கு ஒரு மூத்தாத்மாவந்து பட்டங்கட்டிக் கொள்ளுகிறது இனி யாத்மாக்களுக்கு அநாதிமலமில்லை மாயைகன்மத்தாலே பந்தப்பட்டுக் காரியகாரணங்களாயிருக்கிற தத்துவக்கூட்டத்தால் கணுகரணபுவனபோகங் களைக்கூட்டிச் சென்னைத்துக்கேதுவாகிறது. இனி மாயையுங்கன்மமு மாத் மாக்களுக்குப் பாசமாய்விரிகிறது இந்தமூன்றுந் தடத்தலட்சணமென்றறிக. இனிப் பந்தநிலையாவது பசுவானது மாயையாலுங் கன்மத்தாலும் பந்தப்பட் டுப் பிறவித்துன்பத்தையநுபவிப்பன் இனி முத்திநிலையாவது இவனுக்கு ஒ ருபக்குவத்தில் வயிராக்கியஞ்சென்னித்துப்பக்குவகாலத்திற் குருவைத்தேடித் தீட்சாக்கிரமங்களால் மாயைகன்மமிரண்டையும் நீக்கி யாத்மாசுத்தஞான பி றகு ஈஸ்வரன் தன்னுடையஞானத்தை யிந்தவாத்மாவினிடத்தில் சங்கிரமிப் பித்துத்தான்செய்கிறபஞ்சகிருத்தியங்களை யிவனுக்குக்கட்டளையிட்டுத் தன் னதிகாரத்துக் கிவனைநிறுத்தித் தான்பாரமற்றிருப்பன். அதெப்படி யென்று ல் ஒருவன் குடும்பபாரத்தைப் புத்திரனிடத்தில் வைத்துப் பிதாசந்நியாசியா னதுபோலிவன்றறிக. இனி யிவனும் பின்னொருவன்முத்தனை வாத்மா வைத் தன்னதிகாரத்துக்குவைத்துத்தானும்பாரமற்றிருப்பன். இப்படிப்பார ம்பரையாக ஒருமூத்தாத்மாவைவைத்து ஒரு ஈஸ்வரன் பாரமற்றிருப்பனென் றறிக. இதுமுத்திநிலை யிதல்லாமற்பாரமற்றிருக்கிறஅனீஸ்வரன் அநித்தியமா னபோது ஆத்மாவுருப்திமாத்திரமாயிருப்பதேமோட்சமென்றறிக. இனி யி வனுக்கும் முன்சொன்னவனுக்கும் பேதமென்னென்னில் இதில் முன்சங்கிராந் தவாதி சிவன் விளக்குப்போலே யிருக்க ஆத்மாக்கள் சூரியன்சந்நிதியிலேகா ந்தமிரும்பைச் சேட்டிப்பதுபோலச் சிவன் சந்நிதியிலுடலைச்சேட்டிக்கு மெ ன்றுந் தத்துவங்கள்கூடிச் சென்னஅதிகாரங்களுக்கு அவ்வைவைத்துப் பர மற்றிருப்பனென்று சொல்லுகையில் இருவருக்கும் பேதமுண்டென்றறிக.

கூஉ-வது — அத்தியாயம்.

மகாவிரதிமதம்.

மலம்போழுத்தியில் மகாவிரதிமதம்.

பதி பசு பாசத்தின் சொரூபமாவது சிவனொருவனுண்டு ஆத்மாக்களுத் தியில் மலத்திரையங்களோடு கூடியிருப்பர் மும்மலங்களு மலுதியேயுண்டு இப்படிப் பதி பசு பாச மூன்றும் நித்தியமென்றறிக. இனித் தடத்தலட்ச ணமாவது பதியானது தன்னுடைய கிரியாசத்தியில்லாமல்தான் ஞானசத் தியைக்கொண்டு ஆத்மாக்களைப் பெத்தாவத்தைத் படச்செய்வது இனிப் ட சுவானது மும்மலத்திரையும் பந்தப்பட்டுச் சிவன் ஞானசத்தியால் சென்ன வேதுவாகிறது. இனிப் பாசமாவது பசுவுக்குப் பந்தமாய் ஞானசத்தியால் ப

லங்கெட்டுப் பக்குவமாவது இதுமூன்றின் தடமென்றறிக. இனிப் பந்தநிலை யாவது மும்மலத்திலுமறுதியில் பந்தப்பட்டவாத்மாக்கள் மாயை யிடமாகச் சிவஞானந் தனுகரணபுவனபோகங்களையுண்டாக்கிமலபக்குவமாகச்சென்ன மரணப்படுத்திக் துக்கங்களையநுபவிக்கப்பண்ணுவது இனிமுத்திநிலையாவது ஆத்மாவானது ஒருபக்குவத்தில் தீட்சையாலே மலத்திரையங்களறீங்கி அதி கரித்து ஆகமப்பிரமாணங்களாலே பூசைசெய்து தேகாந்தத்திலே கர்த்தத் துவசங்காரத்தைவிட்டு நித்தியவியாபகசைதன்னியனான வாத்மாசிவனுடை ய ஞானசத்தியொன்றையு முடையராய்ச் சிவலோகத்தில் ஞானமாத்திரத் துடனே யிருப்பார்களிது முத்திநிலையென்றறிக.

ஈகூசு. வேணியென்பக்கமுதற்றரித்துமெய்விரதக்
தானுவுரைப்படியிற்றப்பாமற்-பேணிப்
புரைதங்காதானசிவலோகம்புகலாம்
விரதங்களாமுன்றன்வீடு.

ஈகூள. வேணிபோடென்புமக்கு மிக்கமுத்தினையதாகத்
தாணுமுன்னுரைத்தநூலிற் சமையாசாரங்கள்பேணி
யாணியாமாகமத்தி னடைவிலேயணுவிதிக்கக்
காணியாமுத்திமாவி ரதிகாளாமுகனேகூறும்.

என்பது சடையும் எலும்பும் ருத்திராட்சமுந் தரித்துச் சிவவாக்கியந்த ப்பாமற் சிவபூசை செய்யிற் சிவலோகத்தில் திவ்விய ஞானியா யிருப்பா னென்றறிக. நித்தியவியாபக சைதன்னியனானவாத்மா சங்காரமே கர்த்தத் துவமாகையா லதைநீங்கி ஞெப்திமாத்திரமானதே மோட்சமென்றறிக. இ வனுக்கும் பிரவாக்னுக்கும் பேதமென்னென்னிற் பிரவாகன் ஒருமுத்தனுக் கு ஒருமுத்தன் பாரமற்றிருப்பானென்ன இவன் மும்மலபெந்தமு மோட்ச முஞ் சிவஞானசத்தியாலென்றுஞ் சிவலோகத்தின் பூசையாலே ஞானமாத் திரமாயிருப்பாரென்றுஞ் சொல்லுகையாற் பேதமுண்டென்றறிக. இதுவு மொரு ருத்திராலே கற்பிக்கப்பட்டதாம்.



ஈஈ-வது—அத்தியாயம்.

காளாமுகன்மதம்.

காளாமுகன்மதமாவது, முன் சொன்ன மகாவிரதிபோல் சொரூபம் உபக்கிரமம் பெத்த முத்தி எல்லாஞ்சரியென்றறிக. உதாரணம்.

ஈஈஅ. அத்தியக்கஞ்சடைமுதலா மடையாளங்கொண்டன்பாற்
பத்தியொடுவழிபட்டுப் பருகியமங்கொலையாமன்
மெத்தரியலவ்வுமேல் வினையாலுடலம்விடும்பொழுது
சித்தர்தொழுஞ்சிவலோக மடைவர்சிவார்ச்சனையாலே.

மகாவிரதிக்கு மிவனுக்குங் தந்திரபேதங் கிஞ்சித்தாவ்வு ஆத்மாதித்திய வியாபக சைதன்னியனென்பதொன்றுகி.

நகர-வது—அத்தியாயம்.

காபாலிமதம்.

காபாலிமதமாவது முன்சொன்ன மகாவிரதி காளாமுகன்போலே யுபக்கிரமம் உபசங்காரம் பெத்த முத்தி நாலுமிவனுக்குந் சமியென்றறிக. இவனுக்கு மவனுக்கும் கிஞ்சித்பேதமுண்டென்றறிக. இதுவுமொரு குத்திராலே கற்பிக்கப்பட்டது. பாசுபத மகாவிரத காபாலிக மிந்த மூன்றுசாத்திரமும் மாயாதத்துவத்திலும் வித்தியாதத்துவத்திலு மிருக்கிற மூன்று குத்திராலே சொன்னதென்றறிக.

நகு-வது—அத்தியாயம்.

அவ்விகாரவாதிமதம்.

அவ்விகாரவாதிமதமாவது சொருபல்டசணம் விகாரமற்று அவிகாரமாய் நித்தியமானபதியொன்றுண்டு ஆத்மாக்களனேக ராணவத்தாலே மூடப்பட்டு அஞ்ஞானமாயிருப்பார் ஆணவமலநிருளாம் ஆ பதி பசு பாச மூன்று மநாதி நித்தியமென்றறிக. இனித் தடத்தலட்சணம் பதியானது தன்னைநிருபம் நிழலும்போல் வந்தணைந்தவனை விடாயுந்தாகமுந்தீர்த்து அடையானவாவென்றழையாதுபோல விருக்கும். இனிப் பசுவானது சிவதடையஞானத்தைக்கொண்டு சர்வத்தையுமறியும் பாசமானது ஆத்மாக்களைமறைத்திருத்து ஆத்மாசிவஞானத்தைக் கொள்ளுதையால் நிட்குநற்கேதுவா யிருப்பது ஆ மூன்றின் தடத்தலட்சனமு மிப்படியென்றறிக. இனி ஆத்மா பெத்தநிலையாவது ஆத்மாக்களாணவமீங்கும்பொருட்டு ஒருகர்த்தா வதிஷ்டிப்பதினால் அவனருளால் சுத்தாதி விஷயங்களைப்பற்றிக்கொண்டு இதினால் இந்திரியங்களைக்கொண்டு சுத்தாதி விஷயங்களைப்பற்றி விஷயங்களால் பந்தப்பட்டுச் சனனமரணப்படுவது பெத்தநிலையென்றறிக. இனி முத்திநிலையாவது ஆணவமலபரிபாகம் வந்தவிடத்து இருட்டறையில் இருக்கிற பதார்த்தத்தை தெளிக்கத்தீபத்தைக் கொள்ளுமாபோல ஆணவ விருள்போக ஞானமாகியவினைக்கைத் தம்பிரானருளால்பெற்று நீரு நிழலும் வந்தானை வாவென்றும் போனைப் போவென்று மில்லாமல் விகாரமற்றிருக்கத் தன்னைநிர்வேட்டவனும் வெய்யலி லடிபட்டவனும் வயிற்றைநச்சேர்த்து விடாயுந் தாகமுந்தீர்ந்தாற்போல விகாரமற்றிருக்கிற சிவனைப் பிறவித்துன்பத்தில் வருந்தினாதுக்மாக்கள்தானே ஞானத்தாலேசேர்த்து துக்கமற் றிருப்பார்களென்றறிக. இவர்கள் வேஷம் நாகபால பிக்ஷுடனமென்றறிக. தத்துருத்துவமே சங்காரமாகையாலதுநீங்கி ஞெப்திமாத்திரமானதே மோட்சமென்றறிக. இதுவு

மொருருத்திர கற்பிதமாம். இனி முன்சொன்ன காபாலிக்கு மிவனுக்கும் பே தமென்னென்னில் ஆத்மாக்கள் சிவஞானசத்தியாலே மலத்திரையும் நீங்கி த் தீட்சையாலே பூசைசெய்து தேகாந்தத்திலே மோட்சமென்று சொல்லு கையில் இவன் சிவஞானத்தைக்கொண்டி ஆத்மாக்கள்தானே மோட்சமடை வார்களென்கையா லிருவருக்கும் பேதமுண்டென்றறிக. ஆத்மா நித்தியவி யாபக சைதன்னியனென்றறிக. மலம்போமுத்தியிற்சிவசமவாதி அயிக்கவா தி பாசுபதி சங்கிராந்தவாதி பிறவாஹேஸ்ரவாதி மகாவிரதி காளாமுகன் காபா லி அவிகாரவாதி இந்த - க - பெயரும் மும்மலவர் சிலர் இரண்டுமலவர் சிலர் இதுகள்தீர்ந்தவிடத்தில் மோட்சம் பெறுவாரென்றறிக.

ஈகூ-வது—அத்தியாயம்.

சம்மேளிதசைவன்மதம்.

ஈகூ. நித்தமாம்பதியினெடுபசுபாசந்தா னிகளாயதாம்பசுவுக்குப் பாசந்தானு, மூந்தனும்பதியவனுமனதியாக முழுமலனும்ப சுபெத்தமவனாமேவாம், பத்திஞானத்தறும் பாசங்கெட்டி ப்பதியோடுமெளிதான்றுய்ப்பசுமுத்தி,சுத்தமாஞ்சம்மே ளனசைவமன்றித் தூசிசறநம்பொருளேதோசொல்லுங்காலே.

இனிப் பதி பசு பாச மூன்றின் சொருபலட்சணம். பதி பசு பாச மூன் றும் நித்தம் இதிற் பசுவுக்கு அனாதியாய்ப் பாசம் பந்திக்கும்பதி அனாதி முத்த ன்பாசமனாதி செடமா யாத்மாவுக்குப் பந்தமுமாமென்றறிக. இனித்தடத்தல ட்சணம் ஈஸ்வரன் வயிந்துவசரீரமுடையவன் பசுவானது அனேகமுந் தனு கரணபுவனபோகங்களுடனே கூடுகிறதும் பாசமானது ஆத்மாக்களைப் பந் தித்து விடுகிறதற்கேதுவானது இப்படிமூன்றின் தடமென்றறிக. இனிப்பெ த்தநிலையாவது பசுவானது பாசத்தினாலே பெந்தப்பட்டுத் தனுகரணங்களி லேகூடிச் சென்னமறனரப்படுவது இனி முத்திநிலையாவது சிவனைத்தியா னஞ்செய்து ஞானபூசையாலே பாசபந்தங்களைவிட்டுச் சிவனெடுகூடுகிதே முத்தியென்றறிக.

வெண்பா.

ஈசுல. பாசமாம்பெந்தம் பசுபெத்தன்முத்தனு
யீசனனாதியிவர்ஞான- பூசையா
லம்மோகமாறி யவனொன்றல்லீடென்றுன்
சம்மேளிதசைவன் முன்.

ஈசுக. பந்தமாம்பாசபெந்தன் பசுபதிமுத்தனுகு
மூந்தியவனாதியீசன் மூதுயிர்ஞானபூசை
யந்தவாய்மையினுஞ்செய்ய வழிவிலாச்சிவபந்தத்
துந்தலாமுத்தியென்னச் சிவசம்மேளிதனுனாக்கும்.

முன்சொன்ன அவிகாரவாதிக்கு மிவனுக்கும் பேதமென்னென்னில் அவன் சிவஞானத்தால்தானேபோய்ச் சிவனையடைவானென்ன இவன் ஞான பூசையாற் சிவனேடுகலப்பானென்கையாற் பேதமுண்டென்றறிக.

ஈட்ட-வது—அத்தியாயம்.

சைவத்திற் பேதாபேதவாதிமதம்.

சொருபலட்சணமாவது.

ரசஉ. அறிவிலதாய்ச் சச்சிதானந்தமாகி யகண்டிதமாய்நித்தமாயனுதியாகிப், பொதிகரணன் ஞானங்குறிகள் விளாவிச்சாய்ப் பூரணமாயொப்பிலதாயமலமாகிச், செறிவிரிதாய் மிகசூறுதாய்ப் பெரிதுமாகிச் சித்சித்தாயுள்ளதனைச் சேட்டித்தொன்றுப்ப், பிறிவிலதாய்ப்பேரொளியாய்ப் பொன்னையொனன்றுப்ப், பெறும்பொருளாம் பதிசொருபம் பேசுங்காலே.

தடத்தலட்சணமாவது, சிவநெறிபிரகாசத்தில்.

ரசஊ. அன்னியமாயனைத்துயிர்க்கும் மலதையாஞ்சிவன்றனைத் தினையும்வியாபிக்கு மதனற்றுனதுவாய்ப், பின்னமறின்றுயிரின்றன்மைக்கின்றுப்பெறுவிப்பன்வினைக்கிடாய்ப் பிரிவிலதாஞ்சத்தி, தன்னையோர்காரணமாய் மாயைதனிலுயிர்க்குந்தனுவாதிநான்கினையுந் தானென்போலென்னின், மன்னியிடக்காற்றதுதான் விசையுடனேகடற்பால் வந்துதிக்குந்திரையாதிவாறுபோன்மதியே.

இனி மெய்மொழியில்.

ரசச. சுருக்கமில்சிவத்திற்சத்தி தோய்ந்தபின்மாயாசத்தி செருக்கியேகெற்பந்தாங்கிச் செகத்தைதமுன்பீன்றதன்மையருக்கன்றன்கிரணயோகாலந்தரத்திலங்குமேகப் பெருக்கநீர்கெற்பந்தாங்கிப் பெய்யுமாமழைபோலன்றே.

ரசரு. சத்தியின்றன்பேதத்தாற்சிவனுமங்ஙன் சத்தனெடுத்தியுத்தாணுகிமேலும், புத்திமுத்தியுதவுபிரவித்தனென்று பொருந்தியிடுமிலையமொடுபோகவதிகார, யித்தகைபலுவிலேசத்தாருவாகியெழில்ஞானமேவடிவாயிச்சைதொழிலைசந்து, சுத்தமாங்கலாதிநோற்றுனமிலையத் தொலைவதனிற் புரிவாருட்சூக்குமவைவந்தொழிலே.

என்பது சத்தியின்பேதத்தாலே சிவனும் சத்தன் யுத்தி யுத்தன் பிரவதனென்று மூன்றும். இவர்கள் லயபோகவதிகாரஞ்செய்வார் இதிற் சத்

தர் உருவாகி ஞானமேவடிவா யிச்சைதொழிலுடனிசைந்து சுத்த தத்துவ மூங் கலாதிகளுந் தோன்றுகிறதற்கு முன்பே லயமா யெல்லாமிறந்து மூடியுமிடத்திலே சூட்சுமவைந்தொழிலைச் செய்வர் இனிச் சத்தராகிறவர் சூக்குமவைந்தொழில் செய்வதேதென்னில் லயகாலமுடிந்து சிருஷ்டிதொடங்குகாலத்தில் பக்குவாத்மாக்களுக்குப் பரமுத்தியளித்துப் பின்பு பக்குவமில்லாதவாத்மாக்களைமறைத்து அவர்கன்மங்கள் தொலையப் பருவமுறச்செய்து மாயாசூக்குமமான மகாமாயையும் தூலமான சுத்தாசுத்த மாயையுந் தோன்றும்வகைசெய்து கர்த்தா தனதருளாகிற சமவாயசத்தியைக்கொண்டுவிந்துவாகிற மகாமாயையைக்கலங்கல்செய்வித்து அந்தச் சமவாயமாகிற சிற்சத்தியோகமாயையென்னும் பெயருண்டா யெல்லாமுண்டாகிறதற்கு யோனியுமாய்நிற்கும். இஃதெப்படி யோனியாய்நின்று எல்லாவற்றையு முண்டாக்குமென்னில்.

மெய்மொழியில்.

ஈசகூ. பரஞ்சத்திலுதியாகின்ற பலகிரணம்பதிந்தாங்கா
யிரஞ்சித்தபோதுநாம மெழில்கொள்குண்டலிமாயைக்குத்
திரஞ்சித்திப்புனர்ச்சியாலே செகத்தைமுன்கெற்பந்தாங்கி
யுரஞ்சித்தாய்நின்றுதானே யுலகங்களீன்றதன்றே.

பரமாகிற சைதன்னியசத்தியி லுதிக்கப்பட்ட கிரணங்களானவைசென்று விழுந்து மகாமாயையிலே போய்க் கூடினஉடனே மாயைக்குக் குண்டலியென்றுபெயராய் முன்சொன்ன சிற்சத்திகிரண சையோகத்தாலே செகத்தைக் கெற்பந்தரித்துத் தானே சைதன்னியரூபஞ்நின்று செகத்தையீன்றது மாயையென்றறிக. ஆகையால் சிற்சதத்தியாலே மாயாசத்திகெற்பமாயுலகையீன்ற தன்மையிஞல் சிற்சத்தி இஃதோடு கூடினபோது அதற்கும் யோகமாயையென்று பெயராகையால் யோனியாய்நின்று உண்டாக்கினதென்றறிக. இதற்கெல்லா முதன்மையாகிற சத்தராகிறவர் தமது சிற்சடசத்திகளைக் கொண்டு உண்டாக்கி நிமித்தகாரணமாவன. இவருக்கெல்லாவற்றையு முண்டாக்கிறவிந்து உபாதானகாரணமாகு மிதிலே சத்தராகிறசிவனுஞ் சமவாயசத்தியாகிற சிற்சத்தியு மிருவரும் திஷ்டிக்கும்போது நாதவிந்துகளுண்டாம் இந்த விந்துவில் சத்தருடைய கிரியாசத்தியடைந்து கலங்கல் செய்து அக்கரங்கள் நாதாதிக ளனைத்தினையு முண்டாக்கும். அதெப்படி யென்னில் மூன்சொன்ன குடிலையிலே தோன்றின விந்துவில் அதோபாகத்திலே யம்பிகையுதையமா யிவளிடத்திற் சயைகாளவுத்திரி செவைஷ்வாமை யிவைஞாலு முண்டா யிந்தஞாலுசத்தியும் நிவிர்த்திசத்திமுத லீராறு சத்திகளையுண்டாக்க ஆ முன்சொன்ன நாலுசத்திகூடப் பதினறுசத்தியு மெல்லாவற்றிலும் வியாபிக்கும் இந்தச் சத்திகளாலே வர்ணங்களுதித்திடு மிதில் முந்தி நாதமயமாய் விஞ்ஞானவொளியாய் மொழியவைக்குமுதலாய்ச் சூக்குமைபிறக்கும் இந்தச் சூக்குமை விந்துமயமாய் விர்த்தியைப்பொருந்திப் பைசந்திவாக்காம் இதமயிலின்முட்டையிலே பலவர்ணங்களிருக்க அந்தவர்ணங்கள்தோன்றுமல்

நோயிருந்தாற்போல அந்தமூடனையெடுத்து சாய்ந்துச்சாய்ந்து பார்த்தால் வர்ணங்கள்தோன்றியும் உடைத்தால் வர்ணந்தோன்றாமல் நீராய்ப்போம் இத்தன்மைபோல் முன்சொன்ன சுத்திசொரூபமான பதிஞானியினொழுத்தும் பலவர்ணங்களையுமடக்கிக்கொண்டு மணியோனைபோலே நிற்கும் இந்தப் பைசந்தியிலுண்டான மத்திமைவாக்கானது அகரமாய்வாமை சேட்டைபொளத்திரியை யாகமாக்கொண்டு பதிஞானட்சரமாய்த் தானே பிரமமாய் வேதாதிக்குபாதானமாய்ப் பிறகுதான்விரிந்து கவ்வாதி - டு - வர்க்கமும் கவ்வாதி கூவ்வந்தம் -ம- வர்க்கமும் ஆ பதினைந்துவர்க்கமாம் ஈராறுசத்திகளாலே கம்மூதல் - ஙரி - அட்சாரமுமாய்ச்-சத்தமுமர்த்தமுமாய்க் கருதியிருக்கும். இனிச்சத்தமு மர்த்தமுஞ் செவியிலேகேட்க கவனிப்பது மத்திமையிலுண்டான வைகரி வாக்கென்றறிக. முன்சொன்ன உயிரொழுத்தப்பதினாறையுங் கர்த்தா அதிட்டிப்பர் இதற்குடனாகிய - ஙரி - எழுத்தையுஞ் சத்தி அதிட்டிக்கும் ஆகையால் சிவன் சத்தியான தூமிவயிற்பிறந்த நாதவிந்துவை யதிட்டிக்கையாலே யிதினுடைய பெயராலே சிவனுக்குச் சத்திக்கும் பரநாதம் பரவிந்துவேறுபெயராயுங் குடிலையில் நாதவிந்துவுக்குச் சிவன் சத்தி பெயரால் சிவன்சத்தியென்று பெயராமென்றறிக. பின்னும் வாக்காதிகளை யுண்டாக்கையால் வாகீசனென்றும்பெயராம். இத்தவாக்குநாலும் நிவிர்த்திகலைகளாலே பிரேரிக்கப்பட்டு நிவிர்த்தாதியிலுண்டான வுயிர்களுக்கு வாக்குகள் தினைபோலும் கலைகள்சமுத்திரம்போலும் உள்ளத்திலே யுதித்துச் சித்தாதியில் திகழ்தல்செய்து பந்தமாய்ச்சிவஞானமுண்டானபோது நிற்கும் பருதி முன்னிருள்போலவென்றறிக.

ரசள. பவனசுத்தகாலமூடனியதிகலையாதி
பவனக்கிப்புவனங்கள்பதினைந்தாக்கிச்
சிவனுக்குச்சமனுகிற்பரமூத்தியடைவோர்க்கு
யவ்விடத்திலேதனுவாதியாக்கிவிப்பன்.

இப்பால் விந்துவால் சாதாக்கிய தத்துவத்தையுண்டாக்கி யிதில் கன்ம சதாசிவர்முதலான அணுச்சதாசிவர்களை யிருக்கச்செய்து இந்தவகையாலே தத்துவங்களனைத்திலுஞ் சத்தியால் சிவனியற்றச்செய்து இயற்றப்பட்ட மந்திரமுதலான ஆறத்துவாவிலுஞ் சிவன் பிரிவறநிற்பன். இம்மட்டுஞ் சுத்தாதிசுட்சுமவைந்தொழிலென்றறிக. இனிக்கன்மசாதாக்கியர் வரலாறு.

ரசஎ. பஞ்சசத்திவிந்துவினிற்பதியுங்காலே பருதியொளிகாந்தந்
தேபதிந்தபோது, விஞ்சுசுடருதித்ததுபோற்கலாசத்தியைங்
தை வேறறவேயீசானதியைந்தா, பெஞ்சலிலாப்பஞ்சமந்தி
ரசத்தியுதிக்கு மிவைதனுவாய்க்கரும சாதாக்கியர்தானிசைத்
தே, தஞ்சமாயனேதீதுயிர்க்குங்கருணைசெய்யச் சதாசிவதத்
துவத்திறையாய்த்தரிப்பர்தானே.

என்றது சிவசத்திகளாகிற பஞ்சசத்திகளும் மகாமாயையிலே பதிந்தகாலத்தில் பருதியொளிகாந்தத்திலே உதித்த அனல் பிறந்தாற்போலப் பஞ்சக

லாசத்தியுண்டா யிதிலீசாஞ்தி டஞ்சுமந்திரமுண்டா யிவை தனுவாய்க் கரும சாதாக்கியர் முன்சொன்ன சாதாக்கியதத்துவத்திலே யிருப்பர் இவ ருநூவில் லாத பஞ்சசத்திகளு முருவுள்ள விந்துவிலேசுடதத் தோன்றினகலையால் உண் டானபஞ்சமந்திரம் ரூபாரூபமாலைகளாற் சதாசிவரும் ரூபாரூபமா யுத்தியுத்த மொக்கதொன்கிற நாமமுண்டாயிருப்பர் இவர் ஆணவத்தின்பருவநோக்கித் தூலவைகந்தொழிலுந்செய்வர். இனி யிந்தச் சாதாக்கிய தத்துவத்தில் ஈஸ்வ தத்துவமும் இதில் சுத்தவித்தையு முண்டாக்கி சதாசிவமுதல் மூன்றுதத் துவத்திலு மூவாறு புவனமாக்கி யிருவினையு மாயையுநீங்கி யாணவமொன்றே யியல்பான விந்நானகேவலநிடத்தில்நிவரதத சுத்தினிபாதந் சேர்ந்தபோது சிவமாகப் பாமுத்திசேர்ப்பர் திவரசுத்தினிபாதந் சேர்ந்தபிறகு பக்குவ மைந் துபேதமாம். இதில்முதல் பக்குவருக்கு அபாமுத்தித்தானத்தில் புனிதஞான மூகன்மை யெல்லாம்பொருந்திச் சிவசமமாயிருக்கச்செய்வர்.

இரண்டாம்பக்குவருக்கு.

ாசக. இருளொழித்திட்டெவ்வறிவு முதலாயுள்ள விருமூன்றுகுண ம்விளங் கியெங்குமாக,வருள்புரிந்துவிந்துவானதத்துவத்தே யமர்விப்பன்.

இனி மற்றமூன்று இளம்பக்குவருக்கும் பாசநீக்கிச் சதாசிவ ரீஸ்வர ரு த்திரராகச்செய்வது இம்மூவருஞ் சதாசிவம் ஈஸ்வரஞ் சுத்தவித்தையில் மெ ஞ்ஞானம்பெற்று அதில் இருந்து பிரளயகாலத்தே பாமுத்திபெறுவர் இனி மூன்சொன்ன கருமசதாசிவரிடமாக ஞானவன்தெசுனை மருவிவித்து மூந்தி ன ரீஸ்வரதத்துவத்துக்கதிபராகி அதோமாயாகாரியத்தைப்புரிந்து பிறவத்த மொன்கிற நாமமுண்டாயிருப்பர் இனி ஞானவழிவானகையாற் சத்தரூவமாயுள கனேத்திறுக்கும் தீதமாயிருப்பர் இரிசைபசமமானவழிவாகையால் ரூபாரூபமாயு த்தியுத்த ருலகினத்திறுக்கும் பரமகாரனமாய்ச் சிந்திக்கப்பட்டவராயிருப்பர் இனி ஞானங்குறைந்து கிரியை அதிகமான வடிவமாகையாற் பிரவர்த்தரான வ ருருவுமாயுலகினத்திறுக்கும் பூசாயோக்கியருமாயும் தியானயோக்கியரு மாயு மிருப்பர் இனிக் கருமசாதாக்கியத்தில் - உரு - பேதமான மகேஸ்வர தேவர்களுப்பர் இவரிடையத்தில்ரு த்திரதேவருதிப்பர் வலதுபாரிசத்திற் பிரமா இடதுபாரிசத்தில் விஷ்ணு மூன்றுநேத்திரத்திலும் ரவி சசி சிகி மூன்று முதிக் கும்வாக்கிற் பரஞானஞ் சுருதியாகம முதலானது தோன்றும் சுவாசத்தில்வா யு கனத்தில்கணேசன் பின்னும் இதயத்தில் கந்தர் கன்னத்திற் கொடிமு னிவர் நோமத்தில் - ருஉ - கோடி தேவர்கள் உதரத்திலளவிறந்த சீவராசிக ருநூட்டம் இலைகருக்கெல்லாம் பின்னமாய் நிமித்தனுமா யுபாதானமுமாயி ருப்பர் இந்தமகேஸ்வரதேவர் தம்மிடத்தில் ஸ்ரீகண்டருத்திரதேவனை யுண் டாக்கிச் சுத்தவித்தைக் கதிபராயிருக்கச்செய்வர் இதிற் பிண்டிதார்த்தம் சத் தராகிறவர் மாயாருக்குமதுல்சத்திகளை இதில்தமதுசமவாயசத்தியால் மகாமா யையைக் கலங்கல்செய்வித்து அந்தச் சமவாயசத்திதானே யோகமாயையா யெல்லாமுண்டாக யோனியாய்நிற்கத் தானேயெல்லாவற்றிற்கும் நிமித்தரு ருவன் விந்துனைவத்தனைக் குபாதானமாக நாதவிந்துக்களையுண்டாக்கியிந்தவி

த்துவைத் தமது கிரியாசத்தியால் கலங்கல்செய்வித்து அதோபாகத்தில் அம் பிகையுண்டாகி யிதில் வாமை முதலான நாலுசத்தியுண்டாகி யிந்த நாவிற் பனிரொண்டுசத்திகளுண்டாகி ஆகப் பதிஞ்றுசத்தியாலும் வாக்கு நாலுந்தோ ன்றியிதில் நாலுசத்தியால் உயிரொழுந்துப் பதிஞ்றுமுண்டாக இதைச் சிவன் திட்டிக்க மற்றப்பனிரொண்டுசத்தியும் கம்முதல் -ஙரு- வர்க்கமா யுடலெழுத் து - ஙரு - ம் முண்டாக்கி இதைச் சத்தி யதிட்டிக்க இந்தவாக்குகளை நிவர்த் தாதி பிரோரிக்கச்செய்து இதின்பிறகு முன்சொன்ன விந்துவால் சாதாக்கிய த்தையுண்டாக்கி யிதில் கன்மசாதாக்கியர் அணுச் சதாசிவனை யிருக்கச்செ ய்து இதில் ஈஸ்வர தத்துவத்தையுண்டாக்கி இதில் முன் கன்மசதாசிவரிடத் திலுண்டான ஈஸ்வரனுக் கிருப்பிடமாக்கி யிந்தமஹேஸ்வராரிடத்தி லுருத்திர னையுண்டாக்கி யிவனைச் சுத்தவித்தையி லிருக்கச்செய்வர். இப்பா லீஸ்வரரா னவர் பிரளையாகலர் வினையொழித்துப் பாழுத்தி மேவச்செய்து பக்குவமி ல்லாதவனுக்கு வினையொழித்து மலமாத்திரம் நிறுத்தி ருத்திரர்களாகிப் புவ னைசராகச்செய்து சங்காரகாலத்தில் சுத்தழுத்தியளிப்பர். இப்படிப்பட்ட ஈஸ்வரன் புவனங்களுக் காதாரமாகத் தத்துவங்களையுந் தாத்திகங்களையும் அ தோமாயையிலுண்டாக்குமுறைமை இனி யீஸ்வரசத்தியாளது அதோமா யையைக் கலங்கல்செய்ய அந்தச்சத்தியால் காரியமாயாசத்தியுண்டா யிந்த க்காரியமாயையில் காலநியதிகலை முறைபாடின்றியுதிக்க நிதிற்புவனங்களைச் சேர்ப்பர் இனி மகேசரிடத்திலுண்டான உருத்திரர் கலையை யதிட்டித்துப் பிரகிருதிமாயையையுண்டாக்கி யிதில் வித்தைதோன்றி யிதிலிராகந்தோன் றி யிப்படி காலம் நியதி காரியமாயை கலை ஆ - சு - ம் இம்மூதோடு முன்சொ ன்ன கலையிலுண்டான பிரகிருதி -ஙு- கெதிக்கு அவ்வியத்தமென்றும் மாயை என்றும் பிரகிர்தியென்றும் பெயராம் இந்தப்பிரகிருதியிலுண்டான வித்தை ராகம் - உ - ஆ ஆறுமுண்டாம் இதமேறுகூடின ஆத்மாவுக்குப் புருடனை ன்று பெயராமென்றறிக. முன்கலையிலுண்டான பிரகிர்தியில் மூக்குணமு ண்டா யிதை மும்மூர்த்திகளுக்குங்கொடுத்து மூவரு மூன்றுகுணத்தின்படி யே ஆக்கி யளித்தழிப்பார் அதெப்படியென்னில் மானி லதோபாகத்திற் சித் தமு மிதிற் புத்தியுமா யிது - ஙஏ - பாவமுடைத்தா யிதிலாங்காரந்தோன்றி யிந்தவாங்கார முன்சொன்ன மூக்குணபேதத்தாலே சாதச தவைகரி தூதா தியென்று மூன்று மிதில் சாதசதவாங்காரத்தில் மனமுஞ் சோத்திராதியும் வைகரியில்வாக்காதியும் பூதாதியிற்சந்தாதியும் சத்தாதியிற் பஞ்சபூதமுமாக உசு- மூண்டாய் முன்சொன்னதுகூட மூன்று மாயையிலும் - ஙசு - தத்துவ மூண்டாமென்றறிக.

சித்தியாரில்.

ஙஏ. வித்தைகள்வித்தையீசர் சதாசிவனென்றிவர்க்கு
வைத்துறுபதங்கள்வன்ன புவனங்கள்மந்திரங்க
டத்துவஞ்சரீரம்போகங் கரணங்சுடாமெலாமு
மூப்த்திடும்வயிர்துவந்தா னுபாதானமாகினின்றே.

னென்பது. உருத்திரன், ஈஸ்வரன். சதாசிவன், இம்மூவரும் மந்திரம் பதம்.வன்னம், புவனம், தத்துவம், சரீரம், போகம், கரணங்களெல்லாம் மகாமாயையிலுண்டானதென்றது. இனிப் பரமனவன் தனது சத்திகண்ணுகளெல்லாமறிவன். அதெப்படி, பலாயே விழி, திரோதையேகருமணி, யிச்சாஞானக்கிரியையே அதற்குள்ளொளியாகக் காண்பன். இந்தச்சிருஷ்டிபேதஞ் சிவ சிருஷ்டி, சத்தி சிருஷ்டி, மூர்த்திசிருஷ்டி, யிதின்பெயர். சங்கற்ப, விகற்ப. அதிகார மென்றுமாம். இந்த மூன்று சிருஷ்டியையுஞ் சதாசிவன், மகேஸ்வரன், உருத்திரன், இம்மூவரு மூன்றுவகைச் சீவனுக்கும்மாயையிலும் பெந்தமுண்டாக்குவர். அதெபபடி. சிவன், சத்தியையுண்டாக்கிச், சத்திகள் மூர்த்திகளை யுண்டாக்கி, மூர்த்திகள் மும்மாயையிலு மூவகைச்சீவராசிகளுக்கும் பெந்தப்படுத்துவர். இனி மாயைகண்ணுகக் காணபது பசுவாகமம்.

ஈருக. பரன்பிரமசாரிபனைகன்னியாகும் பரம்பரனைச்சத்தியனுபவியாதென்றும், வரம்பிலனுக்களையிறைமையோடாக்கி மன்னுமுயிர்ப்பாங்கியெனநீங்குஞ்சத்தி, குரம்பையிலம்புலனுயிர்களருந்துமாறு கூடிடுமைம்பொறிபுலனின்பயன்கொளாவா, யருமம்பொறியைபொழிந்துயினைம்புலனைக்கூடா வத்தனையச்சத்தியொழிந்தடைந்திடாவே.

இது பிரமத்துக்குத் தடத்தலட்சணமும் மும்மாயைக்குத் தடத்தலட்சணமுஞ் சிவநெறிப்பிரகாசப்படி சொன்னதென்றறிக.

இனிப் பசுலட்சணஞ் சிவநெறியில்.

ஈருஉ. சாற்றியிடுஞ்சம்பந்தமானதுதான்பதிக்குஞ் சத்திக்குஞ்சமவாயம் பதிக்குமுயிர்தனக்கும், போற்றியிடவேறெனவே பொறுப்பதுமாய்ப்பிரியாப் புணர்ச்சியிலேதாதாத்மிகமாய்ப்புகலு, மாற்றியிடச்சிவனருளாற்பசுக்கள்பாற்பாச மாறுவதாலனுதியாஞ்சையோகமாகு,மேற்றிகழுமுலகுக்குமுயிர்க்குஞ் சம்பந்த மேவியிடுஞ்சையுத்தசடவாயமெனவே.

என்பது. பதிக்குஞ் சத்திக்குஞ் சம்பந்தமென்றது, நிர்மாணஞ்செய்கிறவேலைக்கு உபகரணங்கள் போலச் சிவனுக்குச் சத்தியானதென்றறிக. பதிக்கு முயிருக்குஞ் சமவாயமென்றது, மண்ணைவிடக்கடமில்லை. நூலை விடப் படமில்லை யென்றதுபோலப் பதியைவிடச் சீவனில்லை யென்றது "போற்றியிடவேறெனவேபொறுப்பதுமாய்,, என்றது, வேறென்று சொல்லத் தக்கதாகவுஞ் சொல்லப் பெறுகிறதாய்த் திரும்பத் தாதாத்மிக மாவானென்னிற் பதியைவிட வாத்மாவுக்குப் பிரிய வேறிடமில்லாம லஃதோடு பொருந்தியிருக்கையாலென்றது. ஆனல் ஆத்மா சிவனுக் கன்னியமோவென்னில் அல்ல பாசுக்கள்பாற் பயசத்தை நீக்கினல் நீங்குவதாகையால், அனுதியே பதிக்கு மாத்மாவுக்குஞ் சையோகமென்றறியவேண்டும். அதெப்படி

என்னில், மலத்தால் வேறுபட்டதாகையால் மலம்போலுல் ஆணதிசையோக மென்றறிக. இனி உலகுக்கும் உயிருக்குஞ் சம்பந்தமாவது, சையுத்த சமவாயமா யிருக்கும். அதெப்படி, கூடினதாகிலும் வேறென்று சொல்லப் போகாமற் கூடியிருக்கையாலென்றறிக. இனிசமவாய மென்றவர்த்தம், அவயவங்கள் வேறுயிருந்தாலும், அவயவியைவிடவேறில்லை. அதெப்படி, முகத்தில் மூக்கு, கண், காடை, வேறுறுலு முகத்தைவிடவதுகள் வேறல்லவென்றறிக.

மெய்மொழி.

ஈருகூ. சின்மயமாதலாலே செகத்தினிற்சராசரங்க
டன்மயமுணர்ந்துபார்க்கிற் சத்தியுஞ்சிவமுமேகாண்
சின்மயசிவன்றான்சிவன் சிற்சத்தியறிவுமாயை
தன்மயங்காபமென்றே சாத்திடுநிச்சியார்த்தம்.

ஈருசு. விண்ணினின்மழைக்குற்பத்தி வேலைநீர்வெய்யோன்காந்த
கண்ணியதீக்குற்பத்தி கலந்ததியன்றியில்லை
நுண்ணியபயிறப்பிறப்பி னுடங்குசைதனங்கட்கெல்லாம்
மெண்ணினின்மற்றுன்டோசொல்லினிருஞ்சிவமன்றிவித்தே.

சிவானந்தமாலையிற் பசுலட்சனத்தில்.

ஈருரு. சார்வறிவுபோதஞ் சதசத்துசித்தறிவு
போறிவுவென்றிவனைப் பேசாதே-நீர
விவன்செப்தி யொன்று மிலாயிங்கிவனேயென்னினும்
சிவன்செய்தியென்றே தெளி.

ஈருகூ. வாராயறிவுடைய மாணவுனக்கினிய
போவகைபலவும் பேசிணேம்-நேரா
வுவமையெலாமோய்வுற் றொழிந்தவிடத்துள்ளோச்
சிவமயமென்றுள்ளே தெளி.

ஈருஎ. மும்முதலுநித்தமெனமொழிந்தோமுத்தியிலு
மம்முறையாமென்றே மாங்கதுகேள்-மும்மைமக்
கழிவின்மைமகாட்டுங் காலாராதுவின்ப
மொழிவின்மைமயேமுதன் மூன்றும்.

ஈருஅ. எங்குஞ்சிவமொழிபவில்லையில்லையென்னினை
யங்கந்திரள்கருவி யானவமாம்-பொங்குயிருள்
ணமெசெய்தமாமாயை மாயைவிளைமற்றுமலம்
பொய்பொய்பொய் பொய்பொய்பொய்.

தனி

ஈருகூ. தம்மைத்தமக்குறுதி பெற்றோர்கள்தானிந்த
மும்மைக்குமொன்றே முதல்.

வெண்ப

ஈசுய. ஆணவமேதாருயிரே தாதிமுதலே தென்று
காணெடுநூல்விரித்து கற்றுதே-மாணுகே
ளென்போதங்கீழாயிங்கெப்போதுஞ் சிவனுமா
நின்போதமம் மலமாய்நில்.

சிவவாக்கியத்தில்.

ஈசுக. சத்தியாவதும்முடம் றயங்குசோதியுஞ்சிவம்
பித்தர்காளிதற்குமேற் பிதற்றலாவதில்லையே.

ஈசுஉ. என்னகத்துளென்னோ னெங்குநாடியோடினே
ளென்னகத்துளென்னோ னறிந்திலாமையாதலா
ளென்னகத்துளென்னோனறிந்துமெய்தெளிந்தபின்
ளென்னகத்துளென்னையன்றி யாதுமொன்றுகண்டிலே

திருமந்திரத்தில்.

ஈசுங. வித்தினிலன்றி முளையில்லையம்முளை
வித்தினிலன்றி வெளிப்படுமாறில்லை
வித்துமுளையுமுடனல்ல வேறல்ல
வத்தன்மைத்தாகுமாறெனிதானே.

இப்படிச்சிவனை யல்லாம லாத்மா வேறல்ல வென்று, சகல ஆகமங்க ளுஞ் சொல்லும், இதல்லாமல். வேதத்தில் நீலோற்பல வாக்கியமுங்கண்ட வாக்கியமுஞ்சாட்சி இனி உயிரானது ஆணவ மலத்தையுந்தீர்ந்துமற்றபா சங்களும் நீங்கிச் சிவமாகிறது தன்னியல்பு. சென்ன மரணப் படுவது பெய துவியல்பு இப்பாச சாலமெல்லாஞ் சிவனேவென்னி லொக்குஞ் சத்தி சிவ த்மகமாகையாலெல்லாஞ் சிவமென்றறி.

மெய்மொழியில்.

ஈசுச. சித்துடன்சித்திடத்தே செகத்தினுற்பத்திதானுஞ்
சித்துடன் சித்திடத்தே செகத்தினிற்சராசரங்கள்
சித்துடன்சித்துமாகிச் சிவசத்தியிருப்பதென்றுஞ்
சித்துடன் சித்தாயுள்ள சிவசத்தி மயஞ்செகத்தே.

சிவஞானதீபத்தில்.

ஈசுரு. பகருயிர்கேவலமருவியிருளிணமும் பரவுபிரகிருதியெனு
ம் பன்பினுகும், தகவுயிருக் குணர்த்துசகலத்துமாயா ச
த்தியருளிருவகையாஞ் சார்புநீங்கி, யிகலருமேலாலவத்தை
யுணரிலாத்மா வேபசிவதத்துவமாமருளிணம, மகமருவு மு
டலெவெறும் பொய்யென்றுவி யறிந்தகலி லருணமங் கடாட்
சமாமே.

ரசுசுரு. ஆமுயிர்தன்னியல்பையுணர்ந்குருலாக்காணைவவதாத்திலுரு
ணைமந்திரோன்தையாவி, யேமவுருவுநனரிலுரு ளறிவாமென்ப
ரொய்துணைதன்னியல்னருளுருவமாகி, ணமமருடனக்கினியகரு
ணையாகு நாடியசிவன் சிவனேநணுகும்போதிம், நேருமிலுரும்
பெயரருட்கானந்தமாகுஞ் சொற்றருவரருட்கருநாமுணிந்து
னோரோ.

இதல்லாமல் ஆத்மாபதிணெலு அவசரப்பெயராய்ச்
சிவனுவனென்றறிக. இனிச் சித்தியாரில்.

ரசுரள. சத்தியுஞ்சிவமுமாய தன்மையிவ்வுலகமெல்லா
மொத்தொவ்வாவாணும்பென்ணு முனர்குணகுணியுமாக
வைத்தனன்வாளாவந்த வாக்கமிவ்வாக்கையெல்லா
மித்தையுமறியுார்பிட லிங்கத்தி னியல்புமோரார்.

ரசுரஅ. அருவினிலுருவந்தோன்றி யங்காங்கபாவமாகி
யுருவினிலுருவமாயே யுதித்திடு முலகமெல்லாம்
பெருகிடுஞ்சுருங்கும்பேதாபேதமோடபேதமாகு
மொருவனேயெல்லாமாகி யல்லவாயுடனுமாவன்.

ரசுரக. உலகினையிறந்துநின்ற தாணுருவென்பதோரா
ருலகவணுருவிற்றோன்றி யொடுங்கிடுமென்றுமோரா
ருலகினுக்குயிருமாகி யுலகமாய்நின்றுமோரா
ருலகினிலொருவனென்ப ருருவினையுனராலெல்லாம்.

ஞானசாரத்தில்.

ரளய. நியறச்சிவமாய்நிற்ற னிலைபற்றுநிகட்சித்தன்மை
மாயமுன்னிலைபுனைக்கி லகிலமுஞ்சிவமாய்த்தோன்ற
லேபின்னிரண்டுந்தோன்று திருத்தலேபடர்க்கையாகு
நேபவானந்தாதீத நிலையதாநிலையாமென்றான்.

திருமந்திரத்தில்.

ரளக. பாசம்பசுவானதாகுமிச்சாலோகம்
பாசம்பரனைனதாகுமிச்சாமீபம்
பாசஞ்சிவமானதாகுமிச்சாரூபம்
பாசங்கனைபதி சாயுச்சியமாமே.

திருவாசகம்.

ரளஉ. பாரொடுவின்னுப்பரத்தலெம்பரனை
பம்றுநான்மற்றிலென்கண்டாய்.

இப்படி வேதாகம சாத்திரங்களிலும், ஆப்த வாக்கியங்களிலும், சக
ஜீவமெல்லாஞ் சிவமயமென்று சொல்லுமென்றறிக. இந்தப் பசுலக்கனத்

திற் சுவானுபோகசமாதி சுலானுபாவ அமாதம புனாதனாகளாறுதி யிட்ட னு பதிதானே, யாத்மாவானதென்றும், பதியினது சுபாவ சத்திதானே அ வசரப் பேராய் மாயையாயிற்றென்றும், பதி, பசு, பாச, மூன்றுஞ் சிவக த்தியேயானதென்று யிந்தமூன்று மீறி மூன்றுக் கொரு முதலாய் ஆத் மாதானே நின்றதென்றும், அனுபவிகளால் சொல்லப்படும். இந்த வாத்மா மும்மலத்தடையினுல் தன்னைமறந்து சென்னமரணப்படுவது பெத்தநிலையா ம். ஈதெல்லாம் நீங்கிக் குருவினுல் சுவானுபோக நிஷ்டைகளால் அனுப வ சமாதியான நிர்விகர்ப்பசமாதி சாதித்துத் தானே தானுய் சிவமயமாகிறது முத்திநிலை யென்றறிக. இனி முன்சொன்ன சுத்த சைவனுக்கும், இவனுக் கும் பேதமெப்படி யென்னிற் சுத்தசைவன் மூன்றுமுதலு மறுதி நித்திய மென்றும், மோட்சத்திலும் ஆத்ம கெவுரவசத்தியும் ஆணவசத்தியுங் கெவுர வங் கெட்டுக் காரணம் நிற்கு மென்றும், பசு, பாசம், சூரியகிரணத்தால் சந்திரன் கிரணங்கெடாம லடங்கியிருண்டற்றுச் சூரியகிரணமேயாஞற்போ லத் தன்னை யிழந்த விடத்திற் சிவவுதயமென்றுஞ் சிவனை யிழந்த விடத் திற் றன்னுதயமென்றுஞ் சொல்லுகையில் இந்த பேதாபேத சைவன் சிவ னுக்கும் ஆத்மாவுக்குஞ் சமவாயமென்றும், பதிக்கும் அருளுக்குஞ் சம்பந்த மென்றும், உலகுக்கும் உயிருக்குஞ் சையுத்த சமவாயமென்றும் அருளே, யோனியாய் நின்று சகத்தை யெல்லா மீன்றதென்றுஞ் சொல்லுகையா ல் பேத் மூண்டென்றறிக. எல்லாச்சைவமும் வேதாந்தத்தில் விரிவாகச் சொல்லும், இப்போது சொன்ன சைவமெல்லாம் சித்தாந்தபட்சமாக ஆகம ங்கள் சொன்னதென்றறிக. இதில் பந்தப்படுவதும், முத்தியும், இந்தப் பசு லட்சணத்தில் தானே வெகு சங்கேபமாய் முடிந்ததென்றறிக.

நவது.—அத்தியாயம்.

வீரசைவம்.

சொரூப லட்சணமாவது.

அனாதிமூலத்துக்கப்பாலுக் கப்பாலாய், மகாமூலத்துக்கு மூலமாய், இ ரண்டாவதொரு பொருளில்லாததாய், மூன் மூல சுவாமி யொருவனே நின் றதென்றறிக. இப்படி ஒருவனுய்த் தனிமுதலாய் நின்ற சுவாமி யிடத்திற் பாரம்பரையாயுண்டான பொருள்கள்தானே யிவருக்கு அவயவங்களான விபர மெப்படியென்னில் தணிந்த நிபந்தமேசிரசு திவ்வியானந்தம், திவ்விய மகானந்தம், திவ்விய ஞானாதீதம், நிராகாரம், நிராகார தீதம், இந்தப் பிர ணவங்கள் புருவத்துவயம். அசலாதீதப் பிரணவமே நெற்றியாம். அசலம் நாசியாகும். நிராலம்பாதீதம் உள்வாச நிஸ்வாசமாம். நிராலம்பமே கன்னங்க ளாகும். நிர்லகூ நிர்லகூஷாதீதமே ஹனுத்துவயங்களாகும். நிர்வயல், நிர்வய லாதீதமே, கபோலமாகும். அமலம், அமலாதீதமே கட்டமீசையாகும். கும லம், குமலாதீதோத்தரமே கோணத்தாடை. அகண்டநாதம், அகண்டவிந்

ன, அகண்டசிற்கலை, தாலோஷ்டமாம. சகசம், சகசானந்தம், சகசானந்தாதீதம், ஆனந்தம். ஆனந்தாதீதம், அனந்தச்சோதி, அனந்தச்சோதியாதீதம், அதிமகானந்தம், அதிமகானந்தாதீதம், அதிமகாநந்தாதீதோத்தரை, மகாவகண்டச்சோதி, மகாவகண்டச்சோதியாதீதம், நிர்மலம், நிர்மலாதீதம். நிர்மலாதீதோத்தரம், சிற்பிரணவம், சிற்பிரணவாதீதம், மகாசிற்பிரணவம், மகாசிற்பிரணவாதீதம், சிதானந்தம், சிதானந்தாதீதம், சிற்கூடம், சிற்கூடாதீதம், சித்துயோமம், சித்துயோமாதீதம், நித்தியம், நித்தியாதீதம், நிரமாயம் நிராமயாதீதம், அனந்தபூதம், அனந்த பூதப்பிரளயம், சர்வசூனியப்பிரளயமிந்த ஈஉ. பிரணவமும் அனந்தகோடிப் பிரகாசமானகாந்திகளோடு கூடின. ஈஉ. தத்தங்களாகும். நிராகுளம், கண்டஸ்தானம், அகோசரம், புசத்துவயங்களாம், பரம், பரமானந்தம், பராபரம், பராபராதீதம், கர்த்துவயமாம் சிவம், சிவச்சோதி, மணி பந்தமாம். சூனியம், சூனியாதீதம், அஸ்தவிரலங்குலிகளாம். பரப்பிரம், மூரஸலமாம். சிவப்பிரமம், பரசிவப்பிரமம், மூலிகளாம். நிருபம், நிருபானந்தம், ககூஷங்களாம். நிருபமாதீதம், மகாநிருபவாமதெட்சணபாரிசமாம். நிர்வாச்சியம், அநிர்வாச்சியம், வென்னலுமாகும். சூட்சுமானந்தம், சூட்சுமானந்தாதீதம், நெட்டெலும்பாம். பஞ்சசவுஞ்ஞையும், கோளகாகாரமும், கெற்பவாசமாகும். அனந்தகோடி, மகாசோதி, நாபிமண்டலமாம். இந்தமூலசுவாமி கெற்பத்திலே யிருக்கிறது. நிரஞ்சனாதீதப் பிரணவம், நிரஞ்சனப்பிரணவம், அவாச்சியப் பிரணவம், சிற்கலாப்பிரணவம், அனாதிப்பிரணவம், ஆதிப் பிரணவம், இந்த ஆறு பிரணவங்களிலும் உற்பத்தியான அனேக பிரணவங்களிலும் இதிலொன்றி லொன்று பேதாபேதங்களான சிருஷ்டிக்கிரமங்களுங் கூடிக் கோடானகோடிபிரணவங்களும், கோடானகோடி பதிபாசங்களும், கோடானகோடி மந்திரபத வன்னபுவன தத்துவகலைகளும், கோடானகோடி வேதாந்த, சித்தாந்த, போதாந்த, நாதாந்த, யோகாந்த, காலாந்தங்களும், இப்படி ஆறந்த ஞானங்களும், ஆறந்தாதீதஞானங்களும், அனேக விராட்புருஷர்களும், அனேகமகாகிரணங்களும், அனேக அனந்த சங்காரம், மகாசங்காரம், சத்தசங்காரம், பூதங்களும், அனேகம் அனாதிசதாசிவன், அனாதி மயேஸ்வரன், அனாதி ருத்திரர்களும், ஆதிசதாசிவன், ஆதி மயேஸ்வரன், ஆதி ருத்திரர்களும், அனேக விஷ்ணுப் பிரமாதிகளும், எண்ணிறந்த சத்திகளும், அனேக வயிரவ வீரபத்திர சண்முக கணாதிகளும், அனேக மாயாவிதங்களும், எண்ணிறந்த நர, சுர, பசு, பட்சி, தாபர, சலதர, சங்கமங்களும். எண்ணிறந்த சந்திரன், சூரியன், நட்சத்திரம், நவக்கிரகாதிகளும், அனேக பிர்மாண்ட, மகாபாண்ட பாண்டங்களும், அனேகவித பஞ்ச பூதங்களும், அனேகலட்சியத்தியானங்களும், அனேக மணிமந்திர அவிழ்தங்களும், அனேக சமையங்களும், இதுகள் முதலானதுஞ் சொல்லாதுகளனந்தகோடி பேதாபேதங்களும் உற்பவ முண்டென்றறிக.

இனி வியோமம், வியோமாதீதம், நடு யிடையாம். திவ்விய கலானந்தப்பிரணவங் கடிஸ்தலமாம். கோதண்டம், கோதண்டாதீதம் பிட்சபாரிச

மாம். அறுதி ஆதி சதாசிவர்கள், இலிங்கஸ்தானமாம், இதிலெண்ணிறந்த சிவராசிகள் சனனத்துக்கு மூலமாம். நிரஞ்சனம், நிரஞ்சனாதீதம், பஞ்சாத்வயங்களாம். அவாச்சியம், சிற்கலாப்பிரணவம், கணைக்காலத்வயங்களாம். நிச்சப்தக்கிரகம், நிச்சப்தக்கிராகாதீதம் கரடுகளாம். அகண்டோங்காரம், மகதோங்காரம், பாதங்களாம். தாரகபிர்மாதிகள், புறங்கால், உள்ளங்கால், பாவிரல்களுமாம். சத்திகள், சாதாக்கியங்கள், அங்குலிகளாம். அனேகஅகராதிகள் முதலானகலைகளும், கால்விரல் நகங்களும், நககாந்திகளுமாம், அனேக பாழுகள் வாக்கின் சத்தங்களாம். அனந்தப் பிரகாசாதீதம் வாக்காம். அனேக சூனியாசூனியம் பரிவட்டமாம், அனேககோடி லிங்கம் பூஷணமாம், அனேக சத்து, சித்து, நித்திய ஆனந்தபரிபூரணம். இதுகள் கிரிடமாம். அனேககோடி சிவப்பிரணவம், சத்திப்பிரணவம், சத்தியாகிரகப்பிரவணம், மாயாப்பிரணவம், மாயாதீதப்பிரணவம், சித்தாகாசம், சிதாகாசம், சுத்தாகாசம், சுயாகாசம், சிவாகாசம், பராகாசம், நாதவிந்துக் கலையாகாசம், பிரணவாகாசம், மகாகாசம், மகதாகாசம், விந்தாகாசம், கவிந்தாகாசம், மகந்தாகாசம், கலாகாசம், சத்தியாகாசம், பிரணவாகாசம், பூதாகாசம், சூட்சுமாகாசம், தூலாகாசம், இதுமுதலான இன்னம் அனேக ஆகாசங்கள், உரோமங்களாம். இப்போது சொன்னதெல்லா மவையவியவையவங்களாய் அங்கம், பிரத்தியாங்கம்,சாங்கம்,உபாங்கங்களாம். இப்படி எண்ணிறந்தெல்லாங்கூடி அகண்டமூலசுவாமி ரூபிகாரமாயிருப்பார். இதெல்லாம், அவரிடத்திற் பாரம்பரையாகத்தோன்றுதற்கு முன்பு ஏகமாயத்தனியாயிருப்பர். இனிநாமரூப கிரியாரகிதமாய் வாக்குமனாதீதமாயிருக்கின்றது. அகண்டமூலசுவாமி சொரூபலட்சண முடிந்தது, இனி தடத்த லட்சணம், இவரிடத்தில் உபக்கிரமம், சிருட்டிவிபரம், இப்படி யிரண்டாவதில்லாமல் ஏகமான மூல சுவாமி நினைவில் உலகச்சிருஷ்டிவேண்டி நினைத்த நினைவுதானே நிரஞ்சனாதீதப் பிரணவமுண்டாயிற்று. இதினினைவிலேநிரஞ்சனப்பிரணவம்,இதினினைவிலே அவாச்சியப் பிரணவம்,இதினினைவிலே சிற்கலாப்பிரணவம், இதினினைவிலே அறுதி பிரணவம், இதினினைவிலே ஆதிப்பிரணவம். இப்படிவிஸ்தரப் பிரணவமுண்டாம். இனி அறுதிப்பிரணவமானது அறுதிஅகார உகார மகார மூன்றுண்டாம். இது மூன்றுங்கூடின விடத்திலிதினினைவிலே ஆதி அகார உகார மகார மூண்டாம். இது மூன்றுங்கிரமமாக நிராளசுவாத்மகன நிராவயாத்மகன் என்று பெயராம். இதுதானே நாதம் விந்துக் கலையாம். இது அகாராதிக்கு ஆதாரம். இந்த நாதவிந்து கலைக்குப் பிரகிர்தியாதாரம். இதற்குப் பிராண ஞதாரம், இதற்கு அகண்டமாசோதி லிங்கமாதாரம், ஆதி அவ்வெனும் பிரணவமனாதமாம், ஆதி வவ்வெனும் நாதவிந்துக்கலையிறங்கி ஆதி மவ்வோடு விந்துங்கூடி அகண்டசோதி கோளகாகாரப் பிரணவமாம். இப்படி ஆறு பிரணவ வுற்பவமென்றறிக. இதிலாதி அகாரத்தில் தாரகதண்டம், நிராள சுவாத்மகன், அகாரமதிதெய்வம், இதிலயமாம், இதில்தசப்பிரணவமுண்டாம். இனி உகாரத்தில் குண்டல மார்த்த சந்திரனுண்டாம், நிரஞ்சனாத்மகன்,தெய்வம், உகாரமிதிலையமாம், இதில் ஏகாதசப்பிரணவமுண்டாம்

இனி மகாரத்தில் தலபணமம, சோதியுமுண்டாம். நிராமயாத்மகன், மகா ர மநிதெய்வம், இதிலயமாம். இதில் துவாதசப்பிரணவமுண்டாம். இனி ஆ தி அகார, உகார, மகார மூன்றுங்கூடி ஓ மென்னுஞ்சோதிரூபமாய் ஓங்கொ ணியாய் நிற்கும், பிரதமம், தாரகம், துவிதியம், தண்டகம், திரிதியம், குண்டலம் சதுர்த்தம், அர்த்தசந்திரன், பஞ்சமம், தற்பணம், ஷஷஷி, சோதி, இதுகோப் பியம். ஓங்காரத்தி லெல்லாமுண்டாம். இனி உகார மாதியான பிரணவ மாவது, உகாரம், மகாரம், அகார மூன்றுங்கூடி அகண்டசோதிபரம், ஓங்கா மர்ம். உகாரத்தில் தாரகதண்டம், சுயம்பு லிங்கந் தெய்வம், உகாரமிதில யமாம். இதில் ஏகாதசப் பிரணவமுண்டாம். இனி மகாரத்தில், குண்டலி, அ ர்த்தசந்திரன், ஓம் பர சிவதத்துவம் அகாரமதிதெய்வமிதிலயமாம். இதில் துவாதசப் பிரணவமுண்டாம். அகாரத்தில் தறபணம், சோதி, குருத்துவஷி ன்மயந்தெய்வம், அகார மிதிலயமாம். இதில்திரயோதசப் பிரணவமுண்டாம் இனி உகாரம், மகாரம், அகாரம், விந்து, நாதம், கலை யொன்றுய் ஓம்பரமே ஸ்பரனும். மூதலாவது, தாரக மூதலாறும் வரிசையாய் நிற்கும். இந்த ஆ றும், விஞ்ஞெயம், உகார மிஷ்டலிங்கம், மகாரம், பிராணலிங்கம், அகாரம், பாவலிங்கம், உகாரத்தில் தாரகதண்டம், அதிதெய்வ மிஷ்டலிங்கம், விந்து லயமாம். இதில் அஷ்டாதசப் பிரணவமுண்டாம். மகாரத்தில் குண்டலி அர்த்தசந்திரன், இதற்குப்பிராணலிங்கந் தெய்வம் கலையிலயமாம். இதில் நவதசப் பிரணவமுண்டாம். அகாரத்தில், தற்பணம், சோதி ரூபமாம், பா வலிங்கந் தெய்வம், நாதத்திலயமாம். இது விருபது பிரணவமுண்டாம். இந்த நாதவிந்துக்கலை, யொன்றுய் சோதி யகண்டோங்காரமாம். இனிமகாரமாதி யான பிரணவ வுற்பவ பேதம் இனி மகார அகார உகாரம் இந்த மூன்றுங் கூடியகண்ட மகதோங்காரமாம். மகாரங் கலை, அகாரம் நாதம், உகாரம் விந் து, மகாரஞ் சர்வாத்மன், அகாரம் பரமாத்மன், ஓகாரம் சிவாத்மன், மகாரத் துக்கு ஆகாரங் கலை, அகாரத்துக்கு ஆகாரம் நாதம், உகாரத்துக்கு ஆதாரம் விந்து, இந்த மூன்றுக்கும் பிரகிர்தி யாதாரம், இதறகுப் பிராணாதாரம், பி ராணனுக்ககண்டமாசோதி லிங்கம், ஆதிமவ்வெனிற்கலை, ஆதி உவ்வெனில் விந்து, ஆதி அவ்வெனில் நாதம், இந்த மூன்றுமொன்று யகண்டமகதோங் காரப்பிரணவமாம், மகாரத்தில் தாரகதண்டம், உகாரத்தில் தற்பணஞ்சோ தி, சீவாத்மகன் உகாரந்தெய்வம், இதிலயமாம், சுத்தசப் பிரணவமுண்டா ம், மகார அகார உகார மூன்றுங்கூடிச் சோதி ரூடமாம், தாரகமுதல் வரிசை யாக ஆறுமாம், இந்த ஆறும் விஞ்ஞெயம். ஓங்காரத்தில் சாவித்திரி, காயத் திரி, வேதசுர மெல்லாமுண்டாம், இதில் மூன்சொன்னதெல்லாந் தொகை யாகச்சொல்லுவது நிரஞ்சனுதி, ஆறு பிரணவமுண்டாம், இதில் நாதாதி கூ டினது அகண்டச்சோதி, கோளகாகாரப்பிரணவம், ஆதி அகாராதி கூடின தது சோதி, சோதிரூபோங்காரப்பிரணவமாதி, உகாராதி மூன்றுங்கூடினது அகண்டச்சோதி, பரம், ஓங்காரம், இனி ஆதி மகாராதி மூன்றுங் கூடினது அகண்டமக தோங்காரப்பிரணவமாம், ஆதி விந்து நாதகலை மூன்றுங் கூடி னது ஓம் பர மேஸ்வர வோங்காரமாம், இனி மூன்சொன்ன உகாரமிபி

ஆண்டான திரிவித லிங்கம், லயமான நாதவிந்துக்கலே யொன்றுய்ந் தோதிய கண்டோங்காரமாம், அப்படி ஆதிப்பிரணவபேதங்களானதென்றறிக.

இப்பால் அகண்டசோதி லிங்கோற்பவம், இனிமுன்சொன்ன ஆதி நாதாதி கூடின அகண்ட சோதி கோளகாகாரப்பிரணவத்திற் சோதிச்சொரூபில் மகாரம், குண்டத்திலகாரம், தாரகத்தில் உகாரம், இந்த அகாரமே சிவம், உகாரமே சத்தி, மகாரமேபரம், அகாரம் நாதம், உகாரம் விந்து, மகாரங்கலே யிந்த ஆறும், நிஷ்களம். இது பர, சிவ, சத்தி, சங்கற்பத்தாலே நாதவிந்து கலை சையோகமா யாகண்டசோதி, லிங்கமாய்க் கர சரணங்களின்றி யுற்பவமாம். இது அகண்டசோதி கோளகாகார சவுந்தரயாயிருக்கும், இனி அவ்வியத்த லிங்கோற்பவம், முன் சதுஸ்ரை லிங்கத்தில் அவ்வியத்தலிங் கமுண்டாம். அதெப்படி முன்சொன்ன இலிங்கத்தில் அகார உகார மகார சையோக மத்தியத்தில் தோன்றும். அவ்வியத்தலிங்கஞ் சோதி சொரூபமாய் விந்து பீடம் சின்னதலைலிங்கமாகச் சிருஷ்டிக்குக்காரணமாய் சித்து மாயோமலிங்கமாய் சிற்பூமி பீடமாயிருக்கும். இதில் சதாசிவாதிகள் முத லே மூவகைத்தோற்றமுமிதிலே யெல்லாம் லயமுமாமென்றறிக. இந்த லிங்கஞ் சும்பு பீடஞ் சத்தி சிவசத்தி யோகத்தாலே யுற்பவமா மிதுதானே ஆதியோங்காரபீடம். இனி அகாரம்கண்டம், உகாரம் கோமுகம், மகாரம் வட்டம், சின்னதம் விந்து, நாதம் லிங்கம், இப்படி லிங்காகாரமாயொளிரும், இந்த லிங்கம் ஆதி மத்தியாந்த மின்றி அவ்வியத்தகோசரமாய் நிர்நாம நிற்குணமாய் நித்திய நிரஞ்சன நிராள மின்றி நின்றது, லிங்கமாம். இனி அனாதி சதாசிவன், ஈஸ்வரன், மயேஸ்வரன், உற்பவம், முன் லிங்கத்திலே அனாதி சதாசிவருண்டாமிவனையிருக்குவேதத்திற்சொல்வது எ; ஓ என்று மிசால்லுமிவனை யின்னம் வெகுவாக வேதங்கள் சொல்லுமினி யிவரிடத்தில ஆதியீஸ்வரருண்டாம், இவனை வேதஞ்சொல்வது. அ. ஓ என்று சொல்லும். இவனையும் வேதாமங்கள் வெகுவாய்ச்சொல்லும். இவரிடத்திலே அனாதி மஹேஸ்வரருண்டாம், இவனை வேதஞ்சொல்வது. புருஷசூக்தம் சொல்லும் ஒருபுருஷனை யென்பது மயேசனை யென்றறிக. மகாயீஸ்வரனென்பது மஹேஸ்வரனை யென்றறிக. இனி யிவரிடத்தில். ஐரு. முகமும், ஐரு. பாதமும், ஐரு. அஸ்தமும் இப்படி ஆதிசதாசிவருண்டாம், இவரிடத்தில், கூ. முகமும் ஐஉ. தோளும், கூ. பாதமுமுடைய ஆதி யீஸ்வரனுண்டாம் இவனை வேதஞ் சொல்வது, ஆகமாங்கம்பபீபதிரிதிஃ என்றிதுமுதலனேகவேதஞ்சொல்லும். இனி யிவரிடத்தில், உரு. முகமும், ஐரு கையும், ஐரு. பாதமு முள்ள ஆதி மஹேஸ்வரனுண்டாம். இவனைச் சர்வதேவதைகளாலுங் காணக்கிடையாத வராய் வேதாகமங்களாலே மகாதேதாத்திரரா யிவர்மகிமைசொல்லப்போகாத வனென்றறிக. இனி யிவரிடத்தில், நு. முகமும், ஐ, கையும், உ. பாதமுமுடைய சதாசிவ தேவருண்டாம். இனி யிவரிடத்திலுண்டான விதம் இவரிடநிற் பாவ முகத்திலே ஆத்மாவும், ஈசானாதி, நு. முகமும், இதில் நு. பூதமும், மனதில் சந்திரனுஞ் சட்சுவிற்சூரியனும் இந்த எட்டுங்கூடி அவ்விடமூர்த்திக

ஓவாய் பிண்டப்பிரமாண்ட ரூபமாயிருப்பர். இந்த அஷ்டமூர்த்தியைவேத ஞ்சொல்வது. க, [illegible] என்று சொல்லும் இவரைவேதங்கள் வெகுவா ய்ச்சொல்லு மென்றறிக. இவரி லீஸ்வரனுண்டாம். இவர் உரு. அவதாரமெ டுத்து எல்லாரையும் இரட்சித்துத் தியானபாவனை பூசாயோக்கியராய்த் த மக்குக் கீழ் மூவருக்கும் அனுக்கிரக கர்த்தாவாய் ருத்திரன், விஷ்ணு, பிரமா தேவர்கள் முதலான செகத்துக்களை உண்டுபண்ணியுமவரவர் கேட்டவர ங்கள் கொடுத்தும் பஞ்ச கிருத்தியமும் பண்ணு நிற்பனென்றறிக. இவரில் ருத்திரருண்டாம். இந்த ருத்திரன், காலாக்கினி ருத்திரன், பிரளயகாலருத் திரன், சங்காரகால ருத்திரனென்றும் இவரைமூவரிலொருவனென்றும், கா லாக்கினி ருத்திரம், ஸ்ரீருத்திர முதலான வேதாகமங்கள் சுருதி, ஸ்மிருதி புராணமுதலான நூல்களெல்லாஞ் சொல்லுமென்றறிக. இவரில் விஷ்ணு, இவரில்பிரமாவுண்டாம், இவர்களையும் வேதாகமபுராணங்கள் சொல்லுமெ ன்றறிக,இனி ரு. முகச்சதாசிவன்முதல் ஐவரும் ஐந்து பூதத்துக்கும் அதி தேவதையாயிருப்பர். முன்சொன்ன சதாசிவர் நிற்பாவமுகத்திலே விஸ்வா திகோருத்திரனுண்டானார்.இவனாவேதஞ்சொல்வது ஓம் விஸ்வாதிகோரிதோ மரேஷிபி இவனைநிற்பித்து இவனைத்தம்முகத்திலுண்டான்பஞ்சபூதங்களை உபாதானமாக்கிக்கொண்டு பஞ்சபூதப் பிரமாண்டங்களைச்சிருஷ்டிக்கச்சொ ல்லிக்கட்டளையிட்டார். இப்பால் விஸ்வாதி கோருத்திரன் சிருஷ்டிவிதங்க ளெப்படி என்னில், சசசக்கரங்களுற்பவம்,முன்பிரமமான அகண்டசோதி கோளகாகாரப் பிரணவத்தில் அணுசக்கரமுண்டாம். இதில் பச்சிமம்,இதில் சிகரசக்கம், இதில்பிரமசக்கரம், ஆக. சு. மற்றது,ஆஞ்ஞாசக்கரமுதலொன்றி லொன்றுக ஆறு சக்கரமுண்டாம் ஆ ஊ. இதுதானே இன்னமொருவிதசி ருஷ்டியாம், அகண்டசோதியில் பச்சிமதிக்கி லணுசக்கரம், உத்தரதிக்கிற் பச்சிமம், பூர்வதிக்கில்சிகரசக்கரம், தெட்சண திக்கிற பிரமசக்கரம்,இப்படி காலுதிக்கிலும் காலுசக்காரமுண்டாம். இனி இருதயங்கோதண்ட சக்கரஞ், சோதி ஆதிறுதி முதலாறினும், ஆஞ்ஞை முதலாறு முண்டாம், இப்படிப் பதினெருசக்காரமுண்டாம், இதல்லாமற் பின்னுமொருவிதம். ஆஞ்ஞைமே ல்நிஷாதம், இதின்மேல் சுறுஷத மிதில் பிரம்மந்திரம், இதில்சிகை இதில்பச் சிமம் இதிலணு ஆ சு. இனிமூலாதாரமுதல் ஆஞ்ஞையந்தம்ஆதாரம் சு.ஆ சக்கரம், ஊ. இதின்மேல் நிஷ்களம், இதின்மேல் நிராளம். இதின்மேல் சாரளம், இதின்மேல் கலா, இதின்மேல் விந்து, இதின்மேல் நாதம், இதின் மேல் நாகுரு, இதின்மேல் சரம், இதின்மேல் பரம், ஆ சு. இதின் கூடச்ச க்கரம், உ. இதுமூலாதார முதலாக ஒன்றுமேலொன்றுக விருக்கிறசக் கரம்,உ-லும். முன்சொன்னவரிசையாக இதழுகள். சு-சூ-ஐ-ஔ-ஐசு-உசூ-ர-ஞ-ங்க-ந்த. லட்சம். கோடி. அற்புதம். கறுவம். மகாகறுவம். பதுமம் கூஷ்மாணி,கூஷ்மி. அகூஷயம். இப்படி உ. சக்காரத்திலும், இதழுகள் நிற்கு மென்றறி.

இனி அகூஷரங்களும் இதழுகளெத்தனையெத்தனையுண்டோஅத்தனை யி

லும், அத்தனை அக்ஷர நிற்குமென்றறிக. இனி உக. சக்கரத்திலு நிற்கிறது, ஒவ்வொன்றில் பூதம், கோணம், வர்னம், இதழ், இதழினிறம், முகம், லிங்கம், கலை, சாதாக்கியம், நிக்கு, நாதம், காகினி, சத்தியாதி, கிரியாசத்தியாதி, வேதங்கள், அஸ்தங்கள், பத்தன், பூசாரி, சவுஞ்ஞை, ஆத்மன், பிரமநாதாதிகள், பிரண்வங்கள், குதமுதல்ஸ்தானங்கள், சத்தாதிமுதற் றிரவியங்கள், பத்தாதி அங்கங்கள், பிரமங்கள், பதிஞ்ஞரு மந்திரங்கள், பதங்கள், வன்னங்கள், புவனங்கள், தத்துவங்கள், கலைகள், பரிணமங்கள், பூதாட்சரங்கள் ஆகுங. இதுமுதலாக ஒவ்வொரு ஆதாரத்திலின்னமனேக முண்டென்றறிக. இந்தச்சக்கரங்களில் இதழ், அக்ஷரம், பூத முதலிலுஞ் சிலச்சக்கரங்களுக்கில்லாமலிருக்கிறது முண்டென்றறிக. இனி நிராள தசசக்கரமாவது, சிவப்பிரிதிவி, சிவவப்பு, சிவவக்கினி, சிவவாயு, சிவவாகாசம், சிவவிருதையம், ஆதம். சு. இதிற் சிவப்பிரிதிவியின் மேலாய் நிராளமூலாதாரமாம். இதில் இதழ் நசஅ. அக்ஷரம். நசஅ. நிராளசத்திகன்ஞதம், நிராளப்பிரம மதி தெய்வம், பீசாசக்கரம், அஞதி அகரம். இனிச் சிவவப்புவின்மேல் நிராளசுவாதிஷ்டானம், இதழ், சஙஅ. அட்சரம், சஙஅ. இது வர்னரூபில்லை நிராளயீஸ்வரி நித்யானந்தப் பிரமமதிதெய்வம், பிரணவநாதம், பீசாட்சரம், அஞதி உகாரம், இனிச் சிவாக்கினிமேல் நிராள மணிபூரகம். இதில் பத்மம், ஙசுஅ அக்ஷரம். ஙசுஅ. வர்னமில்லை. நிராள சிவசத்தி நிரஞ்சனப்பிரமமதி தெய்வம் பிரமநாதம், பீசாக்ஷரம், அஞதிமகாரம், இனிச்சிவ வாயுவின்மேல் நிராள அனாகதம் இதிற் பத்மம், உஉஅ. அக்ஷரம், உஉஅ. நிராளமாசத்தி, ஆனந்தப்பிரமமதிதெய்வம் சுநாதம், ஆதிப்பிரணவநாதம் பீசம் வர்னரூபில்லை, இனிச் சிவாகாசத்தின்மேல் நிராளவிசுத்தி யிதழ். ஈசஅ. அக்ஷரம். ஈசஅ, வர்னரூபில்லை, நிராளமணிமணிசத்திமகாநாதம், சகலாதித்தப்பிரமபீசாட்சரம், ஆதிவிந்துப்பிரணவமினிச்சிவயிருதயத்தின்மேல் நிராளஆஞ்ஞை அனேக யிதழ், அனேக அக்ஷரம், நிராளப்பிரணவசத்தி விமலானந்த நாதம், நிராள தீதகனலிங்கப்பிரமம் தெய்வம், பீசங்கலாப்பிரணவம். ஆ சக்கரம். சு. இதின்மேல் நிர்வாண லிங்கசக்கரம், இதின்மேல், நிர்வாண மகாலிங்கசக்காம், இதன்மேல் மகாலிங்கச்சக்கரம், நிர்வாண மகாமகாலிங்கசக்கரம், ஆ ச. இதுகள் வர்னரூபில்லை, ஆ சக்கரம், ஐ. இனி நிரஞ்சனாதீத சக்கரம், இதற்குப்பரதத்துவப் பிரிதிவி, பரதத்துவ வப்பு, பரதத்துவ அக்கினி, பரதத்துவ வாயு, பரதத்துவ வாகாசம், பரதத்துவயிருதயம், ஆ சு. இந்த ஆறுபூதத்திலும் ஆறுதாரமும் அதற்கேற்றதுகளும் ரூபங்களாயிருக்கும், இதின்மேல், சூனியமாய் கனசுயானந்தசக்கரம், கதிசுயானந்தசக்கரம், உயர்சுயானந்தசக்கரம், அருஞ்சுயானந்தசக்கரம், ஆ ச. ஆ ஐ. இதல்லாமல் முன்சொன்ன நிரஞ்சனாதீதப் பிரணவ முதலாறில், நிரஞ்சனம், ஐ. அவாச்சியத்துக்கு, ஐ. சிற்கலைக்கு. ஐ. அஞதிக்கு, ஐ. ஆதிக்கு. ஐ. ஆ ஙஅ முன். உஐ. ஆ எஐ. அகண்டமூலசுவாதிஷ்டானாமயசக்கரம். ஐ. ஆ அஐ, முன்சொன்னது. உகஆ ஆக. இதுகளே விரிக்கில் விரிவாமென்று தொகையாய்ச் சொன்னதென்றறிக.

இனி அஷ்டகள சக்கரபேதமாவது, காது, உ. கண், உ. மூக்கு, உ.

தத்துவநிஜாநுபோகசாரம்

காக்கு, க. அவலோகநம், க. ஆகதுவாரம். அ. இதை முககமல அஷ்டதள மென்றுசொல்லுவார். இந்த அஷ்டதள கமலத்தைத் தீண்டித் தீண்டாமற் சதுர்த்தளமிருக்கும், இதில் சிவாம்ஸ பரமாம்ஸ அக்ஷரம் நாலுமிருக்கும், இதில் மத்திமத்தில் காணிகாவாசமாய் அனந்தகோடி சந்திர சூரியர் அக்கினிப்பிரகாசமாய்ப் பிரபையாய் சுயம்பு லிங்கமாயிருக்கும், இதைச் சூழ முன்சொன்ன அஷ்டதள சவுக்க மத்தியமாம், இது நிராகார நிர்வயவமாகி யுதித்த பத்மம், ஐ. இதிலெட்டிதழ் அதோமுகமாயிருக்கும், நாலிதழ் ஊர்த்தமுகமாயிருக்கும், இது அஷ்டதள காணிகையென்றுஞ் சவுக்க மத்திய காணிகை யென்றும், எட்டிதழில் பரமாத்மன், நாலிதழில் சிவாத்துமன், இரண்டுங்கூடி யோக சமாதியாயிருக்கில் இவனே சிவயோகியாம். யோகச்சக்கரமாக யோகம்பண்ணில் அஷ்டமாசித்தி அஷ்டஐஸ்வரியமுண்டாமென்றறிக இனி அகாரமே அஷ்டதளம், இதின்மேல் உகாரமே சவுக்கமத்தியம், மகாரம், சோதிரூபானலிங்கம், இது விகாரமின்றியிருக்கும், இதல்லாமல் நிராமய அஷ்டதளமென்றுஞ் சவுக்கமத்தியமென்றும் இன்னம் நிரஞ்சன அஷ்டதள மூஞ் சவுக்கமத்தியமுமென்றும், இதுமுதலாகப்பத்துவித அஷ்டதள சவுக்கமத்தியசக்காரமுண்டென்றறிக. இது யிதழ் அக்ஷரமதிதெய்வம், முன்சொன்னதுபோல் அதோமுக ஊர்த்தமுகமென்றறிக, இது தொகைமாத்திரஞ் சொன்னது இனி பத்மமுதல் சில தத்துவங்களுற்பவக்கிரமம். இதில் பத்ம உற்பத்தி நிராதாரப் பிரம நினைவில் பிரமமுண்டா மிதுதானே பத்மசொரூபமுகங்களாம், இனிப்பராபர தத்துவத்திலுண்டான சோதிமுத லாகிறுதியிலும் ஓம் யவாஷிமந என்று ஆறட்சரமுமுற்பத்தியாம், இனிப்பிரணவத்தில் சிவாம்ஸபரமாம்ஸ ஆகாரத்தில், அகர, முதல், ஙகாரத்தில், ககர, முதல் ஙஉ, சிகாரத்தில், டகர, முதல், ஙமகாரத்தில், பகர, முதல், சு, நகாரத்தில், வகர முதல், ச. ஆ அக்ஷரம். ருஉ. இதில் சிவபரஅம்ஸமாவது, ஹம், ஸம், ஸம், க்ஷம், என்று சு. மாம். இனி அஷ்டநாதமுற்பவம். நிஸஸ்பதபிரம நினைவிலே ஒன்றிலொன்று அஷ்டநாதமுண்டாம், இனி ஆதி உகாராதி கூடின அகண்டசோதி பரம ஓங்காரத்தில்சோதிமுதலாருகிருதியிலும் ஆகாசாதி பூதமுண்டாம், இந்தப் பிரணவத்தில் தானேபதம். கச. உண்டாம். இந்தப் பிரணவத்தில் தானே தார்கசுண்டலசோதி மூன்றில் அகாராதி மூன்று மூண்டாம். இந்த மூன்றுங்கூடி ஓங்காரப் பிரணவமாம், இனி ஆதிவிந்து வாதிகூடின பரமவோங்காரத்திலுண்டான சோதி முதலாறிலும், மனங்கூட இந்திரியமாறுமுண்டாம். இனிச் சிற்சத்தி மூதலொன்றிலொன்றுக ஆறு சத்திகளுண்டாம். இந்தசத்திகளில் ஆறு மூர்த்திகளுற்பவம். இனி அகண்டசோதி கோளகாகாரப் பிரணவத்திலுண்டான தாரகாகிருதிமுதலாறிலும் இருதயாதி யாறுமந்திரமுண்டாம். ஈசானாதி முகத்தில் ஈசானாதி மந்திரமுண்டாம். ஆ மந்திரம். ஙக. இனி முன்சொன்ன பிரணவத்தில் சோதிமுதலாறிலும், மகாலிங்க முதலாறுண்டாம். பின்னுமொருவகை மகாலிங்க மூதலொன்றி லொன்றுண்டாம். இந்த லிங்கங்களில் சாந்தியாதீதாத்தரா

முதலாறு கலையுண்டாம். இதிலாறு சாதாக்கியமுண்டாம். மூன் சோதி ஆறில் பாவ வஸ்த முதலாறு அஸ்தமுண்டாம். பின்னு மொருவிதம். பிர மத்திலொன்றி லொன்றுக வஸ்தங்களாம். இனி நிரஞ்சன அஸ்தமினைவில் பின்ன சத்தி, இதில் நிற்பிராந்த சத்தி,யிதில் நிர்மாய சத்தி, யிதில் ஆகினி யசத்தி, யிதில்தாகினிய சத்தி, யிதில் டாகினியசத்தி யிதில் வாகினியசத்தி யில் ராகினிய சத்தி,யிதில் காகினியசத்தி ஆ சத்தி கூ. இனிச் சோதியாதியி ல் நவதேவதைகளும் உற்பவம். ஆத்மன். சதாசிவன். ஈஸ்வரன். உருத்தி ரன். விஷ்ணு. பிரமா. ஆ சூ. இனிஅந்தராத்மன். பரமாத்மன் .சர்வாத்மக ன். லிங்கம். ஆ ஊ. ஆ கூ. வேதம். ச. காயத்திரி, க. அசபை, க. ஆ சூ. இனிச்சௌஞ்ஞை யுற்பவம். அஞ்தி சௌஞ்ஞை, லிங்க கெஞ்சும, சரீ ரசவுஞ்ஞை, கூடசவுஞ்ஞை பரசவுஞ்ஞை, நிராகுள சவுஞ்ஞை,ஆ சூ.இதி லயிக்கஞ்தி,ஆறுபத்தருண்டாம்.இனிஆதிமகாராதிசூடினமகதோங்காரத்தில் உஉச.புவனமுண்டாம். அந்த ஓங்காரத்திலுண்டானதாரகாதியில் ஆறு பிரம் மூண்டாம். அதேது பரப்பிரமம், விஞ்ஞானப்பிரமம்,மகாஹானந்தப்பிரமம் கலாப்பிரமம், பிண்டப்பிரமம், மூர்த்திப்பிரமம், ஆகப்பிரமம் சூ. இன்ன மொருவித நிருஷ்டி ஓம் பிரதமத்தில் அஞ்தி சற்சித்தமானநாமரூபக்நியை களில்லாத நித்திய நிராள நிர்வயனன அஞ்தி பத்தனிலே வாஸ்தயம், வாஸ்த யத்தில் சங்கமம், சங்கமத்தில் மகுடம், மகுடத்தில் சூனியம், சூனியத்தில், சிதம்பரம், சிதம்பரத்தில் சிவசத்தி, சிவசத்தியில் சதாசிவமூர்த்தி யிந்தச்சி ருஷ்டிக்கு அர்த்தமெப்படியென்னில், நிரஞ்சனதீதப்பிரமத்தில் சமரசபக்தி கரித்திருக்கிற படியால், அஞ்தி பத்த பத்தனுயிறறு. நிரஞ்சனதீதப்பிரம த்தில் பரவசமான நினைவுதானே யிர்தயா யிர்தயமாயிறறு. சத்தார்த்தம் பேதமில்லாதுபோல் மூன்சொன்ன நிரஞ்சனு தீதப்பிரமத்தில் அன்னியபி ல்லாதிருந்த சத்து விவேக வறிவுதானே, சங்கமமாயிறறு. சூரியனெங்கும் பிரகாசமானுற்போல நிரஞ்சனுதீதத்தில் சமரசமாயிருந்தது. அண்டபிண் ட மெல்லாம் பூரணமான மூலஞானந்தானே மகுடமாயிறறு. அப்படிச் சொன்ன பத்தாதி சொரூபந் தானேயாய்த்தோன்றுகிற நிரஞ்சனுதீதப் பி ரமந்தானே சங்கமம், அதின் மகுடநுனியில் திர்தியடங்கின அக்கினிபோ லிருக்கிறபிரகாசம் வசந்தமாருதம்போல் சத்த மடங்கினதோஷமும், அது விரண்டுங்கூடி, அகார, உகார, மென்கிற வன்னதத்துவ யாத்மகனைதார கருண்டலிசோதியாகிருதியால் பொருந்துகிறஓங்காரசொரூபமெய்திநின்றுச மஸ்த தத்துவங்களையுமுண்டாக்கி அதற்கு இலயஸ்தான மாகையால் மகுட சூன்னியப்பிரசாதமென்கிறதற்கு அர்த்தமாயிற்று. அந்தச்சூன்னியலிங்க மென்கிற பரசிவ தத்துவமெப்படியிருக்குமென்னில். நித்திரைபண்ணுகிற பாம்புபோல் சுயானந்தத்துள்ளே பரவசமுகி உப்பரிகையின்மேல் வார்த்த எண்ணெயில் சூரியகிரணம்பிரதிவிம்பத்தால்அந்தக்கிரணங்க ளெப்படிச் சூட்சமாய்க்காணுமோ அதுபோல் அதிசூட்சும தசமயமாயிருக்கும். இது சூனியலிங்கஸ்தலம். அந்தச்சூனிய லிங்கமே அகண்டாத்துவய நித்திய நி ர்வயபரிபூரண சச்சிதானந்தசொரூபமான நிஷ்களப் பிரமமாயிறறு. அது

நிஷ்கள லிங்கஸ்தலமாயிறறு. இப்படிப் பஞ்ச சவுஞ்ஞ யாயிருக்கிற நிஷ்கள லிங்கத்தினுடைய லீலாஸ்மரணையில் அந்தற்கதமான அஷ்டஐஸ் வரியத்துக்குப் பூஷண சுயம்பிரகாசமென்கிறது. பஞ்சதமாகி நாம நிர் ணமத்துக்கு வாராத மூல சித்தென்கிற நாமத்தைத்தரித்தத்துக்கும் அந்த நிஷ்களம் பிரமத்துக்கு மாதாரமாகையால் சூனிய ஜாதம் சிதம்பர அர்த்த மாயிறறு, அந்த நிஷ்களப்பிரமத்துக்குப் பிரதம நினைவான்படியால் மூல சித்தென்றுயிறறு. இனி தற்பணசையோகத்தால் கெற்பகிரகப் பிரவேச மான சூரியப் பிற்பாதி தீக்ஷணம்போல அந்தமூலசித்தி னிடத்தில் பிரதிவி ம்பிக்கப்பட்ட சிற்பிரகாசமே சிற்பிந்து. ஆகாசம் வாயுவினுல் பிறந்த சத் தத்தைப்போல் அந்தச் சத்துச்சித்துகளிலிருந்து நிஸ்வதமான சிவாதாரகோ வமே சின்னுதம். புட்பத்திறபிரந்த வாசனைபோல் அந்தப் பிரமத்தினுல் பங்கிக்குகமான நிசானந்தமே சிற்கலே. இந்தத்திரிவிதமும் அபரஞ்சிற்பிரகா சம்போல் மூர்த்திகொண்டு அக்ஷரத்ரய ரூபமான ஓங்காரசொரூபமாயிற்று அந்த ஓங்காரமே விந்துமயமானசத்தி, அந்தமகாநாதமே அவாச்சியப் பிர ணவரூபமான சிவமயமாகையால் சிதம்பரஞ் சிவசத்தியுற்பவமென்று அர் த்தமாம். இனிப் பஞ்சசலட்சண பஞ்சநாத முதலாகிச் சருவாதிமூல ஸ்தம் பமாய் விளங்குகிற சிவதத்துவத்தில் பஞ்சகலாப் பரியாயமான பஞ்சசத்தி யுண்டாயிறறு. அந்தப் பஞ்ச கலாசத்திகளுடைய ஒவ்வொன்றில் பத்தி லொன்றில் பஞ்சசாதாக்கிய முண்டாயந்தச் சாதாக்கியங்களின் பிரகாசங் களே யவையவங்களாய்த் தோன்றின மூர்த்திசதாசிவனுதச் சிவசத்தி சதாசிவன் உற்பவமாயிற்று. இது பஞ்சமூர்த்தி லிங்கஸ்தலம். இனிப் ப ஞ்சசத்தி ரூபமானது, பராசத்தி, விந்து, ரூபம், ஆதிசத்தி, நாதரூபம், இச் சாசத்தி. சிவன் சத்தி ரூபு, ஞானசத்தி சத்தரூபம், கிரியாசத்தி சிவன்வா க்குரூபம். இனிச்சாதாக்கிய லக்ஷணமாவது, சமஸ்தநோஷரகிதமாகச் சுத் த தத்துவமாகையால் அறிவே வடிவு சிவசாதாக்கியமாயிறறு. ஒரு மூர்த் தியில்லாமல் சோதிப்பிரகாசமாகையால் அமூர்த்திசாதாக்கியம், இச்சாசத் தி, குணத்துவமாய் அக்கினி ஸ்தம்பாகாரமாய் சிரசுமுண்டாகையால் மூர்த் திசாதாக்கியம், செகத்துதைய முண்டாக நாலுமுக முண்டாகையால் கர்த் தருசாதாக்கியம், கிரியாசத்தியோகத்தால் ஐந்து முகமுடைய கன்மசாதாக் கியம். இந்தச் சாதாக்கியங்கள் கிரமத்தில் சதாசிவ, ஈச, பிரமேச, ஈஸவர, ஈசானிய ரென்கிற நாமமாயிறறு. இவிங்கமூர்த்தி சிருஷ்டிமுடிந்தது.

பின்னுமொருவிதம் நிஸ்சுன லிங்கஸ்தலம், சூனிய லிங்கஸ்தலம், நிஷ் கள லிங்கஸ்தலம், மகாலிங்கஸ்தலம், பஞ்சமூர்த்தி லிங்கஸ்தலம். என்று ரு. விதமாகச்சொல்லும். இனி அங்கஸ்தலம், லிங்கஸ்தலம், சிருட்டிவிபர ம், என்றது, சச்சிதானந்தப் பிரமந்தானே தன்னுடைய சுச த்திக்ஷோபமாத்திரத்தால் ஸ்தலமிரண்டு விதமாயிறறு. ஒன்று லிங்கஸ்த லமென்றும், ஒன்று அங்கஸ்தலமென்றுமாம், இலிங்கம், அங்கம், உபாதியினு ல் பின்னமாயிறறு. அதெப்படிப் பின்னமானதென்னில், ஒரு ஆகாசங் கடாகாசமானுறபோலென்றறிக. பிரமந்தானே தன்னுடைய லீலாவிலாச

த்தால் உபாசிய உபாசகருகித் தன்னைத்தானே பூசிக்கவேண்டிப் பூசிப்பா னும் பூசைகொள்வானுமாகவேண்டி ஆகாசமானது. கடாகாச மகாகாசமா றுபோல் தன்னுடையசமவாயசத்தியின்பேதத்தால்சிவமென்றும், ஆத்மா வென்று மிரண்டு பிரகாரமாயிற்று. இதில் சிவம் இலிங்கஸ்தலமும், ஆத் மா அங்கஸ்தலமாயிற்று. இனிச்சத்தியானது. சத்தியென்றும், பத்தியென் று மிரண்டுவிதமாம். இதில் சத்தி லிங்கஸ்தலத்தோடு கூடி ஆறுசத்தி, ஆறுகலை, ஆறுசாதாக்கியம், ஆறுலிங்கம், இதுமுதலான வெகுவிதரூபமூர் த்திகளுடனே அனந்தரூபமாயிற்று, இனிப்பத்தியானது, அங்கஸ்தலத்தோ டுகூடி ஆறுபத்தி, ஆறஸ்தம், ஆறர்ப்பணம், ஆறவதானம், இது முதலான அனேக பக்திகிரியைகளாக அனந்தரூபமாயிற்று. இனி அங்க ஸ்தலமான ஆத்மாவுக்கு பக்தியானது அந்தரங்கமாய்த் தான் பிரமமாய் நி றறல் இடமாகச் செய்வது. இனிச் சத்தியானது ஆத்மாவுக்கு அந்தரங்க மாய் மந்திரதந்திரங்களாய் அனேகங் கோடி தத்துவங்களாய் அனேக த னுகரண புவன போகங்களாய் பாயரங்கமாய்க் கிரியைகளைச் செய்வித்து மலபாகம் வருத்துவிக்கும், அங்கத்தி லயமானவாத்மா லிங்கத்தி லெத்தனை யாயிறமே அத்தனைபத்தனைப் பூசைசெய்வன். இலிங்கஸ்தலம், அனந் தரூபமாய் பூசைகொள்ளும். இதிலிரண்டுவிதமும், பிரமந்தானே ஆயிறறென் றறிக. பத்தி, சத்தி, இரண்டுவிதமுஞ் சத்திதானே ஆயிறறென்றறிக இனி ஷடாங்கவுறபத்தி. இது சர்வாங்கலிங்க சாகியத்துக்கு மங்கமாம். மூன்சொன்ன பிரமமாறில், ஷடாங்கவுறபவவிபரம். இனி பரப்பிரமத்தில் பரசிவன், கூஷகுன், கார்த்தன், பாவன், சைதன்னியன், மகதாகாயம். ஆக. சு. இனி விஞ்ஞானப்பிரமத்தில் சதாசிவன் ஆகாசம், சத்தம், ஞான ம், சோத்திரம், வாக்கு. ஆக. சு. இனிப்பிரமானந்தப்பிரமத்தில் ஈஸ்வான், வாயு, பரிசம், மனம், தொக்கு, பாணி. ஆக. சு. இனி கலாப்பிரமத்தில், உரு த்திரன், அக்கினி, ஓங்காரம், ரூபு, நேத்திரம், பாதம், ஆக. சு. இனிப் பிண் டப்பிரமத்தில் அரி, அப்பு, இரஸம், புத்தி, சிங்குவை, குய்யம். ஆக. சு. இனி மூர்த்திபிரமத்தில், சித்தம், ஆக்கிராணம், குதம், பிரமா, பிருதிவி, கெந் தம். ஆக. சு. ஆகப்பிரம ஷடாங்க தத்துவம். ஈசு. இனி யிதுதான் சத்தி ஷடாங்கமான விதம் சிற்சத்தி சம்பந்தம் பரமசிவன், க. சதாசிவாதி. டு. ஆக. சு. பராசத்தியில் கூஷகுன். க. பூதம். டு. ஆக. சு. இனி யிச்சாசத்தி யில் ஞானம். க. காரணம். டு. ஆக. சு. இனி ஞானசத்தியில்சேதனன். க ஞானேந்திரியம். டு. ஆக. சு. இனி கிரியாசத்தியில்கன்மாங்கம். க. கன்மேந் திரியம். டு. ஆக. சு. ஆகாச திஷ்டாங்கம். ஈசு. இனியிதுதானே ஆறுமுக த்திலும் ததாம்ஸங்களாய் வந்துசேர்ந்தவிதம் ஈசுரன்முக மதிதேவதையா கச்சோத்திரம், சத்தம்,வாக்கு, வசனம், செவி, வாய், ஆகாசம், இந்தயேழு ம் பேதமில்லை. இனித் தற்புருஷ முகந்தெய்வமாக தொக்கு. பரிசம், பா ணி, தானம்,தோல், அஸ்தம்,வாக்கு, இந்த ஏழும் பேதமில்லை. இனி அகோ ரமுகந் தெய்வமாகச் சட்சு, ரூபு, பாதம், கெமனம், கண், கால், அக்கினி யிந்த ஏழும் பேதமில்லை, இனி வாமந்தெய்வமாக ஜிங்குவை, ரஸம், குய்ய

ம், ஆனந்தம், நாக்கு, சலத்துவாரம், அப்பு, இந்தயேழும் பேதமில்லை. இனி சத்தியோ சாதந்தெய்வமாக ஆக்கிரூணம், கெந்தம், குதம், விசர்க்கம், மூக்கு, மலத்துவாரம், பிருதிவு, இந்தயேழும் பேதமில்லை. இனிப் பாவமுக தெய்வமாக யிருதயம், சோத்திராதி, சத்தாதி, வாய்வாதி, வசனாதி, செவியாதி, வாயாதி, ஆகாசாதி யிதுகள்பேதமில்லை. இந்தவாறு முகத்துக்கும் ஆறுமுகமே அதிதெய்வமாக யிதுகளெல்லாமிருக்கும். இனித் தூலாங்கத்தில் இந்திய மிருக்கிற ஸ்தானங்களுக்கு அஷ்டலிங்கம் இனிச் சூட்சுமாங்கத்திலிந்திரியங்களுக்குப் பிராணலிங்கம். இனிகரணாங்கத்தில், அந்தக்கரணங்களுக்குஞ் சத்தாதி விஷயங்களுக்கும் பாவலிங்கம். இந்தமூன்று லிங்கமும் ஆதிசதாசிவன், ஆதி யீஸ்வரன், ஆதிமயேஸ்வரன், தானேயானதென்றறிக. இந்திரியங்களுக்கு மந்தக்கரணங்களுக்கு மாறுலிங்கந்தானே முகமா யறியுமென்றறிக. இனி ஆறுதார நிலையாவது, மூலாதாரத்தில்பிருதிவு, பூதம், நாற்கோணம், பொன்னிறம், நாலுபத்மம், சிவப்பு, நாலக்ஷரம், முகம், சத்தியோசாதம், ஆசாரலிங்கம், நாதரூபம், நிவர்த்திகலை, கன்மசாதாக்கியம், திக்கு, மேற்கு, யெண்பதும்பிரதம், காகினி, சத்தி, கிரியாசத்தி, ருக்குவேதம், சுத்த அஸ்தம் ஆக்கிரூணமுகம், சற்பத்தன், பிரம்மசாரி, அறுதிசவுஞ்ஞை, நகராத்மன், பிரமநாதம், மந்திரமூர்த்திப்பிரணவம், ஸ்தானங்குதம், திராவியம், கெந்தம், அங்கம், பிருதிவு, மூர்த்தி பிரமா, அத்திரூயாகம், மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை, ஆகவிதம். ஈஈ. இதல்லாமலும், இம்தோடு சேருகிறது, இன்னஞ்சில வுண்டென்றறிக. இந்த மூலாதாரத்துக்குசொன்னதுபோல்மற்ற ஐந்தாதாரங்களுக்கு மூண்டென்றறிக. மற்ற சக்கரவாதாரமெல்லா மூன்சொல்லியிருக்கிறதென்றறிக. இது கடத்தலட்சணமுடிந்தது.

இனி ஆத்மா சென்ன ம்ரணப்படுகிற பந்தலட்சணம். இனி பந்த தலத்துக்கு வருகின்றவனுக்கு முதலான பிண்டலட்சணமெப்படி யென்னில் மந்தபிண்டம், மத்திமபிண்டம், சிற்பிண்டமென்று மூன்றுபிரகாரமாம். நித்திய நின்மல சதாசிவனுடைய இர்தயமத்தியத்தில் சுத்தசாத்மீக குணசம்பந்தமான உத்தர கலாசத்தில் ஆயிரத்தொன்றிலாத்மா உதயமாகிச் சிவாஞ்ஞையால்ரசோகுணசம்பந்தமானபஞ்சபூத காயமெடுத்துக் கிளியின் கூடு நடுவேயிருக்கிற கோலிலேறினவுடனே தன்னைத்தானே மெய்மறந்தகிளி போலத் தற்காயப் பிரமையால் சிவபாவமறந்து தமோகுண சம்பந்தமுள்ள அவித்தையா ரூபிணியான மாயாசத்தியோடு கூடி ஆத்துமாவின் சுயஞானமானதும், மனோசஞ்சலத்தோடுகூடி ஞானருசத்தத்தால், சீவாத்மனுகி யிருக்கையில் தற்பணம் பிடித்த குழந்தைபாவம்போல் நானென்னுதென்கிற மோகரூபமான மூலாங்காரதற்பண சானித்தியத்தினுலந்தப்பிரபஞ்ச சீவாத்மாவென்கிற பிரகிருதி மார்க்கத்தைப்பிடித்துச்சாதிவர்ணாசிரமகுலகோத்திரப் பிரவேசிதனுய்ச் சம்சாரபந்தனுயிருக்கிறதினுல் மந்தபிண்டமென்றுயிறது. இதற்கு அர்த்தம், சென்மசாரதியான அனிஷ்டமாகிற சம்சார பிரார்த்தியால் சிவசைதன்னிய விரஸத்தை மறந்து உலர்ந்தன சிவ

ாஸையில்லாமல் தத்துவம், ஈசு. ல் அகப்பட்டு அதிலுல் தனுகரணடுவனபோ
கங்கள், அத்துவாக்கள், பிண்டப்பிரமாண்டங்கள், கன்மவிதம், மலமாயா வி
தம், ஆத்மீகம், பௌதீகம், தெய்வீகம், சுத்தம், பிராரத்வம், ஆகாமியம்
ஈவக்கிரகபீடைகள், சாதிகுலம், என்பெண்சாதி, பிள்ளைகள், பந்துக்கள்,
பொன், மண், பெண், இதுமுதலாகச் சிவன் சிருஷ்டிக்கப்பட்ட விதமெல்
லாவற்றிலும் தனுவெடுத்து அதோ அவஸ்தையில் விழுந்து பந்தப்பட்டுச்
சென்னமரணப் படுவது மந்தபிண்டமென்றறிக. இனிப்பக்குவதேகிலட்ச
ணமாவது, பிரகிருதி காயத்திலுல் ஒன்றுகி மாயாபாசங்களில் விழுந்த சீவா
த்மா பாசப்புண்ணியத்தால், பசுபுண்ணியமாய்ப் பசுபுண்ணியத்தால் பதிபு
ண்ணியமாய்ப் பதிபுண்ணியத்தால் ஒரு தீவரபக்குவம் பிறந்து ஒருதெய்வமு
ண்டாகவேண்டுமென்று தோன்றி அந்தக்கரண சுத்தமாய்ப் பக்குவமா
ஈபழம்போல் சிவசமஸ்காரமும்பூரணஞான சர்மதேகமேமத்திமபிண்டமாம்.
இனிசிற்பிண்டமாவது, நிஜாத்மத்தினையங்கள், குருலிங்கசங்கமம். சொருபமா
கிச் சரற்காயமாகிறது. பிரசாதமயமாகி சர்வாங்கசைதன்னியம் பாதோதக
மாய்மனதிலிருக்கின்ற சிற்கனலிங்கப்பிரகாசம், சற்பாவத்தாலுண்டானமூ
லமந்திர ரோவஷ்சம்பியஞானத்திலிருக்கின்றசிவானந்தம், இந்தமூன்றுவிதமு
ம் பரநாதவிந்துரூபமா யதுவேபீசாக்கரத்தினையமாம். அந்த அக்ஷரத்
தினையமே நிஷ்களப் பிரணவமாம். அந்த நிஷ்களப் பிரணவ சொருபத்தில்
பிரமரந்திர ஸ்தானத்தில் சூனியாதி பிர்மாந்தம், பிர்மாதி சிவாந்தம், சிவா
திருத்திராந்தம், உருத்திராதி பிர்மாந்தம், பிர்மாதி திரணேத்தமான பஞ்சவித
சிருஷ்டியு மூட்கொண்டு விளங்குகிற மகாகன நிஷ்கள லிங்கத்தில் மூலசி
த் ரூபமாய் சிதாங்கமாயிருக்கிற பரமாத்மனிப்போது சிற்பிண்டமாயிற்
று. இதினபிப்பிராயம் குருகாருண்யத்தில் இலிங்கதேகி இலிங்கப்பிரா
ணியாகிப் பஞ்சவிங்சதிதத்துவங்களும், பஞ்சாக்கர சொரூபமாகிச்சுத்தநின்
மலகற்பூரமபோன்சிவஞானமளவிட்டதனுவையிப்போது சிற்பிண்டமென்ப
து. இன்னுஞ் சிவதத்துவத்திலுதையமான ஆத்மாவுக்குச் சிகிகற்பூரயோ
கம்போல் தோன்றுகிற தீவரசத்தினிபாதமுள்ள சிற்பிண்டத்தை உட்கொ
ண்டவன் காஷ்டானல் சம்பற்கம்போல் தோன்றுகிறமத்திய சத்தினி பா
தமுள்ள மத்தியபிண்டமே முக்கியமென்றுகதலிபக்வாஅனல்சம்பற்கம் போ
ல் மந்ததரசத்தினிபாதனுன மந்தபிண்டமென்பது. செம்பருத்தம்பூ சமீப
த்திலிருந்தபடிகம்போல சத்திகாரசித்தி, லொப்பனம், ரஜசு, சற்பம், ஸ்தா
னது, சோரமிறுத் தீஷ்ண நிஷ்டம்போல் ஆகாசத்தைதழுடனபனிப்போலச்ச
த்தியீமல்லவென்று நேதிகளைந்து சற்குருவால் அந்தமந்தபிண்ட மத்தியபி
ண்டத்தைதச்சிற்பிண்டமெனுபமாக்கிப் பரசிவஞ்சி லெயிக்ரு நிதித்தத்தினல்
வினையின் விருதைதஞ்சாதிப்பதுபோல் ஞானயகாதச வஞ்சனை சம்பிரகாசதீர்
திதடோல் ஆத்மாவுக்குட்சத்தில் சிதங்சுசுவிஷ்தாத்ர தெரிஷ்ட சதுவிதசுத்த

ஊழிஅ தத்துவநிஜாநுபோகசாரம்.

காத பஞ்சலட்சணசொரூபத்தில் சாதிக்கப்பட்ட அங்கதலிங்கத் தலங்கள் முற்றும்ஸங்கேஷபமென்றறிக.

இதின் அபிப்பிராயம் குருகாருண்யத்திலல் இலிங்கதேகி இலிங்கப்பிராணியாகிப் பஞ்சவிங்சதி தத்துவங்களும் பஞ்சாட்சரசொரூபமாகிச் சுத்தநின்மல கர்ப்பூரம்போல் சிவஞான மளவிட்டதனு இப்போது சிற் பிண்டமென்பது. முன்பஞ்சசிருஷ்டியின்நிர்ணயமெப்படியென்னில், இதை தொகையாகச்சொல்வது, அறுதி பக்தன் இதில் இர்தயம் இதில் சங்கமம், இதில் மகுடம், இதில் சூனிய இலிங்கம், இதில் சிதம்பரம், இதில்"பபீவ, என்ற அக்ஷரத்தினையமுண்டாம். இந்தப்பஞ்ச சவுஞ்ஞையாதியாக, அந்தற்பாவமான சின்னங்க ளிப்போது சூனியாதி பிர்மாந்தமான சிருஷ்டி, இனிப் பஞ்சநாதம், பஞ்சப்பிரணவம், பஞ்சகலை, பஞ்சசத்தி, பஞ்ச சாதாக்கியமுதலான தனுகாந்தியின் சின்னங்களிப்போது பிரமாதி சிவானந்தமானசிருஷ்டி., இனிப் பஞ்சாக்ஷரி, பஞ்சமூர்த்தி, பஞ்சமுகம், ஈஸ்வராஷ்டகம்,மாயேஸ்வரம்,பஞ்சவிங்சதி,ஏகாதசம்,உருத்திரத்திரயாவயம், இரணியகெற்ப, விராட்டு, முதலான சாகாரவிக்கிரகத்தின்சின்னங்கள். சிவாதி ருத்திராந்த சிருஷ்டி., இனி அஜ, அரி, இந்திரமுனிவர்க்கமுதலான சாலோக்கியாதி பதத்திரையங்களுடையவர் உருத்திராதி பிர்மாந்தமான சிருஷ்டி, இனி சீவசாதி. தானவர், மானவர் முதலான சாதிகள் உலோகாதிலோகங்கள் பிர்மாதி திரணைந்த சிருஷ்டி பிண்டத்திரைபமுற்றும்,

இந்தப்பக்குவதேகியாய்ப் பக்தாதிகளாகிறவருக்கு இந்தப் பிண்டத்தல மூன்றும், நாற்பெருந்தலமானவிபரம். இனி மந்தபிண்டத்தலமாவது,தன் ஜனமறந்து சிவன்செய்திலை யிழந்து எனது யான் என்னுங் கன்மத்திலல் இருவினைகள்செய்து அதைப்புசித்து யிறந்து பிறந் தழலுமுயிரானது யிருவினையொப்பில் மலத்தடைசற்று நீங்கி ஈசனருளால் பக்திப் பிரவேசமாய்ச் சத்தினிபாதம் பிறந்து மேகத்தில் மின்னும் நீரிற்கெங்கையும, பழத்திலிரசமும், ஆனமத்தகத்துமதம்போலும், சந்திரகாந்தத்தில் நீர்போலும், குழந்தை சொப்பனம்போலும், அரும்பிற்கந்தம்போலும், உயிரிற்சைதன்னியம்போலும், தயிரில்நெய்போலும், முத்துள் அடங்கினநீர்போலும், பீசத்தில்விருட்சம்போலும், மகாகனத்தைப்போதித்துக் காணவேண்டும். இனிப் பாஷாணத்திலக்கினிபோலும், பக்தருடன் கூடின நிசபக்தர்போலும், அடங்கியிருக்கிறதைப் பிண்டத்தலமென்றுசொல்லுவார். ரூபுரூபிலடங்கி ரூபமாகி நின்ற ரூபு நிச்சயமாய்ச் சஞ்சலமில்லாமல் பாரமாகி நின்ற நிசபதங் கூடல்சென்னநிவர்த்தியென்றறிக. இனி மத்திமபிண்டஞானத்தலமாவது பனையறிவிலுலண்டபிண்டங்களை மெய்யென்றிருப்பதைக் கானல்நீர்போல் பிரமையென்றுஇலக்கமில்லாதசென்னமெடுத்த நான்பரமுமல்ல, அசத்துமல்ல, நான் சிவமாம்சமேயென்றே தானென்பதிழந்து உலகுயிர்கள் தன்னிற் றோன்றி யொடுங்கப்பனையுருக்கொண்டு லீலையாகி நிசத்தை விளக்கிக்கொண்டவன் சிவனென்று நித்தியாநித்தியங்களையறிந்து சுவானுபவவுதையத்தில் ஞானநேத்திரத்தைதிறந்து தன்னிசத்தைக் கண்டு

தெளிந்து சித்தவிருத்திப் பிரகிருதியாகிறதைநீங்கித் தத்துவவிவேகியாகிநிச்ச ல நிசாந்தரங்கம் நிச்சயித்துச் சுகமுகத்தையறிந்து இந்தஞானமுகத்துளட ங்கிப் பார்த்துத் தன்னைத்தானே விட்டுத் தானேதனக்கன்னியமில்லையென் பதை யறிந்து மாயையைநிவர்த்திசெய்து சிவத்தியானத்தால்மனதைச் சு தனத்தில் நிறுத்தி மஞ்ஞைபாவியாகி விந்துநாதங்களை யழித்துச் சிற்சொ ரூபவிந்துவாய்நின்று விளங்கி ஞானமே வடிவானவன் பிண்டஞானியென் றறிக.

இனி சிற்பிண்ட விபரம். "சம்சாரதேஹய ஸ்தலமாவது,, மயிர், தோ ல், உதிரம், இறைச்சி, மேதை, நரம்பு, குடல், எலும்பு, சீழ்,புண், கோழை புழு,மலம்,நீர்,மூளை,மச்சை,வழும்பு,இதுகளுடனே கூடியழிகிறவுடலான பாம்பின்வாய்ப்பட்டு அதிலுல்நிலையில்லாதஇகபரமும் வெறுத்துச்சிவனே யெனக்குப்பந்தம் விடுவிக்கவேண்டுமென்றுருகிப் பதைத்தலறிச் சகலமும் பகையாய்ச் சுக்கில சுரோணிதப்பந்தமான மலத்திலுல்நான் பிரகிர்திகாய த்துக்கனுகூலமான மாயாமலத்திரயத்திலுல் சகலப்பிரபஞ்சமும் அனுகூலமா கப் பிராப்தியாகிச் சுகிர்த சிந்தனைசெய்ய வொட்டாமல் அஃதே தோன் றி யிருக்கிறவெனக்கு விகாரனென்னுமற் கருணையிலுல் மாயாவிகற்பங்களை பரிகரிப்பாயென்று நம்பினேன் ஐயனே இனி என்னைச்சம்சார மென் னும் பந்தத்தினின்று அகற்றி உண்மைஞானானந்தத்தைத்தந்து ரகூஷிக்கக்க டவா யென்று பிரார்த்திப்பதே சம்சாரதேஹயஸ்தலமென்றறிக. இனிக்கு ருகாருண்யத் தலமாவது, நானு பவபயசம்சார அஞ்ஞான செடத்தைத்தீ ர்த்து,ஞானுனுக்கிரக சென்மத்தில் செனிக்கச்செய்து, பின்புகன்மசாத செ ன்னிதேந்திரியதுஷ்கர்மத்தால் பூர்வாச்சரியத்தைக் கெடுத்துச் சிவஞானவர் மத்தைக் காட்டிக், காகமலத்தைச்சிரசில் கருணையால்வைத்து, துஷ்கர்ம விங்கத்தைத்துடைத்து, நரசென்மமாகிற பூர்வாசரியதோஷத்தைத்தீர்த்து, அருள்புரியப்பட்ட குருவடிவாகிற பிரமத்தைச் சேர்ந்து துதித்து உருகுகை யிலவன்பாசத்தைத் நீரக்கடிந்து சிவ ஆத்ம சுத்தி பண்ணி ஆஞ்ஞாதீக்கை உபமாதீக்கை அத்துவாகாயாரோணம்விபூதிபட்டங் கலசாபிஷேகம் இலிங்க சுவாயித்தியமிதுமுதலானதீக்கைசெய்து அங்கத்தில்விலிங்கத்தை வைத்துச் சர்வாங்கமுமிலிங்கத்தலமாக்கி மேல்சுகரமான பரம ஞான நிசாந்தத்தைக் காட்டி, உட்புறம் பென்னுமற்றன்னிலேதன்னைப்பிரகாசிக்கிற ஞானசோதி யைக்கண்டு தெளிய ஞானக்கண்ணை விளக்கிச் சிகிகற்பூரம் பற்றினது போல் என்னுள்ளே கலந்திருக்கிற மகாகனத்தைக்காட்டிப் பரமசுகத்திலே வைப்பதுகுருகாருண்யத்தலமாயிற்று. குருகருணைப்பட்ட மகாமகிபனைத் தூலதனுவிவகாரத்தைக்கெடுத்துச் சதாசாரசற்கிரியாவர்த்தனைக்கே சாதன மாகியங்கத்தின்மேல் இலிங்கசுவாயித்தியமானபேதமெப்படியென்னில், இ தலிங்காரணத்தலமாயிற்று.இதற்குகுருவானவர் வேதமந்திரக்கிரியாரூபமா ன மூன்று தீட்சையாலே குருவினுடைய அஸ்தம், விதிப்பிரகாரம், சீஷன் சிரசிலேவைப்பதுவேதாத்மிகை, செவியிற் பஞ்சாக்கரமந்திரஞ்சொல்வது ம

ந்திராதத்மிகை, இவ்டலிங்கத்தைதச் சிவதின் கரத்தில் தரிப்பது கிரியாத்மிகை, இந்தலிங்கத்தை ஆறுதலத்திலுந் தரிப்பதாம். இதிற்றரிக்கும்விடாங் குருவானவர் பரமார்க்கத்தை யோசித்துச் சிவதன்கையில் பிராணனைக் கடாகூதிக் கையால்அந்தச்சரீரம் இலிங்கதனுவாமாகையால்அப்போதும் லிங்கந் தரித்திருக்கவேண்டும். இலிங்கசகிதநடை,இலிங்கசகிதநொடி, இலிங்கசகிதசகலேந்திரியமுகம்,இலிங்கத்தில்ஆலிங்கணமாயிந்தலிங்காங்கியேசகசமாகையால்சதிசுதபித்திரர்களுமிலிங்கதாரண மாகவேண்டும்.

இனித் திரிகரணசுத்தியிஞல் அவதானப் பிரகிருதி சஞ்சலமல்லாமல் அபேட்சா சத்தியிஞல் திரவியங்களைக் கையில்பிடியாமலும், வாங்காமலும், வயிராக்கிய விர்த்தியாய் அகண்டபரிபூரண சரித்திரத்திலணுமாத்திர மாகிலும் இடைவிடாமற் பக்தியுத்தியால் சிவலிங்கந்தரிப்பது. அகிலத்தில் உண்டானதாஞமுத்தி போக போக்கியங்களைத் தனக்குவேண்டிக் காண்டிந்து ஆசையால் ஞானேந்திரியமுகத்திற் புகவொட்டாமற் சுவானுபவ நிசமுண்டாகில் இலிங்கத்துக்கே அற்சிக்கஅவன்ககூத்திற்றரிப்பது இனி அங்கவிகாரத்தால் விரகதாபத்தாலே ஸ்திரி சங்கஞ்செய்யாமல் நிர்மலஞ்ப்ச் சரீரத்தைவிட்டுவந்து தாக்கிறவினைதய சவுக்கியங்களை யறியப்பட்ட லிலிங்கத்துள்ளேசமற்பித்துபரமசுகியாயிருப்பதறிந்தால், மார்பிற்செச்சையின்கண் இலிங்கந்தரிப்பது. இனி அனிர்த, அபசத்த,குதர்க்க,மன சூதகநிந்தை,நிஷ்களமுதலானவிகாரபிரமேதமச்சரங்களை யனுசரியாமல் அனுதினமும் லிங்கத்தை முகவிச்சையிலே தரிப்பது. இனிக் காரணதி குணங்களின் சஞ்சலத்தைதச்சங்கரித்துச் சிவஞானத்தால் அந்தரங்கத்திலிரண்டில்லாம லேகமாய் ஒன்பது நா ஞள்ளேசஞ்சரிக்கிறபிராணவாயுவின்குணங்களைநிறுத்தி விசாரித்து உள்ளேபரிபக்குவசதானந்தசுகத்தில் நின்றவன் அமலோக்கிய லிங்கந்தரிப்பது. இனி அவிசாரகையால் உலகத்துச் செடமனுஷனை நமஸ்காரஞ்செய்யாமற் பிரமாணுச்சக்கரப்பிரவேச அனுபவிசிரசில் இலிங்கந்தரிப்பது இந்தக்கிரமத்திஞல் தரித்தவர் சிவதத்துவத்தில் மூலஞானசம்பவ சம்பந்திகளென்கிறநிசமகிமாபரதத்துக்குச்சாணுசற்குருவேசங்காரவ்யம் குருகருணாலிங்கதாரணம். இந்த மூன்று தலமுஞ் சிற்பிண்டத்திலடங்குமென்றறிக. இதில் முத்தித்தலமுடிந்துதென்றறிக. இனி முத்தித்தலம் பெற்றவன் - ாக - தலத்திலுஞ்சரிக்கவேணு மது சங்கேஷபமாய்த் தொகையாகச்சொல்வது, இனி விபூதித்தலமாவது சிவன் ஐந்துமுகத்திலும் ஐந்துவர்ணமான ஐந்து பசுவிற் கற்பப்பிரகாரங் கோமயம் ஐந்து மந்திரத்தால் விபூதி உண்டைசெய்து "பஸ்மவி திவகீதாகைஷஸாமஃ" என்று பெயரானதை நித்தியநியமமாகச் சடாக்ஷரியாலே - கக - -கரு - - ஈ:ச - தானத்திலு மூன்றுபொழுதுந்தரிப்பதென்றறிக.

இனி உருத்திராட்சதத்தலம். சிவன் முப்புரத்தையெரிக்கும் போது மூன்றுகண்ணிலும் நீர் வந்துவிழ வித பஞ்சவர்னத்திலும் உருத்திராட்சமுண்டானதைச் சிகை, சிரசு, காது, களம், உரம், கை இதுகளில்விதிப்படியே யெண்ணிக்கை அளவு நிறமறிந்து தரிப்பதென்றறிக. இனிப் பஞ்

சாக்கரத்தலமாவது ஓங்காரமேபிரமம், பஞ்சசாதாக்கியமே பஞ்சாட்சரம், இந்த - சு - ம் நிஷ்கள சகளவடிவாம் இதை மானதம், வாயு, நாக்கசையக் கருவிலுருதென்றறிக. இனிப் பக்தத்தலமாவது. சத்தபாதகம் பஞ்சகூத கம்தனுமன் தனவஞ்சினகளைவிட்டு மூன்று பொருளான குருலிங்கசங் கமத்தின் குறிகுணம்பாராதே ஒன்பதுவித சற்பத்தியால் தனு மனவாக்கால் வருகிற அர்த்தப்பிராண அபிமானத்தையவர் நினைவறிந்து சமர்ப்பித்துபக் தரிற் கூடிநடப்பதென்றறிக. இனி உபையத்தலமாவது. சிற்பிரமமே பிரத் தியட்சகுருவடிவான குருவாணையின் வழிநின்று அவரிலொன்றாய் பிறிவிலா தபத்திசெய்து குருலிங்கமிரண்டினும் ஆனந்தம்பொங்கி நிற்பதென்றறிக் இனித் திரிவிதசம்பந்தத்தலமாவது, ஒன்றே மூன்றுனதறிந்துசாமேகனென் ன்று குருலிங்கசங்கமத்தில் பக்தியொன்றுன தென்றறிக. இனிச் சதுர்வி சாரத்தலமாவது. உடல்பொருள் உயிர்பலவானதுஞ் சிவனுடைமையென்று இதையுடையவனுக்குச்சமற்பியாமலுண்பதால் நரகத்தில் வைப்பனென்றறி ந்து குருலிங்கசங்கமங்கொள்ள வற்பித்து அந்தப்பிரசாதமும் பாதோதகமு ங்கொண்டு குருலிங்கசங்கமம் பிரசாதம் இந்தநாலினும் பத்தியாயிருப்பதெ ன்றறிக. இனி உபாதித்தலமாவது, மூப்பொருளுக்கு மூப்பொருளீந்து நடப் பது மூன்றுவது மோகமறும்உபாதி நிருபாதி சகசச்செயலாகும். இதின் மு ப்பொருளைச் சிவனெனநம்பி எப்பொருளையும் வஞ்சனையில்லாமற் கொடுத் துப்பலபதங்களைவிரும்பி இரண்டுவித்மாப்ச் செய்வதென்றறிக. நிருபாதித் தலமாவது சகசத்தில்வாழ்வு, பரத்தில்வாழ்வுவேண்டாமற்சிவனுடைமைனன் று நிசபக்தியாற் குருசரலிங்கத்தினினைவறிந்து அர்ச்சிப்பதென்றறிக. இனி சகசத்தலமாவது தன்னிடத்திற் சிவனுளமாயிவனுளம்பரத்திலயித்து;தானே தானு யெவையுந் தன்மய்மாகுதலால் இடுவானுங்கொள்வானும் பொருள்களு மொன்றுகையால் மூப்பொருள்கொள்வதுஞ் சிவனென்றறிக. இப்போது சொன்னதலம் - கரு - ம் நிசபக்தத்தலமாய்ப் பக்தன் நடக்கையென்றறிக. இது மந்தபிண்டத்தலமுதல் சகசம் அந்தமாகத்தலம்-கரு- இனி மஹேஸ்வர த்தலமாவது அரியயன் முதலானபோர் பசுவர்க்கமென்றுஞ் சிவன் பதியெ ன்றும்அறிந்து மூப்பொருளுக்காக வசைசந்துதான் சோகபத்திவழுவாமற்கவ லையில்லாமல் அகம்புறமில்லாமல் நயிஷ்டாபத்தியா லென்னவிபரீதம்வந்தா லும் அசையாமற் சிவநிந்தகனைச் செகுத்துத் தூரியநிலை நின்று மற்றமதங் களைவிட்ட தீரனுவதென்றறிக. இனி லிங்கநிஷ்டைத் தலமாவது ஒளியாய்ச் சிற்பரமாய் வெளியாயுயிராய்மனதே தேகமாய்நின்ற லிலிங்கங்கையிலேவ ந்துதென்று மலையத்தானமா யஷ்டவிதார்ச்சனைசெய்து அற்தப்பிரா ணை பிமானம் போகவரிலுந் தவறுமல் மயலகன்று அற்பிதமான அன்னேதகம் பங்கமறவுண்டு லிலிங்கமயமாகி நிற்றலென்றறிக. இனிப் பூர்வாசரிய நிரச னஸ்தலமாவது, சிவசென்மத்தில் உதித்த சிவபக்தன் முன்போலக் குலங்க ளிலேகூடல் மேலேறிக் கீழ்விழுவார்போல நரகத்தில் விழுவான் சாதியாவது "ப்ரவிவ சற்பத்த,, னிரண்டு குலமேயல்லாமல் வேறுகுலமில்லை பலகாஷ்ட மும்வெந்து சாம்பலானதுபோல் நவசென்மராய்க்குலம்விட்டதென்றறிக.

இனி வாக்கால்துவித நிரசனத்தலமாவது, பூச்சியனும், பூசகனும் ஒன் றெனில் பூசைமோட்சமில்லையாம். சிவன் சுதந்திரனுமுயிர்வனவசத்தாம். இதனால், அத்துவிதியல்ல ஈசன்கர்த்தனுகத் தான்தொண்டாய் நிசபக்திசெ ய்துபதவியை யடைவதென்றறிக. இனி ஆவாகன நிரசனமாவது பக்தியிலு ல் ஏகமாய் முத்திபதமான விலிங்கத்தைத்தான் இரண்டில்லாமற்பவமறவே பரிசித்துப் பரனுருவமாதலென்றறிக. இனி அஷ்டமூர்த்திநிரசனமாவது, அ ஷ்டமூர்த்திரூபமாய்சிவனிருப்பனென்னிற்பூதம்,ரு-ம். செடமாம். உயிர்பர தந்திரனும். சூரியசந்திரர்பரதந்திரராம்.ஆகையால்,இந்த-அ. நாதனல்ல. எப்ப டியென்னில், குலாலனுலான கடங்களவனுகாது, எல்லாவற்றையுமாக்கியழி க்கிறவன் சீவனுகானுகையால்சிவனட்டமூர்த்தியல்லச் சித்துருவென்றறிக. இனிச் சர்வகத நிரசனமாவது, சிவனெங்கும் நிறைந்து எவ்வுருவிலுமிருப் பனென்னிற் பூசை யெவ்வுருவிலுமிசையாது இலிங்கத்திலிசைந்து அற்ச னைகொள்வனுகையால் சர்வகதனல்ல. அதெப்படியென்னில், பசுவின்டா ல் உடம்பெல்லாமிருந்தாலும் முலையினிடமாகத் தருவதுபோல் இலிங்கமுக மாய்ச் சிவன் மோட்சங்கொடுப்பானென்றறிக. இனிச்சிவன் செகமானதல மாவது, செகமெலையுமுட்கொண்டு சிவனகண்டபரிபூரணனுய்ச் சராசர மெல்லாம் தானுய் நிற்பன். அதெப்படியென்னில், நூலானது, துணி, குடி லுக்கு வேறில்லைபோலும், பூ, இலை, காய், கனி, மரத்தைவிடவில்லைபோ லும். சிவனிடத்தில் எல்லாமுண்டாயவனை யகலாதிருக்கும் அந்நிலைபோல த்தானுநிற்பனென்றறிக. இனிப்பக்தநிதேகத்தலமாவது, சிவனெல்லா மாகியு மல்லாமல் நின்று வயிராக்கிய பக்திஞானமுள்ள பக்தன் தேகேகந்தா னையெல்லாருக்கும் அவன் மகிமையையுங் காட்டுவித்து அவன்குற்றமில்லாத சுகபோகியாய் பரமாய் பக்தனே தேகமாய் நின்றதென்றறிக. ஆகமஸ் தலம், கூ.

இனிப்பிரசாதித்தலமாவது, தனக்குப்புசிப்பான பதார்த்தமெல்லா ந்தான்தீண்டாது இலிங்கத்துக்கர்ப்பித்துமனது நின்மலமயப்பவரோகந்தீர நிசமான அவிஷ்தப் பிரசாதத்தையருந்தி அணுவித்தைதாடாதவனுய் நா ள்தோறுமப்பியாசித்துஏகமாவதென்றறிக. இனிகுருமகாத்மியத்தலமாவது, சச்சிதானந்தமான பொருளினருள்பொங்கிக் குருவுருவாய்வந்துண்மையைக் காட்ட அவற்றில் நின்றதென்றறிக. இனி மஹேசன் இலிங்கமகாத்மியத் தலமாவது, சராசரமாகிய உலகமெல்லாமொடுங்கி யுதிக்கிறதானம் மகா லிங்கமாயருச்சனைகொள்ளும் பொருட்டாயடியருள்ளத்தில்நின்று உள்ளங் கைநெல்லிக்கனிபோல் கரகமலத்திலிருந்து எல்லாந்தானுய் நின்றதென்றறி க. இனி மஹேசன் சங்கம மகாத்மியத்தலமாவது, அங்கத்தில் சைதன்னி யமாய் பரமாய் பார்ப்பதுவே தொழிலாய்பற்றியழுதுண்டு செகத்தில்தடை யில்லாமல் நிசபக்தர்தன்னைச்சச்சிதானந்தமான தமது பதமாக்கி வசனம் பார்வை பரிசத்தாலுயிர்கள் பாகம்பொருந்திடச்செய்ய சங்கமத்தின் பொரு ளறிந்து ஒன்றுய் நிற்பதென்றறிக. இனிப்பக்தன் மகாத்மியத்தலமாவது பக்தன் செய்யுந்தீமைநன்மையாயும்,பாவிகள்நன்மைசெய்வதின்மையாயும்

அதெப்படி தண்டித கனசெயல்போலக் கொடிதான பெத்தமகற்றிப் பக் தியானது இரவியெழு மிடத்திருள் நீங்கல்போலச் சம்சாரம் நீங்கி எல்லாச் செயலும் சிவன்செயலென்று தானென்பதில்லாமற் பக்திநிலை கவருமல் நி ற்பதென்றறிக. இனிச்சரணன் மகாத்மியத்தலமாவது, சுகங் கொடுக்கிற பின்னமோகங்களை விட்டுச் சுத்த சிவஞானத்தால் சூதகமில்லாமலருச்சித்து மனதை லிங்கத்திலயம்செய்து அறிவேவடிவானசிவன்தானேயாவது புனித நிசமென்றறிக. இனிப் பிரசாதமகாத்மியமாவது, அத்துவிதமாய்ப் பரமப தமாய்ச் சிற்கனமானபரமனுள்ளத்தில்மனனப்பட்டது பிரசாதமாகும். இது சனனமில்லாமல் மிகுத்தலமாய்ச் சிவன்தானே பிரசாதமாகையாலிதற்பெ ரியதில்லை யிதுசத்திய மென்றறிக. இந்தயேழுதலமும் பிரசாதித்தலமென் றறிக.

இனிப்பிரானலிங்கத்தலமாவது, முன்சொன்ன தலங்களிற் கிரியை யோகமிதின்மேலான ஞானயோகம், உயிர் வாயுவின்குணம் தன்னிடத்திலி ல்லாமற் சத்தியவானுஞ் சத்தியமும்போல் சமரசமாய்ப் பிரானலிங்கத்தை யறிந்து தோன்றுகிற புறப்பொருளை மறந்து அனுபவத்தால் மனம் இலிங்க த்திலயித்து மனுமுத்தியாகிப் பின்னமில்லாதிருப்பதென்றறிக. இனிப்பி ரானலிலிங்கார்ச்சனத்தலமாவது, அபிஷேகம், பொறுமை, வஸ்திரம், சத் தியம், புட்பம், வயிராக்கியம், சாந்து, சமாதி, அட்சதை, அகந்தையறு தல், தூபம், சிரத்தை, தீபம், சத்தியஞானம், மணி, மௌனம், உள்கமெல் லாம்நைவெத்தியம், விஷயாற்பிதம், தாம்பூலம், இப்படிச் சிவபூசைசெய்வ தென்றறிக. இனிச்சிவயோக சமாதித்தலமாவது, மன அற்புதமாய்லயி த்தவிடத்தில் விஷயங்கள்தோன்றுதது முன்னே சச்சிதானந்தமயந்தோ ற்றும். அஃதெதெனில், ஆறுதாரமுங்கடந்த சகஸ்திரகமலமீதே வெளியொ னியான அகண்டப்ரத்தில் ஏகபாவங்கண்டு அனுமானமற்றதென்றறிக. இ னிலிங்கநிசத்தலமாவது, சச்சிதானந்தரூபமாய்ச் சூரிய சிகி யிதின்பிரபை யெல்லாம் தன்பிரபையால் விளங்குவதாய் பிண்டாண்டங்கள் இலயம்உற் பத்திக்கிடமாய்த் தத்துவங்களும் நீங்க வொன்றுமிலலாததாய்த் தானேதா னென்றறிவதென்றறிக. இனி அங்கலிங்கத்தலமாவது, நின்மலமாய்நேயமா னலிங்கமே யங்கமாய், அங்கமே லிங்கமாய், இந்தலிங்கமே பலகிரணமாகிந ன்மையாய்விளங்குமிந்த-நு-தலமும்பிரானலிங்கத்தலமென்றறிக.

இனிச்சரணத்தலமாவது, பதிக்குப் பத்தினி பக்திசெய்து தேகசுக ங்கொள்ளுவதுபோல பக்தியிலுல் சிவ சங்கஞ்செய்து பரானந்த மதிசய மான பரிணும்மத்தால் தங்கோதகமிருக்க கானல்நீரைத் தாவுதல்போலத் தனு சுகத்தைதநினையாதே பரானந்த நிலைவழுவாது சிவகதியுடையோ னென்ற றிக. இனித் தாமத நிரசனத்தலமாவது, அரிஷடு வற்கத்திலுல் மயங்கி மறப்பு நினைப்புமுள்ள மந்தன் குருவாலிருள்கெட்டு ஞானப்பிரகாசந் தோ ன்றுவதிலுல் சமை, தமை, சிரத்தை, பாவம், அறிவு, வயிராக்கிம், சத்தி யம், பொறுமையுமுள்ள பக்தியிலுல் பரனிடத்தொன்றுகி மயலொழிவதெ ன்றறிக. இனிநிர்த்தோசத்தலமாவது, மலை, மேரு, கடல் பாற்கடல், இப்

படி ஒவ்வொன்றி லொவ்வொன்று பெருமைபோலாகையால் எல்லாரிலும் குருப்பெரியவனவரல் இருணீங்கி அண்டப்பொருளை நிச்சயித்து ஒன்றாகா மற் பலசாத்திரம் படித்துக் குருவாலனுபாவமில்லாதவன் நிச்சலக்கியானமு டையனுதலென்றறிக. இனிச்சீலசம்பாதனமாவது, பதிபக்திசெய்து ஒன் றுய்ச்சுகிப்பாள்போலத் தன்னுயிரான சீவன் மகிழத் தன்னைக்கொடுத்தொ ன்றாகாமற்பொருள்மேலுற்ற வேசிபோல விகற்பத்துக்காலையமான சீலவிர் தநேயப்பொருளாய் மருவிச் சிவனை வழிபடுதல் தற்சீலம். ஞானத்தால் சிவனிடத்தொன்றுதல் சற்சீலமாம். இந்நாலும் சரணத்தலமென்றறிக.

இனி அயிக்கமாவது அவஞானத்தால் சிவனைப்பேதமாய்ச் கண்டு சிவ ஞானத்தாலொன்றுய்ச் சிவோகமென்று தெளிந்து பதிபசுபாசமும் வேறி ல்லாதாய்த் தானே தானுனசமரசநிலையென்றறிக. இனிச் சர்வாசாரசம்ப த்துத்தலமாவது, மகாலிங்கவயிக்கியனுனவ னுடலைக்கொண்டு நானுதொழி ற்செய்வதெல்லாம் பரனது செய்தியேயாய்ச் சிவனிடத்தி லொன்றுதலா ல் இவனறியப்பட்ட விஷயமெல்லாஞ் சிவனுருவாய் தொழில் அர்ச்சனை யாய், சிந்தனைகளே தியானமாய், உண்டல் நைவேத்தியமாய், உறங்கல் ச மாதியாய், மனசங்கற்ப சூதகமற்ற தென்றறிக. இனிச் சர்வாசாரமும் அங்கத்திலயித்தவயிக்கனுக்கு ஏகபாசனத்தலமாவது, தனக்கும் பரத்து க்கும் பின்னமில்லாமற் பரனுந்தானும் பிரபஞ்சமும் அகண்டாகாரமாய் நி லையா யருந்தியகலாத நிலையென்றறிக. இனிச் சகபோசனத் தலமாவது, சச்சிதானந்தப் பிரமமுள்ளத்தில்கலந்து பெத்தமுத்தி யிரண்டு மில்லாமல் தானேதானுகிப் பிரகாசிக்கையாலுலகமெல்லாம் பிறிவில்லாமலருந்திச் சுத் தபரானந்தத்தால் தெவிட்டாம லிருப்பதென்றறிக. இந்த நாலுதலமும்அத் துவிதானந்த வயிக்கியத்தலமென்றறிக.

ஆகப்பக்தனுதி அயிக்கனீருகத்தலம், சச. இது வீடுத்தலத்தி லடங் கும் இந்த வீடுத்தலமங்கங்கொண்ட அனுபவிகள்பரலிங்கவீடுத்தல மொன் றுனவிதஞ்சொல்ல மிசிறங்களாலே-ருள-ஆனதென்றறிக.

இனித்தீட்சாகுருத்தலமாவது, சாத்திரப்படியே தீட்சைசெய்து அந் தப்பொருளைப்பெற்றதென்றறிக. இனிச்சிட்சாகுருதலமாவது, சீவதனைச் சத்தியவாசரணையில் நிற்கச்செய்து சீவனது ஐயமில்லாமல் விறுவாலருளி அகண்டபூரணத்தி லிடைவிடாமல்நிற்கச்செய்வதென்றறிக. இனி ஞான குருத்தலமாவது, முன்கன்மாற்கநிலை வழுவாதவனுக்குச் சச்சிதானந்தக் தை பிரத்தியகூங்காட்டியதிலயிப்பித்துப் பிரமந்தானேயாய் நடிப்பதும் இந்தக் குருத்தலமூன்றும் ஏகமானலிங்கமாய் ப்ருனங்கத்திலே யிருப்பதா லிங்கமாவதென்றறிக. இதிற் கிரியாலிங்கத்தலமாவது, குருவருளால் நிசபக் தியால் அகண்டபூரணமாய் மயக்கமான அனிஷ்டானங்கெடுத்து இவ்விடம், இ தைநம்பி பரிவுடனே பூசிப்பதென்றறிக. இலிப்பாவலிங்கத் தலமாவது, இந்தக்கிரியாலிங்கத்தைதமனதில் நிலைப்படப்பாவிக்கையால்உட லிந்திரியங் கரணமெல்லாம் லயமாக அந்தரங்கத்தில் பாவித்து அர்ச்சிப்ப தென்றறிக.

இனிப்பக்தன் ஞானவிலிங்கத்தலமாவது, உருவத்தில் கிரியையும் அருவத்தில்பாவமுமில்லாமல் ஞானபரிபூரணமானதென்றறிக. இனிப்பக்தன் சுயத்தலமாவது இஷ்டலிங்க, பாவலிங்க, ஞானலிங்கமுன்றையும் அங்கம், மனது அறிவுஞல்இலயித்திடச்செய்துநிஜந்தாளுயெப்படிநிஜமிருந்தோஅப்படிநிற்பதென்றறிக.

இனிப்பக்தசரத்தலமாவது,இப்படிவிளங்குவதுசுயசொரூபமென்றுஅற்சிப்பாரிடத்தும்அவனை நிந்திப்பாரிடத்தும் பிரியாப்பிரிய மில்லாமல்ஈஷணையைத்தீண்டாமல் பற்றரவேண்டி குருபக்திகொண்டு சரிப்பதென்றறிக. இனிப் பக்தன் பரத்தலமாவது, சுயசரமாய் சுவேச்சையால் சரிக்கிறதைச் சொரூபமென்னுமற் பரமேயென்று சகலமுந் தன்மய மானதென்றறிக. இந்த - கூ - ம் பக்தலிங்கத்தலமென்றறிக.

இனி மகேஸ்வரத்தலம், இதில் மகேசன் கிரியாசமத் தலமாவது, சற் கிரியைசெய்யும்போது கிரியைஞானமொன்றுய் தான்விடாமல் பங்கு மந் தகனுஞ் சரிக்கும்போல அக்கினி விறகிற்றுன்றும்போல விலக்கமில்லாத கிரியைகளைச்செய்யிற் பரந்தோன்றுமென்றறிக. இனிமஹேசன் பாவகத்தலமாவது, நிருபாதிகக்கிரியைநிலையாகக்கொண்டவன் மனதுநின்மலமாய்ச்சிவோகமாய்ப் பாவனையாற் புழு வேட்டுவனும் போலச் சிவன்றுனேயாய் பாவமில்லார் கண்ணில்லார்போ லென்றறிக. இனி மஹேஸ்வரன் மெஞ் ஞானத்தலமாவது, பாவனை கற்பனை கன்மமிதுவெல்லாந் துக்கபவத்துக்கேதுவாஞ் சிவஞானமுள்ள நிசத்தைக்கண்டு துன்பம்போவதென்றறிக. இனி மஹேசன் சகாயத்தலமாவது, உடலையல்லாம லொன்றுஞ் செய்யக் கூடாது உடலாலே மோட்சமுண்டாம். படமில்லாக்கூடாரமும் வித்தில்லாத முளையும்போல உடலில்லாவிடில் ஆகாதென்றறிக. இனி மஹேசன் அகாயத்தலமாவது, தேகாதிமயமான இருள், மாயை, கன்மம் நீங்கி அகண்டத்தில் இலயித்து யேகமானயோகி தேகத்துட னிற்கினும் யானெனதில்லை தேகமழிந்தாலுந் தானழியாளுகையால் காயபோகமில்லையென்றறிக. இனி மஹேசன் பரகாயத்தலமாவது, சிவனேதனுவானசிவஞானத்தாற்றகனப்பட்ட உடலாதியெல்லாஞ் சிவமாய்ச் சச்சிதானந்தத் தனுவாய் பவவாதையுடல் நிற்கினும் போகினும் பராபரனுய் நிர்ப்பனென்றறிக. இனித் தர்மாசாரத்தலமாவது, பரமுடலானசரணன் பிறர்பொருட்டாகச் சரணன் ஆசாரமுஞ் சமைதனமமுதலான குணமுந் தயாதர்மமுஞ் செபதபங்களுமுண்டா யுண்டானவர் பேரிற் சந்தோஷமுமா யிருப்பனென்றறிக. இனிப் பாவாசாரத்தலமாவது, முன்சொன்ன கருமாசாரமாய் நடந்ததெல்லாம் பரத்திலேயமைத்துப் பராற்பணஞ்செய்து ஞானசூரியனைப் பிரகாசிக்கச்செய்து சந்தியானம் விஷையாற்பிதமோமம் இப்படி நித்தியகருமஞ்செய்வதென்றறிக. இனி ஞானசாரத்தலமாவது, இப்படிப்போதித்த பரமாசாரியன் பவவினைபைக்கெடுத்துச் சிவாத்துவிதமாய், யானெனதற்றுப் பிரகாசிப்ப தென்றறிக. இந்த -க - ம் மஹேசன் இலிங்கத்தலமென்றறிக.

இனிப் பிரசாதித்தலமாவது, இதிற்பிரசாதிகாயூனுக்கிரகத்தலமாவது, சிவஞானத்தால் சீவனுடலெக் கலைப்பித்துப் பிரமமேவடிவாய தேகத்தைக் கொண்டு அதிற் றோயாமலிருப்பதென்றறிக. இனி யிந்திரியானுக் கிரகத்தலமாவது, எங்கே மனதுபற்றுதோ அங்கே இந்திரியம்போம், அதுபோலமனமானது சிவனிடத்தில் நிற்க விந்திரியமெல்லாஞ் சிவனிடத்திலேபோய்ச் சிவன் சொரூபமாய்த் தானேதானு யெழுவகைத்தீட்சையாகிநிற்கையாலென்றறிக. இனிப் பிராணனுக்கிரகத் தலமாவது, சனனமரணத்துயரைாக்குருவாலே வாசனுதோஷநீக்கிப் பரலிங்கப்பிரானனு மொன்றுபப்பழமையுனர்ந்து சிவத்திற் கூடுதலில்லாமற் பரனே தானுனையோகி பக்குவனையருள்புரிய நோக்குதலென்றறிக. இனிப்பிரசாதிகாயாற்பிதத்தலமாவது, ஆதிநடுவந்தமில்லாவிலிங்காற்சனைசெய்து தேகாபிமானமுதல்நீங்கினைதச்சிவனைவேதனஞ்செய்து பிரத்தியிலுபிந்திரியவிஷயங்களையிஷ்டவிலிங்காற்பிதஞ்செய்து பிரசாதம் புசித்துச் சுத்தமாகிறதென்றறிக. இனிப்பிரசாதிகரணற்பிதமாவது, மனமானது எல்லாக்கரணங்களுக்கு முதலாயிருக்குமாகையால் மனதுபற்றினதெல்லாமனலிங்கத்துக்கு அற்பித்துஉருசிப்பிரசாதங்கொள்வதென்றறிக. இனிப் பிரசாதித்தலமாவது, தனுமனபாவனையைனைவேதித்துச்சத்தியமாய்த்திரிகரணசமமாய்க் குருவருளையுஞ்சிவனையுமொன்றுகக்கொண்டு உனர்வுபாஞ் செகமொன்றுமில்லா திருக்கிறபரனே நீ என்று குருசிட்சிக்கப் பரனுல்கனைத்துச் சிவஞானமானதென்றறிக. இனிப் பிரசாதிபாவாற்பிதமாவது, பாவனைமுத்திக்கேதுவாம் அதிற்றுற்பாவனைநீங்கிச்சற்பாவநிலைகொண்டு அதில் ஒன்றியருந்தயாவையுந் தன்மயமானபரிணமத்தையெய்தியதென்றறிக. இனிப் பிரசாதியின் சிசுருனைஷத்தலமாவது சிவஞானக்கண்ணுனுள்ள சீஷன் குருவைச் சகுணமெதுநிற்குணமெது காண்பிக்கிறவுலகெது இதுகளைக் கருதுகிறவுள்ளமெது அனுபாவவயிக்கமெது என்றுகேட்க அவனுக்கு ஐயமறப்போதித்து அகண்டத்திலொன்றுக்குவதென்றறிக. இனிப் பிரசாதியின் செவியத்தலமாவது, இப்படிக்கேட்டுவிளங்கின சிசுருனைஷயால் ஐயந்தீர்ந்த சிவயோகியை யுலகமெல்லாஞ் சேவிக்கையாலென்றறிக. இந்த - க - ம் பிரசாதிலிங்கத்தலமென்றறிக.

இனிபிராணலிங்கத்தலம். இதிற் பிராணலிங்க சீவாத்மத்தலமாவது. பரிபூரணசின்மயஞானம் விளங்காது இருளால்மூடப்பட்டுப்படிகஞ்செம்பருத்தம்பூவோடுசேர்ந்து சிவப்பானதுபோல உடலோடுசேர்ந்து பிறப்பிலுழலுகிறசீவாத்மாவைப் பிரிந்துசீவனேசிவனுவதென்றறிக. இனிப்பிராணலிங்கியந்தராத்மத்தலமாவது, பட்சிவேறு கூடுவேறு போல உயிர்வேறுதேகம் வேறுய் மேல்நாடுகையா லந்தரமாய் சீவன் சிவபாவமாதலாலென்றறிக. இனிப்பிராணலிங்கி பரமாத்மத்தலமாவது, இந்த அந்தராத்மா கரணமுதலானதிற்கூடாம லறிவுருவாய்த் துவிதானந்தமாய்ப்பந்தமானபிரகிருதி புருஷரூபமான பலசெகமுமாய்ஒடுங்கும்பதமாகிச் சிந்தையாதிகள்சேராதபரமாத்மாவைச்சேர்ந்து பயம் நீங்குவதென்றறிக. இனி பிராணலிங்கிநிர்த்தலே

காகமத்தலமாவது, இப்படிப் பரமாத்மாவான சரணன் நிற்குணவறிவாய் விதிக்கநினைக்கப்போகாதாய் திரமான வயிக்கமாகையால் தேகதருமங்கள் சேராமற்புரையில்லாதிருப்பதென்றறிக. இனிபிராணலிங்கிநிர்ப்பாவாகமத் தலமாவது,பிரமம் நானென்பதில்லாமல் பரசொரூபமாயவன்மேற் பாவனையு மில்லாமற் போனதென்றறிக. இனிப் பிராணலிங்கி நட்டாகமத்தலமாவது, அறிபவன் ஞாதுரு இவனை விளக்குவது ஞானம் பிறித்தறியவேறில்லாத பிரமம் நேயம் இந்தத் திரிபுடியும் இலயமாய்போதமேதுமில்லையாமென்ற றிக. இனி ஆதிப் பிரசாதித்தலமாவது: ஆதியாய் எவைக்கு மத்துவிதமாய் மறைப்பொருளாய்ச் சிவப்பிரசங்நப் பிரசாதத்தை யிருட்பாவ மகன்று சச்சிதானந்தப் பிரமத்துக்காதியானதைப்பெற்றுச் சனனமறுத்ததென்ற றிக. இனிப் பிராணலிங்கி அந்தியபிரசாதிலிங்கத் தலமாவது, தந்திரமில் லாத பிரமாணமானசிவப்பிரகாசத்தாற் பரமானந்தமயமாகி அறிகிறதுமல்ல வாமென்றறிக. இனிப்பிராணலிங்கி செவியப்பிரசாததலமாவது,எந்தவகை யாலிவனுக்கு அனுபோகமாய் இகபரமில்லாமற்போமென்று நிஜமுத்தியளிக் கிற குருச் சேர்வையாலுண்டான பிரசாதஞ்சத்தியமாகையாற் சிற்பரஞ்சுக முத்தியானவனென்றறிக. இந்த கூ-ம். பிராணலிங்கத்தலமென்றறிக.

இனிச் சரணத்தலம். இதிற் றீட்சாபாதோதகத்தலமாவது, பாதமென் பதுபதம், பதமாவது பரமானந்த சமுத்திரோதகமென்கிற வாக்கியார்த்த த்தாவிதைச் சிவஞானமென்றும் பாதோகமென்றுஞ் சொல்லப்படும் இத ல்லாமல் அங்குஷ்டபாததீர்த்தமென்பது, சுழிமுனை பிரமநாடியாகையால் அது இரண்டுகவரா யிரண்டு பாதங்குஷ்டங்களைத்தொட்டிருக்கையாலுமிந் த மூன்று நாடியையும் கெங்கை, யமுனை, சரஸ்வதியென்று மூன்றுதீர்த் தமாய் யோகசாத்திரஞ் சொல்கையாலும் அசபை யிரண்டுவிரற் பிரம நாடியிலும் அங்கென்றுமூட்டிச் சங்கென்று எறுகையாலும் பாதந்தேகத் துக்காதாரமாகையாலும் அங்குஷ்டத்தில் ஊசிமுனைநிறுத்தித் தவஞ்செய் கையாலும், உன்பாதாரவிந்தமேகெதியென்கையாலும், சாகாக்காலும், வே காத்தலையு மென்கையாலும், திருவடிவிளக்கமென்கையாலும், நமஸ்காரங்க ளுக்கெல்லாம் பாதமேயிடமாகையாலும், பாததீர்த்தமுக்கிய மென்றறிக. இனிச் சரணன் சிட்சாபாதோதகத்தலமாவது, குருசிவதமயஞான சிஷ்டை யிலுலே விளங்குகையால் ஆதமமாகிறகடலெகுருயூகமாகிறமத்தாற் பரிவோடு கடைய சிவஞான வமிர்தம்பருகி யறிவேவடிவான லிங்கமாயிருப்ப தென்ற றிக. இனிச் சரணஞான பாதோதகத்தலமாவது, ஞானத்தையளிக்கின் வன் ஞானகுரு, அவர் ஞானத்தையளிக்கையால் ஞானபாதோதக மென்று ம். இனிக்கிரியா நிஷ்பக்தித்தலமாவது, பரிபூரணப் பொருளானயோகி சித்திகளே விரும்பாமலிருப்பதென்றறிக. இனிச்சரணன்பாவநிஷ்பக்தித்தல மாவது விட்டு நீங்குதற்கரிதான சிவனிடத்தில் பாவனைசெய்வது கிளிஞ்சி லில் வெள்ளிதோன்றுவதுபோலும், இதல்லாமல் நல்லபாவனைசெய்கிற சிவ னருளும் அந்தப்பாவனை நீங்காமலிருந்தாற் சிவந்தோன்றும். முன்செய்

தபாவனைக்கு வேண்டிய வரங்கள்கொடுப்பார். பின்பாவனைக்கு மோட்ச மென்றறிக. இனிச் சரணன் நிஷ்பக்திக்தலமாவது, ஞானத்தைக்கொண் டு ஞேயத்தையறியப்பட்டஞாதுருவில்லுல்திரும்பத்தோன்றுகிறஞானத்தால் நானெனதற்றுச் சிற்கன சிவனேதாஞகி ஞானநேயத்தி லழுந்திக் தானில் லாமற்போவான். அதெப்படிசொப்பனத்திற்கண்டது சாக்கிரத்தி லில்லா துபோலப்பிரமநிலைபெற்றதென்றறிக. இனிச்சரணன் பிண்டாகாசத்த லமாவது, ஒளியாயறிவான விலிங்கஞ்சித்துருவாய்ச் சிவனுக்குக்கோயிலான தேகத்திற் பிரகாசிக்கினும் பரிபூரணமாம். அதெப்படியென்னில், கடாகா சமும், வாரியிலாகாசமு மகாகாசமானதுபோலப் பிண்டாகாசத்தலமாயுடல் கொண்டு நடந்தசையாநின்றதென்றறிக. இனிச்சரணன் விந்தாகாசத்தல மாவது, பஞ்சபூதத்தி லொரு வாயு வெங்குமிருக்கினும் வேறுகி யந்தந்தத் தேகந்தோறுமாம்போலச் சித்குருவானது இவன் சிந்தையில் கண்ணழியில் முகம்போலத்தோன்றி வானவர்கள் அறிவில்வேறுய்த்தோன்றியும் பூரண மானதென்றறிக. இனி மகதாகாசத்தலமாவது, கடோபாதி, மகோபாதி யுற்ற ஆகாசம் பிரிந்ததுபோலப்பிரியாதுநின்றுற்போலப் பிண்டாண்டத்தி லுற்ற லிங்காங்கவுபாதிப் பிரமம் பிரிந்தும் பிரியாதுபோல வெளியாய் நின் றதென்றறிக. இனிக்கிரியாப்பிரகாசத்தலமாவது, உன்னலரிதாய்ச் சச் சிதானந்த மயமாய்க் காரணங்கூடாத வுணர்விற்சரணன் இலயித்துத் தானி ல்லாமற் போகையால் சிவனிடத்திற் பலகிரியைகளாகும். ஆகாசத்திற் கந் தர்வநகரங்கிரியைபலவிதமாகையாலென்றறிக. இனிப்பாவப் பிரகாசத்தல மாவது, உணர்வானமர்மத்தில் உலோகாதிலோகமுங் காரணமுந் தோன்றும் அதெப்படியென்னில், திரை நுரை மொக்குள்கடலிற்றோன்றுவது போ விருப்பதென்றறிக. இனி ஞானப்பிரகாசத்தலமாவது, உலகவுபாதிக ளில் லாதாய்ச்சொல்லப்போகாதவுணர்வாய் பழமைகாட்டுவது சிவஞானம். இது வுஞ் சிவனிற்றோன்றி நிகழ்வதென்றறிக. இப்படிச்சொல்லப்பட்டதலம் ஐஉ. சரணத்தலஞ் சுத்தசைதன்னியனென்றறிக. ஆதலம். கூ.

இனி அயிக்கியத்தலமாவது, அயிக்கனிற்சுவிகிர்தப்பிரகாசத் தலமாவ து, ஆதியந்தமுக்கிய லக்ஷணமுதலானதில்லாதாய் போதமான சிவப்பிரச ங்கப்பிரசாதத்தாற் புதியசிதானந்த பரிணமத்தைப்போந்து பூதாதிமுத லானதில் வளர்ந்தொன்றுய்ப் பிரசாதமயமானதிதுவே பேதமெல்லாமகன் று நிலைபெற்ற தென்றறிக. இனி அயிக்கன் சிட்டோதனத் தலமாவது பிரசாதமயமான சிவயோகி யிருளால் அப்பிரமாணப் பிறமேயமாதுருவான விஞ்ஞதமுடைத்தான பிரமந்தாஞகிப் பருதியொளியெல்லாவற்றையுங் கிரி கிப்பதுபோலவுலகமெல்லாவற்றையுமுணர்வாலே கிரிகித்துத்தானேதிரமாய் நின்ற தென்றறிக. இனிச் சராசரத்தலமாவது, செகவுருவாய்மாயைவிரி ந்த பிண்டாண்டங்களையெல்லாங்கிரிகித்துச் சின்மயச்சிவன்றானே சராசர மாகிநிற்கும். பகுதியில்லாமல் நின்றதென்றறிக. அயிக்கன் பாண்டத்தல மாவது, மலவிருளுக்கொளியாகச் சீவன்றனக்குச்சிவத்தை மன்னிவிக்கும் உணர்வேகிற்பனையான பாண்டத்திசையில் உலகமுண்டாய் நின்று லயிக்க

துதில்சனனமொன்றுமில்லையாய்த் தன்னிசத்திற்றுணிருப்பதென்றறிக.இனி அயிக்கன்பாசனத்தலமாவது, இரவியுங் கிரணமும் பின்னமில்லாததுபோலச் சிவனுக்குத்தனுகரணமான அருளானது பலசெகபீசமாகிச் சிவயோகி நின்று பிரகாசிக்குமிடமாகையால் விரிவானவுலகு உயிருக்காதாரமென்றறிக. இனி அயிக்கன் அங்கலேபனத்தலமாவது, அத்துவிதமாய் நிசவுருவாகியதால் ஷிதிநிஷேதமே வாதநிலையானசித்துருவென்றறிக. இனி அயிக்கன் சுபாரஞ்சத்தலமாவது, உணர்வான சிவனிலயமாய்த் தானேதானுகி நீ நானென்றறியாமல் முன்னே வேந்தனும் பின்னே பெத்தனும் அல்ல, ஞானி அஞ்ஞானி சுஞ்ஞானியுமல்லவாய் பரமசூனிய லிங்கமானதென்றறிக. இனி அயிக்கன்பாவாபாவலயத்தலமாவது, உவமையில்லாமல் நின்ற சிவனிற்கலந்தொன்றுய்ச்சிவோகஞ் சிந்தை நிட்பாவமில்லாமல் நிற்குணப்பிரமமாய் நின்றதென்றறிக, இனி அயிக்கன் ஞானசூனியத்தலமாவது, நீர் நீரிலும் அனலனலிலுஞ் சேர்ந்ததுபோலச் சித்தான அங்கமும் பூரணநிற்குண சூனியலிலிங்கத்திலயித்து ஏகமாய்த்திரிபுடியுபையஸ்தலம் சங்கம், யோகம், ஷடுஸ்தலசத்தம், நிற்சத்தமுதலான சர்வமுஞ் சூனியமாய்நின்றது சூனியத்தலமென்றறிக. இந்த கூ. அங்கலிங்கத்தலமாம். இப்படியிந்த நூற்றொருதலத்திலும் நின்று அனுபவித்து ஏறிவந்து நிற்சூனிய லிலிங்கத்தலத்துக்குவந்ததுமோட்சமென்றறிக.

சொருபலட்சணம்-தடத்தலட்சணம்- பந்தலட்சணம் - மோட்சலட்சணம் இந்நான்கு முடிந்ததென்றறிக.

வீரசைவதீட்சாவிதிவிபரம்.

வீரசைவமாவது, வீரசாமானியம்-வீரவிசேஷம்-வீரநிராபாரி யென்று மூன்றுவிதமாம். இதில் வீரசாமானியனுக்குக் குருவானவர் அஸ்தமஸ்தசையோகத்தால் கலசஸ்தாபிய லிபூதிமந்திரங்களால் தீட்சைசெய்து இலிங்கந்தரித்து ஏககாலந் திரிகால வற்சகணுய்க் குருலிங்கபசித லிசுவாசபாணுய் எந்நேரமும் லிபூதி ருத்திராட்ச லிலிங்கமோகியானவன் சாமானியனென்றறிக. இனி வீரவிசேஷனுவது, சாதனசதுட்டயசம்பன்னனுய்ச் சுபகாலதேசாதிகளும் அறிந்தவனுய் இடம்பொரு ளேவல் மூன்றுமுள்ளவனுய் சமபிரசாத சித்தனுய்ச் சகல லியவகார சகலலிலைஷயங்களிலும் சகலசற்குணமுடையவனுயுள்ள குருவைச்சேர்ந்து இந்தக்குருவனுமதியால் பக்குவதேகியான சீஷனுக்குத் தீட்சாக்கிரமஞ்செய்யும்படி யினித்தீட்சாமண்டபங் கட்டுமிடம் ஒரு ஆள் புருஷந்தோண்டி அந்தக் குழியைத்தகனஞ் செய்து அதிலிருக்கிற இப்பி ஓடுகள்சோதித்து அதிலே மணலெடுத்துவந்து சோதித்துத்துத்துக் கெட்டித்து மேல்பூமி மட்டஞ்செய்து இப்படி ஆறுகாரியமுஞ்செய்து அதின்மேல் மணியாசஞ்செய்து இதின்மேல் லித்தானுசாரமாக நவரத்நாதிகள் சந்தனுதிகள் வேணுவாதிகள் கால்கள்நாட்டி லிசித்திரமாகச் சப்பரங்கட்டி, அதை பீரணை, யாரணை, தளிர்தோரண, குசும, சர, லிசர, பாராவளி, தூபதூமந், தீபம் இதுகள்முதலாகத்தீட்சாவிதிமண்டபஞ் சிங்காரி

தத்துவநிஷ்டாநுபோகசாரம்.

த்துஅந்தச்சப்பரத்துள்ளே ஒரு கோசென்மமாத்திரஞ் சவுக்கமாக கோமய
ங்கோசலம் பால் தயிர் நெய் கோரோசனை யிதுகளாலேமெழுகிப்பின்பு ய
வளம் முத்து வெள்ளைக்கல், பொன், வெள்ளையப்பிறகம், அரிசி இதுகளா
ல் சூரணஞ்செய்து இதில் நடு அஷ்டதள கமலமுஞ் சுற்றுஞ் சங்கம், சக்கர
ம், சூலம், டமருகம், பரசு, கண்டை, சத்திரசாமரை, ரிஷபபாதம் இதுமு
தலான விசித்திரவர்ணங்களெழுதி நிரப்பி யிதின்மேல் எள்ளு, சீரகம், கோ
துமை, அரிசி, உளுந்து இதுகள் பரப்பிக்கேவலம் அரிசியாவது நூஉ. அங்கு
லச்சதுரமும் சு. அங்குல உயரமும் பரப்பி அப்போதவ்விடத்தில் ஆசிரிய
ன்வந்து சிஷ்யனையழைத்துச் சம்பிரதாயமான சேவணசித்த மருளசித்த அ
கோராமய பண்டிதார்த்தியராகிறவர்கள் வர்க்கத்திலே சகலகுணங்களுமுள்
ளஆசிரியரை நாலுரித்துக்களைச் சர்வாலங்காரத்தோடு இருக்கச் சொல்லிச்
சரணஞ்செய்துக்கொண்டுவாவென்று அவனையனுப்பிப் பின்பு தாமிருந்து
கொண்டு கலசத்திலப்பியஞ்செய்து பஞ்சலோகக் கலசங்களில் நூலெச்சுற்றி
ச்சலம்பூரித்துக் கிழக்குத்தெற்கு மேற்கு வடக்கு நடுவுகளில்வைத்து வே
றுவேறுய் ஐந்துக்கும் பஞ்சவர்ணவஸ்திரந்தரித்து, நவசந்துக்களையும் ஆவர
ணமாகச்சுற்றி, அதில் சுவர்ணரத்தினங்கள்போட்டு, மாவிலை, அறுகம்புல்,
தேங்காய்ப்பாளை, வெற்றிலை, இலைப்பூமுதலானதிகளாலேகலசங்களை அலங்
கரித்துப் பின்பு நாலுதிக்குக் கலசங்களையுங் கிரமமாகச்சத்தியோசாதமுதலா
கப் பஞ்சமுகத்தையுந் தியானித்துப் பின்பு கலச மத்தியத்திலே பரசிவசொ
ரூபமாய் மேலே அக்கிரூசனத்தருப்க்கிழக்குமுகமாய்நடுக்கலசகர்த்தரூப் ம
ற்றநாலுகலசத்துக்கும்முன் சொல்லிவரச்சொன்ன நாலுபேரையு மழைத்து
வரச்சொல்லிஅர்க்கியபாத்திய ஆசமனங்கொடுத்து நாலுதிக்கிலும் நாலுகல
சங்களை வைத்து பின்பு குருவாஞ்ஞையால் முன்னுள் இராத்திரி கூஷ்ராகா
ரியானசிஷ்யன் உதையகாலத்திலெழுந்து சரீரசுத்தி முதலானதெல்லாஞ்செ
ய்துமுடித்து வெள்ளைப்பிடவை விபூதியுத்தூளனம் உருத்திராட்சந்திரிபுண்
டரதாரணம் இதுகள் தரித்துச் சுவர்ணபரணாலங்கிர்தரூப் ஆசிரியன் சமீப
த்தில்வந்து அஷ்டமந்திர பூர்வமாகச்சுவர்னபுட்பாதிகளால் சாஷ்டாங்கஞ்
செய்து விதானுசாரங் குருபூசையுஞ்செய்து நாலுரித்துக்களையும் அர்ச்சித்
துப் பக்த மஹேஸ்வர சமூகங்களில் விபூதிகளையும்வைத்து அவர்களனு
க்கிரகமும் செய்துக்கொண்டு சிஷ்யன் குருவிருக்கிற சவுக்கமத்தியத்தில் வந்து
திரும்ப அஷ்டாங்கஞ் சமர்ப்பித்துச் சரீரம்அர்த்தம் பிராணதிகளுஞ் சமற்பி
த்துச் சீஷ்யன் வடக்குமுகமாகக்குருவுக்குவலப்பாரிசத்திற் பத்மாசனத்திலிரு
ந்து சுத்தரூப் நரசாக்கிற ஊர்த்ததிருஷ்டி யுள்ளவரூப் அஞ்சலியஸ்தரூப்
சிவத்தியான ரூடரூயிருக்கிற சிஷ்யனுக்குத் தீட்சைசெய்யுங் கிரமத்தை வெ
குசங்கேஷபமாகச்சொல்வது. பின்பு தியானரூடரூனை சிஷ்யன் பக்தமஹே
ஸ்வர சமூகமாய் ஆசீர்வாதஞ்செய்து மங்கலவாத்தியமுழங்க நாலுகலசத்
தில்நாலுரித்துக்களாலே அவரவர்கலசோதகத்தைதத் தூருவாங்குரத்தால் சிஷ்
ன்சிரசின்மேல் புரோட்சித்துப் பின்பு அந்தக் கலசங்களைமுன்போல்ஸ்தாபித்
துபின்னு முன்போல் தூருவாங்குரத்தாலே சிஷ்யன் சிரசின்மேல் மூன்றுத

ரும் கமருவந்தனஸ்நானஞ்செய்வித்துச் சீஷன் லலாடாதி ஸ்தானங்களிலே சிவமந்திரத்தால் விபூதிதரித்து விதியாகிற தூலதேகந்தனடைத்துக் காயசுத்தி ஆத்மசுத்திசெய்து கலாதியாச மந்திரத்தால் நியாசஞ்செய்து மும்மலங்களையுங் களைந்து சுத்தாத்மாவாகச் செய்து குருவானவர் பின்பு தமதுவலக்கரத்தைக் கெந்தபுட்பாதி அட்சதைகளை சிவமந்திரத்தால் அர்ச்சித்துத் தேஜோமயமாகப் பாவித்து அந்த அஸ்தத்தைச் சீஷன் சிரசின்மேல் மூலமந்திரத்தால்வைத்து அவன் சிரசிலிருக்கிற தேஜோமயமான கிரியாசத்தியாதமக விந்துவாகிறபீடமுஞ் சிற்சத்திகூடி லிங்கமயமுமாயிருக்கிற பிரமத்தைக் குருநாதன் வலக்கையில்வாங்கி இழுத்துக்கொண்டு பிரதிஷ்டித்து அந்த அஸ்தத்திலே தாபனம்செய்து இலிங்கத்தைத் தமது மானத பூசைசெய்து பாவித்துத் தாம் நமஸ்கரித்து எப்போது மிங்கே சதாசந்நிதனாய் இருக்க வேணுமென்று விண்ணப்பஞ் செய்துக்கொண்டு இப்படிக் குருவானவர், சீஷன் துவாதசாங்குலப் பிரமாணமானதற்கு அப்பாலாயிருக்கிற கனாயாகிறசிவனைத் தமதுவலக்கரத்தில் வாங்கி யதில் இருக்கப்பாவித்து நிறுத்துவது வேதாதிதீட்சையென்றறிக.

மந்திராத்மிக தீட்சைசெய்வது.

சீஷன் காணங்களிலே மௌனப் பிரணவபஞ்சாட்சரியை இருவிச் சந்தனதேவாதிகளுந் தெரிவித்து ஆறந்தாதீதமான பொருளுஞ் சடாட்சரியி லிசைவித்துவடுஸ்தலப் பிரமமானமந்திரோபதேசம்செய்வது. இனிக்கிரியாத்மிக தீட்சையாவது, முன்பு சீஷன் மத்தகத்தில் ஞானக்கிரியாத்ம சொரூபமாய்சோதிமயமான இலிங்கத்தைக் குருவானவர்தன்மனோபாவனைதிஷ்டிக ளாலே தியானத்திலிருக்கிற சோதி இலிங்கத்தையாவாகனம்செய்யும்படி சுவர்ணதிசிலைகளில் இரத்தினாதி சிலைகளில் பிரதிஷ்டிக்கவேண்டிச் சிலால ட்சணம்பார்ப்பது இலிங்கநாதம் பெரிதாகிற்கடுகச்சாவு, சத்திபீடம்பெரிதாகில் தரித்திரம், இரண்டுஞ் சமனாகிற்போகமோட்ச. மென்றறிந்து அதன் பின்பு இலிங்கநாதத்தைச்சூழச் சூத்திரம்போட்டு அதைக்கோமுகைநுனிக்கும் இலிங்கமேலுக்கும்பிடித்துச் சரியாகக்கண்டு அதைக்கொண்டு கீழ்பீடத்தையுமளந்து சரிகண்டுபின்பு அடிபீடத்துக்கும் இலிங்க நுனிக்குஞ் சரிகண்டு இந்தச்சூத்திரத்திற்பாதி கோமுகஞ்சரிகண்டு இப்படிப் பஞ்ச சூத்திர முஞ்சரிகண்டுசிலைகளால் பீடமும் இலிங்கமுமொன்றாகச்செய்து காந்திமயமான இலிங்கங்களைத் தீர்த்தபூரித கலசம்-க. பஞ்சகௌவியகலசம்-க. பசித மிசிறோதககலசம்-க. இந்த மூன்று கும்பங்களிலும் பூரிதமான கலசஸ்தாபியங்களில் கிரமமாக மூன்றுராத்திரிகளும் நூற்றெட்டுப் பஞ்சாட்சரமுஞ்செபித்து அதுகளிற் பிரதிஷ்டித்துமற்றநாலாநாள் ஆசாரியமூர்த்தியிருக்கிறகலசத்துக்குக் கிழக்காகப் பூமிசுத்திசெய்து அஷ்டதள கமலஞ்செய்து ஏழுமுழச்சீலைகொண்டுவந் ததிலொருமுழச்சீலையால் பிரமத்தைமூடியதின்மேற் சாணை ஒருஅங்குல உயரம்போட்டு இதின்மேல் பத்மமெழுதியிதை ஒருமுழச்சீலையால்மூடியிதின்மேலெள்ளுநீபோட்டு இதின்மேற்பத்மமெழுதி முழச் சீ

தத்துவநிஜாநுபோகசாரம்.

லிலமூடி இதின்மேற் கோதும்பையரிசிபோட்டு இதின்மேற் பத்மமெழுதி இ
தைமுழுச்சீலையால் மூடி இதின்மேல் நெல்லுபோட்டு இதிற்கமலமெழுதி
முழுச்சீலைமூடி இதின்மேலரிசிபோட்டு இதின்மேற் பத்மமெழுதி இதின்மே
ல் முழுச்சீலையால்மூடி இதின்மேல் துவரைபோட்டு இதில்முழுச்சீலைமூடி
இதின்மேல் சூதபத்திரி, வில்வம், ஆமலகம், குசை, அபரமாற்கம், இந்தப்
பஞ்சப்பத்திரிகளும்போட்டு இதின்மேல் முழுச்சீலைமூடி யிப்படி எழுநிலை
ஆதாரமாக இதுகளைப்பாவித்துப் பின்பு இந்த ஆதாரத்தின்மேல் இலிங்கத்
தை இலிங்கமோமுகையுத்தரமாயிருக்கச்செய்து சிர்காரப்பிராணையாமத்தால்
மூலமந்திரமாயிரஞ்செபித்து அந்தவிலிங்கத்துக்கு "மாத்துறுகா நியாசங்க
லா நியாசமந்திர நியா,, சாதிகளிற் பிராணப் பிரதிஷ்டைசெய்து பின்பு க
லசோதகத்தாலே ஸ்நாணஞ்செய்வித்துப்பரிசுத்தமாயிருக்கிற இலிங்கத்தை
அவ்விடத்தைதவிட்டுத் தன்னிடதுகையால் ஆசிரியனை எழுந்தருளச்செய்து
அஷ்டவிதார்சனை செய்து பிறகு முன்னேதன்மேதிஷ்டியில்தியானமா
யிருக்கிறசோதிமய இலிங்கத்தை யிதிலே பிரதிஷ்டைசெய்து பின்பு சீஷனை
துவாமஅஸ்தமாகிற பீடத்துள்ளே கோமுகவாமபாகமாக "அயமேஷஸ்தப
ஹவான்,,என்கிறசுருதியால் ஸ்தாபிப்பதேகிரியாதீட்சையென்பது.

இப்படி ஏழாதாரத்தின்மேல்வைத்துப் பிரதிஷ்டை பூசைசெய்து பி
ன்பு ஆசிரியன் தன்னிடதுகையில்வைத்துப்பூசைசெய்து சீஷனஸ்தத்தில்
கொடுத்தபிறகு உக. விததீட்சைசெய்வது இதின்பெயராவன ஆஞ்ஞாதீட்
சை, உவமாதீட்சை, சுவத்திகாதீட்சை, கலசாபிஷேகதீட்சை, விபூதிப்பட்
டதீட்சை, இலிங்காயித்ததீட்சை, இலிங்கசுவாயித்திபதீட்சை, தேகாபிமா
னதீட்சைஆக எ. இனிச்சமையதீட்சை, நிஸசம்சாரதீட்சை,நிர்வாணதீட்சை,
தத்துவதீட்சை,அத்தியாத்மிகதீட்சை, அனுக்கிராகதீட்சை,சத்தியசத்தவித்தி
யாதீட்சை, இப்படியான பிராணபிமானதீட்சை. எ. இனி ஏகாக்கிரசித்
ததீட்சை, திடவிர்ததீட்சை, பஞ்சேந்திரியாற்பணதீட்சை,அகிசாதிதீட்சை,
இலிங்கநிஜகாதீட்சை, மலையதீட்சை, சத்தியோமுத்திதீட்சை, பாவா
பிமானதீட்சை. எ. ஆக மூன்றுவிததீட்சையும் உக. முன்புசொன்னபடி இ
லிங்கதாரணமானபிறகுசீஷனையழைத்துஉன்கையிற்கொடுத்த லிலிங்கந்தா
ன்பிராணலிங்கம், தத்துவாதீதமானபரவஸ்து, இதுதானேநிமிஷார்த்தமாகி
லும் உன்தேகத்தைதவிடாமலிருப்பாய்திரிகாலமும்பூசிப்பாய் இலிங்காற்பிதம
ல்லாதுமற்றொன்றுங்கொள்ளாமலிருப்பாய்சகலபோகமோட்சங்க ளெல்லா
முன்கையில் வந்துதென்று நம்பு சர்வகிலேசமும்விடுவாய். இனிச் சத்தபாத
கமாவது, வவ்விபாகம், வவ்விசங்கம், அன்னியதெய்வம், பாரத்துவாரம்,
களவு,கொலை, கள்ளுஆ எ-ம். பஞ்சசூதகமும்விடுவாய் என்றிப்படிச்சொல்
லிக்குருவானவர் தம்மிட ஆஞ்ஞையால் நிறுத்துவது ஆஞ்ஞாதீட்சையாம்.

இனிப்புராதனசமையாசாரத்துக்கேற்றபடி அவர்கள் நடந்தபடியும்
புசிப்பது உவமாதீட்சை இனிச்சுவத்திகாதீட்சை, குருபஞ்சகலசோதகங்க
ளாலே சீஷனைசுத்தானஞ்செய்விப்பது கலசாபிஷேகதீட்சை,ஆகமார்த்தப்

பிரமாணமான தானங்களில் அந்தந்தமந்திரங்களால் விபூதிதரிப்பதுவிபூதிப் பட்டதீட்சை, குருவானவர் தமது கையிலிருக்கிற விலிங்கத்தைச் சீவதன் சிரசில் தரிப்பது விலிங்கசுவாத்திபதீட்சை, இப்படிச்சாத்திரப்பிரகாரத்தில் இலிங்கசம்பந்தியாகிறதே விசேஷவீரசைவமென்றறிக. இந்த ஏழுதீட்சை யுந் தேகதீட்சையென்றறிக. இப்படியானபிறகு பதினெட்டுஜாதியுங்களை ந்து சரணன்குலமாவதே சமயதீட்சை. இனி தனுகரணபுவனபோக சம் சார மநித்தியமென்றும் அஃதெல்லாம்விட்டுச் சிவபூசாசம்சாரமே கொள்வ தது நிஜசம்சாரதீட்சை. திரிமலபந்தத்தில்மனது பற்றாம லில்லையென்று நிருகிறதே நிர்வாணதீட்சை, பஞ்சவிங்சதி தத்துவமுந் தற்பதைதாம்பதமு ந் தெளிந்து விலிங்காங்க சம்பந்தமாகத் தெளிகின்றதே சுபகரமா ன தத்துவதீட்சை. இனி யிலிங்கமுமங்கமுஞ்சுயம்பு விலிங்கமேயாய் அது வே நீயென்று தெளிகிறதே அந்தியாத்மக தீட்சை. பரசிவன் தானே ஆறுவிலிங்கமாய் அவ்டாங்கமாயுமிருப்பனென்றறிக. இஃதே அனுக்கிர கதீட்சை. இனிச்சச்சிதானந்தப் பிரமமார்க்கமே சாங்கமாகத் தானே தானுக்குவது சத்தியசுத்த வித்தியாதீட்சை. இந்தவேழும் பிராணதீட்சை. இனி கரத்திலிருக்கிற இஷ்டலிங்க மல்லாமல் வேறுமொருதெய்வமுண்டென் றுமவிருக்கிறது. ஏகாக்கிறதீட்சை. தான்பிடித்த விரதநியமங்களைச் சரீர பரியந்தம்விடாமலிருப்பதேதிடவிரததீட்சை. இனிசரணன் சதியிலிங்கம்பதி யாக நிசகாயகரணபாவங்களால் சாக்கிர சொற்பன சுழுத்திகளிலுஞ் சர்வ காலமுமிஷ்டப்பிராணபாவங்களுக்கர்ப்பீப்பது பஞ்சேந்திரியாற்பணதீட்சை. அபராதஞ்செய்யாத சீவன்களையு மற்றச்சீவன்களையுங் கொல்லாதது பரம பாவசரணலட்சணம். இதைதத்தவிர்ப்பது அகிம்ஸாதீட்சை. ஆதிமத்தியாந் தமில்லாத சிவன்தானென்பது இலிங்கநிசகாதீட்சை. அந்தவிலிங்கத்தில் பா வம் இலயமாய் மனந்திரும்பாமலிருக்கிறது சமாதி மறுலையதீட்சை. இதுக ளையெல்லாமென்பாடாக வறிந்துயாதொரு நிஜமான பொருளுண்டோ அஃ தே சுயம்பு விலிங்கமாய் பார்த்தவிடமெல்லாம் இலிங்கமயமாவது சத்தியோ முத்திதீட்சை. இந்தவேழும் பாவதீட்சையென்றறிக.

இந்தவிசேஷ வீரஞ்சவன் இப்படிதீட்சையால் பரிசுத்தனுமும்
மந்திரநியாசாதி முதற் சகலதந்திரங்களுமுடையவனுய்
அர்ச்சிக்கவேண்டும் அதிற்கேவலஞ் சுருங்கச்
சொல்வது அர்ச்சனைசெய்யும்விதம்.

"ஓம்ஹ்ஹாஅனந்தசக்திதாகேஜ்யோதிரூபாயசிவாஸ்தராயபட்டு,,என்று மறுசுத்திசெய்துபின்பு"ஆபோர்வாயுத்யமசக்கியம்,, என்கிறவாக்கிய மெ ல்லாஞ்செபித்து அந்தஜலத்திற்கரசாணமுகம்பிறட்சானனஞ்செய்துபின்பு சர்வசூரியகமஃ,,என்றுபூசாக்கிரகத்திற்புகுவதுபின்பு "ஓம்ஹ்ரம் பிருதிவ்யாத் மனேநமஹஃ நிவ்ருத்திகலாயநமஹஃ,,என்றிருக்கிறதானங்களைச்சுத்திசெய்து பின்புதிரியம்பகமந்திரோர்ச்சாரணத்தாலே வடக்குக்கிழக்காக சுகாசனத்தில்

தத்துவநிஜாநுபோகசாரம்.

"ஓம்ஈம்ஈசாநுயநமா,, என்று வலதுகைவிரல் மத்திமை அநுமிகை அங்குஷ்டமிந்தமூன்றுவிரலால் விபூதியாதாரத்தில் விபூதியையெடுத்து இடதுகை அங்குஷ்ட விரலில் யகாராதி ஈகாராந்தமான பஞ்சாட்சரமுச்சரித்து அதில் வைத்துப் "பல்மாயநம,, என்று விபூதிக்கு நமஸ்கரித்து வலதுகையில் மூடி வலதுடையின்மேல்வைத்து "ஓம்நமஹிவாயநமா,, என்று-ஐக-தாம் மந்திரித்து அக்கினி நிதி முதலானதாகிலும் மந்திரித்து "மாநஸ்தோகித,, மந்திரத்தால்கையையெடுத்துவிபூதிதரிப்பது "ஓம்ஹ்ரம்யம்ஈசாநுயநம,, என்று சிரசில் "ஓம்ஹ்ராம்வாமதற்புருஷாயநம,, என்று முகத்தில் "ஓம்ஹ்ராம் சிம்அகோராயநம,, என்று இருதயத்தில் "ஓம் ஹ்ராம் மம்வாமதேவாயநமஹ,, என்றுகுய்யத்தில் "ஓம்ஹ்ராம்நம் சத்தியோசாதாயநம,, என்றுபாதத்தில் இப்படிச்சொல்லி யந்தந்தமந்திரத்தால்தரிப்பது. பின்பு சர்வாங்கத்திலுஞ் சம்புரூட்சிப்பது பின்பு விபூதியைக்கையிலெடுத்து மூலமந்திரத்தில் அக்கினிரிதிமுதல்மந்திரம்-ஐக-ம்-உச்சரித்து "ஓம்ஹ்ரோம்ஈசாநுயநம,,என்று சிரசில். ஙு. தரம் "ஓம்ஹ்ரோம் தற்புருஷாயநம,, என்று முகத்தில். சு. தரம் "ஓம்ஹ்ரம் அகோராய,, என்று இருதயத்தில். அ. தரம். "ஓம்ஹ்ராம் வாமதேவாய,, என்று குய்யத்தில். ஙூ. தரம். "ஓம்ஹ்ராம்ஹ்ரோம் சத்தியோசாதாய,, என்று பாதத்தில். ஆ. தரம். இப்படி அந்தந்த தானத்திற்றான்னஞ்செய்வது. பின்னுஞ்சிலமிசிறமான விபூதிதிரிபுண்டரமாகமுன்சொன்னசிரசு முதலான தானங்கள். ஐக. ஐசு. ஈசு. இதுகளில் தரிக்கும்போது திரியாயுஷமந்திரம், திரியம்பகமந்திரம், இதுகளாலே திரிபுண்டரந்தரிப்பது.

இனிக்கலாதியாசம் பாணிமந்திரம் ஷடாங்கநியாசம்பிரமநியாசம் இது முதலானது பூசாவிதிகளிலுள்ளபடி செய்யவென்றறிக.

விபூதி மூடிந்தபிறகு ருத்திராட்சம் தரிப்பது.

விதிப்படி சிகையில் ஏகமுகமணி. க. சிரசில், உ. முகம். ஈ. முகம். ஐ. முகம். இந்தமூன்றுவிதமணியுந்தரிக்கலாம். இதிலேதாகிலும் ஈ. மணிதரிக்கவும். மூர்த்தினியில். ஐக. முகமணி. ஈசு. காதில். எ. முகமணி. உ. சிரசில். உ. முகமணி. ஈஉ. மார்பில். சு. முகமணி. ஙஐ. பாகுத்துவயங்களில். ஐஈ முகமணி. ஐசு. மணிக்கட்டில். கூ முகமணி. ஐஉ. எஞ்ஞோபவீதத்துக்கு. ஐச. முகமணி. ஈஅ. உற்பந்தனத்துக்கு எந்தமணியாகிலும். ஙுச. அந்தந்தஸ்தானங்களில் அந்தந்த மந்திரங்களால் தரிப்பித்து இந்தமுகங்கள்கிரமமாக கிடையாவிட்டால் எந்தமுகமணியாகிலும் தரிப்பது. இப்படி ஏகமுகமுதல் ஐச, முகமந்தமாய் இதினுடைய முகதேவதைகளுக்கு இதினட்சரபேதங்களுமறிவது. இனிவரிசை சிகை. ஙூ சிரசு. க. மூர்த்தினி. க. செவி. உ. கழுத்து. க. மார்பு. க. தோளடி. க. கை. உ. மணிக்கட்டு. உ. கட்கம். க. வயிறு. இத் தானங்களிற்றரிப்பது. பின்பு. ஐஉ. மந்திரஞ்சொல்லிப்புட்பாஞ்சலிசெய்து உருத்திராட்சந் தரித்துக்கோண்டபிறகு இலிங்கத்துக்குப் பஞ்ச

செனனியம் அபிஷேகஞ்செயயவும். அப்போதனனகஞ்சுதந்தனனஞ்சிரசில் முகமும் பாரிசத்திற்புசமும் இலிங்கத்தின்மேழே பிஷ்டமும். இப்படிப்ப பாவித்து "பத்மம் ஆசமனம் அற்கியங்,, கொடுத்தச்"சத்தியோசாதம் வாமம் அகோரம்,, இந்தமுகங்களுக்குங்கொடுத்துப் பின்பு அந்த லிங்கத்தில் ஹ்ரம்சத்தியோசாதாயஓம்நமஃகோமூத்திரஞ்சுவாஹா,ஓம்ஹ்ரீம்வாமதேவாய நமா, கோமயஞ்சுவாஹா,ஓம்ஹ்ரம், அகோரஓம்நமா, பால்சுவாஹா,ஹ்ரம்ரோம் தற்புருஷாநமா. தயிர்சுவாஹா,ஓம்ஹ்ரோம், ஈசாணயநமா,நெய்சுவாஹா, இப்படிப்பஞ்சகௌவியம்அபிஷேகஞ்செய்வதுபின்புகந்தவுதகாதிமந்திரமும்மாத்துருகாதியாசமீதுபாதி மந்திரம் இப்படிக்கொத்த சேடசோபசாரங்களாலும் அர்ச்சிக்கிறவன் வீரவிசேஷன் இவனேவீரசைவபக்தனெனிறவன் இவனடக்குமார்க்கமெப்படி யென்னில்,

வீரசைவபக்தமார்க்கம். சகத்திற் சரம், அசரம்,என்றிரண்டுவிதமாம் இதிற் சரஞ்சரீரியாகிறவன் சமஸ்த சைவ விசிஷ்டனெனி மற்றச் சமயங்களிற் கிரியாகன்மாதிகமும் பலங்கொஞ்சமும் வீரசைவக்கிரியையற்பமும் பலமதிகமாம். அதெப்படி, மலையடியிலேந்திரக்கல்லடித்து விற்றவன்பலமும் மாணிக்கமெடுத்துச் சாணைபிடித்துவிற்றவன்பலமும்போலவென்றறிக. ஆகையாலிந்த விசேஷதீட்சதன் ஸ்நான போசன நித்திரைசாக்கிரம் மல மூத்திரம் விஷயம்இதுகள் செய்யும்போதுஅசுசிதோன்றுமல் சதாலிங்காங்க சம்பந்தியாக இலிங்கபோகபோகியாகித்தன்னிஷ்டஇலிங்கத்திலே ஆவாகன விசர்சநங்களில்லாமற்றிரிகாலலிங்கார்ச்சனைஞகிஇலிங்கலாபங்கிரியாலோபம்வந்தவிடத்திற் பிராணனை விடுகிறவனுக குருலிங்க சங்கம தீர்த்தப்பிரசாத விபூதி ருத்ராட்ச சிவாகம சிவகூத்திர சிவாசாரநிந்தைகேளாதவனும் அன்னிய தேவாசரணையில்லாதவனும்ப் பிறத்தியில் வவ்விகளுடனே ஆசன சயன கெமன சங்கம சகபோசனமும். இனி அந்தரங்க வவ்விகளுடனே அனிர்த அஸ்திவாக்கிய வஞ்சனை பந்திபேத உதாசின நிர்த்தயவுதுகளில்லாதவனும்ச் சிவமஹேஸ்வரனைக்கண்டால் எதிராதல் நமஸ்காரம் அவருடன்றிராதல் பிரியஞ்சொல்லுதல் ஆசனத்தில்வைப்பது அன்னபானுதிகழுதலாறுருசிகள் சமற்பிக்கிறது. சாதி, சனன, மரண, ருது, எச்சில், இந்தபஞ்ச சூதகமுமுன்சொன்ன சுத்தபாதகமுமில்லாதவனும் இலிங்காசாரபிறத்தியாசார, சிவாசார, கணசார, நியமாசார, இப்பஞ்சாசார நிஷ்டனும் தாசத்துவ, வீரதாசத்துவ, பிரத்தியத்துவ, சமயாசாரத்துவ, நிஷித்துவ, சகலாவஸ்தாத்துவங்களென்கிற ஆறுவிதமு முள்ளவனும் தசகலகற்பித லோகாசாரங்கடந்தவனும் சுதந்திர சிவனுகிச் சிவ சிவ பேதமில்லாதவனும் உபநிஷத்வாக்கியத்திற் பிறந்த வித்தையில் சந்தோஷனும், சகத் பூச்சியனும், இருக்கிறவன் வீரபக்தனென்றறிக.

இவன் சர்வாசாரத்தலம் நடகுமவிதம்.

இனி ஆசாரலிங்கம், குருலிங்கம், சிவலிங்கம், சங்கமலிங்கம், பிரசாதலிங்கம், மகாலிங்கம், ஆ இலிங்கம். சு. இதின்விபரம், ஆசாரலிங்கந் திரிவிதம். சதாசாரம், நியதாசாரம், கணசாரம், இதின்விபரம் தீட்சையிலே

தத்துவநிஜாநுபோகசாரம்.

பூர்வசென்மம்போய்க் குருரூபமாகிறதே சதாசாரம். இலிங்கயிக்கத்திலுல் குரக்குமனங்கெடுத்து இலிங்கவிரதமாகநிற்றலே நியதாசாரம். சங்கமபக்தியிலுலே நானெனதென்கிற தமறநிற்பதுவே கணாசாரம். ஆகு.

இனிக்குருலிங்கசந்திரிவிதம். தீட்சை, தீட்சை, சுவானுபவம், இதிற்றீட்சையாவது. குருசிட்சையாவது. சங்கமம், சுவானுபவமாவது. தன்னைத்தானறிவது. ஆகு. இனிச்சிவலிங்கசந்திரிவிதம். இஷ்டலிங்கம், பிராணலிங்கம், திரிதிலிங்கம். இதில் இஷ்டலிங்கமாவது. குருநாதனிதுவே நீயென்று கொடுத்தது பிராணலிங்கமாவது, மலைகுணவிகற்பங்களற்றது. திரிதிலிங்கமாவது, சாக்கிர, சொப்பன, சுழித்தியினும் இலிங்கமல்லாமல் மற்றொன்றுமறியாதவறிவு. ஆகு. இனிச் சங்கமலிங்கசந் திரிவிதம். சுயசரபரம் இதிற் சுயமென்பதுதான் சரமென்பது லாஞ்சன மூன்றுய் நடப்பது பரமென்றுலறிவைப்பிடித்து நடப்பது. ஆகு. இனிப் பிரசாத இலிங்கசந்திரிவிதஞ் சுத்தப்பிரசாத சித்தப்பிரசாத பிரசித்தப் பிரசாதம்.

இதிற் சுத்தமாவது குருமுகத்திலுல் மலத்திரயமும்போய்த் தான்சிவதனுவானதுசித்தமாவது இலிங்கத்திலுல் காணதன்மம்போய்த்தான் சுபாவமாய் நின்றது பிரசித்தமாவது சங்கமத்திலுலே சைதன்னிய சொரூபந்தானேயாய்க்கண்டிதமற்று நின்றவறிவு. ஆகு. இனி மகாலிங்கசந்திரிவிதம். பிண்டாகாசம், அண்டாகாசம், விந்தாகாசம், இதிற்பிண்டாகாசமாவது, பிண்டத்தை அயிக்கங் கொண்டலிங்கம். அண்டாகாசமாவது, அண்டத்தை விழுங்கினலிங்கம். விந்தாகாசமாவது, அறிவை விழுங்கினலிங்கம். ஆகு. ஆ சு-றி-ய-தலாமறிய. இனி அங்கத்தலமாறுவது, பக்தன்-மகேசன்- பிரசாதி-பிராணலிங்கி-சரணன்-அயிக்கன் ஆக. சு. இதிற் பக்தன்-திரிவிதம்-குருபக்தி-இலிங்கபக்தி-சங்கமபக்தி. இதிற் குருபக்தியாவது, தனுக்கிரியையால் தனுவுமனமுமற்பிக்கிறது. சங்கமபத்தியாவது, தனக்கிரியையாலே தனுமனதனங்களையற்பிக்கிறது. ஆக கு. இனிமகேசன் திரிவிதம், இகலோகவீர்ன்பரலோகவீரன்-இலிங்கவீரன். இதில் இகலோகவீரனுவது, மத்தியலோகத்துக் கணங்கள் மெச்சும்படி சர்வசங்க பரித்தியாகஞ்செய்து அதற்கேற்ற நடைநொடிபாவசீனயனுபவித்து நடப்பது. இனி இலிங்கவீரனுவது, அங்கலிங்கவயிக்கியனுய்ச்சகலகாணமூன்சமைதமையாதிசாதன சதுஷ்டயம்வந்து சமாந்திஷ்டையிலடங்கி நிற்பது. ஆக. கு. இனிப்பிரசாதித்தலந் திரிவிதம், அற்பிதப்பிரசாதி-அவதானப்பிரசாதி-பரிணமப்பிரசாதி. இதிலற்பிதப்பிரசாதியாவது, சகலபதார்த்தங்களையும் காய்க்கிறபடியா லனைத்தொட்டு இஷ்டலிங்கத்துக்கற்பித்துக் கொள்ளையாலும் அற்பியாதெல்லாம் விடுகையென்றறிக. இனி அவதானப்பிரசாதியாவது. பஞ்சேந்திரியங்களில் பஞ்சலிங்கபிரதிஷ்டைசெய்துசத்தாதி விஷயங்கள் வருகிறதைதமனவசத்தாலேதொட்டுப்பஞ்சேந்திரியவிலிங்கங்களுக்குமறவாமலற்பிக்கிறது. பரிணமப்பிரசாதியாவது அங்காச்சரியமதிந்துலிங்காச்சரியமாய்நின்று பாவித்து, அடங்கிநிற்பது ஆக-கு.

இனிப்பிராணலிங்கந்திரிவிதம். ஆசாரப்பிராணி இலிங்கப்பிராணி சங்கமப்பிராணி இதில் ஆசாரப்பிராணியாவது; மலேவாக்குக்காயங்களினுல் ஆசாரவியவகாரத்தைக்கிரகித்து அநுசாரங்களைக்கைவிடுகிறது. இலிங்கப்பிராணியாவது,பயரங்கவுபசாரக்கிரியையற்று அந்தரங்கத்தில் இலிங்கத்துக்குத்தன்னுடைய பிராணனுகிறசீவனைத்தானே இலிங்கமாக தியானசமாதியினுல்பூசைபண்ணுகிறவன்இலிங்கப்பிராணி சங்கமப்பிராணியாவது, "பாகியபக்திமறந்து,,தன்னுடையதனுமனப்பிராணன்களுடனேகூடியறிவில்மூந்தியவவ்வறிவும்மே பாகஅறிவைச்சமற்பித்தவன்,ஆக-ங. இனிச்சரணத்தலந்திரிவிதம்,இஷ்டலிங்கார்ச்சகன்,பிராணலிங்கார்ச்சகன்,பாவலிங்கார்ச்சகனிதிலிஷ்டலிங்கார்ச்சகனுவது, அனிஷ்டகாரியங்கள், நஷ்டமாக்கிக்கொண்டவனுய்பிராணலிலிங்கார்ச்சகனுவது, சுபபரமறிந்தவனுய் பாவலிங்கார்ச்சகனுவது, இகபரமறிந்து இகபரம் விட்டவனுகையால். ஆக-ங. இனி அயிக்கியத்தலந்திரிவிதம், காய லிலிங்கவயிக்கன், சிவலிங்கவயிக்கன்,பாலிங்கவயிக்கன், இதிற்காயலிங்கனுவது, கிரியாகாரமற்றது. சிவலிங்கனுவது, அனுபாவமற்றது. பாவலிங்கனுவது, தான் இலயமாகிறது. ஆக-ங. இப்பிடி ஆறுதலத்துக்கும். ஐ-த்தலமென்றறிக. இந்த ஙசு-தலமான சர்வாசாரதலத்தைக்கூடல் சென்ன சங்கயனிடத்தில் வசவணனே அறிவானென்றறிக.

இப்படியறியும்போது வீரசைவத்திலுள்ள சாத்திரமெல்லாம் குறைவறப்பார்த்தவனுக்கு இதின் விஸ்தாரந்தெரியுமென்றறிக. இனிப்பின்னும் பக்தனை ஆறுவிதலிங்கங்களிலும் வர்த்தனைப்பேதத்தால் ஒன்று ஆறுகி-ஙசு பேதமாம். இதில் ஆசாரலிலிங்கபூசகன் ஆறுவிதமாம். ஆசாரலிலிங்கமோகியானவன்ஆசாரவீனரான ஸ்திரிபுத்திராதிகளைவிட்டு நிர்மோகமாயிருப்பது. ஆசார லிலிங்க பக்தனுனவன் சிவாசாரத்துக்கு விருத்தமான பூர்வாசாரங்களைவிட்டவன், ஆசாரலிலிங்கபூசகனுனவன் அன்னியதெய்வவசனங்களை விட்டு இலிங்கார்ச்சனை செய்கிறவன், ஆசாரலிலிங்கவீரனுனவன்தான்பிடித்த ஆசாரம் பிராணஹானி வரும்போதும் விடாமற்செய்கிறவன் ஆசார லிலிங்கப்பிரசாதியானவன், சுசித்தம சித்துவாதி, சங்கற்பரகிதன் ஆசார லிலிங்கப் பிராணியானவன் சிவமகேஸ்வரனை நிந்தியாதவன். ஆக-சு. இனி குருலிங்கபக்தன்-சு-விதம். மாதா பிதா புத்திரமோகம்விட்டுக்குருவினிடத்திலே மோகமானவன் குருலிங்கமோகி, பந்துக்களுபசாரம்விட்டுக் குருவினிடத்திலனுராகமுடையவன் குருலிங்கபக்தன்.வேறு வேறு பூசைதோத்திரமில்லாமற் குருபூசை குருதோத்திரமுள்ளவனே குருலிங்கபூசகன். அன்னியமார்க்கங்களைவிட்டுக் குருமார்க்கமே வர்த்திக்கிறவன் குருலிங்கவீரன். குருவிஞ்ஞைதப்பாதவனே குருப்பிரசாதி. அன்னிய சார்வைகனுக்கு வெட்கிக் குருசேர்வைப்பிரியனே குருலிங்கப்பிராணி. ஆக-சு இனிச்சிவலிங்கபக்தன்-சு-விதம். அன்னிய மோகமில்லாதவனே சிவலிங்கமோகி, அன்னியதெய்வநிராகரனே சிவலிங்கபக்தன், அன்னியதெய்வத்தைச்சேவியாதவனே சிவலிங்கபூசகன், புண்ணியகூத்திரயாத்திரை விட்டவனேசிவலிங்கவீரன், இனிச்சுகதுக்காதிகளைச்சயிக்கிறவன்சிவலிங்கப்பிரசாதி

சம்போகாதிகளில்லாதவனேசிவலிங்கப்பிராணி, ஆக-சு-இனிச்சங்கமபக்தன் சு-விதம்.

இதிற்றன்பூர்வாசாரங்களை விட்டவனே சங்கமலிங்கமோகி, சாதிகுலாபிமானம் விட்டவனே சங்கமலிங்கபக்தன், அன்னியாற்சனைகளைத்தேடாதவனே சங்கமலிங்கபூசகன், அர்த்தப்பிராணபிமானங்களைச் சங்கமத்துக்குக் கொடுத்துத்திரும்பியதில் ஆசையில்லாதவனே சங்கமலிங்கவீரன், இனிச்சங்கமன் சகலதிரவியங்களுந் தொட்டதல்லாமல் வேறுகொள்ளாதவனே சங்கமப்பிரசாதி, சங்கமனே சிவனென்கிற விசுவாசமே சங்கமப்பிராணி ஆ

இனிப் பிரசாதபக்தன்-சு-விதம் இதில் அன்னியருசி யறியாதவனே பிரசாதலிங்கமோகி பூர்வாசாரங்களைவிட்டவனே பிரசாதலிங்கபக்தன் அன்னியருடனே வினைகசம் பாஷணமில்லாதவனே பிரசாதலிங்கபூசகன் அன்னியதிரவியாதிகளில் கையிடாதவனே பிரசாதலிங்கவீரன் சிவயோகிசையாதிகளில்லாதவனே பிரசாதலிங்கப்பிரசாதி தன்னுத்மாவை நிக்கிரகஞ் செய்யாதவனே பிரசாதலிங்கப்பிராணி ஆ - சு - இனி மகாலிங்கபக்தன் - சு - விதம் இதில் லோகவிருத்தாந்தங்களெல்லாம் நானேயென்கிறவன் மகாலிங்கமோகி பூர்வபக்தியாதிக ளனுசந்தானமில்லாதவனே மகாலிங்கபக்தன்அஞ்ஞானுதிகளுடனே சங்கம சம்பாஷணமில்லாதவனே மகாலிங்கபூசகன் உற்பத்தி திதி லயங்களிலே சிந்தனையில்லாதவனே மகாலிங்கவீரன் பந்திபோசனங்களில் வஞ்சனையில்லாதவனே மகாலிங்கப்பிரசாதி பிறத்தியி லர்ச்சனையற்பனைகளெல்லா மந்தரங்கக்கிரியா நிஷ்டனே மகாலிங்கப்பிராணி ஆ - சு - இப்படி ஷடுஸ்தல வர்த்தனைகளிலே பிண்டாதிஞான சூனியமான-ாக - தல்க்கிரமத்தில் அங்கஸ்தலம் - சஅ - இலிங்கஸ்தலம் - ருஎ - ஆ - ாக - இப்படி - ாக - தலமுஞ் சர்வாசாரத்தலமுமனுபவிக்கிறவன் வீரவிசேஷசைவனென்றறிக. முத்திநிலையான அனுபவமாவது, நிராபாரவீரசைவநிலை காயாற்பணபேதங் காயாற்பணமாவது' பிடித்துண்கிறதொழில் ஆசாரலிங்கம், உதகமுதலான்தெல்லாங் குடிக்கிற தொழில் குருலிங்கம் கடித்துத்தின்கிற தொழில் சிவலிங்கம், உறிஞ்சுந்தொழில் சங்கமலிங்கம்,நக்கிறதொழில் பிரசாதலிங்கம், இந்த ஐந்துதொழிலையுங் காண்கிற சாட்சித்தொழில் மகாலிங்கம் ஆ - சு - இந்தஆறு தொழிலையுங் குருலிங்கமாகிற நாக்கல்லவோசெய்யுதென்னிற்குருலிங்கம் ருசிகளையறிகிறதல்லாமலிதைப்போலத் தொழிலைச் செய்யாதென்றறிக. காயாற்பணத்தைத்தந்த தாலு லோஷ்டகுரவளைகளாலே செய்வதென்றறிக. இனிக் கரணாற்பணமாவது, மூக்கு, நாக்கு, கண், தோல், செவி, இர்தயம், இந்த ஆறுதானத்திலும் ஆசாராதி யாறுலிங்கமிருக்கும். இந்த ஆறுதலத்திலும், வருகிற எதிர் விஷயமான கந்த, ரஸ,ரூப,பரிச சத்தம்,இந்த -ரு-ம் அறியும் இந்த ஐந்தின்திர்த்தியை மகாலிங்கமறியும் இப்படி யாசாராதி யாறுலிங்கமறியுமென்றறிக. இனி மிசிரார்ப்பணமாவது, பஞ்சீகரணபேதத்தால் ஒன்றிலொன்று மிசிறமாய்க் கூடுகையால் மிசிரார்ப்பணமென்றறிக. இனி மூக்

லொசாரலிங்கங் கெந்தமறியும்போது துற்கந்த சுகந்தங்களை யாறுவிதமாய றியும். அதெப்படி வோகிழங்கிற் கெந்தமாசாரத்திலொசாரலிங்க மறியும் மம்பிசினிற் கெந்தமாசாரத்திற் குருலிங்கமறியும் இதிற் பட்டைகெந்தமு மரத்தோடைசூடிற்றென்றறிக. துளிரிலை இதின் கெந்தம் ஆசாரத்திற் சிவ லிங்கமறியும் அரும்பு பூவின்கந்தம் ஆசாரத்திற் சங்கமலிங்கமறியும் காய்ப ழுத்தின்கந்தம் ஆசாரத்திற் பிரசாதலிங்கமறியும் இந்த ஐந்துகந்தத்தின் திர்த்திகளை யாசாரத்தில் மகாலிங்கமறியும் இனிப் பிண்டாண்டசெகத்தில் உள்ளகெந்த விதங்களெல்லா மிந்த ஆறுவிதத்தி லடங்குமென்றறிக. இனி நாக்கிலிருந்து குருலிங்கம் நல்லரசம் பொல்லாரசங்களையறியுங் குருலொசா ரலிங்கந் திதிப்பானவகையெல்லா மறியுங் குருவிற் குருலிங்கந் துவர்ப்புவ கையெல்லாமறியுங் குருவிற் சிவலிங்கங் காறல்கார மூதலானதெல்லாமறியுங் குருவிற் சங்கமலிங்கம் புளிப்புவகையெல்லாமறியுங் குருவிற் பிரசாதலிங்கங் கசப்புவகையெல்லாமறியும் இந்த ஐந்துருசியின் திர்த்தியுங்குருவில் மகாலிங் தமறியும் இனி உப்புமுதலான பின்னுஞ் சிலருசிகளெல்லாமிந்த ஆறிலடங் குமென்றறிக. இனிக் கண்ணிற் சிவலிங்கமாறுவிதமாக நல்லரூபு, பொல் லாரூபுகளைக் காணும் இனிச் சிவத்திலாசாரம் பொன்னிறமறியுஞ் சிவத்திற் குருவெள்ளைநிறமறியுஞ் சிவத்திற் சிவஞ் சிவப்புநிறமறியுஞ் சிவத்திற்சங் மங் குங்கும நிறமறியுஞ் சிவத்திற் பிரசாதம் நீலநிறமறியும் இவையைந்து ரூபுத்திர்த்தியுஞ் சிவத்தில் மகாலிங்கமறியும் இனித் தொக்கிற் சங்கமலிங் கம் நல்லபரிசம் பொல்லாப்பரிசங்களை யறியுஞ் சங்கமத்தி லாசாரலிங்கங் கடினபரிசவிதமறியுஞ் சங்கமத்திற் குருசயித்திய பரிசமறியுஞ் சங்கமத்திற் சிவம் உஷ்ணபரிசமறியுஞ் சங்கமத்திற் சங்கமமிருது பரிசமறியுஞ் சங்கம த்திற் பிரசாதம் மிகிறபரிசமறியுஞ் இந்த ஐந்துவித பரிசதிர்த்தியுஞ்சங்கமத் தில் மகாலிங்கமறியும் ஆ - சு - இனிக் காதிற்பிரசாதலிங்க மாறுவிதமாக நல்லசத்தம் பொல்லாசத்தமறியும் பிரசாதத்தி லாசாரந் தாளமுதலான கஞ்சவாத்தியமறியும் பிரசாதத்திற் குருதந்திவிதமறியும் பிரசாதத்திற் சிவ ந்தோற் கருவிவிதமறியும் பிரசாதத்திற் சங்கமந் துளைக்கருவிவிதமறியும் பிரசாதத்திற் பிரசாத வசன கீத முதலான கண்டவாத்திய விதமறியும் இந்த ஐந்துவிதத்திர்த்தி யெல்லாம் பிரசாதத்தில் மகாலிங்கமறியும் ஆ சு- இனி யிர்தயத்தில் மகாலிங்க மாறுவிதமாய் நல்லதிர்த்திபொல்லாத்திர்த்தி களை யறியும் இனி மகாலிங்கத்திலுசாரங் கெந்தத்திர்த்தியறியும் மகாலிங்கத் தின்குரு ரசதிர்த்தியறியும் மகாலிங்கத்தின் சிவலிங்கம் ரூபதிர்த்தியறியும்ம காலிங்கத்தின்சங்கமம்பரிசதிர்த்தியறியும் மகாலிங்கத்தின் பிரசாதஞ்சத்தத் திர்த்தியறியும் இந்த ஐந்துவிததிர்த்தியும் மகாலிங்கத்தில் மகாலிங்கமறியும் ஆ-சு-இப்படி யாறுலிங்கத்திலும் - ஈசு - லிங்கபிசிறமா யறியுமென்றறிக.

இனிமிசிரூற்பணத்தில் மிகிறமாகப் பாவாற்பணமாவது, முன்மிசிரூற்ப ணம்-ஈசு-லிங்கமாக ஒவ்வொருமுகத்திலிருந்து வொவ்வொருவிஷயத்தைக் கொள்ளும்போதுஒன்றுஆறுவிதமாக-ஈசு-க்கு-உகசு-இலிங்கமானபேதமெப் படியென்னிற் சத்தாதி விஷயங்களைப் பற்றும்போது யாதாமொருவிஷ

யாதிபேதங்களிலே மூந்தப்போய்த்தொடுவது ஆசாரலிங்கம் அதின்பிறகு உறத்தொட்டு இது வென்றறிவது குருலிங்கம் பின்பு அறிந்ததைச் சந்தேகமறநிச்சயஞ்செய்வது சிவலிங்கம் பின்பு அதினுடனேசுகித்துப்பொருந்துவது சங்கமலிங்கம் இதில் பரிணமிக்கிறது பிரசாதலிங்கம் இந்த ஐந்து விதலிங்கத்தில் வந்த - ரு - விதத்திரித்தியுங்கொள்வது மகாலிங்கம் இப்படி ஒன்றுக்காறு விதமாய் - உகசு - இலிங்கமாம் இப்படிக் காயாற்பண கிரியைசெய்யும்போது ஒருகிரியை செய்தவுடனேயதிலேபேதமானக்கிரியைகள்வரும் இனிக் காரணற்பணங் கொள்ளும்போது சத்தாதி விஷயத்திலொரு விஷயம் புசிக்கும்போதும் அதில் பேதமான புசிப்புகள்வரும் இனி மிசிரற்பணங்கொள்ளும் போதும் ஒருலிங்கத்தி லாறுலிங்கமா யொரு விஷயத்தை யாறுவிதமாய்ப் புசிக்கும்போது அதிலேயும் பேதமான புசிப்புகள்வரும் இனி மிசிறத்தில் மிசிறமான பாவாற்பணமா யாறுகரணமாகிற ஆறுலிங்கமு மறியும்போது அதிலேயுஞ் சூட்சுமபேதங்களாய்வரும் இப்படி வருகையாலே - உகசு - லிங்கமென்று நிச்சயிக்கப் போகாதென்னில் எத்தனைவிஷயங்களிலு மெத்தனைபேதங்கள் வந்தாலும் ஆசாராதி யாறுலிங்கமேதிரும்பத்திரும்பவருகிறதல்லாமல்வேறில்லாதாகையா லந்தப்படி இலக்கஞ்சொன்னதென்றறிக. இப்படி யனேகவிதமாக விரிகிறலிங்கம் பரிபூரணமாய் ஞானனந்தமாய்ப் பிண்டாண்டங்களிலொட்டற்றுப் பிண்டாண்டங்களிலேயெப்போதும் பிரசன்னமாகி யகலாதிருக்கும் இதைச் சாதிக்கிற தெல்லாருக்கு மரிதென்றறிக. ஆனல் சாதிக்கிறதெப்படியென்னிற் சித்தகுணங்கெட்டுச் சித்தநிலவந்தஅஸ்தத்திலாசாரலிங்கம் பதியும்இனி புத்திகுணங்கெட்டுச் சுபுத்திநிலை யஸ்தத்தில் குருலிங்கம் பதியும் ஆங்காரமாண்டு நிராங்காரவத்தத்திற் சிவ குருலிங்கம்பதியும் மனதுமாண்டுசுமன அஸ்தத்திற் சங்கமலிங்கம்பதியும் அஞ்ஞானமாண்டு சுஞ்ஞானவத்தத்தில் பிரசாதலிங்கம்பதியுந் தற்பாவமாண்டு சற்பாவஅஸ்தத்தில்மகாலிங்கம்பதியும் இப்படிமாயாசம்பந்தங்களானகரணங்கள்கெட்டுச் சித்துசம்பந்தமான கரணங்கள் பிறந்தவிடத்தில் இலிங்கங்கள் சத்தியமாய்ப் புதியுமென்றறிக.இந்த இலிங்கங்கள்பதிந்தாலொழிய இலிங்கசையோகமில்லை சையோகமாலொழிய இலிங்காற்பிதமில்லைஇலிங்காற்பிதமாலொழியப்பிரசாதபிரசன்ன தத்துவமில்லையாகையாலஸ்தங்கள்சுத்தமாகிறதும் நிலைகொள்ளுகிறதும் பேதமெப்படி என்னில் மூலாதாரச் சக்கரபேதங் குருமுகமாயறிந்து அதிற் சிவப்புவர்ணமும் நாலிதழும்வ, சா, ஷா, ஸா, என்கிறநாலட்சரமும்பிரமாதிதெய்வமுஞ்சாக்கிராவஸ்தையும் இந்த ஆறுவிதத்தையும் நகாரபீசாக் கரத்தாலறிந்து கிரியாசத்தியாலுண்டாகிற பிராணவாயுவாலுண்டாகிற மலிவுகளெல்லா மறுத்திட்டுப் பிராணவாயுவியங்காமல் நிறுத்திச் சற்பத்திபால் மேற்குத்திக்குச் சத்தியோசாத முகத்தால் பிருதிவியின் கடினகுணத்தைக் கிங்கிறுவாணபயபக்தியால் அறுத்துத் தனுகுணபேதங்கள்நர்ஸ்தியாய்யோக நிஷ்டைகளாசாதிக்கிறது மாயாசித்த மாண்டுசுசித்தமாம் இந்தச் சுசித்தமே இலிங்கப்பிரசன்னத்துக்கு அஸ்தமென்று மிப்படிக் கைவந்தே பக்தத்தலமென்றறிக.

இப்படி ஆருத்தாரங்களுஞ் சோதித்துநின்றுபார்த்தாற் சுத்தஅஸ்தத்தில் இலிங்கசாயித்தியமாம். இதல்லாமலுஞ் சர்வ சங்கப்பரித்தியாகத்திலேயுத்தமசங்காரத்தில்மத்திமம். இதிலெதுதனுக்கனுகூலமாயிருந்துதோ அதில்சமைதமாதி ஷட்கசம்பத்தியகுணம்வந்து சகலஅஞ்ஞானகுணங்களும் விட்டுநடைநொடிபாவனைமூன்றிலும் ஞானமேமிஞ்சித் தான் மதானுசாரமான குருவிங்கசங்கமமே பாயரங்கத்தில்பொருளாய்ச் சத்துச்சித்தானந்தமேஅந்தரங்கத்தில்பொருளா யிந்தவிரண்டு மேகீபாவமென்றறிந்து நடக்கைவந்தாலும் அஸ்தம் சுசியாய் இலிங்கம்பதியுமென்றறிக.

பின்னுமொருவிதம். அனுபவ சடத்தலத்தில்நிரசனநிர்த்தேசத்தல மறிந்து பக்தாதி தலமாறு பேருக்கு மின்ன வின்ன குணமுநடைநொடி பாவனையும் வந்தால் ஆனவாதி மலங்களுந்தீர்ந்து அஸ்தமும் நிலைகொண்டு இலிங்கமும் பதியுமென்கையாலிப்படியுமாமென்றறிக. பின்னுமொருவிதம். இலிங்கப்பிரசன்னமாய்ப் பதிகிறது யோகாப்பியா சங்களால் திச சக்கரங்களிலும் பேதாபேதமாய் இலட்சியமாகிறதண்டகாகிருதி, தாரகாகிருதி, குண்டலாகிருதி, அர்த்தசந்திராகிருதி, தற்பணிகிருதி, சோதியாகிருதி, முதலான சோதிமயங்களைக் கண்டு இன்னலட்சியம் இன்னவிலிங்கமென்றறிந்து அதில் இலயமாகிறதொருவிதம், இனி அறிவையறிந்து நிர்விகற்ப சமாதி நிஷ்டைகளால் மூன்று துரியதெரிசனமுமாய் இதுவே சத்துசித்தானந்தமாகிற இவ்டப்பிராண பாவலிங்கமென்றறிகிறதொருவிதம். இப்படி யிலிங்கசாயித்தியமாகிற உபாயங்கள் நாலுவிதமுண்டு. இதில் யோகாப்பியாசங்களாலே எல்லாக்குணங்களையுங் கெடுத்து வாயுத்தாரணைகள் செய்து சமாதி நிலைவந்து இலிங்க சாதித்தியமாவது நல்லதென்றறிக.

ளஎஉ. இசைத்திடுமாறுசத்தியினமதனத்திலே
விசைப்புளதேதசவாய்வைமேலறவேநிறுத்தி
திசைப்படுசக்கரமாறுந்திகழுமாறுநிறமு
நிசத்தறுவிததளமு நிகழறுவிதவர்ணமும்.

ளஎசு. மூவிரண்டதிதெய்வமுமுயங்குமாரவத்தையையு
மேவுறுவீசாகரத்தால்மேவாமலேயறிந்து
பாவந்தறமுகமாம்பகர்சத்திசவ்விசார
மோவிடாதேதபிடித்தேதியுபரறுவிசாரத்தாலே.

ளஎஞ. காணவேபட்டதானகனபத்தியாறிலே
சேணுறுதத்துவமார்க்கந்திகழாறுதிக்குடைய
மாணுறுமுகமாறையுமாயமதறவறிந்தே
வீணுறபூதமாறின்விடமானகுணமாறையும்.

ளஅ

ஆறு பக்தியாலே மங்குவித்து ஆறுதாரத்திலும் இலிங்கமங்கங் கொள் ளுமென்றறிக. இந்த விதத்தால் ஷடுஸ்தல அனுபவம் வரவேண்டும். இனி க் குருலிங்க சங்கம மூன்றில் நாதவிந்துக்களை யறிந்து ஆத்மத் திரயத்தி விஷ்டப் பிராணபாவலிங்கங்களைச் சம்பந்தித்துத் தனுமூன்றில் நியாகாங் காதி மூன்றையுஞ் சம்பந்தித்து நிர்த்தேசத்திலாறங்கமு மொன்றுவது, பக் தன், மகேச, னிரண்டுந் தியாகாங்கம், பிரசாதி, பிராணலிலிங்கி, யிரண்டும் போகாங்கம். சரணன், அயிக்கனிரண்டும் யோகாங்கம். இப்படி பக்தாதியா றுதலும் மூன்றங்கமாம். ஆறுஇலிங்கமு மூன்று இலிங்கமாம். இது இஷ்ட ப்பிராணபாவமாம். இப்படி இலிங்கத்தலமு மங்கத்தலமு மாறுவிதமாம்.

இதிற் பக்ததலம் பக்த சங்கமம் இரண்டுதலமாம்.

அதெப்படியென்னில், பக்தன் பிரசாதி மகேசன் மூன்றும் பக்ததல மாம். பிராணலிங்கி, சரணன், அயிக்கன், மூன்றுதலமும் சங்கமத்தலமாம், இஃதிரண்டும் "ஏகமேவாத்விதி யம் ப்ருஹ்மா,, என்கிறவாக்கியத்தால் "பச் சிம நிஜப்பதத்தே,, விளங்கப்பட்ட நிசப்பிரகாசமானதுதானே-உ-சு-ங்க-சு-உகசு-இப்படியாய் மிகிறப்பிண்டாண்டத்தில் பரிபூரணமாய் ஏகமாய் விளங் கிறது கண்டு இதின்மே லொன்றில்லாமையால் இதுதானே மூன்சொன்ன தெல்லாம் ஆனதென்று கண்டு திரும்ப-உகசு-ம்-ங்சு-ல் கண்டு-ங்சு-ம்-சு-ல்-கண்டு-சு-ம்-ங-ல்-கண்டு ங-ம்-உ-ல்-கண்டு உ-ம்-க-ல்-கண்டு நினைப்பும்மறப்பு மற்றுச்சிவயோகசமாதியிலே முன்சொன்னதெல்லாமிறந்து நிற்சூனியநிரா ளமாய் வாக்குமனுதீதமாய் நின்றது அகண்டபரிபூரணலிலிங்கமென்றுஅனு பவத்திற் குருமுகத்தாலறியவேண்டும். இதுவும் சர்வாங்க லிலிங்கசாகித்திய மென்றறிக.

எல்லாம் இலிங்கமாச்சுதென்பானேன், லீலியமகமசிருஷ்டி,லியசிருஷ் டிக்குப்பிர்ம மாதார பூதமாகையாலுஞ்சர்வமுமதினிடத்தினின்றுண்டாகை யாலும் அதுவே செகமாகையாலும் எல்லாம் இலிங்கமென்ற தென்றறிக.

சாட்சி உபநிஷத்துகளில் "ஸத்யஜ்ஞான,, அனந்த ஆனந்தப் பிரமந் தானே கடோபாதி பரிச்சின்ன பேதங்களால் பிண்டாண்ட செகமெல்லா மூள்ளும்புறம்பு மாகையாலும் "அஹம்ப்ருஹ்மாஹமஸ்மிப்ருஹ்மாஹமஸ்மி,, என்கிற வாக்கியத்தாலுஞ் சர்வாங்க லிலிங்கமாயிற்றென்றறிக. இப்படிச் சர்வாங்கலிலிங்க சாகித்தியுளன நிராபார வீரசைவன் பூரண ஞானியானட டியால் சம்சார சவுக்கியங்கள்விட்டு இப்பால் வித்தையே சந்தோஷமே பி ள்ளை, விராகமே பந்துக்கள், க்ஷமையே பரிகாரகன், சாந்தியே தோழன், பக்தியே தாய், ஆசாரமே தகப்பன், சத்தியமே பெண், கிரத்தையே அ ண்ணன் தம்பி மித்திராதி, சற்குணமே புத்திரர், ஞானமே தேகம், விசார மே கேஷத்திரம், "அஹிம்சையேஏதாவலி,,அஸ்தையேவேதாசனு,தர்மமே வா கனம்,தயையே ஆசாரியன்,முத்தியே தேசம்,இதுமுதலான பரமார்த்தகுடி ம் பசம்சாரியாய் கந்தை, தெண்டு, கமண்டலம், பாத்திரை,விபூதி, ககூப்பா ளம்,என்கிற பயிரங்க பஞ்சமுத்திரைகளும் அந்தந்தமந்திரங்களால்தரித்துக் கொண்டு அந்தரங்கத்திற் சமதையேகந்தை, ஞானமே தெண்டு, தயவேக

மண்டலம், வயிராக்கியமே பிட்சாபாத்திரம், கூனமையே விபூதி ஆதாரம் இ
ந்த அந்தரங்க பஞ்சமுத்திரைகளுமுண்டாய் சடைபோலும் அஜிதாதிகம் பர
விசித்திரவேஷங்கள் தரித்து நியமமாகப் பிட்சை பண்ணிக்கொண்டு விபூதி
தூளன தாரணைகிச் சிவார்ச்சனைதியானஸ்தல குளவிசார இலிங்காங்க சை
யோகவிரதனுகி ஞானக்கிரியாசம்பன்னனுகி ரஸ ரஸாயன வாதவகிய சோது
ரிஷக்கிறைய விக்கிறையாதி லௌகீக விசாரங்கள்விட்டு வனிதாதி விஷய
விரத்தனுகிக் காட்டிலிருந்து குரோதாதி மற்றுமுள்ள அவகுணங்களைவிட்டு
இருக்கிறவன் நிராபார வீரசைவனென்றறிக. இப்படி ஷடுஸ்தலஅனுபோகி
யான நிராபாரி சகலவர்ணஞ் சகல ஆசிரமஞ் சகல சீவனுக்கும் நிராபாரி சே
ஷ்ட னென்றறிக. அதிவன்னுசிரமி யென்றும்பெயர். ஆகையால், வீரசா
மானியன், வீர விசேஷன், வீரநிராபாரன், இம்மூவர் தீட்சையும் முடிந்த
தென்றறிக.

அங்கத்தில் இலிங்கந்தரிக்கிறது சிரேஷ்டமென்று வேதஞ்சொல்வது.

☞ கக.

இந்தவேதங்கள் இலிங்கதாரணவிதி சொல்லுமென்றறிக. இதெல்லாம் ஆகமபுராணங்களிலே வெகுவாயுண்டு சாட்சி ஆகமத்தில். ☞ கஉ.

இப்படி வீராகமத்திற்கோடி சம்மிதையுண்டாமென்றறிக.

இதல்லாமல் வாதுளாகமத்திற் சிவசித்தாந்த தந்திரமெல்லாம் ஆறுயிர
ங்கிரந்தம் அனுபவவீரசைவஷடுஸ்தலம் எட்டு நிர்த்தேசத்தலமுஞ்சொல்லு
மென்றறிக. வாதூலசுத்தாக்ஞை ஆயிரத்தில் மந்திரகீலகப்படலஞ் சொல்லு
மென்றறிக. இதல்லாமற் பிரங்கி, தூறுவாசர், அஜன், சகராட்சனன், வா
ணாசுரன், பிரமா, விஷ்ணு, உருத்திரன், இந்திரன், நந்திகேஸ்வரன், கந்த
ன், வீரபத்திரன், இவர்கள் முதலாய் சகல தேவதை ரிஷிகள், முனிவர்க
ளெல்லாருஞ் சாயுச்சிய பதத்துக்குச் சிரசு, சிகை, கழுத்து, லலாடம், மூர்
த்தினி, ககூடம், அஸ்தம், அமலோகூடம், இது முதலான தானங்களில் தரிப்
பார்களென்று சொல்லுமென்றறிக. இலிங்கபூசை செய்யும்போது "ஸ்திரிரு
த்ரவ காலாக்னி ருத்ரோபநிஷத், நமசமக்கம்பானி மந்திரமுதலானதெல்லா
ம் சொல்லிப் பூசைபண்ணவும். இனிப்பிர்மா விஷ்ணு முதல் சகலதேவருக்
குஞ் சகல சீவராசிக்குஞ் சிவன் தகப்பனென்றுஞ் சிவனுக்குச் சரியான
தெய்வங்களில்லையென்றும், சிவனல்லாத பேரைப் பூசிக்கிறது பிராமணரு
க்கு யோக்கியமல்ல வென்றும், ஹரி யயனே சரியென்பார் பறைய
ராய்ப்பிறப்பாரென்றும், சிவனுக்கு உத்தமாங்க நமஸ்காரமென்றுஞ், சிவனை
த்தோத்திரஞ்செய்வதே நாவென்றும், சர்வேந்தரியங்களுக்கும், சர்வசீவரா
சிகளுக்குஞ், சிவன்கர்த்தனென்றும், சிவப்பிரசாதமல்லாமல்பிறவியறுக்கிற
மருந்து வேறில்லையென்றும், சிவஸ்தோத்திரஞ்சையையும் பூசிக்கிற கையையு
ம் வேதம் புகழுமென்றுஞ் சிவபாதோதகத்தைக் கொள்ளாமல் இதரங்களை
கொள்ளவொண்ணுதென்றுஞ், சிவபூசை யில்லா புசிப்பும் மலமூங் கிருமியு
மென்றும் சிவபத்தர் சண்டாளராலுமவர்கள் வீட்டில் புசிப்புஉத்தமமெ

ன்றும் இப்படி இன்னம்வெகுவாய் வேதங்கள் சொல்லும், அதுகளை யெழு தில் விரிவாமென்று விட்டனம், சர்வ வியவகாரத்திலுஞ் சிவன் கர்த்தனெ ன்று வேதஞ்சொல்லுவது சாட்சி. ☞ கங.

இனி இலிங்கதாரண மாகாதென்று சொல்வது, ☞ கச.

இதினர்த்தம் முத்திராங்கிதஞ், சக்காராங்கிதம், வச்சிராங்கிதம், இலிங் காங்கிதம், இதுகள்போலக் காச்சிச்சுட்டுக்கொண்ட பேருக்குச்சொன்னத ல்லாமல் இலிங்கதாரண விதிக்குச் சொன்னதல்ல வென்றறிக. இனி முன் சொன்ன பேதாபேதசித்தாந்திக்கும் இவனுக்கும் பேதமென்னெனில், அவ ன் ஆத்மாவுக்குஞ் சீவனுக்கும் உயிருக்கும் சமவாயமென்றுஞ், சத்தியைவிட வுலகில்லையென்றுஞ் சொல்லிப் பின்பு பேதமாய்சொல்லுவான். இந்தவீர சைவன் சிவன்தானே விலாசார்த்தமாய் அங்கஸ்தலம் இலிங்கஸ்தல மாயிற் றென்றுஞ்சர்வாங்கமும் இலிங்கமாயிற்றென்றுஞ் சொல்லுகையாற்பேதமு ண்டென்றறிக,

விபூதியுற்பவமும் அதின்மகத்துவமுஞ்சொல்வது சகலவர்ணச்சிரமத்து க்கும் பஸ்மதாரணம் வேண்டுஞ் சாட்சி. ☞ கரு.

என்று சொல்லுகையால் விபூதிவந்த விபரம் சிவன் பஞ்சமுகத்திலும் ஐந்து பூதமுண்டா யிதில் நிவர்த்தியாதி கலை யுண்டாய் நிவர்த்தியிற் கபில வர்ணகந்தை, பிரதிஷ்டையிற்கிர்ஷ்ணவர்ண பத்திரை, வித்தையிலிரத்தவர் ன சுரபி,சாந்தியிற்சுவேதவர்னசுசிலை, சாந்தியாதீதையிற் சித்திரவர்ன சும னை,இந்தஐந்துபசுவுங்கிருசாங்காதிதோஷமில்லாதநல்லஇலட்சனத்துடனே பிறந்தது இந்தப்பசுக்களிலே துற்கந்தமில்லாததாய்ப் பார்த்துக் கோமயங்க ளைப் பிரணவத்தோடே பஞ்சபிரமமந்திரங்களைக் கிரமமாக அந்தந்தமுகத்தி ற் பிறந்த அந்தந்தவர்னப்பசுக்கள்கோமயத்தையெடுத்துக்கொண்டு "க்ரிஹ ணகவளனசோஷணதஹந சோதன,, என்கிற ஐந்து கிரமத்தாலும் விபூதி "பசிதபஸ்மகஷாளாரகைஷ,, என்கிற-நு-வித பூதிக்கிரமத்தாலேதகனஞ் செ ய்துசர்வதோஷ நிவர்த்தியாகக் கற்பம் அனுகற்பம் அகற்பமென்று-ச-வகை யாம் இப்படிசெய்யவும், இதுசகலருக்குமாம். இதல்லாமலும், "பிர்மகூத்தி ரிய வைசியருக்கும்,, அக்னிகோத்திரவிபூதியாம்இதுவும் உத்தமம், சூத்திர ருக்குச் சரோதரதாயாகார பசுஞக்கினியாவது, வைதிகர் வீட்டு விபூதியாவ து யோக்கியம். மற்றுமுள்ள சங்கரசாதிகளுகதுக் தாவாக்கினியில் வெந்த விபூதியோக்கியம். சம்சாரிகளுக்கு வீரஜானலாக்கினி வாசஞக்கினிகளிலுண் டான பஸ்மம் யோக்கியம். எதிஸ்வராராகிற சந்நியாசி,வானப்பிரஸ்தன், முத லான தபசிகளுக்கெல்லாம் எல்லாவிடத்திலும் விபூதி யோக்கியமாம். அதிவர் ணச்சிரமிகளுக்கு மயானபஸ்டும் யோக்கியமாம். இப்போது சொன்ன வெல் லாருக்கும் தேவஸ்தல விபூதி யோக்கியம், இந்தவிபூதிகளெல்லாம் மலர்ந்த உத்தூளனத்தாரணமாகிறமூன்று பிரகாரமாம். இதுகள் தரிக்கும்போது வி பூதி தரிக்கவிதித்த பிரகாரத்திலே தரிக்கவும். பின்னுமொருவிதம் புராணர்

த்தமாய்ச்சொல்லில் தேவர்கள் கூடி அமிர்தம் கடைகிறபோது அதிலனேக வஸ்துக்களெல்லாம் பிறந்தது அப்போது காமதேனுவும் பிறந்தது அந்தக் காமதேனுவில் பஞ்சகௌவியம் பிறந்தது சாட்சி,

சிவதன்மோத்தரம்.

ாளசூ. கோமயமதனில்வில்வங்குறுமுறிகூடத்தோன்றும்
பூமகளந்தவில்வம்புரிந்ததிற் பொருந்துமாற்றூற்
ரூமமார்வில்வந்தானுமசிபலமென்மேறசாற்று
காமமுமுனருமீசன்றிருமுடிக்கணியெங்காளும்.

ாளள. உற்பலமகலமூலம்பின்பதிலுதிக்குநீரிற்
பொற்புறுகுங்கிலீயம்பொலிந்தெழும்புரியயாரு
மற்புதன்றனக்குமற்றையினவர்க்கு முளர்வதாகக்
கற்புறுசெங்கெல்பாலிற்கதிரொடுகலந்துதோன்றும்.

ாளஅ. சந்தனமுதலாயுள்ளமங்கலத்ததியினகும்
அந்தரத்தமாருன்னுமமுதமுங்வந்தித்தாஞ்
சிந்தையாம்சித்திபேதத்தாற்சிறக்கரோசனையுஞ்செய்யும்
அந்திவான்வண்ணன்மேனிக்கருகமிவ்வாறுமாமே.

ஆகையால் பஞ்ச கௌவியங்களிலும் இதிலுண்டான திரவியங்களிலுஞ் சுகந்த வர்க்காதிகளிலுஞ் சிவனைப் பூசைசெய்வது இந்தகோமயத்தில் விபூதி செய்யும்விதம் ஆகமப்படி விபூதி கற்பஞ்சொல்லுகிற பிரகாரஞ் செய்யவும்

இனி உருத்திராட்ச உற்பவம்.

சிவன் திரிபுரசங்காரஞ் செய்யும்போது தேகம் உட்பொங்கி யானந்தம் பிறக்க அப்போது சோம சூரியாக்கினி ஆகிற மூன்று கண்களிலும் ஆனந்த மாகிற சலஞ்சிந்தி விழ விழுந்தசலத்துள் சுப்பிரவர்னத்திற்பதினாறு விதமும் இரத்தவர்னத்தில் பன்னிரண்டு விதமும் கிருஷ்ணவர்னத்தில் பத்துவிதமும், இப்படிமூன்று கண்களின்பேதத்தால் சூரியன் சம்பந்தம் வெள்ளையும், சந்திரன் சம்பந்தங் கறுப்பும், அக்கினிசம்பந்தம் சிவப்பும், இப்படி மூன்று வர்னபேதமாய் உலகோபகாரமாகப் பாபகூய நிமித்தமா யுண்டான தென்றறிக. இந்த உருத்திராட்சத்தின் மூலமே பிர்மா, நாளமே விஷ்ணு, முகமே உருத்திரன், கேசரங்களே தேவதைகளாயிருக்கும் இப்படி உருத்திராட்சம் வந்ததென்றறிக.

நசூ-வது-அத்தியாயம்.

அனேகேசுர வாதிமதம்.

அனேகேசுர வாதிமதம். தேர்கள் மாடமாளிகை கோபுரப்பிரகார மண்டபங்கள் முதலிய வற்றைக் கட்ட ஒருவனாலே கூடாமல் அனேகர்கூடிச் செய்வதுபோல் அனேக ஈஸ்வரர்கள் கூடிச் சிருஷ்டியாதிகளைச் செய்வார்கள். அப்படி போலப் பலவான் ஈஸ்வராலே பஞ்சகிருத்தியமும் நடக்கிறது சொரூப நிலை யென்றறிக. இனித் தடத்தலட்சணமாவது, ஆனால் எத்தனபேர் கூடினாலும் ஒருசிற்பனாவது ஒரு எஜமானாவது செய்யச்சொன்னபடியே அனேகருஞ் செய்கையினால் ஒருவனே கர்த்தனென்னில், இந்த எஜமானுஞ் சிற்பனுந் தனக்காகிற உபகரணங்களைக் கொண்டு அவர்களைச்செய்யச்சொல்வதுபோல் ஈஸ்வரனுந் தன்னாலே யனேக சத்திகளை யுண்டாக்கி அவர்களைக்கொண்டு பஞ்சகிருத்தியங்களுஞ் செய்வானென்னில், நாமுமப்படித்தான் அவன்சொன்னபடியே அனேகர்கூடி ஆகவேண்டுமென்ற தென்றறிக. ஆனால் ஒருவனாலே யாமென்பதுபொய். ஒருவனொருதொழிலைச்செய்யும்போது அனேகவுபகரணத்தாலுங் அனேகராலுங்கூடி அந்தந்தத்தொழில்முடிவதுபோல், ஈஸ்வரனுமனேகமுபகரணங்களுமனேகருங்கூடிச்சிருஷ்டியாதி தொழிலைச்செய்வதென்றறிக. இப்படியனேகராலேதொழில்கள் பலவிதமாய் விரிகிறதே தடத்தலட்சனமென்றறிக. இனிப் பெத்த நிலையாவது, இப்படியனேகர் கூடி யனேகந்தொழிலைச் செய்யுமிடத்து அதில் விழுந்து தொழிற்படுகிறபதார்த்தம் போலச் சீவராசிகள் அனேக ஈஸ்வரர்தொழிலிலகப்பட்டுச் சென்னமரணப்படுவதென்றறிக. இனிமுத்தி நிலையாவது, தொழில்செய்வாரு முபகரணமுமில்லாத விடத்துத் தொழிற்படுகிற பதார்த்தம் தொழிற்படாதுபோல அவர்களைப்போது தொழில் விடுவார்களோ அப்போது சீவனுஞ் சென்ன மரணப்படாமல் சுகத்திலே யிருக்கும் இதுவே மோட்சமென்றறிக. முன்சொன்ன வீரசைவனுக்குமிவனுக்கும் எல்லாம் பேதமுண்டென்றறிக.

சய-வது-அத்தியாயம்.

வாமமதம்.

இனிச்சத்தி மதமாவது, இவர்கள் தந்திரஞ்சத்தியாவதுசிற்சத்தி ஒன்றாக வேறொன்று மில்லாம லேகமாய் நின்றது சொரூபநிலை யென்றறிக. இதினினைவிலே பராசத்திமுதலாக ஒன்றிலொன்று ஐந்துசத்திகளுண்டாயிவர்களால் பரமசிவன்முதலாகிய சதாசிவாதிகள் பேதம், விஷ்ணு வாதிகள் பேதம், பிர்மாதிகள்பேதம், இந்திராதிகள்பேதம், இப்படியொன்றிலொன்றாய் அனந்தகோடி தேவர்கள் முனிவர்கள்ருஷிகள் முதலான மூன்றுவகை சீவன் நால்வகையோனி எழுவகைதோற்றம்-அசாத-அச்சுகளு மூண்டாய்

இதகளுக்கெல்லாம் தனுகரண புவன போகங்கள் முதலான எண்ணிறந்த வஸ்துக்களுமுண்டாய் சிருஷ்டி திதி இலயத்துக்கு மூலமாய் சத்து சித்தானந்தமாய் பதி பசு பாசமாய் விந்துநாதகளேயாய் எண்ணிறந்த சத்திபேதம் புருஷபேதமுமாய் இருக்குமென்றறிக. இனிச் சித்தென்கிறதும், ஞானமென்கிறதும், அறிவென்கிறதும், பிரமமென்கிறதும், ஆனந்தம், அருள், கிருபை,கடாட்சம், மோட்சம், சொர்க்கம், நரகம், போகம், போக்கியம்,சுகந்துக்க முதலான அனந்தகோடி வியவகாரங்களனைத்தும் அம்மைசொருபம் இது தடத்தலட்சணம். இனி முத்தியாவது, இந்த சத்தி யெண்ணிறந்த பேதமானதில் முக்கியமான சத்திகள் குணரூபத்தில் வாலை சிவனை திரிபுரை என்று மூன்றும், இம் மூவருக்கும் மூன்று சக்கரமுண்டு இதற்குப் பொன் முதலான பஞ்சலோகங்களிலே சிற்பசாத்திரப்பிரமாணமாகத் தகடு அடித்து இதிற் பூவிஸ்தாரம் மேருவிஸ்தாரம் முதலான பிரமாணமாக வார்ப்பித்து அதகளிலே தங்களுக்கிஷ்டமான தேவிசக்கரங்களே ஸ்தாபித்துத்தேவிமகாத்மியம் சொல்லுகிற விதிகளிலே மூலமந்திரம் பீசாட்சரம் ஆவரண தேவதைதகள் முதலாக ஸ்தாபித்து ஆவாகனஸ்தாபன சன்னிதான சன்னிரோதன அவுத்துவாசன விதிகளாலே பூசைசெய்து தேவியைப் பிரசன்னத்துவமாக்கிக் கொள்ளும் வகைக்குசாட்சி.

ஈஎக. தளைக்கின்றபவமறுக்குஞ்சக்கரபூசைக்கென்று சமைத்தவாசம், விளைக்கின்றநறுமலருந்விணைநாறுப்பசுஞ்சாந்துமெழில்சூழ்வன்டு,திளைக்கின்றதெளிமதுவுஞ்சேதாவின்செவ்விறைச்சிக்கறியுந்தேவர், வளைக்கின்றபதயுகத்தான் மாகாளத்திடைகொன்டுவரச்சொல்லாயே.

ஈஎய. உத்தமமாகும்பூசையொளிமதுமுதலிங்தாலா
முத்தமசத்திமாருமொன்புலிமாதராகு
முத்தமத்தானந்தாணுமுனைத்தவரிடங்களாகு
யத்திரமாத்தம்போலோருடம்பவாமடவாரன்றே.

ஈஎக. வலைபுலைவன்ணுர்செம்மார்மற்றுமிப்படியில்வந்த
குலமதிற்றையலானைக்குறித்துநாயகிதானென்றே
யலமறவவனையற்சித்தவொழிற்சேடம்வாங்கித்
தலையுறக்கொன்டங்குன்னன றலிவிசன்னதியாமென்றே.

ஈஎஉ. சக்கரமீதிலங்தத்தலிவிசன்னிதிபப்பன்னு
மூக்கிரபாத்திரத்துமுடம்பினுமவிளப்பாவித்
தக்கரசரீரமாக்கியானந்தசத்திதாணுப்த்
தக்கவொன்னைறனவையுன்னைத் தலிவிதன்வடிவேதாணும்.

ஈஅங. வாக்கொடுமனத்துக்கெட்டாமலேண்மணிதன்னையுன்னி
நீக்கிலாமதுவைபுண்டானினைவெலாமிறந்தொன்றையா
யோர்க்கொணவின்பவெள்ளமெளியதாய்ப்புத்திமுத்தி
பாக்கியந்தானேதானும்பரமசாம்பவமீதன்றே.

ஈஅச. ஆக்குதலழித்தல்செய்ய வல்லதமத்தியந்தா
னீக்கொருசமயத்துன்மீடா நிகரில்சாம்பவத்தினல்லாற்
றேக்கிடமதுவையுண்டுதெரினவேமார்முலியேதாய்ந்து
வேட்கைவேண்டியவாசெய்யாவினையும்வீடெங்கட்கன்றே.

ஈஅஞ. சோமனேப்பனேயம்வைத்துங் தொடர்புளிதனேமற் கொ
ன்று, மூமனேப்பேசுவித்துமூலகத்தையுருகப்பார்த்து
மேமமூற்றிடப்பினத்தையெழுப்பியும்பின்னுமெல்லாங்
தாமகற்சாம்பவத்திற் றகுபவர்செயல்களன்றே.

ஈஅசு. சத்தியேயனேத்தினுக்குந் தாவாமாதலாலே
சத்தியையாராதித்துத்தகுமான்சமைத்தவாற்றுல்
வத்துவேகொள்ளத்தன்னில்வருகருமூலாசமுத்தி
யத்தனுருனாத்தவாறென்றறைந்தனன் வாழியாவோன்.

வெண்பா.

ஈஅள. தன்னியசுடகச்சமயிகாளெவ்வுருவும்
பென்னுருவிற்காணும்பிறப்பதெலா-முன்னறவே
புத்தியுடன்முத்திப்பொருளுந்தரும்பிணமே
சத்தியிலாததெலாந்தான்.

இப்படிச் சக்கர்பூசைகளைச் செய்து இந்தப்படியாக ஸ்திரீகளுடைய யோனிச்சக்கரங்களையும் பூசைசெய்து சாபானுக்கிரக சாமர்த்தியராய் அஷ்டமாசித்திகளை யடைவாரென்றறிக. இப்படிப் பெற்றபேர்கள் அனேகருண்டு. பின்னும் நவநாதசித்தர் முதலனேகருண்டென்றறிக. இனிப் பஞ்சகிருத்தியமுதலான தொழில்களுந் திருக்கு திருவ்டா திரிசியமுதலான வஸ்துக்களும் புசிப்பும் புசிக்கிற பதார்த்தமும் கொல்வதுஞ் சாவதும் பிறப்பது மிறப்பதும் பொய் மெய் பாவம் புண்ணியஞ்சொர்க்க நரகமெல்லாம் அவளையல்லாமல் வேருன்றில்லாமையால் அவளே யல்லாமற்றன்சேஷ்டை யற்றதுமோட்சமென்றறிக. இனிச்சிற்சத்தி நாமரூபகிரியாரகிதமாயொன்றுயிருப்பது சொரூபலட்சணம், இனித் தாளைமாயாசொரூபமாய்ப் பிண்டாண்ட சீவ ரூபிகளானது தடத்தலட்சணம். இனிப்பஞ்சமகாபாதகமுதலான தொழிலைத் தேவிசெய்கிற தொழிலென்னுமற் றன்செயலாய்க் கொண்டு நரக சொர்க்க மனுபவிப்பது பெத்தநிலையென்றறிக. இதுவெல்லாமவள் சொரூபமேயவள்தொழிலே யல்லாமல் தன்செயலனு

மாத்திரமுமில்லை யென்று அம்மையைச் சக்கரபூசைசெய்வது மோட்சமென்றறிக. இவர் ஆனந்தமே யாத்மாவென்பர் மோட்சமு மானந்தமுமே யென்பரென்றறிக. இனி முன்சொன்ன அனேகசுரவாதிக்குமிவனுக்கும் பேதமென்னென்னில், அவன்அனேகசுராலா மென்கையில் இவன் அம்மையாலெல்லாமாமென்கையால் வேறென்றறிக.

சக-வது-அத்தியாயம்.

வயிரவமதம்.

ஈ அ-அ. ஆதியாம்வயிரவன்முனட்டதத்துவங்களாகிச்
சோதியாமலைவேவ்வங்தெட்டாகியகலையாய்த்தோன்றி
நீதியாங்கலைகடானேங்கிலமாம்பெத்தமுத்தி
யாதியாம்வயிரவத்திணுஞ்ஞைஞயாலுயிர்கடாமே.

என்பது, ஆதிபயிரவன் எட்டுத்தத்துவமாகிற எட்டு வயிரவரு யிந்த எட்டும் எட்டுகலையாய்த்தோன்றி யிந்தக்கலைகள் தானே யகிலமும் பெத்த முத்தியும் ஆதிவயிரவருஞ்ஞைஞயாலே சிவாசிகருமாமென்றறிக.

ஈ அக. என்றவத்தத்துவங்களினையந்தவவ்வடைவிற்கேளாய்
துன்றுநற்சுதந்திரன்முன்சுவேச்சையான்லோகன்கால
னின்றவுக்கிரன்பிரச்சைநின்மானன்பூடணன்று
னென்றபயிரவமெட்டாகுமினிக்கலைவிதமுங்கேளாய்.

என்பது, தத்துவங்களாகிற வயிரவன் பெயராவது, சுதந்திரவயிரவன்-சுவேச்சையா வயிரவன்-உலோக வயிரவன்-காலவயிரவன்-உக்கிரவயிரவன்-பிரச்சையா வயிரவன்-நின்மான வயிரவன்-பூஷனை வயிரவன்-என்று ஈ-ம். இனி கலைகளாகிற விதமுங் கேட்பாய்.

ஈ கூய- வானவனியங்கியப்பு மன்னெனவறைந்தவைவந்தின்
முறுறுபீசமாகுந்தகுகலையைந்துஞ்சாற்று
மூனமிலமுதமோடுவிடகலைகாரனைந்தா
னனவென்கலையாயிந்தவகிலமற்றுரைஞ்ஞையுங்கேள்.

என்பது, முன்சொன்னஅட்டவயிரவரும் எட்டுகலையானவிபரம். ஆகாசாதிபூதம்-ரு-ம். அமிர்தகலை விடகலை காரணம் இப்படி எட்டுகலையாயிந்தக் கலைகளால் அகிலங்களாஞ்ஞைஞயாலே யுயிர்கள் நடக்குமென்றறிக. இப்பா ம் ஆபத்து-விக்கம்-பயம்-அந்தம்-இந்தநாலாஞ்ஞைஞயும் உத்தாரணப்பயிரவர் நால்வராலேநடக்கும். இனி காலங்-கருமம்-உணர்ணமை-சென்மமாகிற நாலாஞ்ஞைஞயும் மற்ற நாலுவயிரவராலேநடக்கும். ஆகையால், எட்டாஞ்ஞைஞயும் உதராதிபோக வயிரவர் நால்வராலே நடக்கும். போக போகக்கியமுஞ்

சனனமரணமுதடக்கும்.இனிக் காலவயிரவராதிநால்வராலேயோகமுஞ் சுத்தநிர்வாண முத்தியுஞ் சீவராசிகளுக்குண்டாமென்றறிக. முன்போகமார்க்கத்திலே சனனமரணப்படுகிற பேருக்கெல்லாம் பூசையாலும் பலிகளாலும் முத்திரைகளாலும் இதுகளாலே விபங்களுண்டாம். இதுகளல்லாமல்யோகமு மூர்த்தமுமிரண்டால் நிர்வாணமாகிற மோட்சமுண்டென்றறிக.

ாகூக. அறுதிபயிரவமொன்றெட்டாமதிலெட்டோடனைவயுமாகுந்
தறுதியாநால்வர்நால்வர்தந்தசாத்திரங்களெட்டாம்
முறுதியாம்போகயோகமுறைமுறைவகுத்துவைத்துப்
பிறுதியாமுத்திநல்குமெனவயிரவன்றான்பேசும்.

என்பது, அறுதிபயிரவனொருவனே எட்டு வயிரவரும் அவ்வெட்டு வயிரவரும் எட்டுகலையாய் இந்த வயிரவர்தானே எட்டாஞ்ஞையாம். இந்த ஆஞ்ஞை எட்டாலே நாலுவயிரவர் எட்டுசாத்திரமுண்டாக்கினர். இதினாலே நால்வர்போகமும் நால்வர்யோகமுஞ் சொல்லிப் பின்றுதியான முத்தி கொடுக்குமென்றது. பின்னுமொருசாத்திரம்.

வெண்பா.

ாகூஉ. ஏகமாய்வயிரவமென்ன டத்துவமாயென்கலையா
யாகியநூலந்தன்னுஞ்ஞையாற்-போகமா
முத்தரிக்குநால்வராணல்வராலிபோகத்தால்
வித்தரிக்குமுன்னரவால்வீடு.

பின்னென்றில்சங்காரகாலவயிரவன்-அசிதாங்கவயிரவன்-குரோதவயிரவன்-சண்டவயிரவன் இந்தநால்வராலும் சிருஷ்டியாதிகளுஞ் சீவன்களிடஞ்செகத்துகளையு முண்டாக்கிப் போகபோக்கியங்களையுங் கொடுத்துக்காவலாயும் காப்பனென்றறிக. உன்மத்தவயிரவன்-கபாலவயிரவன்-விபூதிணவயிரவன்-மார்த்தாண்டவயிரவன் இந்தநால்வராலும் யோகபாவனையாலே சீவராசிகளுக்கெல்லாம் வயிரவர்சொன்ன சாத்திரப்படியே வயிரவச்சக்கரத்தைப் பூசைசெய்து மதுபான சுராபான மாம்சாதிகளாலும் சுத்தநிர்வாணமுத்தியைக்கொடுப்பர். இனி ஆதிவயிரவனொருவனையிருப்பது சொரூபலட்சணம், இவன் எட்டுவயிரவன் எட்டுகலை எட்டாஞ்ஞை சீவராசிகளாய் விரிகிறது தடத்தலட்சணம். இந்த எட்டில் நால்வரால் சனனமரணப்படுவது பெத்தநிலை. நால்வரால்யோகமாய்மதுவுண்டு வயிரவமந்திரத்தியான பூசையாலே துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்துவயிரவனையடைகிறது மோட்சமென்றறிக. இனி முன்சத்தி மதத்துக்குமிவனுக்கும் பேதமென்னென்னில், அவனந்தசத்தியே யெல்லாமாயிற்றென்று சொல்லும் போதுவயிரவர்நால்வரால்போகமும்நால் வராலியோகமுமென்னையாற்பேதமுண்டென்றறிக.

கவுளயாமளமதம்.

கவுளயாமளமதமாவது, சத்தியாலெல்லாமாயிற்றென்கையா லிவனே யடைந்தபேர்கள் சத்துவநாத, சலோகநாத, ஆதிநாத, அகுளிதநாத, மதங்கநாத, மச்சேந்திரநாத, கடயந்திரநாத, கோரக்கநாத, குக்குடநாத, மென்கிற இந்த நவநாதர்களால் கற்பிக்கப்பட்ட கொலையாதி பஞ்சபாதகமான நிஷேதகன்மமுதலானசாத்திரங்களி லுச்சாடன, மோஹன, ஸ்தம்பன, மாரண, ஆக்ருஷ்ண, வித்துவேஷண மென்கிற ஆறுவிதத்தில் உச்சாடனமாவது, பூர்வசுகாசியை முதலான மிருத்துக்களையும் பெண்டீர் பிள்ளை பந்துக்கள் சினேகிதரையு முண்டாயிருக்கிற வொருவனுக்கிதுகளெல்லாம் வேறுபட்டு அவனுங்கூட ஓடிப்போகச்செய்வதும் சத்துருக்கள் தண்டுவிட்டராசாக்கள் இவர்கள் முதலான பேரோடிப்போகச்செய்வதும்.

இனிமோஹனமாவது, சுழித்தி யவஸ்தைபோல மெய்மறந்து கிடக்க விஷங்களேறித்தலைமண்டைக்கொள்ள மூர்ச்சையடிக்கடிவரச் செத்தாற்போல மோகமாயிருக்க இப்படித் தனக்கு வேண்டாதபேரைச்சதுர சீகரணமான விலட்சணஞ்செய்வதும் இதல்லாமற்றன்மேலெல்லாருமோகமாயிருக்கச்செய்வதுமாம்.

இனி ஸ்தம்பனமாவது, அக்கினிஸ்தம்பனம், சலஸ்தம்பனம், இந்திரியஸ்தம்பனம், பிஷ்கஸ்தம்பனம், சிங்குவைஸ்தம்பனம், கதிஸ்தம்பனம், ரூபஸ்தம்பனம், வாய்வுஸ்தம்பனம், பூமிஸ்தம்பனம், ஆகாசஸ்தம்பனம், சந்திரசூரியநட்சத்திரஸ்தம்பன முதலானதுகளுஞ்சரிக்கிற சீவராசிகளெல்லாஞ் சரியாமலும் ஸ்தம்பிக்கச்செய்வதாம்.

இனிமாரணமாவது, அவசாரகன்மஞ்செனிக்கிற வியாதி வழியாகவும், காலுவிதமாகவருகிற பயங்கள்வழியாகவும், ஒருவர்பேதிப்பிக்கிற பயங்கள்வழியாகவும், அகாலமிருத்துக்களாய் மரணமாய்ப் போவது.

இனி ஆக்ருஷ்ணமாவது, மண்டலாதிபர் சத்துருக்கள், வஸ்திராபரண வாகனவனிதாதி, இரத்தினாதி, மற்றுமுள்ள வஸ்துக்கள்முதலான தெல்லாந் தானிருக்கிற விடத்தில் வரத்தக்கதாகச்செய்வது.

இனி வித்துவேஷணமாவது, பிராணசகித அன்னியோன்னிய முதலான பேர்களை யொருவனுக்காகாமல் துவேஷஞ் செய்விக்கிறது.

இந்த ஆறுமல்லாமல் வசியமாவது, இராஜவசியம், ஸ்திரீவசியம், ஜநவசியம்.

ஜ்வாதபிராஹ்மாவேதமுமாவது, இதல்லாமல் ஆயோணமாவது, பாதுகாகாசித்தி, அஞ்சனசித்தி, குளிகாசித்தி, மூலிகாசித்தி, இரஸவாதசித்தியிதமுதலான சித்திகளாவது, இப்படியிந்த அஷ்டகர்மமும் வந்து ஆகாசகமன முதலான தூரதிருஷ்டி, தூரகமனம், இதுகள் சகவந்தாலிதுவே மோட்சமென்பார். இதுகள் வருகிறவித மெப்படியென்னில், சத்திகளில்வெகுபேதங்களுண்டு ஆறுகோடிமாயாசத்திகளும் பின்னுஞ் சத்தமாதர் சத்த தற்கி

கள் சத்தகன்னிகைக ளிப்படி யனந்தபேத சத்திகளுண்டு, இவர்களெந்தக் காரியம் நினைத்தாலு மந்தக்காரியத்துக்கேற்ற சத்திகளும் அதினதின் மந்திரங்களும் செபங்களுந் தியானங்களும் வேறுவேறுயுண்டு. அப்படிக் காரியத்துக்கேற்ற கற்பங்கள் சொல்லுகிறபடியே செபம் பூசை ஓமந் தற்பணம் பலி தானதர்மம் இதுமுதலானதுசெய்து பக்திவயிராக்கியத்தாலே தேவதாப்பிரசன்னத்துவமாய் நினைத்தகாரிய மாமென்றறிக. இவரும் ஆனந்தப்பிராப்தியே மோட்சமுமிதுவே யாத்மாவுமெனபர். இப்படிவெகுவிதமாயுண்டு இதுவெகுதொகையாகச்சொன்னதென்றறிக. இனியொருசத்தியே முதலென்பது சொரூபம், இத்தச்சத்தி யெண்ணிறந்த சத்தியாய்ச் சர்வதந்திரத்துக்கும் வியாத்தி வியாபகமாய்ச் செகசீவ தந்திர மந்திரமாய் விரிகிறது நடத்தலட்சணம். இனி நவநாதசித்தர்களாற்செய்யப்பட்ட சாத்திரவழிகள் நடவாமற்போவதே பெத்தநிலையென்றறிக. இனி முன்சொன்ன அஷ்டகன்மங்களுங் கைவந்து ஆனந்த பூர்த்தியாகிறதே மோட்ச மென்றறிக. இனிவயிரவத்துக்கு மிதற்கும்பேதமுண்டென்றறிக.

சுநு-வது—அத்தியாயம்.

ஊற்தசைவம்.

நகூ. சொன்னவீரெட்டாஞ்சைவர்தந்திரத்தொழிற்பாடோதி
லுன்னியவூர்த்தசைவர்க்கோதுபல்சடைருத்ராட்சம்
துன்னியவிபூதிபூசைதோன்றுநூலுடனேயீசன்
பின்னவில்தத்துவாதீதனெனப்பெயர்பேசலாமே.

என்றது, பதிறுறுசைவர்தந்திரபேதங்களிலூர்த்தசைவமாவது, சிவனொருவனுண்டென்றும், அவன் தத்துவாதீதனென்றும்சொல்லுவர். இந்தச்சிவனையடையும் வகை பலசடைதரித்து உருத்திராட்சம் விபூதி தரித்துச் சிவலிங்கத்தைப்பூசைசெய்து பூணூல்தரித்து வேடம்பொருளாகப் பக்தி செய்து பஞ்சாட்சர செபிதனுய்த் துறவியாகிலுஞ் சம்சாரியாகிலும் இப்படி யிருப்பதென்றறிக.

சுசு-வது—அத்தியாயம்.

அநுதிசைவம்.

நகூசு. பதிபசுபாசமூன்றும்பார்த்திடிலநுதிநித்தம்
விதிபெறுவியார்த்தமென்ன விளங்குமுக்குணத்தாலொக்கு
மூதியவேடங்களோடேமுகுயர்ப்பாசநீங்கிப்
பதியுடன்கூடிக்கும்பிட்டிருத்தலேபாமாமுத்தி.

என்றது, பதி, பசு, பாசமூன்று மறுதியாய் நித்தமாய் வியாத்தமாய்ப்பிரகாசிக்கும். இப்படிக்கொத்த சிவனைமுக்குணம்விகற்பமில்லாமல்ஒத்து விபூதி உருத்திராட்ச பஞ்சாட்சரங் குருலிங்க வேடம் பொருளாகக் கொண்டு சிவபூசைசெய்து பாசங்களைநீங்கிப் பதியுடன்சேர்ந்து ஆத்மாவானவன் சிவனைக்கும்பிட்டிருத்தல் பரமாகியமுத்தியென்றறிக. இன்னுருவிதம்சிவனே அனுதிசைவனென்றுசொல்லும்.

சரு-வது—அத்தியாயம்.

ஆதிசைவம்.

ஈகூரு. ஆதிக்குஞ்சிவனேயாகியவன்முன்னற்கருமமைமந்து
மீதுற்றகாதலாலேவிளங்கிநிட்களத்திலேடு
கோதற்றசகளமாகும் பதியதுபோகங்கூடி
லாதத்தால்மூத்திவேடம்பூணலாலம்மையாமே.

என்றது, பசுவின்பொருட்டாக அவன்மேல்மோகத்தாலெல்லாவற்றிற்கும் சிவனேயாகிப் பஞ்சகிருத்தியங்களைத் தலக்கி நிஷ்களத்தோடு சகளமாக விருக்கும். பதியாவது, இந்தப்பதியோடுபோகங் கூடவேண்டல்மோட்சசாதனங்களுக்கேற்றவேடங்களு நடக்கையும்பூண்டு எல்லாஞ்சிவபோகமாயனுபவித்து விபூதி உருத்திராட்சங்கள் வேடத்தின்மேல் விசுவாசமாயிப்படி நடந்தாற் பதியோடு கூடியவணிருந்தாற்போல அவன் போகமாயாதிமர விருப்பானென்றறிக. பின்னுருவிதம்சிவன் முகமைந்திற்றீட்சதரானகௌசிகாதிரிஷியேசுவரோ ஆதிசைவனென்றுசொல்லும்.

சசு-வது—அத்தியாயம்.

மகாசைவம்.

ஈகூசு. யாததாமூர்த்தாமூர்த்தமனைத்திலுமேலதாகி
யோதிடுஞ்சிவனேவேதமுயருமாகமங்களோது
மேதமில்சடையேபூதிவேடம்பூண்டிறையைப்பூசித்
தேதமிறியானங்கூடவிறைபருள்கூடலாமே.

என்றது, சிவனைவன் மூர்த்திகள் அமூர்த்திகளான பேருக்கெல்லாவற்றிற்கு மேலானதுசிவமென்றுவேதாகமங்கள்சொல்லும். அப்படிக்கொத்த சிவனைச் சன்மார்க்கத்துடனே கூடிச் சம்சாரந்துறந்து சடை விபூதி வேஷமெல்லாந்தரித்து நித்தஞ் சிவபூசாதந்திரங்களுடனே சிவ பூசையுஞ் செய்து பின்பு சிவனைச் சகுணரூபமாகத்தியானஞ்செய்து குருலிங்கவேடம்பொருளாகக்கொண்டு இப்படி நடந்தா லருள்கூடி முத்திபெறலாமென்றறிக. பின்னுமொருவிதம் முன் இரிஷிகள்கோத்திரமாய்த்தீட்சதருமான சிவத்துவசரோ மகாசைவனென்றுசொல்லும்.

சஎ-வது—அத்தியாயம்.

பேதசைவம்.

ஈகூஎ. பேதசைவந்தானீசனுருவருரூபாரூப
மாதலால்வேடம்பூண்டிட்டடைவியலுருவந்தன்னை
நீதியால்வணங்கமுத்தியெனதடல்.

என்றது, சிவனைவன் ரூபம் அரூபம் ரூபாரூபமாயிருப்பன். இந்தச்சி வனைச் சன்மார்க்கத்துடனே கூடித்துறவிலாவது சம்சாரத்திலாவது விபூதி உருத்திராட்சம் பஞ்சாட்சரமிதுமுதலான வேடங்கள்பூண்டு சிவனடியார்க ளையும் இலிங்கத்தையும் குருவையும் வழிபட்டுச்சிவனுடைய மூன்றுரூபிலு ந்தியானஞ்செய்து வணங்கல் மோட்சமென்றறிக.

சஅ-வது—அத்தியாயம்.

அபேதசைவம்.

ஈகூஅ. பூதியேசடையேவேடம் பூண்டலேமுதலாயுள்ள,நீதியால்.

என்றது, பேதமில்லாமல் அபேதமாயிருக்கிற சிவனைச் சைவத்துக்கு ள்ள வேடம் விபூதி ருத்திராட்ச பஞ்சாட்சர குருலிங்க வேட மிதுவெல்லா ம் பொருளாய்க்கொண்டு சன்மார்க்கமாகச் சிவனைத்தேடி யவன் சொரூப மறிகிறதே முத்தியென்றறிக.

சகூ-வது—அத்தியாயம்.

அந்தராசைவம்.

ஈகூகூ. எவ்வகையுயிர்க்குமீசனுள்ளுளாயிருத்தலாலே
யவ்வயினதனைநாடிவேடமாதிகளால்.

என்றது, எவ்வகையுயிருக்கு முள்ளேயிருந்துணர்த்துவிக்கிற சிவனை தேடி யவனுக்குச்சாதனப்பட்டுச் சைவவேடங்களெல்லாந் தரித்து வே மேபொருளாக அவனிருக்கிற வியல்பை நாடுவதே முத்தியென்றறிக. பி ஞ்ஞருவிதம் நீட்சாவிதரான சாதிகளே யந்தராசைவரென்றறிக.

நுஅ-வது—அத்தியாயம்.

குணசைவம்.

உஈ. குணசைவங்குணமெட்டாலுங்கூடிபசிவனேயெத்தல்.

என்றது, சிவனைவனீ எட்டுக்குணங்களையுங் கூடி யிருக்கிறவனை யால் தன்னெட்டுகுணத்தாலுஞ் சிவனை யேற்றிவேடங்கள்பூண்டு அடிமை யாகத்திரிவதே முத்தியென்றறிக.

ருக-வது—அத்தியாயம்.

நிற்குணைசவம்.

உஅக. குணமிலாச்சைவநிற்குணத்தருவுருவைக்கூடல்
பிணையிருவிகற்பத்தாலும்பேதங்கூடலாலே.

என்றது, குணமில்லாம லருவுருவுமல்லாமலிருக்கிற நிற்குண சிவனை யிரண்டு பேதமும மற்றுக்குணமில்லாதே கூடல்முத்தியென்றறிக.

ருஉ-வது—அத்தியாயம்.

அத்துவாணைசவம்.

உஅஉ. வன்னமேகலியேதத்துவமந்திரம்பதமேபூமி
யன்னவாரத்துவாவினந்தமிராறினந்தம்
தன்னிலேமனனஞ்சாரச்சாதித்தன்முத்தியாமே.

என்றது, சிவனுனவன் நாமரூபக்கிரியாரகிதனுய் சுத்தனுய் நிஷ்கள னுயிருக்கிற சிவனைச் சத்தினிபாதம்வந்த சீஷன் குருவையடைந்து தீட்ச தனன சீஷன் சைவத்துக்குள்ள வேஷங்கள் தரித்துக் குருலிங்க வேடம் பொருளாய் அத்துவாசோதனன செய்து அவற்றின் முடிவைதியானித்துசக சமாதி நிஷ்டைசாதித்து வழிப்படுவது மோட்சமென்றறிக.

ருக-வது—அத்தியாயம்.

யோகசைவம்.

உஅசு. போகமட்டாங்கந்தன்னிலுயர்தருசாதனத்தா
லாகியசித்தி.

என்றது, நிற்குணனுயிருக்கிற சிவனைக்குருவாலறிந்து யோகசாதன வேஷங்கள்தரித்து ஏகாந்தஸ்தலங்களிலிருந்துக்கொண்டு யோகசாத்திரப்ப டியே அஷ்டாங்க யோகங்களைச்சாதித்து அதுகளிலே தவறுகள்வராமல் நி ன்று அஷ்டமாசித்திகளைப்பெறுவது மோட்சமென்றறிக.

ருச-வது—அத்தியாயம்.

ஞானசைவம்.

உஅச. மீதுவேடமதேதமிக்கசடையுடன்மெய்மைகூடிப்
போதமேயாகிமிக்கபரத்துடன்புணரும்போதில்.

என்றது, நித்தனுய் நின்மலனுய் நிஷ்கள னுய் பரமசிவனுயிருக்கிறவனை க் குருமுகமாய்த்தெளிந்து சைவத்துக்குள்ள வேடமெல்லாந் தரித்துச் சீவ

உருசு தத்துவநிஜாநுபோகசாரம்.

பரபேதமறிந்து ஆத்மாபரத்துடன் கூட நிஷ்டைசாதித்துச் சுத்தாத்மாவா
ய்ப் பரத்துடனே கூடுவது மோட்சமென்றறிக.

ருரு-வது—அத்தியாயம்.

அணுச்சைவம்.

உஅருரு. அகம்பறமிரண்டுமீசனைந்தொழிலதனும்செய்ய
திகம்பரமதனல்வேடருசீர்பெறப்பூண்டுதாளே
சுகம்பெறவீடதென்றான்.

என்றது, நித்தியமாயிருக்கின்ற சிவனையுள்ளும் புறம்புமாய்ப் பஞ்சகி
ருத்தியமுஞ்செய்கிறவனென்றறிந்து திகம்பரவேடங்கள் பூண்டுசன்மார்க்க
லட்சணத்துடனே கூடிக் குருலிங்கவேடம் பொருளாய்ச் சிவன் செய்கிற
தொழில்களையனுபவத்திலே பார்த்து ஆனந்தம்பொங்கியதில் மலையமாநி
றமேமோட்சமென்றறிக. பின்னுமொருவிதம்சிலசற்காரியான கூத்திரியரே
அணுச்சைவராமென்றறிக.

ருசூ-வது—அத்தியாயம்.

கிரியாசைவம்.

உஅசூ. சமயமேவிசேடம்வேறுதகுநிருவாணத்தோடு
மைமவிலாக்கிரியாதிட்சையானவைசெய்துபூசை
நிமமுடனித்தமுத்தியென்றிடநிகழ்கன்மத்தா
லைமவதாமுத்திகூடவருச்சனைகிரியையாமால்.

என்றது, சுத்தமான சதாசிவமூர்த்தியையறிந்து குருவையடைந்து
சமயவிசேஷ தீட்சையும்பெற்று அந்தவாசோதனை யாசாரியனுலே செ
ய்யப்பட்டு நிர்வாண தீட்சையோடு கிரியாதீட்சையும் பெற்று ஆவாகனாதி
பேதமுமறிந்து பஞ்சசுத்தியுஞ்செய்துகொண்டு சைவசாத்திரப்படியே நி
யமமுடனே நித்தமுமுத்தி பொருந்த இதற்கேற்ற கன்மங்களைச்சாதித்து அ
திலேபமைந்து சிவனையர்ச்சனைசெய்து சோடசோபசாரம் அஷ்டவிதார்ச்ச
னையுஞ்செய்வதுமோட்சமென்றறிக.

ருஎ-வது-அத்தியாயம்.

நாலுபாதசைவம்.

நாலுபாதசைவமாவது, சரியைதாதி நாலுபாதத்திலும் ஒன்றொன்றுக
நின்று ஏறிவந்து பின்பு ஞானபாதத்தில் வந்து எவர்களுஞ் சிரிக்கவும் எவ
ர்களுக்கும் விரோதமாகவும் அச்சமாகவும் நடந்து தீவாதர சத்தினிபாதமு

டையனும் சுத்தவிரத்தனும் சனக சனகாதிகளுக்குப்போதித்தவொருமொ
யொல் சமாதிநிஷ்டைபொருந்திபிரமத்திலடைகிறதுமோட்சமென்றறிக.

நிஅ-வது-அத்தியாயம்.

சுத்தசைவம்.

டாள. ஓதியசமயமெல்லாம்பாசசாலத்தொழித்து
நீதியாஞ்சுத்தசைவநிலையதுநிகழ்த்துங்காலை
வேதகவேதாந்தத்தோடாயிடமிகுசித்தாந்த
போதமென்றுகவுன்னிப்பொருளதாய்நிற்குமலாமே.

என்றது, பதி பசு பாசமூன்றும் நித்தியமென்றறிந்து இதிற் சச்சிதா
னந்தப் பிரமம் நிச்சயம் பிறந்து முன்சொன்ன சமயங்களெல்லாம் பாசசா
மாக்கி வேதாந்த சித்தாந்தத் தீர்வாய்ப் பசுபாச முதலான பந்தங்களுமிற
ந்து நாலுமுத்திநாயுங் கடந்து மகாமவுனமே பொருளாக. இலயமாக நிஷ்
டை சாதித்துப் பிரமத்தோடு ஏகனுவது மோட்சமென்றறிக. இனி ஊர்
த்தசைவமுதலாகச் சுத்தசைவ மந்தமாகப் பதிணறு சைவமு முடிந்தது.

இந்தப்பதிணறும் பேதசைவமென்றறிக. இவைகளுக்குச் சொரூபந்
தடம் பந்தம் முத்தி இவைகள் சொல்லுகிறதற்கு வெகுசங்கேஷப மாய்த்
தொகையாய்ச் சமயப்பெயர் மாத்திரஞ் சொல்லுகையால் அந்த நான்குஞ்
சொல்லவில்லையென்றறிக.

நிகூ-வது-அத்தியாயம்.

உலோகாயிதன்மதம்.

உலோகாயிதன் மதமாவது, சொரூபலட்சனம் நித்தியமா யொருக்கா
லுங்கெடாதா யியல்பாயொருவராற்கற்பிக்கப்பட்டதல்லவாய் நின்றதுநான்
குபூதமுமென்றறிக. இனித்தடத்தலட்சனம், இந்தநான்குபூதமுங்கூடின
விடத்தி லெழுவகைத் தோற்றமான சிவராசிகளான தென்றும், நான்குபூத
முங்கண்ணுக்குக்காண்கையாலே பிரத்தியட்சப்பிரமானமேயுள்ளதென்று
ங், கந்த ரஸ ரூப பரிசம் இந்தநான்கு நித்தியவியல்பா யிருக்குமென்றுஞ்,
சுண்ணும்பும் வெற்றிலையும் பாக்கும் கூடினவிடத்தில் ஒரு சிவப்பெழுந்தா
ற்போலும், காஷ்டத்தைக்கடையும்போது அனல்பிறந்தாற்போலும், நான்கு
பூதத்தின்கூட்டுறவால் புத்தி குணம் பொறி புலன்முதற் பதிணறுகரணமா
னபோதமுண்டாயிதுலேபிண்டப்பிர்மாண்டங்களெல்லாச்சீவனு முண்டா
ம். அதெப்படி யெனனில்,

உஅ. ஒத்துறுபுணர்ச்சியினுருக்கள்பலவாகும்
வைத்துறுகடாதிபலமன்னின்வருமாபோம்
புத்திகுணநற்பொறிபுலன்களினைவையெல்லா
மித்தில்வருநீரினிலெழுங்குமிழியொத்தே.

இந்த நான்கிலொருபூதம் பிரிந்தால் மரணமென்றும், மரணமாறுற் பிண்டத்திற்பூதம்நான்கும் அண்டத்திற் பூதத்தோடுகலந்துபோமென்றும், மறுபிறப்பில்லை, சாகிறபோது வாயுமுந்தப் பிரியும் பின்பு மூன்று பூதமும் பிரியும், பூதம் நான்குங்கூடின விடத்திற்போதம்பிறந்து சகலவிஷயபோகங்களை யனுபவிக்குமென்றும், ஈசன், ஆத்மா, ஆகாசம், விண், மறுபிறப்புகாலம், திக்கு இதுகளில்லையென்றும், இனி ஷட்பாவஞ விகாரங்களையும் நான்குவன்னமும் நான்காசிரமங்களுஞ்சகலவியாதிமுதலானசுகதுக்கங்களை யனுபவிக்கிறதும், பிரத்தியட்சமான தேகமேயல்லாமல் உள்ளேயாவது புறம்பிலாவது பிரிவாய்க்கண்டதில்லை என்றுங் காரணமாவது, மனதேயல்லாமல் வேறில்லை, பூதமுங்காலமும் நித்தியவியல்பு, வினை யாத்மா சிவன் உண்டென்பது, ஆகாசத்தில் மரம் பூத்துக் காய்த்துப் பழந்தின்றதற்குச்சரியென்றும், மலடிமகன் முசற்கொம்பேறி ஆகாயப்பூவைப்பறித்த தொக்குமென்றுந், தேகத்தை யறுத்துப்பார்த்தால்நான்குபூதச் சம்பந்தங்கண்டதல்லாமல் வேறுசீவன் சிவன்கன்மங்களைக்கண்டதில்லையென்றுஞ் சொல்லுவாரொன்றறிக. அறிவாவது உடற்குணம், சிற்றுடல்பேருடலாவது, பூதத்தன்மையல்லதுவேறில்லை. இந்ததேகம் விட்டுப் பின்னொருதேகத்திற் பிறக்குமென்று சொல்லில் ஆறிப்போனதீபம் ஒருவிடத்திற் போயிருந்து திரும்ப ஒருரியிலேவந்து பற்றுவதொக்கும். ஒருவனுண்டோசாறு அவனுதிரத்தில் அற்ப்பின்பு பலிக்கிறதற்கொக்குமென்றும், அறிவு புத்தி வாழ்வு சுகதுக்கம்வித்தியாசப்படுகின்றமையால் கன்மமுண்டென்னில்.

உஆ. இருவினைபென்னையின்பத்துன்பங்களியல்பதென்னி
லொருதன்மையியல்புக்குள்ளவொருவனுக்கிரண்டுசெய்தி
வருவதென்மலருந்தியுமருவலின்வாசம்வெம்மை
தருவதேனீரென்செய்துதானியல்பாகுமன்றே.

உஇ. இம்மையின்முயற்சியாலேயிருந்தியீட்டியின்ப
மிம்மையேநுகர்வர்செய்தியிலாதவர்பொருளுமின்றி
இம்மையேயிடருழப்பர்வேறிருவினைபதுன்டே
லிம்மையின்முயற்சியின்றிபெய்திடவேணுமிங்கே,

கைவிரல் கால்விரலேறக்குறைவும் உருசிப்பதார்த்தங்களேற்றக்குறைவும் துற்கந்தம் நற்கந்தமேற்றக்குறைவு மாயிருத்தலால் இதுகளென்னகன்மஞ்செய்தது. ஆகையாலிந்த ஏற்றக்குறைவெல்லாம் பூதத்தி னேற்றக்

குறைவென்றுஞ் சுகதுக்கங் கன்மமென்னில் நீரிற் சந்தனங்கலந்த போது குளிர்ந்தும் அனலிற்சுடினபோது வெப்பமிருக்கையால் அந்த நீரென்னகன் மஞ்செய்ததென்றும், ஆலைலந்தக்கன்மமாய்ந்து பலிக்குமென்னில், தழை எ ருபோட்டவிடம் விட்டுப் பின்னுருகழனிக்குப் பலியாதுபோல இவன் செ ய்தகன்ம மிந்த தேசத்தி லிந்தச்சென்மத்திலே பலிக்கிறதல்லாமற் பின்னே ரிடத்திற் பின்னுருசென்மத்துக்குப்பலியாதென்றும், மறித்துபோனபேரு க்கு அவர்கள்புத்திரர் பிதுர்கன்மஞ்செய்யிற்பலிக்குமென்னில் அவிந்தவிளக் கில்நெய்யை வார்த்தால் திரும்பத் தீபம் வந்து அந்தநெய்யைப் புசிக்கிறதற் கொக்குமென்றுஞ், சிவனுருவனுண்டாகி லவனருவமாகில்வாயுவாம். உருவ மாகில் நான்கு பூதமுங்கூடினவனும். ரூபாரூபமாய்ச் சோதியாகில் அக்கி னிபூதமாம். ஆகையால், நீ சொல்லுகிற தெய்வம் நான் சொல்லுகிற பூத த்திலொருவனுந் தெய்வமில்லாவிட்டால் சிருஷ்டியெப்படியென்னில், பூத த்திலொஷதியுண்டாய் ஓஷதியில் அன்னமுண்டாய் அன்னத்தி லிருநீருண் டா யிரு நீர்களாலுடம்புகளாம். இப்படிச் சார்வாகன்சொல்வது தடத்தல ட்சண மென்றறிக.

இனி பந்தலட்சணமாவது, இந்தசார்வாகன் மதமார்க்கத்தைவிட்டுப் பி றமதங்களில் திரிவதும்சற்சந்தன வனிதாதிபோகங்களைவிட்டுத்தபசுசெய்து இம்மைச்சுகத்தைதவிட்டு மறுமைச்சுகம்விரும்பி யதுபுசிக்கச்சென்னை மெடுக் கவேண்டுமென்கிறதே பந்தநிலை.

இனி முத்தியாவது, சற்சந்தன வனிதாதி போகங்களைக்கூடிஸ்திரீ களிட ஆலிங்கனஞ் சும்பனந் தாடனம் மைதுனம் நகவர்ணனையிப்படிபஞ்ச லீலைகளுடனுங் கூடி யிதுவே பஞ்சமுத்தினையாகக்கொண்டு இவர்கள் பா தத்தில் விழுந்து வருந்துவதேதபசு. இவர்களை முத்தியிடுகிறதே சுகமுத்தி. இவர்கள் யோனியே சுகானந்த சொர்க்கவீடு. அந்தயோனியைக்காணுததே நரகம். இப்படி ஸ்திரி புருஷர் கூடுகிறதே மகாயோகம், இவர்களது லீலையி ல் நடக்கிறதே சற்கன்மம், இப்படிநடவாததே துற்கன்மம், இப்படி நான் சொல்லுகிறதைதவிட்டுக் காணுமலிருக்கிறதற்காசைப்பட்டுச் சிறைவைத்தா ற்போலத் தபசுகள் செய்கிறது எப்படியிருக்கின்றதென்றால், கண்ட தண் ணீரைவிட்டுப்போய்த் தாகவிடாய் மீறி செத்தாற்போலும், பிர்மாவிஷ்ணு உருத்திரன் ஸ்திரிகளை நாவிலும் மார்பிலும் பக்கத்திலுந் தலையிலும் வைத் துக்கொண்டு எந்நேரமும் பிரியாலீலையாயிருக்கையால் அவர்கள்பெரியவ ராணர்கள். அப்படியே இவர் நாஞ்சொன்னபடிகேட்கிற் பெரியவராவா ரென் றறிக. இப்படியிகத்தில் கன்மபோகங்களைப் புசிக்கில் முத்திநிலை யென் றறிக. இதிற்றேகமே யாத்மாவென்கிறவன் சார்வாகன் இந்திரியமேயாத்மா வென்கிறவன்சார்வாகவயிக்கதேசர்பிராணனேயாத்மாவென்கிறவன் இரணி ய கெற்பன் சார்வாக வயிக்கதேசர். மனதே யாத்மாவென்கிறவ ளொருவன், இப்படி நான்குவகையாமென்றறிக. இந்தநால்வருக்கும் நான்குபூதமேசரி யென்றறிக.

உகக. அறிவுடையவனதுவே யாத்மாவன்றியகத்தாதல்புறத்தா
தலறியிலுண்டோ, பிறிவுடையகாரணங்களாதல்பேசிற்பெயர்
த்துமனமேயாதல் பிறிதொன்றுண்டோ, முறையொழிய
மொய்குழலார்மணமேமுத்திமுகரியசந்தனமவரேசுவர்க்கமா
கும், பிறியிலதுவேநரகமெனவும்பேசிப் பின்பினியொன்றில்
லையெனப்பிறவிதானே.

உகஉ. சைதனவீசனுத்மாசார்வினைமறுபிறப்பும்
பொய்யதாமளவையென்றேபூதங்கள்புனர்ச்சிகாலஞ்
செய்தவவ்வியல்பாமெல்லாஞ்செனித்தவாறங்குமுத்தி
மைதனமூலோகாயிதன்வடித்தநற்பொருளீதன்றே.

உகங. சுத்தநீராடிவெள்ளாத்துகிலுடுத்தகிலின்றூபம்
வைத்துமெய்க்காரம்பூசிமாலையுஞ்சாத்துஞ்சாதி
யுத்தமமங்கைமாரோடுறைந்துண்டிபாலோடின்னைச்
சித்தமுந்தெளியுமித்தைச்செய்துநீர்தெளிந்துதேறீர்.

வெண்பா.

உகச. இறந்தார்பிறவா ரிலதுவானீச
னறம்பாவமாயிழையார்கூடல்-சிறந்த
நலமார்சுவர்க்க நரகம்பிரித
லுலகாயிதன்றனுணர்வு.

இந்தச்சாத்திரம் பிரகஸ்பதி பகவான் சொன்னது சாகிறதே நிச்சய மோட்சமென்றறிக. இனிப் பூதம் நான்குமே சொரூபம் இதிற்போதம்பிற க்கிறதே தத்தம் சற்சந்தன வனிதாதி போக விஷயங்களேவிட்டதே பந் தம் இஃதோடு கூடி வாழ்கிறதே முத்திநிலையென்றறிக.

சுவ-வது-அத்தியாயம்.

புத்தரிற்சவுத்திராந்திமதம்.

உகஞ. மூந்துபிடகமூன்றுணர்ந்துசெயிர்ஈன்கொழிந்துமுதுசில
மைந்தும்புனைந்துபார்மீதேயாறைந்தடக்குமியல்புடையோன்
கந்தங்கெடுதன்முத்தியெனக் காட்டுங்குரவனிருப்பவுடன்
சந்தஞ்சிறந்தபுயிருபனிருந்தான்றனைபுடைசூழ்க.

உகசு. நீதியார்வேதநூலி னெறியலாவறங்கணலு
மோதியோராந்துசில முடையராயுடலமூடிப்

போதிநீண்மரத்தின்மேவும் புத்தர்நால்வரினும்வைத்துச் சாதிதானிலாதகொள்கைச் சவுத்திராந்திகன்மூன்சாற்று.

என்றது, புத்தசுவாமியார் போதிமரத்தின்கீருந்து பிடக மூன்றுசாத்திரமுதலானதுகள் வெகுவாயோதி குற்றமாகிற கொலை களவு கள் காமம் இந்தநான்குமொழிந்து இவை சீராவதற்குச் சரணடைந்து நிற்பாருக்குஞ்சாமணபதத்துக்கும் தச சீலம் உபஸம்வ ரெவதத்தனவென்று நிற்பாருக்கும் நாறு சீலம் ஸ்தாபிரபதத்துக்குக் கோடிசீலம்நீலுக்கடையான முதிர்ந்த வர்த்தநிலதோறுஞ் சீலமாம். உயர்ந்த சனத்திருத்தல்கிடத்தல் ஆக-நு. இஃதுடனே மாலை கந்த மருவுதல் பொன் வெள்ளி தீண்டல் கூத்துக்காண்டல் பாட்டுக்கேட்டல் பொழுது பிழைத்துண்ணல் நிலையைந்தும் கூடச்சீலம். ஐ. இதில் முன்சொன்ன-நு-ம். பிடிப்பது.பின்சொன்ன-நு-ம். விடுவது. பிரதம சீலமாகையால் ஐந்தெனக்கொள்க. பூமியிற் குற்றமான இராகாதியறு குணங்களைக்குறைத்தல் இந்த ஆறுவது மோகம் ,மதம், இராகம், விஷாதம் சோதிருஷம், வைசித்திரியம், இந்த ஆறுடனுங் கந்தமாகிற ரூபாதியைந்தையு மடக்கி கந்தங்கெடுகிறதே முத்தியென்று சொல்லுகிற ஆசிரியனுர் கூடவிருக்க கந்தகஸ்தூரி சந்தனமுதலான சுகந்தம் புஜத்திலணிந்து சீஷர்களெல்லாஞ் சூழ விருந்தாரென்றறிக.

நீதியார்ந்திருக்கப்பட்ட புத்த சுவாமியார் சொன்ன வேதநெறி யல்லாததா யிருக்கப்பட்ட கொலையாதி யறங்களைத் தினமுமோதி யதுகளைவிட்டு முன்கவியிலர்த்தஞ்சொன்னதென்றறிக.உடல்களைக்கடுக்காய்த்துவர்ப்பிடித்த பிடவை சீவரத்தால் மூடிக்கொண்டு போதிமரத்தின் கீழிருக்கப்பட்ட சவுந்திராந்திகவை சேஷிகமகாயோகி சௌஸ்தா வென்கிற நால்வரில் தர்க்கயுக்திகள்தவறுது சாதிபேதமில்லாத கொள்கையான சவுத்திராந்திகன் முன்வைத்துச்சொல்வது.

உகள. முழுதுணர்ந்துலகிற்கோறன்முதற்செயன்முனிந்துமற்றும்
பழுதிலாவருளினுலேபரதுக்கதுக்கணுகித்
தொழுதுவானவரும்போற்றத்தொல்பிடகங்களான
வழுவிலாகமங்கள்சொன்ன மாதவனுதனுவான்.

என்றது, உலகத்தைமுழுதுணர்ந்து கொலை, களவு,கள், காமம், பொய் இந்த ஐந்தும் தவிர்ந்து குற்றமில்லாதவருளினுல் பிறருடைய துக்கத்துக்குத்துக்கிதனுய், பிரத்தனுய், வானவர்களெல்லாருந் தொழுதுபோற்றும்படி பழைய பிடகமென்று பெயரான தப்பில்லாத சாத்திரங்களை யனுக்கிரகிக்கப்பட்ட தகைமையுடையவன் புத்தசுவாமியென்றறிக. இனிக் கண்ணங்கராகுகாவீரர்முதலான-உங. புத்தர்களுரைத்சொன்ன பிடகசாத்திரங்கள் மரபேசொன்னமையால் அவையாவது வினையன்பிடகம, அவிதன் பிடகம், சூத்திரபிடகம், இம்மூன்றுமெனமற்று மென்றது பிடகம் பன்னிருசார்பு முதலானதென்றறிக.

உகழ. கொலைமுதற்றவிர்ந்துகூறுங்குற்றமிலருளினுலே
நிலையிலாமுழுதுணர்ந்துநின்றவர்துயர்கட்கெல்லாம்
மலைவிலாததுக்கியானநிலையினைமதித்துச்சொன்ன
தலைவனேசுத்தநாதன்சாற்றியபொருளுங்கேளாய்.

என்றது, கொலையாதியைந்துந்தவிர்ந்து குற்றமில்லாதவருளிணுல் நிலையில்லாமலிருக்கிற அகிலமெல்லாமுழுதுமுணர்ந்துநின்றசர்வசீவன் துக்கத்துக்கெல்லாந் தானுந்துக்கிதனுகி நூல்களையுணர்ந்து சொன்ன தலைவனே, சுத்தநாதன் அவன்சொன்னபொருளுங் கேட்பாய் இந்த விரதங்களுடனுங் கூடிச் சர்வ சீவன் மேல்வைத்த அன்பிணுல் பலயோனிதோறும் பிறந்து உயிர்களுக்கெல்லாமுறுதிசெய்ய ஒருவடிவுகொண்டு பஞ்சகந்தங்கள் கூடிப் பல வுணர்வுண்டாகி கூடனபங்கப்படுவது பிறவித்துன்பமாம். இஃதழிந்து போவதேமுத்தி சொரூபமாயிருக்கிற பரமேஸ்வரனே புத்தனென்றறிக.

இந்தப் புத்தசுவாமி மற்றத்தெய்வங்களைப்போலவல்ல. அதெப்படியென்னில்.

உகக. நூசல்புக்கிடுவானல்லன்புரங்கள்சுட்டிடுவானல்லன்
வாசமார்குழலாடன்னைவடிவினில்வைப்பானல்ல
னைசயுற்றிடுவானல்லனுகுதறழுத்தல்செய்யா
னேசமுற்றெவர்க்குமொப்பானிற்குணன்புத்தனெம்மான்.

உஉய. அலைகடலலறவெய்யானணையடைத்திடுதல்செய்பான்
சிலைமணிகனகமென்னச்செருக்களத்தழிவுசெய்யான் [ன்
கொலைபடுநெறியிற்சேரான்கொடுதொழிற்படைகை யேந்தா
நலைகடையொன்றுமில்லான்றருநாயகனெங்கோமான்.

உஉக. ஊதிக்கன்பூளைசாறியுடையொழிந்துணர்வுமாறிக்
காதுக்கள்கலங்கும்வண்ணைத்தலைமயிர்பறிக்கச்சாற்று
னேதுக்குமீயவேண்டாமீய்ந்திடற்பாவமென்னுன்
போதிக்கன்னீழன்மன்னும்புன்னிபழூர்த்தியெம்மான்.

இப்படி இருக்கிறது புத்தசுவாமிசொரூபலட்சணம். இனித்தடத்தலட்சணமாவது, இந்த புத்தசுவாமி பிண்டப் பிர்மாண்டங்களைச் சிருஷ்டிலய மெப்படியென்னில், பஞ்சகந்தமும் காலமும் சீவனும் கன்மமு மறுதியாயிருக்கும். இதிற் கன்மமான புண்ணியபாவங்கள் தானே சிருஷ்டி திதி சங்காரங்களைச்செய்யும் அதெப்படியென்னில்,

உஉஉ. பாவமேயுயிர்கள்பன்னிப்பாவந்தான்பெருத்ததாலே
கோவடாய்க்கோவத்தீயின்கொண்டெழுந்தழிக்குமெல்லா

மாவத்தாயுயிர்கள்சென்மேறபருவமாம்பிரமதேகம்
தாவிச்சென்றிருக்கும்பாவஞ்சமிக்குமவ்வளவுமன்மே.

உஉங. புன்னியம்பெருத்துப்பின்புபொழிந்ததுமழைதானென்
றின்னியவெள்ளங்காற்றும்சென்றுபாலேடேபோல [னிற்
மன்மிசைபரத்தமன்னேவந்துயிர்நுகரும்போது
நன்னியேயுருவமாகுநல்வினைபடைத்தசேதகேள்.

என்றது, உயிரானது பாவங்களேமிகவுஞ் செய்து அந்தப்பாவங்க ருத்துக்கூடிக் கோபாக்கினியாயெழுந்து, செகத்தையுஞ் சீவனுடைய தேக ங்களேயும் எரிக்கும்போது உயிர்களானதுமெத்த அவஸ்தையால் அண்டவிட மில்லாமல் நவத்தானத்தி லரும்பிப் பிரமாக்கள் தேசத்திலேபோய் அடைந் திருக்கும். அந்தப்பாவமாகிற கோபாக்கினி சமிக்குமளவுமென்றறிக. அதன் பின்பு புண்ணிய மானது, அற்பமாயிருக்கிலும்பெருத்துக்கூடி அதோர்த்தா னையானமழைபெய்து அது கோபாக்கினியை யாறச்செய்து தான் மகாப் பிரளையமாய் மூடிக்கொண்டு அந்தப் பிரளையத்தை வாய்வானது வந்தடித் துச்செல்லகாய்ச்சினபாலேடுபோல் நீரும்வற்றியன்னீரின்மேல் மண்ணும்ப றந்து அந்தமண்ணை முன்பு அவத்தையாலே யரும்பிப்பிரமாக்கள் தேசத்தில் போயிருந்த சீவர்கள் வந்திழிந்து பஞ்சகந்தங்களுடைய சமூகத்தில்பன்னி ரண்டு சார்வாலே யந்தமண்ணைப்புசித்து உருவங்களே யெடுத்துத் தியும். இப்படி பாவபுண்ணியங்களே இலய சிருஷ்டிகளைச் செய்யும். இந்தப் பிர காரத்தால் ஏழுறுப்புண்டாமென்றறிக. இது தடத்தலட்சணம். இனிப்ப ந்தலட்சணமாவது.

உஉச. ஒன்றுனைபஞ்சகந்தமுறுநவத்தானம்வாய்மை
யென்றுநாலளவையொன்றொன்றிலக்கனமூன்றுறுப்பேழ்
சென்றுறுசார்பீராறுதசபாரமங்கமெட்டாம்
பொன்றுதல்புத்திமுத்தற் கில்லைச்சியீசவானே.

என்றது, புத்தர்சொன்ன பிடகநூல் மூன்று முதலாதியாக முன் பி ன் மலைவில்லாமற் சொல்லுகையாலென்றறிக. இனிஉருவம் வேதனை-குறி ப்பு-பாவனை-விஞ்ஞான மென்றுபெயர் இதினர்த்தம். ரூபகந்தமாகிறது வா யு,முதற்பூதங்கள் நான்கும் பரிசமுதல் விஷயங்கள் நான்கும் கூடியிருந்த எட்டினுடைய சமுதாயமே ஆத்மாக்களுடையதேகம். இனி விஞ்ஞானகந் தமாகிறது விஷயங்களுடையவும் இந்திரியங்களுடையவும் கூட்டுறவாலு ண்டான ஞானம். இனி சுகதுக்க மோகங்களேயறிகிறது, ஐந்துறுப்பை யுடைத்தாயிருக்கும். இதின் பெயர், குணம், தொழில், சாதி, பொருள் இப்படி-நு-ம்-இதிற்பெயராவது, கோவுக்குக் கோவென்றபெயர். சாதியா கிறது கோவாகிறசாதி. குணமாவது,வெள்ளைமுதலான நிறம்.தொழிலாவது,

கெமனுதி தொழில். பொருளாவது, கொம்புறு நார்முதலான அடையாளங்கள். ஆடு. இனி ஸமஸ்காரஸ்தலமாவது, இந்தப்பஞ்சகந்தத்தையொழிய வாத்மாவேறில்லை, கர்த்தாவும் வேறில்லை, யென்றறிக. அஃதெப்படியென்னிற் பஞ்சகந்தம் அனுதியாய் அதின்சமூகத்தில் எல்லா முண்டாகிறது மிறக்கிறது மாகையாற் கர்த்தாவேறில்லை. இனி யனுதியான சீவன்களினின்வகையாகத் தனுக்களெடுக்கையாற் சீவனுமிதைவிட வில்லையென்றறிக, இதற்குச்சாட்சி புத்தன் தேவனல்லவோ வென்னில், அவரும் இந்தப் பஞ்சகந்தங்களையுங்கெடுத்தவராகையால்தேவனென்றது.

உஉடு. எட்டிவையுருவமூன்றுவேதனையாறுஞான
மொட்டியகுறிப்போராறுசெய்கையுமிருபதாகக்
கட்டியபஞ்சகந்தங்கணத்தினிற்பங்கமாகித்
தொட்டநாம்பத்துமூன்றுஞ்சுற்றநூற்றுணிவுதானே.

என்பது, உருவகந்தமாவது, பூதம்-ச-ம். உபாதாயம்-ச-ம்.ஆடு அ. வேதனஸ்கந்தமாவது, ங. விஞ்ஞானம். சு. குறிப்பாவது. சு. செய்கையாகிறபாவனை. உடு. இப்படிபஞ்சகந்தங்களுங் கணத்திற் பங்கமாகிறதாய். சங. விதமாயிருக்குமென்றறிக. இனி-அரு-உரு-பிரமா-உம்பர்-அசுரர்-நரகர்-நரர்-பேய்-விலங்குஇப்படி. கூ. தானமாம்-இன்பமின்பகாரணம்,துன்பம்-துன்பகாரணம், ஆடு ச. பிரத்தியட்சம். க. அனுமானம். க. ஆடு உ. அனித்தந் துன்பம் அனுத்மிகம் ஆடு ங. பிரமா, உம்பர், அசுரர், மானிடர், விலங்கு, பேய், நரகர் இந்த எழுவர் கதியுமாம். பேதைமை இதின் சார்வாகச்செயல் இதின்சார்வுணர்ச்சி. இதின்சார்வு, அருவம். இதின்சாரருவம் இதின்சார்வு வாயிலாகும்இதின்சார்வு ஊறு,இதின்சார்வு, நுகர்ச்சி, இதின்சார்வு, வேட்கை, இதின்சார்வு பற்று, இதின்சார்வு, கன்மத்தொகுதி, இதின்சார்வு, மூப்பு. இதின் சார்வு, சாக்காடாம். இப்படியிந்தப் பன்னிரண்டு சார்வு. முன்சொன்ன பஞ்சகந்தங்களுடைய சமூகத்தில் உலகங்களையு முன்சொன்ன ஏழுறுப்பையுமுண்டாக்கி இந்த ஏழுறுப்பையுங் கொண்டு முன் சொன்ன நவத்தானத்திலும்போய் அமர்ந்திருந்துவந்தும் போயுஞ் சந்ததியுமாறிப் பிறப்பர் இப்படிப்பிறக்கிறது உறுப்பேழான சீவன்களானது ஒழுக்கந், தானந், துறவு, அன்பு, முயர்ச்சி, ஞானம், நிலைமை, பொறை, வாய்மை, நன்னெறி, ஆடு. இனி நரகாட்சி, நல்லூற்றம், நற்செய்கை, நன்முயர்ச்சி, நல்வாட்கை, நல்வாய்மை, நற்கடைப்பிடி, நல்லுள்ளத்தோர் தோற்றம், ஆடு அ இதல்லாமல் முன்சொன்னவாய்மை-ச்-ம். இலக்கணம்-ங-ம். தேசபாரம்-ஞ-ம். அங்கம்-அ-ம். ஆடு உடு-ங் குணமாகிறதத்துவத்தோடுங்கூடி யுறுப்பேழானசீவன்களுக்கும், பஞ்சகந்தங்களால் போதமுண்டாய் வியவகாரமாய்ச் சென்னமரணப்படும். இந்தப்போதங்களும் கூடபங்கப்படுமென்றறிக. இந்தஅர்த்தமெல்லாம் "ஒன்றுரைபஞ்சகந்த,, மென்றவிருத்தத்தில் தத்துவம், கந்தம், நி-ல் உருவகந்தமானவிதம்-அ-, விஞ்ஞானகந்த பேதம் விஷயம்

இந்திரியம்-அ. வேதனஸ்கந்தபேதம், சுகந் ,துக்கம், மோகம். ஆ ரூ. ஸை க்ஞகந்தபேதம்-டு. ஸம்ஸாரகந்தபேதம்-டு. இந்தபஞ்சகந்தத்தில் வேறில் லாத ஆத்மாவுங் கர்த்தாவும்-உ. ஆகப்பஞ்சகந்தங்களில் பேதமான தத்துவம் உசூ. இதல்லாமல் பின்னொருவிதம். எட்டிவையென்ற தத்துவம்-சரூ-ல் ரூபகந்தபோதம் முன்சொன்னதில் சுட்டுபோய் மீந்தது-ரூடு. ஆககந்த பேதம்-சூக. நவத்தானம்-கூ. வாய்மை-சு, அளவை-உ. இலக்கணம்-ரூ. உறு ப்பு-எ. சார்பு-கஉ. தேசபாரம்-ஙி. அங்கம்-ஞ. ஆறுதத்துவம்-டுடு. ஆகசூ கந்தம்-டு. ஆக-ஈஉக. இதல்லாமற் பிருதிவிமுதல் புத்தி யீறுக ஆகாசம் ஈங்க லாய்த் தத்துவம்-உரூ. இதிற்பிரதானம்-ஙி. புத்தியிதுகளெல்லாம் பஞ்சகந்த ங்களாலுண்டானதென்றும், இந்தப்பஞ்சகந்தங்களும் கூடினபங்கப்படுமெ ன்றும், ஏழுறுப்பிலுண்டான சீவன்கள் கணிதமென்றும், பஞ்சகந்தங்கெடு கிறதே முத்தியென்றுஞ் சொல்லுவார்களென்றறிக.

உஉசூ. என்றவம்முறைமையாலேயியைந்தவுற்பவச்சார்வாகித்
துன்றிடுமுறுப்பில்வந்து சொன்னவத்தானத்தேயு
மன்றியசார்வுங்கேட்டங்காயசுதியுமாறச்
சென்றனர்சார்புசெப்பிற் றெளபாரமங்கமெட்டே.

உஉஎ. போதமாங்கந்தமைந்திற் போதமும்பங்கமாகும்
பேதமைபாதிசார்வாம் பிறங்குபின்பனித்தமாகும்
ஆதிநன்கன்மநோன்புண்டாசமீசனுத்மா
சாதியேயில்லையென்று சாறுநற்சுத்தநன்னூல்.

இந்தமுறைமையால் இசைந்திக்கிற உற்பவச்சார்பாகநிறையப்பட்ட பிறப்பில்வந்து நவத்தானத்திற்பேச் சார்புகெட்டுச் சுந்தியு மாறத்தெச பாரமங்க மெட்டான நல்வழிகளாற் நடந்து கந்தத்திற் போதமும் பங்கப் பட்டுப் பேதமைசார்பாக அனித்தாகிக் கன்மநோன்புண்டாய்ப் போதமா ன புத்தி சந்தானபாரம்பரையாகெட்டுப் பேதமைமுதற் சார்பெல்லாந் தோன்றி கூடினபங்கப்பட்டு அதி வழித்தாகச்சென்ன முண்டாகிறது பெ த்தநிலை யென்றறிக.

முன்சொன்னதத்துவமெலாம் அற்றுச்சந்தானபரம்பரையறப் பஞ்ச கந்தம்கெடுகிறதே முத்தி யெனறிக. இனி இவன்மோட்சம் புத்தி தத்து வத்திலடைதலாகையாற் புத்தனென்றறிக. இனிப் புத்தர் நடக்கையு மிவர்கள் கொள்ளும்பொருளுவர்கள் மகாவிரதங்களு மிவர்கள் மதஸ்தாபி யமும் பரமதமறுப்புஞ் சொல்லுகின்றோம்.

அஃதெப்படியென்ன முன்சொன்ன கந்தங்களால் கருதிய பொரு ள்களெல்லாம் ஞானஞேயப் கணத்திற்பங்கப்படும் விதம். உருவம், அருவ ம், வீடு, வழக்கு ஆ ச. ரு-ச-ம்-ஞன்றிரண்டாய்-அ-ம், இந்த எட்டான

விபரம். உருவமென்பது பூதம், உபாதாயம் ஆ உ. அருவமாவது சித்தம் கன்மம் ஆ உ. வீடாவது குற்றங், கந்தம் ஆ உ. வழக்காவது உள வழக்கு இலவழக்கு ஆ உ. ஆ அ. இந்தளட்டு மென்செய்யுமென்னில் முன்சொன்ன உருவமாவது, பூதநான்குமாம். உபாதாயமாவது, வலி-கந்தம்-இரஸம்-வன்னம். ஆ ச. இத்தளட்டுங்கூடிச் சகலரூபங்களுஞ்சகத்துகளுமாம். இனி அருவம்-உ-ல். சித்தமானது ரூபத்தி லுறப்பட்டபுலனுகிற உபாங்கத்தோடு கூடி ரூபத்தைக்கண்டது. கன்மமாவது, கண்டரூபங்களை நன்று தீதென்பது, இனி வீடு-உ-ல். குற்ற வீடாவது, இராகாதி குணங்களைக்குறைப்பது. கந்த வீடாவது, ரூபமாதியாகிற பஞ்சகந்தங்களையு மாற்றுகிறது. இனிவழக்காவது, உள்ளவழக்கும் இல்லாதவழக்குமிந்த்விரண்டும் அங்கமாய்க்கொண்டு தொகை-தொடர்ச்சி-மிகுத்துரையென்று மூன்றும். இந்த மூன்று மொன்றி லிரண்டாய்ஆறும். அதெப்படிதொகையுண்மை தொகையின்மை ஆ உ. தொடர்ச்சியுண்மை தொடர்ச்சியின்மை ஆ உ. மிகுத்துரையுண்மை மிகுத்துரையின்மை ஆ உ. இப்படி ஆறு விதமாம்.

உஉஅ. ஒருவனென்றேதப்பட்டானுருவாதியைத்துங்கூடி
வருவனென்றுரைத்தன்மறைத் தொகையுள்மைவழக்கதா
முருவமங்காதியாயவைந்தையுமொருவனின்று [கு
தருவதுதொகையினின்மைவழக்கதாஞ்சாற்றுங்காலே.

என்றது, ஒருவனென்றேதப்பட்டவன் முன்சொன்ன பஞ்சகந்தங்களாகிற உருவமாதி-ஞ்-ங்கூடி யொரு நகமெடுத்து வருவன். புத்தசுவாமியே யொருவனென்பது, தொகையுண்மை வழக்காகும். இந்த உருவமாதியைந்தையு மொருவனே நின்று கொடுபானென்பதுதொகையின்மை வழக்காம்.

உஉக. காரணகாரியத்தின்றொடர்ச்சியாய்க்காலமூன்றின்
சோர்வறத்தோன்றுங்கேட்ட லியென்கை தொடர்ச்சியுள்
யோர்தரிலொருவனேயெக்காலமுமுள்ளானென்று [மை
தேர்வதுதொடர்ச்சியின்மைவழக்காஞ்செப்புங்காலே.

என்றது, முன்சொன்ன ஏழுறுப்பானவன்களுமதினுடைய போதங்களுங்கெட்டுப் போலுலுங் காரணமாகிற வத கெட்டுக்காரியமாகிறமரத்தின் வழியே யந்த விதைதிரும்பவந்தாற்போல் தவர்த்தபவுவியகாலமூன்றினுஞ் சோர்வில்லாமற் றோன்றும். கெட்டவழ வந்தென்பது, தொடர்ச்சியுண்மையாவது, இனி விசாரிக்கில் ஒருவனே காலத்திலுமுள்ளானென்று தெளிவது தொடர்ச்சியின்மையென்றறிக.

உகூ. தோற்றியபொருள்களெல்லாநாசமாமென்றுசொல்லு
மாற்றமுன்னுரைத்தன்மற்றைமிகுத்துரைவழக்கினுண்மை
போற்றியபொருள்கண்கட்குப்போனதுபோன்முதிர்ந்து
வேற்றுமைப்பட்டதென்கைமிகுத்துரையில்வழக்கே.

என்றது, தோன்றப்பட்ட பொருள்களெல்லாம் நாசமாகிறது. நிபத்தி யென்று சொல்வது, மிகுத்துரைவழக்கினுண்மையாவது, போற்றப்பட்ட பொருள்களெல்லாம் கண்ணுக்குப்போனதுபோல முதிர்ந்து வேறுபட்டுத்திரியு மென்பது, மிகுத்துரையில் வழக்காவதென்றறிக. இப்படியாறுவிதமாம். முன்சொன்னதைத்திரும்பத் தொகையாகச்சொல்வது. முன்சொன்ன உருவமாதி பஞ்சகந்தங்களுங்கூடி வருகிற புத்தசுவாமியே யொருவனென்பது தொகையுண்மை. இந்தவுருவாதியைந்தையுஞ்சீவராசிகளுக்குக் கொடுத்துத் தானிதின் சொரூபமல்லாமலிருப்பானென்பது தப்புரையாகையால் தொகையின்மை. முன்பு புத்தர்நூலில் சொன்ன ஏழுறுப்பானசீவன்களுமதின்போதங்களுங் கெட்டுப்போனலும் வித்தின் வழிவித்துப்போல கூடணபங்கப்பட்டு அது தானேதோன்றுவது தொடர்ச்சி யுண்மை. இதல்லாமலொருகடவுளெக்காலத்து முள்ளவனென்பது பொய்யாகையாலது தொடர்ச்சியின்மை. இனித்தோற்றிய பொருள்களெல்லாம் நாசமாகிறதே புத்தன்பட்சமாகையால் மிகுத்துரையுண்மைவழக்கு இனித்தோற்றியபொருள்கள் எல்லாம் போனதுபோலமுதிர்ந்து வேற்றுமைப்பட்ட தென்கைமிகுத்துரையிலவழக்கு இப்படி ஆறு விதமாமென்றறிக.

இந்த ஆறுமல்லாமல் முன்சொன்ன உளவழக்கில் வழக்காவது திரும்ப ஆறுவிதமாம். அதெப்படி உளவழக்கு இலவழக்கு உள்ளதுசார்ந்த உளவழக்கு உள்ளதுசார்ந்த இலவழக்கு இல்லதுசார்ந்த உளவழக்குஇல்லதுசார்ந்தஇலவழக்கு இப்படியாமும். இதில் உளவழக்காவது, கெட்டவிடத்திலுணர்வுண்டென்கை. இலவழக்காவது முயற்கோடுபோலக் கெட்டவிடத்திலுணர்வில்லை என்று மாறுமதக்காரர்சொல்வது. உள்ளதுசார்ந்த உளவழக்கு என்பது, கெட்டவிடத்தி லுணர்வு முண்டாயந்த உணர்வைச்சார்ந்து உணர்வுதிக்கை என்பது, உள்ளதுசார்ந்த இலவழக்காவது, உணர்வு கெட்டவிடத்திற் பின்புணர்வுதிப்பதில்லை யென்று மாறுமதத்தார்சொல்வது. இல்லதுசார்ந்த வுளவழக்காவது, உணர்வு முன் பில்லாவிடத்திற் றோன்றுவது. இல்லதுசார்ந்த விலவழக்காவது, உணர்வில்லாமற் போவது இப்படி யாறுவிதமாமென்றறிக, இதுபெத்தநிலை முடிந்தது.

இனி முத்திநிலை சொல்வது, முன்சொன்ன உருவம் அருவம் வீடு வழக்கு இந்த நாலுமிதின் பேதமல்லாமல் வானம் ஆன்மா மனது காலந் திக்குமனோவாக்கு காயமிறந்த இதை யுண்டென்பது பித்தேறிச்சொல்வதென்றறிக. இதுகளில்லையென்றுசொல்வது ஆகாசமானது சொல்லப்பட்ட பொருள்களெல்லாந் தாங்கி நிற்குமென்னி லருவமாதலாலுருவங்களைத் தாங்கி நில்

லாது. வானிலோசை பிறங்கு மெனில், அது உருவின்கூட்டத்திற்பிறக்கு மல்லாமல் வானில்பிறவாது. வாணில்லாமல் நிற்குமெனில், நீசொல்லுகிறபடிக்கு அப்போது எங்குமில்லாமல் போமென்றறிக. இனி ஆத்மபோதமாகிற விந்திரியம் புலன் நூல்களிதுகளோடு கூடியறியுமெனில் இராத்திரியிற் பச்சைசிவப்புடன்கண்கூடியபொழுது அதுஎன்னமோவென் றையப்படுதலாவிந்திரியங்களறியாது விந்திரியங்களைக் கொண்டு ஆத்மாவறிவானென்னில் அப்போது ஐந்திலுமேகதேசத்தி லொன்றுக அறியவேண்டுஞ்சார்பிலறிந்திடுமெனில்நம்மைப்போலநீயுமொருபுத்தகைவேண்டும். ஆஞல்ஞானஞேய ஞாதுருவுமல்லாமற்பூமிபோலஎல்லாவற்றையும் விளவிக்குமோரறிவுண்டெனிற் பருப்பாலே சமைத்தசோற்றுக்குத் தானேகறி யென்றதுபோலென்றறிக. இந்தவுயிரை அருவெனில், அருவமுருவோடுற்று நில்லாது உயிரையுருவெனில் உடலினில் உடலடங்காது உயிரையணுவெனில்உடலின்பலதுவாரத்தில் பிறப்பட்டுப்போம் உடலையும் அணுச்சுமக்கமாட்டாது உயிரினை நித்தமெனில் உணர்வுக்குஉதையாஸ்தமனமில்லையாம். உயிர் எங்கும் நிற்குமெனில் எங்கும் விகாரமில்லையாம். தத்தஞ்சரீரங்கடோறும் அணுவுக் கணுவு மகமேருவுக்கு மகமேருவுமாய் நிறைந்து நிற்கு மெனில் உடலோடழியும் உடலி லோரிடத்தே நிற்குமெனில் நின்றவிடமல்லாமல் மற்றவிடம் அறிவில்லையாம்.

இனி அந்தரங்கத்தில் ஈசன்ருனே உயிர்பிறப்பு வீடாமென்று வேதப் பொருள்சொல்வது, மறைவாயிருக்கையால் அதுபொய் இந்திரியமுமுடம்பு மேயுணர்வாகிறது, கண்ணுரக்காண்கையா லிதுவேயுயிராவது நிபத்தி யிது மறுப்பு முற்றும்.

இனிப் புத்தன்பட்சம்.

உடம்பைவிடவுயிரில்லை உயிரைவிட வுடம்பில்லை வித்து மரமும் போலப் போதமுங் கந்தமும் பிரிவில்லை யென்றறிக. இனி கூடிணபங்கப்படுவதும் பட்டவிடத்திற் றிரும்பச் சீவன முண்டாகிறது. எப்படி எனில் நீர்வரவுமுன்போகுங்கால்பின்னேநீர்வருகிறதுபோலும், தீபச்சுவாலைமுன்போகப் பின் சுவாலைவருவதுபோலும், அக்கினிச்சுவாலை முன்போகப் பின்வருவதுபோலும், வித்துக்கெட்டு வித்துவருவதுபோலு, மருந்தெண்ணெயில்மருந்து மாய்ந்துஎண்ணெயிலூறினெண்ணெய்பலிப்பதுபோலும், எருத்தழைமாய்ந்து பின் பயிருக்குப்பலிப்பதுபோலும், அறிவுகெட்டுக் கெட்டதின்வழியே அறிவாகிறபோதம்பிறக்குமென்றறிக. இந்த புத்தி யினுடைய போதமும் மிப்படிக்கணத்திலே பிறந்து நசிக்குமென்றறிக. இனிக்காலத்திலுலே பஞ்சகிருத்தியமும் நடக்குமெனில் மூந்தகாலத்திலுண்டான பொருள்களிலே புகுந்து பிறிறிக்கிறவ ரெருவனுண்டென்பது தப்புரையாகவேண்டும். நீ சொன்னது நான்சொன்ன இலவழக்காயிற்று எல்லாக் கிருத்தியமுந் திரவியத்தியல்பாமென்றறிக.

இனித் திக்குகளுண்டெனில் ஒருவனுக்குக் கிழக்கே ஒருவனிருந்தா லிவ னுக்கு முன்னிருந்தவன்மேற்காம். எனக்குமேற்கிருந்தவனுக்கு நான்கிழக் காம் இப்படி எந்தத் திக்குந்தடுமாறுமாகையாற் றிக்குகள் நான்சொன்னஇ லவழக்கி லின்மையாமென்றறிக. புத்தியையல்லாமல் மனமென்பது வேறி ல்லை இனி ஒருகடவுளுலகினைப்படைத்தானெனில் ஒருவனுண்டான போதே மூன்பே யுலகுண்டாம்ஒருவன் படைக்கவேண்டாம் ஒருவனில்லாவிடில் உ லகினைப்படைக்க ஒண்ணுது முன்பேயுள்ளதை யுபாதானமாய்க் கொண்டு அதின்காரியத்தாலேஉலகினைப்படைப்பானெனில்முன்பேயுண்டானதில்லா மற் போகவொண்ணுது உள்ளத்திற் கடாதிபோல வுதிப்பித்தானெனில்,எங் கேனின்றுதிப்பித்தான் உலகின்மேல் நின்றுனெனி லிவனுக்கு முன்னே யுல குவந்ததாம் எங்கும் பூரணமாய் நிற்குமெனில் எங்குமுன்வந்ததாமென்றறிக.

இதல்லாத லோகத்தைகருணையாலுண்டாக்கினனெனிற் சிங்கம், புலி நாகம், கூற்றனிவர்களை யுண்டாக்கிறவன் கருணையில்லாதவன் பித்தனெ ன்றறிக. வலியிலுல் படைத்தாலுகிற் பயித்தியக்காரனும் விளையாட்டெனி லிறை சிறுபிள்ளையாகுங் கன்மத்தாற்படைத்தானெனில் முன்பேயுண்டா யிச்செய்வோருண்டாகவேண்டும். இனியுண்மையானஅறிவுதெரியவேண்டி ல்லாலமெல்லாமனுதி என்றறிக. சிவனருவெனிற்பவத்தில் நின்று சென்ன மெடுப்பிக்கமாட்டான். ஆகாசம்போலப் பிறவான் நிழல்போலநிற்பனெனில் நிழலிலிருந்தபேருக்குச் சுகமுண்டு. போறி வுண்டெனில், அந்த அறிவைக் க ருத உருவம் வேண்டு மில்லையாகிற் கருதவுங்கூடாது. எங்கள் நூல் அறிதியி றைவனுண்டென்னு மெனில், உங்களூராலுரைப்பா ரில்லாமற்றானே யுண் டான தாகவேண்டும். அவனை நூலாலறிந்து அவனைக்கொண்டு நூலறிந்தோ மெனி லிதுவுமொரு ஆச்சரியமென்றறிக. சிவனுருவம் எனில் உருவத்தை முன்படைத்தார்வேண்டும். உருவம் அவனிச்சை எனில் உலகெலாமவரவரி ச்சையாகுங் கன்மத்தால் உலகருக்குருவுண்டாயிற்றனி லுருவுடையோர்க ட்கெல்லாங் கன்மமுண்டென்றறிக. விளை புசிப்பிக்க ஒருவர்வேண்டு மெ னிற் சோறுண்டாற் பசிபோவதற்கொருவர்போவென்ன வேண்டுமோ தா னேயேறின கல்லை யொருவரிழுக்கவேண்டுமோ சர்ப்பந்தீண்டில்விஷமொரு வரேற்ற வேண்டாந் தன்வினையைத் தானே புசிக்கிறதற்குக் கர்த்தாவே ண்டாமென்றறிக. இனி ஸ்தாபராதிகள் சீவனில்லாத பூதவுருவமாய் பூமி யிலுண்டாம். அதெப்படி எனில், மேடுகள் புற்றுகள் கொம்பாதிகள் போ லவுந் தேகத்தில் மயிர்போல பூமியிலே பயிர்களுண்டாம் இதுகளெல்லாஞ்ச ரசீவனுக்குப் புசிப்பாம். அந்தச் சரசீவன்களைத் தானேகொல்ல வொண்ணு துசெத்தபிறகு அந்தவுடலையும் ஒருத்தர் கொன்றதுந் தின்னலாஞ் சீவன் போனபிறகு அந்தவுடல் மண்ணுக்குச்சரியாசையாலே தின்னலா மென்ற றிக. இப்படிமுன்சொன்ன உருவரு வீடு வந்தின்பேதமுமறிந்து வானம் ஆன்மா மனது காலந் திக்கு சிவனுண்டென்பதும் நன்றுகவில்லை என்றறிந் துசூனபங்கமுங்கெட்ட விடத்திலுண்டாவது மறிந்துபிறமதங்கள் பொய் என்று அவர்கள் சொல்லுகிற தெல்லாமறுத்துச் சைவமறை என்றறிந்து

இதுகளைனல்லாமறிந்துதான்இராகாதிகுணங்களைமாற்றியறங்களையுண்டாக்கி யிழிவானபுலன்களைப் போக்கி யின்பதுன்பங்களை வாட்டி யில்வாழ்க்கைமு தலான அஷ்ட ஐஸ்வரியமும் ஒழிந்து ஞானசீல சமாதியினுறுதியாலே பஞ்ச கந்தங்களுங் கூடிச் சந்தானத்திற் கெடுவது பந்தந் துக்கமென்றறிந்து அந் தப்புஞ்சகந்தமூலமறக்கெடுவதே முத்தியின்பமென்றறிக. இவன் ஆத் மாவை யணுப்புணர்வென்றுஞ்சொல்வன் இது புத்தரிற் சவுத்திராந்திமதந் திரமுமோட்சமும் என்றறிக.

சுக-வது-அத்தியாயம்.

யோகாசாரன் மதம்.

உஙக. போதமேபொருளாய்த்தோன்றும் பொருளதாயெழலாற் வாதனையதனற்கூடிவருதலால்வடிவிலாமை [போதம் யாதலாங்கனவேபோலுஞ் சகளமுள்ளறிவாமென்றும் ஓதினரோதாணுப வுணர்விலியோகாசாரன்.

என்றது, போதமாகிற காணேந்தியாதிகள் பொருளாய்த் தோன்று மிந்தப் போதம் பொருளாய்த்தோன்றலால் எப்படி வாதனாதோஷத்தில் கூடி வடிவில்லாமற் பொருளாயெழுந்து கனவுபோலச் சகளமாகும். பின்பு ம்போதமானது உள்ளேயறிவாயிருக்குமென்று சொன்னனென்றறிக. இ வன்க்ருத்துச் சலத்தின்பிரபாகம்போலவு மருந்தெண்ணெயில் மருந்துமறை ந்திருந்து சூக்கமாகிப்பலிப்பது போலும் போதமானது உள்ளாயிருந்துதொ ன்றுதொட்டுப்பவிக்குமென்றறிக. இவன்தெய்வம் மாதாயோனியில்பிறவா மல்வயிற்றைறப்பீறிவந்தாரென்றும்பிறதுக்கதுக்கையிருப்பானென்றுமிவனு க்கு முன்சொன்ன சுவாமியேகர்த்தன்தந்திரம்வேறென்றறிக.

சுஉ-வது-அத்தியாயம்.

மாயத்தமிகன்மதம்.

உஙஉ. அவயவம்பொருளாய்த்தோன்றுமவயவமழிந்தாற்பின்னை யிவைபொருளென்னவேறொன்றில்லையாம்பொருள்களின்று மவைபொருளிலாமையாலேயறிவுமின்றுகுமென்று கவைதருமொழியினுலேகவிலுமாய்த்தமிகனென்றான்.

என்றது, "தேகமானது" அவயவங்களுடனே கூடி ஒரு ஆகாரமான பதார்த்தமுஞ்சீவராசிகள் தேகமுமாம். இந்த அவயவங்களெல்லா மழிந் துபோனலந்த தேகத்திலழியாதபொருளொன்றில்லை ஆதலாலதிலே கூட்சு மமாயிருக்கிற பொருளைக்கண்டதில்லை ஆகையால் அதிலறிவிருக்கு மென்ப தில்லை தேகமேபொருளென்றறிக. சுவாமியானவர் சுகதுக்கங்களைப் பரீசி

பான்சுத்த ஞானமெவாழுக்கமென்றறிக. இவனுக்குமுன்சொன்ன புத்தசு வாமியே யென்றறிக.

சுங-வது—அத்தியாயம்.

வைபாஷிகன்மதம்.

உஙங. அரிசனந்நுகூடவருணம்வந்தெழுந்தாற்போல
விரிசகம்பொருள்ஞானங்கம்விரவிடமேவித்தோன்றும்
தெரிசனமிதுவேயென்று தெளிந்திடுந்தோரார்வீடு
பரிவொடுமடைவதொன்றுபகருமன்வைபாடிகன்றான்.

என்றது, மஞ்சளுஞ் சுண்ணம்புங் கூடினவிடத்தில் ஒருசிவப்புப் பிறந்தாற்போல விரியப்பட்ட சகம்பொருள் ஞானமிது முதலான தெல்லாம் விசாரிக்க மேவித்தோன்று மிப்படி யல்லாமல் வேறுசொல்லுகிறதெல்லாம் பொய் என்றறிக. இவன்சுவாமி முன்சொன்ன புத்தனே என்றறிக. இவன் கருத்து தீபமுந் திரியும் நெய்யும் போனவுடனே தீபமுமாறிப்போம்போலப் பஞ்சகந்த ஞானமெல்லாஞ் சூனியமாகிறதே மோட்சமென்றும் ஆத்மாவையணுவென்றுஞ்சொல்வான்.

உஙச. அரியநன்புத்தனுலுமதமுளவவம்றிற்பேத
முரியபேருலகமூலத்துரைப்பதுவன்றிவேறு
பெரியகல்வானமீசன்பேணுறுமாத்மாவின்றிப்
பொருவிலாவீடுகொள்ளும்பொருண்மையும்படிகவிலொன்றே.

ஙஞ. ஆனபொருளித்தனையுமனித்தமென்றுமறிவானேயுள்ளென்
கைசத்தியமென்றே, ஞானமுளததுகாலாய்நடக்குமென்றே
நடக்கும்வகைநேராதை நல்வீடென்றே, மூனமிலாப்பொரு
ளாகியுலவாதாகி யுள்ளதுநிர்வாணமெனுமொன்றேயென்றே,
மீனமிகுமுடம்பான வருவமெட்டினையபாகவினையிழைக்கு
மிழைப்பென்றேமே.

ஙஞசு. இறந்தார்பிறவாரென்றுரைத்துமேகமூலகத்திலதென்றும்
பிறந்தோனுடம்போடுனர்வென்றும். பிறந்தாரெனுருவ னிலதென்றும், துறந்தோன்வீட்டிலிலனென்று மூனர்வாதாரந்தொக்குடம்பென், றறைந்தோன்புத்தனுலுலகாயிதனே
டறிவொன்றும்

உஙஎ. செத்தவர்பிறந்ததில்லைச் சிவனுத்மாவுமில்லை
முத்தியாமதுவொன்றில்லை முயங்குமாகாசமில்லை

நித்தனுமீசனில்லைநினைந்துகாம்வணங்குகின்ற
புத்தருமில்லையென்றூர்பொருளறிவின்மையாலே.

இந்த நூலைச்சுகதரிஷி சொன்னதென்றறிக. இனி மோட்சமாவது துக்கசுகமில்லாமற் சுத்த புத்தியாயிருக்கிறதென்றறிக.

சூசு-வது—அத்தியாயம்.

அருகரில்நிகண்டவாதிமதம்.

உகூஅ. வாசமாமலரேசாகுபேணிமறாதியோடுமலியுந்தவத்
தாசையாயுடையகன்றுமாசினையடைந்தில்வாழுமுமறத்தினிம்
பாசமானவைதவிர்ந்துபண்டிபடவுண்டுபாயிரைதிரிமேய்
னேசமாயவைதரித்துளோர்களினிகண்டவாதியைநிகழ்த்துவாம்

என்றது, வாசனைபொருந்தப்பட்ட அசோகமரத்தின்கீழே வேதநீதியல்லாத தவத்தின் நிட்பாவத்திலாசையாயுடையில்லாமற் குற்றமுடைய வில்வாழ்வாயறத்தையும் பாசத்தையும்விட்டுக்களஞ்சியத்தி லுண்டான பண்டங்களை யுண்டு பாயிலேறு பீவிமேலே நேசமாய்த் தரித்து இந்த நடைவந்த அருகரில் நிகண்டவாதி கருத்தைச்சொல்லுவோம்.

உகூக. ஈறிலாதவனந்தஞானமுதலில்லைக்குணங்களெனுமொன்னுண
மாறிலாதமதிமேவுசீதமெனமன்னிவானவர்வணங்கவே
வேறுலாவுகுணஞானமாவரணியாதியெட்டினையும்விட்டசி[ன்
ரேறுபான்மையுடனீடுவாழருகனெங்களருக்கிறைவனென்றனன்.

என்றது, ஈறில்லாத அனந்த ஞானம், அனந்ததரிசனம், அனந்தவீரம், அனந்த சுற்சுகம், அனந்த போதம், அனந்தநிராயுஷம், அனந்த அர்த்தந்து, விசுபயவின்மை அனந்தானந்தம், இந்த எட்டுக் குணங்களுடனும் அனந்த கோத்திரமில்லாமை நிர்ணமம், நிஸ்தோத்ரம், இந்தக்குணங்களுடனுங்கூடிப் பூரண சந்திரனைக்கூடின சீதம்போல் மிருது சயித்தியமான வசனமுடையராய் வானவர்கள் வணங்க வேறுலாவப்பட்ட குணமாகிற ஞானத்தை யாவரணமாக மறைக்கப்பட்ட அஷ்டவினையாகிற ஞாஞவரணியந் தெரிசனாவரணியம், பெத்தநியசம், மோகநீயசம், ஆயுஷம், கன்மம், அந்தராய கன்மம், கோத்திரம், இந்த எட்டுக்குணமும் விட்டு எல்லாருக்கு மேற்பட்ட சற்குணமுடையராயிருக்கிற அருகனெங்களுக்கிறைவனென்றறிக.

பின்னுங் கருவிகளால் வரப்பட்ட விஷயங்களான துடக்குகளையறுத்து சுத்தனுய்ப் பூதவர்த்த பஞ்சியகால மூன்றினையும் பிரபலமாய்ஒருகணத்திலே யுணரப்பட்டபெரிய தபத்தை யுடையரானவராய்ப் பெருமையாகவழிப்பட்டவருக்கும் வழிப்படாமல் மலிவுற்றவருக்குஞ்சரியாகவிருந்து குற்றமில்லாத குணங்களையுடைத்தாய்க் குற்றமாகிற குணங்களாவது. பரிதல்

தாகம், பயம், செற்றம, உவலை, மோகம, சுமதனை, பழுதலை, நோய், நடுக்கல், வெயர்விஞ்டு, கெதம், மதம், வேண்டல், ஈண்டதிசயித்தல், புகிட்பு, பிறப்பு, உறக்கம், ஆ கச. இந்தப்பதினெட்டுக்கும் பின்னொரு சாத்தீரத்திற்பெயர். பசி, தாகம், பயம், வெறுப்பு, சிந்தனை, இராகம், மோகம், கசிகிறவெயர்வை, கம்பம், மதம், பிணி, மூப்பு, கேடு, வியப்பு, உறக்கம், அனந்தல், களிப்பு, இகட்சி. இந்தப்பதினெட்டு மலமும் விட்டு அஷ்டகுணனந்தராயிதில் வசிகானத்தால் காக்கிறமான பொன்னெயில்வட்டத்திலிருக்கிறவர் விகலாகத்தராகிற சயினசுவாமி ஒருசொல் விகாத்தருக்குச்சொன்னர். இவர் அஷ்டானந்த வீதராகம் பெற்றுப் பூர்வகன்மங்கள் வெடித்துப் போய் அவ்விடமே முத்தியாக எல்லாவற்றிற்குமேலானலோகத்திலிருப்பார்.

இவரதுசரித்திரம்,

உசய. மடவாரையுமில்லான்மகவில்லான்மனையில்லா
னுடையானதுமில்லாணுறவில்லாணுடலில்லான்
றிடமாகியவிரதச்செயலுடையான்செறிவினையா
னடமாடலுமில்லானமக்கிறையாகியநாதன்.

உசக. பகையானவுணினையான்படைபிடியான்கொலைபுரியான்
புகையாதெழுதழலாகியபொறிவாயில்களைந்து
மிகையாவகையவைமாய்தருவிரதாதிகளுடையா
னகையாகவுமிகையான்செயவசையாகவுரன்று.

உசஉ. திரிபுரமெரித்தல்செய்யான்செய்தவேழ்வியினைச்சிந்தான்
வரியரவல்குலாளைவடிவினில்வைத்துக்கொள்ளான்
வெருவரவுலகைச்சுட்டுவெண்பொடிமெய்யிற்பூசா
னிருவினைகடிந்துவாய்மையெய்துவனெங்கள்பெம்மான்.

உசஙு. தேவியைப்பிரிந்துதேடித்திகைத்தலமருமானல்ல
ளவியேயமுதேயென்றெனமர்க்களத்தழுவானல்லன்
மேவியபிறவிதாயான்மேவுகானடைவானல்லன்
ருவியீருலகுங்கொள்ளான்மருமகாயகனெங்கோமான்.

உசச. சகலபல்லுயிர்கடானுஞ்சரீரமேபரிணமந்தான்
சகலர்கள்கட்டுவீடுதன்மபாவங்கள்செய்யுஞ்
சகலனுக்கிரகத்தோடேதமக்குநிக்கிரகமின்றிச்
சகலலோகாக்கிறத்தோர்சரீரியேயருகரத்தர்.

இனித் தடத்தலட்சணம்.

உசரு. சகலாத்தர்தம்பாற்சென்றுதன்மமேயேணியாக
விகலாத்தர்கதம்பதென்னவிகாரமில்முரசேபோலச்
சகலாத்தமடக்கிக்கொண்டுபஞ்சாத்திகாயமென்ன
விகலாத்தர்விரித்துச்சொல்லவிளம்பினராகமங்கள்.

என்றது, கடவுளாயிருக்கிற சகலாத்தர் நிக்கிரகா நிக்கிரகமன்றி உலோகாக்கிற மாகிற பொன்னெயில் வட்டத்திலிருப்பார் இவர்பக்கற்செல்லத்தாம் புண்ணியம்பண்ணின் சற்கர்மந்தானே யேணியாகக்கொண்டுகீழேயிருக்கிற மகாமுனியாகிய விகலாத்தரோறிப்போய்ச்சகலாத்தரது கீழாகத்தாம் நின்று கதம்பகவென்று வினவஅந்தச்சொல்லைச் சகலாத்தர்கேட்டுவிகாரமில்லாத முரசொலிபோலச் சர்வார்த்தங்களையுமடக்கிக் கொண்டு பஞ்சாஸ்திகாயமென்றொருசத்தம்பிறக்கஅந்தச்சத்தத்தைவிரித்துவிகலார்த்தராகிறவர் அதிலிருக்கிற கெற்பங்களைப்பேதித்து ஆகமங்களைச்செய்தாரென்றறிக.

உசசு. அந்தவாய்மொழியினுலிவன்சரணமாதியோக முதலானநூலிந்தமானிலமபங்கிடாதவகையிங்கியம்பினனிதம்பொருள்
வந்தகாலமுயிர்தன்மைதன்மியறமற்றோர்வின்மருவுபுற்கலம்
பந்தம்வீடினோடனுதியாயிவைபடைப்பதின்றியுளபத்துமே.

என்றது, முன்சொன்ன பஞ்சாத்திகாயமென்ற மொழியினுல் அவன்சரணமாதியாகிற யோக முதலான நூல்களை இந்தமானிடர் மயங்கி நரகம்புகாமல் எல்லாருமீடேறும்பொருட்டு ஆகமங்களைச்செய்தார். இந்த ஆகமத்தின்பொருளாவது, காலம், உயிர், தன்மை, தன்மி, அறம், மற்றோர்வின், மருவு, புற்கலம், பந்தம், வீடு, இந்த பத்துமொருவராற் படைக்கப்பட்டதல்லாமல் அனுதியாயுள்ளதாயிருக்கும். இந்தப் பத்தின் பயனை விரித்துத் திருவ்டாந்தா தாவ்டாந்தரங்களாலே சொன்னபிரகாரம்.

உசஎ. நிற்றலோடுதலேபோதலன்னுவயங்கித்துநீடுவெதிரேகமூன்றதாமிவைகளைத்திலேமருவியுள்ளவாபுரியுமாறுதான்
கற்றகாலமனைவெய்திவாழுமுயிர்காயமேநிறைவானேத
பெற்றுவேதுவருதன்மமேரறிவுபெற்றதாகியுளபேசிலே

என்றது, நிற்பனவும் ஓடுதலும் மீளுதலும், உள்ளதாகவும் இல்லாதாகவும் இப்படியுள்ள தில்லதாகவுற்று நின்று ஒருகணத்திலே மருவி யெப்போதுமுள்ளதையேபுரிவான் இதுவேகடவுளாகச் சிருஷ்டியாதிகளைச் செய்யுமென்றும், இது முன்சொன்னபத்தில்காலமுதலாகச் சொல்கையாலேகாலத்தின்வகையுங் காலமேகடவுளென்றறிக. உயிரானது அந்தந்த வுடலில்வவர்க்குள்ள வயதுப்பிரமாணமாக அளவெய்திச் சிறுமைக்குச்சிறுமையும் பெருமைக்குப்பெருமையுமாய்த் தேகமெல்லாம் நிறைந்திருக்கும். இனிவேறு

ண்டாகிற்சொல்லென்ன இப்படித்தேக மளவலலாமிருக்கி மலான்றறிந்த தொன்றறியாமலுமவத்தை மறப்பு நினைப்பும் வருவானேனெனில் நிறைந்த அறிவிலே யந்தக்கரண விந்திரியங்கள் நீரிலே சுழல்வண்டானது முழுகியுமெழுந்துமங்கங்கேதிரியும்போலென்றறிக.

உசஅ. பரந்துயீதுதருமாத்திகாயமழிவித்தநித்தமதுபண்ணிடு
நிரந்துகீழினதன்மாத்திகாயமதுநித்தமாய்மிகநிறுத்திடும்
புரந்தபுன்னியமிதம்குநன்மைபுகல்பாவமானது தீமையேதரும், பொருட்கிடமதாகும்வானமிகு புற்கலங்களிவை சாற்றுவாம்.

என்றது, பரப்பாய் மேலேயிருந்து தரப்பட்ட தருமாத்திகாயமாவது, எல்லாவற்றையும் அழித்து அனித்தமாக்கும். ஈ. அடியாகக்கீழேயிருந்துதந்த அதன்மாத்திகாயமாவது, நித்தமாய்க்கெடாமற்செய்யும். உ. புண்ணியஞ் செய்யில் நன்மை. ஊ. பாவஞ்செய்யிற்றீமையேதரும். ஈ. எல்லாப்பொருளுக்குமிடமானதுவானம். எ. மிகுபுற்கலம் என்பது பெருமையுடைத்தாகிய அணுக்கள்கூடி யிரும்பு மரங்கள் முதலெல்லாவுருக்களுமாம். அ. இனி யறுவகைத்தொழிலுஞ் செய்வது பந்தமாய்க்கட்டும். ஈ. இதைவிட்டதுவீடு. ஐ. இப்படி முன்சொன்ன காலம், உயிர், தன்மை, தன்மி, யறம், மற்றோர்வின், புற்கலம், பந்தம், வீடு, இந்தப்பதத்தும் பின் இலக்கத்தின்படியேகாண்க வென்றறிக. மற்றோர் என்பது, அறத்தையடுத்ததாகையாற் பாவம் மருவு என்றது, அகலம் முன்விட்டது வீடாகையாலே திரும்பி யிந்தவுடலில் புகுப்பதேயது வாசனை பலத்தாலேயது இந்த உடலிற்றுறவிலே புகித்துத்தீருமென்று சொல்வாரொன்றறிக.

இந்தச்சாத்திரத்திற்கு மேலெது கீழெது எனிற்சகலாத்தர் பஞ்சாத்திகாயமென்றதை விகலாத்தரவர் சமீபமாகமேலேயிருந்து விரித்ததை தருமாத்திகாயமென்றும், இறங்கிவந்து கீழேயிருந்து விரித்ததை அதன்மாத்திகாயமென்றுஞ் சொல்லுவாரொன்றறிக. விகலாத்தர் ஒருசத்தத்தைப் பிடித்து எண்ணிறந்த விதங்களே எப்படி யறிந்துசொன்னுனெனிற் சொல்லுகிறவன் சித்தத்திலே யிருளுக்குச் சூரியன்போலும் விளக்கி, விளக்கத்தைப்பளிங்கு அடுத்தது காட்டும்போலுங் காட்டுமென்றறிக. இந்த விகலாத்தருக்குச் சொலிகனென்றும் இகலனென்றும்பெயர். இனிசகலாத்தர் இப்படிக்கொத்த சாத்திரங்களே யுண்டாக்குவித்து அசோக மரத்தின்கீழே தபசாயுடையகன்று அறமறங்களேத்தவிர்ந்து பொன்னெயில் வட்டத்திலிருப்பாரொன்றறிக. இது தடத்தலட்சணமுடிந்தது.

இனிப் பந்தலட்சணமாவது மூன்சொன்ன
சாத்திரப்படியே யடக்கிற் வகை.

உசஊ. உருவளவளவைதானுலுருவணுத்தொகைகாம்பூத
மிருவகைத்தாமைந்தாகும்பொருளைவினையிரண்டு

பரிவுவர்த்தனையந்தட்டவினைமலம்பதினெட்டாங்கற்
றருகர்பாலறத்தாத்மாக்களையுமென்குணங்கள்கொண்டே

சகல சீவராசிகளுந் தேகச்சிறுமை பருமைகுதகதாக நிறைவாய தேககாந்தியில் அனேகபரிமிதராய் மத்தியபரிணாமத்தில் சங்கோசவிகாசதர்மயுக்தராயிருக்கும் சீவர்களாலேர் பிரத்தியட்சம், அனுமானம், உவமானம், ஆகமம் இந்தநாலுவிதமுமாம். காலணு, தியணு, நீரணு, நிலவணு ஆசு. இந்த நாலுவிதவணுவும் அணுத்தொகையாகக் கூடி நான்குபூதமாம் அரு, உரு, நித்தம், அநித்தம், குணங், குணி, ஆஸ்தி, நாஸ்தி, ஏகம், அனேகம், தூலஞ், சூட்சுமம் இப்படிச்சகல பதார்த்தங்களு மிருவகைப்பட்டு ஆறுவிதமாயிருக்கும். சீவனந், தர்மம், புற்கலாகாசம், காலம், உரை ஆ ரு. இவ்வைந்துக்கும் பின்னுமொருவிதம். சீவனமும் புற்கலமுதலான பூண்டுகளும் தர்மமாசங்கமுங்காலமுமிப்படியும்பெயராம். நன்மைதின்மை, யோனிபிறவர்த்தனை, போகபிறவர்த்தனை, சேஷபிறவர்த்தனை, பாவபிறவர்த்தனை, பிரமாணபிறவர்த்தனை ஆ ரு, இவ்வைந்துக்கும் காலங், கோத்திரம், பவம், யோனி, போகம் இப்படியுநாமமாம். இப்படி யிவ்வைந்திலுலே பரமாணுவான வாத்மா வினைகளுடனுங் கூடியிஃதோடு சீழுலும் இந்தவெட்டு வினையும் பதினெட்டு மலமுமிதின் பெயர்களை சயினக்கடவுளைச் சொன்ன விடத்தில் அவர்விட்டதாகச்சொல்லியிருக்கிறதென்றறிக.

அருகர் பாலறங்களைச்செய்த வாத்மாக்கள் எண் குணத்தோடுசேரு மென்றறிக. இனி உருவமலைவ என்றகவிக்குள்ள தத்துவங்கள்-சுஉ-ங்சூடி-அசாத-யோனிகளிலுமணுக்களாய் நிறைந்தவாத்மா தங்கள்கன்மத்துக் கீடாகத் தாங்களே தேகத்தையெடுத்துக்கொண்டு முன்சொன்ன தத்துவத்தி விருவகைப்பட்டு ஆறுகுணமும் பிரதானமாய்ப் பின்னும் உழவு தொழவு வணிவு வாணிபஞ் சிற்பம் வித்தை இந்த அறுவகைத்தொழிலிலும் உழன்று இதனலில் மொத்துண்டு சுகதுக்கப்படுவது பெத்தநிலையாம்.

இனி முத்திநிலையாவது.

முன்சொன்ன சீவன்தானேகன்மத்துக்கீடாகச்சென்னமரணப்படுவது நீடினால், இவர்கொள்ளுகிற தத்துவங் குணமுதலாகப் பிருதிவியீறுக உசும். இதல்லாமற் காலமறுதி, கன்மமறுதி, சீவனறுதி யாகையாலறுதியான கன்மத்தோடு சீவன் அனுபந்தமாயிருக்குமாகையால் தானே சென்னமரணப்பட்டுக் காலபக்குவங்களால் தன்மாத்திராயமாகிற சாத்திரப்பிரயாசத்தாலே காய்ந்தகல்லுகள் முதலானதிற் சயித்தியமுதலான சுகங்கள் பொருந்திறற்போலப்பொருந்திக்கொல்லாமைமுதலான விரதங்களாலும், வினையெட்டும் மலம் பதினெட்டு கன்மமும் நீங்கி யிப்படி யரியதபங்களைச் செய்து அருகருடனே கூடியிருப்பது மோட்சமென்றறிக. இப்படிமோட்சம் பெற்றமுக்கியர் எமசந்தர,நாகசந்திர, நேமிசந்திர, மேகசந்திர, மாகசந்திர, ஆறனித, ஆதிநாத, அனகநாத, அறகளநாத, பாரிசநாத, சௌநாத, சுரு

தகோதது,சுருமதி,காமரூத,விஜையமுனி, கபணீதவமுனி, அஸ்தமனமுனி, சமனேந்திரமுனி, அமரேந்திரமுனி, சந்திரமாமுனி, தருமகுரு, இந்திரமாமுனி, சந்திரகீர்த்திமுனி, இராஜேந்திரமுனி, விமலேந்திரமுனி, இந்ததீர்த்தக ராகிறமுனிகளும் சுத, சித, சுகாசிவ, நிஜசிவ, நிஜஜர, பந்தமோட்சம், இப்படிப்பந்தமோட்சமாகிறசத்த பதார்த்தமும் பிரதி வாதிக்கும். இதுகளே விட்டுக்காய்ந்த கல்லிலே படுக்கையான உக்கிர தபசு முதலானதுகளையுஞ் செய்து இருபத்துநாலு தீர்த்தகரு மகாமுனிகளாயிருப்பர். இவர்களாற்கற்பிக்கப்பட்டஷட்டீசகற்ப, ஷட்டாமரேஸ்வாகற்ப, ஜாலினிகற்ப, பத்மாவதிகற்ப, சாரதகற்ப, குக்குடநாதாதிமுதலானகற்பங்களில் கற்பிதமான மந்திர அவுஷத சித்தப்பிரயோகங்களேச் சித்தாந்தஞ்செய்து ஊனகேச திகம்பர பாணி பாத்திரம், மயூரபுஞ்ச, இவர்களும் பஞ்சமலதாரணைகதிகளும், பொய், களவு, பரதாரம், கொல்லாமை, அதிகாம்சைஷ இந்தப் பஞ்சாணுவிதவிரதங்களும் மதுபலஅண்டமுதலான நிஷிதகன்மங்களும் இதுகள்முதலாக அனேக நிஷித கன்மங்களேயும் விட்டு அரியதபசிகளாயிருந்து பொன்னெயில் வட்டத்தில் சயினசுவாமி பஞ்சபரமேட்டிகள் தற்சூழ விருக்கிறவிடத்தில் தீர்த்தகர்களும் பின்பு சொன்னபேர்களுஞ் சூழவிருப்பரென்றறிக.

உருய. இரவினிலுணர்வுமூலுமென்னையுமேனைமாற்பால்
விரவலுங்குளியும்பூவும்வெற்றிலைதினலுமின்றி
மருவலிலெங்கணீதிவழிபடமதியொன்றுண்டேற்
பரகதிகண்டுபின்டிப்பரமனதுலகஞ்சார்வார்.

உருக. கொன்றல்வெட்டல்குறைத்தல்கூப்பிடல் கோழிகூகைகளை காகமுந், தின்றல்சோறெனறீய சொற்கள் புலாலிறைச்சிகள்செப்புத, லென்றசொற்களனந்தமுஞ்செவியெய்திடிற்சரிதைத்திற, மன்றுமூட்டெனவோதுமூக்குடையாதிநாதர் தம்மாகமம்.

உருஉ. அடுப்புலக்கையுரற்கள்சால்சுளகம்மிகட்டிலளிக்குல [டை
மடக்கைபானைகள் வாருகோலொடு தோலுதிர் மயிர்மண்ணி
படுக்கைபாய்பரிநாய்கள்பூனைகள்பன்றியாடுகள்பாதக
முடிக்கும்வேதியர்முண்டர்நிற்றருமுட்டில்முட்டுமொழிந்தலே

உருங. கண்ணிமைக்கிலுடல்துடிக்கில்கைமறித்துக்கால் பெயர்த்து, மண்மிதிக்கிலெண்ணிறந்திராணிபடும்.

இப்படித்தபங்களேச்செய்வாரென்றறிக.

உருச. உருவருமூளதின்றருகுமொன்றுதுபலவேயாகுங்
குருவுபதேசமூன்றினளவதாங்குன்றுங்காலி

னருகனுசாரம்பேணியழியிற்பொன்னெயில்வட்டத்துத்
தெருளுறுசுகம்போலாத்மாசேருமென்குணத்ததேசம்.

ஆசீவகன்மதம்.

உருஎ. என்னுயிரதனைப்போலவெவர்க்குமொத்திருப்பனென்று
தன்னுயிர்வருத்தந்தானுந்தலையினைப்பறித்துப்பார்மேல்
மன்னுயிரெவற்றினுக்கும்வருந்தவேயறங்கள்சொல்லு
மன்னதோர்வாய்மையாசீவகனவமணரிற்கூறும்.

என்றது, தன்னுயிரைப்போல எவருக்கு மொத்திருந்துதன்னுயிர்வருந்தத் தன்றலைமயிரைப்பறித்துப் பூமியின்மேல் இருக்கிற சீவராசிகளுக் கெல்லாமவர்கள் வருந்த வரங்கள்போதித்து வாய்மையுடைய ஆசீவகனென்கூறும்.

உருசு. வரம்பிலைலறிவனைதிவைத்தநாற்பொருள்கடாமு
நிரம்பவேயணுக்களோந்துநிலம்புனலனல்கால்சீவன்
பரந்திலைவந்நின்றபான்மைபாரதுகடினஞ்சீதந்
தரும்புனல்சுடுந்திவாயுச்சலித்திடுமுயிர்போதத்தாம்

என்றது, அளவைகளாலறிகிற சுவாபி ஓதிலைவத்த நாற்பொருளையும் சொல்வது, நிறைந்த அணுக்களானதுமண், நீர், தேயு, வாயு, சீவன் இவ்வைந்தும் அணுக்களாய்கூடிப் பரந்து நின்றவிதம் மண் கடினம், நீர்சீதம், திருடி, வாயுசலித்தல், உயிர்போதம், இப்படியாம் மண்ணும் நீரும் பரந்திருக்கும் தேயுவும் வாயுவுங் கீழுமேலும் படர்ந்திடும். இப்படிச் சேரும் இந்தச் சேர்தலு நீங்கி அந்தரங்கத்திலுள்ளதோடுஞ்சேரும். பின்புவேறுசார்புபெற்றபோது எந்தப் பொருளோடு சாரினும் அந்தப்பொருளின்றன்மையாயிருக்குமென்று சொல்லும். இனிஉணர்வில்லாத வணுக்கள் நாலு மொன்று கெட்டொன்றுகாது புணர்வோடு கூடியொன்றிலொன்று புகுந்தாகிலும் பொருந்திவாழும் அணைந்து புதியதாய் வந்தழியாது பழமையான வானமும் வினையும் இதுகளேத்தாராது. ஒன்றொன்றாய் மாறிப்போவதுமில்லையாம். இந்தப் பூதங்கள் முன்சொன்ன தில்லாமற் கொண்டுவிரித்தல் நீட்டல் குறுக்குதல் குவித்தலுன்றல் உண்டு நின்றுதித்தல் ஈட்டலுடைத்திடல் ஒன்றுமில்லாமல் விட்டுப் பின்புறம்பாய்ப்போகும். வேரூய் நின்று உள்ளுமாக்கும் பூர்வமும் இன்று மென்றும் பரந்து ஒருதன்மையாய்க் கண்ணிற் காணுதலாய்ப் பிறந்து அந்தக்கன்மத்தால் நல்லருகீளாகி நின்றபின் ஊர் காணப்போகிறார்.

விண்ணிற்றேவர்காண்பார் அதெப்படி முதலாயிருக்கிற வணு ஒன்று அந்தமுதலாய்ச் சூட்சுமமானவணு ஒன்று நாலுவான பொருள்க ளெல்லாவற்றையுமிசையுமென்றுசொல்லும். ஒன்றினைக்கூடி-ங-நில்லாதிரண்டை

விட்டுஉயரநில்லாது. அதேது பூமி-ச-நீர்-ங-அழல்-உ-கால்-க,இப்படியாமிந்த
-ச-பூதமும் பின்பு வெண்மை,பொன்மை,செம்மை,நிலங்களின் வெண்மை,
பச்சையிந்தவுண்மையாறினுள்ளுமற்றது கழிய வெண்மையாயோங்கிவீட்டி
ல்வண்மையாய்ச்செருமிதல்லாமல்மற்றதுருவம்பற்றி யுண்மையினு லொட்டு
த்தீட்டுக் கலப்பினிலுணருமென்றுசொல்லும். பின்பொரு இழிவு, இடை
யூறு, இன்பம், பிரிவில்லாமை, பின்னொருநாடுசேர்தல், விளைவு, மூப்புஇந்
த எட்டுங் கருவோடே கூடி யூழிற் சிக்கி நடக்கிறது உலகெல்லாமென்று
சொல்லும். இனிப் புண்ணியபாவம் என்கிற விரண்டனு இஃதோடேமுன்
சொன்ன-ஞ்-ங் கூடி ஏழனுவாகும் என்று எங்களுக்கொருவன் சொன்ன
ஞாலமெல்லாம் வெறுத்த-கருத்திலோர்கள் கதியினைக்காண்பரொன்று சொல்
லும் இப்படி ஆசீவகன்மதமென்றறிக. இந்தநூல் ஆகிதரிவி சொன்னதென்
றறிக. இனித் தேகாதி விலக்ஷணமான ஆத்மா தேகபரிமிதனும் மத்திம
பரிணாமத்தாலே கங்கோச விகாசதன்ம யுக்தனுனவனுத்மாவென்றறிக. இ
னிமோட்சமாவது ஆகாச மத்தியத்தி லுத்தரோத்தர கன்மமென்ப தென்ற
றிக. இவனுக்குஞ் சொரூபந்தடம் பந்தமோட்சம் இந்தநூலு முன்சொன்
ன அருகக்கடவுளுக்குச்சொன்னபடி என்றறிக.

சுசு-வது—அத்தியாயம்.

பிருதுவிபூதவாதமதம்.

பஞ்சபூதப் பிரமவாதியில் பிருதிவி பூதப்பிரமவாதியாவது, இந்த
ப்பிருதிவி சத்தபரிச ரூபரச கந்தம் ஆகி. இஃதடனுங் கூடி வந்திருசி மூ
தல ன சகலபதார்த்தங்களுஞ் சகலபோக போக்கியங்களுஞ் சகலஜ்ஞானேந்தி
ங்களும் தனுகரண புவன போகங்களும் அண்டச, பிண்டச, சுவேதச, உற்
பீச, என்கிறநாலு யோனிமுதல்-டெ-வகையோனியும் எழுவகை தோற்ற
மும் சரசீவன், அசரசீவன், சராசரசீவன், இந்தமூன்றுக்கும்தேகமாயும் பு
கிப்பாயும் பிரமாண்ட பாண்டங்களாயும் மாடமாளிகை கோபுர பிரசாத மண்
டபங்களாயு நவரத்தினுதிகள் பஞ்சலோகாதிகளாயு மகமேரு அஷ்டகுல
பர்வத முதலாக அனேககோடிபர்வதங்களுங் கண்ணுக்குக்காணப் பட்டதெ
ல்லாமாயு மிந்தப்பிருதிவி, காரணங்காரியம், காரியப் படுகை. காரியப்பட்டுவி
டுகைகளாயும் எண்ணிறந்தபேதங்களாயும் ஆயிரகோடி அண்டங்களாயு மிப்பட
டியனந்தகோடி விதமாயு மிந்தப் பிருதிவியே எல்லாமாகையால் சிருஷ்டி
என்று மிதுவே பிரமாவென்று மிந்தப்பிருதிவி எண்ணிறந்த ஆகாரபேதமா
கி இரட்சிக்கையாலே விஷ்ணுவாகியு மிந்தப்பிருதிவியிலுண்டான காரியபே
ல்லாம் இலயமாய்த் தன்னுள்ளேயடக்கிக்கொண்டு தான்கெடாமற் காரண
மாய் நிற்கையாலே சங்காரருத்திரனுகியும் இந்தப்பிருதிவி காரணமிருக்கக்கா
ரியமே பிரமாவாயுங் காரியப்படுகிறதே விஷ்ணுவாயுங் காரியப்பட்டுவிடுகை
யேஉருத்திரனுகவும் இப்படி மும்மூர்த்திசொரூபமாயுமிதைவிடவேறென்று

நில்லையாகையாலே பிருதிவியே பிரமமென்றறிக. இதற்கு வேதம "பரஞ் பவிஜாநாதினன்று பின்னும் வெளிவாய்சசொல்லுகையாலேபிருதிவியேபிரம் மென்று சொல்லுமென்றறிக.

சுவ-வது—அத்தியாயம்.

அ ப பு பூ த வ ா த ு ம த ம.

அப்பு பூதமேமூனறு தொழிலுஞ்செயவது அமைதபபடியாலே, சகலசி வராசிகளேயுஞ் சிருஷ்டிக்க வேண்டிப் பிரமாவானவன் சலமயமானசுக்கில சுரோணித சொரூபமாய்ச் சரசீவன்களேச் சிருஷ்டித்து தாபராதிசீவன்களே எல்லாம் பீஜாங்குரத்தைக்கொண்டு சலத்திலுலே மூளைப்பித்தும், அப்பு வே சொரூபமா யுருகிற புழுக்களேக்கொண்டுவந்து வண்டுகள் குளவி களானது தன்சுக்கிலத்தைக் கொட்டி யெடுக்கையில அதின் தேகத் தினே விட்டு வண்டு தும்பிகுளவிகளாகச் சிருஷ்டித்தும். எல்ஞாதிகளிச் [redacted] சலமயமாகையா [redacted] தேகத்திலுண்டாயதுகளேப் புசித்துச் சகல பிராணிகளதுதேகநிற் கையாலும், தாபராதி யெண்ணிறந்த தெல்லாஞ்சலத்தையுண்டுதேகநிற்கை யாலும், தேவாதிகள் அமிர்தம் புசித்துத்தேகம்நிற்கையாலுஞ் சலதாசீவன்க ள் சலத்திலிருந்து பிழைக்கையாலுமிந்தச்சலம் பெயராலேநாராயணநாமந்த ரித்து விஷ்ணுரூப திட்டித்தும், ஆலல்பிருதிவியையல்லாமல் சலமிரட்சிக் [redacted] வெனிற் சிருஷ்டிகளாயசகிறைய அழுதுசெய்தாலும், எத்தனே சோ றைறத்தின்றாலும், எத்தனே பலகாரங்கொண்டாலும், நாகமெடுத்தபோது த ண்ணீர்குடியாவிட்டால் சீவன்போயும், பானங்களாலே அனேகர்தேகத்தை நிறுத்தியும், அன்னமில்லாமல் சலங்களேக் கொண்டு சீவராசிகள் பிழைக்கும் தண்ணீரில்லாமல் அன்னமாத்திரங்கொண்ட சீவன்கள் பிழையாது. ஆகை யால் விஷ்ணுதேகம்மிகு [redacted] தம, மழைபெய்யாவிட்டாலுஞ்சலங்கி [redacted] சகல சீவனுமழகையாலே ஆபோற்சோதி உருத்திரரூ [redacted] சங்காரத்தம இப்படி முத்தொழிலுஞ்செய்வது அப்புபூதமென்றறிக.

முன்னே பிருதிவியிலுலே மூன்று தொழிலும் நடக்குதென்று சொல்லி இப்போது அப்பு பூதத்தாலேமுத்தொழிலு நடப்பதெப்படி, பிருதிவிசலஞ் சகாரியாய்ச் செய்யுந் தானேமுத்தொழிலுஞ் செய்யாது சுக்கிலசுரோணித மாயும் அமிர்தமாயு மூலிப்பாலாயும் யோகீஸ்வராருக்கவரவர்தேகத்தில் அமிர் தமாயுந்தீர்த்தங்களாயும் இதாலுலே பாபட்சயந் தேகசுத்தியாயும் பிருதிவித் துப் பதின்மடங்குதிகமாயுஞ் சந்திரன் அமிர்தமாயு மதுரபானமாயும் விஷய சுகமாயு மதுபான சுராபானமாயும். உப்புத்தண்ணீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன், சுத்தசலம் இப்படி யேழுசமுத்திரமாயும் பூலோகத் திலு மிந்த ஏழுவிதமாயும் மழையாயும் வரி குளம் தடாகமாயும் இப்படிநாலு

விதமாய் மூத்தொழிலுஞ் செய்யுமென்றறிக. ஆஞவிதுவெல்லாம் பிருதிவி சகாயத்தாலென்னி லதற்கிதுவு மிதற்கதுவுஞ் சககாரியாமென்றறிக. ஆகையாலிதுவேபிரமமென்றறிக.

சூஅ-வது—அத்தியாயம்.

அக்கினி பூதவாதிமதம்.

அக்கினியே மும்மூர்த்தியாகாரமாய் முத்தொழிலுஞ் செய்யும் அதெப்படி எனில், அக்கினியாலே யாகார நித்தினை மைதுனம்பயம் இந்த நாவில் ஆகாரத்தாலே சத்ததாதுக்கள் முதலெல்லாதத்துவமும் வர்த்தித்து இதிலுல் சுக்கில சுரோணிதம் வர்த்தித்து இதிலுல் விஷயங்கள் வர்த்தித்து இதினிடமாக நால்வகையோனியும் எழுவகைத்தோற்றமும் அதிசாத-ம். அச்சுமுண்டாய்ச் சரசீவனெல்லா மூற்பத்தியுண்டாய்த் தாபராதிகளுக்கெல்லாஞ் சூரியகிரகணஞ் சந்திரக்கிரகண மிதுகளாலே பூத்துக்காய்த்து விதையுண்டாம் அக்கினியிலுற்பத்தி யுண்டாமாகையால் அக்கினியேசிருஷ்டியுண்டாக்கையால் பிர்மாவென்றும், இனி அக்கினியிலுலே பசுபாகமான தண்டுலம், பிண்டிபேத ஆகாரங்கள்புசித்தும், சகலசீவனுதரத்தினுள்ளே அக்கினியாயிருந்து சீரணிப்பித்துந் தாபராதிகளுக்கெல்லாஞ் சூரியனது உஷ்ணக்கிரணத்தால் கிரகித்து திரும்பச்சலபானங்கள்கொண்டு வளருகையாலுஞ், சகலசீவராசிகளுக்கும் அக்கினி யுள்ளேயிருந்து ஆகாரங்கள்கொண்டு தேகநிற்கையாலும், அக்கினி விஷ்ணுமயமாய் இரட்சிக்கு மென்றறிக. இனி அணுத்திரணை காஷ்ட முதலானதுகளையுஞ் சகல சீவராசிகளையுந்தகனஞ் செய்கையாலும், அக்கினிப் பிரளையத்திற் பிருதிவி அப்பு விரண்டையுமுட்கொண்டு விழுங்கிக் காலானல் சொரூபமாய்க் காலாக்கினி உருத்திரனுய் எண்ணிறந்த பிர்மாண்டங்களையுந் தகனஞ்செய்துக் கடலில் வடவாமுகாக்கினியாய்த்தண்ணீரைக்கிரகித்தும், காலாக்கினி,சூலாக்கினி, உதராக்கினி, காமாக்கினி, ஞானக்கினியாயும்அணுத்திரண சீவராசிகளிலுமிருந்துஞ்சோமசூரியாக்கினி, நட்சத்திங்கள், மின், இடி, பிரகாசங்களாயும், அந்தகாரத்தைப்போக்கிக் கண்களுக்குத்தெரியக்காட்டுகையாலுஞ், சகலவிதந்தாலும் அக்கினி பூதமேபிரமமென்றறிக. ஆனல் அக்கினிதானே முத்தொழிலுஞ்செய்யுமோ வெனிற் பிருதிவி யப்பு சககாரியாய்ச் செய்யுமென்றறிக.

உநை. அக்கினிதானேயண்டமும்பிண்டமு
மக்கினிதானேயாயித்துண்டாவ
தக்கினிதானேயாவதழிவ
தக்கினிகாயமென்றறிந்துகொண்டேனே.

சுசூ-வது—அத்தியாயம்.

வாய்வுபூதவாதிமதம்.

வாயுவானது சரம், அசரம், சராசரம், இந்த மூவகைச்சீவன், ஐவகை யோனி, இதுகூடப் பின்னும்-கசு. வகையோனி எழுவகைத்தோற்றம், எண்ணிறந்த சீவராசிகளெல்லாவற்றையுஞ் சுக்கிலசுரோணிதத்திலே வாயுமூந்துப் புகுந்து அதைச் சுருளக்கூட்டி விரித்துப் பின்பு மற்ற மூன்று பூதத்தையுந் தனக்குச்சககாரியாகக்கொண்டு அவயவி அவயவ பேதங்களை யுண்டாக்கி அந்தந்த அச்சுமாகிச் சுவாசபேதத்தாலே தாய், தகப்பன் சுவாசபேதங்களாலே கூன், குருடு, மூங்கை முடவன், நெடுவல், குள்ளல், அழகு, குரூபி, ஆண், பெண் இப்படிச் சரசீவனிலும் அசர சீவனிலும் இந்தவிதங்களையெல்லாம் உண்டாக்கி - எஉஅத-ம் நாடியிலும் பூரித்து இயக்குவித்துத் தான்பிரமாவாயிப்படிச் சிருஷ்டித்துஞ் சிருஷ்டித்த தனுக்களிலே வாயு வெத்தனைநாளிருந்தாலுஞ் சாவில்லாமலிருக்கையால் விஷ்ணு வாய்இரட்சித்தும், வாயுப் புறப்பட்டுப்போறற் பிணமென்று சுட்டும் புதைத்தும் எறிந்துபோடுகையால்உருத்திரஞ்ச்சங்காரஞ்செய்துஞ்சித்த புருஷர்களுக்கும் யோகிகளுக்கும்-சுசு-சித்திகளைக்கொடுத்தும் பஞ்ச கிருத்தியங்களைச் செய்வித்தும், தான் பிராணன்என்றும், சிவனென்றும், பேராயும் வாயு வடங்கிற் பிரமமாயும் இப்படி எண்ணிறந்த பேதங்களாயும், இனி வாயுப்பிரளய சங்காரத்தில் மூன் மூன்று பூதத்தையுஞ் சிதறவடித்துத் தன்னுள்ளடக்கித் தானழியாமல்நின்றுதிரும்பத் தன்னிலக்கினி யக்கினியிலப்பு அப்புவிற்பிருதிவியுண்டாய் பிண்டப்பிரமாண்டங்களை எல்லாமுண்டாக்கையாலும் வாயு பூதமே பிரமமென்றறிக.

எய்-வது—அத்தியாயம்.

ஆகாசபூதவாதிமதம்.

ஆகாசபூதப் பிரமவாதி முன்சொன்ன நான்கு பூதங்களையுந் தாங்கிக்கொண்டு அந்தநான்கிற்கு மாதாரமாய்இந்த நான்கிற்குமுள்ளும் புறம்புமாய்த் தான்கூட ஐந்துபூதத்திலுமுண்டான பிண்டப்பிரமாண்டங்கள் எண்ணிறந்ததுந் தனுகரண புவனபோகாதிகள் முதலானதற்கும் பஞ்ச மூர்த்திகள் முதலெண்ணிறந்த தேவர்கள் முதலான பேருக்கு மிடங்கொடுத்தும் அட்சராத்மிகம் அனட்சராத்மிகமான சத்தங்களாயுமிந்த ஆகாசத்தில் எண்ணிறந்த சத்திகள் எண்ணிறந்த சோதிசொரூபங்கள் எண்ணிறந்த பின் இடி மேகங்கள் சந்திரசூரியாதி நட்சத்திரங்கள் இதுகள்முதல் எண்ணிறந்த தெல்லாஞ் சரிக்க விடங்கொடுத்தும் இந்த ஆகாசமில்லாவிட்டால் ஒன்றுக்கு மாதாரமில்லையாகையால் இந்த ஆகாசபூதமே பிரமமென்றறிக.

அஃதெப்படி எனில், இந்நான்கு மிறந்தாலுந் தான்கெடாமலுந் தன் பிரயத்தில் நாலுபூதமுந்தோன்றுமலடக்கிக் கொண்டு தானழியாமல் நி ற்கையாலென்றறிக. ஆகையாலிந்த ஐந்து பூதமும் பிரத்தியேக பிரத்தி யேகமாயாதிக்கஞ் சொல்லுகிறபோது அதுவதுவே பிரமமாயிருக்கும் விசாரி த்துப்பார்க்கும்போது ஒருபூதத்துக்கொருபூதஞ் சககாரியாயிருக்கு மென்ற றிக. இந்தஐந்துபூதத்துக்குங்காரணபூதமேசாரூபலட்சணம். இதின்காரியம் பிண்டபிர்மாண்டங்களாய் விரிகிறது தடத்தலட்சணம். இஃது காரியப்படும் போது சீவராசிகளிதிலே கட்டுப்பட்டுச் சனனமரணப்படுவது பந்தலட்ச ணம். இந்தப் பூதங்கள் காரணகாரியங்காரியப்படுகை யிந்த மூன்று மிறந்த விடம் முத்தி நிலையென்றறிக.

எக-வது—அத்தியாயம்.

பஞ்சகோசவாதிமதம்.

பஞ்சகோசவுற்பத்தி.

உருஅ. எவ்வுயிர்க்குமானந்தம் விஞ்ஞானமென்றே யிருகோசமி றை சுத்தமாயைதனிலிசைப்ப, னெவ்வுயிர்க்கு மேலுமதோ மாயைதனிற்கலாதியானதோர்மனோமயம்மாக்குவன்பின்னுகச் செவ்விதனிற் ஞானமயகோசமுன்டாக்கிச் சேர்த்திடுவரன் னமயகோசத்தைத்திகழ, வெவ்வுயிர்களுங்கோச பாசத்தை யுற்றுவினைவிக்குமன்னமபம்வருமாறுவிரிப்பாம்.

உருக. முன்னைவினைக்கீடாகச்சூக்குமரூபத்தான்முதற்றங்கையிட ம்புகுந்து மோகமிகவாகி, யன்னைவயிற்றிற்றங்கை சுக்கிலத் தோடனைந்திட்டவ்விடத்திற்சோணிதத்தோடாகிநிற்கும், பி ன்னையதைப்பிரியாது சூக்குமகாயத்தே யிறப்பதுவாந்தல வுடல்பிரமனருளாலே, தன்னைவிரித்துனைக்கிலது பெருக்குமு ன்னஞ்சாற்றியசூக்குமபூதத்தாகியிருந்தனுவே.

மூன்றுமாயையிலுமுண்டாகையாலிதுவே பிரமமாய் நிற்கும்.

உருய. சொன்னமெய்வாயுடன் மூக்குஞ்செவிவிழி தூயகைகா லென்னுமுருவுடல்கொன்டிறுமாந்துமற்றெவ்வுலகு மன்னும்பென்பிள்ளைமற்றுளசுற்றமும்வாழ்வுமெல்லா மன்னமயத்தின்பெருமையல்லாதில்லையம்புவிக்கே.

இதுபிருதிவிபூதசம்பந்தமென்றறிக.

உசுக. தரித்தவுடலேப்பிணமென்றுணவையகஞ்சாற்றலறப்
பொருத்தமுறநின்றியற்றியவற்றினேப்போற்றுகின்றூ
ரொருத்தருலகினிலுண்டோவுறக்கத்திணுற்றதுணை
பெருத்தபிரானைமபத்தையல்லாதென்கொல்பேசுவதே.

இது அப்பு பூதசம்பந்த அன்னமயமாகிற தூல தேகத்தோடுகூட்டி வாயுபூதசம்பந்தமென்றறிக. இனி மனோமயகோசமாவது.

உசுஉ. நெறியுற்றிடாதபொறிபுலன்வாழ்நிலையளித்துச்
செறிவுற்றகந்தினின்றபிரானன்சிதைவறவே
பிறிவித்திடாமலடக்கியியக்கிப்பிறழ்வறவே
யறிவித்துநின்றமனோமயமன்றியறியில்லையே.

இது அக்கினி பூதத்துடன்கூடிச் சூட்சுமதனுவையனுசரித்து மனதானது பிராணவாயுவை எழுப்பிப் பொறிபுலன் விஷயங்களோடு கூட்டிப் பிரிவில்லாமல் நின்றது மனோமயமென்றறிக.

உசுங. பொறியுற்றுநின்றமனோமயத்தன்னினற்புற்றிநின்றே
யறிவித்திடலிச்சைகோபமுபாயமதன்மந்தன்மஞ்
செறிவுற்றதுக்கஞ்சுகம்பயில்வாதனேசேர்ஙவழும்
பிறிவற்றவிஞ்ஞானமயம்புத்தன்பேசும்பெருமதமே.

இதுவாயுபூதத்துடன்கூடிச் சூட்சும தேகத்தையனுசரித்துப் புத்தியாதுமனோமயத்துடனேகூடிஇச்சை, கோபம், உபாயம், அதன்மம், தன்மம், துக்கம், சுகம், வாதனை, விஷயம் இவ்வொன்பதுடனுங்கூடி யறிவிக்கையால் விஞ்ஞான மென்றறிக.

ஆனந்தமயம்பொருளென்பது.

உசுச. சாற்றுமுமுக்கமுதன்மனம்புத்தியைச்சார்விடைய
தோற்றமினியசுகம்பலவாகமுன்சொல்லுகின்ற
வேற்றம்பெருவழிவாகநின்றுலித்திருமைபெறப்
போற்றுமானந்தமயமதல்லாதொருபோதமுண்டோ.

என்றது, ஆகாசபூதத்துடனேகூடிக் காரணதனுவையனுசரித்துச்சித்தமானது உறக்க முதலாக மன்று புத்தியைச் சாரப்பட்டுத் தோற்றின விஷய சுகங்களையுமனுபவிக்கச்செய்து அஃதெல்லாமிறந்த விடத்தில் பெருவழிவான வழிவில்நின்று ஆவித்து ஆனந்தம்பொங்கி மோட்சங் கொடுக்கையாலானந்தமயமேபொருளென்றறிக. ஆகையால், பஞ்சகோசமே பிரமமெ

ன்றறிக. இனி பஞ்சதோசமேசொரூபம் இவ்வைவந்து தோசமே வெகுவ
ய்க் காரியமாய் விரிகிறதேதடம் இவ்வைவந்துதோசத்தில் சீவனகப்பட்டுச்செ
னன மரணப்படுகிறதேபந்தம் இவ்வைவந்தையும் நானல்லவென்று நீங்கி
சொரூபமறிகிறதேமோட்சமென்றறிக.

எஉ-வது—அத்தியாயம்.

நவக்கிரகவாதிமதம்.

நவக்கிரகப் பிரமவாதமாவது, இனி நவக்கிரகங்களாலே சிருஷ்டி
திதி இலய மிந்தமூன்றுமாம். அஃதெப்படி கிரகசாரத்தாலே பிறக்கிறதுப்
இரட்சிக்கிறதும் சங்காரிக்கிறதுமா மென்றறிக. அஃதெப்படி நவக்கிரகங்க
ள், நட்சத்திரங்கள், இராசிகள், இதல்லாமல் திதி, வாரம், நட்சத்திரம், யோ
கம், காணம் ஆ ரு-ங் கூடிக்கொண்டுகிரகங்கள் இராசாவாயிருந்துஎல்லாக்
காரியமு நடப்பிக்கும். அஃதெப்படி ஒருவனுக்கு சாதக நிர்ணயத்தில்இவ
னுக்குப் பெண்ணித்தனை ஆணித்தனை என்றுசொல்வது சிருட்டி இந்தப் பி
ள்ளைகள் ஐஸ்வரியவான்கள் தரித்திரவானென்பது திதி அதுகளித்தனை
வயதில் சாமென்பது சங்காரம் ஆகையால் முத்தொழிலுங் கிரகங்களே ந
டப்பிக்குமென்றறிக.

இதல்லாமல் பூதவர்த்த பவுஷ்யமுமறியலாம். அஃதெப்படி அந்
தரதிசை, மகாதிசை, சூட்சுமதிசை, அந்தராந்தரதிசை, பிராணதிசை இது
கள்நடக்க இன்னுடதிசையில் அந்தரபுத்தியில் இவனுக்கு நன்மை தீமை
வருகையிலுலும் அவ்வந்தரபுத்தியிலுஞ் சூட்சுமதிசையாலு நன்மை தீமை
யாலுமதிலுமற்றவிரண்டுதிசையிலுநாள்நாழிகைநிமிஷங்களில்நன்மைதீமை
யாலுந் தகப்பனுக்குஞ் சுபக்கிரகமாய் அதிலே புத்திரருண்டாய் அந்தப் புத்
திரர் புத்திரிகள் சிசோதய பூமியுதயகாலங்களில் சுபக்கிரகங்கள் உச்சத்திலே
ஸொகேஷத்திரத்திலே -ரு-சு-ங்கூடியிருந்தால் மண்டாலதிபதி சக்கரேஸ்வர
ருவனென்றும். வியாதி,பீடை, சஞ்சலங்களில்லாமல்நீதிமாருய்ச் சர்க்குண
சம்பன்னதீர்க்காயுளாவனென்றும். நீசம்பகைகளிலே கனிஷ்டக் கிரகங்கள்
கூடினுற் றரித்திரன், வியாதியஸ்தன், துக்கி, சனி, அற்பாயுள், அனீதிம
ருவனென்றும். இனி நட்பு, ஆட்சி, யுச்சம், நீசம், டகை, கவிப்பு, சத்திரம்
இந்தப்பேதங்களாலும், பஞ்சதிசையில் இராசி,நட்சத்திரக் கிரகமிருக்கிற
ஸ்தானபேதங்களாலும் பஞ்சாங்கத்தாலும் பார்வை தாண்டுபேதங்களாலு
ம், இன்னுஞ் சோதிஷபேதங்களால் நல்லநடக்கை பொல்லாதநடக்கைகல்
லபுத்தி பொல்லாப்புத்தி, நல்லகல்வி பொல்லாக்கல்வி, ஞானம் அஞ்ஞான
ம், சன்மார்க்கம் அசன்மார்க்கம், சம்பத்து தரித்திரம், வியாதி வியாதியில்
லாது, யாஜகன் அயாஜகன், சென்ன மரணம், யோகம் அயோகம், பத்தி
பத்தியீனம், தயாதாட்சணியம், கூன் குருடு, மூங்கை பூதவர்த்தபவுஷ்யம்
திருட்டு கன்னம், கெற்பநிச்சயம், புண்ணியம் பாவம், விடன் குலாமன்,

ஞானி யோகி, ஆசிரமி வன்ஞசிரமி, சம்சாரி இதுமுதலான உலகநடக்கைக ளெல்லாங் கிரகசாரமென்கையாலு, மிவன் பிறந்தவேளைனன்று மிவன்பிறந் தநட்சத்திரபலனென்றும் என்கிரகசாரமென்றுங், பிரமா விஷ்ணு உருத்தி ரன் முதலான சகலதேவர்களையும் இரிஷிகளையுங் கிரகம்பிடித்து தென்று ஞ் சொன்னதி மரணந்தமெல்லாஞ் சாதகங்களில்லையுமாயும் நவக்கிரக ங்களே பிரமமென்றறிக. இனி நவக்கிரக்களே சொரூபநிலை யிந்தக்கிரகங்கள் நட்சத்திரராசி முதலான தோஷ்டிவிரிந்ததே தடத்தநிலை யிதுகளிலே கட்டுப்பட்டுச் சொன்ன மரணப்படுவதே பந்தநிலை யிந்தக்கிரகபூசை ஓமங் களைச்செய்து அதின்வழித்தாகதடக்கிறதே முத்திநிலையென்றறிக.

எட்-வது-அத்தியாயம்.

சூரியவாதிமதம்.

உசுரு. உதையங்களிலபரப்வரு முயிர்காவலிலரியாய்
வதைதவந்திடலரனுய்வருமாறும்பிறவங்களே
யிதைதபங்களிலிவனேயினறபெனவையெங்களனுமிவனே
கதையென்றறிகாளைவிறகாளுமிறைகதிரோன்.

உசுசு. அறியாதவன்னைமளுமேமருவாகவளுவாயடங்கியருளும்
பிறியாதவன்டபகிரன்டமந்தவளுவாகவேபெருகிடுங்
குறியாலனைமந்தநெறியாகின்றுகுருவாகிவந்துகுருருகும்
செறிவானினைறந்தசிவமாபமர்ந்துதெளிவாபவன்றினகரன்.

என்றது, உதையத்தில்அயனுட்சபாசரங்களெல்லாம்எழுப்புகையால் கிருஷ்டியும் உதையமான பிறகுஎல்லாரையும் எழுப்பி யறுவகைத்தொழி லாலே எல்லாரையும் இரட்சித்தும் இவன் உஷ்ணகிரணத்தாலே சகலஜலங் களையுங் கிரிகித்து மேகங்களிலே கட்டிமழை பெய்வித்து அதுகளாலே தா னியமுதலான தெல்லாமுண்டாக்கி யிதிரூல் தண்டுலபிண்டிபோதமாகிற ஆ காரங்களாய் எறும்புமுதலானையீறுக எல்லாவற்றிற்கு மாகாரமாய் வருஷ கிரணங்களாலே இரட்சித்தும் இப்படி இரட்சிக்கையால் விஷ்ணுவாயும் இ னி உஷ்ணகிரணங்களாலே மழையைத் தடுத்து மழை பெய்யாவிட்டாற் ச கல தானியங்களும் விளையாது கருப்பாலெல்லாரையுஞ் சங்காரஞ்செய்கை யாலுருத்திரரையும் இப்படி மும்மூர்த்திகள் சொரூபமாயுஞ் சர்வ சீவனிருத யங்களையும் விளக்கி பாயாரங்கத்திலு மிருளைப்போக்கி யிதல்லாமல் சூரியகி ரணமாகிற அறுக்களெல்லாம் மேருமுதலான அண்டபகிரண்டங்களாய்வள ர்ந்து அந்தவளுவாலெல்லாதி போய்ச் சங்காரம்மாயுங் குருவாகியுஞ் சிவமா கியு நிற்பவன்றினகரனென்றறிக.

உகூள. இப்படிமுழுதுமாயபராதித்தன்கதிரோனென்றுஞ்
செப்பிடுஞ்சிலாதித்தன்மேறகத்திலுயிராமென்று

மப்படியவனேடொன்றுமவன்றன்மந்திரத்தாலொத்த
தப்பிலாமுத்தியென்றுஞ்சாற்றிடுஞ்சுவரமன்றே.

உசுஅ. தோற்றமேநிலையேயீறேசொல்லுசூரியனலாகு
மாற்றலாற்பிரத்தியக்கத்தாகியபாலுவன்றித்
தோற்றிடுங்கருத்தாவில்லையெனத்துணிந்தவனாளரும்
போற்றிடும்புத்திமுத்தியென்றுதான்புகலுகின்றான்.

இப்படிப் பெயருண்டான சூரியனை அவன்மந்திரத்தால் செபதபபூசை யைச்செய்யமோட்சமுண்டாமென்றறிக. மறுப்பு.

உசுக. ஈசன்முனியவேயிறுவிழியிழந்தான்
மாசுணவாயின்மனறவுற்றான்-றேசுகனை
முற்பவமாமுள்ளத்திருளொழியாலெருவன்
றற்பரனேவல்லவனேதான்.

சூரியனே சொரூபம் இவன் கிரணத்தால் செகவியாபாரமெல்லாம் நடப் பிக்கையே தடத்தலட்சணம். இவன் கிரணத்தாலே சகலமு முற்பத்திக் கேதுவாய் சீவன் சென்னமரணப்படுவது பந்தலட்சணம். இவன்மந்திரத் தாலே யிவன்துஉலக மடைகிறதேமுத்தி யென்றறிக.

எசு-வது-அத்தியாயம்.

சந்திரவாதிமதம்.

உஎய.மதியிரவிபொருந்துநிலைதிருந்தக்கூறின்மன்மதியாமனத்தனி
ல்லீவர்கொண்டவாயு, முதிரிநறுமிதுமதியின்களங்கமாகமொ
ழிந்திடுவர்மூலவளிநிறனுமாகு, மதியிலருகலைகளிருபக்கமாக
மரித்தொடுங்கியுதிப்பதுமவ்வளியின்பாலாங், கதிநிறுவுகுண
மாதிகரணமெல்லாங்கருதியகாற்றினிலடங்கியுதிக்குமாபோல்.

என்றது, சந்திரசூரியர் பொருந்தியிருக்கிற நிலைநன்றுகச்சொல்வில் ம னமேமதியாம் அந்தமனத்தை விஷயத்தில்விடுகிறதுமனதில்பற்றிவேர்கொ ண்ட வாய்வுபோல் அண்டத்திற் சந்திரனில் வேர்கொண்டு களங்கமாயிருக் கிற வாயுவே சூரியன் இந்தச் சூரியனுகிற ரூலவாயுவே சிரணமாகுஞ் சந் திரனுனவன் கலைகளிரண்டு பட்சமாய் மாறிவருவது தேகத்திற் பிராணவா யுவானது இடம்வலமாறிமாறிக்குணமாதியான கரணமெல்லாம் ஒடுங்கியுதிக் கிறதுபோலென்றறிக. இனி அண்டசந்திரனுஞ் சூரியகிரணத்திலே கலை வளர்வதுங் குறைவதுமென்றறிக.

உஎக. இந்துவினிலெழுகோடிரோகையுண்டாமிரேகையொன்றிலெ
ழுகோடிகலேசமொன்றும், வந்துகலேயொன்றுதனிலேழுகோ
டிமதியுண்டாமதியொன்றிற்பிறையேழ்கோடி, யந்தமிலாப்பி
றையொன்றிலாங்கே யுண்டா மகிலத்தையாக்கியழித்திடுதற்
காக, வந்துபிறைபிறந்திடந்துமதியிற்கூடி வருவதுபோவது
மாமதியல்புதானே.

உஎஉ. ஆதலான்முழுது மாகியபரமவமிர்தநற்கலேயதாமதியே
யோதியவமிர்தகலேயதாயுள்ள வொப்பிலாச் சக்கரமுணர்ந்து
நீதறுமமிர்தயந்திரமதனற்றிகழுருச்சனேயிணன்மதியோ
டேதமதறவேயேகமாவதுவீடவனெலாமியற்றுமீசனுமாம்.

உஎங. திகழ்தருமமிர்தக்கலேயுளர்பவர்க்குத்திதறுகனல்குளிருநீர்
திடமாம், தகுவிடமமிர்தஞ்சார்பினி பூதக்கோள்கள்பேய்தா
னெலாமகலு, மிகுதருபோகம்வீடதுமெளிதாம்வேலைநீர்த
ன்னீராம்விளம்பின், மகிழ்தருமறைகளறிகிலதவர்கள்பெரு
ணமையையறியவல்லவராம்.

உஎச. ஊனையுயிராயுளர்வாயொளியா
யானவறிவாயனுபோகமுமாய்
நானவிதமாய்நறவாயுறவாய்
வானய்நிலனய்வருவார்மதியார்.

உஎரு. மனுவாரமிர்துமடவாரமிர்து
மனுபோகமுமாமருளாரமிர்தும்
தனுவானதிலேதகுவாரமிர்தும்
கனியாரமிர்துங்கலேயாரமிர்தே.

என்றது, சந்திரன் அமிர்தமானது நிலநீர் பை முட்டை மந்திரமிந்த ஐ வகையோனியுமாம். அஃதெப்படி, சந்திரனுலேவிகாரம்பிறக்கும் அப்போது சுக்கிலசுரோணித மாகச் சந்திர கலே வர்த்திக்கும் வர்த்தித்தவுடனே ஸ்திரி புருஷ கூட்டங்களாலே சிருஷ்டியாம். தாபராதி களுக்கெல்லாஞ் சந்திரன தகலேயாலே பீஜாங்குரமாய் முளைக்கும்போது அவனமிர்தங்கூடி யங்குரிக் கையால் வேர் முளை வெள்ளேயாயும் பயிர்களெல்லாம் பால்கட்டாய்க் கதிர் வாங்கியு மந்த அரிசிகளெல்லாம் வெள்ளேயாயு மிப்படித் தானியங்களாயும் தாபராதிமுதலான தெல்லாமுளைவேர்வெள்ளேயாயும் ஆனல் மற்ற தெல்லா ம் பச்சைவர்ணமாவது அவனதுகலேயிங்கு கறுப்பாயிருக்கையாலும் வெள ளே கறுப்புக் கூடின பேதகலேகளாலே பண்டு பலாதி பூவுகள் பலவர்ண

மாயும் இப்படி நாலுவர்ணமானதுஞ் சந்திரகளாபேதத்தாலே சுக்கில மூட்டைகள் வெள்ளையாயும், நவரத்தினதிகளிலே சந்திரகளைபாய்ந்து தோடுகை யாலுஞ் சர்வ சீவனது முகபேதங்களும் அவர்களதுகாந்தியின் களபேதங்களும் எண்ணிறந்த சீவராசிகளெல்லாஞ் சந்திரகலையாலுண்டாகு மென்றறிக. இனி அமிர்தம, பால். தயிர், நெய், அன்னமுதலானதுந் தண்டுலபிண்டி பேதமு மிதுவெல்லாஞ் சந்திரகளாபேதத்தாலாகையாற் சந்திரனுலே சிருட்டியென்றறிக. இவன் சிருட்டித்த பண்டபதார்த்தங்களை எண்ணிறந்த சீவராசிகளெல்லாம் புசித்துப் பிழைக்கையா லதுவே திதியாயும், இனிச் சகல சீவராசிகளுக்குஞ் சந்திரகளை வாங்கிப்போனல் மரணமாயும், இப்படி மூன்றுதொழிலுஞ் சந்திரனேசெய்வானென்றறிக. எந்தெந்தவர்ணங்களி லுண்டானது மதின்மெருகு நுண்மைகளுந் சந்திரன் அமிர்தகலையென்றறிக.

இதற்குத்திருஷ்டாந்தம். சந்திரன் கெற்பத்தை வர்த்தனை செய்கிறவுகையாற் பூரணகாலத்தில் கெற்ப ஸ்திரீகள் சந்திரனைப் பார்த்தா லந்தக் கெற்பமொட்டை யுருவாய்ப்போம் ஆகையால் சந்திரனே பிரமமென்றறிக.

சொருபநிலையாவது, சந்திரன். இந்தச் சந்திரன்களையானது ஏறுகிறது மிழிகிறதுந் தடத்தலட்சணம். இந்தகளைகளிலே சீவராசிகள் கட்டுப்பட்டுச் சனனமரணப்படுவதே பந்தநிலை. சந்திரனைப்பூசையினலுந் தியானத்தாலும் பூசித்து சந்திரலோக மடைகிறதே முத்திநிலையாம். இதற்குவெகுவாய் மறுப்புண்டென்றறிக.

எநு-வது-அத்தியாயம்.

வாழ்வாதிமதம்.

உஎசு. வாழ்பரனலென்மனைமெறிஞானமதனலென்
கேழ்விகளாலென்கிளர்மனுவாலென்கிளையாலென்
வேழ்விகளாலென்விள்ளனவராலென்விளைவெல்லா
மூழ்வினைதானதருதலினூழேமுயிறையென்றனன்.

என்றது, பரசிவத்தாலென்ன வேதநீதி நடந்தாலென்ன ஞானயோங்கள் முதலான யோகஞ்சாதித்தாலென்ன சிரவணமுதற் சாதனங்களாலென்ன விந்ஞானேஸ்வரநீதியாலென்ன வேதாந்தசித்தாந்த முதலான ஆறுந்தாதித முணர்ந்தாலென்ன பெண்சாந்தி பிள்ளை பந்துக்களாலென்ன பஞ்சயெக்ஞங்கள் சோடசதானம் மாடமாளிகை கோபுரபிரசாதந். சிவபூசை விஷ்ணுபூசை முதலான தேவாராதனைதோப்பு நந்தவனந்தண்ணீர்ப்பந்தல் வாவி குளம்ஏரி கிணறு பஞ்சசூர்த்திகள்பஞ்சகிருத்தியங்களாலென்னஉபகாரம் அபகாரத்தாலென்ன பகை யிஷ்டத்தாலென்ன திதிவாரநட்சத்திரகரணயோக நவக்கிரக ஓராசிகளாலென்ன சாந்திரா ணகிரிச்சிராயண முதலான மகாவிரதங்களாலென்ன தீர்த்த யாத்திரை மந்தசாந்திரங்களாலென்ன மணிமந்திர அவிழ்த்துங்களாலென்ன இவன் கன்மத்துக்கீடாகப்பஞ்சகிருத்தியஞ்

செய்கையாலுமெல்லாங்கன்மத்துக்கீடாகையாலும்எல்லாப்பிரவிர்த்திநிவிர்த்திகளுங் கன்மத்தைக்கொண்டு நடக்கையாலும், என்விதி நான்செய்தகன்மம் என்புண்ணியம் என்பாவம் ஒன்றுநினைக்க ஒன்றுசெய்யவேறொன்றுகையாலும், வேண்டுமென்றது வேண்டாமலும் வேண்டாமென்றது வேண்டியும் வலோத்காரத்திலே புசிப்பித்தும் இதம் அகிதம் துக்கஞ் சுகஞ் சுகந்துக்கமாகையாலுந் தரித்திரஞ் சம்பத்து தீர்க்காயுள் அற்பாயுள் சன்மார்க்கம் அசன்மார்க்கங் கோபங் குரோதம் இப்படி அனந்தகோடி விதங்களாகையால் கன்மமேபிரமமென்றறிக.

உளெ, வினைப்பயனைவெல்வதற்குவேதமுதலா
மனைத்தாயநூலகத்துமில்லை-நினைப்பதெனக்
கன்னுறுவதல்லாற்கவலைப்டேலெஞ்சேமெய்
வின்னுறுவார்க்கில்லைவிதி.

என்றது,வினைச்சொரூபமாகிற கடவுளே சொரூபம்.கன்மம் விரிந்துசஞ்சிதாதி முதலான அனந்தங்கன்மமாய் விரிகிறது தடத்தலட்சணம். இதின் வசமாய்ச் சென்னமரணப்படுவது பந்தம். இந்தகன்மம் பக்குவப்பட்டுச் சொரூபநிலையறிந்து தானில்லா தயிக்கமாகிறதே முத்திநிலை என்றறிக. தானென்பதென்னுணர்ண்டோ அன்னுணரும் வினைவிடாதென்றறிக.

எசு-வது-அத்தியாயம்.

காலவாதிமதம்.

காலமெனுங்கடவுளினைக்கழிபவுளேதுமிலை
யநிழலமர்ந்தவருமரிபிரமாதிகளெவருஞ்
சிலமுடைச்சிருட்டிமுதற்றிகழ்வனவாகச்சுழற்றித்
தாலமொடுசூக்குமமாய்த்தொடர்ந்துதொடர்ந்தேதவருமால்.

உஎக. ஊழியுமாய்க்கற்பமுமாயுகங்களுமாயான்டாகி
வாழியதிற்றிங்களுமாய்வளங்கொளருநம்பக்கமுமாய்
நாழிகளாய்ராசிகளாய்நாளாகிநாயிறுமாய்க்
சூழுலகமுயிர்காலசக்கரத்தாற்சுழற்றியிடும்.

உஎய. கணந்துடிநிமிடமாத்திரைவிடிகருதுநாழிகையிரட்டிங்களினைந்திடமான்டு நாலுநாறுதன்மேன் முப்பதேதாடரன்டாயிரத்தா, லிணைந்ததுகலியாந்துவாபரமிருமைமும்மைபாந்திரோதைநாற்கிரோதை, யிணைந்தந்சுதர யுகமொன்றிரன்டாயிரத்திறற்பிரமனுக்கொருநாள்.

உஎக. முன்புபோலன்னிரட்டிங்களான்டாகமொழிதரு
லயனும், தன்பதமழியுந்தனதொருபகலிற்சகலமுமழிதரும்பி
ரமன், பின்பொராயிரத்திற்பெரியமான்மழியும் பெரியமாலும்

கோடியினி, லன்புருத்திரணுமடிதருமகேசன் சதாசிவன்முழு
லுமவ்வுணமே.

உஅஉ. ஆதலான்முழுதுந்தோற்றினின்றழியவழிவிலாக்காலமாம்ப
ரத்தி, னேதமில்வசமேமுழுதுமென்பதுதானெவர்க்குமேற்
றிடப்பகர்ந்திவன், பேதகாலத்திற்கலியினுக்கியல்பாய்ப்பே
சியவகைவரும்பரிசங், கோதவுங்கட்கூயொத்திடன்முழுது
மிப்படிக்கொக்குமென்றறிவீர்.

கலியுகநடக்கைவெகுவாயுண்டு. அது திரட்டிற் காலவாதத்தினு மனுவி
ஞ்ஞானத்திலும் உண்டென்றறிக. இதினர்த்தந் தொகையாகச் சொல்வது
பஞ்சமூர்த்திகள் முதலெண்ணிறந்த சீவராசிகளுங்காலத்தின்கண்ணேயிறந்,
துபோய்த் திரும்பவுமுண்டாய் பூட்டைபோல வருகையாலுங் காலத்துக்கு
இத்தனையுயுள்சென்றதென்று மூப்பிளமையில்லாணமையாலு மெல்லாந்தன்க
ண்ணே கழியத் தானொன்றிலழியாமலும் இருப்பதால் காலமே பரப்பிரமமெ
ன்றறிக. இனிச்சொரூபமாவது நித்தியமாய்க் கண்ணுக்குக்காணுமலொன்
றுகநிற்பது. தடமாவது நிமிஷமுதல் இலக்கமில்லாத காலமாய் விரிகிறது
பந்தமாவது சீவராசிகளெல்லாம் இதிலே சனனமரணப்படுவது. மோட்
சமாவது காலங்கடந்த கடவுளைச்சேர்வதாம் இதற்குவெகுவாய் மறுப்புண்
டென்றறிக.

எஎ-வது-அத்தியாயம்.

மந்திரவாதிமதம்.

உஅங. மந்திரத்தாலழைத்திடவேவானவரும்வந்திடுவர்
மந்திரத்தால்வசிகரணமுதல்வலிகள்வந்தெய்து
மந்திரத்தலாக்கியளித்தழித்திடலுமாக்கியிடு
மந்திரத்தின்வலியிவர்க்காண்வானவருமானவர்தாம்.

உஅச. மந்திரவாணுகத்தேதவான்முதலாம்பூதங்கண்
மந்திரவாணுகத்தேதமன்னுசராசரங்களெல்லா
மந்திரவாணுகத்தேதவரம்பில்லாஞானமது
மந்திரத்தின்தன்பெருமையாவர்களுமறியாரால்.

உஅரு. மூலமாகாதத்துண்மையுணராவிப்பொழுதேமுத்தி
யாலமுண்டானுமாலுமபனுமிப்படியுணர்ந்தே
சாலமாவிறைவராகிச்சமைந்ததுசகத்துக்கென்று
லேலுமந்திரவாதத்தேயிருமையம்பெறலாமன்றே.

உஅசு. பாரகத்திலிருக்கவும் பரகாயமானதுபாயவு
நீரகத்திலிருக்கவுமெய்நினைத்திடத்தினிலேகவும்

போரகத்தினில்லெல்லவும்பொருளன்றுபொன்னுலகேமவு .
மாரகத்தின்மதிக்கவுமினைவமந்திரத்தவர்வல்லரோ.

என்றது, மந்திரங்களைச்செபித்துப் பிர்மாமுதலான தேவர்களைவரச் சொல்லவு மந்திரத்தால் வசீகரணமுதலாய்அஷட்கர்மங்களு மந்திரத்தாலாக் கியழித்திடலும் மந்திரத்தின்வலியால் தேவர்களுமானிடரு மந்திரவாணுடை ய தேகத்திலே ஐந்துபூதங்களுஞ் சராசரங்களும் ஞானங்களு முண்டாயி ருக்கும். அம்மந்திரத்தின்பெருமை யாவராலுமறியவொண்ணுது. மூலநாதத் தைசெபித்துப் பிர்மா விஷ்ணு வாதிகளும் பஞ்சகிருத்தியமும் பூமியிலெத்த னைகாலமிருக்கவும் பரகாயப்பிரவேசமாகவு நீரில்முழுகியிருக்கவு மண்ணிலே புதைத்திருக்கவும் நினைத்தவிடத்திற்போகவும் உயித்தியம்வெல்லவுந் தேவ லோகங்களிலேபோகவுங் காமரூபுகொள்ளவுமிப்படி வெகுசாமர்த்தியமுண் டாகவுங் கொல்லப் பிழைப்பிக்கச் சாபானுக்கிரக சாமர்த்தியங்களும் இப்ப டிச்செய்விக்கிறது மந்திரமாகையால் மந்திரமே பிரமமென்றறிக. இனியி தின் சொரூபம் மூலமந்திரம் இந்த மூலமந்திரமொன்றுமே விரிவாயேழு கோடி மூதல்ான மந்திரமானது தடத்தலட்சணம் இந்தமந்திரத்தின்வழிநில் லாமற் சென்னப்படுகிறது பந்தநிலை இந்தமந்திரங்களை விதிப்படி செபித்து த்தேவத்துவமடைவது முத்திநிலை யென்றறிக.

எஅ-வது-அத்தியாயம்.

யந்திரவாதிமதம்.

உஎள. இயந்திரமனேகந்தன்னுலெய்துமெட்டானகன்ம
நயந்திகழ்புத்திமுத்தியெனநவிற்றிடுவோங்கேளா
யியந்திரந்தன்னைக்கீறுமியந்திரமிலதமான்மா.
நயந்தனையுணராமூடர்நரதனுவாகாரன்மே.

இப்படியந்திரபேதங்களாவது சிதம்பரசக்கரம், வாலை திரிபுரைபுவனச க்கரம், வயிரவசக்கரம், வீரபத்திர விநாயக சண்முக காளி துற்கி முதலான சத்திபேத சக்கரங்களும், சூரியசந்திரர் முதலான நவக்கிரக யந்திரங்களும், காலசக்கரஞ், சர்வதோபத்திர சக்கரம், விஷ்ணுசக்கரம், நரசிம்மசக்கரம், இராமசக்கரம், இலட்சுமிசக்கரம், அனுமசக்கரம், இப்படி சகலமதசக்கரபே தங்களுங் ககூடபேதசக்கரங்களும் அனேகயந்திரங்களும் அறிந்து இதின் புனச்சரணை இதின் செபங்கள் இதின் ஆவாகனஸ்தாபன சந்நிதான சந் நிரோதன அவுத்துவாசனங்களுடனே பஞ்சசுத்திசெய்துக் கொண்டுஎந்த க்கன்மத்துக் கெந்தசக்கர மெந்தமந்திர மெந்ததந்திர மெந்தபீசாட்சரம ப்படியே புனச்சரணை செய்து பூசைசெய்தாவிவனினைத்த காரிய மெல்லா மாமென்றறிக. இதுவெகுவிஸ்தாரமாம் இதைதொகையாகச் சொன்னதெ ன்றறிக. இதின் சொரூபமாவது மூலமந்திரமாகிற பிரணவம்இனித்தடமா வது அனந்தகோடி யந்திர மந்திர தந்திரங்களாய் விரிகிறது, இனிப்பந்தமா

வது இந்த யந்திரமே தனுகரண புவனபோகமய மென்றறியாமற் போவது இனி முத்தியாவது இந்த யந்திரசாத்திரப்படி பூசைசெய்து புனச்சரணை செய்தந்தந்தெய்வங்களை யடைகிறதென்றறிக.

எகூ-வது—அத்தியாயம்.

அ வி ழ் த வ ா தி ம த ம்.

உஅஅ. கோதறுசெம்புதன்னைக்குலவியவிரதஞ்சேர்ந்து
வேதகஞ்செய்யுமாபோன்மெய்யெனுங்காயந்தன்னை
வேதகமருந்தாற்செய்துமேவுங்முத்திசித்தி
நாதராயிருக்கநாதனுகவோவிலுமன்றே.

உஅகூ. ஆகமமுறைமைபாலேபுடைத்தவம்மருந்துக்கேற்கத்
தாகமோகாதிகாற்றுதன்பனிமூதலாய்மாற்றி
யேகனைய்க்குகையிற்புக்கங்கிருந்திடவறைந்தாளி
லாகம்வேதகமாயின்பத்தழகுறுநாதராவார்.

உகூய. வேதித்தகாயத்தோர்க்குவிளங்குமெய்ப்பொருளுஞானம்
போதித்துத்தானேதோற்றும்பொருவிலாக்காயந்தன்னிற்
போதித்தமலநீர்வெற்பும்பொருந்திடும்பஞ்சலோகம்
வேதித்துப்பொன்னுங்கல்லுமிலமாமணிகளாமே.

உகூக. பாவுவார்வேண்டித்தெல்லாம்பெற்றிடப்பணிக்கலாகும்
விரவிடுஞ்சித்தியோடும்விளங்கிடுந்திரிகாலங்கள்
கருதருகாயம்பின்னைகால்வருசகமாமானு
லரியதன்மருந்தேயாவுமாய்ப்பொருள்வேறுமுண்டோ.

என்றது, அவிழ்தமாகிற தண்டுலம் பிண்டி பேதங்களை சகலசீவராசி களுக்கும் புசிப்பாயதிலே பிழைக்கையாலும், டீரங்கி மூதலான பாணப்பிர யோகமுங் கொல்லுகிறதும் பிழைக்கிறதுஞ் சகலவியாதிகளைதீர்க்கவும் உண் டாக்கவுங் கோடானுகோடி விஷங்களாகவும்விஷங்களைத்தீர்க்கவும்அமிர்தமா யும் அன்னமாயுங் கல்வி கேழ்வி யோகஞானந் தாதிருவ்டி தாரகமனம்வா க்குசித்தி காயசித்தி தீர்க்காயுள் அற்பாயுள் கொடுக்கவுஞ் சராசரங்கள் பசி களைத்தீர்த்துப் பிழைப்பிக்கவும் அன்னரசத்தாலேசாகவும் பிழைக்கவும் வி யாதி தீர்க்கவும் உண்டாக்கவும் இப்படி மருந்தினுடைய பேதஞ்சொல்லில்லி ரிவாமென்று தொகையாகச்சொன்னதென்றறிக.

சொரூபம் மருந்துகள். தடமாவது இந்தமருந்துகளெண்ணிறந்தவித மாய்ப் விரிகிறது. பந்தமாவது, இந்தமருந்தின் வழிப்படாதிருப்பது. முத்தியா வது, இந்தமருந்தின்வழிப்பட்டதென்றறிக.இப்படிச்சமயங்களொன்றுசொ

ன்னதொன்று சொல்லாமல் வேற்றுவேறுக அதுவதுவே பிரமமாய் ப்ரமதங்க ளாக்கண்டித்துத் தன்சொம்மதங்களேநிறுத்துமென்றறிக. ஆகையா லிப்படி ப்பலசமயமானதெல்லாமொரு ஊருக்குப்பலவழிபோலுஞ் சமுத்திரத்துக்கா றுகள்போலும்,பாலொன்றுப்பசுக்கள்பலபோலும் மலையொன்று வழிபல போலும் மோட்சஞ்சேருகிற்விடமொன்றுகிலும் போகிறவழிகள்பலவாமென் றறிக. இந்தத்திஷ்டம் ஒன்றுக்குப்பலவாகிலுந் தான் குறித்தவிடத்திலே த ப்பாமல் நிச்சயமாய்சேரும்போல அந்தந்தமததங்களே நம்பிவழிபடிலந்தமததே வதை பதங்களைச் சேர்க்குமல்லாமல் பிரமத்திலே சேர்க்காதாகையால்முன் னதிஷ்டமாகாதென்றறிக. இந்தத்திஷ்டமாருக்கென்னில் எண்ணிறந்த செ ன்மங்களெல்லா மதங்களின்நின்று பாபட்சயமா யிருவினையொப்பு மலபரி பாகம் வந்து மோட்சவாஞ்ஞையடைந்து பிரமத்தைதவிரும்பினவனெந்த மத த்திலிருந்தாலும் பிரமத்தையே யடைவதொன்றறிக. இனி யெல்லாச்ச மயங்களுமொன்றுயிருக்கிற அதிட்டிக்குவனுக் கெப்படி யிருக்குமென்னில் வித்து ஒன்றுயிருக்க அது சாகு மூல பலாதிகளுக்கு நாமரூபக்கிரியைக ள் வேறுயும் இருசிகள் வர்ணம் ரூபுகள் தொழில்கள் வேறுயு மிப்படிவே றுவேறுன விதமெல்லாம் வித்திலே தோன்றிப் பலவாம்போலும் ஒருவன் தேகத்தில் ஆத்மா வொன்றுயிருக்க அந்த ஆத்மாவுக்கும் அவ யவி அவயவங் கள் தத்துவங்களெல்லாம் வேறுயும் நாமரூபக்கிரியைகளும் அதின் சீவன்க ளும் ஆத்மாவை யல்லாம லெய்துவது சுதந்தரமாய்ச் சீவித்தும் ஆத்மா வையல்லாமல் பிரத்தியேகமவயவங்களறிந்து மிப்படி யிருந்தாலுஞ் சீவ ன்போகிறபோது எல்லாங்கூடப்போயும் வருகிறபோது எல்லாங்கூடவந்து ம் எல்லாத்தத்துவங்களிலும் ஒரு சீவனேதானே யிருந்துவேறுவேறுய்த் தத் துவங்காண்பித்தாற்போலும், பொன்மண்நூல் காற்று இதுகளிலேபணிகள் கடங்கள் படங்கள் துவாரவாக்கிய மிதுகள்முதலொன்றுகிலுமிதுகள்காரிய ப்பட்ட விடத்தில் நாமரூபக்கிரியைவேறுறற்போலும், விளக்குஒன்றுகிலும் ஒளிஉஷ்ணங் கிரணம் நாம ரூபக்கிரியைவேறுகிலும்விளக்கறுமிடத்திற்போ ப்விளக்கேற்றுமிடத்தில் வந்ததுபோலும், எல்லாசமயங்களும்பிரமந்தானே அத்தனைபேருங்கொண்டு நாமரூபக்கிரியைவேறுய்நடத்து மெல்லாம் பிரம சொரூபமாமேயென்றறிக. இதுஅனுபவிகளால் அறியலாமென்றறிக. இந் த அனுபவிக்குச் சமயங்கள் முதல் சகலமும்வேறல்ல வென்றறிக. எல்லாச் சமயங்களிலு மொவ்வொருசமயத்துக்குத்தானேசிருட்டிகள்பேதமாகச்சொ ல்வது உகாந்தபேதங்களாலேபேதமானதென்றறிக.

ஓம்பராபரப்பிரமணேநமம.

தத்துவநிஜாநுபோகசாரம்.

1.—பூர்வபாகம்—கர்மகாண்டம்.

கூ - ஆம் - அதிகாரம் - சங்கற்பப்பிரகரணம்

முதலாவது-அத்தியாயம்.

தீர்த்தசங்கற்பம்.

தீர்த்தத்தாற்சிதையாவினையொன்றிலைத்
தீர்த்தத்தாற்செறியாகலமொன்றிலை
யேர்த்தத்தோடுமிருப்பதுமொன்றிலைத்
தீர்த்தத்தேதிகழ்முத்தியுமென்பரால்.

என்றது, காசி, இராமேஸ்வரம், கும்பகோணம், பாபநாசம், கங்கை யமுனை, சரஸ்வதி, மணிகரணிகை, கோதாவிரி, குருக்ஷேத்திரம், புண்ணிபகோடி, துங்கபத்திரை, பலபத்திரை, மாயா, மதுரா, அவந்திகாபுரி, கேகாரம், நீலதண்டம், நேபாளம், வையந்தம், காவேரி, கிருஷ்ணை முதலான தலங்களுந் தீர்த்தங்களுமாடித் தீர்த்தமூர்த்திசளையுஞ் சேவித்துச் சமுத்திரஸ்நாந மகாதீர்த்தங்களிலே உத்திராயனம், தட்சிணாயனம், கிரஹணகாலம், சனித்திரயோதசி, துவாதசி, அமாவாசை, பூரணை, ஏகாதசி, பிதுர்திவசம், வருஷசங்கராந்தி, மாலைசங்கிராந்தி, ஆடி, ஆவணி, மூலம், தீபாவளி, மகாநவமி, உகாதி, கேதாரவிரதம், அனந்தவிரதம், விநாயகசவுத்தி, கோகுலஷ்டமி, கார்த்திகை, மார்கழித்திருமஞ்சனம், மாகஸ்நாநயஞ் சிவராத்திரி, முக்கிய நட்சத்திரம் இதுமுதலான விசேஷ நாள்களிலும் பண்டிகைகளிலும் ஸ்நாநஞ்செய்வித்தாலும்வித்தாநுசாரமாய்த் தானம் பரோபகாரங்களையுஞ் செய்வித்து ஸ்நானஞ்செய்யும்போது நூறு ஆயிரமென்று முழுகியும் ஆயிரம் பதிணாயிரமென்று சாவித்திரி, காயத்திரி, அசனை, பஞ்சாட்சரி இதுமுதலான செபங்களைச்செய்தும் மரணமானவர்களெலும்பை முக்கியதீ

ர்த்தங்களிலேபோட்டும் பிண்டி, கரணம், பெலிகரணம், அந்திஷ்டைகள் செய்தும் தெரிசனபரிசனங்கள் செய்தும், தீர்த்தங்களை உபாஸ்திகள்செய்தும், இகத்திலே பாபட்சயமும் வியாதிமுதலான பீடைகளும் நாசமாய்ச் சுசிற்பூதனுய்ச் சர்வசனவசீகரமுமாய்ச் சகலருக்குந்தயாளுவாய் மோட்சமாகிற சொற்காதி பதங்களிலிருப்பார்களென்றறிக.

—

உ-வது-அத்தியாயம்.

அர்ச்சனைசங்கற்பம.

சிவார்ச்சனைசெய்யப்போகும்போது அருணோதயத்திலெழுந்துசௌசாதிசரீரசுத்திதந்தாவள்யமுதலானதுஞ்செய்துபின்புதடாகம் நதிஇதுகளில் ஸ்நானஞ்செய்து ஈரவஸ்திரத்துடனிருந்து விபூதிஸ்நானமானஸ்நானாகமந்திரங் களிஞல் சிரசு, முகம், இருதயம், குய்யம், பாதமிந்த ஐந்துதானங்களிலுமி துமுதலான சர்வாங்கத்திலும் ஈசானாதிபஞ்சப்பிரணவ மந்திரங்களிலேபுரோ ஷணஞ்செய்து பின்னுமந்திரவசத்தாக நாலாறுபத்துதரம் அனுலேபனமா கச்செய்து உத்தூளனஞ்செய்வது ஸ்நானமாமினித் திரிபுண்டரம்-கசு-கக-அ-இந்தத்தானங்களிற் றரிக்கும்போது அந்தந்தத்தேவதைகள் மந்திரங்களையுஞ்சொல்லித்தரிக்கவேண்டும். இனி அநுமிகை பத்திமை தற்சினி இந்த-ங-ம் அகார உகார மகாரமூன்றுகும் இந்தவிரலாலே திரிபுண்டரமிடுவது பின்பு உருத்திராட்ச கற்பஞ்சொல்லுகிற விதிப்படியந்தந்த ஸ்தானங்களில் மந்திரவசத்தாக உருத்திராட்சந்தரிப்பது.

ஊ-வது—அத்தியாயம்.

பஞ்சாட்சர முதலானமந்திரங்கள்.

பஞ்சாட்சரமந்திரங்கள் முதலானது அறியவேண்டும் மூந்த சடாட்சரசித்தி அரியாகிறமந்திரசித்தி சூக்குமமாகிற மாத்திருகா சக்கிரோத்தரண சூர்மசக்கிரோத்தரண இலிங்கோர்த்தரண ‘‘மந்திரஜாந, ஸ்தானமானமகாசக்கிரோர்த்தரண மந்திரோர்த்தரண மந்திராதூலசுத்தானமாய்ப்பரிசுத்தச் சுத்தப் பிரசாத மூலப்பிரசாத தத்துவப்பிரசாத ஆதிப்பிரசாத ஆத்மப்பிரசாத இந்தச் சிருஷ்டிவிதரூபமான பஞ்சமந்திரங்களும் பஞ்சதாசிவரூபஸ்திதி மந்திரங்களும் ஸம்ஹார ரூபத்திரிவிதமந்திரங்களும் பஞ்சப் பிரணவ மந்திர மூலஸ்தூல சூக்ஷமமாயாக்கியப் பிரசாத இந்தவைவந்து மந்திரங்களும் பஞ்சாஸ்திரமந்திரங்களும் பஞ்சபிரமமந்திரங்களும் காயத்திரி மிறுத்துஞ்செய தட்சணைமூர்த்தி நீலகண்ட சரப வீரபத்திர விக்கினேஸ்வர விசாக வித்தியேஸ்வர பிரம விஷ்ணு சூரிய வரிரவாதி மகாமந்திரங்களும் துற்கி சாரதை

இலட்சுமி, கௌரி, அசுவனேஸ்வரி, அந்தகசங்ஹேஸ்வரி; அன்னபூரணி, திரிபுராம்பிகாதி, மகாசத்தி, மந்திரங்களுஞ் சித்தசாபாசத்தி சாபாமேருதந்திரசாகினி, தந்திரதாகினி, தந்திர கூகிமர், தந்திரசல்லிய தந்திராதிசித்தமந்திரங்களும் திராவிடாதி லௌகீகதேசபாஷை மந்திரங்களும் விவேகித்து ஷடாங்ககக்கிரமத்தில் நமஃ, ஸ்வகஃ, பவஷடுஹூஃ, மவ்வஷடி என்கிற ஆறுபல்லவப் பிரயோகங்களும் வெள்ளை மஞ்சள் இரத்தம் படிகஞ் சாமளங் கறுப்பு இந்தக்கிரமத்தில் இருஷைதயாதிஅங்கவர்ணமந்திரங்களும், இனிப்பஞ்சாங்கமந்திரங்களுக்குப்பல்லவமந்திரங்களுடையவிதிகளும் அங்கவீன மந்திரங்களுக்கு அங்கங்கற்பித்துக்கொள்வது நிச்சயித்துபின்னு மிந்த ஆறுவிதபல்லவ மந்திரபேதங்களைச்சாத்திரப்படிச்சொல்வில் விரிவாமென்று நாமமாத்திரஞ்சொன்னதென்றறிக. இனியுள்ளமந்திரங்களுக்குள் முக்கியமான பிரணவம் பரப்பிரணவம் அபரப்பிரணவமென்றிரண்டுவிதமாம் இதிற்பரப் பிரணவமாவது வாச்சியமானசத்தியஞாஞதியிலக்ஷணமாம். அபரப்பிரணவமாது, வாசகமான பிர்மாதிபஞ்சதேவதை பஞ்சவர்ணமான அகாராதிபஞ்சாக்ஷரம் தண்டகாகிறுதிமுதல் ஆறு ஓங்காரம் இவ்வோங்காரமே பிரமன்முதற் பிபலிகாந்தவரையாயுள்ள வுயிர்களும் மற்றபதார்த்தங்களுமாம். இஃதேஅபரமாம்.இனிப்பரப்பிரணவஞ்செபிக்கும்போது பிரமரிஷி காயத்திரி தேவி சந்தசு பரமசிவன் அதிதேவதை அம் ஹ்ரஜம் உச்சத்திமங் கீலக இப்படி மோக்ஷார்த்தமான வினியோகமாக முதலுச்சரித்து மேலே மந்திரத்தால் காரியாசஞ்செய்து தேகநியாசம் தேசிநியாசமுதலியமந்திரங்கள் விஸ்தாரமாயுண்டதுகளெல்லாஞ்சொல்வில்விரிவாமென்றறிக. இதின்பிறகு உலகமெல்லாந்தப்தாயபிண்டம்போல் பிரணவசோதிவியாப்தமென்கிற வனுசந்தானத்திலாவது அல்லது மூலாதாரமுதற்சக்கரபேதத்திலாவது அல்லது சுஷும்மமுறைமதந்தியகதவிகதியுறல் ஏகாத்ம விந்து சிந்தனமாகிலும் அல்லது இர்தயகரணீகாக்றசோம சூரியாக்கினி மண்டலத்திரையத்திலாவது மகேஸ்வரதியானங் கைகூடாவிடில் பத்துலட்சம்செபம் புனர்ச்சரணைசெய்தால்பின்புபிரணவமந்திரஞ்சித்திக்கும் சித்திக்கில் சகல பாபட்செயம் சட்கள சித்தி அஷ்ட வைஸ்வரியமும் எண்ணினதெல்லாம் கைகொடுக்குமென்றறிந்து உள்ளமந்திரங்களில் ஆத்மப்பிரசாதமாகிறதே சர்வ சீவராசிகளிலும் இரேசகபூரகமாகிறபிராணரூப மாயாவிருத்திகளுடனே கூடிச்சஞ்சரித்து அம்ச சோக யுக்தமாதிவமந்திரமென்றும் அம்சம் மந்திரமென்றும் அசபாகாயத்திரியென்றும் பெரான பிராணயாம பூர்வகமாகப் பின்பு இந்தமந்திரத்திற்கு அம்சதிருஷ்டி அவ்வியத்தகாயத்திரி சந்தசு பரம் அம்ஸஹெதேவதை அம்பீ ஜம்சுவாகாசத்தி சோகம் கீலகம் பரம் அம்ஸபிரஸாதாத்மமானசெபமே வினியோகமென்றுஸ்மரித்து பின்பு கரநியாசம் அங்கநியாசம் அங்கிநியாசஞ்செய்து பின்பு ஒருநாளைக்கு உபதூசூ ஜெபம் ஏழாதாரதேவதைகளுக்குமற்பித்தால் மூலபஞ்சாக்ஷரம் முக்கியமாகும் இம்மந்திஞ்செபிக்கும்போது குருமுகமாய்-ர-முதற் கோடிபரியந்தமிலக்கமும் ஜெபமாலிகையிலக்ஷணமும் ஜெபமாலிகைமணியி

சேஷமு மங்குஷ்டமாதியங்குலியிலைகூஷணமும்உச்சாடணமுதற்கன்மவியவ காரங்கள் திதி வாரநக்ஷத்திரகரணயோகங்களிற்ஜபபலன்கள்ஸ்தானவிசே ஷமானவிடங்கள் தீர்த்தவிசேஷங்கள் இதுமுதலாகவனேகமுண்டுஇந்தபிர மாணங்களில் விவேகசிந்தாமணி சித்தாந்தபடலத்தில் விதிப்பிரகாரமிருந்து புனற்சரணைசெய்தால் இகலோகபரலோகங்களில் சித்தியாகாதகாரியங்களு ஞ்சித்தித்து பஞ்ச கிருத்தியமுஞ்செய்யலாமென்றறிக. இனிஜெபமாலைக்கு அங்குஷ்டமோக்ஷம் தற்சனியிற்சத்துருஹானி மத்தியாங்குலியிலர்த்தசித்தி அநுமிகை சாந்தி கனிஷ்டம் இரக்ஷணை மத்தியாங்குஷ்டயோகத்திற் ஜெ பமாலைபிடித்து ஜெபிக்கிறதுகனிஷ்டசிவமாம். தற்சனியில்மாலைமத்திமம் அநுமிகாங்குஷ்டமாலிகை உத்தமம் இனிமத்தியாங்குஷ்டத்திற்பாகியஜெப ஞ்செய்வது தற்சனியில்பாம்பஜெபஞ்செய்வது அநுமிகையில்மாநஸஜெபஞ் செய்வது பிறருக்குகேளாமற்ஜெபிக்கிறது வாசகஜெபம் தனக்குகேட்க வுத கேளாமற்செய்கின்றஜெபம் உபாம்ஸஜெபம்மநஸ்தியானமாகமஜ்ஞை ஞ்சலமில்லாமல்செய்கின்றஜெபம் மானஸ்மவாசகஜெபம் சூத்திரமுதலான சாரியங்களுக்கு உபாம்ஸ ஜெபம் சகல சித்திகளுக்கும் மானஸ ஜெபமாம் மோட்ச மடைதற்கு வேண்டிய கிருஷையாதென்றால்,

வாசகவாச்சியசம்பந்தமறிந்து மேல் ஷடாங்கங்களே பிரதமாவ ரணம் அனந்தாதி அஷ்டவித்யேஸ்வரர்களே யிரண்டாமாவரணம் உமை சண்டேஸ்வரர் நந்திகேஸ்வரர் மாகாளி பிருங்கிரிஷி கணபதி இரிஷப ஷண் முகனென்கிற அஷ்டகணேஸ்வரரேமூன்றுமாவரணம்இந்திராதிலோகபாலகர் பிர்ம்மா விஷ்ணு நான்காமாவரணம் வச்சிராதிபத்மசக்கரங்களே யைந்தா மாவரணம் பிரகாமாதிசத்தமாதுருக்களே ஆறுமாவரணம் அஷ்டவசுக்களே ஏழாமாவரணம் ஏகாதசருத்திரர் எட்டாமாவரணம் ஆதித்தாதிரகங்களெ ன்பதாமாவரணம் இப்படி ஆவரணமுள்ளதான பஞ்சாக்ஷரமந்திராதிதேவ தைக ளாவரணசிதமாகவாவது தியானித்துச் செபிக்கவேண்டும். இப்பால் அகற்பசெபம் சகற்பசெபமென்றிரண்டுவிதம்தியானரகிதமாகச்செய்கிறது அகற்பம் தியானயுத்தமாகச் செய்கிறது சகற்பம் இப்படிச் செபத்துக் கு விதித்தகற்பங்கள் வாதூலசுத்தாஞ்ஞை விவேகசிந்தாமணிமுதலான சாத்தி ரப்பிரமாணமாய் செபஞ்செய்துக் கொள்ளவேண்டும் சுத்தசைவனுக்குச்சி வாற்சீன அவசியமானபடியினல் மாத்துவேளில் வாத்ததண்ணீர் சாதோ ப்சாகாதிகளுக்கெல்லாம் பலித்தாற்போலவும், அன்னம் புசித்தாற் சகலே ந்திரியங்களுக்குந் திர்ப்தியாறற்போலுஞ் சிவபூசையால் சகலதேவதாதி ர்ப்தியாகையாற் சிவபூசையேசெய்துமோட்சமடையவேண்டு மாகையாற் சிவபூசாவிதிக்கிறமஞ் சொல்வது முன்சொன்ன தெல்லாம் நியாசங்களும் விபூதிருத்திராட்சங்களும் பஞ்சாட்சரமு மிதுமுதலான மந்திரங்களுஞ்சொ ல்லியிப்பாற் சிவபூசாவிதியைச் சொல்லுகின்றது.

சு-வது—அத்தியாயம்.

சிவபூஜாவிதி.

சந்திரசூரியமண்டலம்அக்கினிகங்கைஸ்தண்டிலங்கலசஸ்தாப்பியம்பொ
த்தகஸ்தாபியஞ் சாளக்கிராமமிருக்கிறவிடம் இதுகள்முதலான பூசாஸ்தா
னத்தில் இலிங்காதிஸ்தானமேவிசேஷமென்றுசொல்லுகையாற்சிவபூசைக்
குஇலிங்கமயங்கள் சொல்வது. சிலாமயலிங்கம்பிர்ம்மா, இந்திரநீலலிங்கம்வி
ஷ்ணு,இரத்தினலிங்க மிந்திரன், சுவர்ணலிங்கங் குபேரன், இரஜிதலிங்கம்
விஸ்வதேவன்,பித்தளலிங்கம் வாயு,வெண்கலலிங்கம்வசுக்கள், இரண்மயலி
ங்கம் அஸ்வநிதேவதைகள்,ஸ்படிகலிங்கம் வருணன், அன்னலிங்கம்அக்கினி,
தாம்பிரலிங்கஞ் சூரியன், முத்துலிங்கஞ்சந்திரன், வெகுவர்ணலிங்கம்நகூ
த்திரம்,மணிலிங்கம் புதன், கற்பொன்மயலிங்கஞ் சுக்கிரன்-வித்துருமலிங்
கஞ் செவ்வாய்,மாணிக்கலிங்கம் பிரகஸ்பதி, தாம்பரலிங்கஞ்சனி, குசமயலி
ங்கஞ் சத்தரிஷிகள், நீலலிங்கந்துருவன்,ஸ்தாலவநாமலிங்கம்மார்க்கண்டன்
தற்பரமயலிங்கம்வசிஷ்டன், சதாசிவநாமலிங்கஞ்சனக்குமாராதியோகிகள்,
பிரவாளமயலிங்கஞ்சேஷாதிகள், அயோமயலிங்கம் ராட்சதர்,திரிபுலிங்கம்
பசாசுகள்,திரிலோகமயலிங்கம் குய்யகர், வச்சிரமயலிங்கம் மாத்தியகர்,பிர
ஸ்தரமயலிங்கம்மன்மதன், நாலுகாரமயலிங்கம் இலட்சுமி சரஸ்வதி சசிதேவி
மத்துறுகாதி சத்திதேவதைகளுமற்றுமுள்ள தேவரிஷி முனி ராட்சதர்க
ளும் இவர்கள் முதலான பேர்களெல்லாம் வேறுவேறு லிங்கங்களைப்பூ
சைபண்ணித் தங்கள்தங்கள் பதங்கள் பெற்றுச்சுகத்திலிருப்பார் இனிக்
கிறுமிகிடாரமிருகபசுபட்சிமுதலான தேவராசிகள் சுயம்பு லிங்கம்வாணலிங்க
ஞ்சலலிங்கஞ்சங்கிரணலிங்கம்பிராணலிங்கமென்று ஐந்துவிதமாம்.இதுகளை
த்தங்கள்தங்கள் சத்திமாத்திரம்பூசைசெய்து கதியடைவார்கள்.

இனிமனுஷ்யாதிகள் முதலானபேர் பூசைசெய்யும்போது தெசகாலஸ்
தானாதிகளாலே தாந்திரீக வைதீக மென்றிரண்டு விதமாம். இதில் அந்த
சௌசம் பாகியசௌசமென்றிருவிதமாம். இது சோடசதான பலகிரியை
களாலேஆத்மசுத்திஸ்தானசுத்தி திரவியசுத்திலிங்கசுத்திமந்திரசுத்தியாகும்.
இதிற்கால்லைகழுவிவாய்கொப்பளிக்கிறதுசௌசாசமனம்ஸ்தான பஸ்மருத்
திராக்ஷாதி கவசங்கள்பூண்டு ரஸனைகள்செய்வதே ஆத்மசுத்தி. இனி
சம்மாரஸ்நானுலேபனம்மொக்குவர்ணபேதம்கந்த புஷ்பதூபதீபாதிநிர்மலோ
பகரணத்தாலே சவுக்கமத்தியமலங்கரிக்கிறது தானசுத்தி இனி ஜல புஷ்
பாக்ஷதை திரவியங்களைப் பார்த்து நிரீக்ஷணத்தாலே பஸ்மமந் திரசலத்தா
ல்புரோக்ஷிக்கிறதேதிரவியசுத்தி இனி அணுமிகைமத்திமைநடுவே புதிதா
னபுட்பமெடுத்து அங்குஷ்டதற்சனிகளில்முதல்நிர்மாலியந்தள்ளிமுந்தினதற்
சனிவிரற்பூவாலே லிங்கபீடத்தில்ஜலத்தைத்ப்பிரட்சாளனம்செய்கிறது வி
லிங்கசுத்தியாம் இனிச்சகலபூசாநிமித்தியம் ஓம்நமசிவாயசுவாவென்றுச்சரி

கிறது மந்திரசுத்தி இப்படிப்பஞ்சசுத்திகளும் செய்தபின்பு அஸ்திரமுத்தி ரை சக்காரமுத்திரை மகாமுத்திரை சோதனமுத்திரை ஸம்ஹாரமுத்திரை பஞ்சமுகிமுத்திரை சுரபிமுத்திரை திரவியமுத்திரை முதளிகாமுத்திரை பத்மமுத்திரை சகர்னமுத்திரை சத்திமுத்திரை வீசமுத்திரை சாந்திமுத்திரைஆவாகனமுத்திரை மகுரம்மியமுத்திரை தத்துவமுதத்திரை இலிங்கமுத்திரை காயத்திரிமுத்திரை காலகண்டமுத்திரை சூலமுத்திரை நமஸ்க்காரமுத்திரை யோனிமுத்திரை விசசோடனமுத்திரை ஆச்சாதான முத்திரை இதுமுதலான முத்திரைவிதங்களெல்லாமறிந்து அந்தந்தப்பிர யோகக்கிரியைகள் வருகிறவிடத்தில் முத்திரைகொடுப்பது. கூர்ம அனந்த ஸ்திரா பத்ம விமல இதுமுதலான யோகாதிபீடங்களில் முக்கியமான சிம்மாசனத்தின்மேல் பஞ்சவர்ணங்களிறுல் சிகாகாரமாகவெழுதி தர்ம ஞான வயிராக்கிய ஐஸ்வரியமென்கிற நாலுகிரமத்தில் அக்கினியாதி திக்குகளிற் பாதசதுஷ்டயமாகப் பாவித்துஎழுதி இனி இராஜவர்த்தப்பிறபை யரூபமான அதர்மம் அஞ்ஞானம் அனைஸ்வரியம் அவயிராக்கியமான நாலு கிரமத்திற்பூர்வாதி திக்கிற் பாதசதுர்விதமு மெழுதியிதின்மே லணுமாதிக லோக் கிழக்குமுதல் எட்டுதிக்கிலு மெட்டுபத்மமாகவும் இனிவாமாதிசர் வபூதமனுந்தமான உருத்திரரோ கிழக்குமுத லெட்டுத்திக்கிலு மெட்டுகே சரங்களாகவும் வயிராக்கியமே மத்தியகர்னிகையாகவும் இனி வாமைமு தல் மனோன்மணிகடையாக நவசத்திகளே கிழக்குமுதலெட்டு நடுவுமான கர்னிகையிலிருக்கிற பீசங்களாகவும் இதின்மேல் இரவி சசி சிகி மண்டல மாகவும் இதின்மேல் சத்துவ ரசோ தமோ குணங்க ளாகவும் இதின்மேற் சீவாத்மா அந்தராத்மா பரமாத்மா வாகவும் இதின்மே லாத்மதத்துவமாக வும் வித்தியாதத்துவஞ் சிவதத்துவமாகவும் இதுமுதலான தெல்லாங்கற் பனையாகக் கற்பித்து இப்படிக் கற்பித்தவிம்மாசனத்தின்மேல் சிவலிங் கத்தை ஆவாகனம் ஸ்தாபனஞ் சன்னிதானம் சந்நிரோதனஞ் சமமுக்கி யகரணமாகிற கிரியையைச்செய்து பின்பு பூசா ஆரம்ப முதல்பூசைமுடி கிறபரியந்தமும் பிறகூளான பாத்திரத்திற் பூரித்திருக்கிற சலத்தைத் திரும்பத்திரும்பக் கைகழுவிச் சகலகிரியைகளு மீசுராற்பணஞ்செய்து அ தின்பிறகு நதி தடாககூபங்களிற் சுவாது மிசிரம் லவண மிதுக ளில்லாம ல்நல்லசுவாது சலங்களிலே கலக்கிற திரவியங்கள் வெள்ளாக்கடுகு நல்லபு ட்பங்கள் அறுகு செங்கழுநீர்க் கோஷம் வில்லாமிச்சைவேர் கற்பூரம்இ ந்த ஆறுபாத்தியத் திரவியங்களுங் கலந்து பின்பு குசாக்கிறத்திலம் வெ ள்ளாக்கடுகுசீவேநெல்லு கூதிர இந்த ஆறையும் அற்கிய ஜலங்களிலே கலந்து இனிப்பல கச்சூரங்கோஷ்டங்குங்குமம் ஏலங்கர்ப்பூரம்இந்தஆசமனத்திரவி யங்களே யாசமன சலத்திற்கலந்து இப்படிப்பாத்தியம் பாதாற்சனைக்கும் அற்கியங் கையுடம்புகளுக்கும் ஆசமனங் கொப்பளிக்கவும் பாவித்துக்கொ டுத்துப் பின்பு பஞ்சகவியத்தாலபிஷேகஞ்செய்து பின்புபஞ்சாமிர்தத்தா ற்செய்துபின்புகோதும்மைபயற்றஞ்சூரணம் கந்தமுதலான லேபனத்திர வியங்களால் கலங்கிட்டுப்பின்பு இளநீரிலபிஷேகஞ்செய்து கந்தோதகபுட்

போதகமிரத்திரேதகஞ்சுவர்ரேதகம் மந்திரோதகமிதுமுதலானமகாஸ்தா ரேதகங்களுமபிஷேகஞ் செய்து பின்பு விதிநயசுப்பிரமாகவிதிவத்தாதி கற்பபிரமாணஞ்செய்த விபூதிதரித்துப் பின்பு பட்டுதேவவங்குமுதலானசு ப்பிரசித்திராதிசுகவஸ்துகளுந்தரித்துச் சுவர்ணாஜிதப்பட்டுசூத்திரஞ்ஞோ பவீதமுந் தரித்து கிரீடமுதலான ஆபரணங்களுந்தரித்துப் பின்புஇந்தச்சிவ லிங்கத்தைதச் சதாசிவனுகப் பாவித்து அஞ்சுமுகத்திலுங் கலைகள்நிறுத்தும் படி சித்தியிருத்தி துவிதி யிந்திரை மேதா காந்தி ஸ்வதி திருதி யிந்தக்கலை எட்டுக்குந்தானம் உள்ளங்கால்-உ-உள்ளங்கை-உ-கிராணம்-க-உச்சி-க-தோ ள்-உ-இந்த எட்டுதானங்களிலுநிற்பதுசத்தியோசாதனகலை யென்றறிக.

இனிஇரசா-சூடாக்கா-இரதி-பாலி-காம்-வியாபினி-கிரியை-இக்கா-திக்கா-காத்திரி-பிரவி-மோகினி-எமம்-அபா -ஆகக்கலை-ஙா-இதின்தானம் பாயுரு-க இலிங்கம்-க-குறங்கு-உ-முழந்தாள்-உ-கணைக்கால்-உ- பாதம்-உ - கழுதை-க-கழித்தடபக்கம்-உ - ஆக ஙா - இதுவாமகலை யென்றறிக. இனிமொஹங்கை யைநிட்டை தகும்பை மிருத்து உபசிங்தை திருட்டா ஆகக்கலை அ-இதின்தா னம் இருதயம்-க-கனம்-க-தோள் -உ-நாபி-க-மழி-க-மார்பு-க- இந்தக்கலைஎட் டும் அகோரகலை யென்றறிக. இனிஇவிருத்தி பிரதிஷ்டை வித்தை சாந்திஇ ந்த-சு-மீசானமுகந்தவிர காலுமுகத்திலுநிற்கும் இதுதற்புருஷகலை யென் றுபெயர் இனி றீச்சினி அங்கதை அரிஷ்டை சுவாவினி மரிசி ஆக- ரு-இது- ஐந்துமுகத்திலும்வியாப்தமாயிருக்கும்இதுயீசானகலையென்றுபெயர் ஆக ஈஅ-கலையும்-ரு-முகத்திலுநிற்குமென்றறிக. இந்த முகம்-ரு-லும்-ரு-சத்திநிற் கும்இந்த-ரு-சத்தியும்-ரு-கலையைப் பிறேரிக்கும் இந்த-ரு-ம்பிர்ம்மாதி-ரு-யும் பிறேரிக்கும் இந்த-ரு-ம் -ரு- தொழிலைச்செய்யும் இந்தலிங்கநிலை ஓம்கிரியா சத்திகலைநிவர்த்தி பிர்ம்மாசிருஷ்டி யிதுஅடிப்பீடம் இனி அகாரம் ஞானசத் தி கலைபிரதிஷ்டைமாலத்தியிது ஈடுக்கண்டம் இனி உகாரம் இச்சாசத்திகலை வித்தை உருத்திரசங்காரம் இதுமேற்பீடம்இனிமகாரந்திரோதை சாந்திகலைம ஹேஸ்வரன்மறைப்புஇது உள்வட்டம் இனிவிந்துபராசத்திசதாசிவன்சாந்தி யாதீதகலை அனுக்கிரகம் இது குழிநிலை இனி நாதம் சாந்தியா தீதோத்தரம் அருள்சத்தி பரமசிவன் இப்படி நிலையான இலிங்க சதாசிவன் பஞ்சகிருத்தி யத்துக்கும் ஆத்மாமுதலாம் இப்படி உட்பிரம இலிங்கநிலை யறிந்து கலைகள் சொரூபமாய்த் தியானஞ்செய்து சிவபூசை செய்யக்கடவாயென்றறிக.

இனிஇப்படிக் கலாசொரூபமான இலிங்கத்துக்கு முன்சொன்னஆப ரணசகிதமாயிருக்கிற சுவாமிக்கு சந்தனம் அகரு கஸ்தூரி கற்பூரம் பச்சிலைகு ங்குமம் விலாமிச்சைவேர் கோஷ்ட மென்கிற அஷ்டகந்தங்களுந்தரித்துசீ வகடுகு வெள்ளைக்கடுகு எள்ளு அரிசி முத்து முதலானஅட்சதைகளுந் தரித் துஇருஷ்ணவர்ணக் கிரமமான நந்தியாவர்த்தம் செந்தாமணைநீலோற்பலமிது முதலான சதுஷ்வசோதாமத புட்பங்களும் அறுகு துளசிவில்வமுதலானபத் திரசாலங்களுந் தரித்து கரிய அகரு வெள்ளையகரு குக்கில ஸ்ரீ கெந்தம் அரக்

கு வில்வப்பழம் நெய் தேன் சச்சைரசங்கற்பூரம்இந்தப் பத்துவிதமுதலான தூபங்களுஞ் சமர்ப்பித்து தயிலங்கிர்தங் கற்பூரமுதலான தீபங்களுஞ் சமர்ப்பித்துப் பின்பு அரித்திரான்னம் பரமான்னம் முற்கான்னங் கிர்தான்னந் தத்தியான்னங் குடான்னமுதலியஆறுவிதநைவேத்தியங்களும்நிவேதித்துப் பின்பு பூகபரனகூரணங் கற்பூராதி தாம்பூலத் திரவியங்களும் நிவேதித்து இப்படித் திரிவிதோபசாரம் பஞ்சோபசாரம் அஷ்டோபசாரந் தசோபசாரம் சோடசோபசாரம் இந்தவிதங்களிற் செய்வது இனிஈஉ-உபசாரம்வது ஆவாஹனம் ஆசனம் பாத்தியம் அற்கியம் ஆசமனீயம் ஸ்நானம் வஸ்திரம் யெஞ்ஞசூத்திரம் பூஷணங் கந்தம் அக்ஷதை புட்பம் தூபந் தீபம் நைவேத்தியம் அமுதவாசனம் நிராசனந் தர்ப்பணம் பலார்ப்பணந் தாம்பூலம்பிரதெட்சணம்நமஸ்காரந் தோத்திரம் புராணபடனஞ் சத்திரஞ் சாய்மரம் விசிறி மஞ்சஞ் சங்கீதம் நிருத்தம் வாச்சியம் ஆத்மாரோபணம்என்கிற -ஈஉ-உபசாரமும்தி ரவசத்தாகச் செய்வது இதுகளில்லா விட்டாற்சில புட்பங்களிஞலேசிரத்தர் பத்தியாக அர்ச்சித்தாலு முன்சொன்ன பூசைகளுக்குச்சரியென்றறிக.

இந்தப்பத்தியங்கங்கொண்ட பூசைசிவவிஷயமானசிரவணத்திற்றன் ஞசனபாதசேவை பூசைவந்தனை தாரியம் சக்தியம் ஆத்மாபரணம் என்கிற நவவிதமாயிருக்கு மென்றறிந்து பீடத்திற் சிவலிங்கத்துக்கு பாயாரங்கபூசையைவிஸ்தரித்துஇகலோக பரலோகபலத்தை யிச்சிக்கிறவனுஞ் சகலசீவனுக்குமிதஞ்செய்கிறவனுமுன்சொன்னபடியே பூசைபண்ணுவானென்றறிக. இனி நிஷ்காமியாகிற மோட்சவதிகாரிக்கு அந்தரங்கத்திலே முக்கியமானஞான பூசைக்கு உபசாரங்க ளெப்படியெனில் முதலந்தரங்கத்திலிருதயகமலத்தில் சிவதர்மமே சிழங்கு சுஞ்ஞானமோளம் அஷ்டமகணதஸ்வரியமே அஷ்டதளம் ருத்திரே சராதியானவர் கேசரம் வயிராக்கியமேகர்ணிகைபின்பு சந்திரப் பிரபாவ மயமாக இருதய கமலத்தில் ரவி-சசி-சிகி-மண்டலத்திரய மத்தியத்தில்சத்தென்கிறதிவ்யமூர்த்திசித்தாகிறதே தேககாந்தி ஆனந்தமாகிறதேயழகு தத்துவ உபகற்பிதமான ஆவரணங்களாலேயலங்கிர்தமாக்கி ஸ்படிககடத்துளே யிருக்கிற தீபப்பிரகாசம் போலப் பிரகாசிக்கிற சிவனேபாவித்துப் பிறகு சர்வாதாரமான ஈஸ்வரனே கர்த்தனென்கிற புத்தியேயாசனம் பரமாத்மன் பரிபூரணனென்கிறதிடமே ஆவாகனம் சகமெல்லாஞ் சிவன் ஸ்ரீ பாதமென்கிற தெளிவே பாத்தியஞ்சுகாமபூதிஜம்புவென்கிறஅனுசந்தானமே யற்கியம் பரமபவித்திர சொரூபம்நம்மவனென்கிற அறிவே ஆசமனம் நித்தியநின்மல னென்கிறதே ஸ்நானஞ் சகமெல்லா மதிக்கிரமித்திருக்கிறசுத்தவித்தையே வஸ்திரம் திரிகுணதீதமான ஞானமேனஞ்ஞசூத்திரம்சைதன்னியமே சகதலங்காரம் பிறதீபமே யாபரணஞ்சுத்தசிற்சத்தியே அனுலேபனங் காருண்யமே யட்சதை பிரணவார்த்தமே சத்திய வசனமாகிய புட்பம் விஷய வாசனையமே தூபஞ் சகத்துற்வத்தியெல்லாம்பாழாய்ப்பரஞ் சோதிசொரூபமாகிறதே தீபம் சகமெல்லாங் கபளீகரித்துக் கொண்டிருக்கிற வாத்மாவே நித்திய நிர்த்தனென்கிற சமவித்தை நை

வேத்தியந் திரிகுணங்களையு முட்கொண் டிருக்கிறதே தாம்பூலஞ் சோகபா வமே பிரதெட்சணஞ் சமஸ்தசத்துங்களையுமீறிநின்ற நிலையே நமஸ்காரம் சீவபரவயிக்யமே விசற்சனம் இந்த உபசாரங்களாலே யந்தரங்க பூசை ரசித் துப் பின்பு இருதயகமல கற்னிகாமத்தியத்திற் குருவிலே இப்படி யந் தரங்கபூசை செய்வானென்றறிக. இப்படி ஆத்மார்த்தங்களைபூசைசெய்தா னந்தித்து ஆடிப்பாடித் தட்டமிட்டு ஓமங்களையுஞ் செய்வானென்றறிக.

இனிக்கிரமங்கள்நதிதீராதிசேஷத்திரங்களிற் றேவதானவாதிகள்பிரதிஷ் டைசெய்தலிங்கங்களான பராத்த பூசை செய்யும்போது விடாமற்சரிக்கி றதுவிருஷபபாஸ்கர வீரபத்திர மாத்துருகைகள் ஸ்கந்த சேஷத்திரபால பிர்ம விஷ்ணு ருத்திராதி தேவதைகளை யவரவர் தானங்களிலேபோய் பூசைசெய் வானென்றறிக. ஈசுவரன் கோயிலில்லாமல் வேறேகோயி விருக்கிற விஷ் ணுவாதி தேவதைகளைப் பூசைசெய்யக் கடவனல்லனென்றறிக. இனித்தா ன்பூசைசெய்கிற இலிங்கஞ்சோரஸ்திரீ கலகங்களாலேபோய்வராமற்போஞ் ல் அகோரமந்திரம் லட்சஞ் செபித்துப் பின்பு ஆசாரியனுலே விதிப்பிரகார மாக எழுந்தருளப் பண்ணிக்கொள்ளவும் விரதநியமமாதி லோபங்கள் வந்த விடத்தில் அஷ்டோத்ர சதகாயத்திரி செபம்பண்ணிச் சுத்தஞ்செய்கிறது இனிச் சகலசற்கிரிகைகளும் நின்மலாந்தக்கரணமாகச்செய்கிறவன் சுத்தசைவனென் றறிக. இனிப்பரம பவித்திரமான சிவபாதோதகஞ் சிவப்பிரசாதஞ் சிவநி ர்மாலியம் இதுகள் கொள்ளவும் விபூதிமாலைகள் தரிக்கவும் இதுகள் சற்பி ராமணருக்கேயல்லாமல் மற்றபேருக்கெல்லாம் யோக்கியமல்லவென்றறிக.

நு-வது-அத்தியாயம்.

அத்துவாசங்கற்பவாதி.

அத்துவாவழிவாகச் சிவனைப் பாவிப்பது மந்திரமாவது தேசிகன் பெயர் பதமாவது அவன்பாதம் வர்ணமாவது அவனிறம் புவனமாவது அவன்பதி தத்துவமாவது அவனுடம்பு கலையாவது உணர்விறந்திருத்தல் இ ப்படிக்குருவைத்தியானிக்கிறது சிவன்வழிவாமென்றறிக. இதல்லாமலும் நு-கலையும்-நு-முடியாம். சாந்திமுதல் நாலும் நாலுமுகமாம். வித்தைமுத ல் மூன்றும் உள்முதலாம். பிரதிஷ்டைமுதல்இரண்டும் உந்திமுதலாம் நிவ ர்த்திபாதமுதலாம் அக்கரங்க ளிந்திரியங்களாம் புவனங்கள் உரோமங்களா ம் மந்திரங்கள் நேயத்தோர் தாதுக்களாம் பதங்கள்தசைமுதலாம் தத்துவங் கள் சுக்கில நினைமூளை அஸ்திகளாம் சத்திகள் - நு - ம் - கண்ணும் - இப்ப டிப் பரப்பிரம மாகிற சிவன்வழி வென்றறிக. ஆகையாவிதில் தனக்குப்பிரி யமானதைப் பாவித்துப் பூசிப்பானென்றறிக.

சூ-வது—அத்தியாயம்.

தர்க்கவாதிசங்கற்பம்.

பதம்-பதச்சேதம்-அன்னுவயம்-கர்த்தா-கன்மக்கிரியை-சமாசவிக்கிரக ம்-சத்துமதாது-புல்லிங்க-ஸ்திரலிங்கம்-விபத்திஞானம்-இதுமுத லாகக்காவி ய விற்பத்திகளுமறிந்து.-பிண்டிதார்த்ததாற்ப ரியமறிந்து-அன்னிய கிரந்த ங்களுக் கெல்லாம் அர்த்த விற்பத்தி யறிந்து அதின்பிறகு கொளவு-மதிவி யாகரண சாஸ்திரமுமறிந்து சத்தசுத்திகள் முதலான விதங்களெல்லா மறிந் து அதின் பின்பு பரிபாஷைத் படித்துச்-சென்னி பட்டியம்-வரதாரகம்-ம ணிகாண்டத்திரைய முதலான வியாக்கியானங் களுமறிந்து தர்க்க நியாயசா த்திரம் ஆரோக அவரோகமாயறிந்து சோடச பதார்த்த நிர்ணயங் களறிந்து இதற்குத் திருஷ்டாந்த தாவ்ஷ்டாந்த உபமான உபமேயபிரமாண பிரமே யவாதசெற்ப விதண்டை யெத்துவாபாச முதலான தர்க்கயுத்திக ளெல்லா மறிந்து ஒருத்தரேடுத்தரஞ்செய்யும்போது ஆமென்றதை யல்லவென் றும், அல்லவென்றதையா மென்றும், பிரத்தியகூப் பிரமாண அனு மானப் பிரமாண உபமானப் பிரமாண ஆகமப் பிரமாண-அருத்தாபத்திப்பிர மாண அபாவப்பிரமாண சம்பவப் பிரமாண ஐதிகப்பிரமாணம் - அஷ்டப்பி ரமாணமும் நவப்பிரமாணமும் அறிந்து இதுகளுடனே தர்க்கஞ்செய்யும்போ து தர்க்கயுத்தியால் அவன் சொற்களாலே யவன் சொல்லை மறுத்துப்பலநூ லிலுமெடுத்துஉதாகரித்துத்தன்சொல்லைநிலைநிறுத்துகிறது தர்க்கவாதமென் றறிக.

உ. தன்பொருணிற்கப் பிறர்சொலுக்கிசைத்தரூன்றுணி வானி
யென்பதுதான், முன்சொனற்பொருளை யொழுத் தொருபொ
ருளைமொழிந்திட றுணிவினந்தரமாம், தன்சொனற்பொருளை
யழிவுறக்கொடுத்தரூன்றுணிவிரோதமாமன்றித், தன்சொலு
க்கழிவு வந்திடத்ததனை விடுதல் சன்னியாசமாமதுவே.

ஊ. எதிரிதன் விளைவுக் குத்தரமறியா விழுக்கத்தப் பிரதியை யெ
ன்பதுதான், முதன்மொழிந்ததனைப் பினனையு முரைத்தன்
முறைபிறழ் புனருத்தியாகு, மெதிரிதன்மூல்வித் தனமறியா
மை யிசைப்பருநியோககுற்மந்தா,னெதிரிநல்லுரையும் புரை
யேவிசைத்த னிரணுயோகக்குறையாமே.

எ.. பிறந்த வன்சாமோ வென்றிடச்சாமென்றுரைத்திடல் பெ
ருந்துணிவுடைமை, பிறந்தவர் முத்தியினையவரோ வென்றுரை
ரன்டுமுன்டென வழுத்துரைத்தல், சிறந்ததே தென்றுல்யா
வியிலென்ன லெதிரவிச் செயன்முயற் கோட்டி, னிறங்களே
தென்றுலுரைத்திடாதொழிக னிலவியமறைதணிச்சயமே

சு. தர்க்கவாதத்தா லெல்லாஞ் சதிர்பெறத் தெரிவதுந்தான்
மர்க்கவாதத்தின் மிக்கோர் தலைவரென்றிடப் பட்டோரும்
துக்ககுற்றமங்கடீர்ந்த தூய்மெறிதர்க்கவாத
மிக்கநன்மேன்மைவாதில்வென்மவம்கன்றியுன்டோ.

எ-வது—அத்தியாயம்.

தானசங்கற்பம்.

நி. கருமிகட்கீகைநிற்குங் கலந்தொரு பிறப்புக்கற்ற
பெரியராந்தவத்தோர்க் கீகை பிறப்பொருநூறிநிற்கு
மரியமந்திரத்தார்க்கீகை யாயிரம்பிறப்புநிற்கு
முரியயோகிக்குஞானிக் கூறிபேரூழிநிற்கும்.

கூ. புந்தியுடைவிலங்குகளின் மனிதர்க்கீதல்புகலுவர்கள் பலதோ
டியாகப்போற்றி, யந்தணருக்கீதலதுதன்னிற்கோடியறிவுடை
யோர்க் கீதலதுதன்னிற்கோடி, சிந்தைதெளிதுறவினராய்நின்
ரூர்க்கீதல் சிறந்தகுருவுக்கீதல்செப்பவொன்ணை, வெந்தை
யபனின்றிறைஞ்சியாதரித்தா லிகலோகபரலோகமெய்துமவ
ந்தே.

எ. பரிந்தொருகோடி மறையோர்க்குப்பூமிபொன் பன்புடனே
வருந்துமிடிகெட வைப்பதுதன்னின் மறைமுடிவு
தெரிந்தமெய்ஞ்ஞானிக் கொருபிடிபிச்சை சிறப்புடனே
பொருந்தவமைப்பதற் கொவ்வாதெனமறை போற்றிடுமே.

அ. கடிப்பிடிகன்மூரசங் காதத்தார்கேட்ப
ரிடித்துமுழக்கியதோராசனையார் கேட்ப
ரடுக்கிய மூவுலகுங்கேட்குமே சான்ரூர்கைக்
கொடுத்தாரெனப்படுஞ்சொல்.

கூ. அகாமாயினுமந்தணர்க் கீயினுஞ்
சுகாமாயிரஞ்செய்துமுடிக்கினும்
பகாின்ஞானி பகலான்கொடுப்பது
நிகரிலையென்பது நிச்சயந்தானே.

ய. என்பிலதனை வெயிற்போலக்காயுமே
யன்பிலதனையறம்.

யக. உள்ளன்பிலாவேடொழுதலுன்கவன்ற
வெள்ளெலும்பைநாய்கவர்ந்தற்று.

இப்படிவேதாகமபுராணங்களில்வெகுவாகச்சொல்லுமென்றறிக, அஃதெ ப்படிசகலநிலும்பாத்திரமாகிறதுசிவயோகி, அவனும் மனுஷனென்னில் அ தற்குத்திருஷ்டம். ஒருகடுகெத்தனையிரும்பைக் கடலிலே போட்டால் அதுவமி ழ்ந்திபோம், அப்படியமிழ்ந்திபோகிற இரும்பைக்கப்பலாய்ச் செய்துஅதில் வேண்டின இரும்புகளைப்போட்டாலுங் கரையேற்றும், அதுபோலச்சிவ யோகியாகிறவன் ஓடஞ்செய்த இரும்புபோலாம் அவனைப்பூசை செய்துதா னங்கொடுக்கிறபேர் ஓடத்திலேறின இரும்புபோலுமென்றறிக, இரும்பாற் செய்தகப்பல் இரும்பையெடுத்துப்போய் நினைத்தவிடத்திற்சேர்த்தாற்போ ல்மனுஷனைகிற சிவயோகியு மனுஷனைக்கொண்டுபோய்த் தான் வேண்டின மோக்ஷத்தில் விடுவானென்றறிக.

இனித்தானமாவது, அன்னதான முதல்சோடசதானமும், ஈசுஉ-அறங் களும். இஃதல்லாம லநேகவிததானங்களும், வாலப்பிரமசாரி. வானப்பிரஸ்த ன், சன்னியாசி, இவர்கள்முதலான துறவிகளுக்குந் தேவர்கள் - பிதுர்க்கள் தாய்-தகப்பன்-பிள்ளைகள்-பெண்சாதி-அந்தகர்-பந்துக்கள்-கிழவர் அதிதிகள் யாசகர்முதலானபோர்களைபும் சம்சாரியிரக்ஷிக்கவேண்டும் பரோபகராந்தய வுதாக்ஷணியம்தன்மிக்குவேண்டும். அஃதெப்படிமுன்னுள்காரிபாரி-கர்ணன் குமுணன்-முதலான.உஎக - வள்ளலும் - ஊச - மனுக்களும் - சு - சக்கரவர்த் திகள் முதலானபோர்களும் கேட்டபேருக்கெல்லாந் தானங் கொடுத்தும் எந்தெந்தமதத்திலனுசரிக்கிறபேரந்தந்தமதத்திலெயர்த்தப்பிராணபி மான ங்களைக்கொடுத்துஞ்சிவன், விஷ்ணு, பிரமாமுதல் தேவர்கள், ரிஷிகள் முத லியோரிவர்கள் அன்புசோதிக்க வேதமாறிவந்து கேட்டவிடத்திற் கொடா துகளைக்கொடுத்தும், இப்படிதானங்களைச்செய்து இகலோக பரலோகங் களைப்பெறுகையால் தானம்பண்ணுகிறதே பிரமமென்றறிக.

ஆ-வது—அத்தியாயம்.

விரதசங்கற்பம்.

சாந்திராயணங் கிறசிராயணம் அஷ்டமி ஏகாதசி துவாதசி திரயோதசி அமாவாசை பாட்டியமி பூரணை ஏழுவாரங்கள் சிருஷ்ணைங்காரசதுர்த்தசி கசமியியிதுகளிலும் ஆடமாதப்பண்டிகை, ஆவணிமூலம், சோகுலாஷ்டமி, விநா யகசவுத்தி, நாகல்சதுர்த்தி, புரட்டாசியில்மகர்நவமி, வரலட்சுமிநோன்பு, கெள ரிநோன்பு, ஐப்பசிப்பூரம், திபாவளி, கேதகாரிவிரதங்கு, கார்த்திகைபண்டிகை, கந் தர்சஷ்டிவிரதம், மார்கழிபூசை, பிள்ளையார்நோன்பு, திருவாதிரை, தைமாத சங்கராந்திப்பண்டிகை, உத்தராயணம், தைப்பூசம், மாசிமகதஞ்சிவராத்திரி, மாசஸ்நானம், மகம், பங்குனிஉத்திரம், வருஷப்பிறப்பு, உகாதிபண்டிகை, சித்

திரைவிஷ-ம, பூரணை, ஆனித்திதால் எகாதசியிதல்லாமல் மாசசங்ராந்திவரு ஷசங்காாந்தி உத்தராயனம் தக்ஷிணையனம் பீஷ்மவகாதசி பீமவகாதசி சிரவ ணத்துவாதசி ரதசப்தமிஇதுகளிலொருபொழுதாகஅன்னங்கொண்டுநிற்சல மாயிருந்தும் பலகாரங்கள் கொண்டும் துளசித்தீர்த்தங்கள் கொண்டும் தார ணபாரணையென்றும் இப்படிச்சாந்திராயண, கிறசிராயண விரதங்களைச் செய்தும் தேகங்களைக்கஷ்டஞ்செய்தும் மாதாந்தரபேதங்களாகிற நோன் புவிரதவயிராக்கியங்களிலே கஷ்டஞ்செய்தும் தானுஞ்சிவாசார அபிமானங் களாலே பிராணத்தியாகஞ் செய்தும் நிவேதித்தபதார்த்தங்கள் நிவேதித் தபோசனங்களை விட்டுக்காலாகாரம் அரையாகாரஞ் சாகாமூல பலாதிகள் கொண்டுங்காடுகளில் குகைகளில் சரீத்தும் ஆசிரமங்களிலேநின்று ஊர்த்த பாதம் ஊர்த்தஸ்தம் ஊர்த்தநிருஷ்டிகளாயிருந்தும், இப்படிப்பஞ்சேந்திரி யநிக்கிரகஞ்செய்தும் கோபக்குரோத மடக்கியுந்தேகாபி மானங்கள் விட்டு ம் இதுவல்லாமல் தேவதாராதனையில் இன்னதுசெய்வே னென்றும், ஆசாத னமுடிந்தாலொழிய வாயிலொன்றும் போடுகிறதில்லை யென்றும், அஷ்ட விதார்ச்சனை சோடசோபசாரஞ் செய்வேனென்றும் சிவபூசைகள் கைதப் பினல்சாவேனென்றும் இப்படிவெகுவிதங்களை யனுஷ்டித்து இதுகளாலே தேவப்பிரசன்ன சாபாநுக்கிரக சாமார்த்தியங்களுண்டாகையால்விரதநிஷ் டையேபிரமமென்றறிக. இதுவல்லாமல் நவநாதசித்தர் முதலாக மதபேதத் தாலுஞ் சாஸ்திராந்தபேதங்களாலும்மதுமாம்சம்அபினி கஞ்சாஎட்டிபச்சை நாபி விஷம் இரசம் கெந்தகம் பாஷாணங்கள் ப்ரஸ்திரிகெமனங்கள் இதுக ள்முதலானநிவேதநகன்மங்க ளுடனே கூடிநிவேதித்த திரவியங்களும்புசித் துச்சோகிகள்பக்ரீகள் இலாடர்கள் பரங்கிகள் துலுக்கர்கள் முதலானபோம துபானசுராபானங்களும் புசித்து அவரவருக்கேற்ற விரதங்களை மனுஷ்டித் தமோகூடம்பெறுகையாலும் விரதசீலங்களே மோகூடங்களைக் கொடுக்கை யால்விரதமே பிரமமென்றறிக.

கூ-வது—அத்தியாயம்.

சரிதசங்கற்பம்.

கஉ. ஆவலாமெமக்காமலர்மரங்களாக்கலம்மலர்பறித்தலம்மலராற் றுவிலாவனகத்தார்பலசமைத்த தணப்பிலெம்புகழ் சாற்ற லன்புடனை, மேவுமாலையமலஷிடன்மெழுகல்விளங்கநல்விளக் கிடுதலெம்மடியா, ரேவலானவைசெய்யுமிச்சரிதையியற்றவ் வல்லவர்க்கெம்முலகளிப்பேம்.

இவன்நந்தவனஞ்செய்து அம்மலர்களாலேமாலைகள்கட்டித்திருக்கோயி லுக்குப்போய் மாலைதரிப்பித்துதோத்திரம்பண்ணிக் கோவில்விளக்கிமெழுகி அலகிட்டுஅடியாரேவல்செய்துமாடமாளிகை கோபுரப்பிரகாரமண்டபங்கள் ஏரி,குளம்,தடாகம்,நடைவாவிகள்,தோப்பு,சாலை,நந்தவனம்,தண்ணீர்பந்தல்

நன்மக்கஞ்சி வழிகளில் மண்டபம் சாவடி திருநாள் தீர்த்தம் அபிஷேகும்பூ
ஜைனைவேத்தியமுதலானதர்மங்களுஞ்செய்து பஞ்சமகாபாதகங்கள்வந்தவி
த்திற்பிராச்சித்தங்களும் தெகூஷணபந்தமான ஜோதிஷ்டாதியோமங்களும்
வைகாரிகபந்தமான பஞ்ச எக்ஞாதிகளும் செய்வித்துப் பிராகிர்த ஞானமூ
ம்விளங்கிமுக்கியஸ்தல சேர்வையு முக்கியதீர்த்த ஸநாநமும் தானதர்மபரோ
பகாரங்களும் நரமிருகபசுபட்சி தாபரங்களுக்குப் பாதைவந்த விடத்தில்விடு
வித்து ஸநாநபானங்கள்பண்ணிச் சுசிபூதனுய் அனுஷ்டானமுதலான நியம
ங்களுங்கோவில்களுக்கு அபிஷேகம் அஷ்டவிதார்ச்சனை சோடசோபசாரம்
பிரதகூஷணம் தீர்க்கதெண்டம் அங்கப்பிரதகூஷணம்ஆடல்பாடல் அழுகைவி
ழுகை உரோமாஞ்சலிதம் ஆனந்தம்இதுமுதலானவெல்லு உபசாரங்களுஞ்செ
ய்துகுருலிங்க வேடத்தைச் சிவனென்றுவணங்கி அவரேவற்பணிவிடைசெ
ய்துபக்தியும் விரதங்களும்பூததயவுநியமங்களும்அதிதிபூசையும்பொறுமையு
முண்டா யிதுமுதலாகநடந்தால் சிவலோகத்திற் போய்ச்சிவபோகம் புசித்து
ச்சுகத்திலேயிருப்பார்கள். இந்தசரிதைதற்தொழில் அறுபத்துமூவர்முதலான
எண்ணிறந்தபேர்நடந்து க்யிலாசமடைந்தார்கள். இதற்குச்சமய தீகூஷையுங்
குருபக்தியும்காரணமாம் இஃதல்லாமற் பின்னுஞ் சிலசமயங்களும்மதாணுசா
ரமாகஇந்தப்படி நடக்கும் ஆகையாற் சரிதையேபிரம மென்றறிக.

ய-வது—அத்தியாயம்.

துலுக்கமதம்.

கஉ. ஞ்லமொடுவாணுலகமும் பருதிசோமனெடு காலுதிசைகங்
குளிவையுஞ்; சாலவிடமின்மழைகளுங்கடல்களுஞ்சகலலோ
கமொடுமேருகிரியு, மாலகபியாலுடைய பாதியொளியாவினை
பாசவருள்செய்கவொருவனே, சிலமுடனே தொழுதுண்ணு
மென்னவிவில்லாகியோதவருள் செய்வாய்

சொரூபலகூஷணமாவது. நாமரூபக்கிரியாரகிதனுய்ஓட்டற்றுபற்றற்று
ஒருவனுய் நிற்பதென்றறிக. தடத்த லகூஷணமாவது உலகசிருஷ்டி வருமாறு
மூலமாய் விளங்குகின்ற அல்லாவானவர் தன்னிடத்தில் ஒருவொளியையுண்
டாக்கி யதில் அல்லாவானவர் புகுந்து பாதியொளியில் மகுமதனையுண்டாக்
கி மற்றபாதி யொளியில் எண்ணிறந்த உயிர்களை யுண்டாக்கி பின்பு காயன்
பாதியொளியில் மகுமதருயினையுண்டாக்கியந்தவுயினை காயன் பார்த்தவுட
னே பாதாதிகேச பரியந்தம் வெயர்வுவர அந்தவெயர்வையில் முதற்பாகத்
தை அம்பியா அவுலியாக்க ருயினைவகுத்து அதிற்சிலவெயர்வையில் மசாகு
ளோர்க் குயிர்வகுத்து பின்பு இவற்றில்தானே ஊமிரோர்கள்வானுளோர்க
ருயிர்வகுத்து மீந்தவெயர்வையில் பாவிக ருயிர்வகுத்து இதில்மீந்த வெயர்
வையில் காபர்கருயிர்வகுத்து சிலபரிகருயிர்வகுத்து இதில்மீந்த வெயர்வை

யில் சின்னுகள் சயித்தா னுயிர்படைத்து இதில்மீந்த வெயர்வையில் மிருக பகூஷிஜூர்வன சலதரவுயிர்களைப்படைத்து இதில்மீந்தவெயர்வையில் தாபரா தி யுயிர்களைப்படைத்து இதில்மீந்த வெயர்வையில் ஒருதுளியைக் கொண்டு அரிசுங் குருசும் மறையெழுதப்பட்டகலமானமகுடதுஞ் சொர்க்கநரகமும்ப டைத்து இவற்றிலொருதுளிவெயர்வையிருந்தது அதிலொருமாணிக்கமுண்டா க்கியதைதநாயன் எதிராகப்பார்த்தபோது அந்தமாணிக்கம் அக்கினியாயும்சல மாயும் பிரிவுபட்டுநின்று மீண்டும் ஒன்முய்கூடி வெந்துகொதித்தலைமுந்த புகையிலுல்விண்ணுலக மேழுதட்டுமுரியடுக்குபோல் படைத்து இது ஒன்று க்கொன்று நூஸ்வுநடப்புஅகலநீளமாகும். பின்பு அந்தமணியொளியாகிறகன ல்பரந்தமேகத்தாற் சந்திரசூரியநக்ஷத்திரங்களைப் படைத்து பின்புதேவலோ கமேழும் உரியடுக்குபோற் படைத்து மேற்சொல்லிய நீராக்கலக்க நாயன ருளாலே வாயுவையுண்டாக்க அந்தவாயுவால் அலைகளடித்துமோத அதில்று ரைகளுண்டாய் அந்தநுரைகளாலே கண்டமான பூமியுண்டாகி கீழ்மேலழு டுக்காகநிற்க இந்தவடுக்குகள் நீர்மேலிருக்கையால் அலையிலடுக்கு கொலை யாமலிருக்க அஷ்டகுலபர்வதம் நடுவும் மேருகிரி கூற்றுஞ் சக்காவாள கி ரிமுதலியகிரிகளுஞ் சத்தசமுத்திரத்தில் அனேககிரிகளும் படைத்து அந்தச முத்திரத்தை பூமிக்கு ஒரு ஆடைபோலாக்கி இந்தபூமியில் சீவராசிகள் புசி த்தற்கு தண்டுலபிண்டி பேதங்களும் கந்தமூல பலாதிகளு முண்டாக்கிசூரி யனுல் நாழிகை நாள் வாரம் மாதம் வருஷமுதலிய காலபேதங்களு முண்டா க்கிப்பின்னும் பஞ்சலோகங்களும் நவரத்தினுதி திரவியங்களும்இன்னுமனேக பதார்த்தங்களையுங் கர்த்தர்படைத்தா ரென்றறிக.

இதல்லாமல் பின்னுமொருவிதம் நாயன்றன்னெளியினுல் நாயிற்றுக்கி ழமை தாபராதி தனுக்களையும் அவற்றிற்கு கந்தமூல பலாதிகளாகிய வுணவு களை யுண்டாக்கி, திங்களில் சூரியன் சந்திரன் உடுக்கள் இராசிகள் மலைகள் கற்கள் முதலியவற்றை யுண்டாக்கி, செவ்வாயில் மந்திரதந்திர வெந்திரங்க ள் வேட்கருமங்கள் பம்புபில்லி சூனியம் புணையல் கன்னந் திருட்டு அவுஷ தங்கள் சூதம் பரிகை முதலியவற்றையுண்டாக்கி, புதனில் சூரியகிரண்ஞ் சந்திரகிரணம் நவரத்தினுதி திரவியங்களையுண்டாக்கி, வியாழத்தில் தாபரச ங்கமாதிய வுயிர்களையுண்டாக்கி வெள்ளியில் இசிலா மார்க்கமாகிய தலுக்க மதமுண்டாக்கிதன்னைவணங்க ஆத்மாக்களையுண்டாக்கி,சனியில் தேவலோக மும்கீழ்மேற்பதினுலுலோகமும் படைத்து இவற்றைச்சுமக்கவொருமலுக்கை யுண்டாக்கி யிவனைச்சுமக்க வொருமானிக்க மலையைப்படைத்து இதைச் சு மக்க எருதைப்படைத்து இதைச்சுமக்க ஒருமீனைப்படைத்து விதைச்சுமக் கச் சமுத்திரத்தைப்படைத்து விதைச்சுமக்கருங்குமமணலாலாகியவொருவ ட்டைப்படைத்து விதைச்சுமக்கவொரு இரும்புமலையைப்படைத்து விதை ச்சுமக்கவொரு மலுக்கைப்படைத்து விவனைச்சுமக்க வாயுவைப்படைத்து விலைவகளெல்லாம் யுகமுடிவுமட்டும் நிற்குமென்றறிக. இப்பால் நாயனம தியாமல் லிபிலீசுமுதலான தேவர்க ளக்கினிதேக மாகையால் நாங்களேகர்த் தனென்று செருக்குற்றிருந்தபடியால் அவர்களைச் செயிக்கும்படியாய் மண்

ணையெடுக்கப்போக அப்போதுபூமியானது ஆணையிட வதற்கு இரண்டு ம லுக்கள்திரும்பிவந்து சூடியமூன்று மலுக்களும் இசிராகில்லையனுப்ப அவ யும் பூமிமூன்றுணையிட அதற்கவர் மறுஆணையிட்டுமண்ணையெடுத்துவந்த ஆதமாய்ச்செய்யென்ன வந்தமண்ணிலே மலுக்கள் நால்வரும் புனல்தீவாயு வைவிட்டு உடலைச் செய்து தலைசெய்யக் கூடாமற் கர்த்தன்தலைசெய்ய அ ப்போது ஆதமகனுண்டாய் ஆதமகனது வொருபாரிசத்தில் கழலையுண்டாய் அதைநாயன் சொல்லாலே ஜெபிர்தில்போய்நகத்தால்கீறஅதில்சவுந்தரமான ஒருபெண் அவ்வாவென்னும் பெயருடன்பிறந்தாள் அவளை ஆதம் என்பவன் கண்டு கைபிடிக்க அப்போது நாயன்சொற்படி வானவரான மலுக்கள்விவா கஞ்செய்துக் கொடுக்க நாயன்ஆத்மாக்கள் சொற்கத்திலே கோதும்பை யல் லாமல் மற்றதெல்லாம் புசிக்கச்சொல்ல அதைக்கேட்டிருந்த விபிலீசுஅவ்வா வுக்குபின்னை கொடுத்தும் கோதும்பைதின்னச் சொல்லியும் அவர்கள்விரதத் தைக்கெடுக்க அதைக்கண்டநாயன் கோபித்து சொற்கத்தி லிருந்தவர்களை மண்ணில் தள்ளிவிட்டு அநேகம்பாடுபடுத்திஞர். ஆதமகன் தபஞ்செய்ய அ தைநாயன் கண்டுமகிழ்ந்து மக்காவில்வைத்தார் பின்பிருவரும் கூடிவாழ்க்கை யில் ஆணும் பெண்ணும்பெற்றார்கள்அந்தப்பிடண்ணை அந்தஆணுக்கே கொ டுத்து மண்ணில்வாசஞ் செய்யச்சொல்ல விவ்விருவருங்கூடி மனுக்களைப் பெருகச்செய்தனர்கள். ஆதியில்கர்த்தன் மனுக்களைப்படைக்கும்போது நா ன்குவகுப்பாய்ப்பிரித்துமுதலாவது அம்பியாக்கள், இரண்டாவது அவுலியாக் கள், மூன்றுவது மூமீனேர்கள் நான்காவது காபர்கள் இப்படியாக சீவர்க ளைப் படைத்தபிறகு இந்தவுபிர்கள்பயப்பட அதைக்கண்ட நாயன் ஒருவெ ளினையபிறக்கினன். அதைக்கண்டு எல்லாவுயிரும் மசூதுசெய்தார்கள். நா ன்காவதான காபர்கள் ஓதாமல் தினமூர்த்த ளாகையால் ஓதினதெல்லா மொ ருபகுதி ஓதாதெல்லா மொருபகுதியாகின்று இரண்டுவிதமாஞர்கள். இதல் லாமல் அந்தஒளியை முந்தவும் பிந்தவுங் கண்டபேரெல்லாம் மூமீனைப்பிற ப்பார்கள். முந்தக்கண்டு பிந்தக்காணாதவர்கள் இசிலாமாய் பின்காபராய்ப் பிறப்பார்கள். முந்தக்காணுமல் பிந்தக்கண்டவர்கள். காபராய்ப்பிறந்து இசி லாமவர்கள் ஒன்றுங்காணாதவர் காபராய்ப் பிறப்பார்கள். இப்படியாகப்ப டைத்து என்னைவணங்க வேண்டுமென்றூர் பின்பு குதிசிலென்னுந் தலத்தி ல்வைத்து தனியாவிலே நாலுபகுதியாகக்கர்த்தன் உண்டாக்கினர். இந்தத னியாவில் புற்பூண்டு விருக்ஷாதிகள்பயிராய் பூமிமேடுபள்ளந் தெரியாமல் மூ டிக்கொள்ள அதையழிக்கும் பொருட்டு மிருகாதிகளைப்படைத்தார். பின்புஅ ம்மிருகங்கள் தாபரசங்கமாகிய விருக்ஷாதிகளை பெல்லாமழித்து மிருகக்காடா யின. இதுகளையெல்லாங் கொல்லும்பொருட்டின்செயித்தாணுகிற பூதப்ப சாசசேனையை யுண்டாக்க அதுகள் அம்மிருகங்களைக்கொன்று பூமியெல்லா ந் திருத்திசமணுக்கி பின்பு சின்செயித்தானே யிராச்சியமாண்டு கர்த்தனை வணங்காமல் கெர்வித்திருக்க இவர்களைக்கொல்லும்படியாய் மிருகங்களிலொ ன்றுகிய குதிரைகளைவிட அதுகள் சின்செயித்தான் சேனைகளை யெல்லாங் கொல்லும்போது மல்க்கிலொருபெரியோனை வரவிட அவ்ன்பரிக் கூட்டங்

கனை யெல்லோங்கொன்று வானலோகத்திற்போய் சுகமேயிருந்தான். பின்பு சொர்க்கமேலும் நரகங்கீழுமாய் நன்மைசெய்தவர்க்கு சொர்க்கமும் தீமை செய்தவர்க்கு நரகமும் மனைவியால் இந்தபூமியாவாகிற பூமிநரகத்தாரிருந் து தீமையைச்செய்யவும் சொர்க்கத்தாரிருந்து நன்மையைச செய்யவும் இ வர்கள் சுகதுக்கமனுபவிக்கவும் இடங்கொடுத்திருக்கும் பொதுநிலமாகையா ல் தனியாவென்ற தென்றறிக.

